மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக்கல்வி



பி.ஏ. பி.எஸ்.சி (தமிழ்)

இரண்டாம் ஆண்டு

பகுதி - I

தாள் - 3 : காப்பிய இலக்கியமும் புதினமும்
தாள் - 4 : பண்டை இலக்கியமும் உரைநடையும்

DEC அங்கீகாரம் பெற்றது
www.mkudde.org

R3 & R4

© பதிப்புரிமை : தொலைநிலைக்கல்வி

MKU C / 5000 copies

தாள் - 3 : காப்பிய இலக்கியமும் புதினமும்

பாடப்பகுதி விபரம்

I செய்யுள்

பாடம் 1. சிலப்பதிகாரம் – கனாத்திறம் உரைத்த காதை

பாடம் 2. மணிமேகலை – மணிபல்லவத்துத் துயருற்ற காதை

பாடம் 3. சீவகசிந்தாமணி – விமலையார் இலம்பகம் – 10 பாடல்கள்

பாடம் 4. வளையாபதி – 5 பாடல்கள்

குண்டலகேசி – 5 பாடல்கள்

பாடம் 5. பெரியபுராணம் – கண்ணப்ப நாயனார் புராணம் – 30 பாடல்கள்

பாடம் 6. கம்பராமாயணம் – மந்தரை சூழ்ச்சிப் படலம் – 30 பாடல்கள்

பாடம் 7. கலிங்கத்துப்பரணி – களம்பாடியது – 10 பாடல்கள்

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் – 5 பாடல்கள்

நந்திக் கலம்பகம் – 5 பாடல்கள் (சம்பிரதம் – விளக்கம்)

II புதினம்

பாடம் 8. தோப்பில் முகமது மீரான் – ஒரு கடலோரக் கிராமத்தின் கதை

III இலக்கிய வரலாறு

பாடம் 9. 1. தமிழில் காப்பிய இலக்கிய வரலாறு

2. தமிழில் சிற்றிலக்கிய வரலாறு

3. தமிழில் புதின இலக்கிய வரலாறு

IV இலக்கணம்

பாடம் 10. 1. வெண்பா, ஆசிரியப்பா இலக்கணமும் வகைகளும்

2. உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், சிலேடை, வேற்றுப்பொருள் வைப்பு அணிகள்

3. நிறுத்தல் குறிகள் பயன்பாட்டு முறை

4. கடிதம் எழுதுதல் – பாராட்டு, புகார் விண்ணப்பம்

V படைப்பாற்றல்

பாடம் 10. கவிதை படைத்தல்

தாள் - 3 : காப்பிய இலக்கியமும் புதினமும்

பாடப்பகுதி விபரம்

I	செய்யுள்	1 - 104
II	புதினம்	105 - 112
III	இலக்கிய வரலாறு	113 - 159
IV	இலக்கணம்	160 - 175
V	படைப்பாற்றல்	176 - 181

சிலப்பதிகாரம்

கனாத்திறம் உரைத்த காதை

அகநகர் எல்லாம் அரும்பு அவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல் மாய்ந்த
மாலைமணி விளக்கம் காட்டி, இரவிற்கு ஓர்
கோலம் கொடி இடையார் தாம் கொள்ள, மேலோர் நாள்
மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்கப் (5)
பால்விக்கிப் பாலகன் தான் சோர; மாலதியும்
பார்ப்பானொடு மனையாள் என்மேல் படாதன விட்டு
ஏற்பன கூறார் என்று ஏங்கி மகக்கொண்டு
அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம், பகல் வாயில் (10)
உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம் வேல்கோட்டம்
வச்சிரக்கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக்கோட்டம், நிலாக்கோட்டம் புக்கு எங்கும்
தேவிர்காள்! எம் உறுநோய் தீர்ம் என்று மேவி ஓர்
பாசண்ட சாத்தற்கு பாடு கிடந்தாளுக்கு (15)
ஏசும்படி ஓர் இளங்கொடியாள்; ஆசு இலாய்
செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்;
பொய் உரையே அன்று; பொருள் உரையே; கையில்
படுபிணம் தா என்று பறித்து, அவள் கைக்கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கு இருளில் சென்று ஆங்கு (20)
இடுபிணம் தின்னும் இடாகினிப் பேய் வாங்கி
மடி அகத்து இட்டாள் மகவை; இடியுண்ட
மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு, அச்சாத் தன்
'அஞ்ஞை நீ ஏங்கி அழல்' என்று முன்னை
உயிர்க் குழவி காணாய் என்று, அக்குழவியாய் ஓர் (25)
குயில் பொதும்பர் நீழல்குறுக, அயிர்ப்பு இன்றி
மாயக்குழவி எடுத்து, மடித்திரைத்துத்
தாய்கைக் கொடுத்தாள் அத்தையலாள் தூய

மறையோன் பின்மாணியாய் வான்பொருள் கேள்வித்
துறைபோய் அவர் முடிந்த பின்னர் இறையோனும்
தாயத்தாரோடும் வழக்குரைத்துத் தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டும் கடன் கழித்து, மேயநாள்
தேவந்தி என்பாள் மனைவி அவளுக்குப்
பூவந்த உண்கண் பொறுக்க என்று மேவித்தன்
மூவா இளநலம் காட்டி எம் கோட்டத்து
நீ வா என உரைத்து நீங்குதலும் தூமொழி
ஆர்த்த கணவன் அகன்றனன் போய் எங்கும்
தீர்த்தத்துறை படிவேன் என்று அவனைப் பேர்த்து இங்ஙன
மீட்டுத் தருவாய் என ஒன்றன் மேல் இட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டு அரும்சீர்க்
கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று
எண்ணிய நெஞ்சத்து இணையளாய் நண்ணி
அறுகு, சிறுபூனை, நெல்லொடுதூய்ச் சென்று
பெறுக, கணவனோடு என்றாள்–'பெறுகேன்;
கடுக்கும் என் நெஞ்சம் கனவினால், என்கை
பிடித்தனன் போய் ஓர் பெரும்பதியுள் பட்டேம்
பட்டபதியில், படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு என் தன் மேல்
கோவலற்கு உற்றது ஓர் தீங்கு என்று அது கேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன், காவலனோடு
ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால் உரையாடேன்;
தீக்குற்றம் போலும் செறிதொடீஇ! தீக்குற்றம்
உற்றேனொடு, உற்ற உறுவனோடு யான் உற்ற
நற்றிறம் கேட்கின் நகை ஆகும் 'பொற்றொடீஇ
கைத்தாயும் அல்லை கணவற்கு ஒரு நோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பில்; போய்க்கெடுக; உய்த்துக்
கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்
மடலவிழ் நெய்தல் அம் கானல், தடம் உள,
சோமகுண்டம், சூரியகுண்டம்; துறைமூழ்கிக்,
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு

தாம்இன் புறுவர் உலகத்துத் தையலார்;
போகம்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்; யாம் ஒரு நாள்
ஆடுதும் என்ற அணி இழைக்கு அவ் ஆயிழையாள்
'பீடு அன்று' என இருந்த பின்னரே 'நீடிய
காவலன் போலும், கடைத்தலையான், வந்து நும்
கோவலன்! என்றாள் ஓர் குற்றிளையாள் கோவலனும்
பாடு அமை சேக்கையுள் புக்குத் தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தம் கண்டு, "யாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக்
குலம் தருவான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு என்ன.
நலம்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்
சிலம்பு உள கொண்ம் எனச் சேயிழை கேள்; இச்
சிலம்பு முதல் ஆகச்சென்ற கலனோடு
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன் மலர்ந்த சீர்
மாடமதுரை அகத்துச் சென்று; எழுக என்று நீடிய
வினை கடைத் கூட்டவியம் கொண்டான் கங்குல்
கனை சுடர்கால் சீயாமுன்.

வெண்பா

காதலி கண்ட கனவு நெடுங்கண்
மாதவி தன் சொல்லை வறிதாக்க –மூதை
வினை கடைக்கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனை சுடர்கால் சீயாமுன்.

–இளங்கோவடிகள்

மணிமேகலை

மணிபல்லவத்துத் துயருற்ற காதை

ஈங்கிவளின்னணமாக இருங்கடல்
வாங்குதிரை யுடுத்த மணிபல்லவத்திடைத்
தத்துநீ ரடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமர முரட்டுந் திரையுலாப் பரப்பின்
ஞாழல் ஒங்கிய தாழ்கண் அகம்பின்
ஆம்பலுங் குவளையும் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுண மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி
முடக்காத புன்னையும் மடற்பூந்தாழையும்
வெயில் வரவொழித்த பயில்பூம் பந்தர்
அறல் விளங்கு நிலாமலர் நறுமலர்ப்பள்ளித்
துஞ்சுதுயி லெழுஉம் அஞ்சி லோதி
காதற் சுற்றம் மறந்து கடைகொள
வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று
பண்டறி கிளையொடு பதியுங் காணாள்
கண்டறி யாதன கண்ணிற் காணா
நீல மாக்கடல் நெட்டிடையன்றியுங்
காலை ஞாயிறு கதிர் விரித்து முளைப்ப
உவவன மருங்கினில் ஓரிடங்கொல்லிது
சுதமதி ஒளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ என்பதை அறியேன்
மன நடுக் குறூஉம் மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும்
எல்வளை வாராய் விட்டகன் றனையோ
விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சஞ் செய்தனள் கொல்லோ அறியேன்
ஒரு தனி யஞ்சுவென் திருவே வாவெனத்
திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையும்
எழுந்துவீழ் சில்லையும் ஒடுங்குசிறை முழுவலும்
அன்னச் சேவல் அரச னாகப்
பன்னிறப் புள்ளினம் பரந்தொருங் கீண்டிப்

பாசறை மனனா பாடி போல
வீசுநீர்ப் பரப்பின் ஏதிரெதி ரிருக்கும்
துறையுநீ துறைசூழ் நெடுமணற் குன்றமும்
யாங்கணுந் திரிவோள் பாங்கினங் காணாள்
குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
அரற்றினள் கூஉய் அழுதனள் ஏங்கி
வீழ்துய ரெய்திய விழுமக் கிளவியில்
தாழ்துய ருறுவோள் தந்தையை உள்ளி
எம்மிதிற் படுத்தும் வெவ்வினை யுருப்பக்
கோற்றொடி மாதரொடு வேற்று நாடடைந்து
வைவா ளுழந்த மணிப்பூண் அகலத்து
ஐயா வோவென் றழுவோள் முன்னர்
விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்
திசைதொறும் ஒன்பான் முழநில மகன்று
விதிமா ணாடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி
அறவோற் கமைந்த ஆசன மென்றே
நறுமல ரல்லது பிறமரஞ் சொரியாது
பறவையும் முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி அறத்தகை யாசனம்
கீழ்நில மருங்கின் நாகநா டாளும்
இருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி
எமதீ தென்றே எடுக்க லாற்றார்
தமபெரும் பற்று நீங்கலும் நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்
இருஞ்செரு ஒழிமின் எமதீ தென்றே
பெருந்தவ முனிவன் இருந்தற முரைக்கும்
பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்தும்
தரும பீடிகை தோன்றிய தாங்கென்.

—சீத்தலைச் சாத்தனார்.

சீவக சிந்தாமணி

(விமலையார் இலம்பகம்)

1. மரவம் நாகம் மணம்கமழ் சண்பகம்
குரவம் கோங்கம் குடம்புரை காய்வழை
விரவு பூம்பொழில் வேறிருந்(து) ஆய்பொருள்
உருவ மாதர் உரைக்கும் இ(து) என்பவே

2. நலிவில் குன்றொடு காடுறை நன்பொருட்
புலியனார் மகட்கோடலும் பூமிமேல்
வயியின் மிக்கவர் தம்மகட் கோடலும்
நிலைகொள் மன்னர் வழக்கென நேர்பவே"

3. நீதியாலறுத் தந்நிதி யீட்டுதல்
ஆதியாய வரும்பகை நாட்டுதன்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே"

4. ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனைக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றம் கொள்குறிக் கொற்றவற் கென்பவே"

5. வெள்றியாக்கலு மேதக வாக்கலுங்
குன்றினார்களைக் குன்றென வாக்கலு
மன்றியுங் கல்வி யோடடி காக்கலும்
பொன்றுஞ் சாகத்தினாய் பொருள் செய்யுமே"

6. பொன்னினாகும் பொருபடை யப்படை
தன்னினாகுந் தரணி தரணியிற்

பிள்ளையாகும் பெரும்பொருளப் பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன வில்லையே"

7. நிலத்தினீங்கி னிதியினுந் தேய்ந்துநங்
குலத்திற் குன்றிய கொள்கைய மல்லாதூ உங்
கலைக்க ணாளரு மிங்கில்லை காளை நீ
வலித்த தென்னென வள்ளலுங் கூறுவான்"

8. எரியொடு நிகர்க்கு மாற்றலிடிக்குரற் சிங்கமாங்கோர்
நரியொடு பொருவதென்றாற் சூழ்ச்சி நற்றுணையொடென்னாம்
பரிவொடு கவலவேண்டா பாம்பவன் கலுழனாகுந்
சொரிமதுச் சுரும்புண் கண்ணிச் சூழ்கழனந்த னென்றான்

9. கெலுழனோ நந்தனென்னாக் கிளரொளி வனப்பினானைக்
கலுழத்தன் கையாற்றீண்டிக் காதலிற் களித்து நோக்கி
வலிகெழு வயிரத்தூண்போற் றிரண்டு நீண்டமைந்த, திண்டோ
கலிகெழு நிலத்தைக் காவாதொழியுமோ காளைக் கென்றாள்"

10. "இடத்தொடுபொழுது நாடி யெவ்வினைக் கண்ணுமஞ்சார்
மடப்பட லினறிச் சூழு மதிவல்லார்க் கரியதுண்டோ
கடத்திடைக் காக்கையொன்றே யாயிரங்கோடி கூகை
யிடத்திடை யழுங்கச் சென்றாங் கின்னுயிர் செகுத்த தன்றே"

வளையாபதி

1. பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்
துறையிலா வசைவாவி துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னீர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வமன்றே.

2. "பீ(டு)இல் செய்திகளால் களவில் பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
சூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்(து)
ஓடல் இன்றி உலையக் குறைக்குமே"

3. "பொய்யின் நீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்(டு)
ஐயம் இன்றி அறநெறி ஆற்றுமின்
வைகல் வேதனை வந்துறல் ஒன்றின்றிக்
கௌவை இல்லுல(கு) எய்துதல் கண்டதே".

4. உலகுடன் விளங்க உயர்சீர்த்தி நிலை கொள்ளின்
நிலையில் கதிநான்கின் இடைநின்று தடுமாறும்
அலகில் துயர் அஞ்சின் உயிர்அஞ்சவரும் வஞ்சக்
கொலை ஒழிமின் என்று நனிகூறினர் அறிந்தார்.

5. வேற்கண் மடவார் விழைவு ஒழிய யாம்விழையக்
கோல்கண் நெறிகாட்டக் கொல்கூற்(று) உழையதர
நாற்ப(து) இகந்தா நரைத்தூதும் வந்த(து) இனி
நீத்தல் துணிவாம் நிலையா(து) இளமையே"

குண்டலகேசி

1. வாயுவினை நோக்கியுள மாண்டவய நாவாய்
ஆயுவினை நோக்கியுள வாழ்க்கையதுவே போல்
தீயவினை நோக்கும் இயல் சிந்தனையும் இல்லாத
தூயவினை நோக்கியுள துப்பரவும் எல்லாம்.

2. வகையெழில் தோள்கள் என்றும் மணிநிறக் குஞ்சிஎன்றும்
புகழ்எழ விகற்பிக்கின்ற பொருளில் காமத்தை மற்றோர்
தொகையெழும் காதல் தன்னால் துய்த்தியாம் துடைத்தும் என்பார்,
அகையழல் அழுவந் தன்னை நெய்யினால் அவிக்கலாமோ ?

3. பாளையாந் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாந் தன்மை செத்தும் காமுறு மிளமை செத்தும்
மீளுமிவ் வியல்புமின்னே மேல்வரு மூப்புமாகி
நாளுநாட் சாகின்றாமா னமக்குநா மழாததென்னோ'

4. மண்ணுளார் தம்மைப் போல்வார் மாட்டதேயன்று வாய்மை
நண்ணிலார் திறந்தும் குற்றம் குற்றமே நல்லவாகா
விண்ணுளார் புகழ்தற் கொத்த விழுமியோ னெற்றி போழ்ந்த
கண்ணுளான் கண்டந் தன்மேற் கறையை யார் கறையன்றென்பார்"

5. மறிப மறியு மலிர்ப மலிரும்
பெறுப பெறும் பெற்றிழ்ப்ப விழக்கும்
அறிவ தறிவா ரழுங்கா ருவவா
ருறுவ துறுமென் றுரைப்பது நன்று"

பெரியபுராணம்

கண்ணப்ப நாயனார் புராணம்

1. அன்றிரவு கனவின்கண் அருள்முனிவர் தம்பாலே
மின்திகழுஞ் சடைமவுலி வேதியர்தா மெழுந்தருளி
"வன்திறல் வேடுவனென்று மற்றவனைநீ நினையேல்
நன்றவன்தன் செயல்தன்னை நாமுரைப்பக் கே"ளென்று.

2. "அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நகைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக் னியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறறிநீ" என்றருள் செய்தார்.

3. "பொருப்பினில் வந்தவன்செய்யும் பூசனைக்கு முன்பென் மேல்
அருப்புறு மென்மலர்முன்னை அவைநீக்கும் ஆதரவால்
விருப்புறு மன்பெனும் வெள்ளத்தால் பெருகிற்றென வீழ்ந்த
செருப்படி அவ்விளம் பருவச் செயடியிற் சிறப்புடைத்தால்

4. "உருகியஅன் பொழிவின்றி நிறைந்த அவன் உருவென்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்தான் வாயுமிழும் புனல்புனிதம்"

5. "இம்மலைவந் தெனையடைந்த கானவன்தன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுதலால்
செம்மலர்மேல் அயனொடுமால் முதல் தேவர் வந்துபுனை
எம்மலரும் அவன் தலையால் இருமலர்போ எலனக்கொள்வா"

6. "வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனுமன்பால்
நையுமனத் தினிமையினில் நையமிக மென்றிடலால்
செய்யுமறை வேள்ளியோர் முன்புதருந் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்தான் இட்டஉளன் எனக்கினிய".

7. மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்றவன்தான் முகமலர அகநெகிழ
அன்பில் நினைந்தெனை யல்லால் அறிவுறா மொழிநல்ல.

8. "உனக்கவன்தன் செயல்காட்ட நாளைநீ ஒளிந்திருந்தால்
எனக்கவன்தன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்றாய்
மனக்கவலை ஒழி" கென்று மறைமுனிவர்க் கருள் செய்து
புனற் சடிலத் திருமுடியார் எழுந்தருளிப் போயினார்.

9. கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்துயிலார்
மனமுறுமற் பதமாகிவரும் பயமும் உடனாகித்
துனைபுரவித் தனித்தேர்மேல் தோன்றுவான் கதிர்தோன்ற

10. முன்னைநாள் போல் வந்து திருமுகலிப் புனல்மூழ்கிப்
பன்முறையும் தம்பிரான் அருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலைஏறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருத்தார்.

11. கருமுகி லென்னநின்ற கண்படா வில்லியார்தாம்
வருமுறை ஆறாம்நாளில் வருமிர வொழிந்த காலை
அருமறை முனிவனார்வந் தணைவதன் முன்புபோகித்
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டையாடி.

12. மாறில் ஊன் அமுதும் நல்ல மஞ் நனப்புன லும்சென்னி
ஏறுநாண் மலரும்வெவ் வேறில்பினில் அமைத்துக்கொண்டு
தேறுவார்க் கமுதமான செல்வனார் திருக்காளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை அணுகவந் தணையா நின்றார்.

13. "இத்தனைபொழுது தாழ்த்தேன்" எனவிரைந் தேகுவார்முன்
மொய்த்தபல் சகுனம் எல்லாம் முறைமுறை தீங்குசெய்ய
இத்தகு தீயபுட்கள் ஈண்டமுன் உதிரங்காட்டும்
அத்தனுக் கென்கொல் கெட்டேன் அடுத்தென் றணையும் போதில்

14. அண்ணலார் திருக்காளத்தி அடிகளார் முனிவனார்க்குத்
திண்ணனார் பரிவுகாட்டத் திருநயனத்தில் ஒன்று
துண்ணென உதிரம்பாய இருந்தனர் தூரத்தேஅவ்
வண்ணவெஞ் சிலையார்கண்டு வல்விரைந் தோடிவந்தார்.

15. வந்தவர் குருதிகண்டார் மயங்கினார் வாயில்நன்னீர்
சிந்திடக் கையில் ஊனுஞ் சிலையுடன் சிதறிவீழக்
கொந்தலர் பள்ளித்தாமம் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல்மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

16. விழுந்தவர் எழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணார்செய்வ தறிந்தில ருயிர்த்துமீள
அழிந்துபோய் வீழ்ந்தார்தேறி "யாரிது செய்தார்" என்னா
எழுந்தனர் திசைகளெங்கும் பார்த்தனரெடுத் தார்வில்லும்.

17. வாளியுந் தெரிந்து கொண் "டிம்மணியிடை எனக்குமாறா
மீளவெம் மறவர்செய்தார் உளர்கொலோ விலங்கின்சாதி
ஆளிமுன் னாகியுள்ள விளைத்தவோ அறியேன்" என்று
நீளிருங் குன்றைச்சாரல் நெடிதிடை தேடிச்சென்றார்.

18. வேடரைக் காணார்தீய விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணார்மீண்டும் நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத்தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக்கொண்டு கதறினார் கண்ணீர் வார

19. "டாவியேன் கண்டவண்ணம் பரமனார்க் கடுத்ததென்னோ
ஆவியின இனிய எங்கள் அத்தனார்க் கடுத்ததென்னோ
மேவினார் பிரியமாட்டா விமலனார்க் கடுத்ததென்னோ
ஆவதொன் றறிகிலேன்யான் என்செய்கே" னென்று பின்னும்

20. "என்செய்தால் தீருமோதான் எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய்குழல் வேடரென்று
பின்செய்வார் பகழிப்புண்கள் தீர்க்கு மெய் மருந்துதேடிப்
பொன்செய் தாழ்வரையிற் கொண்டு வருவன்நான்" என்று போனார்.

21. நினைத்தனர் வேறுவேறு நெருங்கிய வனங்கள் எங்கும்,
இனத்திடைப் பிரிந்து செங்கண் ஏறெனவெருக் கொண்டெய்திப்
புதைத்திடைப் பறித்துக் கொண்டு பூதநாயகன்பால் வைத்த
மனத்தினுங் கடிதுவந்தம் மருந்துகள் பிசைந்து வார்த்தார்.

22. மற்றவர் பிசைந்துவார்த்த மருந்தினால் திருக்காளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக்கண்டும்
"இற்றையின் நிலைமைக் கென்னோ" இனிச்செயல் என்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்பதூனுக் கூனென னும்உரைமுன் கண்டார்.

23. "இதற்கினி என்கண் அம்பால் இடந்தப்பின் எந்தையார் கண்
அதற்கிது ம்ருந்தாய்ப் புண்ணீர்நிற்கவும் அடுக்கும்" என்று
மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்துமுன்னி ருந்துதங்கண்
முதற்சரம் அடுத்துவாங்கி முதல்வர்தங் கண்ணில் அப்ப

24. நின்றசெங் குருதிகண்டார் நிலத்தினின்றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்ததோள்கள் கொட்டினார் கூத்தும் ஆடி
"நன்றுநான் செய்த இந்த மதி" என நகையுந்தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போலமிக்கார்.

25. வலத்திருக் கண்ணில்தங்கண் அப்பிய வள்ளலார்தம்
நலத்தினைப் பின்னுங்காட்ட நாயனார்மற்றைக் கண்ணில்
உவப்பில் செங்குருதிபாயக் கண்டனர் உலகில்வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையின் உம்பர்மேலார்.

26. கண்டபின் "கெட்டேன் எங்கள் காளத்தியார் கண் ஒன்று
புண்தரு குருதிநிற்க மற்றைக்கண் குருதிபொங்கி
மண்டுமற்றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொருகண் அக்கண்ணை இடந்தப்பி ஒழிப்பேன்" என்று

27. கண்ணுதல் கண்ணில் தங்கண் இடந்தப்பின் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பிரான்தன் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உள்நிறை விருப்பினோடும் ஒருதனிப்பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்

28. செங்கண் வெள்விடையின்பாகர் திண்ணனார் தம்மையான்
அங்கணர் திருக்காளத்தி அற்புதர்திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங்கையைத் தடுக்கமூன் றடுக்குநாக
கங்கணர் அமுதவாக்குக் "கண்ணப்ப நிற்க" என்ற.

29. கானவர் பெருமானார் தங்கண்ணிடந் தப்பும்போதும்
ஊனமுது தந்த ஐயர் உற்று முன்பிடிக்கும்போதும்
ஞானமா முனிவர்கண்டார் நான்முகன் முதலாயுள்ள
வானவர் வளர்பூமாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.

30. பேறினி இதன்மேல் உண்டோபிரான் திருக்கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித்தங்கண் இடந்தப்ப உதவுங்கையை
ஏறுயர்த்தவர் தங்கையால் பிடித்துக்கொண் "டென் வலத்தில்
மாறிலாய்! நிற்க" என்றுமன்னு பேரருள் புரிந்தார்.

— சேக்கிழார்

கம்பராமாயணம்

மந்தரை சூழ்ச்சிப் படலம்

1. அந்நகர் அணிவுறும் அமலை, வானவர்
பொன்னகர் இயல்புஎனப் பொலியும் எல்லையில்
இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்,
துன்ன ருங் கொடுமனக்கூனி தோன்றினாள்.

2. தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்;
ஊன்றிய வெகுளியாள்; உளைக்கும் உள்ளத்தாள்;
கான்றுஎரி நயனத்தாள்; கதிக்கும் சொல்லினாள்;
மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்.

3. தொண்டைவாய்த் கேகயன் தோகை கோயில் மேல்
மண்டினாள் – வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநாள் இராகவன் பாணிவில் உமிழ்
உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்.

4. நாற்கடல் படுமணி நளினம் பூத்தது ஓர்
பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
போல்கடைக் கண்அளி பொழிய, பொங்குஅணை
மேல்கிடந் தாள்தனை, விரைவில் எய்தினாள்.

5. எய்திஅக் கேகயன் மடந்தைஏடு அவிழ்
நொய்துஅலர் தாமரை நோற்ற நோன்பினால்
செய்தபேர் உவமையால் செம்பொன் சீறடி
கைகளின் தீண்டினாள் – காலக்கோள்அனாள்.

6. தீண்டலும் உணர்ந்தஅத் தெய்வக் கற்பினாள்
நீண்டகண் அனந்தரும் நீங்கு கிற்றிலன்
முண்டுஎழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிட, கட்டுரை சொல்லல் மேயினாள்

7. அணங்கு வாள்விடஅரா அணுகும் எல்லையும்
குணம்கெடாது ஒளிவிரி குளிர்வெண் திங்கள்போல்,

பிணங்குவான் பேர்இடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லை; நீ உறங்குவாய்' என்றாள்.

8. வெவ்விடம் அனையவள் விளம்ப, வேற்கணாள்
'தெவ்அடு சிலைக்கை என்சிறுவர் செவ்வியர்;
அவ்அவர் துறைதொறும் அறம்தி றம்பலர்;
எவ்இடர் எனக்குவந்து அடுப்பது ஈண்டு' எனா.

9. 'பராஅரும் புதல்வரைப் பயக்க, யாவரும்
உராஅரும் துயரைவிட்டு உறுதி காண்பரால்;
விராவஅரும் புவிக்கு எலாம் வேதமே அன
இராமனைப் பயந்த ஏற்குஇடர் உண்டோ ?' என்றாள்

10. ஆழ்ந்தபேர் அன்பினாள் அனைய கூறலும்,
சூழ்ந்த தீவினைநிகர் கூனி சொல்லுவாள்;
'வீழ்ந்தது நின்கலம்; திருவும் வீழ்ந்தது;
வாழ்ந்தனள் கோசலை, மதியினால்' என்றாள்.

11. அன்னவள் அவ்உரை உரைப்ப, ஆயிழை,
'மன்னவர் மன்னனேல் கணவன், மைந்தனேல்
பன்ன அரும்பெரும புகழ்ப்பரதன்; பார்தனில்
என் இதன்மேல் அவட்கு எய்தும் வாழ்வு ?' என்றாள்.
கூனி; 'நாளை இராமன் முடிசூடுவான்' எனல்

12. ஆடவர் நகைஉற ஆண்மை மாசு உற,
தாடகை எனும்பெயர்த் தையலாள் பட,
கோடிய வரிசிலை இராமன், கோமுடி
சூடுவன் நாளை; வாழ்வுஇது' எனச் சொல்லினாள்.

13. மாற்றம் அஃது உரைசெய, மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலை அறிவும் ஒத்தவால்;
வேற்றுமை உற்றிலள், வீரன்தாதை புக்கு
ஏற்று அவள் இருதயத்து இருக்கவே கொலாம் ?

14. ஆயபேர் அன்புஎனும் அளக்கா ஆர்த்து எழ,
தேய்வுஇலா முகமதி விளங்கித் தேசுற,
தூயவள் உவகை போய்மிக, சுடர்க்கு எலாம்
நாயகம் அனையது ஓர்மாலை நல்கினாள்

15. தெழித்தனள்; உரப்பினள்; சிறுகண் தீஉக
விழித்தனள்; வைதனள் வெய்து உயிர்த்தனள்;
அழித்தனள்; அழுதனள்; அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தை – அக்கொடிய கூனியே

16. வேதனைக் கூனி, பின் வெகுண்டு நோக்கியே,
பேதைநீ பித்தி; நிற் பிறந்த சேயொடும்
நீதுயர் படுக; நான் நெடிது உன் மாற்றவள்
தாதியர்க்கு ஆட்செயத் தரிக்கிலேன்' என்றாள்.

17. சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்த ஆசனத்து இனிது இருப்ப, நின்மகன்
அவந்தனாய், வெறுநிலத்து இருக்கல ஆன போது,
உவந்தவாறு என்இதற்கு உறுதியாது ?' என்றாள்.

18. 'மறந்திலள் கோசலை, உறுதி; மைந்தனும்,
சிறந்தநல் திருவினில் திருவும் எய்தினாள்,
இறந்திலன் இருந்தனன்; என் செய்து ஆற்றுவாள்
பிறந்திலன் பரதன் நீ பெற்றதால்' என்றாள்.

19. 'சரதம்இப் புவிஎலாம், தம்பியோ டும்இவ்
வரதனே காக்குமேல், வரம்புஇல் காலமும்,
பரதனும் இளவலும், பதியின் நீங்கிப்போய்,
விரதமா தவம்செய விடுதல் நன்று' என்றாள்.

20. 'பண்ணறு கடகரிப் பரதன், பார்மகள்
கண்ணுறு கவினராய் இனிது காத்தஅம்
மண்ணறு முரசுடை மன்னர் மாலையில்
எண்ணுறப் பிறந்திலன்; இறத்தல் நன்று' என்றாள்.

21. ‘பாக்கியம் புரிந்திலாப் பரதன்தன்னை, பண்டு
ஆக்கிய பொலங்கழல் அரசன், ஆணையால்,
தேக்குஉயர் கல்அதர், கடிது சேணுடைப்
போக்கிய பொருள் எனக்கு இன்று போந்ததால்’.

22. மந்தரை, பின்னரும் வகைந்து கூறுவாள்;
‘அந்தரம் தீர்ந்து உலகு அளிக்கும் நீரினால்
தந்தையும் கொடியன்; நற்றாயும் தீயலாள்;
எந்தையே! பரதனே! என்செய்வாய்? என்றாள்.

23. ‘அர்சர்இல் பிறந்து, பின் அரசர்இல் வளர்ந்து,
அரசர்இல் புகுந்து, பேர்அரசி ஆனநீ
கரைசெயற்கு அருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்;
உரைசெயக் கேட்கிலை; உணர்தியோ?’ என்றாள்.

24. ‘கல்வியும் இளமையும் கணக்குஇல் ஆற்றலும்,
வில்வினை உரிமையும்; அழகும், வீரமும்
எல்லைஇல் குணங்களும் பரதற்கு எய்திய;
புல்லிடை உகுத்த அமுது ஏயும்போல்’ என்றாள்.

25. வாய்கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்கனல் தலைநெய் சொரிந்தென, கதம்கனற்ற,
கேகயர்க்குஇறை திருமகள், கிளர்இள வரிகள்
தோய், கயல்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும்

26. வெயில்முறைக் குலக்கதிரவன் முதலிய மேலோர்
உயிர்முதல் பொருள்திறம்பினும் உரைதிறம் பாதோர்
மயில்முறைக் குலத்து உரிமையை, மனுமுதல் மரபை;
செயிர்உற புலைச்சிந்தையால், என் சொனாய்? – தீயாய்!

27. "எனக்கு நல்லையும் அல்லைநீ; என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை; அத்தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை; வந்து ஊழ்வினை தூண்ட,
மனக்கு நல்லன சொல்லினை – மதிஇலா மனத்தோய்!

28. "பிறந்து இறந்துபோய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே;
நிறம்திறம்பினும் நியாயமே திறம்பினும், நெறியின்
திறம்திறம்பினும், செய்தவம் திறம்பினும், செயிர்தீர்
மறம்திறம்பினும், வரன்முறை திறம்புதல் வழக்கோ ?

29. தீயமந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
தூயசிந்தையும் திரிந்தது – சூழ்ச்சியின் இமையோர்
மாயையும் அவர்பெற்ற நல்வரம் உண்மையாலும்
ஆயஅந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும்

30. அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க், நல்அருள் துறந்தனள் தூமொழி மடமான்;
இரக்கம் இன்மை அன்றோ, இன்று இவ்உலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே ?

– கம்பர்.

கலிங்கத்துப் பரணி

(களம்பாடியது)

1. உடலின் மேல் பலகாயம் சொரிந்து, பின்கால்
உடன்பதைப்ப உதிரத்தே ஒழுகும் யானை,
கடலின் மேல் கலம் தொடரப் பின்னே செல்லும்
கலம்போன்று தோன்றுவன, காண்மின், காண்மின். (476)

2. நெடுங்குதிரை மிசைக்கலணை சரியப் பாய்ந்து
நிணச்சேற்றில் கால்குளிப்ப நிரையே நின்று,
படுங்குருதிக் கடும் புனலை அடைக்கப்பாய்ந்த
பல குதிரைத் தறி போன்ற பரிசு காண்மின் (477)

3. விருந்தினமும் வறியவரும் நெருங்கி உண்ண,
மென்மேலும் முகம் மலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்! (478)

4. சாம் அளவும் பிறர்க்கு உதவாதவரை நச்சிச்
சாருநர்போல, வீரர் உடல்தரிக்கும் ஆவி
போம் அளவும் அவர் அருகேஇருந்து விட்டுப்
போகாத நரிக்குலத்தின் புணர்ச்சி காண்மின் (479)

5. சாய்ந்து விழும் கடகளிற்றினுடனே சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியும் கொடிகள், தங்கள்
காந்தருடன் கனல் அமளி அதன்மேல் வைகும்
கற்புடை மாதரை ஒத்தல் காண்மின், காண்மின்! (481)

6. தம் கணவருடன் தாமும் போக என்றே
சாதகரைக் கேட்பாரே, தடவிப் பார்ப்பார்;
எம் கணவர் கிடந்த இடம் எங்கே! என்று என்று
இடாகினியைக் கேட்பாரைக் காண்மின், காண்மின்! (482)

7. வாய்மடித்துக் கிடந்ததலை மகனை நோக்கி,
மணி அதரத்து ஏதேனும் வடு உண்டாயோ?

நீ மடித்துக் கிடந்தது! எனப் புலவி கூர்ந்து,
நின்று ஆவி சோர்வாளைக் காண்மின், காண்மின்! (483)

8. தரைமகளும் தன்கொழுநன் உடலம் தன்னைத்
தாங்காமல் தன்சூரத்தால் தாங்கி, விண்ணாட்டு
ஆரமகளிர் அவ்உயிரைப் புணரா முன்னம்,
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின், காண்மின் (484)

9. பொருதடக்கை வாள் எங்கே? மணிமார்பு எங்கே?
போர்முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத்தோள் எங்கே, எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின், காண்மின்! (485)

10. முதுகுவடு இப்படி இருக்கும் என்ன நிற்கும்
முனைக் களிற்றோர், செருக்களத்து, முந்து தங்கள்
முதுகு வடுப்படும்! என்ற வடுவை அஞ்சி
முன்னம் வடுப்பட்டாரை, இன்னம் காண்மின்! (503)

- செயங்கொண்டார்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

குமரகுருபரர்

1. காப்புப் பருவம்

திருமால்

பூமேவு கற்பகப் பொங்கரிற் செங்கட்
புலோமசை வளர்த்தகும்பப்
புணர்முலைக் களியானை விளையாடு பன்னிரு
பொருப்பனை விருப்பனைத்தும்
கோமேவு சாரற் குறச்சிறுமி மேல்வைத்த
குழகனைக் கழகள்தொறும்
கொத்து முத்தமிழ் மொய்த்த கந்தபுரி முத்துக்
குமாரனைத் தனிபுரக்க
தேமேவு கடவுட் பொலங்கிரி திசைக்கரிக-
திகிரி கிரி குலகிரியொடும்
திரியத் திரித்துமத் தெறியத் தடங்கடற்
றெண்டிரை முகட்டுதித்த
பாமேவு மதுரம் பழுத்தமுதமொழுகும்
பசுங்குதலை மழலையஞ்சொற்
பங்கயச் செல்வியிரு கொங்கைக் குவட்டுவளர்
பச்சைப் பசுங்கொண்டலே.

2. செங்கீரைப்பருவம்

இருக்கோவிடும்பரி புரக்கோல முந்நுதலில்
இட்ட பொட்டுஞ் சுட்டியும்
எரிமணிப் பட்டமுங்கட்டு பொன்னரை ஞாணும்
இளஞாயிறு தயஞ்செயும்
உருக்கோல முஞ்சூழியக் கொண்டையும் முச்சி
உச்சியும் வாளிமுத்தும்
ஒள்ளொளி ததும்புங் குதம்பையுங் கண்டு கண்
டோடாரிக் கண்களிக்கும்

மருக்கோல நீலக் குழற்றைய லாட்கரு
மருந்தாயிருந்த தெய்வ
மகக்கோலமே முதிர் கிழக்கோல மாய்க்குற
மடந்தைமுடைந்து மற்றத்
திருக்கோல முடனொரு மணக்கோல மானவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே.

3. தாலப்பருவம்

பில்கும் பசுந்தே னசும்பிருந்த
பின்றா ழுளகத் தரமகளிர்
பேதைக் குறும்பு விளையாடும்
பேராயத்துச் சிறுமருங்குற்
கொல்குங் கொடிபோய் நுடங்கியிட
ஓங்கும் பளிக்கு நிலா முற்றத்
துயர் சூளிகையின் மரகதத்தின்
ஒளிகால் வீசத் தெளிவிசும் பிற
பல்குஞ் சுரபி தரங்கநெடும்
பாகீரதியின் கரைக் கிளைத்த
பசும்புல் லெனச் செந்நாவளைக்கும்
பைம்பொற் றலங்கள் பலகோடி
மல்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்த முழு
மணியே தாலோ தாலேலோ.

4. சப்பாணிப் பருவம்

முடங்குந் திரைப்பரவை வயிறுளைந் தீன்றநறு
முளரிப் பிராட்டி வைத்து
முத்தாடு பச்சைப் பசுங்கிள்ளையென மழலை
முதிருமென் குதலை கற்பத்

தொடங்குங் குறப்பாவை கற்றைக் குழற்கதிற்
றூமமோடு தலமமிட்டுச்
சுடிகைறுதல் வெயர்வுந் துடைந்தொழுகு கத்தூரி
தூரியங் கொண்டு தீட்டிக்
குடங்கைக் கடங்கா நெடுங்கட கடைக் கழகு
கூரவஞ் சனமெழுதிமென்
கொங்கைத் தடத்துப் பசுங்களப மப்பியவள்
குற்றேவன் முற்றமாற்றித்
தடங்குங் குமப்புயங் கொட்டிநட மிட்டவன்
சப்பாணி கொட்டியருளே
தையனா யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

5. முத்தப் பருவம்

குருகு நாறு செந்தளிர்க் கைக்
கொடிநுண் ணுசுப்பிற் கோட்டிமயக்
குலப்பூங் கொம்பு நறவூழ்த்த
கொழுந்தாமரையோ டவிழ்ந்ததுழாய்ச்
சருகு நாறுமுடைத் தலையின்
தாமநாறு திரடிண்டோட்
டாதையாருங் கண்டு கண்டு
தடங்கண் களிப்பக் குரவு விரிந்
தருகுநாறு திருமேனி
அந்தீங்குதலை மழலைகனிந்
தமுதமூறு பசுந்தேறல்
அசும்பு நாடித் தெய்வமண
முருகு நாறுஞ் செங்கனிவாய்
முத்தந்தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே.

நந்திக்கலம்பகம்

ஊசல்

1. ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மெனமலர்க்குழல் சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த்தாண்டன்
காடவற்கு முன்தோன்றல் கைவேலைப் பாடிக்
காஞ்சிபுரமும் பாடி ஆடாமோ ஊசல்.

சம்பிரதம்

2. வட்டன்றே நீர்இதனை மிகவும் காண்மின்
மற்றக்கை கொட்டினேன் மாவின்வித்தொன்று
இட்டன்றே பழம்பழுப்பித் துண்ணக் காண்மின்
இவையல்ல சம்பிரதம் இகலில் தெள்ளாற்று
அட்டன்றே பொன்றும்வகை முனிந்து நந்தி
அவனிநா ராயணன்பா ராளுங் கோமான்
குட்டன்றே மழைநீரைக் குடங்கைக் கொண்டு
குரைகடலைக் குடிக்கின்றேன் குடிக்கின்றேனே.

மறம்

3. அம்பொன்று வில்லொடிதல் நாண்அறுதல் நான்கிழவன்
அசைந்தேன் என்றோ
வம்பொன்று குழலாளை மணம்பேசி வரவிடுத்தார்
மன்னர் தூதா
செம்பொன் செய்மணிமாடத் தெள்ளாற்றில் நந்திபதம்
சேரார் ஆனைக்

கொம்பன்றோ நம் குடிலில் குறுங்காலும் நெடுவளையும்
குனிந்து பாரே.

தலைவி வருந்துதல்

4. செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றாரோ தடவினார் – பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்.

கையறுநிலை

5. வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அடைந்ததுன் தேகம்
செந்தழல் அசைந்ததுன் தேகம்
நானும் என்கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே.

சிலப்பதிகாரம்

இளங்கலை இரண்டாம் ஆண்டிற்குரிய செய்யுள் தொகுப்பில் சிலப்பதிகாரம் – கனாத்திறம் உரைத்த காதை எனும் பகுதி இடம் பெற்றுள்ளது.

சிலப்பதிகாரம் - நூற்சிறப்பு :

தமிழில் உள்ள காப்பியங்களை இருவகையாகப் பகுப்பர். அவை : 1. ஐம்பெருங்காப்பியம், 2. ஐஞ்சிறு காப்பியம். இவற்றுள் ஐம்பெருங் காப்பியங்களாவன: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

இவ்ஐம்பெருங் காப்பியங்களுள் காலத்தாற் பழமையானதும், மாட்சிமை, பொருந்தியதுமான நூலே சிலப்பதிகாரம். காவிரிப் பூம்பட்டினத்தில், பெருங்குடி வணிகர் மரபில் தோன்றிய கற்பிற் சிறந்த கண்ணகி, அவள் கணவனாகிய கோவலன் என்பவர்களுடைய வரலாற்றை உரைப்பது. 'வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' எனப்படும். தமிழகத்தின் பகுதிகளாகிய சோழநாடு, பாண்டிய நாடு, சேர நாடு என்பவற்றின் இயல்புகளையும், முறையே அவற்றின் தலைநகர்களாகிய புகார், மதுரை, வஞ்சி என்பவற்றின் பெருமைகளையும், அவற்றிடையேயிருந்து செங்கோல் ஒச்சிய சோழ, பாண்டிய சேர மன்னர்களின் அறம், மறன், ஆற்றல், ஆணை, முறைமை என்பவற்றையும், அவர்களால் புரக்கப்பட்ட குடிமக்களின் ஒழுக்கம், ஊக்கம், ஒப்புரவாண்மை முதலியவற்றையும் விரித்துரைப்பது.

இந்நூல் உணர்த்தும் நீதிகள் பலப்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கன. மூன்று 1. அரசியலில் வழுவிய வேந்தனை அறக்கடவுளே கூற்றாய் (யமனாய்) நின்று கொல்லும்; 2. புகழமைந்த பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்; 3. ஊழ்வினை, செய்தோரை நாடிவந்து தன் பயனை நுகர்விக்கும். இக்கருத்தினைப் பின் வரும் சிலப்பதிகார பதிகம் பகரும்.

"அரசியல் பிழைத்தோர்க்கும் அறம் கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்!"

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப்பெற்றது. 'சிலப்பதிகாரம்', பொருளும் தொடர்ந்து செல்லும் இயல்பினது. எனவே இந்நூலுக்கு இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் என்ற வேறு பெயரும் உண்டு! உரைச் செய்யுளும் இசைப் பாட்டும் இடையிடையே விரவப் பெற்றமையான், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் ஏத்தப்படும். பல கூத்துக்களும், அவற்றிற்குரிய பாட்டுக்களும் நூலின் இடையே இடம் பெற்றுள்ளனவாதலின் இதனை நாடக காப்பியம் என்றும் நவில்வர். கோவலன் – கண்ணகி எனும் குடிமக்களைப் பற்றிக் கூறுவதாதலின் இதனைக் குடிமக்கள் காப்பியம் என்பர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.

நூலின் தொடக்கத்தில் பதிகம் அமைந்துள்ளது. முதற்கண் அமைந்த புகார்க் காண்டத்தில் 'மங்கல வாழ்த்துப் பாடல்' முதல் நாடு காண் காதை முடியப் பத்துக் கதைகளும்; இரண்டாவதாக

அமைந்த மதுரைக் காண்டத்தில் காடு காண் காதை முதல் 'கட்டுரை காதை' முடிய பதின்மூன்று காதைகளும்; மூன்றாவதாக அமைந்த வஞ்சிக் காண்டத்தில், 'குன்றக் குரவை' முதல் 'வரந்தரு' காதை முடிய ஏழு காதைகளுமாக மொத்தம் முப்பது காதைகளைக் கொண்டது.

இச்செந்தமிழ்க் காப்பியம் கண்ணகியின் 'காற்சிலம்பை மையமாகக் கொண்டு இயங்குகின்றது. ஆதலின், இதற்குச் சிலப்பதிகாரம் என்ற பெயர் அமைந்தது. சிலம்பு+அதிகாரம் = சிலப்பதிகாரம். சிலம்பால் அதிகரித்த காதையைக் கூறும் நூல் என்பது பொருள். மூன்றாம் வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இந்நூலைப் படித்துத் தம் நெஞ்சத்தைப் பறிகொடுத்த அமரகவி பாரதியார்.

நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணியறம் படைத்த தமிழ்நாடு

என ஏத்துவாராயினர்!

இவ்வினிய நூலினை யாத்தவர். இளங்கோவடிகளார் இவர். சேர நாட்டு வஞ்சியிலிருந்து அரசுபுரிந்த சேரலாதனின் மகனாவார். இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடாக்கிய சேரன் செங்குட்டுவனின் தம்பியாவார்! இளங்கோவாகிய இவர் துறவு பூண்டமையால் இளங்கோவடிகள் எனப்பட்டார். இவர், சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பர் சிலர். சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பர் சிலர். நூலினை நோக்குங்கால், இவர் யாதொரு சமயத்திலும் வெறுப்பின்றி எல்லாச் சமயங்களையும் மதித்துப் பாடியமை புலனாகும். இவரது காலம் கி.பி.2 ஆம் நூற்றாண்டு என்பர்.

இந்நூலுக்குப் பழைய உரைகள் இரண்டு உண்டு. 1. அரும்பத உரை, 2. அடியார்க்கு நல்லார் உரை, இந்நூலினை, முழுமையான முதன் முதலிற் பதிப்பித்த பெருந்தகை – தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் அவர்களே யாவர்! தற்காலத்தில் இந்நூலுக்கு உரை கண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரும், உரைவேந்தன் அவ்வை சு.துரைசாமிப் பிள்ளையுமாவார்.

கனாத்திறமுரைத்த காதை

நமக்குப் பாடமாக உள்ள 'கனாத்திறமுரைத்த காதை' யானது, முதற்கண் அமைந்த புகார்க் காண்டத்தில், ஒன்பதாவது காதையாகும். 'கண்ணகி நல்லாள்', தான் கண்ட கனவின் தன்மையைத் தன் தோழி. தேவந்தி என்பாளுக்கு எடுத்துரைக்கும் பகுதி என்பது இதன் பொருள்.

முன்கதைச் சுருக்கம் :

சோழர் தலைநகரம் காவிரிப் பூம்பட்டினம் எனும் 'புகார்' நகரில் 'மாக வான் நிகர் வண்கை மாநாய்கன்' என்பானின் மகனாகிய கண்ணகிக்கும், 'வருநிதி பிறர்க் கார்த்து மாசாத்துவான்' என்பானின் மகனாகிய கோவலனுக்கும் நன்மணம் நிகழ்ந்தது. போதிலார் திருவினாள் எனப்படும். மங்கையைத் துணை நலமாகக் கொண்ட கோவலன், அவளை மாசறு பொன்னே, வலம்புரி முத்தே' என்னும் பாராட்டுரை புலபகன்று இனிமையான இல்லற வாழ்வை மேற்கொண்டான். ஆண்டுகள் சில கழிந்தன. அப்புகார் நகரில், கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி என்பாள், "ஆடலும் பாடலும்

அழகும் என்று இக்கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்' திகழ்ந்தாள். வேந்தனது அவையில், நடன அரங்கேறித் 'தலை கோல்' எனும் தகவுறு பட்டம் பெற்றதோடன்றி, அரசன் அளித்த ஆயிரத் தெண் கழஞ்சு பொன் மதிப்புள்ள மாலையும் பரிசாகப் பொற்றாள். பெற்ற மாதவி, அதனை ஒரு கூனி கையிற் கொடுத்து "ஆயிரத் தெண்கழஞ்சு பொன்னைக் கொடுத்து இம்மாலை பெறுவோர், மாதவிக்கு மணமகனாவர்" என்று கூறச் செய்ய, அம்மாலையைக் கோவலன் வாங்கி மாதவி மனையை அடைந்து, அவள்பால் இன்பம் நுகர்ந்து, அதனால் தன் மனையகம் மறந்து, விடுதல் அறியா விருப்பினனாய் அங்கேயே தங்கிவிட்டான்! கண்ணகி நல்லாள், காதலனைப் பிரிந்த பெருந்துயரில் மூழ்கியவளாய், மங்கல அணியின்றிப் பிறிதணி மகிழாதவளாய்க் கையற்ற நெஞ்சினளாய்க் கலங்கி நின்றாள். சித்திரைத் திங்களில், சித்திரையும் நிறைமதியும் கூடிய நன்னாள் வந்தது. புகார் நகர மக்கள் இந்திர விழாக் கொண்டாடினர். இவ்விழா நடந்து முடியுங்கால், மாதவியின் ஆடலும் கோபமும் முடிவுற்றன. அப்போது, வெறுப்புள்ள உள்ளத்தனாயிருந்த கோவலனை மகிழ்ச்சியுட்படுத்த விழைந்த மாதவி, அவனை அழைத்துக் கொண்டு, கடல் விளையாட்டைக் காண புறப்பட்டாள். ஆங்குப் புன்னை நீழல் புதுமணற் பரப்பில், வெண்கால் அமளி மீதிருந்து, வயந்த மாலை என்னும் தன் தோழியின் கையிலே இருந்த யாழினை வாங்கி, இசை எழுப்பிப் பின் அதனைக் கோவலன் கையில் கொடுத்தாள். யாழினைப் பெற்ற கோவலனும், மாதவியின் மனம் மகிழ வாசித்தான். அவன் பாடிய பாடல்களில், அகப்பொருட்டுறைக் கருத்துக்கள் அமைந்திருந்தன. அவற்றைக் கேட்ட மாதவி, 'இவன் பாடிய பாடல்களில் ஏதோ ஓர் குறிப்பு உண்டு. இவன் தன்னிலை மயங்கினான்' என எண்ணி, அந்த யாழினை வாங்கித் தானும் ஓர் குறிப்புடையாள் போல் பாடல்கள் பாடலானாள். 'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' காலமாதலின், "யான், கானல்வரிபாட, இவளோ, 'மாயப் பொய் பல கூட்டுப் மாயத்தால்' ஆதலின், வேறொன்றின் மேல் மனம் வைத்துப் பாடினாள்" எனக் கருதி, அவளை அணைத்த கை நெகிழ்ந்தவனாய் அவ்விடம் விட்டு எழுந்து புறப்பட்டுச் சென்று விட்டான்! மாதவியோ, கையற்ற நெஞ்சினளாய், அவனின்றித் தன் மனையை அடைந்தாள். கோவலன் ஊடிச் சென்றமையால், பெருந்துன்பமுற்ற மாதவி, இளவேனிற் பருவத்து இயல்பினை இயம்பத்தான் படும் துயரமும் சுட்டி, வயந்த மாலை வழியாகக் கோவலனுக்கு மடல் ஒன்று எழுதி அனுப்பினாள். வயந்தமாலையும், கூல மறுகில் கோவலனைக் கண்டு அதனைக் கொடுப்ப, அவனோ, 'நாடகமகளாதலின், இவ்வாறெல்லாம் நடித்தல் அவளுக்கு இயல்பு' என்று கூறி, மடலை வாங்க மறுத்துவிட்டாள். அதுகண்ட மாதவி, 'மாலை வாராராயினும் காலை காண்குவம்' என்று எண்ணி, மிக்க வருத்தத்துடன், மலர்ப் படுக்கையில் துயிலாது கிடந்தாள்.

கனாத்திறமுரைத்த காதை :

இப்பகுதி 79 அழகுளையுடையது; இறுதியில் ஒரு வெண்பாவும் உள்ளது. இக்கதையில் சொல்லப்படும் செய்தி வருமாறு :

ஞாயிறு மறையும் மாலைப்பொழுது; புகார் நகரில் உள்ள பூங்கொடி போன்ற பெண்டிர், முல்லை மலரையும் நெல்லையும் தூவி, விளக்கேற்றி, இல்லுறை தெய்வத்தை வழிபட்டுப் பின்பு, இரவுக் கேற்ற ஒப்பனை கொண்டனர். கண்ணகியின் அன்புத் தோழி, தேவந்தி என்பவள்.

முன்னொரு காலத்திலே, மாலதி என்ற பெயருடைய பார்ப்பணி ஒருத்தி, தன் மாற்றாளின் குழந்தைக்குப் பால் கொடுக்க, 'விக்கல்' உண்டாகி அதனால் அக்குழந்தை இறந்துவிட்டது. இது

கண்ட கணவனும், அம்மாற்றாளும் மாலதி மீது அடாப்பழி சுமத்தினர். 'இதற்கு என் செய்வது' என்று ஏங்கிய மாலதி, இறந்த குழந்தையை எடுத்துக் கொண்டு புகார் நகரில் இருந்த அமரர் கோட்டம், வெள்யானைக் கோட்டம், பல தேவர்க் கோட்டம், சூரியன் கோட்டம், ஊர்க் கோட்டம், முருகன் கோட்டம், வச்சிரக் கோட்டம், சாதவாகனன் கோட்டம், அருகன் கோட்டம், சந்திரன் கோட்டம் எனப்படும் பல கோயில்களுக்குச் சென்று, தெய்வங்களே! எமக்கு உற்ற இத்துன்பத்தைத் தீர்ப்பிராக! என்று வேண்ட, எவ்விதப் பலனும் கிட்டாததால், இறுதியில் பாசண்டச் சாத்தன் கோயிலை அடைந்து, வரங்கிடந்தாள். அப்போது 'சக்கரவாளக் கோட்டம்' என்னும் சுடுகாட்டில் குழியில் இடப்படும் பிணங்களைத் தின்பதையே தொழிலாகக் கொண்ட 'இடாகினி' என்ற பேயானது பெண் வடிவில் மாலதிமுன் வந்து குற்றமற்றவளே! தவமுடையோர்க்கே தேவன் வரந்தருவர். இது பொய்யன்று, மெய்யுரையே! நின் கையில் உள்ள குழந்தையைப் பார்க்க விரும்புகிறேன். என்னிடம் தருக!' என்று கூறி அவளிடமிருந்து குழந்தையைப் பறித்துத் தனது இருப்பிடம் ஏகித் தன் வயிற்றுக்குத் தீனியாக்கிக் கொண்டது! இது கண்ட மாலதி, இடி ஓசைகேட்ட மயில்போல் ஏங்கி அழுது நின்றான். அக்குரல் கேட்ட சாத்தன் என்னும் தெய்வம் அவளைப் பார்த்து, அன்னாய்! ஏங்கி அழுவதை விடுக! நீ போகும் வழியில், குயில்களையுடைய, அடர்ந்த மரங்களின் நிழலில் உயிருடன் இருக்கும் குழந்தைக் காண்பாய்!" என்று சொல்லிச் சென்று, தானே அக்குழந்தை வடிவாய்த் தோன்றி அவ்விடத்திற் கிடந்தது. அதனைக் கண்ட மாலதி தன் குழந்தை எனக் கருதி, அதனைத் தூக்கித் தன் மடியில் அனைத்துக் கொண்டு போய், மாற்றாளிடம் தந்தாள்.

குழந்தையாய்த் தோன்றிய சாத்தனும், பிறரைப் போல் பிரமச்சாரியாய்ச் சிறந்த கல்வி, கேள்விகளில் மேம்பாடுற்றுத் தாயாரும் தந்தையும் இறந்த பின்னர்த் தன் பங்காளிகளுடன் வழக்குரைத்து, இருமுது குரவர்க்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலானவற்றைச் செய்து முடித்துத் தன் தன் மெய்யான தெய்வ வடிவைக் காட்டி, நீ; எமது கோயிலுக்கு வருக' என்று சொல்லி நீக்கினாள்.

தூய மொழியினையுடைய தேவந்தியோ, என் நெஞ்சைக் கவர்ந்த கணவன், என்னை விட்டு நீங்கினான். அவனை மீண்டும் என்பால் கொண்டு தருக! எனச் சாத்தன் கோயிலில் நாடோறும் வழிபட்டு வரலானால் அங்ஙனம் வழிபட்டு வருபவள், குறைகள் இல்லாத புகழையுடைய கண்ணகி நல்லாளுக்கு, கணவன் பிரிந்தமையால் பெருந்துன்பமுண்டு என்று எண்ணி வருந்துகின்றவள். சாத்தன் கோயிலில், அறுகு முதலியன தூவி, இவள் கணவனைப் பெறல் வேண்டும்' என வழிபட்டுப் பின், கண்ணகிபாற் சென்று, நீ நின் கணவனைப் பெறுக! என்று வாழ்த்தினான். அவ்வுரை கேட்ட கண்ணகி, பின்வருமாறு கூறலானாள்:

"தோழி! நீ, இவ்வாறு கூறுதலால் என் கணவனைப் பெறுவேன் ஆயினும், யான் கண்ட ஒரு கனவினால் என் நெஞ்சம் ஐயுறுகின்றது. அக்கனவு யாது எனக் கேட்பாயாகில் சொல்லுகிறேன் கேள்! என் கணவன் என் கைபற்றி அழைத்துப் போக, யாங்கள் ஓர் பெரிய நகரின் கண் நுழைந்தோம். அவ்வாறு புக்க அந்நகரிலே, எங்கட்கு வராததோர் பழிச்சொல்லை அவ்வூரார் என்மேல் போட்டனர். அப்பழிமொழியால், கோவலனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தது என்ற பிறர் சொல்லக் கேட்டு, அவ்வூர் அரசன் முன் சென்று வழக்குரைத்தேன். அதனால், அவ்வரசனுக்கும் அவ்வூர்க்கும் நேர்ந்த ஒரு தீங்கும் உண்டு. அது, தீக்கனா ஆதலால் உனக்கு நான் சொல்ல விரும்பவில்லை! என்னோடு பொருந்திய மேலோனுடன் யான் பெற்ற நற்பேற்றினை (அதாவது நாங்கள் இருவரும் துறக்கம் புகுதலை) நீ கேட்டால் சிரிப்பாய்!"

இதனைக் கேட்ட தேவந்தி, கண்ணகியைப் பார்த்து, பொற்றாடீஇ; நீ, நின் கணவனால் வெறுக்கப்பட்டாயுமல்லள்! முற்பிறப்பிலே நின் கணவன் பொருட்டுக் காக்க வேண்டியதொரு நோன்பைச் செய்யத் தவறிவிட்டாய்! அதனால் உண்டாகிய தீங்கு அழிவதாக! காவிரியாறு, கடலோடு கலக்குமிடத்தருகே, கானலில், சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற பெயரையுடைய இரண்டு பொய்கைகள் உள்ளன. அவற்றில் மூழ்கி, அருகே உள்ள மன்மதன் கோயிலை அடைந்து, அவனை வணங்கும் மகளிர், தம் கணவரோடு பிரியாதிருந்து இன்பமடைவர். மறுமையிலும் போக பூமியிற் பிறந்து கணவருடன் இன்பம் நுகர்வார். ஆதலின் நாமும் அப்பொய்கைகளில் ஒரு நாள் நீராடுவோம்!" என்றார்.

அவ்வுரைக் கேட்ட கண்ணகி, "ஆங்ஙனம் துறை மூழ்கித் தெய்வம் தொழுதல் எம்போன்றவர்க்கு இயல்பாகாது!" என்று சொல்லி மறுத்தாள். அப்போது, குற்றேவல் புரியும் இளையவள் ஒருத்தி! "பெருமையுடைய நம் அரசன் போலும் கோவலன், நம் வாசலில் நிற்கின்றான்!" என்றாள். வாயிலில் நின்ற கோவலனும், உள்ளே படுக்கையிடத்தே நுழைந்து, தன் மனைவி கண்ணகியின் வாட்டமுற்ற மேனியும், துயரமும் கண்டு, அவள்பால் "வஞ்சகமுடைய பொய்த்தியாகிய மாதவியோடு கூடியொழுகியமையால் நம் குலுத்திலுள்ளார் தேடித் தந்த மலை போன்ற பெரிய பொருட்குவியல் எல்லாம் தொலைதலால் உண்டான வறுமை, எனக்கு நாணைத் தருக்கின்றது!" என்றான்.

இவன் கூறியது கேட்ட கண்ணகி, "மாதவிக்குக் கொடுக்க பொருள் இல்லை போலும்; அதனால்தான் இவ்வாறு கூறுகின்றான்' என எண்ணிப் புன்முறுவலை வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டு, 'இன்னும் சிலம்பு இரண்டு உள; கொள்க! என்றாள்.

அப்போது கோவலன் "சேயிழையே! நான் கூறுவதனைக் கேட்பாயாக! நீ கூறிய இச்சிலம்பை, யான் வாணிக முதலாகக் கொண்டு, புகழமைந்த மாட மதுரைக்குச் சென்று, முன்பு யான் தொலைத்த பொருளெல்லாம் தேடத் துணிந்தேன். இங்கிருந்தும் என்னோடு புறப்படுக!" என்றான்.

முன் செய்த தீவினை, நெஞ்ச ஒருப்படுத்தலால், ஞாயிறு தோன்றுதற்குமுன், அவ்வினையின் ஏவலைக் கொண்டான்.

கருத்து : இரவுக் கோலம் (1-4 அடி) :

(புகார் நகரில்) பகலவன் மறைந்த மாலைப் பொழுது வந்துற்றது. கொடி போன்ற இடையையுடைய பெண்கள், அகன்ற வீடுகள் அனைத்திலும் அரும்பு முறுக்கு நெகிழ்ந்த முல்லைக் கொடியின் ஒளிபொருந்திய மலர்களை நெல்லுடன் தூவினர். இல்லுறை தெய்வத்தை வணங்கினர்; அழகிய விளக்குகளை ஏற்றினர்; இராப் பொழுதிற்கு ஏற்றதோர் கோலத்தைக் கொண்டனர்.

குறிப்பு :

மாலைப் பொழுது வந்ததும், இல்லுறை மகளிர், முல்லை மலர்களுடன் நெல்லையும் சேர்த்து வழிபாடு செய்தல் மரபு. இரவில், தம் கொழுநர் மார்பை அணைதற்கேற்றவாறு மெல்லிய ஆடை உடுத்தும், புனைந்தும் தம்மை ஒப்பனை செய்து கொள்வர்.

கருத்து : மாலதியும் மாற்றாந்தாய் மகவும் : (5-28)

முன்னொரு காலத்தில், மாலதி என்ற பெயருடைய ஒரு பார்ப்பன மங்கை, தன் மாற்றாளின் குழந்தைக்குத் தன் மார்பிலிருந்து கரந்த பாலைச் சங்கால் ஊட்டினாள். விக்கல் எடுத்து, அதனால் அக்குழந்தை மாண்டது.

'என் கணவனாகிய பார்ப்பனனும், அவன் மனைவியும், என் மேல் அடாப் பழி கூறுவரே தவிர, எனக்கு ஏற்பன ஒரு காலும் உரையார்; இதற்கு யான் என்செய்கேன்? என்று ஏங்கினாள் மாலதி! எனவே இறந்த அக்குழந்தையைக் கையில் தாங்கிக் கொண்டு புகார் நகரில் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் சென்றாள். அவ்வாறு அவள் சென்ற கோயில்களாவன; தேவர்களுக்குரிய கற்பகத் தரு நிற்கும் கோயில்; ஐராவதம் நிற்கும் கோயில்; அழகான பலதேவர் கோயில்; கிழக்குத் திக்கில் தோன்றும் சூரியன் கோயில்; சிவபிரான் இடமாகிய கைலாயம் நிற்கும் கோயில்; முருகவேள் கோயில்; வச்சிரப்படை நிற்கும் கோயில்; சாதவாகனன் (ஐயனார்) பொருந்திய கோயில்; அருகன் கோயில்; சந்திரன் கோயில்! இப்படிப் பல கோயிட்கட்கும் சென்று, 'தெய்வங்களே!.எமக்கு உண்டான இப்பெருந்துன்பத்தைத் தீர்ப்பீராக!' என்று வேண்டினாள். இறுதியில், அந்நகரில் உள்ள, பாசண்டச் சாத்தான் கோயிலை அடைந்து, அங்கே வரங்கிடந்தாள்.

புகார் நகரில் உள்ள சுடுகாட்டிற்குச் 'சக்கரவாளக் கோட்டம்' என்று பெயர். அங்கே, குழியில் போட்டுப் புதைக்கும் பிணங்களைத் தின்னும் பேய் ஒன்று உள்ளது. அதற்கு 'இடாகினிப் பேய்' என்று பெயர். அப்பெண்பேயானவள். பிறரைப் பழிக்கும் வடிவுடையதொரு ஒரு பெண் வடிவு கொண்டாள். பாசண்டச் சாத்தன் கோயிலில் பாடுகிடந்த மாலதி முன் தோன்றி, 'குற்றமற்ற பெண்ணே! முன்பே செய்யப்பட்ட நற்றவப் பயன் உடையார்க்கே தேவர் வரங் கொடுப்பர்; அஃதல்லார்க்கு வரம் கொடார்! இது பொய்யுரையன்று! மெய்யுரையே! நின் கையிலுள்ள இறந்த குழவியைப் பார்ப்பதற்குத் தருக! என்று சொல்லிக் கொண்டே, அவள் கைக் குழந்தையைப் பறித்துக் கொண்டு, நள்ளிருளில், சக்கரவாளக் கோட்டத்திற்குச் சென்று, அதனைத் தன் வயிற்றிலே போட்டு உணவாகக் கொண்டு விட்டாள்!

அதுகண்ட மாலதி, இடிக்குரல் கேட்ட மயில் போல் ஏங்கி அழுதாள். அவளது அழுகுரலுக்கு இரங்கிய பாண்டச் சாத்தன் என்னும் தெய்வம் அவள். முன் தோன்றி, 'அன்னாய்! நீ ஏங்கி அழுவதை விட்டுவிடு! நீ செல்லும் வழியில் வழியில், குயில்கள் நிறைந்த ஒரு மரச் செறிவின் நிழலில், உயிருடன் கிடக்கும் குழந்தையினைக் காண்பாயாக!' என்று சொல்லி விட்டு, அத்தெய்வம், தானே ஒரு குழந்தையாய் அவ்விடத்திற்கிடந்தது. அவ்வழியே சென்ற மாலதியும், அவ்வஞ்சகக் குழந்தையைத் தன் குழந்தையென்று எடுத்து, வயிற்றில் அணைத்துக் கொண்டு போய், மாற்றாளின் கையிற் கொடுத்தாள்!

கருத்து : சாத்தனின் இல்லற வாழ்வு : (28 - 36)

பார்ப்பனனுக்கு மகனாக வளர்ந்த 'சாத்தன்' அவன் பின்னே செல்லும் சிறந்த பிரமசாரியாய்ச் சிறந்த கல்வி, கேள்விகளில் பெரும்புலமை பெற்றான். தந்தையும் தாயாரும் இறந்த பின், அச்சாத்தனும், (உலக வழக்கிற்கு ஏற்ப) தன் தாயத்தாரோடும் வெல்வழக்குரைத்துத் தந்தை தாயர்க்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலானவற்றையும் செய்து முடித்துத் தனக்கு மனைவியாக வாய்த்த 'தேவந்தி' என்பாளுடன் இல்லற வாழ்வு நடத்தலானான். (இங்ஙனம் எட்டி

ஆண்டு வாழ்ந்த). சாத்தன், தனது என்றும் மூத்தலில்லாத இளைய அழகினை அதாவது தெய்வ வடிவினை அவளுக்குக் காட்டி, அத்தகைய வடிவைப் பார்ப்பதற்குரிய வல்லமையும் அவள் கண்களுக்குத் தந்து 'நீ, எம் கோயிலுக்கு வருவாயாக!' எனச் சொல்லி நீங்கினான்!

கருத்து : தேவந்தி செயல் : (36-44)

தன் கணவனின் பிரிவிற்குத் தேவந்தி, சாத்தன் கோயிலுக்குச் சென்று, "என் நெஞ்சினைப் பிணித்த கணவன், 'தீர்த்தத் துறைகள் எங்கும் போய்த் தீர்த்தமாடுவேன்" என்று சொல்லி, என்னை விட்டு நீங்கினன்! அவனை மீண்டும் இவ்விடத்தே அழைத்துத் தருவாயாக!" என இவ்வொன்றையே வேண்டிக் கொண்டவளாய், நாள்தோறும் வழிபாடு செய்துவரலானாள்.

தன்னைப் போலவே கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகிக்காகவும் இரக்கம் கொண்டாள் தேவந்தி! "குறைதல் இல்லாத, நற்புகழையுடைய கண்ணகி நல்லாளுக்குக் கணவன் பிரிதலால் உற்றதோர் துன்பமுண்டு" என்று தன் மனத்தில் எண்ணி வருந்துபவளாய்ச் சாத்தன் கோயிலை அடைந்து, அறுகு முதலியவற்றைத் தூவி 'இவள் கணவனைப் பெறல் வேண்டும்' என வழிபட்டவள் கண்ணகி இல்லம் சென்று, அவள் பால் 'நின் கணவனைப் பெறுவாயாக!' என்று வாழ்த்தினாள்.

கருத்து : கண்ணகி, கனாத்திறமுரைத்தல் (44-54)

தேவந்தி கூறியது கேட்ட கண்ணகி, அவளிடம், "நீ இவ்வாறு கூறுதலால், என் கணவனைப் பெறுவேனாயினும், யான் கண்ட ஒரு கனவினால் என் நெஞ்சம் ஐயுறுகின்றது. அக்கனவு யாது எனின் கூறுவேன் கேள்! என் கொழுநன், என் கையைப் பற்றிக் கொண்டு அழைத்துப் போனான்; நாங்கள் ஒரு பெரும் பதியில் நுழைந்தோம். அவ்வாறு சென்ற அவ்வூரிலே எங்கட்குப் பொருந்தாததோர் பழிச்சொல்லை, அவ்வூரார், இடுதேள், இடுமாறு போல, என்மீது போட்டனர். அப்பழிச்சொல்லால் கோவலனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தது என்று பிறர் சொல்ல அதனைக் கேட்டு, அவ்வூர் அரசர் முன்னர் யான் சென்று வழக்குரைத்தேன். அதனால் அவ்வரசனுக்கு மட்டுமன்று, அவ்வூர்க்கும் தீங்கு நேர்ந்தது. இவ்வாறு யான் கண்டது தீக்கனாவாதலின் நினக்கு அதனை உரையேன்! செறிதொடியாய்! அப்போது, கொடியதொரு தீக்குற்றமும் நேர்ந்தது. அத்தகைய குற்றத்தைப் பொருந்திய என்னோடு பொருந்திய என் கணவனுடன் யான் பெற்ற நற்பேற்றினை நீ கேட்பாயாயின் அது உனக்கு நகையைத் தரும்!" என்றான்.

கருத்து : தேவந்தி கூற்றும் கண்ணகி மறுப்பும் (54 - 64)

இவ்வாறு கண்ணகி கூறியதைக் கேட்ட தேவந்தி பின்வருமாறு உரைத்தாள்; "பொன்னாலாய தொடியினை உடையாய்! நீ, நின் கணவனால் வெறுக்கப்பட்டாயல்லை! முற்பிறப்பிலே நின் கணவன் பொருட்டுக் காக்க வேண்டியதொரு நோன்பை விட்டுவிட்டாய்! அதனால்தான் இத்தகைய தீங்கு! இத்தீங்கு, கெடுவதாக! காவிரி, தன் நீரைக் கொண்டு சென்று கடலிற் சேர்க்கும் சமூகத்தின் அருகே, பூவிதழ் விரியும் நெய்தல் நிலத்துக் கானலிடத்தே, சோமகுண்டம் சூரியகுண்டம் எனும் இரண்டு பொய்கைகள் உள்ளன. அவற்றின் துறைகளில் மூழ்கி, மன்மதன் கோயிலை அடைந்து அவனை வணங்குவராயின், மகளிர், இவ்வுலகில் தம் கணவரோடு, இணைபிரியாது இன்புற்றிருப்பர். மறுமையிலுங்கூட, போக பூமியிற் போய்ப் பிறந்து கணவரோடும் பிரிவின்றி இன்பம் நுகர்வர்! எனவே இவ்விரு பொய்கைத் துறைகளிலும் மூழ்கி யாமொரு நாள் நீராடுவோம்!"

இதனைக் கேட்ட கண்ணகி, 'அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வந் தொழுதல் எமக்கு இயல்பன்று!' என்று சொல்லிவிட்டாள்.

கருத்து : கோவலன் வருகையும் கண்ணகி முறுவலும் (64 - 73)

'இங்ஙனம் கண்ணகியும் தேவந்தியும் (உரையாடிய வேளையில்) ஓர் குறுந்தொழில் செய்யும் இளையவள் ஒருத்தி, கண்ணகியிடம், "பெருமையுடைய நம் அரசன் (கோவலன்) போலும் வந்து, நம் வாசலிடத்தான் ஆயினான். ஆம் அவன் நம் கோவலன் தான்!" என்றான். அங்ஙனம் வாயிலில் நின்ற கோவலனும், பெருமையமைந்த படுக்கையிடத்தே புக்கான்; தன் மனைவி வாட்டமுற்ற மேனியும் வருத்தமும் கண்டான்; "வஞ்சம் பொருந்திய கொள்கையையுடைய பொய்த்தியோடும் (மாதவியோடும்) கூடியொழுகியமையால், நம் குலத்தில் உள்ளார் தேடித் தந்த மலைபோலும் பெரிய பொருட்குவியல் எல்லாம் தொலைந்தமையால் ஆன வறுமை, எனக்கு வெட்கத்தைத் தருகின்றது!" என்றான்.

(இதனைக் கேட்ட கண்ணகியோ, மாதவிக்குக் கொடுக்கக் பொருள் இலாமையால் இவ்வாறு கூறினான் போலும் எனக் கருதி) ஒளி பொருந்திய தன் முகத்தே நன்மை பொருந்திய சிறிய புன்முறுவலை வரவழைத்து, 'இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளனவே! அவற்றைப் பெற்றுக் கொள்க' என்றாள்.

கருத்து : 'எழுக' என எழுதல் (73 - 79)

(கண்ணகி கூறியதைக் கேட்ட கோவலன்) "சேயிழையே! இதனைக் கேள்! நீ கூறிய இச்சிலம்பை, நான், வாணிக முதலாகக் கொண்டு, முன்பு நான் வாங்கி அழித்தமையால் ஒழிந்த அணிகலன்களையும், செலவழித்த பொருளையும் மீண்டும் தேடத் துணிந்தேன். அதன் பொருட்டுப் பரந்த புகழையுடைய மாடங்கள் கொண்ட மதுரை என்னும் மூதூர் செல்ல விழைந்தேன். ஆதலின், இதழ்கள் விரிந்த கோதையை உடைய நங்காய்! அதற்கு நீ இப்போதே இங்கிருந்தும் புறப்பட்டு என்னுடன் வருக!" என்று கூறினான்.

முற்பிறப்பில் தான் செய்த தீவினை நெடுங்காலம் நின்று நெஞ்சை ஒருப்படுத்தலால், ஞாயிறு தோன்றுதற்கு முன், அவ்வினையினது ஏவலைக் கொண்டான் கோவலன்.

கருத்து :

கண்ணகியிடம் காதலி கண்ட கனவு, கரிய நெடிய கண்களையுடைய மாதவியின் சொல்லைப் பயனற்றதாக்க, முன் செய்த தீவினை நெஞ்சை ஒருப்படுத்த, இருட்டினைக் கதிர் (சூரியன்) போக்குதற்கு முன் அவ்வினையின் ஏவலைக் கொண்டான்.

குறிப்பு :

மாதவிபால் ஊடலுற்ற கோவலன், தன் மனையகம் திரும்பினான் மாதவியோ, 'மாலை வாராராயினும் காலை காண்குவம்' என்று கூறி, அமைதியுடனிருந்தாள். இப்போது கோவலன், கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டு விட்டானாதாலின், மாதவி கூறிய சொல் பயனற்றதாகப் போய்விட்டது என்பதாம். கோவலன், முற்பிறப்பிற் செய்த தீவினைப் பயனே, இப்போது அவன் மதுரைக்குப் புறப்பட நேர்ந்தது என்பதாம். 'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்று இளங்கோவடிகள் கூறியதும், இந்நிகழ்ச்சியை உட்கொண்டேயாம்!

சிலப்பதிகாரம் (கட்டுரைகள்)

1. மாலதியின் வரலாறு :

காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு நாள் மாலைப் பொழுது வந்துற்றது. கொடியிடை மகளிர், தத்தம் இல்லங்களில் முல்லைக் கொடியின் ஒளி பொருந்திய மலர்களை, நெல்லுடன் சேர்த்துத் தூவி, இல்லுறை தெய்வத்தை வணங்கினர். விளக்கேற்றினர். இரவு நேரத்திற்கு ஏற்றவாறு அழகுபடுத்திக் கொண்டனர்.

முன்னொரு சமயம் மாலதி என்ற பெயருடைய பார்ப்பனத்தி தன் மாற்றாளின் (அதாவது தன் கணவனின் மற்றொரு மனைவியின் குழந்தைக்குத் தன் மார்பிலிருந்து சுரந்த பாலைச் சங்கில் ஊற்றிக் கொடுத்தாள். விக்கல் உண்டாகி அக்குழந்தை இறந்துவிட்டது. தன் கணவனும் மாற்றாளும் இதனை அறிந்தால் பெருந்துன்பம் உண்டாகுமே என்று எண்ணினாள். குழந்தையைத் தூக்கிக் கொண்டு, புகார் நகரில் உள்ள கற்பகத் தரு கோயில், ஐராவதக் கோயில், பல தேவன் கோயில், சூரியன் கோயில், கைலாயக் கோயில், முருகன் கோயில், வச்சிரப்படைக் கோயில், சாதவாகனன் கோயில், அருகன் கோயில், சந்திரன் கோயில் எனப் பல கோயில்கட்கும் சென்று வரங்கிடந்தாள்!

சங்கரவாளக் கோட்டம் என்னும் சுடுகாட்டில் பிணந்தின்னும் இடாகினிப் பேய், ஒரு பெண் வடிவம் எடுத்து, மாலதி முன் தோன்றி, பெண்ணே! முற்பிறவியில் நல்ல தவம் செய்தவர்க்கே தேவர் வரம் கொடுப்பர். நின் கையில் உள்ள குழந்தையைக் கொடு! என்று கூறி அதனைப் பிடுங்கிக் கொண்டு சென்று தின்றுவிட்டது! அதனையறிந்த மாலதி 'பெரிதும் வருந்திப் புலம்பினாள். அவளுக்கு இரங்கிய 'பாசண்டச் சாத்தன்' என்னும் தெய்வம் அவள் முன் தோன்றி 'பெண்ணே! அழ வேண்டாம்! நீ செல்லும் வழியில், மர நிழலில், உயிருடன் கிடக்கும் குழந்தையினைக் காண்பாய்!' என்று சொல்லி, மறைந்தது. அத்தெய்வம், தானே ஒரு குழந்தை வடிவாய் அதே மரத்து நிழலில் கிடந்தது. அக்குழந்தையைக் கண்டு மாலதி மனம் மகிழ்ந்து, மாற்றாள்கையிற் கொடுத்தாள்! இதுவே மாலதி வரலாறு!

2. சாத்தனின் இல்லற வாழ்வும் தேவந்தி செயலும்

பார்ப்பனனுக்கு மகனாக வளர்ந்த 'சாத்தன்', சிறந்த கல்வி, கேள்விகளில் பெரும் புலமை பெற்றான். தன் தந்தையும் தயாரும் இறந்தபின், அவர்க்குச் செய்யத்தக்க நீர்க்கடன்கள் ஆற்றித், 'தேவந்தி' என்பவளை மணந்து இல்லற வாழ்வை மேற் கொண்டான். இவ்வாறு எட்டு ஆண்டு இல்லறம் ஏற்ற பின், தனது தெய்வத் தன்மையைத் தன் மனைவி தேவந்திக்குக்காட்டி, 'நீ எம் கோயிலுக்கு வருக' எனச் சொல்லி மறைந்தனன்.

தன் கணவனின் பிரிவாற்றாத தேவந்தி, நீர்த் துறைகள் தோறும் சென்று தீர்த்தமாடிவிட்டுப் பின், சாத்தன் கோயிலுக்குச் சென்று, 'எனக்குப் பிரியமான கணவன் என்னைவிட்டு நீங்கினன். அவனை அழைத்துத் தருவாயாக!' என வேண்டிக் கொள்பவளாய் நாள்தோறும் அங்கே சென்று வழிபாடு செய்துவரலானாள்.

தன்னைப் போலவே, கணவனைப் பிரிந்துவாழும் கணவனுக்காகவும் இரக்கங் கொண்டாள்! குறைதல் இல்லாத நற்புகழ் கொண்ட கண்ணகி நல்லாளும் துன்பப்படுகிறாளே!' என்று தன் மனத்தில் எண்ணியவளாய்ச் சாத்தன் கோயிலை அடைந்து, அறுகு முதலியன தூவி, 'இவள் கணவனைப் பெற வேண்டும்' என வேண்டி, நேராகக் கண்ணகியை அடைந்து, 'நீ, நின் கணவனைப் பெறுவாய்!' என்றான்.

3. கண்ணகி கண்ட கனவு

தேவந்தி கூறியதைக் கேட்ட கண்ணகி, அவளிடம், "நீ இவ்வாறு கூறுதலால் யான் என் கணவனைப் பெறுவேன். ஆயினும் யான் கண்ட கனவினால் என் நெஞ்சம் ஐயுறுகின்றது. அக்கனவு யாதெனக் கேள் கூறுவேன்!" – "என் கணவன், என் கையைப் பற்றிக் கொண்டு அழைத்துப் போனான். நாங்கள் ஒரு பெரும்பதிக்குள் நுழைந்தோம். அப்போது, எங்கட்குக் கிஞ்சித்தும் பொருந்தாத பெரும்பழி ஒன்றை என்றன்மீது போட்டனர். 'அப்பழியால் கோவலனுக்குப் பெருந்துன்பம் நேர்ந்தது' என்று பிறர் சொல்ல, அதுகேட்டு அவ்வூர் அரசன்முன் யான் சென்று வழக்குரைத்தேன். அதனால் அவனுக்கும் அவ்வூர்க்கும் தீங்கு நேர்ந்தது. இவ்வாறு யான் கண்டது தீக்கனா ஆதலின் நினக்கு அதனை உரையேன்! அப்போது தீக்குற்றமும் நேர்ந்தது. அதன் பின்பு எனக்கும் என் கணவனுக்கும் நற்பேறு கிட்டியது. அதனைச் சொன்னால் நீ நகைப்பாய்! என்று, கண்ணகி தான் கண்ட கனவைத் தேவந்திக்கு எடுத்துக் கூறினாள்.

4. தேவந்தி கூற்றும் கண்ணகி மறுப்பும்

கண்ணகி, தான் கண்ட கனவுபற்றிக் கூறியதைக் கேட்ட தேவந்தி, பின்வருமாறு உரைத்தான்.

"பொற்றெடி நங்காய்! நீ, நின் கணவனால் வெறுக்கப்பட்டவள் அல்லள்! முற்பிறவியிலே, நின் கணவனுக்காகச் செய்ய வேண்டிய நோன்பைச் செய்யாது விட்டுவிட்டாய்! அதனால்தான் இப்போது துன்பப்படுகிறாய். இத்துன்பம் விரைவில் நீங்குவதாக! காவிரி கடலொடு கலக்குமிடத்தில் சோம குண்டம், சூரிய குண்டம், எனும் இரு பொய்கைகள் உண்டு. அவற்றின் துறைகளில் மூழ்கி, அங்குள்ள மன்மதன் கோயிலை அடைந்து வழிபட்டால், மகளிர் தம் கணவரைப் பிரியாது இன்பமாய் இருப்பர். மறுமையிலும் போக பூமியிற் பிறந்து, கணவரோடு இன்பம் நுகர்வர் ஆதலின் இவ்விரு பொய்கைகளிலும் நீராடி வழிபடுவோம்!"

இவளுரை கேட்ட கண்ணகி, 'அங்ஙனம் துறைமூழ்கித் தெய்வம் தொழுதல் எமக்கு இயல்பன்று!' ஃன மறுத்துவிட்டாள்!

5. கோவலன் வருகையும் கண்ணகி செயலும்

கண்ணகியும் தேவந்தியும் இவ்வாறு உரையாடிக் கொண்டிருந்த வேளையில், குற்றேவல் செய்யும் இளையவள் ஒருத்தி, ஓடோடி வந்து, கண்ணகியிடம், 'பெருமை சால் நம் மன்னவன் (அஃதாவது கோவலன்) நம் வாசலிடத்தே வந்து கொண்டிருக்கிறான்' என்று மகிழ்ந்து கூறினாள்.

அங்ஙனம் வாயிலில் வந்து நின்ற கோவலன் நேராக வீட்டினுள்ளே, படுக்கையிடம் புக்கான் தன் மனைவியின் வாட்டமுற்ற மேனியும் துயரமும் கண்டான். "வஞ்சம் பொருந்திய கொள்கையுடைய பொய்த்தியோடு (மாதவி) கூடியொழுகினமையால், நம் குலத்தில் உள்ளோர் தேடித்தந்த பெரும் செல்வமனைத்தும் தொலைத்துவிட்டேன். அதனால் உண்டான வறுமை, எனக்கு நாணத்தைத் தருகின்றது!" என்றான்.

இது கேட்ட கண்ணகி, 'மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லாமையால் தான் இவ்வாறு கூறினான் போலும் என எண்ணி, தன் வாயில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, 'இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளனவே! அவற்றைப் பெற்றுக் கொள்க! என்றாள்.

அவளுரை கேட்ட கோவலன், 'சேயிழையே! நீ கூறிய இச்சிலம்புகளையே முதற் பொருளாகக் கொண்டு முன்பு நான் வாங்கி அழித்த அனைத்து அணிகலன்களையும் செல்வத்தையும் மீண்டும் தேடத் துணிந்தேன். அதற்காக மதுரை மூதூர் செல்ல விழைந்தேன். ஆதலின் நங்காய்! என்னுடன் இப்பொழுதே வருக!" என்றான்.

முற்பிறப்பில் செய்த தீவினைப் பயனால், ஞாயிறு தோன்றுதற்கு முன், கோவலன் தன் மனைவியோடும் மதுரைக்குப் புறப்பட்டான்!

பயிற்சி வினாக்கள் :

1. 'கனாத் திறமுரைத்த காதை'யின் கதைச் சுருக்கம் தருக.
2. மாலதியின் வரலாறு தந்துரைக்க.
3. சாத்தனின் இல்லற வாழ்வும் தேவந்தி செயலும் உரைக்க.
4. கண்ணகி கண்ட கனவு யாது?
5. கண்ணகியிடம் தேவந்தி கூறியன யாவை? அவற்றிற்குக் கண்ணகி தந்த மறுமொழி யாது?
6. கோவலனுக்கும் கண்ணகிக்குமிடையே நிகழ்ந்த உரையாடலைத் தருக.
7. கண்ணகியின் பண்பு நலன்களாக நீவிர் அறிவன யாவை?

மணிமேகலை

மணி பல்லவத்துத் துயருற்ற காதை

பொருட் சுருக்கம் :

சிலப்பதிகாரம் போலக் காண்டங்களாகப் பிரிக்கப்படாமல் காதைகளாக மட்டுமே பிரிக்கப்பட்டுள்ளது மணிமேகலை. அவற்றில் எட்டாவது காதையே பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

கோவலன் இறந்த பின்னர் மாதவி தானும் துறவு பூண்டு தன் மகள் மணிமேகலையையும் துறவு பூணச் செய்கிறாள். இந்திர விழாவின் போது மகளிரும், காமுறும் வனப்புடைய மணிமேகலை குலமரபின்படி ஆடவரவில்லை என ஊரார் அலருரைக்கின்றனர் மணிமேகலை. தன் தோழி சுதமதி துணையுடன் மலர் பறிக்க உவவனம் செல்கிறாள். அங்கே சோழ இளவரசன் உதயகுமரனின் தேரொலி கேட்டதும், பளிக்கறை உள்ளே சென்று மறைந்து கொள்கிறாள். மணிமேகலையைத் தேடிவந்த உதயகுமரன் அவளைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதும் மணிமேகலை வெளியே வருகிறாள். அப்போது மணிமேகலா தெய்வம் மக்கள் வடிவில் அவர்கள் முன் தோன்றி, புத்தரை வாழ்த்தி வணங்கிப் பின் மணிமேகலையைத் துயிலச் செய்து தூக்கிக் கொண்டு மணி பல்லவத் தீவைச் சென்றடைகிறது.

அங்கே வைகறைப் போதில் மேகலை கண்விழித்துப் பார்க்கிறாள். தன்னைத் தெய்வம் தூக்கி வந்ததை அவள் அறியாளாதலின், இது காறும் தான் கண்டிராத புதிய இடத்தில் இருப்பது கண்டு திகைக்கிறாள். மக்கள் இனம் அங்கு இல்லாமை கண்டு மருள்கிறாள். தன் தந்தையை எண்ணி அழுது அரற்றுகிறாள். ஒருவேளை சுதமதி விளையாட்டிற்காகத் தன்னை அச்சமும் கலக்கமும் அடையச் செய்ய எண்ணி ஒளிந்து கொண்டிருக்கிறாளோ என்று சுருதி அவளைக் கூவி அழைத்தவாறே தேடி அலைகிறாள். அப்போது அங்குள்ள புத்த பீடிகை தென்படுகிறது.

மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவத் தீவுக்குக் கொணரப்பட்ட மணிமேகலை துயில் நீங்கி எழுந்து தனிமையில் அஞ்சித் துயருற்று அரற்றியதைக் கூறுவதால் இக்காதை "மணிபல்லவத் துயருற்ற காதை எனப் பெயர் பெற்றது.

கருத்துரை :

மணிமேகலை துயின்ற இடம் (அடிகள் 1 – 12)

(ஈங்கிவள்..... அஞ்சிலோதி)

பூம்புகாரில் மணிமேகலையைப் பிரிந்த சுதமதி அங்கே உலகவனத்தில் மணிமேகலையைத் தேடிக் காணாமையால் கூரிருள் நீங்கிக் கதிரவன் முளைத்த காலைப் போதில் மாநகர் வீதி மருங்கிற் சென்று மாதவி இருப்பிடம் அடைந்து நடந்ததைக் கூறி வருந்தி இன்னுயிர் இழந்த யாக்கை போல் இருந்தாள். அங்ஙனம் சுதமதி மணிமேகலையைப் பிரிந்த ஆற்றாமையால் வருந்தியிருக்க, மேகலை மணிபல்லவத் தீவில் (தனக்கு நிகழ்ந்தது இன்னதென்று அறியாமல்)

துயின்று கொண்டிருக்கிறாள். மணிபல்லவம் தீவாதலின் நாற்புறமும் கடலலைகள் வந்து மோதிக் கொண்டிருந்தன. அத்தீவில் ஒலிக்கின்ற நீரைச்சிறை செய்துள்ள கரையுண்டு. சங்குகளால் உழப்பட்டு விதைத்த விதைப்பில் முத்துக்களாகிய தானியம் விளைகின்ற வயல்களுண்டு. முறிந்து விழுந்த செம்பவளைக் கொடிகளையும், கடலிற் செல்லுங்கால் உடைந்த மரக்கலங்களினின்றும் மிதந்து வரும் சந்தனம் முதலிய நறுமண மரங்களையும் சுமந்து வந்து உருட்டுகின்ற அலைகளைக் கொண்ட நெய்தல் நிலமுண்டு. கடலருகே இருப்பினும் மணலில் ஆங்காங்கே நன்னீர் ஊற்றுக்கள் இருக்கும். அவ்விடத்தில் புலிநகக் கொன்றை மரங்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். ஈரம் புலராத அந்த நிலப்பகுதியில் ஆழமான நீருடைய பொய்கையுண்டு. ஆம்பலும் குவளையும் ஆகிய கொடிகள் அதில் தம்முள் விரவிப் படர்ந்திருக்கும். பசித்து வருகின்ற வண்டுகள் அவற்றின் தாதுண்டு மகிழுமாறு மலர்கள் மலர்ந்திருக்கும். பொய்கைக் கரையில் முடம்பட்ட காலைக் கொண்ட புன்னைமரமும் மடலாற் சிறந்த பூவினையுடைய தாழையும் தழைத்து வளர்ந்திருக்கும். அவற்றின் செறிவால் அங்கே வெயில் புகவே புகாது. அத்தகைய மலர்மணம் சூழ்ந்த நிழலின் கீழ், வரிவரியாகவும், நிலாவொளி போல் வெண்மையாகவும் அமைந்த மணற்பரப்பின் மேல் மணிமேகலா தெய்வம் மலர்களைப் பரப்பி அமைத்த படுக்கையின் மேல் மணிமேகலை துயின்று கொண்டிருந்தாள்.

புதிய இடம் கண்டு மணிமேகலை மருளல் (அடி 13 - 27)

துஞ்சு துயில் நீங்கிய அஞ்சில் ஓதி, சுற்றிலும் நோக்கினாள். அன்பினால் தொடர்பு கொண்டு தந்தையும் மாமனும் மாமியுமாய் இன்னோரன்ன உறவுகளோடு தன்னைச் சூழவிருந்த சுற்றத்தாரை எல்லாம் ஒருசேர மறந்து இம்மை வாழ்க்கை முடித்து மறுமையில் வேறோர் இடத்திற் சென்று பிறந்துள்ள உயிர் போல தான் தன்தாய் முதலிய சுற்றத்துடன் பழகிய இடமான புகாரைக் காணாமல் திகைத்தாள். முன்பு தான் பார்த்தேயிராத புதிய பொருள்களுடன் கூடிய புதிய இடத்தைக் கண்டு மருண்டு நின்றாள். நீலநிறத்துப் பெருங்கடல் புகாரிற்போல் நெடுந்தொலைவிலன்றித் தனக்கு மிக அருகில் இருப்பதையும், கடல் விளிம்பிலிருந்து கதிரவன் ஒளிக்கதிர் பரப்பித் தோன்றுவதையும் கண்டாள். தான் இருக்கும் இடம் யாது என ஐயுற்று ஆராயத் தொடங்கினாள். ஒரு வேளை முதல் நாள் தான் சுதமதியுடன் மலர் கொய்ய வந்த உவவனத்தின் ஒரு பகுதியோ இது என எண்ணினாள். அப்படித்தான் இருக்க வேண்டும் என எண்ணியவள், அவ்வாறாயின் சுதமதி ஏங்கே போனாள் என்று ஐயுற்றாள். பின் தன்னிடம் விளையாடும் நோக்குடன் எங்கேனும் ஒளிந்திருப்பாள் என்று எண்ணி, "சுதமதி, சுதமதி எங்காவது ஒளிந்து கொண்டு விளையாடுகிறாயா? விளையாடும் நேரமும் முறையும் இதுவன்றே? இங்ஙனம் ஒளிந்து விளையாடுவதால் எனக்குப் பொருந்துயர் தருகின்றாய் இது கனவா? அல்லது நனவா? என்பது கூட எனக்குத் தெளிவாகவில்லையே. என் நெஞ்சம் அஞ்சி நடுங்குகிறது. அந்த அச்சம் நீங்குமாறு நீ குரல் தரமாட்டாயா? இரவுப் பொழுது கழிந்தது. நம்மைக் காணாமல் நம் தாய் மாதவி பெரிதும் அஞ்சி மயங்கித் துன்புறுவாளன்றோ? சுதமதி, இவ்வளவு நான் எடுத்துரைத்தும் என்முன் வராமல் இருக்கின்றாயே. ஒரு வேளை நீ இங்கில்லையோ? நான் துயிலும் போது, என்னைத் தனியே விட்டு விட்டுச் சென்று விட்டாயோ? அப்படி நீ செய்யமாட்டாயே, என்ன இது! ஒரு வேளை நேற்றிரவு நம் முன் மாயமாகத் திடீரென்று தோன்றி நம்மை வியப்பில் ஆழ்த்திச் சக்கரவாளக் கோட்டத்து வரலாறு பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்த பெண் ஏதேனும் வஞ்சனை செய்தனளோ? அவள் இப்போது எங்கே என்று தெரியவில்லையே. உன்னையும் காணாமல் தனியாக நின்று துன்புற்றுக் கொண்டிருக்கிறேனே,

அருட் செல்வமான என் தோழியே. என் முன் வருவாய் என்று பலவாறு கூறிச் சுதமதியைத் தேடிப் புலம்பினாள்.

மணிமேகலை சுற்று முற்றும் தேடுதல் :

"திதை தவழ்..... காணாள்"

சுதமதியைக் காணாமல் தவித்த மணிமேகலை தான் இருக்குமிடம் யாதென்று அறியும் முயற்சியில் எழுந்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் இருந்த இடம் தீவாதலின் இருபுறமும் கடற்கரை கண்டாள். அங்கே பல்வேறு பறவைகள் காணப்பட்டன. நீரின் மேல் தவழ்கின்றாற் போலத் தாழ்வாகப் பறந்து சென்று இரைதேடும் கடற்பறவைகள் விரிந்த சிறகுகளோடு வானில் பறந்து திரிந்து இரைதேர்கின்ற பறவைகள். ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்கு நீரினின்றும் எழுந்து பறந்துபோய் விழும் சில்லைசாதிப் பறவைகள். சிறகுகளை ஒடுக்கி நீரினுள் முழுகித் தமக்கான இரையைப் பற்றிக் கொண்டு தலை தூக்கும் முழுவற்சாதிப் பறவைகள் இங்ஙனம் கடற்கரையில் திரிந்த பறவைகள், போரிட ஓரிடத்தில் வந்து தண்டிறக்கிய மன்னனுடைய நால்வகைப் படைகள் போல் கூட்டம் கூட்டம் கூட்டமாக இருந்தன. அவற்றிடையே தனித்துக் காணப்பட்ட அன்னச் சேவல் அரசன் போல் தோன்றியது. இருபுறமும் கடற்கரை; இருபுறமும் பறவைக் கூட்டம். இக்காட்சி பகை மன்னர் இருவர் போர் செய்யக் கருதி நால்வகைப் படைகளுடன் பாசறை அமைத்துத் தங்கியிருப்பது போல் இருந்தது. அத்தகைய நெய்தற்நிலப் பரப்பின் நாற்புறமும் நெடிய மணற்குன்றுகள் சூழ்ந்திருந்தன. ஒவ்வோரிடமாகச் சென்று சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்த மணிமேகலை முன்புதான் பழக்கப்பட்டுள்ள எப்பொருளையும் அங்குக் காணப் பெறாமல் கலங்கி நின்றாள்.

மணிமேகலை தந்தையை எண்ணிக் கலங்குதல் :

"குரல்தலை..... முன்னர்"

மணிமேகலையின் கூந்தல் சரிந்து பின்புறம் வீழ்ந்து கிடந்தது. அதனை அள்ளி முடிக்கவும் தோன்றாமல் அவள் அரற்றிக் கூவி அழுதவாறு திரிந்தாள். ஓங்கி நிலத்தில் விழுந்து புரண்டழத் தோன்றுகின்ற துன்பத்துடன், புலம்பியவாறே தனித்து நின்று வேதனைப் பட்டுக் கொண்டிருந்த மணிமேகலை, தன் அன்புத் தந்தை கோவலனை நினைவு கூர்ந்து அரற்றினாள். "கொடிய ஊழ்வினையின் பயனால் நாங்கள் இந்நிலைமை அடைந்தோம். அதே ஊழ்வினை காரணமாக அன்புடைய அன்னையாகிய கண்ணகியுடன் வேற்று நாட்டிற்குச் சென்று கூரிய வாளால் வெட்டப்பட்டு இறக்கின்ற கொடிய துன்பத்தை நுகர்ந்த என ஐயனே' என்று கதறியழுதாள்.

மணிமேகலைக்கு புத்த பீடிகை தென்படல் :

"விரிந்திலங்கு..... ஆசனம்"

தான் பழகியிராத புதிய இடத்தில் தனியாக நின்று தந்தையை எண்ணி அழுது கொண்டிருந்த மணிமேகலைக்கு, மணிபல்லவத் தீவிலிருந்த புத்த பீடிகை தென்பட்டது. அப்பீடிகை சிற்ப சாத்திரங்கள் கூறும் இலக்கண முறைமை வழுவாமல் அமைக்கப்பட்டிருந்தது. நிலத்தினின்றும் மூன்று முழ உயரத்தில் அமைந்திருந்தது. நாற்புறமும் நிலப்பரப்பின் மேல் ஒன்பது முழம் அகலம் கொண்ட மேடையாக இருந்தது. அதாவது நிலத்திலிருந்து மூன்று முடி உயரத்தில் ஒன்பது முழ

அகலம் கொண்ட மேடை இருந்தது. அந்த மேடையின் நடுவில் பளிங்கினால் ஆன வட்டவடிவமான பீடம் ஒன்று, நூல் விதிப்படி அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பீடத்தின் நடுவில் சதுரவடிவமான சிறிய மேடையொன்று. அதில் புத்தருடைய திருவடித்தாமரை உருவம் பதிக்கப்பட்டிருந்தது. தேவர் தலைவனான இந்திரன் அறத்தின் திருவுருவாகிய புத்தபெருமான் எழுந்தருளப் பொருந்திய இருக்கை எனச் சொல்லி இட்ட அப்பீடிகை சிறந்த மணிகள் இழைக்கப்பட்டு நாற்புறமும் ஒளிவீசிக் கொண்டிருந்தது. சுற்றிலும் மரங்கள் பல இருந்த போதும், அது புத்த பீடிகையாதலின் நாள்தோறும் நறுமணம் கமழும் புதுமலர்களை சொரிதலல்லது அப்பீடத்தின் மேல் விழுமாறு வேறு எதுவும் உதிர்ப்பதில்லை. சிறகடித்துப் பறப்பின் அவை உதிர்தல் கூடுமெனப் பறவைகளும் அப்பீடத்தின் பக்கத்தில் சிறகடித்துப் பறப்பதில்லை. இத்தகைய அப்புத்த பீடிகையின் தனிச்சிறப்பு என்னவெனில் அதனைக் கண்டவர்க்கு அவரவர் முற்பிறப்பு இன்னதென்று உணரச் செய்யும்.

புத்த பீடிகையின் சிறப்பு (அடி 54 - 63)

"கீழ்நிலை..... ஆங்கென்".

மணிமேகலை கண்ணிற்குப் புலப்பட்ட புத்த பீடிகையின் வரலாறு சிறப்புடையது. ஒருமுறை, கிழக்குத் திசையிலுள்ள நாகநாட்டினை ஆளும் மன்னர் இருவர் மணிபல்லவத் தீவிற்கு வந்தனர். இருவரும் அத்தீவு தத்தமக்கே உரியதென்றும், தீவிலுள்ள புத்த பீடிகையும் தீவுக்குரியோரின் உடைமையென்றும் கூறி அவரவர் நாட்டிற்கு அதனைப் பெயர்த்து எடுத்துச் செல்ல முற்பட்டனர். ஆனால் எவ்வளவு முயன்றும் யாராலும் நிலத்தினின்றும் பீடிகையைப் பெயர்க்க முடியவில்லை. அதன் பின்னரும், அப்பீடிகையை உரிமையாக்கிக் கொள்வதில் அவர்களுக்கிருந்த ஆசை அகலவில்லை. எனவே உரிமையை வீரத்தால் நிலைநாட்ட முடிவு செய்து. தம் சேனைகளைக் கொணர்ந்து போர் செய்தனர். இயற்கையாகவே சிவந்துள்ள கண்கள் சினத்தினால் மேலும் சிவக்க, நெஞ்சம் நெட்டுயிர்க்க தத்தமக்குரிய படையுடன் திரண்டுவந்து போர் செய்கையில் பெருந்தவ முனிவர் புத்தர் எழுந்தருளினார். இப்பீடிகை தமக்கு உரியதாகலின் அதன் உரிமை வேண்டிப் போர் செய்தலைத் தவிர்க்குமாறு கூறி இருவரையும் அமைதிப்படுத்தினார். பின்னர் அப்பீடிகை மேல் அமர்ந்து தம் கொள்கைகளை அவ்விருவருக்கும் அறிவுறுத்தியருளினார். அத்தகைய ஒப்பற்ற சிறப்புடைய தருமபீடம் மணிமேகலை கண்ணுக்குப் புலப்பட்டது.

விளக்கங்கள் :

முந்தைய காதையான துயிலெழுப்பிய காதை, மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிச் சென்றதை அறியாத சுதமதி அவளைத் தேடியலைந்து பின் தனியாக மாதவியிடம் சென்று செய்தியை அறிவிப்பதுடன் முடிகிறது.

"இன்னுயிர் இழந்த யாக்கையின் இருந்தனன்
துன்னிய(து) உரைத்த சுதமதி தான்....."

என முடியும் அக்காதையின் பொருளைத் தொடர்புபடுத்தி,

"ஈங்கிவள் இன்னிணமாக, இருங்கடல்
வாங்குதிரை உடுத்த மணிபல்லவத்திடை"

மணிமேகலை எப்படி இருந்தாள் எனச் சொல்லப்புகுகிறது அடுத்த காதை. அதே போல், பாடப் பகுதியாகிய மணிபல்லவத்துத் துயருற்ற காதை,

"பொருவறு சிறப்பின் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை தோன்றியது....."

என்று முடிய, அடுத்து வரும் பீடிகை கண்டு பிறப்புணர்த்த காதை,

"ஆங்கது கண்ட ஆயிழை"

எனத் தொடங்குகிறது. இவ்வாறே காதைகளாகப் பிரிக்கப்பட்டாலும் பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்ற பெயருக்கேற்ப சங்கிலிப் பிணைப்பாகச் சொற்களால் அடுத்தடுத்த காதைகளாகப் பிணித்துக் கொண்டே செல்கிறார் ஆசிரியர்.

மணிபல்லவத் தீவு பற்றிய புனைவுரையுடன் இக்காதை தொடங்குகிறது.

"தத்துநீர் அடைகரைச் சங்குழு தொகுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமரம் உருட்டும் திரையுலாப் பரப்பின்
ஞாழல் ஒங்கிய தாழ்கண் அசும்பின்
ஆம்பலும் குவளையும் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுண மலர்ந்த குண்டுநீர் இலஞ்சி
முடக்கால் புன்னையும் மடற்பூத் தாழையும்
வெயில் வர(வு) ஒழித்த பயில்பூம் பந்தர்
அறல் விளங்கு நிலாமணல் நறுமலர்ப் பள்ளித்
துஞ்சுதுயில் எழுஉம் அஞ்சில் ஓதி"

எனவரும் புனைவுரைப் பகுதி சொற்சுவையும் கற்பனையும் மிடைந்தது.

தீவாயினும் மணிபல்லவம் வளம் குறைந்திலது. அங்கே கழனியுண்டு. அது, அடைகரையினை உடையது. அக்கழனியில் சங்குகள் ஏராக மணலை உழும். முத்தாகிய விதை விதைக்கும். அது முதிர்ந்து பயிராகும். நெல் முத்தினும் விலையுயர்ந்த நல்முத்து விளைகின்ற கழனி என்னும் கற்பனை இனிய காட்சியை நல்குகிறது. உண்மையில் உண்பயிர் விளையும் வயல் சூழ்ந்த மருதநிலம் இன்றேனும் சங்குகள் உழுவதாகவும் முத்துக்கள் விளைவதாகவும் பாடுவதால் "சொல் மாத்திரையாள் மருதத்தினை கூறினார்" என்கிறார் உரையாசிரியர்.

பவளமும் விரை மரமும் 'உருட்டும் திரையுலாப் பரப்பு' என்கையில் எழுவாய் மய்ங்கி இருபொருள் தருகிறது. உருட்டுவது திரைகடலாலும் கூடும். மனிதராலும் கூடும். உரையாசிரியர், "விரைமரம், சந்தன மரம் முதலியன. இவை உடைகலத்தினின்றும் மிதந்தவை நீரினின்றும் மரங்களைக் கரையேற்றுவார் அவற்றை உருட்டியே ஏற்றுவர் ஆதலின் உருட்டுந்தரை என்றார். மரமுருட்டியவர் இளைப்புற்றுச் சிறிது வாளாதுலாவுதலும் இயல்பாதலின் இத்திரைகளும் அங்ஙனமே உலாவும் என்றார்" என விளக்கம் தருகிறார். ஞாழல் முதலியன நன்னீர்க் கரையில் வளர்வனவே, ஆனால், "தீவுகளின் கரையோரப் பகுதிகள் தாமே நன்னீர் ஊற்றெடுக்கும் ஊற்றுக் கண்களை உடையனவாய் எப்போதும் நீர்க்கசிவுடையவாகவும், வளமுடையவாகவும் இருத்தல்

இயல்பு. அவ்விடத்தே ஞாழல் முதலிய மரங்கள் செழித்து வளர்ந்துள்ளன" எனப் பெருமழைப் புலவர் விளக்குகிறார்.

"வெயில் வரவு ஒழித்த பயில்பூம் பந்தர்" என்ற பகுதி வெயில் நுழைவு அறியாக் குயில் நுழை பொதும்பர் என்ற சங்க இலக்கியத்தில் பயின்றுவரும் அடியை நினைவூட்டுகிறது.

'அறல் விளங்கு நிலாமணல் நறுமலர்ப்பள்ளி' என்றதால் மணிமேகலா தெய்வத்தின் அருளுணர்வு புலப்படுகிறது. தீவில் ஒரு பொய்கையிருந்தது, அதன் கரையில் புன்னையும் தாழையும் தழைத்தோங்கி வெயில் புகாதபடி நெருக்கமாக வளர்ந்திருந்தன. அந்த நிழலின் கீழ் வெண்மணலின் மேல் புதிய மலர்களை பரப்பி அம்மலர்ப் படுக்கையின் மேல் மணிமேகலையை கிடத்தியிருந்தது தெய்வம் என்பதை உணர்கிறோம்.

'துயில் எழுஉம்' என்னாமல் 'துஞ்சுதுயில்' என்றமைக்கு ஒரு காரணம் உண்டு. துஞ்சுதல் என்பது ஆழ்ந்த தூக்கம் என்ற பொருள் தரும். எனவே இறப்பிற்கு அதைப் பயன்படுத்துவ துண்டு. 'குராப்பள்ளித்துஞ்சிய', 'யானைமேல் துஞ்சிய', 'வெள்ளியம்பலத் துஞ்சிய' என்றெல்லாம் அவரவர் இறந்த இடத்தைச் சுட்டி அடைகொடுத்து மன்னர்கள் அழைக்கப்படுவர். வள்ளுவரும் 'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்' என்பார் தம்மையறியாத ஆழ்ந்த தூக்கமே ஈண்டு 'துஞ்சுதுயில்' எனப்பட்டது. ஓரிடத்தினின்று பிறிதோர் இடத்திற்குத் தான் தூக்கிச் செல்லப்படுவதையே உணராமற் கிடந்தவளைத் 'துஞ்சு துயில்' கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

'அஞ்சில் ஓதி' என்றது 'அழகிய சிலைவாகிய தலை முடி' எனப் பொருள் படும். கோவலன் கொலைப்பட்டதும் மாதவி மணிமேகலையை அழைத்துக் கோதைத் தாமம் குழலொடு களைந்து' போதி மாதவன் அறவழிச் செல்லச் செய்தனள் அன்றோ? எனவே 'அஞ்சில் ஓதி' ஆயினள் போலும். ஆயின், பின்னர், 'குரல்தலைக் கூந்தல் குலைந்து பின் வீழ அரற்றினள்' என வருமிடம் இதற்கு முரண்போல் தோன்றுகிறது. எனவே, இன்று மேனாட்டாரிடையே காண்கின்ற வழக்கம் போலக் கழுத்தளவு சுத்திகரிக்கப்பட்ட, புறம் தாழுமளவுள்ள ஆனால் தீண்டிராத நிலையையே சுட்டினார் எனல் வேண்டும்.

தெய்வத் திறத்தால், நிகழ்வதை அறியாமலே வேறிடம் வந்து சேர்ந்த மணிமேகலையின் நிலைக்கு,

"காதற் சுற்றம் மறைந்து கடைக்கொள
வேறிடத்துப் பிடித்த உயிர்"

உவமை கூறப்படுகிறது. வாய்ப்புக் கிடைக்கும் இடமெல்லாம் புத்தரின் வாய்மையைப் பேசும் விளக்கமுள்ள சாத்தனார் பௌத்தர் நம்புகின்ற மறுபிறவி பற்றி ஈண்டுப் பொருத்தமாகக் கூறுகிறார். ஒருயிரின் தீங்கி வேறிடத்துப் பிறந்த உயிர் முற்பிறவித் தொடர்பேதும் அற்றிருப்பது போல,

"பண்டறி கிளையொடு பதியும் காணாள்
கண்டறி யாதற் கண்ணிற் காணர்"

நின்ற நிலைக்கு இது பெரிதும் ஒத்துவரும் உவமை.

மணிமேகலை துயில் நீங்கி எழுந்த இடம், மணி பல்லவத்தின் கிழக்குப்பகுதி அருகிலேயே கடற்கரை. எனவே காலைக் கதிரவன் உதயக் காட்சி கைகெட்டினாற் போல மிக நெருங்கித் தோன்றியிருக்கும். அதையே புலவர்,

"நீல மாக்கடல் நெட்டிடை அன்றியும்
காலை ஞாயிறு கதிர்விதித்து முளைப்ப"

என்கிறார். ஓரிடத்தில் இருந்தவள் துயில் வயப்பட்டு எழுகையில் முற்றிலும் வேறுபட்ட இடத்தில் எழ நேர்ந்தால் எங்ஙனம் மருள்வாள் என்பதை மிக அழகாகப் புனைகிறார் புலவர்.

"உவவன மருங்கில் ஓரிடம் கொல் இது?
சுதமதி ஒளித்தாய் துயரம் செய்தனை
நனவோ கனவோ என்பதை அறியேன்.
மனம்நடுக் குறூஉம் மாற்றம் தாராய்.
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும்
மெல்வளை வாராய்! விட்டு அகன்றனையோ?
விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சம் செய்தனள் கொல்லோ! அறியேன்
ஒரு தனி அஞ்சுவென் திருவே வா!

என மணிமேகலை அரற்றிய பகுதியில் கவிக்கூற்று எதுவுமின்றிப் புலம்பல் மட்டுமே இருப்பினும், துயில் தீங்கிய மணிமேகலை படிப்படியே அடைந்திருக்கக் கூடிய மனநிலையைக் கற்பனை செய்ய வல்லதாய் அவ்வடிகள் அமைகின்றன.

உவவனத்திற்குத் தோழியுடன் மாலை வேளையில் மலர் கொய்யச் சென்றவள் மணிமேகலை. உதயகுமாரன் வரவும் செலவும் நிகழ்ந்த பின் மணிமேகலா தெய்வம் வருகிறது. அதன்பின் அவள் துயிலூட்டப்பட்டுத் தீவுக்குக் கொணரப்படுகிறாள். தான் கொணரப்பட்டமை அவளுக்குத் தெரியாது உவவனம் சென்றதும் அங்கு நிகழ்ந்ததும் மட்டுமே அவள் மனத்தில் பதிந்திருக்கும். அவ்வுணர்வோடு விழிக்கிறாள். கதிரவன் காட்சியால் காலை என்பது புரிகிறது. மாலை வந்தவள் காலை வரை கண்ணயர்ந்தோமா என்ற திகைத்திருப்பாள். முற்றிலும் துயில் கலையா நிலையில் சுற்றுமுற்றும் பார்த்திருப்பாள். தான் முன்பு பார்த்திராத இடமும் பழகியிராத இடமும் கண்டு ஒரு கணம் திகைத்திருப்பாள். எனினும் தான் சுதமதியுடன் சென்ற உவவனத்தைச் சார்ந்ததும் இதுவரை தான் கண்டிராததுமாகிய ஓரிடமாதல் கூடும் எனத் துணிந்திருப்பாள். அவ்வாறாயின் தன்னோடிருந்த சுதமதி எங்கே என்று தேடுகிறாள். தன்னிடம் பேரன்பு கொண்ட அவள் தன்னை விடுத்துச் சென்றிருக்க மாட்டாளாதலின் தனக்கு முன்பே துயில் நீங்கித் தன் துயிலைக் கலைக்க மனமின்றி எழுந்து சென்று அருகில் எங்கேனும் உலாவிக் கொண்டிருக்கலாம் என்று எண்ணி அழைக்கிறாள். பதில் இன்மையால் ஒருவேளை தான் துயில் நீங்கி எழுந்து சுதமதியைக் காணாமல் திகைக்கட்டும் எனக்கருதி அருகில் ஒளிந்திருக்கிறாளோ என்று கருதி மீண்டும் மீண்டும் அழைத்திருப்பாள். பன்முறை அழைத்தும் வாராமையால் தான் அனுபவிக்கும் நிலை நனவோ அன்றி வெறும் கனவோ என்று தனக்குத் தானே கேட்டிருப்பாள்.

தன் மனம் துயருறுவதால் சுதமதி மேலும் விளையாடாமல் பதிலுரைக்க வேண்டும் என வேண்டியிருப்பாள். அங்ஙனம் அவளை தவிக்கவிடுதல் நல்லதல்ல எனச் சுட்டியிருப்பாள். பின்

மாலையில் மலர் கொய்யச் சென்றவர்கள் இரவு முழுவதும் கழித்து காலை வந்தும் இல்லம் திரும்பாவிடில் அன்னை நெஞ்சம் அலமரும் என்று உணர்த்தி, மறைவிடம் விட்டு வருமாறு கேட்டிருப்பாள். இத்தனை தவிப்பும் முறையீடும் கண்டும் கேட்டும் சுதமதி வாராமற் போகவே மணிமேகலையின் மனத்தில் முதன் முறையாக ஐயம் தோன்றியிருக்கும். விளையாடுபவர்க்கும் ஓர் எல்லையுண்டாதலின் சுதமதி ஒளிந்து கொண்டு தனக்கு விளையாட்டுக் காட்டவில்லை வேறு ஏதேனும் நிகழ்ந்திருக்கும் என்று துணிந்திருப்பாள். அப்போது முதல் நாள் இரவு தம்மோடு சொல்லாடியிருந்த தெய்வத்தின் நினைவு வந்திருக்கும். அவள் ஏதேனும் வஞ்சம் செய்திருப்பாளோ என்று ஐயுற்றிருப்பாள். எனினும் ஓர் அற்ப நம்பிக்கையுடன் இறுதி முயற்சியாக ஒரு முறை 'சுதமதி எனக்கு அச்சமாக இருக்கிறது வந்து என் துயர் போக்கு' என அழைக்கிறாள். பின்னும் அவள் வாராமற் போகவே உறுதியாக அவ்விஞ்சைமகளால் ஏதோ நிகழ்ந்திருக்கிறது. சுற்றிலும் காணப்படும் இப்புத்திடம் உவவனம் அன்று போலும் என எண்ணி அதனைச் சுற்றிப் பார்க்க முற்படுகிறாள். இங்ஙனம் கற்பனைக் காட்சி கண்முன் விரியுமாறு சாத்தனார் பாடியுள்ளார்.

"திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையும்
எழுந்து வீழ்சில்லையும் ஒருங்கு சிறை முழுவதும்"

எனக் கடற்பறவைகளை அவை இரை தேடும் முறையினால் நான்கு வகையாகப் பிரிக்கிறார். நீரின்மேல் தவழ்ந்து, தமது காலால் உதைத்துச் சென்று எதிர்ப்படும் இரையை அலகாற் பற்றுவன ஒருவகை : வானில் பறந்து கொண்டே இருந்து, நீரினுள் இரைதோன்றிய உடனே சடாரெனப் பறந்து வந்து பற்றிக் கொள்வன ஒருவகை. சிறகுகளை ஒடுக்கி நீரினுள் மூழ்கி நீரினுள்ளேயே இயங்கி அகப்படும் இரையைப் பற்றிக் கொண்டு பின்தலைதூக்குவன ஒருவகை. ஓரிடத்தினின்று மற்றோர் இடத்திற்குப் பறந்து சென்று இரைதேடுவன ஒருவகை. இவற்றிற்கு அன்னம், சிரல், குளுவை, கடற்காக்கை ஆகியன முறையே எடுத்துக் காட்டுகளாகும். இயற்கையை நுணுகி நோக்கி, இரைதேடுமாற்றான் வகைப்படுத்துமளவு ஆராயும் அறிவுத் திறத்தால் சாத்தனாரின் புலமை மேலும் சிறப்புறுகிறது. அன்னம், நன்று தீது பிரித்தறியும் அறிவுடையதாகலின், நால் வகையினும் சிறந்து அரசன் ஆகிறது.

அத்தீவில் மனிதர் யாரும் இலரெனினும் மரக்கலங்கள் வந்து நங்கூரமிட்டுத் தங்குதல் உண்டாதலின் துறை உண்டென்றார். இந்நூலிலேயே பிறிதோரிடத்தில்,

"வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறிக்
கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல்லவத்திடை வீழ்த்துத்
தங்கிய தொகுதாள் தான் ஆங்கு இழிந்தனன்"

என்று கூறப்படுவது ஒப்பு நோக்குதற்குரியது. மேலும்,

"கம்புட் கோழியும் கனை குரல் நாரையும்
செங்கால் அன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
முள்ளு மூரலும் புள்ளும் புதாவும்

வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூ உக்குரல் பரந்த ஓதையும்"

என வரும் சிலப்பதிகாரப் பகுதியிலும் பறவைகள் ஒருங்கு கூடி ஓசையிடும் இடம் போர்க்களம்போல் இருந்ததாய்க் கூறப்படல் காணலாம்.

கொத்து கொத்தாகக் தலையிலுள்ள கூந்தலாதலின் குரல்தலைக் கூந்தல் எனப்பட்டதாக உரையாசிரியர் விளக்குகிறார். துன்பமோ இன்பமோ யாதேனும் ஒருணர்ச்சி மிகுங்கால் கூந்தல் நெகிழும். 'கூழை–விரிதல்' எனத் தொல்காப்பியர் கூறுவார். இங்கு மேகலைக்கு அச்சத்தால் துன்பம் பெருகவே கூந்தல் குலைந்து பின் வீழ்ந்தது.

குறையே கண்டு குற்றமே கூறல் நிறையுடை மனத்தர் இயல்பன்று இங்கு மேகலை, தானுற்ற துயர்க்குத் தன்வினையே காரணம் என்று கூறுகிறாள். அன்றியும், தன்னைச் சூழும் வினையே தந்தையையும் சூழ்ந்து கொன்றது என்றாள். அவன் கொலைப்பட்டுத்தாயையும் தன்னையும் தனியராக்கி இந்நிலைக்குக் கொணர்ந்தான் என்று குற்றம் சாட்டாமல், இப்படியொரு தீவில் அகப்பட்டுத் தனியே துயருற வேண்டும் என்பது தனக்கு விதிக்கப்பட்டிருந்தாலேயே அது நிகழ்தற்கு ஏற்றவாறு கோவலன் கொலையுண்டான் என்று பொருள் கொள்ளுமாறு :

"எம்மிதின் படுத்தும் வெவ்வினை உகுப்பக்
கோல் தொடி மாதரொடு வேற்றுநாடு அடைந்து
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து
ஐயாவோ"

என்று அழுகிறாள்.

துன்புறுங்கால், தன்னைக் காக்கக் கடமைப் பட்டோரையும், தான் உரிமையுடன் உதவிகேட்கவல்ல. உற்றோரையும் தன் துயருக்கு உருகும் அன்புடையோரையும் எண்ணி இரங்கல் மனித இயல்பு. அன்றியும் தந்தை இரங்கல் மனித இயல்பு. அன்றியும் தந்தை மறந்ததாலேயே தானும் தாயும் காப்பார் இன்றித் துயருற நேர்ந்தது. எனவேதான் தீவில் அகப்பட்டபோது மணிமேகலை கோவலனை எண்ணிக் குமுறுகிறாள். பழம்பிறப்பை உணர்த்தவல்ல பீடிகை, அதன் பொருட்டுப் போரிட்ட அரசர்க்கு மட்டும் ஏன் அவர் தம் பழம்பிறப்பை உணர்த்தவில்லை என்ற வினா எழுகிறது. அவர் உள்ளம் அன்பிற்படாது ஆசைவலைப்பட்டுத் தூய்மை அன்றிருந்தமை ஒரு காரணம் ஆதல் கூடும். அல்லது, புத்தர் எழுந்தருளி அதன் மேலமர்ந்து அறமுரைத்த பின்னரே அதற்கு அவ்ஆற்றல் கிடைத்தது என்றும் கொள்ளலாம்.

உலகிலுள்ள பிற பீடிகைகளுக்கு இல்லாத வகையில் முற்பிறப் புணர்த்தும் சிறப்பினை இப்பீடிகை பெற்றிருந்தமையால் பொருவறு சிறப்பின் தரும பீடிகை' எனப் போற்றப்படுகிறது.

சிலம்பின் அரங்கேற்று காதை ஆடரங்கம் அமைக்குமாற்றை அளவுகளுடன் கூறினாற் போல,

"உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்
திசை தொறும் ஒன்பான் முழுநலம் அகன்று
விதமாண் ஆடியின் வட்டம் குயின்று
பதுமச துர மீமிசை விளங்கு
அறவோர் கமைந்த ஆசனம்"

எனப் புத்தபீடிகை அமைப்புக் கூறப்படுகிறது.

சீவக சிந்தாமணி

விமலையார் இலம்பகம்

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிந்தாமணி பதின்மூன்று இலம்பகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் கதைத் தலைவனான சீவகன், மகளிர் எண்மரை மணக்கிறான். ஒவ்வொருவர் பெயராலும் ஒவ்வோர் இலம்பகம் அமைந்துள்ளது. ஒவ்வொருவரையும் அவன் சந்தித்துத் திருமணம் செய்து கொண்ட முறை ஒவ்வோர் இலம்பகத்திலும் கூறப்படுகிறது. விமலை என்ற பெண்ணைச் சந்தித்து மணந்து கொண்ட செய்தியைக் கூறுவது விமலையார் இலம்பகம்.

இதற்கு முந்தையதான கனகமாலையார் இலம்பகத்தின் இறுதியில் சீவகன் தன் தோழர் மூலமாகத் தன் தாயான விசயை தண்டகாரணியத்து வாழ்வதை அறிகிறான். உடனே சென்று அவளைக் காணவிரும்பிக் கனக மாலையிடம் விடைபெற்றுக் கொண்டு விசயை உறையும் தவப்பள்ளி நோக்கிப் புறப்படுகிறான். அவன் விசயையைச் சந்திப்பதிலிருந்து விமலையார் இலம்பகம் தொடங்குகிறது.

சீவகன் தோழர்களுடன் தண்ட காரணியம் நோக்கிச் செல்கிறான். விசயை அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவளைக் கண்டதும் சீவகன் அவன் அடிகளில் வீழ்ந்து வணங்கினான் தாயும் மகனும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். சீவகனுக்குரிய அரசை அவன்தந்தை சச்சந்தனிடமிருந்து சூழ்ச்சியால் பறித்துக் கொண்டவன் கட்டியங்காரன் என்ற அமைச்சன். அவனிடமிருந்து மீண்டும் தனக்குரிய அரசைப் பெறுதற்குரிய வழியைச் சீவகன் தாயுடன் கலந்து சிந்திக்கிறான். மாமனான கோவிந்தன் துணையுடன் அவனை வெல்லுமாறு விசயை தன் மாமனான கோவிந்தன் நகரத்திற் சென்று தங்குமாறு கூறி அனுப்புகிறாள். தன் தோழருடன் அவன் மட்டும் இராசமாபுரம் நோக்கிச் செல்கிறான்.

ஊரின் புறத்திலுத்த சோலையிற் சென்று தங்குகிறான். மறுநாள் காலையில் தோழர்களை அங்கேயே இருக்குமாறு பணித்துவிட்டுத் தான்மட்டும் மாறுவேடம் பூண்டு நகரினுள் செல்கிறான்.

செல்கின்ற வழியில் பெண்ணொருத்தி பந்தாடி கொண்டிருந்தலைக் காண்கிறான். அவள் அவ்வூர் வணிகருள் ஒருவரான சாகரத்தன் என்பான் மகள். விமலை எனப் பெயர் கொண்டவள். அவள் அழகில் சீவகன் மனத்தைப் பறிகொடுக்கிறான். அவளும் சீவகனின் வீரத் திருவுருவில் நிறையழிகிறாள்.

விமலையைத் தாங்கிய நெஞ்சுடன் வழிநடந்து சீவகன் சாகரத்தனின் கடையிலேயே வந்து தங்குகிறான். அவன் வந்து அமர்ந்த வேளை, அது வரை விலையாகாமல் தங்கிக்கிடந்த சரக்குகள் எல்லாம் விற்றுவிட்டன. முன்னரே அவ்வணிகனிடம் சோதிடன் ஒருவன் "ஐயா, உன் மகள் விமலைக்குரிய கணவன் தானாகவே உன் கடைதேடி வருவான். வந்தவன் அவன் என்பதற்கு அறிகுறியாதெனில் அதுகாலும் விலைபோகாமல் தங்கியிருக்கும் கடைச்சரக்கு யாவும் நல்ல விலைக்கு விற்றுப்போகும். அதிலிருந்து, அப்போது உன் கடைக்கு வந்திருப்பவனே உன் மகளுக்குரிய கணவன் என்பதை நீ அறிந்து கொள்ளலாம்" என்று கூறியிருக்கிறான். எனவே,

சீவகன் வந்து கடையில் அமர்ந்ததும் கடைச்சரக்கெல்லாம் விற்கவே அவனே விமலைக்குரிய கணவன் எனச் சாகரத்தன் உணர்கிறான். அதனைச் சீவகனிடமும் கூறி அவனைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்கிறான். தான் முன்னர்கண்டு மனமயங்கிய பெண்ணே அவ்வணிகன் மகள் என்றறிந்து சீவகன் மகிழ்கிறான். தான் விரும்பியவனே தன் தந்தை தனக்குரியவனாகத் தேர்ந்தெடுத்தவன் என்பதறிந்து விமலையும் இன்புறுகிறாள். திருமணம் முடிகிறது. விமலையுடன் இரண்டு நாள் கூடி இன்புறும் சீவகன் மறுநாள் தன் தோழர்களைச் சென்று காண அவளிடம் விடைபெறுவதுடன் இவ்விலம்பகம் முடிவடைகிறது.

நூற்றாறு பாடல்களே கொண்ட சிறிய இலம்பகம் இது. இதிலிருந்து பத்துப்பாடல்கள் பாடப்பகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சீவகன் விசயை உரையாடும் பகுதி இது.

தன்னால்தன் பெற்றோர் நலமேதும் எய்தா நிலைமைக்கு வருந்திச் சீவகன் தாயிடம் பேச, மானின் நோக்குடைய விசயையும் மகன் மனம் மகிழப் பேசுகிறாள். வனப்புடைக் குமரனான சீவகனை வருகவென அழைத்து மருங்கே அமர்த்திப் புனக்கொடி மாலையோடு அவன் பூங்குழலையும் அணிபெறத் திருத்தி அன்பொடு நோக்கி, இருகையாலும் தழுவி அறுசுவை உணவு கொடுத்து அனைவரையும் உபசரிக்கிறாள். ஆறு நாள் இங்ஙனம் கழிந்த பின்னர் ஏழாவது நாளில் மகனிடம் விசயை உரையாற்றத் தொடங்குவதிலிருந்து பாடப்பகுதி தொடங்குகிறது.

மணமிகுந்த பல்வேறு மலர்கள் நிறைந்த மரங்கள் வளர்ந்துள்ள சோலையில் விசயை மைந்தனுடன் உரையாடிக் கொண்டிருந்தான். வலிய அரசர் மகளையும் குறுநில மன்னர் மகளையும் எனப் பலரை மணத்தல் அரசகுலத்தில் பிறந்தவர்களுக்கு வழக்கமே. நீதிநெறியுடன் பொருளீட்டலும் பகை மன்னரை வெல்லலும் ஒற்றறிந்து உண்மை உணர்தலும் பெரியாரைத் துணைக்கோடலும் மன்னர் அரசாளும் முறையாகும். பொருளின் ஆற்றல் பெரிது. வெற்றியைத் தேடித் தரும். சிறப்புச் சேர்க்கும். கல்வியும் அழகும் கூட்டும் மெலிந்தோரை வலியோராக்கும் பொருளால் படை சேர்க்கலாம். படையினால் நாட்டைக் கைப்பற்றலாம். நாட்டினால் மீண்டும் பொருள் கிடைக்கும். எனவே பொருள் கிடைக்குமானால் அத்தனையும் கிடைக்கும். மகனே, நமக்குரிய நாட்டை இழந்தோம்; செல்வத்தை இழந்தோம். அறிவுரை கூறும் அமைச்சரும் நமக்கு இலர். இந்நிலையில் வருங்காலம் குறித்து நீ துணிந்தது யாது?" என விசயை கேட்கச் சீவகன் பதில் கூறினான். "சிங்கம் நரியோடு போரிடச் செல்கையில் சிந்தித்து செயற்பாலது என்ன இருக்கிறது? என்மேலுள்ள அன்பினால் வருந்த வேண்டாம். கட்டியங்காரன் கொடிய பாம்பு எனில் நந்தட்டன் அதைக் கொல்ல வல்ல கருடன் ஆவான்" என்று சீவகன் கூறிய வீரவுரை கேட்ட விசயை மனம் மகிழ்ந்தாள். "ஆற்றல் பொருந்திய வயிரத்தூண் போன்ற தோள்கள் கட்டியங்காரனிடமிருந்து நிலத்தைப் பெறாமல் இராது" என்று கூறிக்களித்தாள். பின்னர், பகற்பொழுதில் ஒற்றைக் காக்கையே ஓராயிரம் கூகையை வெல்ல முடியும். எனவே இடமும் பொழுதும் நாடி, அஞ்சாமற் செயற்படும் அறிவுடையார்க்கு ஆற்றவியலா அருஞ்செயலும் உண்டோ? இதற்கு மாறாக இடமுதலியன ஆராயாமற் செல்வோர், குகையிடத்து வாழும் சிங்கம் இடமறியாமற் சென்று நரிவலைப்பட்டது. போல் படுவர் என்று அறிவுரையும் கூறினாள். இத்துடன் பாடப்பகுதி முடிகிறது.

1. "மரவம் நாகம் மணம்கமழ் சண்பகம்
குரவம் கோங்கம் குடம்புரை காய்வழை
விரவு பூம்பொழில் வேறிருந்(து) ஆய்பொருள்
உருவ மாதர் உரைக்கும் இ(து) என்பவே".

மரவமும் நாகமும் முதலான பல்வேறு மலர்கள் ஆழ்ந்த பொழிலில் வேறாக (தனித்து) இருந்து, அழகுருவ மாதர் விசயை, ஆய்பொருள் இது உரைக்கும் என்ப.

கருத்துரை :

மரவமும் நாகமும் நறுமணம் வீசுகின்ற சண்பகமும் குரவமும் கோங்கும் குடம் போன்ற காயையுடைய சுரபுன்னையும் ஆகிய பலவும் கலந்து மணம் வீசும் பூஞ்சோலையில் அழகிய வடிவு கொண்ட விசயை தன் மைந்தனுடன் தனித்திருந்து, ஆராய்ந்து பொருளாகிய இதனைக் கூறும்.

விளக்கம் :

தன்னைக் காண நண்பர்களுடன் வந்த மகனிடம் பேசத் தொடங்குகிறாள் விசயை. சச்சந்தன் நாடிழக்க இவளும் ஒரு வகையில் மறைமுகமாகக் காரணமாக இருந்தவளே. ஏனெனில் இவளொடு இடையறாமல் இன்பம் துய்க்கும் விருப்பத்தினாலேயே சச்சந்தன் அரசியலில் மனம் ஒன்றாமல் அவனுக்கு அமைச்சனாக இருந்த கட்டியங்காரன் பொறுப்பில் அனைத்தையும் ஒப்படைத்திருக்க அவன் பேராசையால் சூழ்ச்சி செய்து படைகளைத் தன்வயப்படுத்திச் சச்சந்தன் அயர்ந்திருக்கும் போதில் அரசைக் கைப்பற்றுகிறான். எனினும் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிராதலின் அவன் மனம் கோணாமல் நடந்து அதனால் ஏற்பட்ட விளைவுகளைத் தானும் பட்டறிந்த விசயை, தக்க ஒருவனிடத்து மகன் வளர்ந்து கட்டியங்காரனை எதிர்க்கும் ஆற்றலும் அறிவும் ஆண்டு முதிர்வும் உற்றதும் தன்னை வெளிப்படுத்தி அவனைச் சந்தித்து ஆவன செய்யத் திட்டமிடுகிறாள். இழந்த அரசை மீண்டும் அவன் பெற வேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுகிறாள். தொடர்ந்து அவள் பேசும் உரைகள் அவளது அரசியல் அறிவை உணர்த்துகின்றன.

ஆண்டில் முதிர்ந்ததும்கூட அரசகுலப் பிறப்பாலும் அகத்தின் தூய்மையாலும் அழகு குன்றாதிருந்தனளாதலின் 'உருவமாதர்' என்றார். சீவகனைச் சந்திக்கும் முன்னரே தானே பல்லாற்றானும் சிந்தித்து 'அழிவதூ உம் ஆவதூஉம் வழிபயக்கும் ஊதியமும்' ஆகியவற்றைச் சூழ்ந்திருந்தனளாதலின் நேரடியாகப் பொருள் பற்றிப் பேசத் தொடங்கத் தலைப்படுகிறாள். இஃது அவள் முன்னரே எண்ணித் துணிந்தது என்பதால்தான் ஆசிரியரும் 'ஆய்பொருள் உரைக்கும் என்றார்.

சீவகன் தன் நண்பருடன் தாயைக் காணச் சென்றான். அவரும் அனைவரையும் அன்புடன் வரவேற்று விருந்தோப்பி ஆறுநாள் அறுசுவை உணவு நல்குகிறாள். ஆனால் அரசியற் செய்தி பேசுங்கால் அது பிறரறியலாகாது என்ற விழிப்புணர்வுடன் மகனிடம் தனியே பேசுகிறாள் என்பதை 'வேறு இருந்து' என்ற தொடர் விளக்குகிறது. இருந்த இடம் இன்புறுதற்குரிய பொழிலாயினும் இவ்விருவர் உள்ளமும் ஒன்றிய பொருள் வேறு என்பதுவும் அதனால் விளக்கமுறுகிறது.

2. "நலிவில் குன்றொரு காடுறை நன்பொருட்
புலியனார் மகட் கோடலும் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகட் கோடலும்
நிலைகொன் மன்னர் வழக்கென தேர்பலே"

நலிவுஇல் குன்றுடன், காடு உறை நன் பொருள் புலியனார் மகள் கொள்வதும், பூமிமேல் வலியின் மிக்கவர் தம்மகன் கோடலும், நிலை கொள் மன்னர் வழக்கு என நேர்ப.

கருத்துரை :

உலகில் அழிப்பதற்கரிய மலையிலும் காட்டிலும் வாழ்கின்ற, பெரும் பொருளுடைய, புலியனைய வீரமிக்க குறுநிலமன்னர் மகளைக் கொள்வதும் வலிய அரசர் மகளைக் கொள்வதும் தம் முன்னோர் போல் நிலைகொள்ளும் அரசரின் முறைமை என்று நூல்வல்லோர் ஒப்புவர்.

விளக்கம் :

விசயை சீவகனைச் சத்திக்கையில் அவன் காத்தருவத்தை, குணமாலை முதலான ஐவரை மணந்திருந்தான். சிறிது காலத்திற்கு முன்புதான் ஏமாபுரத்து அரசன் மகள் கனகமாலையைத் திருமணம் செய்திருந்தான். கதை முழுவதும் நோக்கினால் சீவகன் மகளிர் எண்மரை மணக்கிறான். அவன் கல்வி கற்றமை, முடி சூடியமை, முக்தியடைந்தமை ஆகியவற்றைக் கூட நாமகளையும் மண்மகளையும் முக்தி மகளையும் மணந்ததாகப் பாடுகிறார் ஆசிரியர். இதனாலேயே இந்நூல் மணநூல் என்று மற்றொரு பெயரும் பெறுகிறது. இச்செய்திகள் சீவகன் காமுகன் என்ற உணர்வைக் கற்போருக்கு ஏற்படுத்துவன. ஆனால் அரசியல் வரலாறுகளை ஆழ்ந்து நோக்கினால் விருப்பத்திற்காக அன்றி வேறுபல அரசியல் காரணங்களுக்காகவே அரசியல் அரசர் பலர் பலரை மணந்தமை காணலாம். அரசியல் அறமாகிவிட்ட அந்நிலையியையே விசயை இப்பாடலில் குறிக்கிறாள். சிறுநிலம் ஆளும் குறுநில மன்னராயினும் பெருநிலம் ஆளும் பொருவரு வேந்தராயினும் அனைவரையும் நட்பாக்கித் தன் வலிமை பெருக்க முற்படும் அர்சன், மாறாத நட்புக்கு வழியாக மணவுறவு கொள்வான். மகளை ஈந்தார் இவனெடு மாறுபடா. எனவே அவர் பகை இல்லா தொழிகிறது. மேலும் மருகனைப் பகைத்தாரொடு மாறுபடுவதா. எனவே இவர் துணையுடன் பிறரை வெல்ல அவர் பகையும் மறைகிறது. இச்சூழ்ச்சித் திறமுணர்ந்தே விசயை, பலரை மணத்தல் நிலைகொள் மன்னர் வழக்கென்று பேசுகிறார்.

குறுநில மன்னராயினும் குன்றாத குன்றுபடு பொருளும் குறைவிலாக் காடுபடு பொருளும் கொண்டவர் ஆதலின் அவராலும் உதவியுண்டு. செல்வம் மட்டுமின்றி, அவர் வீரமும் உடையார் என்பதைப் 'புலியனார்' என்பது உணர்த்தும்.

3. "நீதியாலறுத் தந்நிதி யீட்டுதல்
ஆதியாய வரும்பகை நாட்டுதன்
மோதி முள்ளொரு முட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே"

நீதியால் வரை யறுத்து ஈட்டுதல், ஆதி ஆய அரும்பகை நாட்டுதல்; முள்ளொடு முள் பகை பேது செய்து மோதிக் கண்டிடல், பிளந்திடல், பெட்டது.

கருத்துரை :

அரசியல் முறையால் இவ்வளவென வரையறுத்து, அரசின் வருவாயாகிய அப்பொருளை ஈட்டுதல், தொன்று தொட்டு வரும் தீர்த்தற்கரிய பெரும்பகையை நெஞ்சில் நிலை கொள்ளச் செய்தல், முள்ளைக் கொண்டு முள்ளைக் காவுதல் போலத் தமக்குப் பகைவராக உள்ள இருவரை அவர்களுக்குள்ளே பகை வருமாறு செய்து பிரிவினை ஏற்படுத்தி அவருள் ஒருவரைத் தம்மோடு கூட்டிக் கொள்ளுதல் ஆகியன அரசர் விரும்புவன.

விளக்கம் :

வருவாய் இயற்றலும் பகைத்திறம் தெறுதலும் பேசப்படுகின்றன. ஆறில் ஒரு கூறு பெறுதல் அன்றைய அரசுமுறை அரசனுக்குரிய வருவாய் பற்றிப் பேசுகையில்

"உறுபொருளும் உல்குபொருளும் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்"

என்பார் வள்ளுவர். நாட்டில் வரியாக வாங்குவது 'உறு பொருள்' இறக்குமதி ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட வரியால் பெறுவது 'உல்குபொருள்', பகைவரை வென்று கைக்கொள்வது 'தெறு பொருள்' – திறை எனவும் படும். இவை அரசனுக்கு உரியனவெனினும் அவற்றையும் அறநெறியிலேயே ஈட்ட வேண்டும். எனவேதான் "நீதியால் அறுத்து அந்நீதி யீட்டுதல்" என்றாள் விசைய. அவ்வாறு இன்றி வலிந்து செயற்பட்டால் அந்நிலை எத்தகையது என்ற வள்ளுவரும் பிசிராந்தையார் என்ற சங்காலப் புலவரும் கூறுகின்றனர். வலிந்து வரி வாங்கும் அரசன் வழிநடப்போரை வேல் முனையில் மிரட்டிப் பறிக்கும் கொள்ளைக்காரர் என்கிறார் வள்ளுவர். சிறிய அளவு நிலத்தில் விளைந்த நெல்லாயினும் ஒழுங்காக அறுத்து உண்பொருளாக்கித் தந்தால் யானைக்கு கூடப் பலதாள் உணவாகும். யானையையே நிலத்தில் புகவிட்டால் அதன் வாயினுட் செல்வதைக் காட்டிலும் காலில் மிதிபட்டு அழிவதே மிகுதி 'வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு' சேர்ந்து வலித்து மக்களைத் துன்புறுத்தி மன்னன் பொருளீட்டினால் யானை நுழைந்த வயல் போல ஆகும் என்கிறார் பிசிராந்தையார்.

முதற்பாடலில் தன் வலிமையைப் பெருக்குதற் பொருட்டுப் பல அரசர்களுடன் மணவினை உறவு கொள்வதை வலியுறுத்திய விசயை இப்பாடலில் பகைவரை வெல்ல மேற்கொள்ள வேண்டிய நெறிகள் பற்றிப் பேசுகிறாள். 'பொன்னின் ஆடும் பொருட்படை' என அவளே பின்னர்க் கூறுவது போலப் படைப் பெருக்க உதவும் பொருளீட்டும் முறைமை முதலிற் கூறுகிறாள்.

அடுத்து தொன்றுதொட்டு வரும் பகையை நெஞ்சிற்கோடல் வேண்டும் என்கிறாள். வலிமை இன்மையாலோ இடையில் அப்பகை களையும் முயற்சியில் அவ் அரசகுலம் தளர்வுற்றிருப்பினும் வாய்ப்பு வருங்கால் மேற்சொல்லும் நோக்குடன் அதை நெஞ்சில் இருத்த வேண்டும் என்கிறாள்.

தொடர்ந்து 'முள்ளினால் முட்களையுமாறு' பேசுகிறாள். அரசியலில் 'மண்டலக் கொள்கை' என்பது ஒன்று. நண்பனுக்கு நண்பன் தனக்கும் நண்பன் நண்பனுக்குப் பகைவன் தனக்கும் பகைமை. பகைவனுக்கு நண்பன் தனக்குப் பகைவன். பகைவனுக்கும் பகைவன் தனக்கு நண்பன். பெரும்பாலும் அண்டை மாநிலங்களுக்கிடையே பகை நிலவுதல் இயல்பாதலின் அடுத்துள்ளவன் தனக்குப் பகைவனாக, அவனை அடுத்துள்ளவன் அவனுக்குப் பகைவனாதலின் தனக்கு நண்பனாக இப்படியே ஒரு வட்டம் அமையும். அந்த வட்டத்தில் நண்பனாக இருப்பவர் இவரை அவர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படுமாறு ஓர் உபாயம் செய்து பிரித்துப் பகைவராக்கி, அவர்கள் பிரிந்தபின் அவர்களில் ஒருவரைத் தனக்கு நண்பனாக்கி அதன் மூலம் தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளல் அரசு தந்திரங்களில் ஒன்று 'மித்திர பேதம்' எனப்படும் அவ்வழியைக் கையாளுமாறு விசயை அறிவுரை கூறினாள்.

4. 'ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றம் கொள்குறிக் கொள்ளவற் கென்பவே'

கொற்றம் கொள்ளும் குறிக்கோளுடைய கொற்றவனுக்கு ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும், கற்ற மாந்தரைக் கண் எனக் கொள்தலும் சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூது என்ப.

கருத்துரை :

வெற்றி பெற வேண்டும் என்னும் குறிக்கோள் உடைய அரசர்க்கு ஒற்றரையும் பிற ஒற்றர் துணையுடன் ஆராய்ந்து உண்மை உணர்தலும், கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியோரைக் கண்போன்று மதித்து ஏற்றுக் கொள்வதும், சுற்றத்தாரை ஆராய்ந்து பெருக்கிக் கொள்ளுதலும் அவர்தம் குறிக்கோளை அடைதற்குரிய சூழ்ச்சிகள் என்பர்.

விளக்கம் :

திருக்குறளில் அமைந்துள்ள ஒற்றாடல், பெரியாரைத் துணைக் கோடல், சுற்றந்தாழல் என்னும் மூன்று அதிகாரங்களின் கருத்துக்களையும் ஒருங்கே போற்றியுரைக்கும் பாடல் இது. ஒற்றரிடையேயும் மாற்றார்க்கு உளவு கூறுவோர் இருத்தல் கூடும். அவர் அறிந்து வரும் செய்தி குறைபடவோ தவறாதலோ கூடும். எனவே 'ஒற்று ஒற்றித் தந்த பொருளையும் மற்றும் ஓர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்' என்றும் 'ஒற்று ஒற்று உணராமை ஆள்க' என்றும் வள்ளுவர் அறிவுரை கூறுவார். எதிராகக் காக்கும் அறிவோடு வருவதை உரைக்க வல்ல திறத்தோடு – இடித்துரைக்கவல்ல பெரியாரைத்துணைக் கொள்ள வேண்டியதும் அரசனது கடமை. துணை வலி பெருக்கல் வெற்றிக்கு வழியாதலின் சுற்றம் பெருக்கலும் வேந்தனுக்கு வேண்டிய ஒன்று. எனவே இம்மூன்றும் விசையையால் சீவகனுக்கு உணர்த்தப்படுகின்றன. கண் என்பது பொருள்களைப் பார்த்தற்கு உதவும் கருவி. கற்ற மாந்தர் அரசனுக்கு அறிவுக் கண்ணாவர். அந்தக் கண்விழியே அவன் நாட்டு நடப்புக்களை ஊடுருவி நோக்கி உண்மை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று உணர்த்தவே அவரைக் கண் எனக் கோடல் வேண்டுமென்றாள். சுற்றம் வேண்டுமெனினும் அது கொற்றவனின் வெற்றிக்கு நற்றுணையாதல் வேண்டுமாதலின் அதனைச் சூழ்ந்து ஆராய்ந்து பெருக்கல் வேண்டுமென்றாள். இறைமாட்சி கூறுங்கால் அரசனுக்குக் கல்வி வேண்டுமெனக் கூறும் வள்ளுவர் அக்கல்வியை விரித்துரைக்கையில் 'கேள்வி' பற்றிப் பேசுவார். கற்றலின் கேட்டல் நன்று. கேள்விச் செல்வம் – பிறர் தம் அறிவினாலும் அனுபவத்தாலும் சேர்த்த செல்வமாகிய நெறிமுறைகளைக் கேட்டு அறியும் செல்வம் – சீவகனுக்கு விசையையால் கிடைக்கிறது.

5. "வென்றி யாக்கலு மேதக வாக்கலுங்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலு
மன்றி யுங்கல்வி யோடடி காக்கலும்
பொன்றுஞ் சாகத்தி னாய்பொருள் செய்யுமோ"

பொன் குஞ்சு ஆகத்தினாய், வென்றி ஆக்கலும், ஆதரவு, ஆக்கலும், அன்றியும் கல்வியோடு அழகு ஆக்கலும், குன்றினார்களைக் குன்று என ஆக்கலும் பொருள் செய்யும்.

கருத்துரை :

.திருமகள் உறையும் மார்பினனே, வெற்றியை ஏற்படுத்தலும், மேம்பாட்டை உண்டாக்கலும் மட்டுமன்றிக் கல்வியும் அழகும் தருவதும் மெலிந்தோரை மலையொத்த வலியுடையோர் ஆக்கலும் ஆகியவற்றைச் செய்யவல்லது பொருள்.

விளக்கம் :

திருமகள் உறையும் மார்பு திருமாலினுடையது. இங்கே சீவகன். 'பொன் துஞ்சு ஆகத்தினாய்' என அழைக்கப்படுகிறான். சிலம்பில் பாண்டியன் 'திருவீழ் மார்பின் தென்னவர் கோ' எனப்படுவான். 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்பதனாலும் 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்னும் ஆழ்வார் கூற்றினாலும் மன்னனைத் திருமாலாய்ப் பேசும் இலக்கிய மரபும் காரணமும் புலனாகும். காத்தல் தொழில் திருமாலுக்குரியது. 'குடியோம்பல்' மன்னனுக்குரியது. எனவே மன்னரைத்திருமாலாக்கி அம் மரபிற் கேற்பத் திருமகன் உறையும் மார்பு என்றனர். திருமகள் செல்வத்திற்குரியவள். எனவே, பொருளின் சிறப்பு கூறிப் பொருள் சேர்க்கத் தூண்டும் பாடலில் சீவகனைப் பொருளுக்குரிய தெய்வம் குடி கொண்ட மார்பினன் என்றே பேசுவதில் 'பொருட்' பொருத்தம் மட்டுமின்றி, வருங்காலம் பற்றிய தன் கனவுகளை மகன் இன்றே அடைந்துவிட்டதாய்க் கருதி பேசும் தாயின் அன்புள்ளமும் உறைந்துள்ளது.

அரசுக்குரிய தலைமைச் சிறப்பு வெற்றியாதாலின் அது முற்கூறப்பட்டது. வெற்றியால் விளைவது மேதகவாதலின் அது அடுத்துக் கூறப்பட்டது. பொருளல்ல வரையும் பொருளாகச் செய்ய வல்லது பொருளாதாலின் குன்றினார்களைக் குன்றென ஆக்குதலும் கூடவே கூறப்பட்டது. 'விலை போட்டு வாங்கவா முடியும்?' என்று பாரதிதாசனால் வினவப்படும் கல்வியும் கூடப் பொருளால் 'ஆக்கப்படும்' என்பதும், கல்வி கற்க உறுதுணையாவது பொருள் என்பதும் பற்றிப் பொருள் கல்வி தரும் என்றார். வளமான வாழ்வு நல்கி எழில் கூட்டும் பொருளாதலின் அஃது அழகும் தரும் என்றார். இவ்வுலக வாழ்விற்கு இன்றியமையா அனைத்தும் பொருள் தரும் என்ற இவ்வுண்மையை உணர்ந்தன்றோ வள்ளுவரும் 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார். 'செய்யும்' என்று கூறியதனால் இயற்கையாக உண்டாதலன்றி இல்லாத விடத்தும் இருப்பது போலக் காட்டவும் உதவும் பொருள் என்பது குறிப்பாக உணர்த்தப்பட்டது.

'பணம் பத்தும் செய்யும்' என்பது அன்றாட வழக்கில் உள்ள பழமொழி.

6. "பொன்னினாகும் பொருபடை யப்படை
தன்னினாகுந் தரணி தரணியிற்
பின்னையாகும் பெரும் பொருளப் பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன வில்லையே".

பொன்னின் பொருபடை ஆகும். அப்படை தன்னின் தரணி ஆகும். தரணியின் பின்னைப் பெரும் பொருள் ஆகும். அப்பொருள் துன்னும் காலைத் துன்னாதன இல்லையே.

கருத்துரை :

பொருளால், போர் செய்தற்குரிய படை உண்டாகும். அப்படையினால் போரிட்டு வெல்வதால் நாடு கிடைக்கும். நாட்டினால் மீண்டும் பொருள் கிடைக்கும். எனவே, பொருள் கிடைக்குமானால் அது கொண்டு பெற முடியாதன இல்லை.

விளக்கம் :

காரணம், காரியம் என்னும் இரண்டாகவும் விளங்குவது பொருள். பொருளால் படைக்கலன்களும் உணவும் ஊதியமும் கொண்டு படை திரட்டலாம். படை கொண்டு பகை நாட்டை வென்று கைக் கொள்ளலாம். நாட்டின் மூலம் வருவாய் அடைவதுடன் பிறநாட்டை வென்று கொண்டு உறுபொருளும் உல்குபொருளும் ஒன்னார்த் தெருபொருளும் என அனைத்தும் பெறலாம். எனவே பொருளின் துணையுடன் அனைத்தும் பெறலாம். அறம் பொருள் இன்பத்தோடு வீடும் நல்க வல்லது பொருள்.

7. "நிலத்தி னீங்கி னிதியினுத் தேய்ந்துநங்
குலத்திற் குன்றிய கொள்கைய மல்லதூஉங்
கலைக்க னாளரு மிங்கில்லை காளைநீ
வலித்த தென்னென வள்ளலுங் கூறுவான்"

"காளை, நிலத்தின் நீங்கி, நிதியினும் தேய்ந்து, குலத்தின் குன்றிய கொள்கையாம். அல்லதும்உம், கலைக்கணாளரும் இங்கு இல்லை. நீ வலித்தது என்" என, வள்ளலும் கூறுவான்.

கருத்துரை :

விசையை, "காளையே, நாட்டை இழந்து, செல்வம் குறைந்து, தம் குலத்தில் தாழ்ந்த நிலையை அடைந்துள்ளோம். அமைச்சரும் இங்கு இல்லை. இந்நிலையில் நீ செய்யத் துணிந்தது யாது ?" என வினவ வள்ளலான சீவகனும் உரைப்பான்.

விளக்கம் :

அறிவுரை கூறியபின் மகனின் வருங்காலத் திட்டம் யாதென அறிய வினாவுகிறான் விசயை. தமக்குரிய நாட்டை இழந்தனராதலின் 'நிலத்தின் நீங்கி' என்றாள். நாடின்மையால் செல்வமின்றி வறுமையுற்றனராதலின் 'நிதியினும் தேய்ந்து' என்றான். அரசர்குலத்தில் பிறந்தும் அரசர்குரிய நிலையில் வாழாததால் 'நம் குலத்தில் குன்றிய கொள்கையம்' என்றாள். மறைந்து வாழும் தமக்கு அறிவுரை கூறவல்ல அமைச்சராகிய துணைவலி இல்லை என்பதையும் நினைவூட்டித் தாமே தனித்து நின்று செயல்பட வேண்டிய சூழலில் சீவகன் சிந்தை எவ்வழிச் செல்கிறது எனக் கேட்கிறாள். வழங்கப் பொருள் இன்றேனும் வள்ளண்மை மனத்துளதாதலின் வள்ளல் எனப் புலவர் சீவகனைச் சுட்டினார்.

8. 'எரியொடு நிகர்க்கு மாற்ற லிடிக்கு ரற்சிங்கமாங்கோர்
நரியோடு பொருவ தென்றாற் சூழ்ச்சி நற்றுணை யொடென்னாம்
பரிவோடு கவலவேண்டா பாம்பவன் கலுழனாகுத்
சொரிமதுச் சுரும்புண் கண்ணிச் சூழ்கழனந்த வென்றாள்;

"எரியொடு நிகர்க்கும் ஆற்றல் இடிக்குரல் சிங்கம் ஆங்கு ஓர் நரியொடு பொருவது என்றால் சூழ்ச்சி நல்துணையொடு என் ஆம்? பரிவொடு கவலவேண்டா. அவன் பாம்பு, சொரிமதுச் சுரும்புஉண் கண்ணிச் சூழ்கழல் நந்தன் கலுழன் ஆவான்" என்றான்.

கருத்துரை :

"நெருப்புப் போன்ற வலிமையுடன் இடியென முழங்குவதாகிய சிங்கம், நரியுடன் போர்புரியச் செல்கையில் சூழ்ச்சியும் துணைவலியும் யாது பயன்தரும்? என்மேல் வைத்த அன்பினால் இப்படிக் கவலைப்பட வேண்டாம். கட்டியங்காரன் பாம்பு போன்றவன். பொழியும் தேனை வண்டுகள் பருகும் அன்றலர்ந்த மலர்களால் ஆன மாலையையும் வீரக்கழலையும் அணிந்த நந்தட்டன் கருடன் போன்றவன்" எனச் சீவகன் கூறினான்.

விளக்கம் :

விசயைக்குச் சீவகன் தரும் விடை அவன் வீரத்தை விளக்கவல்லது, நிதியிழக்கினும் மதியிழக்கிலன் நிலமிழக்கினும் பலமிழக்கிலன், எனவே வீரவுரை கூறுகிறான். அமைச்சரும் இல்லையே எனக் கவலும் விசயைக்கு ஆறுதல் கூறுகிறாள். அறிவுத் துணையும் வீரத்துணையுமாக நந்தட்டன் உள்ளான் என்பதையும் கட்டியங்காரன் என்னும் பாம்பினை மிக எளிதாகக் கொல்ல வல்ல கருடன் அவன் என்பதையும் எடுத்துரைக்கிறான். வஞ்சனையால் நாட்டைப் பற்றிய கட்டியங்காரனுக்குப் பதுங்கிச் செல்லும் பாம்பையும் நேரடியாக மோதவிருக்கும் நந்தட்டனுக்கு அனைவரும் காண ஆகாயத்திற் பறக்கும் கருடனையும் உவமை கூறியது மிகப் பொருத்தம். நெருப்புப் போல், எதிர்ப்பட்டோரை அடியோடு அழித்து உருத்தெரியாது ஆக்கும் ஆற்றல் உண்டெனவும் உணர்த்துகிறான். சிங்கத்தின் முன்னே சிறு நரிநிற்கவும் முடியுமோ? சூழ்ச்சியும் துணையும் நரிக்கு இருப்பினும் சிங்கத்தின் ஆற்றல்முன் அவை தூளாகும் அல்லவோ? கட்டியங்கானைவெல்லத் தான் கூட வேண்டுவதில்லை; நந்தட்டனே போதும் எனவும் உணர்த்துகிறான்.

9. "கெலுழனோ நந்தனென்னாக் கிளரொளி வனப்பினானைக்
கலுழத்தன் கையாற்றீண்டிக் காதலிற் களித்து நோக்கி
வலிகெழு வயிரத் தூண்போற் றிரண்டுநீண்டமைந்த, திண்டோ
கவிகெழு நிலத்தைக் காவா தொழியுமோ காளைக் கென்றால்"

நந்தன் கெலுழனோ என்னா, கிளர் ஒளி, வனப்பினானைக் கலுழத் தன்கையால் தீண்டி, காதலின் களித்து நோக்கி, வலிகெழுவயிரத்தூண் போல் திரண்டு நீண்டு அமைந்த தோள்கள், கலிகெழு நிலத்தைக் காளைக்குக் காவாது ஒழியுமோ என்றாள்.

கருத்துரை :

"நந்தட்டன் கருடனாவானா" என்று கூறிய விசயை, ஒளியும் அழகும் உடைய சீவகனை மனமுருகும்படி தன்கையினால் தழுவி, அன்புடன் களிப்புற்று நோக்கி, "வலிமை பொருந்திய வயிரத்தூண்போல் திண்மையுடன் திரண்டு நீண்டு அமைந்துள்ள தோள்கள், கட்டியங்காரனிடம் உள்ள நிலத்தைக் காளையாகிய உனக்குக் கொண்டு வந்து தராமற் போகுமோ?" என்றாள்.

விளக்கம் :

நட்பின் பெருமை கூறிய சீவகனிடம் விசயை தாய்ப்பாசத்துடன் தன் மகனின் ஆற்றல் சுட்டுகிறாள். 'உச்சிதனை முகர்ந்தால் கருவம் ஒங்கிவளருதடி எனப்பாடிய பாரதியின் பெருமித உணர்வுடன் மகன் உரைவிளைத்த இறும்பூது உணர்ச்சியுடன், 'ஓ, அப்படியா ? உன் நண்பன் கருடனா ?" எனத் தாய்க்கே உரிய மகிழ்ச்சியுடன் விசயை கேட்பதைக் கற்பனையில் காட்டும் பாடல்.

10. "இடத்தொரு பொழுது நாடி
யெவ்வினைக் கண்ணு மஞ்சார்
மடப்பட லினறிச் சூழ
மதிவல்லார்க்கரிய துண்டோ
கடத்திடைக் காக்கை யொன்றே
யாயிரங் கோடி கூகை
யிடத்திட யழுங்கச் சென்றாங்
கின்னுயிர் செகுத்த தன்றே"

கடத்திடைக் காக்கை ஒன்றே, ஆயிரம் கோடி கூகை இடத்திடை அழுங்குச் சென்று, ஆங்கு இன்னுயிர் செகுத்து அன்றே. இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக் கண்ணும் ஆஞ்சார், மடப்படல் இன்றிச் சூழல் மதிவல்லார்க்கு அரியது உண்டோ ?

கருத்துரை :

காட்டிலுள்ள காக்கைகளில் ஒன்றே, பகற்காலத்தில் எண்ணற்ற கூகைகள் இருக்கின்ற இடத்திற்குச் சென்று அவைவருத்துமாறு உயிரைக் கவரவல்லது அன்றோ ? அதுபோல இடமும் காலமும் ஆராய்ந்து, எதற்கும் அஞ்சாமல் சென்று வினையாற்றவல்ல அறிவினர்க்கு முடிக்க முடியாத வினையும் உள்தோ ?

விளக்கம் :

வினை, காலம், இடம் என்ற மூன்றும் ஆராய்ந்தே செயல்பட வேண்டும் என்பார் வள்ளுவர். காலம் கருதி இடத்தாற் செயின் கருதிய யாவும் கைகூடும் என்பதையே இப்பாடல் விளக்குகிறது. பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்றும் "சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான் ஊக்கம் கெடும்" என்றும் கூறும் வள்ளுவரின் கருத்துக்கள் ஒப்பு நோக்குதற்குரியன.

பயிற்சி வினாக்கள் :

1. சீவகசிந்தாமணியில் அரச நெறி கூறப்படுமாற்றை விளக்கு ?
2. விசயை மகனிடம் ஆட்சியைக் கைப்பற்ற உரைப்பன யாவை ?
3. சீவகன் அன்னைக்க வழங்கிய மறுமொழிகள் யாவை ?

வளையாபதி

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான வளையாபதி முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள எழுபத்திண்டு பாடல்களில் ஐந்து பாடல்கள் பாடமாக அமைந்துள்ளன. மக்கட்பேறு, கள்ளாமை, பொய்யாமை, கொல்லாமை, இளமை நிலையாமை ஆகியன பற்றிப் பேசும் பாடல்கள் அவை. சமண சமய நூலாதலின் கதையொன்றைக் கருவியாகக் கொண்டு அச்சமயக் கோட்பாடுகளை வலியுறுத்துவது. இந்நூல் சமண சமயம், உலக நிலையாமைத் தத்துவத்தைக் கூறிக் குற்றம் கடிந்து செற்றம் நீக்கிப் பெற்றியுடன் வாழுவதை வற்புறுத்துவது. பாடப்பகுதிப் பாடல்கள் ஐந்தும் அங்ஙனம் அமைந்தனவே.

வள்ளுவர் போற்றிய மக்கட்பேற்றின் மாண்பினைக் கூறுவது முதற் பாடல். பேறுகள் பிற பெற்றிருந்தாலும் சேயிலாச் செல்வம் செல்வியற்றது என்பதை உவமைகளால் விளக்குகிறது இப்பாடல். கள்ளுண்ணலால் கட்குடியன் அடையக்கூடிய இடிநிலைகளைச் சுட்டிக் கள்ளாமையை வற்புறுத்துகிறது, இரண்டாம் பாடல். பொய்யாமை போற்றுமாறு அறிவுறுத்துகிறது. மூன்றாம் பாடல். பஞ்மா பாதகங்களுள் ஒன்றான கொலையைச் செய்வதால் உறும் கேட்டினை எடுத்துரைத்து 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என உணர்த்துகிறது, நான்காம் பாடல்; இளமை நிலையாது என எடுத்துரைக்கிறது ஐந்தாம் பாடல்.

மக்கட் பேறு

1. "பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்
துறையிலா வசை வாவி துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னீர்ச்
சிறையிலா நகரம் போலும் சேபாலாச் செல்வ மன்றே."

சேய் இல்லாத செல்வமானது, பொறையிலா அறிவும், போகப் புணர்வு இலா இளமையும், மேவத் துறையிலா வசை வாவியும், துகிளலாக் கோலத் தூய்மையும், நறையிலா மாலையும், கல்வி நலமிலாப் புலமையும், நன்னீர்ச் சிறையிலா நகரமும் போலுமன்றே என்று கூறுகிறார்.

கருத்துரை :

மக்கட் பேறு அடையாதவர் சேர்த்து வைத்திருக்கும் செல்வமானது. பொறுமை இல்லாதவரது அறிவுடைமையும், இன்பம் தரும் புணர்ச்சியை எய்தப் பெறாத இளமைப் பருவமும், இறங்கி நீராடுவதற்குரிய படித்துறையில்லாத தாமரைப் பொய்கையும், ஆடையின்றி அணிகள் மட்டும் பூண்ட கோலமும் மணமில்லாத மலர்களாலான மலையும், நூல்கள் பலவும் கற்காத அறிவும், நல்ல நீர் நிலைகள் சுற்றிலும் அமையப் பெற்றிராத நகரமும் போலப் பயனற்றுக் கிடக்கும்.

விளக்கங்கள் :

மக்கட் பேற்றின் மாண்பு தமிழிலக்கியத்தில் பெரிதும் பேசப்படும் ஒன்று இம்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் வேண்டும் என்பர். 'தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்' எனப் போற்றிக் கொண்டாடுவர். இதன் சிறப்பினை,

"படைப்புப்பல படைத்துப் பலரோ(டு) உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்பட
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழுநாளே"

எனப் புறநானூறு (188)ம்,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு"

எனக் குறளும் (60)

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும் மற்ற
என்னுடைய ரேனும் உடையரே – இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கை பூநாறும் செய்யவாய்
மக்களை யிங்கில்லாதவர்"

என நளவெண்பா (246)வும்

"கற்புடுத்(து) அன்புமுடித்து நாண்மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு மக்கட் பேறு)
என்பதோர் செல்வமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு"

என நீதிநெறியும் (81) எடுத்துரைக்கின்றன.

இங்ஙனம் அனைவராலும் போற்றப்படும் புதல்வர்ப் பேற்றை வளையாபதி எடுத்துரைக்கும் முறை தனிச்சிறப்புடையது. உணவும் உறக்கமும் உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானவை. உடுப்பதும் நகைப்பதும் உணர்வதும் மனிதர்க்குச் சிறப்பானவை. உணர்வுடைய மனிதன், வல்லாங்கு வாழ்தற்காக வருங்காலத்திற்கெனப் பொருள் சேர்க்கிறான். செல்வத்துக்குச் சிறப்பு ஈதல் என்றால் செல்வம் பெற்றமைக்குப் பொருள், மக்கட் பேற்றால் கிடைக்கும் எனலாம். வருங்கால வாழ்விற்குச் சேர்ப்பதினும் தன் வருங்காலச் சந்ததிக்கென மனிதர் சேர்ப்பதே மிகுதி. புதல்வர்ப் பெறாத பொருளாற்ற வாழ்வில் பொருள் சேர்ப்பதில் பொருளுண்டா ? எனவே, சேயிலாச் செல்வம்

நோயுடைத்து எனச் சொல்கிறார், ஆசிரியர். அதற்கு இணையாகக் கூறத்தக்க, பயன்படாமல் கொன்னே கழியும் நிலைகளையெல்லாம் உவமைகளாக்கிப் பாமாலை தொடுக்கிறார்.

பொறையிலா அறிவு முதலிடம் பெறுகிறது. "அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள் அழிக்கலாகா அரண்" என்று போற்றும் வள்ளுவரே "அஃகியன்ற அறிவு என்னாம்?" என்று தானே கேட்கிறார். 'அரம்போலும் அறிவுடையரேனும் மரம்போல்வர், மக்கட்பண்பில்லாதவர்' என்று அவரே காரணமும் கூறுகிறார். வள்ளுவர் பொதுப்படக் கூறியதற்கு வளையாபதி ஆசிரியர் குறிப்பான விளக்கம் தருகிறார். மக்கட்குரிய பண்பு நலன்கள் பலவெனினும் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது பொறையுடைமையே. நிறையுடைமையால் விளையும் பொறையுடைமை, செருக்கை அகற்றும்; பிறர்குறை பொறுக்கச் செய்யும். அன்றியும், தன் கருத்திற்கு மாறுபடப் பிறர் பேசினும் பொறையுடையோர் சிந்தித்து மெய்ப் பொருள் கண்டு செயலாற்றுவர். பொறை இல்லாதவர், மாற்றார் கருத்தை ஏற்காது சீற்றம் கொண்டு எழுவர். மெய்ப்பொருள் காண்பதே அறிவு. பொறையின்மையால் மெய்ப்பொருள் காணமுடியாமல் போகிறது. பின் அந்த அறிவினால் என்ன பயன்? எனவே தான் பொறையிலா அறிவு பொருளற்றது என்கிறார் புலவர்.

அடுத்துப் 'போகப் புணர்விலா இளமை' சுட்டுகிறார். செல்வம், யாக்கை, இளமை ஆகியவற்றின் நிலையாமை பேசும் பௌத்த நூல், 'இளமைப் பருவம் இன்ப நுகர்ச்சியில் கழிதல் வேண்டும், அந்த வாய்ப்புக் கிட்டாவிடில் அந்த இளமை பயனற்றதும்' என்ற கருத்தை எடுத்துரைப்பது வியப்பு. எனினும் ஆழ்ந்து நோக்கினால், கருத்துமுரண்பாடேதும் இல்லையென்பது புலனாகும் இளமை நிலையானது எனச் சமயங்கள் வற்புறுத்துவதன் அடிப்படை நோக்கம் அதனை நிலையெனக் கருதி அதன் இன்பங்களில் மூழ்கி, நிலைத்த பிறவற்றை மனிதன் அறவே மறந்துவிடலாகாது என்பதை உணர்த்துவதே ஆகும். எனவே, அறவழியில் தக்க முறையில், அதன் நிலையாமைப் பண்பை மறவாமல், அதற்கு மேலுள்ள நிலைத்த இன்பங்களை நினைவிற் கொண்டு அவற்றை அடைவதற்கான வழிகளையும் தேடியவாறே இளமையில் இன்பம் நுகர்வதை எந்தச் சமயமும் குற்றமாய்க் கொள்வதில்லை. அளவு மீறலும் பிற அனைத்தும் மறப்பதுமே கண்டிக்கப்படுவன, நயனிலான் கைப்பட்டுப் பயனிலாமற் போகும். செல்வம் மிக நலம் பொற்றாள் – தமியள் முத்தற்று வள்ளுவர் உரைப்பதும், புணர்விலா இளமையின் பொருளற்ற தன்மையை தானே? அதனால்தான், போகப் புணர்விற்குரிய இளமை பருவம் வாளா கழிதலை, அனுபவித்ததற்குரிய மக்களின்றிச் சேர்த்து வைக்கப்படும் செல்வத்திற்கு உவமை கூறுகிறார் ஆசிரியர்.

மேவத் துறையிலா வசை வாவியும் சேபாலாச் செல்வத்திற்கு உவமையாகிறது. 'ஊருணி நீர் நிறைந்தற்றே' என உவமை கூறும் அளவிற்கு நீருடை வாவி மக்களுக்குப் பயன்படும் ஒன்று. பொறியின்மை யார்க்கும் பழியன்று, அறிவறிந்து ஆள்வினையியன்மை பழி என்றாற் போல வாவியில் நீரின்றேல் அது குறைதானே ஒழியக் குற்றமன்று. ஆனால் நன்னீர் நிறைந்திருந்தும் அதனை நாடும் ஊராரிருந்தும், பயன்படுத்ததற்கு வழியின்றி இறங்கத் துறையில்லாமல் அது இருக்குமேல் அப்போதுதான் அது பொருளற்றுப் போகிறது. மேலும் அருந்த நீர்மட்டுமின்றி அணியத் தாமரையும் கொண்ட குளமென்கிறார் ஆசிரியர். தாமரை அழகுப் பொருள் மட்டுமன்று, மருந்தும் கூட, அதன் இலையும் பயன்படுவது. இங்ஙனம் பயன்மிகப் பெற்ற வாவியில் இறங்கத் துறை இல்லையெனில் அது இருப்பதால் என்ன பயன்?

துகிலிலாக் கோலத் தூய்மை அடுத்தும் பேசப்படுகிறது. பெருமழைப் புலவருரை, ஆடை உடுத்தாமல் அணிகள் மட்டும் அணியப்பட்ட கோலம் என்கிறது. ஆயின் அக்கோலம் சேயிலாச் செல்வத்திற்கு உவமையாதல் எங்ஙனம்? அதனைக் காட்டிலும், பௌத்த காப்பியமான வளையாபதி. அதன்பகைச் சமயமான சமணத்தின் ஒரு பிரிவைச் சார்ந்த திகம் பரர்களை (ஆடையற்றோர்) இழிவுபடுத்திக் கூறுவதாகக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. திகம்பரக் கோலத்தில் தூய்மை இருப்பினும் 'மானம் இல்லை. எனவே சேயிலாச் செல்வம் போல், அதுவும் சிறப்புப் பெறவில்லை என்கிறார் போலும். முன்னும் பின்னும் கூறப்படும் உவமங்கள் போல இது பொருட்பொருத்தம் உறவில்லை. எனவே துகிலிலாக் கோலத் தூய்மை. எதனைக் குறிக்கும், எவ்வாறு சேயிலாச் செல்வத்திற்கு உவமையாகும் என்பது தெளிவாகவில்லை.

'நறையிலா மாலை' என்பது, அடுத்துக் கூறப்படும் உவமை. 'மணமில்லாத என்று பொருள்படும் 'நறையிலா' என்ற தொடர், மாலைக்கு அடையாக வரினும் மலர்களையே சுட்டும் மலர்களிடம் வண்ணமும் வடிவமும் நல்கும் அழகுண்டு; மணமுண்டு; வண்டுக்கு உணவாகி மனிதர்க்கு மருந்தாகும் திறமுமுண்டு; இவற்றுள் மணமும் தேனுமே பயன்பாட்டிற் சிறப்பவை. இவற்றுடன் ஒப்பிட அழகின் பயன் குறைவானதே. எனவே, செல்வம் என்பது தன்னளவில் சிறப்புடையதேனும் அதனைச் சேர்ந்தவருக்குச் சேயின்றேல், மணமற்ற மலர்போல் பயன்பாட்டிற் குறையுடையதாகிறது. நறையிலா மாலையையும் சேயிலாச் செல்வத்தையும் விருப்புடன் பாராட்டி ஏற்போர் யார்?

தொடர்ந்து, கல்வி நலமிலாப் புலமை, கூறப்படுகிறது. சாதாரண வழக்கில், கல்வியில் தேர்ச்சி பெற்ற நிலையே 'புலமை' என்று குறிக்கப்படும். ஆனால் ஈண்டுப் புலமை எனச் சுட்டப்பட்டது வள்ளுவரால் 'உண்மை அறிவு' எனப் பேசப்பட்ட உயிர்களின் அடிப்படைப் புலனாற்றல். நுண்ணிய நூல் பல கற்பினும் தன்னளவே கொள்ளவல்லது; இவ்வுண்மை அறிவு. விதைப்பது நெல்லாயினும் விளை நிலம் புன்செய் ஆயின் பயன் என்ன? இந்நிலையில் கற்றாலே மற்றும்தன் உண்மையறிவே உளதென்கையில் – கல்லாமை பற்றிப் பேசவும் இயலுமோ? ஆண்டினாலும் அனுபவத்தாலும் யார்க்கும் விளையக் 'கூடிய புலமை' ஒன்றுண்டு. அப்புல்லறிவை அறிவுடையோர் பொருட்படுத்த மாட்டார். வள்ளுவரும் அதனால் தானே, கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும் கொள்ளார் அறிவுடையார்" என்கிறார்? இருந்தும் இல்லாமைக்கு ஒப்பாவது கல்வி நலமிலாப் புலமை. அதனால்தான் அதே நிலையிலுள்ள சேயிலாச் செல்வத்திற்கு உவமையாகிறது.

இறுதியாக 'நன்னீர்ச் சிறையிலா நகரம்' பேசப்படுகிறது 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்றொரு பழமொழியே உண்டு. ஊருக்கு அழகாவது எது? வள்ளுவர் கூறுகிறார், "பிணியின்மை செல்வம், விளைவின்பம், ஏமாப்பு, அணியென்ப நாட்டிற்கிவ்வைந்து" என்று. அவ்வைந்தும் நீரின்றி அமையாது அன்றோ? பிணிபின்மைக்கு அடிப்படைத் தேவையான. புறந்தூய்மை நீரான் அமையும். துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பும் ஆகும் நீரால்தான் விளைவும் செல்வமும் விளையும். இன்பமும் ஏமாப்பும் பெருகும். எனவே ஆறில்லா ஊரில், அந்த ஐந்துமின்றி அழகு பாழாகும். ஊருக்கு இன்றியமையா நீர்போல உயிர்க்கு இன்றியமையாதது மக்கட்பேறு. அதனால்தான் சேயிலாச் செல்வம் நன்னீர் சிறையிலா நகரம் ஆயிற்று.

இங்ஙனம் மக்கட்பேற்றின் மாண்புரைக்கிறது, 'வளையாபதி'.

2. "பீ(டு)இல் செய்திகளால் களவில் பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்(து)
ஓடல் இன்றி உலையக் குறைக்குமே"

கனவில் பீடில் செய்திகளால், வீடில் பல்பொருள் கொண்ட பயன் எனப் பற்றி, ஓடல் இன்றிக் காலொடு கைகளைக் கூடி, உலையக் குறைக்குமே என்கிறார்.

கருத்துரை :

பெருமை சேர்க்காதனவாகிய கன்னமிடுதல் முதலிய தொழில்களை மேற்கொண்டு பிறர் கைவிட விரும்பாத பல்வேறு பொருள்களையும் களவில் மறைவாகக் கொண்டு, அதன் பயன் இதுவே எனக் கூறிக் காவலன் தன் வீரர்களால் பிடிப்பித்துத் தப்பி ஓட முடியாதபடிக் கால்களையும் கைகளையும் கூட்டித்தளையிட்டு அவர் நெஞ்சம் பதறும்படி அவற்றைத் துண்டிப்பான்.

விளக்கம் :

அச்சமே கீழ்களது ஆசாரம் என்பதை அறிந்து, கொடிறுடைக்கும் கூன்கையர்க்கே அவர் படிவரென உணர்ந்து, கள்வரைக் காவலன் ஒறுக்குமாறு கூறி அச்சுறுத்துகிறார், ஆசிரியர். களவு செய்தோரைக் கைகால் துண்டித்துக் குறையுடையர் ஆக்குதல் பண்டை வழக்கம். கொலைத் தண்டமும் விதிப்பதுண்டு என்பதைக் கோவலன் வரலாற்றால் அறிகிறோம். 'தாம்பூங் கோதைதான் காற்சிலம்பு, கன்றிய கள்வன் கையதாகின் கொன்று அச்சிலம்பு கொணர்க' என ஆணையிட்டதுடன். 'கள்வனைக் கோறல் கொடுங்கோலன்று; வெள்யேற் கொற்றம் காண்' எனக் கண்ணகியிடம் கூறவும் செய்கிறான் பாண்டியன். கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனுடன் நேர்' என்றே வள்ளுவரும் அனுமதி வழங்குகிறார். கிடைக்கக் கூடிய தண்டனையின் கடுமை உணர்ந்தேனும் கள்ளாமையை உயிர்கள் மேற்கொள்ளட்டும் என்று எண்ணியவர் போல் ஆசிரியர், தண்டனைகளைக் கூறி அச்சுறுத்துகிறார். வள்ளுவரும், களவின் கட் கன்றிய காதல் விளைவின் கண் வீயா விழுமம் தரும் என்கிறார்.

3. "பொய்யின் நீங்குமின் பொய்யின்மை பூண்டு கொண்டு,
ஐயம் இன்றி அறநெறி ஆற்றுமின்
வைகல் வேதனை வந்துறல் ஒன்றின்றிக்
கௌவை இல்லுல(கு) எய்துதல் கண்டதே"

பொய்யினின்று நீங்குமின்; பொய்யின்மை பூண்டு கொண்டு, வைகல் அறநெறி ஆற்றுமின், வேதனை ஒன்று வந்துறல் இன்றி, கௌவை இல்உலகு எய்தல் கண்டது என்கிறார்.

கருத்துரை :

பொய் சொல்வதைத் தவிருங்கள்; பொய்யாமை என்னும் அணிகலனை எப்போதும் அணிந்து கொண்டு, நாள்தோறும் அறவழியில் நடந்து, இயன்ற அளவு நல்லறங்களைச் செய்திடுங்கள்; இங்ஙனம் வாழ்பவர் தம் வாழ்நாளில் தமக்கு யாதொரு துன்பமும் வரப்பெறாமல் இம்மையில் இனிது

வாழ்வர் மறுமையிலும் துன்பம் இல்லாத துறக்க நாட்டினை அடைவது உறுதி இவ்வுண்மை சான்றோரின் மெய்க்காட்சியால் உணர்த்தப்பட்டதாகும்.

விளக்கம்

பஞ்சசீலம் உரைக்கும் பௌத்தம், வாய்மை போற்றிப் பொய்ம்மையைப் பழிக்கிறது. வள்ளுவரும் ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரா பொய்யாமை நன்று' என்றும், 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்றும் பேசுவார் வாய்மையின் சிறப்பை வாயாரப் புகழ்வார். வாய்மைக் கதிரோன் முன் வாழ்வில்லா மின்மினிகள் ஏனைய விளக்குகள். இரவில் அல்லது இருளி புறத்தைப் புலனாக்குதல் மட்டுமே அவற்றின் செயல். நெஞ்ச இருளகற்றி நேர்மை வழிகாட்டி வஞ்சமலமெரித்து வாழ்வில் ஒளியூட்டும் வாய்மை விளக்கோ, அல்லும் பகலும் உள்ளும் புறமும் அழகும் உயர்வும் பெறுவதற்கு உதவும். புறவிளக்குகளாற் போக இயலாத அகவிருளையும் போக்கும். அதன்முன் பிறவிளக்குகள் ஒளியிழத்தலில் வியப்பில்லை.

4. "உலகுடன் விளங்க உயர் சீர்த்தி நிலைகொள்ளின்
நிலையில் கதி நான்கின் இடை நின்று தடுமாறும்
அலகில் துயர் அஞ்சின் உயிர் அஞ்சவரும் வஞ்சக்
கொலை ஒழியின் என்று நனி கூறினர் அறிந்தார்"

அறிந்தார், உலகு உயர் சீர்த்தி உடன் விளங்க நிலை கொள்ளின், நிலையில் கதி நான்கின் இடைநின்று அலகில் துயர் அஞ்சினும், உயிர் அஞ்ச வரும் வஞ்சக் கொலை ஒழிமின் என்று நனி கூறினர் என்கிறார்.

கருத்துரை :

மெய்யுணர்வுடைய சான்றோர், "இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் உயரிய புகழினை அடைய வேண்டினாலும், நிலைத்தல் இல்லாத நால்வகைப் பிறப்பின் கட்பட்டுத் தடுமாறும் அளவில்லாத துன்ப நிலைக்கு அஞ்சினாலும் உயிரினங்கள் அஞ்சும்படி நிகழ்கின்ற கொலைத் தொழிலை ஒழித்திடுக" என்கின்றனர்.

விளக்கம் :

புகழ் அடையவும் பிறப்புக்களால் வரும் துன்பம் நீங்கவும் வேண்டும்: வோர், புகழைக் கெடுப்பதும் வினைப்பயனால் விளையும் பிறப்புக்களைக் கொடுப்பதும் ஆகிய கொலையை ஒழிக்க வேண்டும் என்பது கருத்து கொல்லுதல் இம்மை – மறுமை என்னும் இரண்டிலும் துயர்தரும். கொல்லாமை அவ்விரண்டிலும் இன்பம் தரும். கனியிருப்பக் காய்கவர்வர் யாருளர் ?

'அறவினை யாதெனிற் கொல்லாமை, கோறல்
பிறவினை எல்லாம் தரும்'

என்றும், ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்றும் வள்ளுவர் கூறுவதை ஒப்பிட்டு உணரலாம்.

வஞ்சக் கொலை என்று அடை தந்தமையின் நேருக்கு நேர் நின்று வீரமுடன் போர் செய்தலில் விளையும் கொலையை ஒதுக்கினார் எனலாம்.

5. "வேற்கண் மடவார் விழைவு ஒழிய யாம்விழையக்
கோல்கண் நெறிகாட்டக் கொல்கூற்(று) உழையதர
நாற்ப(து) இகந்தா நரைத்தூதும் வந்த(து)
நீத்தல் துணிவாம் நிலையா(து) ஒழிய, இளமையே"

வேற்கண் மடவார் விழைவு ஒழிய, யாம் விழைய, கோல்கண் நெறிகாட்ட, கொல்கூற்று உழையதாம், நாற்பது இகந்தாம்; நரைத்தூதும் வந்தது; இளமை நிலையானது; இனி நீத்தல் துணிவாம் என்கிறார்.

கருத்துரை :

வேல் போன்ற கண்களையும், மடப்பம் என்னும் பண்பினையும் கொண்ட மகளிர் தம்மை விரும்பாமல் புறக்கணித்த போதும், தாம் மட்டும் அவர்களிடம் நாட்டம் கொள்ளும் நிலை வந்துவிட்டது. ஊன்று கோலே வழிகாட்டும் கண்ணாகிவிட்டது. கூற்றுவனிடத்து நெருங்கி நிற்பதாகிய நாற்பதாவது வயதை எட்டியாயிற்று. இறப்பு நெருங்குவதை அறிவிக்கும் தூதரகிய நரையும் வந்துற்றது. இக்கோலங்கள், இளமை நிலைத்திராது என்பதை உணர்த்துகின்றன அல்லவா? இனியேனும் உலகப் பற்றுக்களை ஒழித்துத் துறவை மேற்கொள்வோமாக.

விளக்கங்கள் :

மெய்யுணர்வு பெற்றவன் ஒருவன் தன் நெஞ்சிற்குக் கூறியதாக அமைந்த பாடலிது. உடல் நலத்துடன் உலவி, மகளிர் தம்மை விரும்ப வாழ்ந்த நிலை மாறி, உடல்நலம் குன்றி ஊன்றுக்கோல் துணையாகி மகளிர் தம்மை விரும்பாதநிலை ஏற்பட்டதைச் சிந்தித்துப் பார்த்தால் இளமை என்பது நிலையாது என்ற உண்மை புலனாகும். அதன் பின்னரேனும் மெய்யுணர்தல் வேண்டும் என்கிறது பாடல். பற்றற்றான பற்றினைப் பற்றிப் பற்றுவிடுகவென அறிவுறுத்துகிறது. சீவக சிந்தாமணியில் வரும்;

"மைதிரண்ட வார்குழல் மேல் வண்டார்ப்ப
மல்லிகைமேல் மாலை சூடிக்
கைதிரண்ட வேலேந்திக் காமன் போல்
காரிகையார் மருளச் சென்றார்
ஐதிரண்டு கண்டம் குரைப்பவோர்
தண்டுன்றி அறிவில் தள்ளி
நெற்திரண்டால் போல உமிழ்ந்து நிற்கும்
இளமையோ நிலையாதே காண்"

என்ற பாடலும், நீதிநெறி விளக்கத்தில் இடம் பெறும்.

"நீரிற் குமிழி இளமை, நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் – நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தா(து) எம்பிரான் மன்று"

என்ற பாடலும் இளமை நிலையாமையை உணர்த்துவன.

முதுமையில் பார்வை மங்குவதாலும் நடை தள்ளாடுவதாலும் ஊன்றுகோல் துணைகொண்டு நடப்பர். வழிகாட்டும் செயலை இளமையில் உடல் நலத்துடன் உறைகையில் கண்கள் மட்டுமே செய்யும். இப்போது முதுமையில் வழிநடக்க ஊன்றுகோலும் உறுதுணையாகிறது. எனவே வழியறியத் துணை செய்யும் கோலைக் 'கோற்கண்' என்றார். 'ஆறிலும் சாவு' 'நூறிலும் சாவு' என்பதே அனுபவ உண்மை. எனினும் நூறாண்டுகளை ஓர் எல்லைக் கோடாக்கி மனித வாழ்வு பற்றிப் பேசும் உலக வழக்குப் பற்றி, நாற்பதைக் கடந்த நிலையைக் கூற்று உழையதெனக் குறித்தார். அங்குச் செல்லும் காலம் அண்மையில் வந்துவிட்டதென அறிவிக்க அனுப்பப்பட்ட தூதுவன் போல் நரை வந்ததெனக் கற்பனையுடன் கூறுகிறார் புலவர். தயரதன் செவியருகே நரை தோன்றித் தூது கூறியதாகக் கம்பர் கூறுவது இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

குண்டலகேசி

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாய்க் கருதப்படும் குண்டலகேசியில் நமக்குக் கிடைத்துள்ளவை பத்தொன்பது செய்யுள்களே. அவற்றுள் ஐந்து பாடல்கள் பாடமாக அமைந்துள்ளன. மனம் தூய்மையாக இருந்தால்தான் இன்பம் உளதாகும்; அதுவே உண்மையான நிலையான ஆழமான பேரின்பம். ஏனைய இன்பங்கள் அல்ல; உளபோலத் தோன்றிக் கெடுவன; அவை புறத்த; புகழுமில; எனவே மனத்தூய்மையுடன் இறைவன் பால் ஒன்ற வேண்டும் என்று முதற்பாடல் கூறுகிறது. அவா என்பது அனுபவிக்க அனுபவிக்க அளவிறந்து பெருகுவது நிறைவெய்தினால் நீங்குமெனக் கருதுவது மடமை. துய்க்கத் துய்க்க வளரும் அதனைத் தூய்த்துத் துய்த்து அறுப்போம் எனல் இயலாத ஒன்று. எனவே நெருப்பை நெய்யால் அவிக்க முற்படவேண்டாம் என, நீத்தலின் பெருமை கூறுகிறது இரண்டாம் பாடல். வாழ்நாள் இறுதியில் வரும் கூற்றுவன் ஒருவனையே உயிர்கள் உணர்கின்றன. ஆனால் உண்மையில் நாள்தோறும் நம்மேல் கூற்றுவன் வருகிறான். நாளுக்கு நாள் நம் இளமை தேய்கிறது. இன்புறும் பான்மை குறைகிறது. உடல்நலம் குன்றுகிறது. உணர்வு பொன்றுகிறது. 'மெல்லமெல்ல இல்லாகும்' இவை, அவற்றின் சாவல்லவா? அதனை நாம் உணர்வதில்லை. எனவே கூற்றுவன் கொடுமையை முழுவதும் உணர்ந்து, செல்வமும் யாக்கையும் இளமையும் நிலையாதெனத் தெளிதல் வேண்டும் என்று மூன்றாம் பாடல் மொழிகிறது. குற்றங்கடிதலின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது. நான்காம் பாடல் 'அடுத்தூர்வது அஃதொப்பதில்' என்றுணர்ந்து இடும்பைக்கு இடும்பைபடாமல், இடும்பைக்கு இடும்பை படுத்தல் வேண்டும் என்ற வள்ளுவர் வாக்கினை அடியொற்றி இடுக்கணழியாமை'யின் சிறப்புக் கூறுகிறது ஐந்தாம் பாடல்.

1. "வாயுவினை நோக்கியுள மாண்டவய நாவாய்
ஆயுவினை நோக்கியுளவாழ்க்கையதுவே போல்
தீயவினை நோக்கும்இயல் சிந்தனையும் இல்லாத
தூயவனை நோக்கியுள துப்பரவும் எல்லாம்"

மாண்ட, வய நாவாய் வாயுவினை நோக்கியுள; வாழ்க்கை ஆயுவினை நோக்கியுள; அதுபோல் துப்பரவும் எல்லாம் தீயவினை நோக்கும், இயல் சிந்தனை இல்லாத தூயவனை நோக்கியுள.

கருத்துரை :

பெருமையும் வலிமையும் பொலிந்த மரக்கலங்கள், தாம் இயங்குவதற்குக் காற்றினையே எதிர்பார்த்துள்ளன. உயிர்களின் வாழ்க்கை, அவ்வவற்றிற்கென விதிக்கப்பட்ட வாழ்நாளின் அளவையே நோக்கியுள்ளது. அது போன்றே ஐம்பொறிகளால் உணர்ந்து புலன்களால் உணரப்படும் நுகர்ச்சிகளும் பிறவுமாகிய நன்மைகள் எல்லாம். தீவினையை நயந்து நோக்கும் நோக்கம் அத்தீவினையில் ஈடுபடுத்தற்குரிய சான்றோனையே, தாம் அடைதற்குரிய குறிக்கோளாக எதிர்நோக்கியுள்ளன.

விளக்கம் :

பாய்மரக் கப்பல்களின் இயக்கம் காற்றைச் சார்ந்தது. காற்று இன்றேல் அவை நகரா. மேலும், அவை இயங்க வேண்டிய திசையில் அவற்றை இயக்கும் காற்று வரும்வரை அவை காத்திருக்கிறோம். அதுபோல் பிறவிப் பெருங்கடல் கடந்து பிறவாமைக் கரையடையப் பேரின்பத் திசைநோக்கி இறைவனின் பெருங்கருணைக் காற்று வீசுவதை உயிர்கள் எதிர்பார்க்கின்றன. உயிர்களின் ஆயுட்காலம் ஊழ்வகுத்தது. எனவே அவை தம் வாழ்நாள் முடிவை நோக்கியுள்ளன. மனித அறிவின் குறிக்கோள் வாலறிவன் நற்றாள் அடைதல். எனவே அது தூயவனையே நோக்கியுள்ளது.

அறிவும் அவன்; அறிவானும் அவன்; அறிவிப்பானும் அவன் – அவன் அருள்தான் அவன் தாள் வணங்கும் மனப்பக்குவம் கூடக் கைவரப் பெறும். யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரானாய் அமையும் அந்தச் சிந்தையாலும் அறிவரிய செல்வனை வந்தனை செய்து மனத்திலிருந்தி வாழ்த்தி வணங்குதலே வாழ்நாள் வழி அடைக்கும் கல் என்பதனை அறிவிக்கிறது இப்பாடல். 'யாமிரப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல; நின் அடியிணைகளே' என்ற கருத்தமைந்த பரிபாடலை நினைவூட்டுவதாய் அமையும் இப்பாடல்.

"பொய்குறளை வன்சொல் பயனிலவென்(று) இருநான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து – மெய்யில்
புலமைத்தும் காத்து மனமா சகற்று
நலமன்றே நல்லா(று) எனல்"

என்று.

"மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத் தெவையும் தீயவேயாகும் – எனைத்துணையும்
தீயவே செய்யினும் நல்லவாக் காண்பவே
மாசில் மனத்தினவர்"

என்றும் வரும் நீதிநெறி விளக்கப்பாடல்களையும், சிற்றினம் சேராமை வேண்டுமெனக் கூறும் குறட்பாக்களையும் நினைவூட்டும்.

2. "வகையொழில் தோள்கள் என்றும் மணிநிறக் குஞ்சி என்றும்
புகழ்எழ விற்கற்பிக்கின்ற பொருளில் காமத்தை மற்றோர்
தொகையெழும் காதல் தன்னால் துய்த்தியாம் துடைத்தும் என்பார்
அகையழல் அழுவத் தின்னை நெய்யினால் அவிக்கலாமோ ?

வகை எழில் தோள்கள் என்றும், மணி நிறக்குஞ்சி என்றும் புகழ்எழ விகற்பிக்கின்ற பொருள் இல் காமத்தை, மற்று ஓர் தொகை எழும் காதல் தன்னால் துய்த்து யாம்துடைத்தும் என்பார். அகைஅழல் அழுவம் தன்னை நெய்யினால் அவிக்கலாமோ ?

கருத்துரை :

இலக்கணங்களிற் கூறப்படுவதற்கியைய வகையாக அமைந்த அழகுடைய தோள்கள் என்றும், நீலமணி போன்ற ஆழ்ந்த கருநிறம் உடையது இவன் குடுமி என்றும், மிகையாகவும் இல்லாத

பெருமையாகவும், உறுப்பு நலன்களைப் புகழ்ந்து கூறுமாறு செய்யவல்லது. காமவுணர்வு உண்மையில் பற்றுடையார்க்கு ஒரு சிறிதும் பொருள் இல்லாததாய்த் தோன்றும் அத்தன.கய காமவுணர்வின் வழிச்சென்று பெறும் இன்பங்களை மிகுதியாகத் தம்முன் எழும் காமக்கிளர்ச்சியால் எய்தி நிறைவடைந்து உள்ளம் சலித்துப் பின்னர் அக்காமவுணர்வை அழிப்போம் என்று கூறுபவர் கூற்று, எரிகின்ற காட்டுத்தீயை நெய்யூற்றி அணைக்கிறோம் என்று சொல்வதற்கு ஒப்பாகும்.

விளக்கம் :

அழகென்பது காண்பவர் கண்ணில் உள்ளது. கண் என்பது வெறும் கருவிதான். கண்ணின் விழித்திரையில் விழும் நிழற்படத்தை இன்னது என்று உணர்வது கட்புலனாகிய அறிவு. அறிந்ததை அனுபவிப்பது, உணரவல்ல மனம். எனவே மனத்திற்கு விருப்பமான பொருள் கண்ணிற்கு அழகாய்த் தோன்றல் இயல்பு காதலுக்குக் கண்ணில்லை என்றும் சொல்வதுண்டு. அக்காதல் வயப்பட்டுக் கண்ணிழந்தோர்' அன்பு மிகுதியால் அளவுமீறிப் பாராட்டுவது உண்டு. உணர்ச்சி நிலையில் உணர்ந்தோர்க்கு மட்டுமே பொருளற்றதாய் நகைப்பிற்கிடமாகத் தோன்றும். ஆங்கிலத்தில் 'இனிய பொருளில் கூற்றுக்கள்' என்பர். அவ்வுரைகளில் இடம் பெறும் புகழ் மொழிகள் இனியவை கருதிய இல்லது கூறல் ஆதலின் 'புகழ் எழ விகற்பிக்கின்ற பொருளில் காமம்' என்கிறார் புலவர்.

இப்பகுதிக்கு விளக்கவுரை கூறும் பெருமழைப் புலவர் சோமசுந்தரனார், "என்பினை நரம்பிற் பின்னி உத்திரம் தோய்த்து இறைச்சி மெத்திப்புள்புறம் தோலைப் போர்த்து மயிர் புறம்பொலிய வேய்ந்திட்டு, ஒன்பது வாயிலாக்கி உன்பயில் குரப்பை, என இவ்வுடம்பின் இயல்பை, உள்ளபடியே, உணராமல், காமத்தான் மதிமயங்கி வகை எழில் தோள், என்று மணிநிறக்குஞ்சி என்றும் புகழ் எழ விகற்பிக்கின்ற என்றாள். இங்ஙனம் விகற்பித்தற்குக் காமமே காரணமாதலின் விகற்பிக்கின்ற காமம் என்றாள்" என விரித்துரைக்கிறார்.

மனித உடலுறுப்புகளின் இலக்கணத்தை 'சாமுத்திரிகா இலட்சணம்' என்பர். என்னென்ன உறுப்புக்கள் எந்த அளவில் என்ன வண்ணத்தில் எவ்வாறு எதையொத்து அமைந்திருக்க வேண்டுமென்று வகைப்படுத்திக் கூறும் இலக்கணப்படி அமைந்திருப்பதால் கூறுவதால் 'வகை எழில் தோள்கள்' எனக் குறிப்பிட்டார். நரை, மூப்பிற்கு இலக்கணம், கருமையின் ஆழம் இளமைக்கு அடையாளம். எனவேதான் குஞ்சியின் மணிநிறம் அழகெனப் போற்றப்படுகிறது. காமந்துய்ப்பதற்குரிய பருவம் இளமையாதலின் முன்னிற்போன் அதற்கேற்ற இளையவன் என்பதை 'மணிநிறக்குஞ்சி' என்ற பாராட்டுரை உணர்த்தும்.

கூறுவோர்க்கும் கேட்போர்க்கும் கூட அந்தக் கணப்பொழுது மட்டுமே பொருளுடையதாய்க் கொள்ளார் அன்றோ ? எனவேதான் 'பொருளில் காமம்' என்றார்.

காமம் கடக்கற்பாலது என்று உணர்வோர் அதனை மனம் நிறையும்வரை அனுபவித்தபின் விடுக்கலாம் என்று எண்ணுவதன் மடமையை இப்பாடலில் உணர்த்துகிறார் ஆசிரியர். 'நாளை முதல்' என்பார்க்கு அவ்வேளை வருவதேயில்லை என்பதை உணர்ந்தன்றோ, இன்றே செய்க என்றனர். 'அன்றறிவாம் என்னாது அறம் செய்க என்றதன் அடிப்படையும் அதுதானே' துய்க்கும் எதையும் துறக்க எண்ணுவோர் துவரத் துறத்தல் கருதின் அன்றே செய்ய வேண்டும். பொதுவாகவே தீயனவற்றை விடாது பற்றும் இயல்புடைய மனிதமனம், விருந்தாகும். காமத்தை அருந்துவதில்

அலுப்படைவது எந்நாள்? மகாபாரதக் கதையில் வரும் யயாதி மன்னன், சுக்கிராச்சாரியார் சாபத்தால் பெற்ற மூப்பினைத் தனக்காக ஏற்றுக் கொண்ட மகனிடம் அவனிடம் பெற்றிருந்த இளமையைத் திருப்பித் தருகையில், எத்தனை ஆண்டுகள் எவ்வளவு அனுபவிப்பினும் காமவின்பத்தில் மனித மனம் கொள்ளும் பற்று குறைவதோ மறைவதோ இல்லை என்பதை உணர்ந்து கூறும் உரை இதனை துறக்க எண்ணுதல் தீயை நெய்கொண்டு அவிக்க முற்படுதற்கு ஒப்பாகும் என்கிறார் ஆசிரியர். நெய்பெய்தீ நிமிர்ந்தோங்கி வளர்வதுபோல் பெருகுதலன்றிக் காமவுணர்வு அருகுதல் இல்லை என்பதை உணர்ந்தும் இப்பாடலில் வரும் உவமையை வள்ளுவர் காமத்துப்பாலில் பிறிதொரு சூழலில் பயன்படுத்தியுள்ளார். ஊரார் அலர் பேசுவதால் அஞ்சித்தன் களவொழுக்கம் குறையாது என்று கூறவரும் தலைவி.

"நெய்யினால் எரிநுதுப்போம் என்றற்றால் கௌவையங்
காமநுதுப்டோம் எனல்"

என்கிறாள்.

இக்கருத்தை விளக்கவந்த உரையாசிரியர், "அவிக்கலாமோ என்னும் வினா, அவிக்கவொண்ணாது என்னும் அதன் எதிர்மறைப் பொருளை வற்புறுத்தி நிறுத்தி நின்றது. காமத்தை நுகர்ச்சியால் அவித்தல் கூடாது. நுகர்தற்குரிய பொருள்களின் பொல்லாங்கினை இடையறாது நினைந்துகாணுமாற்றால் அவற்றின் இழிதகைமை உணர்ந்து கொண்டால் அவற்றின்பால் செல்லும் அவா அறும் என்பது பௌத்தமதக் கோட்பாடு. இதனை அசுப்பாவனை என்பர். அசுப்பாவனையாவது – துறவி யானவன், தன் உடம்பு பலவகை இழிந்த பொருள்களால் ஆக்கப்பட்டதென்றும் சாணியின் குவியலில் தோன்றி வளரும் புழுக்கள் போல் கருப்பையில் உயிர்கள் உண்டாகின்றதென்றும், மலம் கழிக்குமிடம் போல் மனித உடல் தூய்மையின்மையின் இருப்பிடமாயுள்ளதென்றும், அருவருப்பான அழுக்கின் கசிவுகள் இதன்கண் அமைந்த ஒன்பது வாயிலினும் இடையறாது பெருகுகின்றன என்றும், அங்கணம் போல் வெறுத்தற்குரிய நீ நாற்றத்தையே வெளிப்படுத்துகின்றது என்றும் மறவாமல் நினைத்திருப்பது ஆகும்.

அசுபமாகப் பாவனை செய்து கொள்வது அசுப்பாவனை. இதனை மணிமேகலை,

"அறித்தம் துக்கம் அநான்மா அசுசியெனத்
தனித்துப் பார்த்துப் பற்றுத் திடுதல்"

என்று கூறும்.

3. "பாளையாந் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாந் தன்மை செத்தும் காமறு மிளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு மூப்புமாகி
நாளுநாட் சாகின்றாமா மைக்குநா மழாத தென்னோ"

பாளையாம் தன்மை கடந்தும், பாலனாம் தன்மை கடந்தும், காழுறும் இளமைப்பருவம் கடந்தும் இங்ஙனம் ஒவ்வொரு பருவமும் அவ்வப்பருவநிலை கடந்துவரும் இயல்பினை எண்ணினால் நாளுக்கு நாள் செத்துவரும் நமக்கு நாம் அழாமல் இருப்பது ஏன்?

கருத்துரை :

நம் உடல் நம் தாயார் வயிற்றில் கருவாகியிருந்த நிலையிலிருந்து இறந்தும், அதன் பின்னர் எய்திய மழலைப்பருவம் இறந்தும், அதனை அடுத்து எய்திய காளைப்பருவம் இறந்தும், தொடர்ந்து காமுற்று மகளிரை - அடைதற்குரிய இளமைப் பருவமும் இறக்க இப்போது இந்நிலை அடைந்துள்ளோம். இனி, இதற்குமேல் மூப்பும் அடையவிருக்கிறோம். இந்நிலையில் பிறர் சாவுக்கு அழுகின்ற நாம் ஒவ்வொரு நாளும் இறப்பினை எய்தும் நமது சாவிற்கு அழாமல் இருப்பதன் காரணம் யாது ?

விளக்கம் :

'சாதலின் இன்னாதது இல்லை' என்றார் வள்ளுவர். கொடிய அச்சாவு என்றுவரும் எப்படி வரும் என்பது எவர்க்கும் தெரியாது. பிறர் இறக்கையில் அழுகிறோம், இரங்குகிறோம். ஆனால் நாமறியமலே நிகழும் மற்றொரு சாவும் உண்டு என்பதை நம்மில் பலர் உணர்வதே இல்லை. பகலொன்று பிறக்கையில் இரவொன்று இறக்கிறது. வைகறை புலருந்தோறும் வாழ்வில் ஒருநாள் முடிகிறது. வளர்கின்ற பருவந்தோறும் கருநிலை முடிகிறது. தவழ்நிலையின் சாவில் தளர்நடைநிலை பிறக்கிறது. இளமை எய்துங்கால் குழவிநிலை மறுகிறது. வாழ்கின்ற காலம் முழுவதும் ஒருநிலை இறக்க மறுநிலை பிறக்கிறது. இங்ஙனம் நாள்தோறும் நமக்குள் சாவு நிகழ்வதை உணராமல் பிறர் சாவுக்கு இரங்கும் நம்நிலையே இரங்குவதற்குரியது என்கிறார் ஆசிரியர் இங்ஙனம் கூறுவதன் காரணம், பொன்றுங்கால் துணையாகும் அறத்தை அன்றறிவாம் என்னாது அன்றே செய்யவேண்டும் என்பதை உணர்ந்துவதுதான்.

"தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழிலாளன் கொன்றனன் குவிப்பஇவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ ?"

என்ற மணிமேகலைப் பகுதியும்

"கூற்றுவன் கொடியனாகிக் கொலைத் தொழிற் கருவிசூழ்ந்து
மற்றரும் வலையை வைத்தான் வைத்ததை அறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியில் உலக நோக்கி
ஆற்றுப் போதல் கேற்றாம் அளிமோஓ பெரியமே காண்"

என்ற சீவகசிந்தாமணிப் பாடலும் இக்கருந்தே உரைப்பன.

"வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகல் வைகுமென்று) இன்புறுவார்

வைகலும் வைகல் தம் வாழ்நாள் மேல் வைகுதல்

வைகலும் வைத்துணராதார்"

என்ற பாடல், பாடப் பகுதிச் செய்யுட் கருத்தையே சொல் நயத்துடன் கூறுகிறது. "ஒவ்வொரு நாள் புதிதாகப் பிறக்கும் போதும் பழைய நாள் இறக்கிறது. எனவே பிறப்பும் இறப்பும் மாறிமாறி வருமென்ற உண்மைநாள் தோறும் உணரப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அறியாமை வயப்பட்ட மனிதரோ நாள்தோறும் தம் வாழ்நாள் சுருங்கி வருவதை உணராமல் இன்புற்றிருப்பார்கள் என்பது அப்பாடலின் கருத்து.

குண்டலகேசியிலேயே கூற்றுவன் கொடுமையை எடுத்துரைப்பனவாக மேலுமிரண்டு பாடல்கள் உள்ளன. அரவும் அரக்கரும் கூடத் தம்மொடு சிலகாலம் பழகியவரிடத்து அன்புகொண்டு அவர்க்குத் தீமைசெய்யாமல் அகலும். ஆனால் கூற்றவனோ, நாள்தோறும் அவனொடு தொடர்புடையராய் அவன் ஆணைவழி ஒழுகுகின்ற மனிதரிடத்துச் சிறிதும் இரங்குவதில்லை. மற்றொரு பாடல் போர்க்களம் சென்று மீண்டு வருதலேனும் கூடும். இந்தக் கூற்றுவனிடமிருந்து யாரும் தப்புதல் முடியாது என்கிறது.

இறப்பு உறுதி என்பதை மறக்காமல் சிறப்புத் தரும் செயல்களில் மனிதர் ஈடுபட வேண்டும் என்ற நோக்கமே கூற்றவன் கொடுமையைக் கூற காரணம்.

4. "மண்ணுளார் தம்மைப் போல்வார்

மாட்டதே யன்று வாய்மை

நண்ணினார் திறத்தும் குற்றம்

குற்றமே நல்ல வாகா

விண்ணுகர் புகழ்தற் கொத்த

விழுமியோ னெற்றி போழ்ந்த

கண்ணுளான் கண்டந் தன்மேற்

கறையை யார் கறையன்றென்பார்"

விண்றுளார் புகழ்தற்க ஒத்த விழுமியோன் நெற்றி போழ்ந்தகண் உளான் கண்டம் தன்மேல் கறையைக் கறையன்று என்பார் யார்? மண்ணுளார் தம்மைப் போல்வார் மாட்டதேயன்று வாய்மை நண்ணினார் திறத்தும் குற்றம் குற்றமே நல்ல ஆகா.

கருத்துரை :

வானுலகில் வாழ்கின்ற தேவரும் புகழ்ந்து பாராட்டுதற்கு ஏற்ற சிறப்பினையுடையவனும், நெற்றியைப் பிளந்து தோன்றிய நெருப்புக் கண்ணை உடையவனும் ஆன சிவபெருமானுடைய கழுத்தில் உள்ள மறுவினைக் கறையன்று என்று மறுப்பவர் யாருளர்? அதேபோல், குற்றம் என்பது இவ்வுலகில் வாழும் மக்கள் போன்றவரிடத்து மட்டும் உண்டாவதன்று; மெய்யுணர்வு பெற்ற மேலோரிடத்துத் தோன்றினும் குற்றம் குற்றமாகவே கொள்ளப்படுமேயன்றி அவர் மேலோர் என்பதற்காக நல்லதாகிவிடாது.

விளக்கம் :

எத்தகையோரும் தம்மிடத்து குற்றம் நிகழாபடி விழிப்புடனிருத்தல் வேண்டும் என்பதை உணர்த்தும் பாடல்.

வாய்மை நண்ணினார் என இப்பாடலில் குறிக்கப்படுவர் யார் என்பது தெளிவாகவில்லை. மண்ணுளார் நம்மைப் போல்வாரினின்றும் வேறுபடுத்திக் கூறப்படுவதால் இவர் தோராதல் கூடுமென உரையாசிரியர்க் கருதுகின்றனர். தம்மைப்போல்வார் என்றது ஏன்? தம் யாரைக் குறிக்கும் என்பது புலனாகவில்லை. வாய்மை நண்ணினார் என்பவர் மண்ணுலாரினின்று மாறுபட்டவராயின் மண்ணுளார் பொய்ம்மை நண்ணினார் எனக் கொள்ளலும் பொருத்தமாக இல்லையே. அவர் திறத்தும் என்ற உயர்வு சிறப்பும்மைவேறு தரப்படுகிறது.

நூல் பௌத்த காப்பியம் :

பௌத்தர் நூல்களில் பிற சமயக் காழ்ப்பு பெரிதும் இடம் பெறல் உண்டு. சைவப் புராணங்களில் காணப்படும் கதைகள் பல ஜைனப் புராணங்களிலும் உண்டு. திரிசூலம் ஏந்தி யானைத் தோலுடுத்த சிவன் ஜைனர்க்கும் உண்டு. மறைமுகமாகச் சைனத்தை இழித்துரைக்கும் வஞ்சப் பழிப்பணி வாய்ந்த பாடலோ என்ற ஐயம் எழுகிறது. விண்ணுளார் புகழ்தர் கொத்த விழுமியேன் என்று அவனை ஏத்தியுரைப்பது அங்கதம்மா? உயர்ந்தோர்கண் காணப்படும் குற்றம் பெரிதும் கடித்துரைக்கப்படுமாதலின் அவனை உயர்த்திக் குற்றத்தின் கடுமையையும் உயர்த்தல் நோக்கமோ? முன்னும் பின்னுமுள்ள செய்யுள்களின் துணையுடன்தான் காப்பியங்களில் பொருட்பொருத்தம் காணமுடியும். சிதறிய அலைத் துளிகளின் சேகரிப்பில் அவர் சிந்தனைக் கடலாமுல் காண்பதெப்படி கண்ணுளான் கண்டக்கறையை கூறியமைக்க வேறொரு காரணமும் கூறலாம். சைவர் புராணப்படி பாற்கடலில் அமுது கடைந்த போது முதலில் நஞ்சுவர அதன் வேகத்திற்காற்றாத தேவரையும் அசுரரையும் காக்கும் பொருட்டுச் சிவன் அதை விழுங்கப் பார்வதி தன் ஆற்றலால் அது கழுத்தளவில் நிற்குமாறு செய்ததாகவும் அந்நஞ்சே கறையெனவும் கூறுவர். அவ்வாறாயின் ஆலமுண்ட நீலகண்டம் அருளின் திறமாதல். அங்ஙனம் பிறர்க்கென முயன்றதில் பெற்றதாயினும் கறை கறையாகவே கருதப்படும் என்று குற்றங்கடிதலின் உயர்வைக் கூறச் சொல்லியிருக்கலாம், ஈன்றாள் பசிகாண்பாளாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை என்றாற்போல,!

குற்றம் கடிதல் பற்றி வள்ளுவர் ஓர் அதிகாரமே இயற்றியுள்ளமை ஈண்டு ஒப்புநோக்கி நினைவு கூர்தற்கரியது.

5. "மறிப மறியு மலிர்ப மலிரும்
பெறுப பெறும் பெற்றிழப்ப விழக்கம்
அறிவ தறிவா ரழுங்கா நவவா
ருறுவ துறுமென றுரைப்பது நன்று"

மறிபமறியும், மலிர்ப மலிரும் பெறுபபெறும்; பெற்று இழப்ப இழக்கும்; அறிவது அறிவார் அழங்கார் உலலார் உறுவது உறும் என்று உரைப்பது நன்று".

கருத்துரை :

அழியக் கூடியவை அழிந்தே தீரும். பெறுதற்குரியன பெறப்பட்டே தீரும். இழத்தற்குரியன இழக்க வேண்டும். எனவே அறிவுடையோர் அழிந்ததற்காக அவலம் கொள்ளார் பெற்றதற்காகப் பெருமகிழ்ச்சியும் அடையார். வருவது வந்தே தீரும் என்ற உணர்வுடன் வாழ்வது நல்லது.

விளக்கம் :

ஊழின் வலிமையை உணர்த்தும்பாடல் பெற்றோம் எனப் போற்றாதார் அற்றேம் என்று அழுங்கலும் இல்லை. உற்றதற்கு உவப்போரே குற்றதற்கு இரங்குவார். இரண்டுமற்ற சமநிலை – ஸ்திதப் ப்ரக்ஞநிலை வேண்டும் என்கிறது பாடல்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் எனத் தொடங்கும் சங்கப்பாடல், தீதும் நன்றும் பிறர் தரவருவதில்லை. நமக்கு நாமே கொள்வனவாகும். சாவும் புதிதில்லை. வாழ்வது இனிதென்று மகிழ்தலும் வேண்டாம். வாழ்வு கொடிதென்று வெறுக்கவும் வேண்டாம். நீர் வழியே செல்லும் தெப்பம் போல் வாழ்வழியே செல்வது உயிரென்று உணர்ந்தவர்கள். பெரியோர் என யாரையும் வியத்தலும் செய்யார். சிறியோர் என யாரையும் இகழ்தலும் செய்யார், என்று கூறுவது ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது. அறத்திற்கு மட்டுமல்ல மறத்திற்கும் இந்நிலை உண்டெண்பது, பாண்டியன் தலையாலங்கனத்துச் செறவென்ற நெடுஞ்செழியனை,

"..... வயின்வயின்
உடன்று மேல் வந்தவம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே, அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்து நிலம்சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே"

எனப் பாராட்டும் திறத்தில் புலனாகும். குண்டலகேசி காட்டும் மனநிலையுடன் இராமனைக் கம்பர் படைத்துள்ளார்.

"மெய்த் திருப்பதம் மேவென்ற போதினும்
இத்திருத் துறந்(து) ஏகென்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருத்த முகத்தினை உன்னுவான்"

என்ற பாடலில் அதைக் காட்டுகிறார்.

இந்நூலில் அடுத்துவரும் பாடலும் இடுக்கண் அழியாமை வேண்டும் இன்றே இயம்புகிறது.

"வேரிக் கமழ்கார் அரசன்
விடுகென்ற போழ்தும்

தாரித்தல் ஆகா வகையால்
கொலை சூழ்ந்தபின்னும்
பூரித்தல் வாடுதல் என்று இவற்றால்
பொலிவின்றி நின்றான்
பாரித்த(து) எல்லாம்
வினையின் பயன் என்ன வல்லான்

என்று மன்னனாற் சிறைப்படுத்தப்பட்ட ஒருவன் விடுதலை என்று கேட்டபோது இரண்டையும் வினைப்பயன் எனக்கருதி ஒன்றாகவே ஒற்றான் என்கிறது.

யசோதர காவியத்தில் மாரிதத்தன் என்னும் மன்னவன் மாரி என்னும் தெய்வத்திற்குப் பிடித்து வந்த அபயநசி. அபயமதி என்னும் அண்ணனும் தங்கையும் தம்மைப் பலியிடப் போதுதறிந்தும் அமைதியுட னிருந்தல் கண்டு வேந்தன் வியந்து வினவியபோது,

"அடுக்குவ(து) அடுக்குமானால்
அஞ்சுதல் பயனின்(று) என்றே
நடுக்கம(து) இன்றி நின்றாம்
நல்லறத் தெளிவு சென்றோம்"

என்ற விடை வருகிறது.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல, உய்த்துச்
சொரினும் போகாதம்"

என்றும்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ(து) எவன்"

என்றும் வள்ளுவர் கூறுவதும் அதுவே.

பெரிய புராணம்

கண்ணப்ப நாயனார் புராணம்

சேக்கிழார் எழுதிய பெரிய புராணம் சைவசமயத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாகும். இந்நூல் அரிய செயல்களைச் செய்து பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாற்றைக் கூறுகிறது. அறுபத்து மூவராம் தனியடியார்களும் ஒன்பதின்மராம் தொகையடியார்களும் சேர்த்து எழுபத்திருவர் சிவனடியார் ஆவர். இந்நூல் நீண்ட புராணம், பெருமை பெற்ற புராணம் என்ற சிறப்பிற்குரிய நூல். இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். இது சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இது இரு காண்டங்களும் பதின்மூன்று சருக்கங்களும் (உட்பிரிவுகளும்), 4253 விருத்தப்பாக்களும் கொண்டது.

இந்நூல் தில்லை நடராசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. அவராலேயே 'உலகெலாம்' என்ற தொடர் அடி எடுத்து கொடுக்கப்பட்டது என்பர். இத்தொடர் இந்நூலின் முதல் நடு இறுதி ஆகிய மூன்றிடங்களிலும் அமைந்துள்ளது. நாயன்மார்களின் பக்திச் சுவையைப் பிழிந்து காட்டும் சேக்கிழாரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று புகழ்ந்துள்ளார்.

சேக்கிழார் சோழ மன்னன் அநபாய சோழனிடம் அமைச்சராக இருந்தவர். அருண்மொழித் தேவர் என்ற பெயருடையவர். இவரது காலம் கி.பி. 12 ஆகும். சிவத் தொண்டர்களின் புகழ் பரப்பிய காரணத்தால் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற சிறப்புப் பெயரும் பெற்றார்.

பெரிய புராணத்தில் நமக்குப் பாடமாகக் கண்ணப்ப நாயனார் புராணத்திலிருந்து முப்பது பாடல்கள் அமைந்துள்ளன. வேடர் குலத்தில் பிறந்த திண்ணனார் சிவபெருமானாராகிய திருக்காளத்தியப்பரிடம் ஆறா அன்பு கொண்டு, தம் கண்களையே அவருக்கு அகழ்ந்து கொடுக்க முற்பட்டு அவரருள் பெற்றார். திண்ணனார் என்ற கண்ணப்பரின் ஆழ்ந்த பக்தியைத் திருக்காளத்தியப்பர் சிவகோசரி என்ற முனிவருக்கு உணர்த்தும் நிலையில் இப்பகுதி அமைந்துள்ளது.

திண்ணனாரின் பேரன்பைக் காளத்தியப்பர் எடுத்துரைத்தல் (பாடல்கள் 1-8) :

அன்றிரவில் அருள் முனிவராம் சிவகோசரியாரின் கனவில் மின்னல்போல் விளங்கும் சடைமுடியுடைய வேதியராம் திருக்காளத்திநாதர் எழுந்தருளி "நீ அவனை வலிய திறலுடைய வேடுவன் என நினையாதே. அவனது நல்ல செயலை நாம் சொல்லிக் கேட்பாயாக" என்றார்.

"அவனுடைய வடிவம் முழுவதும் நம்மிடத்து வைத்து அன்பு மயமேயாகும். அவனுடைய அறிவு முழுவதும் நம்மையறியும் அறிவேயாகும். அவனுடைய செயல்கள் எவையேயாயினும் அவையெல்லாம் நமக்கினியனவேயாகும். அவனுடைய நிலை இத்தன்மையுடையது நீ அறிவாயாக." என்று அருள் மிகுதிப்பாட்டுடன் கூறினார்.

"அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாற்றிநீ என்றருள் செய்தார் "

"இம்மலையில் வந்து அவன் செய்கின்ற பூசனைக்கு முன்பு என்மேல் அன்புற (நீர்) இட்ட மெல்லிய மலர்களை அன்பால் அவன் நீக்கினான். விரும்பத்தக்க அன்பு வெள்ளம் பெருகியது என்னுமாறு வீழ்ந்த அவனது செருப்பின் தன்மை என்னுடைய இளங் குமரனாகிய முருகனது சிவந்த அடியினும் சிறப்புடையது.

"உருகிய அன்பானது இடைவிடாமல் நிறைந்த அவனது உருவென்ற பொங்கிய கொள்கலத்தினின்றும் பெருமையுடைய இனிதே விளங்கி ஒழுகுமாறு உள்ளது. ஆதலால் ஒப்பற்ற சனு என்ற முனிவனின் செவியிலிருந்து உமிழும் உயர் கங்கையின் முதன்மை வாய்ந்த தீர்த்தப் புனல் நீரினும் அவன் வாயால் உமிழும் புனல் நீர் எனக்குத் தூய்மையானதேயாகும்.

"இம்மலை வந்து என்னை அடைந்த வேடன் தன் இயல்பால் உண்மையாக அன்பு மலர் விரிந்தது போல் விழுவதால் செம்மலர்மேல் வீற்றிருக்கும் பிரமன் திருமால் முதலான தேவர்கள் வந்து அணி செய்யும் எம்மலரும் அவன் தலையால் இடும் மலர்போல் எனக்குப் பொருந்தாது."

"வெப்பமான கனலில் பதமாக வெந்ததோ என்னுமாறு அன்பால் கனியும் மனத்து இனிமையால் நைந்து போகுமாறு மென்று தருவதால் வேத அந்தணர் எனக்குத் தரும் அவிப் பொருளினும் எய்யும் வில்லால் அவனிட்ட ஊன் எனக்கு இனிது".

"நிலைபெற்ற சிறப்பான வேதமொழிகள், பெருமுனிவரெல்லாம் மகிழ்ந்துரைக்கும் இனிய மொழித்துதிப்பாடல்கள், மந்திரங்கள் இவற்றைக் காட்டிலும் என் முன்னிருந்து அவன் தன் முகமும் அகமும் மலர்ந்தும் நெகிழ்ந்தும் அன்பினாலேயே நினைந்து என்னையே பேசும் பொருள் விளங்காப் பேச்சே நல்லதாகும்".

"நாளைக்கு நீ நம்பக்கல் ஒளிந்திருந்தாயாகில் அவனுடைய செயல்களை நாம் காட்ட, என் மீது அவனது அன்பின் தன்மையைக் காண்பாயாக. உனது மனக்கவலை ஒழிவாயாக" என்றெல்லாம் பெருமுனிவராகிய சிவகோசரியாருக்கு அருளிச் செய்தார் திருக்காளத்திநாதர். பிறகு கங்கையை அணிந்த சடைமுடியாராகிய அச்சிவபெருமான் மறைந்தருளினார்.

குறிப்பு :

வேடுவனான திண்ணனின் பக்திச் சிறப்பைச் சிவகோசரி முனிவருக்குக் காட்ட முற்பட்ட திருக்காளத்தியப்பர் அவரது கனவில் தோன்றிக் கூறினார். தம்மேல் திண்ணனின் பாதம் பட்ட உணர்வு முருகக் குமரனின் பாதம் பட்டு ஏற்படும் உணர்வினும் சிறப்பானதாக இருந்தது என்றார். அவனது வாய் தம் மேல் உமிழும் நீர் கங்கையினும் சிறப்புடையது என்றும் புகழ்ந்தார். அவனிடும் அன்பு மலர் பிரமன் முதலிய தேவர்கள் இடும் மலரினும் உயர்ந்தது என்றார். சாதாரண வேடுவனை மிகவும் சிறப்பிப்பதற்குக் காரணம் அவனது ஆழ்ந்த இறையன்பேயாகும்.

மறையவர்கள் வேள்விமூலம் அவிப்பொருளைத் தேவர்களுக்கு இடுவதுபோல் திண்ணனார் தம் வாய்மூலம் பதம் பார்த்து ஊனை இறைவனுக்கு அளித்ததாகப் பொருள் கொள்ளலாம். பொருளோடு கூடிய அர்ச்சனைகளைக் காட்டிலும் பொருள் விளங்காவிடினும் அன்பால் அமையும் வேடன் பேச்சு வேண்டத்தக்கதாகும் என்று காளத்தியப்பர் கூறினார்.

சிவகோசரியார் மறைந்து நிற்றல் (9-10)

மேற்கொண்ட தவத்தில் சிறந்த பெருமுனிவராகிய சிவகோசரியார் கனவிலிருந்து விழிப்படைந்து கனவுப் பொருளை உணர்ந்து விடியும்வரை இரவில் தூங்காதவராகினார். மனத்தில் மிக்கஅற்புதமும் அதனால் வரும் அச்சமும் கொண்டவராய் இருந்தார். வேகமான குதிரை பூண்ட தனித்தேரின்மேல் தோன்றும் சூரியனின் கதிர்கள் தோன்றின.

முன்னாள்போல் வந்து திருமுகலில் புனலில் மூழ்கித் திருக்காளத்தியப்பர் கனவில் அருள் செய்த தன்மையைப் பலமுறை நினைந்தார் சிவகோசரியார். நிலைபெற்ற திருக்காளத்தி மலையில் ஏறி முன்பு போல் அக்கடவுளைப் பூசித்து பின்புறமாக ஒளித்திருந்தார்.

குறிப்பு

சிவகோசரியார் மனதில் தோன்றிய அற்புதம் என்பது வேடராம் திண்ணனாரின் பெருமையும், அதனை இறைவனே அறிய வைத்த அருமையும் ஆகும். வேடரது தீயசெயல் இப்படியும் சிவபெருமானுக்கு இருந்ததோ என்ற ஆச்சரியம், சாதாரண வேடர் இறைவனால் பாராட்டப்படும் நிலை அடைந்தாரே என்ற ஆச்சரியம் அற்புதம் என்பதாகும் எனவும் கொள்ளப்படும்.

திண்ணனார் பூசனைக்குப் பதற்றத்துடன் வரல் (11 -13)

இறைவனைக் கண்ட ஆறாம் நாளில் இரவு நீங்கிய அதிகாலையில், அருமறை முனிவராம் சிவகோசரியார் வருதற்கு முன்னர், கருமுகில் போல் நின்ற கண் துயில் கொள்ளாத, வில்லை ஏந்திய திண்ணனார், அவ்விறைவனின்றும் நீங்கி, ஊனமுதம் தருதற்காகப் பெரிய வேட்டையாடினார்.

நிகரற்ற ஊன்அமுதையும், நல்ல திருமஞ்சன நீரையும் சென்னியில் ஏறும் புதிய மலர்களையும் வெவ்வேறாக அமைத்து, தெளிந்து தேறுவார்க்கு அமுதம் போன்றவரும் திருக்காளத்தியில் எழுந்தருளியவரும், கங்கைச் சடையாரும் ஆன சிவபெருமானை அடைய வந்தார்.

"இவ்வளவு நேரம் தாழ்த்து விட்டேன்" என்றெண்ணி விரைவாகத் திண்ணனார் சென்றார் அப்போது மொய்த்த பல இனங்கள் (பறவைகள்) யாவும் தீமையுளதாம் என அறிவிக்க, தீமை காட்டும் இத்தகைய சகுனங்கள் முன்னே நெருங்கி இரத்தக் குறியைக் காட்டுகின்றன. அதனால் எனது தலைவனாம் சிவபிரானுக்கு நடக்கக்கூடியது யாதோ ? ஓ! கெட்டேன்" என்று கூறி நெருங்கினார்.

குறிப்பு

முன் ஐந்து நாட்களில் இரவில் துயில் கொள்ளாமல் வில் ஏந்திக் காவல் புரிந்தார் திண்ணனார் என்பது அவரது ஆழ்ந்த இறைப்பற்றை உணர்த்தும். அவர் சிவப்பேறடைந்த திருநாள் ஆறாம். நாளாம் இந்நாளேயாகும் என்பர்.

தேறுவார்க்கு அமுதமானவர் சிவபெருமான் என்பதால் இவ் அமுதம் மரணத்தை நீக்கும் இனிய மருந்து என்பது கொள்ளப்படும். அன்பு மிகுதியால் திண்ணனார்க்குக் காலம் தாழ்த்தியதாகத் தோன்றிற்று. பின்னர் வரும் நன்மை தீமைகளைத் தம் காட்சி, குரல் முதலியவற்றால் உணர்த்தும் பறவை முதலியன சகுனங்கள் எனப்பட்டன. இவற்றை நிமித்தம் என்பர். சகுனப் பலன் தம்மைத் தாக்குமே என்றுதான் உலகில் பிறர் அஞ்சுவர். ஆனால் திண்ணனாரோ அறைவனுக்கு என்ன துன்பம் நிகழுமோ என்று தவித்தார். சகுனப் பலன் நிச்சயம் என்பதால் அத்துணிபுபற்றி இறந்த காலத்தால் கூறினார்.

இறைவன் கண்ணில் குருதி கண்ட திண்ணனார் மனமழிதல் (14-20)

திருக்காளத்தியப்பர் சிவகோசரி முனிவருக்குத் திண்ணனாரின் அன்பின் திறத்தை உணர்த்த, தம் திருக்கண்களுள் ஒன்றில் துண்ணென்று இரத்தம் பாய்ந்து வெளியே ஓடி வருமாறு காட்டியிருந்தார். அந்த அழகிய கொடிய வில்லுடைய திண்ணனார் அதனை தூரத்தில் கண்டு மிக விரைவாக வந்தார்.

" அண்ணலார் திருக்கா ளத்தியடிகளார் முனிவனார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத் திருநய னத்தி லொன்று
துண்ணென உதிரம் பாய இருந்தனர் தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்லிரைந் தோடி வந்தார்."

இவ்வாறு வந்த பசிய தழை மாலை அணிந்த மார்புடைய திண்ணனார் உதிரம் பாய்தலைக் கண்டார். மயங்கினார். திருவாயில் கொண்ட நல்ல திருமஞ்சன நீர் சிந்தவும், கையிலிருந்து ஊனமுதம் வில்லுடன் சிதறி விழவும், கொத்தான விரிந்த திருப்பள்ளித் தாமம் குடுமியினின்று குலைந்து அலைந்து சோரவும், நிலத்தில் மனமழிந்து பதைத்து விழுந்தார்.

வீழ்ந்த திண்ணனார் எழுந்துபோய் உதிரத்தைத் துடைத்தார். அவ்வுதிரம் பாய்வது நிற்கக் கண்டாரிலர். செய்வது என்ன என்றும் அறிந்திலர். பெருமூச்சுவிட்டு மீண்டும் செயலிழந்து வீழ்ந்தார். பின்னர் மனம் தேறி , "இது செய்தார் யாவர் ?" என எண்ணி எழுந்தார், எல்லாத் திசையும் பார்த்தார்; வில்லையும் எடுத்தார்.

ஏற்ற அம்புகளைத் தேர்ந்தெடுத்து "இம்மலையில் எனக்கு மாறாக வலிமையுடைய கொடிய வேடர்கள் செய்தனரோ ? (ஆனி) என்ற சிங்கம் முதலாக உள்ள விலங்கினங்கள் செய்தனவோ ? தெரியேன்" என்று எண்ணி நீண்ட பெரிய குன்றின் சாரலில் நெடுந்தூரம் தேடிச் சென்றார்.

அவர் வேடர்களைக் காணார். தீய விலங்குகளைப் பக்கங்களில் தேடியும் காணார். மீண்டும் திருக்காளத்தியப்பரிடம் வந்து நீடிய பெருஞ் சோகத்துடன் அவர்தம் நிறை மலர்ப் பாதங்களைப் பிடித்துப் பக்கம் பொருந்தக் கட்டிக் கொண்டு கண்ணீர் பெருகக் கதறினார்.

" வேடரைக் காணார் தீய விலங்குகள் மருங்கு மெங்கும்
நாடியும் காணார் மீண்டும் நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார "

"இப்பரமனுக்குப் பாவியாகிய நான் கண்டபடி இவ்வாறு வந்ததேனோ? உயிரினும் இனிய எம்அத்தனார்க்கு இது வந்ததேனோ? வந்து பொருந்தியோர் விட்டு நீங்க மாட்டாத விமலனார்க்கு இவ்வாறு வந்ததேனோ? செய்யக்கூடிய செயல் ஒன்றும் நான் அறியவில்லை" என்று கதறி மீளவும் எண்ணத் தொடங்கினார்.

"என்ன செய்தால் இது தீருமோ? எமது பெருமானிடத்து இத்தீங்கு முன் செய்தவர்களைக் காணேன். மொய்த்த வீரக் கழலை அணிந்த வேடர்கள் ஒளிமிக்க நீண்ட அம்பினால் புண்களைத் தீர்க்கும். உண்மையான மருந்துகளைப் பொன் செய்யும் மலையின் தாழ்ந்த வரையினிடத்திருந்து தேடிக் கொண்டுவருவேன்" என்று சொல்லிப் போனார்.

குறிப்பு

திண்ணனாரையும், அவரது பரிவு காட்டிய வழியால் முனிவரையும் ஆட்கொள்ளும் கருணையின் பெருமைபற்றி 'அண்ணலார்' என அழைக்கப்பட்டார். சகுனங்களில் உதிரங் காட்டும் தன்மையும் உண்டு. அதனால் இறைவனது கண்ணில் உதிரங் கண்டதும் ஓடி வந்தார். வீரமுடையவர், உதிரங்கண்டு மயங்கினார் என்றால் பேரன்பு பற்றி மயங்கினார் என்பது பொருள். திண்ணனார் மன அவலமிகுதியால் உதிரம் துடைத்து, பெருமூச்சுவிட்டுச் செயலிழந்து மீண்டும் வீழ்ந்து எழுந்தவர் இறைவன் பொருட்டு வீராவேசம் தோன்ற, செய்தவர் மீது பழி வாங்க எழுந்தார். தமக்கு மாறாக இச்செயலைச் செய்யக்கூடிய வேடர் இருக்கமுடியாது என்ற ஐயத்தால் 'உளர் கொலோ'? என்றார்.

இறைவனுக்கு குருதி பாயப்பாய இவர்க்குச் சோகம் பெருகியது. தம்மால் அன்பு செய்யப்பட்டவர்க்குத் தீங்கு வரின் தம்மால் ஏற்றிப் பேசல் மரபு. ஆதலால் 'பாவியேன்' என்றார். உலக வழக்கிலும் போகின்றேன் என அமங்கலமாகக் கூறாமல் வருகின்றேன் என்று சொல்லிப் போகும் மரபு உண்டு. இறைவனது குருதியைத் தடுக்கும் மூலிகைகளைக் கொண்டு வரும் ஆவலே கருத்தாதலின் "வருவன் என்று போனார் " எனப்பட்டது.

திண்ணனார் கண்ணளித்து மகிழ்வுறுதல் (21-24)

திண்ணனார் மருந்து மூலிகையை எண்ணிப் பல நெருங்கிய காடுகளில் எங்கும் தன் இனத்திலிருந்து பிரிந்த செங்கண்ணுடைய எருதைப்போல வெருட்சியுடன் போனார். புனங்களில் மூலிகைகளைப் பறித்து, காளத்தியப்பரிடம் (அன்பு) வைத்த மனத்தின் வேகத்தினும் விரைந்து திரும்பி அம் மருந்துகளைப் பிழிந்து அவர் கண்ணில் வார்த்தார்.

"புனத்திடைப் பறித்துக்கொண்டு பூதநாயகன்பால் வைத்த
மனத்தினும் கடிதுவந்து அம்மருந்துகள் பிசைந்து வார்த்தார் "

இவ்வாறு பிழிந்து வார்த்த மருந்தால் திருக்காளத்தியப்பரின் கண்ணின் புண்ணிலிருந்து வரும் குருதிநீர் குறைவுபடவில்லை. முன்போலவே வழியக் கண்டு, "இந்நாளின் நிலமைக்குத் தீர்வாக இனிச் செய்வது யாதோ?" என்று ஆராய்ந்தார். 'ஊனே ஊனுக்கு உற்ற நோய் தீர்ப்பது' என்ற பழமொழி நினைவுவர உணர்ந்தார்.

"இனி இம்மருந்து செய்தற்காக எனது கண்ணை அம்பினால் தோண்டி அப்பினால் எம்பெருமானின் கண்நோய்க்கு மருந்தாகி, புண்ணிலிருந்து வரும் குருதி நிற்கவும் கூடும்" என்று

எண்ணிக் களித்தார். அவ்வுள்ளத்தோடு மகிழ்ந்து இறைவன் முன் நின்று தம் கண்ணின் அடிப்பாகத்தை அம்பினால் ஊன்றித் தோண்டி எடுத்துக் கையில் வாங்கி முதல்வனாரது கண்ணில் அப்பினார்.

"இதற்கினி என்கண் அம்பால் இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு மகிழ்ந்துமுன் இருந்து தங்கண்
முதற்சரம் அடுத்து வாங்கி முதல்வர்தம் கண்ணில் அப்ப"

திண்ணனார் அவ்வாறு அப்பியதும் குருதி நின்றதைக் கண்டார். அப்பெருமகிழ்ச்சியில் நிலத்திலிருந்து உயரப் பாய்ந்து குதித்தார். மலைபோல வளர்ந்த தம் தோள்களைக் கொட்டினார். கூத்து ஆடினார். "நான் செய்த இந்த யோசனை மிக நன்று" என்று சிரித்துக் களிப்பால் உன்மத்தர் (பைத்தியக்காரர்) போன்ற நிலையுற்றார்.

குறிப்பு

தன் இனத்திலிருந்து பிரிந்த எருது வெருண்டு, கண் சிவந்து, காது உப்பி, இனம் இருந்த திசைநோக்கித் தேடியும் அலறியும் ஓடும். அதுபோல் வெருண்டு ஓடினார். 'ஊனுக்கு ஊன்' என்ற பழமொழி வேடர்க்குரியதாக உள்ளது. வேட்டைப் போரில் உடற்பகுதிகள் சிதைய நேரிடும்போது ஏதேனும் மற்றோரு ஊனை வைத்துச் சரிசெய்வது ஒரு வழக்கமாக அவர்களிடம் இருந்திருக்கின்றது. இறைவனது கண்ணைச் சரிசெய்ய வேறொரு விலங்கின் கண்ணைப் பயன்படுத்தியிருக்கலாம் திண்ணனார். ஆனால் அச்செயலுக்காகப் பிற விலங்குகளைத் தேடிச் செல்லக் கால தாமதமாகும் என்றும், மேலும் இறந்த விலங்கின் உறுப்பு சூடு தணிந்து ஒவ்வாமலும் போகலாம் என்றும் கருதித் தாம் பக்கத்திலிருப்ப வேறு தேடிச் செல்ல வேண்டியதில்லை என நினைத்துவிட்டார்.

திண்ணனார் மீண்டும் கண்ணனிக்க முற்பட்டு அருள் பெறல் (25-30)

திருக்காளத்தியப்பர் வலத்திருக்கண்ணிலே தம் வலக் கண்ணைத் தோண்டி அப்பிய வள்ளலாம் திண்ணனாரின் நல்ல தன்மையை மேலும் காட்ட எண்ணினார். தம் மற்றைய இடக் கண்ணில் இடையறாமல் செங்குருதி பாய்ந்து வழியச் செய்தார். இவ்வுலகில் வேடர் குலம் செய்த பெருத்தாலும் காரணமாக அதில் வந்து அவதரித்த, கொள்கையில் தேவரினும் மேலானவரான திண்ணனார் கண்டார்.

அவ்வாறு கண்டதும், "கெட்டேன். எம் காளத்தியப்பருடைய கண்களில் ஒன்றில் வந்த புண்ணிலிருந்து பாய்ந்த குருதி வராமல் நிற்க மற்றைய கண்ணில் குருதி பொங்கி மிகுகின்றது, இந்நோய் தீர்க்கும் மருந்தை அனுபவத்தில் கண்டேன். வரத்தகாத இது வந்ததனுக்கு அஞ்சமாட்டேன். எனக்கு இன்னும் ஒரு கண் எஞ்சியுள்ளது. அக்கண்ணையும் தோண்டி இறைவர்க்கு அப்பி அந்நோயைத் தீர்ப்பேன்" என்றார்.

" கண்டபின் கெட்டேன் எங்கள் காளத்தி யார்கண் ஒன்று
புண்டரு குருதி நிற்க மற்றைக்கண் குருதி பொங்கி

மண்டுமற் றிதனுக்கு அஞ்சேன் மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொரு கண் அக்கண்ணை இடந்தப்பி ஒழிப்பேன்"

தம் கண்ணைத் தோண்டி நெற்றிக் கண்ணுடைய இறைவன் கண்ணில் அப்பிட எண்ணி, திண்ணனார். தம் பெருமானுடைய அத்திருக்கண்ணில் தம் இடக்காலினை எடுத்து ஊன்றி விருப்பத்துடன் ஒப்பற்ற ஓர் அம்பை எடுத்து அதைத் தம் கண்ணில் ஊன்றவே தேவதேவராம் காளத்திநாதர் பொறுக்கர்தவர் ஆனார்.

சிவந்த கண்ணுடைய இடப ஊர்தியுடைய திண்ணனாரை ஆட்கொண்ட அங்கணர் ஆகிய அத்திருக்காளத்திநாதரின் கையானது அம்பால் கண்ணைத் தோண்ட முயற்சித்த அவரது கையைத் தடுத்தது; பாம்பைக் கை வளையாகத் தரித்த அவரது அமுத வாக்கு மூன்று முறை 'கண்ணப்ப நில்' என்றது.

"செங்கண் வெள்விடையின் பாகர் திண்ணனார் தம்மையாண்ட
அங்கணர் திருக்காளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங்கையைத் தடுக்க மூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக் 'கண்ணப்ப நிற்க' என்ற"

வேடர் தலைவராம் கண்ணப்பர் தம் கண்ணைத் தோண்டித் தேவர் கண்ணில் அப்பியபோதும், அவர் ஊட்டிய ஊனமுதை மகிழ்ந்து கொண்டருளிய காளத்திநாதர் அவர் மற்றைக் கண்ணைத் தோண்டும் முன்பே கையைப் பிடித்தபோதும் ஞானமாமுனிவராம் சிவகோசரியார் கண்டார். வேதங்கள் ஆர்க்கப் பிரமதேவர்கள் முதலிய தேவர்கள் கற்பகம் புதுமலர் மழை பொழிந்தனர்.

தம் பெருமானது திருக்கண்ணிற்கு வந்தது கண்டு அஞ்சித் தம் இடக்கண்ணைத் தோண்டி அப்ப நின்ற கண்ணப்பரின் கையை இடபக்கொடி உயர்த்திய காளத்தியப்பர் பிடித்துக் கொண்டு, 'ஒப்புயர்வற்றவனே! என் வலது பக்கத்தில் நிற்பாயாக' என்று நிலைபெற்ற பெரிய திருவருளைச் செய்தார். இனி இதன்மேல் பெறத்தக்க பயன் வேறு உண்டோ? (இல்லை).

குறிப்பு

பயன் கருதாமல் பிறர்க்கு கொடுப்பவர் வள்ளலார் எனப்படுவார். அதுபோல் திண்ணனார் ஒன்றும் வேண்டாமலேயே கண்ணைக் கொடுத்ததால் வள்ளலார் எனப்பட்டார். தேவர்கள் சிவனைப் பூசித்துப் பயன் பெற்றார்கள். ஆனால் திண்ணனாரோ பயன் வேண்டாது இறைவனுக்காகப் பூசித்தவர் ஆதலால் தேவரினும் மேலானவர் எனப்பட்டார்.

திண்ணனார் தம் எஞ்சிய ஒரு கண்ணையும் இடந்துவிடின் அதனை அப்பும் போது இறைவனின் இடது கண் இருக்குமிடம் தெரியாது. அதனால் அந்த இடத்தை அடையாளம் காணக் கண்ணில் இடது காலை ஊன்றினார். வலது கண் சிவபெருமானின் பாகம், இடது கண் அம்மையாரின் கருணைப்பாகம், ஆதலால் வலது கண்ணைத் தோண்டியதைப் பொறுத்த இறைவன் இடது கண்ணைத் தோண்டப் பார்த்தலைப் பொறுக்கமுடியாதவர் ஆயினார். சிவலிங்கத்திலிருந்து முளைத்த கை தடுத்தது என்பர். கண்ணப்பரின் விரைவான செயல் நோக்கிக் கையும் தடுத்தது, வாக்கும் அறிவித்தது. இடப்பாகத்தில் உமையாளைக் கொண்டவர் தமக்குரிய வலப்பக்கத்தில் கண்ணப்பரை நிறுத்தினார்.

வினா-விடைப் பகுதி

1. திருக்காளத்தியப்பர் சிவகோசரி முனிவரின் கனவில் யாது கூறினார் என்பதுபற்றி ஒரு பக்க அளவில் எழுதுக.

திருக்காளத்தியப்பர் சிவகோசரி முனிவரின் கனவில், "நீ திண்ணனை வலிய வேடுவன் என்று மட்டும் நினையாதே. அவனது நல்ல செயலை நாம் சொல்லிக் கேட்பாயாக. அவனுடைய வடிவம் முழுவதும் நம்மேல் வைத்த அன்பு மயமேயாகும். அவன் அறிவு முழுவதும் நம்மை அறியும் அறிவேயாகும். அவனுடைய செயல்கள் நமக்கு இனியனவேயாகும். அவன் எனக்குப் பூசனை செய்யுமுன் நீர் இட்ட மலர்களை நீக்கும் அன்பில் வீழ்ந்த அவனது செருப்பின் தன்மை முருகனது செவ்வடியினும் சிறப்புடையது.

உருகிய அன்பால் குறைவற நிறைந்து அவன் ஒழுகுவதால் சனு முனிவனின் செவி உமிழும் கங்கை தீர்த்த நீரினும் எனக்கு அவன் வாயிலிருந்து உமிழும் நீர் புனிதமானதாகும். என்னை இம்மலையில் வந்தடைந்த அக்கானவன் இயல்பால் அன்பு மலர் விரிந்தது போல் விழுதலால் பிரமனுடன் திருமால் முதலிய தேவர்கள் வந்து அலங்கரிக்கும் எம்மலரும் அவன் அளிக்கும் சிறப்பான மலர்போல் எனக்குப் பொருந்தாது" என்றும் கூறினார்.

"சுடுகின்ற கனவில் பதத்துடன் வெந்ததோ மாமிசம் என்று அன்பால் உருகும் மனத்துடன் விரைவாக நசுக்கி மென்று தருவதால் வேத வேள்வி செய்பவரின் அவிப்பொருளைக் காட்டிலும் அவன் கட்டமைந்த வில்லால் எடுத்து இட்ட மாமிசமே எனக்கு இனிமையானது. வேதங்களைக் கற்ற மாமுனிவர்கள் மகிழ்ந்து கூறும் இனிய தோத்திரப்பாடல்கள், மந்திரங்கள் யாவற்றினும் எம் முன்பிருந்து இவ்வேடுவன் தன் முகமும் அகமும் மலர மனம் உருகி அன்பால் நினைத்து என்னையே பேசும் அறிவுக்கு உட்படாத அவன் மொழி எனக்கு நல்லதாகும்." என்றும் கூறினார்.

இறுதியில் காளத்தியப்பர் சிவகோசரியாரிடம் மறுநாள் தம் பக்கம் ஒளிந்து நின்று திண்ணனின் அன்பு மிக்க செயல்களைக் காணுமாறு கூறினார்.

2. கண்ணப்பநாயனாரின் பக்திச் சிறப்பை மூன்று பக்க அளவில் விளக்குக.

திருக்காளத்தியப்பர் சிவகோசரி முனிவரின் கனவில் திண்ணனாரின் பெருமைகளை எடுத்தியம்பினார். அவருடைய வடிவம் தம்மேல் வைத்த அன்பு என்றும், அவர் அறிவு முழுவதும் தம்மை அறியும் அன்பு என்றும், அவருடைய செயல்கள் தமக்கு இனியன என்றும் கூறினார். அவர் வாய் உமிழ்ந்த நீர் கங்கை நீரினும் புனிதம் வாய்ந்தது என்றும், அவரது அன்புமலர் பிரமன் திருமால் முதலிய தேவர்கள் இடும் மலரினும் சிறப்பானது என்றும், அவர் அளித்த ஊன் வேள்விப் பொருளினும் உகந்தது என்றும் அறிவுக்குப் பொருந்தாத அவரது அன்பான மொழி மாமுனிவர்களின் தோத்திர மந்திரங்களினும் மேலானது என்றும் குறிப்பிட்டார். இறுதியில் மறுநாள் ஒளிந்திருந்து அவர்தம் செயல்களைக் காணுமாறு கூறினார்.

சிவகோசரி முனிவர் கனவிலிருந்து மிக்க அற்புதம் கொண்டவராய் இருந்தார். மறுநாள் காளத்தியப்பர் அருள் செய்தபடி திருக்காளத்தி மலையில் இறைவனைப் பூசித்துப் பின்புறமாக ஒளிந்திருந்தார் திண்ணனாரோ கண் துயிலாமல் ஊன் அமுதையும் நல்ல திருமஞ்சன நீரையும் சென்னியில் ஏறும் புதிய மலர்களையும் ஏந்திக் கொண்டு காலம் தாழ்த்திவிட்டதாக வருந்தி

விரைவில் சிவபெருமானை அடைய வந்தார். அப்போது தீமை காட்டும் சகுனங்கள் இரத்தக் குறியைக் காட்ட, "தலைவனாம் திருக்காளத்தியப்பருக்கு நடக்கக் கூடியது யாதோ? ஓ! கெட்டேன்" எனக் கூறிக் கவலையுடன் நெருங்கினார்.

திருக்காளத்தியப்பர் சிவகோசரி முனிவருக்குத் திண்ணனாரின் அன்பின் திறத்தைக் காட்ட முற்பட்டார். தம் திருக்கண்களுள் ஒன்றில் துண்ணென இரத்தம் பாய்ந்து வருமாறு காட்டினார். அதனைத் தூரத்தில் கண்ட திண்ணனார் பதறிக்கொண்டு ஓடி வந்தார். திருவாயில் கொண்ட நல்ல திருமஞ்சனநீர் சிந்தவும், கையிலுள்ள ஊனமுதம் வில்லுடன் சிதறவும் திருப்பள்ளித் தாமம் குடுமியிலிருந்து சோரவும் நிலத்தில் பதைத்து விழுந்தார். உதிரத்தைத் துடைக்க முற்பட்டும் அது பாய்வது நிற்கவில்லை. பெருமூச்சுடன் செயலழிந்து மீண்டும் வீழ்ந்தார். 'இது செய்தவர் யார்' என எண்ணி எல்லாத் திசையும் பார்த்து வில்லையும் எடுத்தார்.

" விழுந்தவர் எழுந்துசென்று துடைத்தனர் குருதிவீழ்வது
ஒழிந்திடக் காணார் செய்வ தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார்" பிறகு செய்தவரை வில்லால் அழிக்கவும் முற்பட்டார்."

"இச்செயலைக் கொடிய வேடர்கள் செய்தனரோ? ஆளி முதலான விலங்கினங்கள் செய்தனவோ" என எண்ணி நெடுந்தூரம் தேடிச் சென்றார். வேடர்களையும் விலங்குகளையும் பக்கங்களில் காணாமல் மீண்டும் சோகத்துடன் திருக்காளத்தியப்பரிடம் வந்தார். அவருடைய மலர்ப்பாதங்களைப்பற்றிக் கொண்டு கண்ணீர் பெருகக் கதறினார். "இப்பரமனார்க்கு, உயிரினும் இனிய எம் அத்தனார்க்கு இவ்வாறு மருந்துகளை மலையின் தாழ்வாரத்திலிருந்து தேடிக் கொணர்வதாகக் கூறிச் சென்றார்.

மூலிகைகளைப் பறித்த திண்ணனார் மிக விரைந்து காளத்தியப்பரின் கண்ணில் அம்மருந்துகளைப் பிழிந்து வார்த்தார். இவ்வாறு பிழிந்தும் கண்ணிலிருந்து குருதிநீர் குறையவில்லை. இனிச் செய்வது என்ன என ஆராய்ந்து 'ஊனே ஊனக்கு உற்ற நோய் தீர்ப்பது' என நினைந்து 'தமது கண்ணை அம்பினால் தோண்டி எடுத்துக் கையில் வைத்து முதல்வனாரது கண்ணில் அப்பினார்'. "தங்கண் முதற்சரம் அடுத்து வாங்கி முதல்வர் தம் கண்ணில் அப்ப", குருதி நின்றது. திண்ணனார் பெருமகிழ்ச்சியில் கூத்தாடினார். இறைவனோ அவரை மேலும் சோதிக்க எண்ணி, இடது கண்ணிலிருந்து செங்குருதி தொடர்ந்து பாய்ந்து வழியச் செய்தார்.

திண்ணனார் அதனைக் கண்டதும், "கெட்டேன். ஒரு கண்ணில் குருதி நிற்க மற்றைய கண்ணில் குருதி பொங்குகின்றதே! இந்நோய் தீர்க்கும் மருந்தை அனுபவத்தில் கண்டேன். இதற்கு அஞ்சமாட்டேன். எனது எஞ்சியுள்ள கண்ணையும் தோண்டி இறைவனுக்கு அப்பி இந்நோயைத் தீர்ப்பேன்" என்றார். 'இன்னும் உண்டொருகண் அக்கண்ணை இடந்தப்பி ஒழிப்பேன்' என்று கூறித் தம் இடது கண்ணையும் தோண்ட முற்பட்ட போது காளத்திநாதர் பொறுக்க முடியாமல் திண்ணனாரின் கையைத் தடுத்தார். மூன்று முறை 'கண்ணப்ப நில்' என்றார். இவற்றையெல்லாம் கண்ட சிவகோசரியார் வியப்புற்றார். இறுதியில் திருக்காளத்தியப்பர், கண்ணப்பரை என்றும் தம் வலப்பக்கம் நிற்குமாறு திருவருள் செய்தார்.

இவ்வாறு வேண்டுவராம் திண்ணனார் ஆழ்ந்த பக்தி காரணமாக இறைவன் திருவாயால் கண்ணப்பர் என அழைக்கப்பட்டதுடன் 'என் வலத்தில் மாறிலாய் நிற்க' என அருளும் பேறும் பெற்றார்.

கம்பராமாயணம்

மந்தரை சூழ்ச்சிப் படலம்

கம்பர் படைத்த காப்பியமாம் இராமாயணம் வடமொழியிலுள்ள வால்மீகி இராமாயணத்தின் வழி நூலாகும். வைணவ சமயக் காப்பியமாம் இந்நூல், இராமாவதாரம் என்றும் அழைக்கப்பெறும். 'இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை' என்று பாயிரத்தில் வருவதைக் காணலாம். இராமாயணத்தின் முதல் ஆறு காண்டங்களையே கம்பர் எழுதினார். கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தார். சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர். 'கல்வியில் பெரியவன் கம்பன்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பன கம்பரது கவிதைத் திறனைப் பறைசாற்றும்.

கவிச் சக்கரவர்த்தி கம்பர் கி.பி.9.ஆம் நூற்றாண்டினர் என்றும் கி.பி. 12–ஆம் நூற்றாண்டினர் என்றும் குறிப்பிடுவர். பல்வேறு கற்பனைத் திறனும் சந்த இனிமையும், சொல், பொருள் நயங்களும் உடைய இந்நூல் ஆழ்ந்த கடலைக் கடல் ஆகும். கம்பர், இராமாயணம் தவிர ஏர் எழுபது, சடகோபரந்தாதி, சரசுவதி அந்தாதி முதலிய நூல்களையும் எழுதியவர்.

அயோத்தியா காண்டத்துள் இடம்பெறும் மந்தரை சூழ்ச்சிப் படலத்திலிருந்து முப்பது பாடல்கள் நமக்குப் பாடம். மந்தரை சூழ்ச்சிப்படலம் என்பது கைகேயியின் தோழியான மந்தரையினது சூழ்ச்சிபற்றிக் கூறும் படலம் என விரியும் மந்தரை கூனல் உடைமையால் கூனி எனப்பட்டாள்.

இராமனுக்கு முடி சூட்டு விழா என்று கேள்விப்பட்ட மந்தரை என்ற கூனி ஆத்திரம் கொண்டு அதனைத் தடுக்கப் புறப்பட்டாள். கைகேயியினிடம் வந்தடைந்த கூனி அவளது தூய மனத்தைக் கெடுக்குமாறு அவளிடம் திறமையுடன் பேசினாள். அவளது சூழ்ச்சியால் கைகேயியின் தூய மனமும் படிப்படியாக மாறித் திரிந்தது.

கூனியின் சினத் தோற்றம் (பாடல்கள் 1-2)

அயோத்தி நகரத்தை அலங்கரிக்கும் ஆரவாரத்தால், தேவர்கள் வாழும் சுவர்க்கமே என்னுமாறு அது பொலிந்து விளங்கியது. அப்போது உலகிற்குத் துன்பம் செய்யும் இராவணன் செய்த தீமைகள் ஒரு வடிவு கொண்டு வந்ததுபோல் நெருங்குதற்கரிய கொடுமை மிக்க மனமுடைய கூனியாகிய மந்தரை என்பவள் தோன்றினாள்.

"அந்நகர் அணிவுறும் அமலை, வானவர்
பொந்நகர் இயல்புளனப் பொலியும் எல்லையில்
இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்"

அவ்வாறு தோன்றிய கூனி மூவுலகத்தோர்க்கும் ஒரு பெருந்துன்பம் உண்டாக்குமாறு துடிக்கும் நெஞ்சுடையவளாகவும் நிலைத்த சினமுடையவளாகவும் அச்சினமானது குடையும் மனமுடையவளாகவும் சினத்தீயை வெளிப்படுத்தி எரியும் கண்களை உடையவளாகவும் உரத்துப் பேசும் தன்மையுடையவளாகவும் இருந்தாள்.

குறிப்பு

கைகேயியின் தோழியான கூனி என்ற மந்தரை உடற் கூனலோடு உள்ளக் கோணலும் உடையவள் கைகேயியின் நல்ல மனத்தைத் திரித்து, அதன் வழி இராமபிரான் நாடு துறந்து காடேகக் காரணமானவள். அவள் செய்கை இராவணன் அழிவுக்குக் காரணமானது. அதனால்தான் இராவணன் இழைத்த தீமையே கூனி வடிவில் வந்ததாக அவள் சுட்டப்படுகிறாள்.

கூனியின் செயலால் இராமன் காடு ஏகியமை மூவுலகத்தார்க்கும் பெருந்துன்பம் மூட்டுதலால் 'மூவுலகினுக்குமோர் இடுக்கண் மூட்டுவாள்' என்றார்.

கூனி கைகேயியை அடைதல் (3-5)

முன்னாளில் அக்கூனி இராமனின் கையில் உள்ள வில் வெளிப்படுத்திய மண் உருண்டையால் தான் அடியுண்டதைத் தன் மனத்தில் நினைத்துப் பார்த்து வெகுண்டு, கீழுதட்டை மடித்தவளாய் வந்தாள். கொவ்வைக் கனி போன்ற உதடுகளையுடைய கேகயனின் மகளான மயில் போன்ற கைகேயியின் அரண்மனைக்கு விரைந்து சென்றாள்.

நாற்கடலில் தோன்றிய மணிகளுடன் தாமரை பூத்ததுபோல், ஒப்பற்ற திருப்பாற்கடல் அலையிடம் உள்ளதான ஒரு பவளக்கொடி உயர்ந்து விளங்கும் ஒரு படுக்கைமேல் தன் கடைக்கண்கள் அருளைப் பொழிய உறங்கிக் கிடந்த கைகேயியை விரைவாகச் சென்று அணுகினாள்.

"நாற்கடல் படுமணி நளினம் பூத்ததுஓர்
பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
போல்கடைக் கண்அளி பொழிய பொங்குஅணை
மேல்கிடந் தாள்தனை விரைவில் எய்தினாள்"

காலத்தின் தீயகோள் போன்ற அக்கூனி, கைகேயியை அடைந்தாள். இதழ்கள் விரிந்த மெல்லிய தாமரை, தான் செய்த தவத்தால் கேகயன் மகளாம் கைகேயியின் அடிகளுக்குச் சிறந்த உவமையாதற்குப் பொருந்தியது. அத்தகைய செம்பொன் அடிகளைத் தன் கைகளால் தொட்டாள் கூனி.

குறிப்பு

முன்னால் நீர்க்குடத்துடன் வந்த கூனியின் கூனல்மேல் இளம்பருவத்து இராமன் விளையாட்டாக வில்லிலே மண்ணுண்டையை வைத்து எய்திட அப்பானை உடைந்ததுடன் பிறரும் எள்ளி நகையாடினர். அதனால், அவமானமடைந்த கூனி மனத்தில் கறுவுடன் காலம் பார்த்து இராமன் நாடு துறக்குமாறு தீங்கிழைக்க முற்பட்டாள்.

கைகேயி இயல்பாகவே அருள் குணமுடையவள் ஆதலால் 'கடைக்கண் அருள்பொழியக் கிடந்தாள் என்றார். கூனியாகிய கோள் ஆனவள் இராகு கேதுக்கள் ஆகிய பாம்புபோல் தீண்டினாள். அதுவே தயரதன் இறத்தற்கும் வேறு பல தீமைகளுக்கும் காரணமாகியது. தாமரை மலர் தவங்கிடந்து கைகேயியின் சிற்றடிக்கு உவமையாகும் பேறு பெற்றது என அவள் அடிகளைச் சிறப்பித்தார் கம்பர்.

இராமன் முடிசூட இருப்பதைக் கூனி கூறல் (6-12)

கூனி தன் கைகளால் துயில் நீத்த தெய்வக் கற்பினளான கைகேயி, தன் நீண்ட கண் உறக்க மயக்கம் நீங்காதவளாக இருந்தாள். அந்நிலையில் தீப்போல் மூண்டு வர இருக்கும் பெரும்பழிக்கு இடமாகிய செயலை முடித்தற்குரிய வலியவினை தூண்டிடத் தன் சொற்களைக் கைகேயியிடம் கூறத் தொடங்கினாள் கூனி.

கூனி "துன்பம் தரும் கொடிய விடமுள்ள இராகு என்ற பாம்பு தன்னைப் பற்றவரும்போதும், தன் இயல்பு கேடாமல் ஒளிவீசுகிறது குளிர் நிலவு. அதுபோல் மாறுபட்ட மிகப்பெரிய துன்பம் உன்னைப் பிடிக்க வரும் போதும் சிறிதும் வருத்தமுறாமல் உறங்குகின்றாயே" என்றாள்.

"அணங்கு வாள்விட அரா அணுகும் எல்லையும்
குணம்கெடாது ஒளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லை நீஉறங்குவாய் என்றாள் "

கொடிய விடம் போன்ற கூனி இவ்வாறு சொல்ல, வேல் போன்ற கண்ணையுடைய கைகேயி, "பகையைப் போக்கத்தக்க விற்கையுடைய என் மக்கள் நால்வரும் நலமுடன் இருக்கின்றனர். அவர்கள் அவரவர்க்குரிய

துறைகளில் அறம் தவறாது நடப்பர், அதனால் இங்கே எனக்கு எத்தகைய துன்பம் வந்து பொருந்தும்?" என்றாள்.

மேலும் கைகேயி, "எத்தகையோரும் புகழ்தற்குரிய சிறந்த புதல்வரைப் பெறுதலால் வலிய, அரிய துன்பங்களிலிருந்து நீங்கி நன்மை அடைவர். அப்படியிருக்க பல்வகை உயிர்களும் கலந்து வாழும் அரிய எல்லா உலகங்களுக்கும் வேதமே போன்ற இராமனை மகனாகப் பெற்ற எனக்கு துன்பம் வருவதுண்டோ?" என்றும் கேட்டாள்.

" விராஅவரும் புவிக்கெலாம் வேதமேயன
இராமனைப் பயந்தளற்(கு) இடருண்டோ என்றாள்"

இராமனிடம் ஆழ்ந்த பேரன்பு உடைய கைகேயி அவ்வாறு கூறியதும் அவளை விடாமல் சூழ்ந்தாள் தீவினையை ஒத்தவளான கூனி. அக்கூனி, "உனக்கு வரும் நன்மை அனைத்தும் கெட்டது . நின் செல்வமும் அழிந்தாயிற்று. கோசலையே தன் அறிவால் நல்வாழ்வு பெற்றாள்" என்றாள்.

" ஆழ்ந்தபேர் அன்பினாள் அனைய கூறலும்
சூழ்ந்த தீவினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்கலம் திருவும் வீழ்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியினால் என்றாள் "

கூனி அவ்வாறு கூறவும் ஆய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்த கைகேயி அவளிடம், "அவள் (கோசலை) கணவன் மன்னவர்க்கெல்லாம் மன்னன். புதல்வன் சொல்லுதற்கரிய மிக்க புகழையுடைய பரதன். இவ்வுலகில் இச்சிறப்பிற்கு மேலாக அந்தக் கோசலைக்குக் கிட்டும் வாழ்வு யாதுளது ?" என்றாள்.

அதற்குக் கூனி, "ஆடவர் நகைக்க, ஆண்மை இழுக்கடைய தாடகை என்ற ஒரு பெண் அழியுமாறு வளைந்த கட்டமைந்த வில்லைத் தாங்கிய இராமன் நாளை அரசுக்குரிய முடியைச் சூட இருக்கின்றான். கோசலைக்கு வந்த பெருவாழ்வு இதுவே" என்றாள்.

குறிப்பு

கூனி தன் ஆவேச வேகத்தால் கைகேயி துயில் உணர்ந்தும் நன்கு தெளியாத நிலையில் அவளிடம் தன் கருத்தை வெளியிடத் துணிந்து சொல்லலானான்.

துன்பம் என்பது ஒருவருக்கு பகையாலோ, தம்மைச் சார்ந்த ஒருவர் அறநெறி திரிதலாலோ வரக்கூடும். தம் மக்கள் அறநெறி திறம்பாததுடன் பகையை எளிதில் அழிக்கும் ஆற்றல் உடையர். ஆதலால், எத்தகைய துன்பமும் வருதற்கிடமில்லை என்று கைகேயி துணிந்து கூறினாள். அவள் பரதன் ஒருவனைப் பெற்றாள் எனினும் ஏனை மூவரிடத்தும் வேறுபாடற்ற அன்புடையளாக இருந்தாள். "உயர்குண இராமனைப் பெற்றான் எனக்குத் துன்பம் உண்டோ ?" என அவள் வினவியது இராமபிரானிடம் அவள் கொண்ட தூய தாய்மை அன்பை உணர்த்தும். மாற்றாளுக்கு வாழ்வும் தனக்கு தாழ்வும் வருதலை எத்தகைய நல்லவளும் பொறுக்கமாட்டாள் என்பதை உணர்ந்து கூனி, கைகேயியின் மனத்தை மாற்றவே 'கோசலை நல்வாழ்வு பெற்றனள் என்றாள்.

பரதனை மைந்தனாகப் பெற்றவள் கோசலை எனக் கைகேயி குறிப்பிடும்போது, இராமனைத் தன் மகனாகவும், பரதனைக் கோசலையின் மகனாகவும் எண்ணும் அவளது உள்ளப்பாங்கை உணர்த்தும்.

தாடகையை இராமன் வதம் செய்தது உலக நன்மையைக் கருதியே ஆகும். ஆயினும் கூனி இராமன் ஒரு பெண்ணைக் கொன்று பழியேற்றவன்: முடி சூடற்குத் தகுதியற்றவன் என்ற பொருளில் பேசினாள். "பெண்ணிடத்து இரக்கமற்ற அவன் உன்னிடத்தும் நாளை அவ்வாறே நடப்பான்" என உணர்த்தி அவள் மனத்தை மாற்ற முயன்றாள்.

தூய கைகேயி மாலை பரிசளித்தல் (13-15)

அவ்வார்த்தையினைக் கூனி சொல்ல அதைக் கேட்ட கைகேயின் மனமும் கற்பு வலிமையுடைய கோசலையின் அன்புணர்ச்சியும் ஒத்திருந்தன. ஆதலால் கைகேயி வேற்றுமையுறவில்லை. அதற்குக் காரணம் இராமனின் தந்தையான தசரதன், அவள் மனத்தில் புகுந்து தன்னிடமாகக் கொண்டு இருத்தலேயாகும் போலும்!

மனத்தூய்மையுடைய கைகேயி தன் மனத்தே பேரன்பு என்னும் கடல் ஆர்த்து எழவும், அதனால் அவளுடைய முகமாகிய தேய்வற்ற நிலவு மேலும் அழகுடன் விளங்கவும், புத்தொளி மிகவும் உள்ள மகிழ்ச்சி கரைகடந்து போகவும் ஒளிகட்கெல்லாம் தலைமையதான ஒப்பற்ற மணிமாலையைக் கூனிக்குக் கொடுத்தாள்.

கொடுமைமிக்க அக்கூனி சினத்தால் இரைந்தாள்; அதட்டினாள்; சிறுகண் தீப்பொறி சிதறக் கைகேயியை உறுத்துப் பார்த்தாள்; வைதாள்; வெப்பப் பெருமூச்சு விட்டாள்; தன் கோலத்தைக் கெடுத்துக் கொண்டாள்; வாய்விட்டழுதாள்; அழகிய அப்பொன்மாலையை வீசி எறிந்து, தரையைக் குழிபடச் செய்தாள்.

குறிப்பு

கைகேயி இராமனிடம் உண்மையான அன்பு கொண்டவளாதலாலும், தசரதன் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியாகக் கொண்டவள் ஆதலாலும் இராமன் முடிசூடும் செய்திகேட்டு மகிழ்வுற்றாளேயன்றி மனம் திரிந்தாளில்லை. அம்மகிழ்ச்சியில் மணிமாலையைக் கூனிக்குப் பரிசாக நல்கினாள்.

மந்தரை இராமனுக்கு முடிசூட்டுதல் தகாது என்பதை வற்புறுத்த வந்தவள். ஆதலால், கைகேயி கொடுத்த பரிசை அவமதிக்குமாறு தூக்கி எறிந்தாள்.

கூனி, 'இராமனுக்கு உயர்வு பரதனுக்கு தாழ்வு' எனல் (16-24)

மன வேதனை கொண்ட அந்த மந்தரை, பின்னும் கைகேயியை வெகுண்டு நோக்கினாள். "நீ அறிவில்லாதவள், பைத்தியக்காரி , உனக்குப் பிறந்த மகனோடு நீயும் நெடுங்காலம் பெருந்துயரம் அடைவாயாக நான் உன் மாற்றாளான கொசலையின் தாதியர்க்கு ஏவல் செய்யப் பொறுக்கமாட்டேன்" என்று கூறினாள்.

"சிவந்த வாயுடைய சீதையும், கரிய நிறமுள்ள இராமனும் உயர் சிம்மாசனத்தில் இனிதே இருக்க, உன் மகன் பரதன் கீழ்ப்பட்டவனாய் வெறுந்தரையில் இருக்கும் நிலை உண்டாகியிருக்கும்போது இம்முடி சூடுதலுக்கு நீ எவ்வாறு மகிழ்ச்சி கொள்ள முடியும்? இதனால் உனக்கு வரும் நன்மை யாது? என்றாள்.

" சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்த ஆசனத்து இனிதிருப்ப நின்மகன்
அவந்தனாய் வெறுநிலத் திருக்கலான போது
உவந்தவாறு என்னிதற்கு உறுதியானது என்றாள்"

"கோசலை தனக்கு உறுதியைக் தேடிக் கொள்வதில் அயர்ச்சியடையவில்லை. அதனால் அவள் மகன் இராமனும் அரசுச் செல்வத்தால் சிறப்படைகிறான். நீ மகனாகப் பெற்றதால் பரதன் செல்வச் சிறப்பினின்றும் நீங்கினான். இறவாமல் நடைப்பிணமாய் இருக்கிறான். எதனைச் செய்து அவன் தன் துயர் ஆற்றுவான்? அவன் பிறந்தும் பிறவாதவனேயாவான்" என்றாள்.

"அந்த இராமனே தம்பியான இலக்குவனுடன் கூடி இப்புவி எல்லாம் அளவற்ற காலம் ஆள்வானாயின் உண்மையாகவே பரதனும் அவன் தம்பியான சத்துருக்கனும் நகரத்தை விட்டுக் காட்டுக்குப்போய் விரதமுடைய பெருந்தவம் செய்யுமாறு அனுப்பப்படல் நல்லதாகும்" என்றாள்.

"அலங்கரிக்கப்பெற்ற மதயானையையுடைய பரதன், நிலமகள் காணுவதற்குரிய அழகுடையவர்களாய், இனிதே நாட்டை ஆண்ட அலங்கரித்த முரசங்களையுடைய மன்னர்களின் வரிசையில் வைத்து எண்ணுதற்குப் பொருந்தப் பிறக்கவில்லை. ஆதலால் அவன் இறந்து படுதலே நல்லதாகும்" என்றாள்.

"மன்னனாவதற்கு நல்வினை செய்யாத பரதனைப் பொன்கழல் அணிந்த தசரதன், முன்பு தேக்கு மரங்கள் உயர்ந்து வளர்ந்த, கற்கள் நிறைந்த வழியினை உடைய நெடுந்தொலைவில் உள்ள கேகய நாட்டுக்குத் தன் கட்டளையால் விரைந்து அனுப்பியதன் உட்கருத்து எனக்கு இப்போது மனதில் உதித்தது" என்றும் குறிப்பிட்டாள்.

மேலும் மந்தரை, வகைப்படுத்திச் சொல்பவளாய் "நடுவுநிலை நீக்கி நாட்டை இராமனுக்கு அளிக்கும் தன்மையால் தந்தையும் உன் பால் கொடுமையுடையவனாகின்றான். பெற்ற தாயும் கொடியவளாகின்றாள், என் அப்பா பரதா, நீ யாது செவ்வாய்?" என்றாள்.

" மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
அந்தரம் தீர்த்து உலகு அளிக்கும் நீரினால்
தந்தையும் கொடியன் நற்றாயும் தீயலாள்
எந்தையும் பரதனே என் செய்வாய்?"

"மன்னர் குடியில் பிறந்து, பின்பு அரண்மனையில் வளர்ந்து மன்னர் குடியில் வாழ்க்கைப்பட்டுப் பேரரசியான நீ கரைகாணற்கு அரிய பெருந்துயரக் கடலில் விழ இருக்கின்றாய். இந்நிலையை நீ உணரவில்லையோ? நான் எடுத்துச் சொல்லவும் நீ கேட்கின்றாய் இல்லை" என்று சொன்னாள்.

"கல்வியறிவும் இளமைச் சிறப்பும் வரம்பற்ற செய்வினைத் திறனும் வில் தொழில் தேர்ச்சியும் அழகும் வீரமும் என எல்லையற்ற பல நல்ல குணங்களும் ஆன பரதனுக்குப் பொருந்திய நலன்கள் எல்லாம் இழிந்த இடத்திலே சிந்திய நல்ல அமுதம்போல் ஆகின்றன" என்றும் கூறினாள்.

" கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்வினை உரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற்(கு) எய்திய
புல்லிடை உகுத்த அமுது ஏயும்போல் "

என்றாள்.

குறிப்பு

கைகேயி தன் கருத்துக்கு இயையாததால் வேதனையுற்றாள் கூனி என்ற பொருள்பட 'வேதனைக் கூனி' எனப்பட்டாள். பிறர்க்கு வேதனை தரும் கூனி என்றால் பொருந்தும் எனலாம்.

"மூற்றாள் திறமையுடையவள் நீ அது இல்லாதவள்" என்று ஒரு பெண்ணிடம் கூறினால் பொறாமையால் அப்பெண்ணின் மனம் தூண்டப்படுதல் உலக இயல்பு. இதனையே கைகேயியிடம் எதிர்நோக்குகின்றாள் கூனி.

பரதன் நாடாளவும் இராமன் காடாளவும் வகை செய்யவே ஒருவர் நாடாள மற்றவர் காடாளுதல் என்ற எண்ணத்தைக் கைகேயி உள்ளத்தில் முன்னதாக விதைக்கின்றாள் கூனி.

அரச குலத்தில் பிறந்து நல்ல இலக்கணம் அமையப் பெற்றோராயினும் முடிசூடி அரசினைப் பெற்றோரே அரசர் வரிசையில் இடம்பெறுவர். மிகச் சிறப்புற்ற அரசகுலத்தில் பிறந்தும் அரசர் வரிசையில் வைத்து எண்ணப்பெறும் பேறு பெறாத பரதன் இருந்தும் இல்லாதவன் என்ற பொருள்பட 'இறத்தலே நன்று' என்கின்றாள் கூனி.

இராமனுக்கு முடிசூட்டுதலை மனத்துட்கொண்டே பரதன் இங்கிருப்பது ஒருகால் அதற்கு இடையூறாகலாம் என்ற அச்சத்தில்தான் அவனைத் தசரதர் கேகய நாட்டுக்கு விரைந்தனுப்பியுள்ளார் என்று கற்பனையில் பேசித் தசரதரைக் குற்றவாளியாக்குகிறாள் கூனி.

பரதன்மேல் மிகப் பரிவுடையவள்போல் நடிக்கும் கூனி, அவன் இல்லாதபோது அவனை முன்னிலைப்படுத்தி 'எந்தையே பரதனே' என்று விளிக்கின்றாள். கைகேயி தானே நடக்கும் வஞ்சகத்தை உணர்வதாகவும் இல்லை; தான் சொன்னாலும் கேட்பதில்லையே என்று வருந்துகின்றாள் கூனி.

பரதன் இராமனுக்கு எவ்வகையிலும் தாழ்விலன் ; அரசுக்குரிய எல்லா நலன்களும் எய்தப் பெற்றவன். அப்பண்புகள் அவன் அரசு எய்தினால்தான் வெளிப்படத் தோன்றி விளங்கும். இல்லையெனில் அவை சிறிதளவும் எடுத்துப் பயன்படுத்தத் தகாத தூய்மையற்ற இடத்தில் கொட்டிய அமுதம் போலாகும் என்கிறாள்.

மந்தரையிடம் சினமுற்ற கைகேயி கடிந்து கூறல் (25-28)

சொன்ன தன் வாயும் கசக்குமாறு இதுவரை கூறிய கொடுஞ்சொற்கள் நெருப்பில் நெய்யை ஊற்றினதுபோல் (கைகேயியிடம்) சினத்தீயை எழுப்பின. கேகய நாட்டரசன் திருப்புதல்வியாகிய கைகேயி விளங்கும் மெல்லிய செவ்வரி பரந்த கயல்மீனைப் போன்ற கண்கள் சிவக்கக் கூனியை உறுத்துப் பார்த்துக் கூறத் தொடங்கினாள்.

கைகேயி, "கொடியவளே, சூரியனை முதல் நிலையாகக் கொண்டு வந்த குலத்தில் உரித்த நம் அரசன் முதலான முன்னோர் யாவரும் தம் உயிர் முதலான பொருள்கள் அழியினும், தம் வாக்குத் தவறாதவரே ஆவர். மயிலின் முறையைக் கொண்ட குலத்துரிமை பொருந்திய மனு முதலாக வந்த இக்குலத்துக்கு இழுக்கு நேருமாறு உனது இழிவான புத்தியால் என்ன வார்த்தை சொன்னாய்?"

"நீ எனக்கு நல்லவளும் ஆகாய். என் மகன் பரதனுக்கும் நல்லவள் ஆகாய். அரச நீதியை நோக்கும்போது உனக்கே நீ நல்லவள் ஆகாய். அறிவற்ற மனம் உடையவளே, உனது தீய வினை உன்னைத் தூண்டுதலால் இங்கு வந்து உன் மனத்துக்கு நல்லனவாகத் தோன்றியவற்றைக் கூறினாய்.

" எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை; அத்தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை வந்து ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லையும் சொல்லினை – மதியிலா மனத்தோய் "

" (மனிதராகப்) பிறந்தும் இறந்து மறுவுலகம் போயும் அடைய வேண்டுவதும், இழந்து போவதும், புகழே ஆகும். தன் ஒளி வேறுபடினும், நீதியே கெடினும், செய்த தவம் பயன் தராமல் மாறுபடினும், குற்றமற்ற வீரம் கெடுவதாயினும் தன்குல ஒழுங்கிலிருந்து மாறுபடல் முறையோ ?"

" பிறந்து இறந்துபோய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே
நிறம் திறம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்
திறம் திறம்பினும் செய்தவம் திறம்பினும் செயிர்தீர்
மறம் திறம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ"

குறிப்பு

மந்தரையின் சொற்கள் கோசலை, இராமன் ஆகியோர்க்குக் குற்றம் கற்பித்தன. ஆதலால் அவற்றைச் சொன்னவாய் கசப்பெய்தத் தக்கது என்றார். தீய சொற்கள் கைகேயி மனத்தில் முதற்கண்ணே சினத்தீயை மூட்டின. தொடர்ந்து அவள் கூறியவை, தீயில் நெய் சொரிந்தாற்போலாயின.

மூத்த புதல்வனே முடிசூடி ஆளுதல் சூரியகுலத்தில் தவறாது வந்த முறை. இக்குலத்து முன்னோர் தம் உயிர் போவதாயின் சொன்ன சொல் தவறார். மயில் முறை என்பது மயில் பல முட்டைகள் இட்டுக் குஞ்சு பொரித்தாலும் அவற்றுள் மூத்த குஞ்சுக்கே பொன்னிறத் தோகை முளைத்து வளர்தலாகிய முறை. மூத்தவனே அரசுக்குரியன் என்பதற்காக இது கூறப்பட்டது. 'மயில் முறைக்குலத்து உரிமையை' என்பதற்குக் கைகேயி பிறந்த கேகய மன்னன் மரபின் தூய்மையை என்றும் கொள்ளலாம். சூரியன் மகனாகிய மனுவே முதன் முதல் மன்னனாகிப் பல நீதிகள் வகுத்து முறைப்படி ஆண்டான். ஆதலால் 'மனுமுதல் மரபை' எனப்பட்டது.

மூத்தவனே அரசுக்குரியவன் என்ற இலக்குலத்து வரன்முறை தவறுதல் புகழுக்கு இழுக்கம் தருவதாகும். அது செய்யத்தக்கதன்று என்று நியாயத்தைக் கைகேயி எடுத்துக் கூறினாள்.

கைகேயியின் தூயசிந்தையும் கெடுதல் (29–30)

தீய மந்தரை இவ்வார்த்தைகளைச் சொன்ன அளவில், தேவர்களின் மாயையாலும், அவர்கள் பெற்ற நல்ல வரம் இருத்தலாலும், ஆக்கமுடைய முனிவர் செய்த அரிய தவப்பயனாலும், கைகேயி தேவியின் தூய மனமும் மந்தரையின் வஞ்சனைச் சூழ்ச்சியுரைகளால் வேறுபட்டது.

" தீயமந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின் இமையோர்
மாயையும் அவர்பெற்ற நல்வரம் உண்மையாலும்
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும் "

அரக்கர் செய்த பெரும் பாவமும் அவ்வரக்கர் அல்லாத நல்லவர் செய்த அறப்பயனும் தூண்டலால் தூயசொற்களைப் பேசி இளமான் போன்றவளாகிய கைகேயி தன்மனத்திலிருந்த நல்ல அருளை முற்றும் விட்டவள் ஆனாள். அவளது இரக்கமில்லாக் குணமல்லவா இவ்வுலகங்களுள் இராமனின் பரந்து விரிந்த பழமையான புகழ் என்ற அமுதை இன்றும் பருகி மகிழக் காரணமாகி நின்றது?

" அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்கம் இன்மை அன்றோ இன்று இவ் உலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே "

குறிப்பு

கைகேயியின் மனம் கூனியின் வார்த்தைகளால் இறுதியில் மாறியது. இம்மாற்றத்திற்குக் கூனியின் சொற்கள் மட்டுமன்றி, தேவர்கள் அரக்கரை அழிக்கத் திருமாலிடம் வரம் பெற்றமை, அதன் காரணமாக அவர்கள் செய்த மாயை, தண்டக வனத்துத் தவமுனிவர் முதலியோரின் அரிய தவப்பயன் ஆகியவையும் காரணமாயின என்று கம்பர் குறிப்பிடுகின்றார்.

தேவியின் தூய சிந்தை திரிந்தது என்றவர் அடுத்து அத்திரிபு அவளது அருட்குணம் முழுவதும் துறத்திற்கு இடமாயிற்று என்கின்றார். கைகேயி அருளைத் துறந்தது இராமபிரான் காடேகுதற்கும், இராவணன் முதலியோர் அழிவு நிகழ்தற்கும், அவற்றால் இராமபிரான் பெரும்புகழ் என்றும் அழியாமல் நின்று நிலவுவதற்கும் காரணமாயிற்று என்பர்.

வினா-விடைப் பகுதி

1. கூனி மந்தரையின் தோற்றம் குறித்து ஒரு பக்க அளவில் எழுதுக.

இராமனின் முடிசூட்டு விழாவிற்கு அயோத்திமாநகரம் அழகிய கோலம் கொண்டது. அப்போது உலகிற்குத் துன்பம் செய்யும் இராவணன் செய்த தீமைகள் ஒரு வடிவு கொண்டு வந்ததுபோல் கொடுமையான மனமுடைய கூனியாகிய மந்தரை தோன்றினாள்.

" இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள் "

என்று கம்பர் குறிப்பிடுகின்றார்.

இராமனுக்கு முடிசூட்டு விழா என்றறிந்ததும் கூனி சினங்கொண்டாள். அதனைத் தடுக்கும் எண்ணமே அவளிடம் மேலேங்கி இருந்ததால் அவளுடைய தோற்றமே சின உருவில் அமைந்ததாகக், காணப்பட்டது. மூவுலகத்தோர்க்கும் ஒரு பெருந்துன்பம் உண்டாக்குபவளாகித் துடிக்கும் நெஞ்சுடனும் நிலைத்த சினத்துடன் வந்தாள் என்பார் கவிஞர். சினமானது அவள் மனத்தைக் குடைந்து கொண்டு இருந்தது. அவளுடைய கண்கள் சினத்தீயை வெளிப்படுத்தி எரியும் கண்களாக அமைந்தன. மிகு சினம் காரணமாக உரத்துப் பேசுபவளாக இருந்தாள். (இரண்டாம் பாடல் அடிகளை இங்கே எழுதலாம்)

முன்னால் அக்கூனி இராமன்னின் கையில் உள்ள வில் வெளிப்படுத்திய மண் உருண்டையால் தான் அடியுண்டதை நினைத்து வெகுண்டவளாய், கீழ் உதட்டை மடித்துக்கொண்டு மயில்போன்ற கைகேயியிடம் வந்தாள்.

2. கைகேயி, கூனியின் சூழ்ச்சியால் எவ்வாறு மனம் மாறினாள்? (மூன்று பக்க அளவில்)

முன்னாளில் கூனி மந்தரையை இராமன் வில்லால் மண் உருண்டை மகாண்டு விளையாட்டாக அடித்துவிட்டான். அதனால் இராமனுக்கு முடி சூட்டுவதைத் தடுக்கவும் முயற்சித்தாள், அக்கூனி உலகிற்குத் துன்பம் செய்யும் இராவணனின் தீமைகள் ஒரு வடிவாக வந்ததுபோல் கொடுமனக் கூனி கைகேயியிடம் வந்தாள். சினத்தில் கீழுதட்டை மடித்துக் கொண்டு வந்தவள் மயில் போன்ற கைகேயியை உறக்கத்திலிருந்து எழுப்பினாள்.

கூனி; "துன்பமிக்க இராகு பற்றவரும்போதும் இயல்பு கெடாமல் ஒளிவீசும் நிலவுபோல், துன்பம் உன்னைப் பற்ற வரும்போதும் சிறிதும் வருத்தம் அடையாமல் உறங்குகின்றாயே." என்றாள். வேல் போன்ற கண்ணுடைய கைகேயி, "பகை போக்கும் வில்லேந்திய வீரர் என் மக்கள் நால்வர் நலமுடன் அறம் தவறாமல் இருக்கும்போது எனக்கு எத்தகைய துன்பம் நேரும்?" என வினவினாள். "புகழ்மிக்க புதல்வர்களைப் பெற்றவர் வலிய துன்பங்களிலிருந்து நீங்கி நன்மை அடைவர். அப்படியிருக்க எல்லா உலகுக்ட்கும் வேதம் போன்ற இராமனை மகனாகப் பெற்ற எனக்குத் துன்பம் வருவதுண்டோ?" என்றும் வினவினாள்.

".....புவிக்கெலாம் வேதமே ஆன
இராமனைப் பயந்த எற்(கு) இடர் உண்டோ என்றாள்."

இராமனிடம் பேரன்பு கொண்ட கைகேயி இவ்வாறு கூறினதும், தீவினைக் கூனி, "உனக்கு வரும் நன்மை அனைத்தும் கெட்டன. உன் செல்வமும் அழிந்தது. கோசலை தன் அறிவால் நல்வாழ்வு நல்வாழ்வு பெற்றாள்" என்றாள். அதற்குக் கைகேயி "மன்னாதி மன்னனைக் கணவனாகவும், புகழ்மிக்க பரதனை மகனாகவும் பெற்ற கோசலைக்குக் கிட்டும் வாழ்வு யாதுளது?" என்று வினவினாள். இராமனைத் தன் மகனாகவும் பரதனைக் கோசலை மகனாகவும் கூறுமளவிற்கு அவள் உள்ளம் உயர்ந்திருந்தது. அந்த உள்ளத்தைத் திரிக்க முற்பட்டாள் கூனி.

"ஆடவர் நகைக்க, ஆண்மை இழிவடைய தாடகை என்ற பெண்ணை அழித்த இராமன் நாளை முடிசூட இருக்கிறான். கோசலைக்கு வந்த பெருவாழ்வு இதுவே" என்றாள் கூனி. அதனைக் கேட்ட கைகேயி கோசலையின் அன்புணர்ச்சியைத் தானும் கொண்டு, தசரதனைத் தன் மனத்தில் கொண்டிருந்ததால் வேற்றுமையுறவில்லை. மாறாக மகிழ்ந்து ஒரு பொன்மணி மாலையை அச்செய்தி கூறிய கூனிக்குப் பரிசளித்தாள். கூனியோ மிகு சினத்துடன் தரையில் குழிபட அம்மாலையை வீசி எறிந்தாள்.

"நீ அறிவற்ற பைத்தியக்காரி. பரதனுடன் பெருந்துயரம் அடைவாய். நான் உன் மாற்றாளான கோசலையின் தாதியர்க்கு ஏவல் செய்யப் பொறுக்கமாட்டேன். செவ்வாயுடைய சீதையும் கருநிற இராமனும் சிம்மாசனத்தில் பரதன் தரையிலும் இருக்கும் நிலை வந்தும் நீ எவ்வாறு மகிழ்ச்சி கொள்கிறாய்? கோசலை மகன் அரசுச் செல்வத்தால் சிறப்படைய உன்மகன் நடைப்பிணமாய்

இருக்கின்றான். எப்படி அவன் துயரை ஆற்றுவான்? அவன் பிறந்தும் பிறவாதவனே." என்றாள் அக்கூனி.

"இராமன் அவன் தம்பி இலக்குவனுடன் இப்புவியை ஆள, பரதனை அவன் தம்பி சத்துருக்கனுடன் காட்டிற்கு அனுப்பல் நல்லது. பரதன் மன்னர் வரிசையில் எண்ணப் பிறக்கவில்லை. ஆதலால் அவன் இறந்துபடுதல் நல்லது. பரதனைத் தசரதன் நெடுந்தொலைவில் உள்ள கேகயநாட்டிற்கு விரைந்து அனுப்பியதன் உட்கருடத்தை இப்போது உணர்கிறேன். 'அப்பா, பரதா நடுநிலை தவறி இராமனுக்குப் பட்டம் சூட்டுவதால், தந்தையும் உனக்குக் கொடியவர். தாயும் உனக்கு கொடியவளே. நீ யாது செய்வாய்? ' " என்று பரதன் நலனுக்காகக் கூறுபவள்போல் பேசினாள்.

" தந்தையும் கொடியன் நற்றாயும் தீயலாள்
எந்தையும் பரதனே என் செய்வாய்?"

என்றாள்.

மேலும், "கல்வியறிவும் இளமை நலனும் செய்வினைத் திறனும் அழகும் வில் வீரமும் எனப்பல நல்ல குணமுடைய பரதனின் நலன்கள் இழிந்த இடத்திலே சிந்தும் அமுதம்போல் ஆகின்றன" என்று கூறினாள்.

" கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்வினை உரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற்(கு) எய்திய
புல்லிடை உகுத்த அமுது ஏயும் போல் "

என்றாள்.

இவ்வாறு வாய் கசக்க அவள் கூறிய கொடுஞ்சொற்கள் நெருப்பில் நெய்யை ஊற்றியதுபோல் கைகேயியிடம் சினத்தீயை எழுப்பின. "கொடியவளே, சூரிய குலத்தவரான மன்னன் முதலான முன்னோர் உயிரழியினும் வாக்குத் தவறாதவர் ஆவர். இம் மனுகுலத்துக்கு இழுக்கு ஏற்படுமாறு உன் இழிவான புத்தியால் என்ன வார்த்தை கூறினாய்! நீ எனக்கும், என்மகனுக்கும் உனக்கும் நல்லவள் இல்லை. தீவினை தூண்டவே இவ்வாறு கூறினாய். நாம் அடைய வேண்டியதும் இழந்து போவதும் புகழே; தீவினை கெட்டாலும் குல ஒழுங்கிலிருந்து மாறுபடல் முறையோ?" என்றாள்.

தீய மந்தரை உரையால் தேவர்கள் மாயையாலும் அவர்கள் பெற்ற நல்வரத்தாலும், முனிவர் தவப்பயனாலும் கைகேயியின் தூய மனம் வேறுபட்டது. அரக்கர் செய்த பாவமும் அரக்கர் அல்லாத நல்லவர் செய்த அறப்பயனும் தூண்டியதால் தூய சொற்கள் பேசும் இளமான்போன்ற கைகேயி மனத்திலிருந்து நல்ல அருளை முற்றும் விட்டவள் ஆனாள்.

இவ்வாறு கைகேயி கூனியின் சூழ்ச்சியால் மனம் மாறினாள்.

" அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்"

கலிங்கத்துப் பரணி

களம் பாடியது (ஆசிரியர் : சயங்கொண்டார்)

கலிங்கத்துரப்பரணியின் ஆசிரியர் சயங்கொண்டார். இவர் சோழ நாட்டில் நன்னிலத்தையடுத்த தீபங்குடியில் தோன்றினார். கலிங்கப் போர் நிகழ்ந்த பின், ஒரு நாள் குலோத்துங்க மன்னனும் சயங்கொண்டாரும் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அம்மன்னவன் "செந்தமிழ்ப் புலவீர், கலிங்க நாட்டைச் சயங்கொண்டமையால் நானும் தங்களைப் போல் சயங்கொண்டானாயினேன்" என நகைச்சுவையால் விளம்பினான். அதனைச் செவிமடுத்த சயங்கொண்டான் பாடுதல் சாலத் தகவுடைத்தாம்' என விளம்பிக் கலிங்கத்துப் பரணியைப் பாடி முடித்தார் எனப்பர். இவர் கலிங்கத்துப் பரணியை, முதல் குலோத்துங்கச் சோழன் அவையில் அரங்கேற்றம் செய்தார். அது காலை அவ்வேந்தன் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பொற்தேங்காயை உருட்டி இவரையும் இவர்தம் நூலையும் சிறப்பித்துப் பாராட்டினான்.

இவரது காலம் கி.பி. 1070 முதல் 1118 வரை எனக் கொள்ளலாம்.

களம் பாடியது

இப்பகுதியில் கருணாகரன், கலிங்கரோடு நிகழ்த்திய போர்களச் செய்திகளை வருணித்துக் கூறுகின்றார். கலிங்கப் பேய், கலிங்க நாட்டுப் போரினைச் சொல்லி முடித்து, தேவியே, அப்போர்க்களத்தைப் பார்க்க வேண்டும் என அவ்வம்மையைத் தொழுதது. உடனே, அவ்வம்மை தன் பேய்க் கூட்டத்தோடு சென்று, அக்களத்தின் காட்சியை அவர்களுக்குக் காட்டியபின், அவைகளைப் பார்த்து, இனி நீங்கள் கூழ் சமைத்துப் பருகுங்கள் என கட்டளை இட்டனர். உடனே அப்பேய்கள் அவ்வாறே கூழ் சமைத்துண்டு முதற்குலோத்துங்கனை வாழ்த்திய செய்தியையும் ஆசிரியர் இதில் குறிப்பிடுகின்றார்.

1. போர்களச் சிறப்பு

கருத்து :

தங்கள் உடம்பிலுள்ள பல புண்களிலிருந்து உதிரத்தைப் பொழிந்து, பின் கால்கள் தம்முடன் அசையும்படி, குருதி வெள்ளத்திலே நீந்திச் செல்லும் யானைகள், கடலில் தமக்குப் பின்பு மரக் கலங்கள் தொடரும்படி முன்னே செல்லும் மரக்கலன்களைப் போல் காணப்படுகின்றவற்றைப் பாடுங்கள் பாடுங்கள்.

குறிப்பு :

யானைகள் குருதி வெள்ளத்தில் ஒன்றன் பின் ஒன்று நீந்திச் செல்லுங்காட்சி, கடலில் மரக்கலங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து செல்லுதலை ஒத்திருந்தனவாம். மரக்கலங்கள் யானைகளுக்கு உவமையாதலை, பொய்களிறுடை திரை மரக்கலம்' என்றதனால் அறியலாம்.

2. குதிரைகள் குதிரைத்தறிகளை ஒத்தமை

கருத்து :

பெரிய குதிரைகள் தம் மேலுள்ள தவிசுகள் சரிந்து விழவும், கொழுப்பாகிய சேற்றில் தம் கால்கள் அழுந்தவும் பாய்தலால் வரிசையாய் நின்று ஒலிக்கும் இரத்தமாகிய மிக்க நீரை அடைத்து வைக்க அழுந்தி நின்ற பல குதிரை மரங்களைப் போன்ற தன்மையைக் காண்மின்.

குறிப்பு :

கொழுப்பாகிய சேற்றில் தம்முடைய கால்கள் பதிந்து கிடக்கும் குதிரைகள். உதிரமாகிய நீர் வெள்ளத்தையடைக்க அமைந்த குதிரை மரங்களை ஒத்திருந்தன என்கின்றார். குதிரைக்காரி என்பது நீரை அடைத்தற்குப் பயன்படுத்தும் ஒரு வகை மரமாம்.

படுதல், ஒலித்தல், கடுமை, மிகுதி. கடும்புனல்: விரைவாய் பாயும் நீர்.

3. வீரர் முகமலர்ச்சி

கருத்து :

"தம்மிடம் வந்த விருந்தினர்களும் வறியவர்களும் தம்மை அடுத்து உணவை உண்ணுதலால் அதனைக் கண்டு மேலும் மேலும் களிப்பால் முகமலர்ச்சி கொள்ளும் பெரியோர்களைப் போல், பருந்துகளின் கூட்டங்களும், கழுகுகளின் கூட்டங்களும் தங்கள் குடல், ஈரல் முதலிய உடலுறுப்புக்களைக் கொத்தித்தின்ன தாமரைமலர் போன்ற தங்கள் முகக்களிப்பால் மலர்ச்சி கொண்ட வீரர்களைப் பாருங்கள் பாருங்கள்.

குறிப்பு :

இங்கு மேலோர் வீரர்களுக்கும்; விருந்தினரும் வறியவரும் முறையே பருந்துகளுக்கும் கழுகுகளுக்கும்; உணவு வீரர்களின் உறுப்புக்களுக்கும் உவமையாகும்.

4. வீரர் உலோபிகட்கு உவமை

கருத்து :

"தாங்கள் இறக்கும் வரையிலும் பிறருக்குச் சிறிது பொருளும் உதவி செய்யாத உலோபிகளை விரும்பி அவர்களைச் சார்ந்திருக்கும் மூடர்களைப் போல் கொலையுண்ட வீரர்களின் உடலில் நிலை பெற்றிருக்கும் உயிர் நிற்கும் அளவும், அந்த வீரர்களின் அருகில் இருந்து அவர்களை விட்டு நீங்காத நரிக்கூட்டங்களின் இணக்கத்தைப் பாருங்கள்.

குறிப்பு :

கொலையுண்ட வீரர்களின் உடல் துடித்ததால் நரிகள் அவைகளை அணுக அஞ்சின என்பதாம். உலோபி வீரர்களுக்கும், பொருள் அவர்கள் உறுப்புக்களுக்கும், மூடர்கள் நரிகளுக்கும் உவமை. புண்பட்ட வீரர்களின் உயிர் நீங்கும் அளவும் அவர்களைப் பேய் முதலியன அணுகாதிருத்தலைப் பேய் நிலை என்பர்.

5. கொடிச் சீலைகளுடன் விழுந்து கிடக்கும் யானைகளின் தன்மை

கருத்து :

"பெரிய குருதி வெள்ளத்தில் சாய்ந்து விழுந்து கிடக்கும் மத யானைகளோடு, சாய்ந்து படிந்து கிடக்கும் கொடிச் சீலைகள், தங்கள் கணவரோடு நெருப்பாகிய படுக்கையில் தங்கியிருக்கும் கற்புநெறி அமையப் பெற்ற மகளிரை ஒத்திருத்தல் காண்மின்! காண்மின்!"

6. களம்புக்க மகளிர் செய்தி

கருத்து :

"தம் கணவரோடு தாமும் போக வேண்டும் என்று எண்ணிச் சில பெண்கள் சாதகரைக் கேட்பவர்களால், அவர்கள் உடலைத் தேடிப் பார்ப்பார்கள். அவை கிடைக்கப் பெறாமையால் 'எங்கள் கணவர் உடல்கள் விழுந்துகிடக்கும் இடம் எவ்விடம் என்று பலமுறையும் இடாகினிப் பேயைக் கேட்கும் பெண்களைக் காண்மின்! காண்மின்!"

7. தலையொடு முடிதல்

கருத்து :

தன் உதடுகளை மடித்துக் கொண்டு போர்க் களத்தில் இறந்துபட்ட மேன்மையான தன் கணவனை ஒருத்தி பார்த்து. "பவளம் போன்ற உன் உதடுகளில் புண்ணின் தழும்பு எதனையாவது நீ அடைந்தனையா? நீ போரில் பலரைக் கொன்று இவ்வாறு விழுந்து கிடப்பதோ!' என்று வெறுப்பு மிகுந்து அவனருகில் நின்று உயிர் விடுவாளைக் காண்மின்! காண்மின்!"

8. தலையொடு முடிதல்

கருத்து :

"தன்னுடைய கணவனுடைய உடம்பை நிலமகள் தாங்கவிடாமல் தன் மார்பில் அணைத்து. விண்ணுலகத்திலுள்ள அரம்பையர்கள் அந்தப் போர்வீரனுடைய உயிரைத் தழுவு முன்பே, தன் உயிரைத் தன் கணவனோடு ஒருசேர விடுகின்ற ஒருத்தியைக் காண்மின்! காண்மின்!"

9. தம் கேள்வர் உறுப்புக்களைக் காண விழைதல்

கருத்து :

"அமர் செய்யும் வாளைப் பிடித்த பெரிய கைகள் எங்கே? மணிகள் பதிப்பிக்கப் பெற்ற அழகிய மார்பு எங்கே? போர்க்களத்தில் எத்தகைய வீரர்கள் எதிர்த்து வந்தாலும் புறமுதுகிட்டு ஓடாத – பருத்த மிக்க வலிமையுடைய தோள்கள் எங்கே? எங்கே? என்று பயரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!

10. விழுப்புண்பட்ட யானை வீரர்

கருத்து :

"பெரிய மலைகள் இப்படியிருக்கும் – இவ்வாறே இருக்கும் என்று கண்டோர் சொல்லும்படி நிற்கும் – போர் உடற்றும் யானைகளையுடைய வீரர்கள் ஒருவரையொருவர் வெல்ல முற்படும் போர்களத்தில் தங்கள் முதுகில் புண் ஏற்படும் என்ற பழிக்குப் பயந்து, தங்கள் முன்புறமாகிய மார்பில் புண்பட்டவர்களை இன்னமும் காண்மின்!"

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

நூல் :

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் என்பது வைத்தீசுவரன் **கோவில் என்ற ஊரில்** எழுந்தருளியுள்ள முத்துக்குமாரசாமி மீது பாடப்பெற்ற பிள்ளைத் **தமிழ் என விரியும். இது** பாட்டுடைத் தலைவன் பெயரால் வழங்குவது, முருகப்பெருமானின் திருவிளையாடல்களையும் அருட்செயல்களையும் அழகாக எடுத்துரைப்பது, மிகச்சிறந்த கற்பனை நயமும் **இனிய ஓசை நயமும்** அமைந்தது இதன் பாடல்கள். மனம் உருகிக் கற்போரால் பக்திப்பாடலாக **இசைக்கப்படுகின்றன.**

பிள்ளைத் தமிழ் :

பிள்ளைத் தமிழ் என்பது தெய்வத்தையோ மக்களுள் மாண்புற்றாரையோ குழந்தையாகப் பாவித்து அவர் தம் அருமை பெருமைகளைச் செய்யுளில் அமைத்துச் சுவைபடப் புகழ்ந்து பாடுவதாகும். இது கவிமரபு, தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று.

பிள்ளைத் தமிழ், ஆண்பால் பிள்ளைத் தமிழ், பெண்பால் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படும். ஆண்பால் பிள்ளைத் தமிழ், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபாறை, சிறுதேர் எனப் பத்துப் பருவங்களாகப் பாடப்பெறும். **பெண்பால்** பிள்ளைத் தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, **அம்மானை, நீராடல்.** ஊசல் எனப் பத்துப் பருவங்களாகப் பாடப் பெறும்.

குழந்தையின் மூன்றாம் மாதம் முதலாக இருபத்தோராம் மாதம் முடிய அமைந்த மாதங்களுள் சிறந்தனவாகிய ஒற்றித்த (3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21 ஆகிய ஒற்றைப் படை எண் அமைந்த) பத்து மாதங்களையும் காப்பு முதலிய பத்துப் பருவங்களாக வகுத்துக் கொண்டு பாடுவது, பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கியத்தினது மரபாகும். எனினும் குழந்தையினது மூன்றாம் ஆண்டிலும் பிள்ளைத் தமிழ் பாடப்பெறும் என்று கொள்வாரும் உண்டு. பறை முழக்குவதும், கழங்கு **அம்மானை** ஊசல் முதலிய விளையாட்டுகளை விளையாடுவது ஏறக்குறைய ஒன்றரை வயதுக் **குழந்தையால்** இயலா என எண்ணி இங்ஙனம் கொண்டதாகவும் கொள்ளலாம்.

பிள்ளைத் தமிழ், பெரும்பான்மையாக ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்கள் வீதம் பாடப்பெறுவது ஆகும். இது குழந்தைப் பருவத்தைத் தலைவன் வைத்துப் பாடப் பெற்றிருந்தாலும் பாட்டுடைத் தலைவருடைய வீரச்செயல்கள், திருக்குணங்கள் முதலிய இதில் சிறப்பாகப் புகழ்ப் பெற்றிருக்கும்.

திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் என்பன புகழ்பெற்ற பிள்ளைத் தமிழ் நூல்களுள் சிலவாகும்.

ஆசிரியர் :

முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழை இயற்றியவர் குமரகுருபர அடிகள், இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரின் ஒரு பகுதியாகிய ஸ்ரீகைலாசம்

என்ற இடத்தில் பிறந்தவர். சண்முகசிகாமணிக் கவிராயரும் சிவகாம சுந்தரியம்மையாரும் இவர் பெற்றோராவர்.

ஐந்தாண்டுகள் இவர் ஊமையாக இருந்தார். பெற்றோர் இவரைத் திருச்செந்தூருக்கு கொண்டு சென்று கோயில் வாயிலில் கிடத்தி, முருகப்பெருமானை மனமுருகி வழிபட்டு நின்றனர். முருகப்பெருமாள் அருளினால் குமரகுருபர் பேச்சுத்திறன் வரப்பெற்றார். கந்தர் கலிவெண்பா என்ற நூலை அப்பெருமான் மீது இயற்றினார்.

திருவாரூர், தருமபுரம், வைத்தீசுவரன் கோயில், சிதம்பரம், மதுரை, காசி முதலிய திருத்தலங்களுக்கு அவர் சென்றார். மும்முறை காசியிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து திரும்பினார். பின்னர் காசியிலேயே முத்தியடைந்தார். இவரது காலம் கி.பி.பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி.

குமரகுருபரர் இயற்றிய நூல்கள், கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான் மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சிதம்பரமும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, பண்டார மும்மணிக்கோவை, காசிக் கலம்பகம், சகலகலா வல்லிமாலை, கைலைக் கலம்பகம் என்பன. இவற்றுள் கைலைக் கலம்பகத்தில் சில செய்யுள்களே இப்போது கிடைக்கின்றன.

பாடப்பகுதி :

முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழிலிருந்து பருவத்திற்கு ஒரு பாடல் வீதம் முதல் ஐந்துப் பருவத்திலிருந்தும் ஐந்துப் பாடல்கள் நமக்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

1. காப்புப் பருவம் :

காப்புப் பருவம் என்பது குழந்தையைக் காக்குமாறு திருமால் முதலாக முப்பத்து முக்கோடித் தேவர் ஈறாக உள்ள பல கடவுளர்களை வேண்டியப் பாடுவது. இது குழந்தையினது மூன்றாம் மாதத்தில் நிகழ்வதாகக் கூறுவது மரபு.

கருத்து :

இடம் பொருந்தியது தெய்வத்தன்மை அமைந்தும் அழகியதும் ஆகிய மேருமலையை மத்தாகக் கொண்டு எட்டுத்திசை யானைகளும் சக்கரவாள மலையும் குலமலைகளும் சுழலுமாறு சுழற்றிக் கடைய, பரந்த கடலில் தெளிந்த அலையின் மீது தோன்றியவளும் பாக்களிற் பொருந்திய இனிமை முதிர்ந்து அமுதம் ஒழுகும் பசுங்குதலையாகிய மழலைச் சொற்களையுடைவளும் தாமரை மலரில் வீற்றிருப்பவளும் ஆகியவள் திருமகள். அவளுடைய இரண்டு முலைகளாகிய மலைகளின் மேல் படிந்திருக்கின்ற பச்சைப் பசுமேகமாகிய திருமாலே, முத்துக் குமரனைச் சிறப்பான முறையில் காப்பாற்றுவாயாக அக்குமரன், பூக்கள் பொருந்திய கற்பகச் சோலையையுடைய தேவலோகத்தில் சிவந்த கண்களைக் கொண்ட இந்திராணியால் வளர்க்கப்பட்டவளும் சூடம் போன்ற நெருங்கின கொங்கைகளைக் கொண்டவளும் களிப்பையுடைவளும் ஆகிய தெய்வயானை விளையாடுவதற்கு இடமாக அமைந்த பன்னிரண்டு தோள்களாகிய மலைகளையுடையவன்; மேன்மை பொருந்திய மலைச் சாரலில் வாழ்கின்ற குறச்சிறுமியாகிய வள்ளிநாயகியின் மேல் தன் விருப்பம் முழுவதும் வைத்த கட்டழகன்; சங்கங்கள் தோறும் முத்தமிழ்த் தொகுதி நிறைந்த கந்தபுரியில் வாழ்கின்றவன்.

விளக்கம் :

மேகம் மலை மீது படிதல் இயல்பாதலால், பங்கயச் செல்வி இருபொங்கைக் குவட்டுவளர் பச்சைப் பசுங்கொண்டல் எனப்பட்டது.

காப்புப் பருவத்தில் எல்லாத் தேவர்களையும் வணங்குவது இயல்பாயினும், காத்தல் தொழிலுக்குரிய கடவுளான திருமாலை வணங்கல் முதற்கண் கூறப்பட்டது.

2. செங்கீரைப் பருவம் :

செங்கீரை ஆடும் பருவம். இப்பருவத்தின் கண்குழந்தையானது ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி, இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றி, தலையை நிமிர்த்தி முகம் அசைய ஆடும்.

இச்செயல் செவ்வியகீரைத் தண்டு மெல்ல அசைந்தாடுதல் போல இருக்கும். ஆகவே இப்பருவம் செங்கீரைப் பருவம் எனப்பட்டது. இது குழந்தையினது ஐந்தாம் மாதத்தில் நிகழ்வதாகக் கூறுவது மரபு.

கருத்து :

குழையொடு குழை எதிர் எதிராக மோதிக் காதுகளில் அணிந்த குண்டலங்களும் ஒளிவீச, குமுதம் போன்ற இதழோடு கூடிய கனிபோன்று வாயினிடத்து அமுதம் ஊறிய புன்முறுவலாகிய நிலா விரிய, முழு வயிரத்தால் ஆன வாகு வலயமும் முன்கையில் அணியும் முதாரியும் ஒளியை உமிழ, முத்துக்கள் அரும்பினாற்போலச் சிறு வேர்வை முகத்தில் அரும்ப, புழுதிபடிந்த பசிய திருமேனியில் விளங்கும் பேரொளியானது, பொங்கியெழ, தாமரைமலர்கள் போல மலர்ந்த கண்களின் கடையினின்றும் பொழிந்த அருள் வெள்ளமானது கரைபுரண்டு ஓட, அழகு பழுத்து முதிர்ந்த இளங்கனி போன்றவனே, செங்கீரை ஆடுக; ஆதி வைத்தியநாத புரியில் வாழும் குகனே, செங்கீரை ஆடுக.

3. தாலப் பருவம் :

குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் பருவம். தால் – நாக்கு தாலாட்டு – நாவை அசைத்துப் பாடுவது. இது குழந்தையினது ஏழாம்மாதத்தில் நிகழ்வதாகக் கூறுதல் மரபு.

கருத்து :

பூசப்பட்ட சுண்ணச் சாந்தானது வெண்மையான நிலவொளியை வீசுவதும், பதிக்கப் பெற்ற பெரிய மாணிக்கத் தொகுதிகள் ஒளியைப் பரப்புவதுமான செம்பொன் மாடத்தின் மேல் தளத்தில், பெரிய போரினைச் செய்யும் தன்மை வாய்ந்த கண்களைக் கொண்ட சிறுமியர் நறுமணமுள்ள அகிற்புகையை ஊட்டிப் புலர்த்துகின்ற கூந்தற் காட்டினை மேகம் என்று எண்ணி அழகிய பவளம் போன்ற வாயிடத்துப் பூத்த புன்சிரிப்பைச் சகோரப் பறவை உண்ணும் அத்தகைய பரந்த முழுநகையானது மிகுந்து பொழிகின்ற நிலாவுக்குச் சந்திரகாத்தக் கல்லைப் பதித்த ஒளி விளங்குகின்ற மாடங்களின்றும் மேல் மாடங்களினின்றும் உருகிப் பெருகும் கலங்கல் வெள்ளமானது கடலினது உவர்ப்போடு கூடிய புலால் நாற்றத்தையும் மாற்றும். இத்தகைய தெய்வத்தன்மை வாய்ந்த கந்தபுரியில் வாழ்பவனே, தாலோ தாலேலோ; மலைமகளாகிய பார்வதி வயிற்றிற் பிறந்த சிறந்த இரத்தினனே, தாலோ தாலேலோ

விளக்கம் :

மேகத்தைக் கண்டு ஆடும் தன்மை வாய்ந்த மயில், பெண்ணின் கூந்தலையும் மேகம் என்று கொண்டு ஆடியது.

4. சப்பாணிப் பருவம் :

குழந்தை தன் இரண்டு கைகளையும் ஒருங்கு சேர்த்துக் கொட்டும் பருவம் சப்பாணிப் பருவம் எனப்படும். இது ஒன்பதாம் மாதத்தில் நிகழ்வதாகக் கூறுவது மரபு.

கருத்து :

வளையும் அலைகளையுடைய திருப்பாற் கடலானது வயிறு நொந்து பெற்றவளும். மணமிகுந்த தாமரை மலரில் வீற்றிருப்பவளும் ஆகிய திருமகள் தன் முன்கையில் வைத்துக் கொண்டு முத்தமிட்டு விளையாடுகின்ற பச்சைப் பசுங்கிளிபோல மழலை முதிர்கின்ற மெல்லிய குதலை மொழியைத் கற்கத் தொடங்குகின்ற குறப்பெண்ணாகிய வள்ளி நாயகியின் கற்றையான கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டியும், மலர்களைச் சூட்டியும், சுட்டியணிந்த நெற்றியிலுள்ள வேர்வையைத் துடைத்தும், நெகிழ்ந்த கத்தூரித் திலகத்தை எழுது கோலால் எழுதியும், உள்ளங்கைக்கு அடங்காத நெடிய கடைக் கண்ணுக்கு அழகு மிக மைதீட்டியும், மென்மையான முலையிடத்துப் பசுமையான களபச் சந்தனம் பூசியும், இவ்வாறான குற்றேவல்கள் அனைத்தையும் அவளுக்குச் செய்தும், அகன்றதும் குங்குமம் பூசியதும் ஆகிய தோள்களைத் தட்டிக் கொண்டும் நடனம் ஆடினவளே, சப்பாணி கொட்டியருள்வாயாக; தையல் நாயகியார் தழுவும் தெய்வநாயகனார் மகனே; சப்பாணி கெட்டியருள்வாயாக.

5. முத்த பருவம் :

தாய் தந்தை முதலியோர், குழந்தையை முத்தம் தருமாறு வேண்டுவது முத்தப் பருவமாகும். இது குழந்தையின் பதினொன்றாம் திங்களில் நிகழ்வதாகக் கூறுவது மரபு.

கருத்து :

உனது வடிவழகும், எழுதற்கரிய தோளும், மணிமிகுந்த கொச்சை மாலையும், மார்பில் தவழும் குரவமலர் மாலையும், இடுப்பில் கட்டப்பட்ட மணியும், அழகிய கச்சையும், ஊர்தியாக செலுத்தப்படும் மயிலும், வேலும் அருள் ஒழுகும் முகத்தாமரையும், தாமரை மலர் போன்ற கண்களும் ஆகிய இவற்றையெல்லாம் அடியார்கள் தமது கண்ணிலும் மணத்திலும் பலமுறை எழுதி எழுதி நாள்தோறும் அடிகளே என்று உன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் அடியார்களேயன்றி மற்றுமுள்ள வேறாகிய தேவர் கூட்டமும் எல்லா வேதங்களும் திருமாலும் நான்முகனும் உன் திருவடியையும் திருமுடியையும் முழுவதுமாக உணர்ந்து கொள்வதற்கு அரியவனாக இருக்கும் முதல்வனே. முத்தம் தருக முனிவர்கள் வழிபடுதற்கு இடமாகிய பரிதிபுரியில் எழுந்தருளியுள்ள முருகனே முத்தம் தருக.

நந்திக் கலம்பகம்

கலம்பக இலக்கணம் :

சிற்றிலக்கிய வகை நூல்களுள் கலம்பகமும் ஒன்று. பலவகைப் பொருள் பற்றி வெவ்வேறு செய்யுள் வகைகளால் நூறு பாட்டுக்கள் அமைந்த நூல் கலம்பகம் எனப்படும். நூறு செய்யுள்களும் அந்தாதி முறையில் அமையும். அதாவது ஒரு செய்யுளின் இறுதித் தொடரோ, சொல்லோ, சீரோ, அசையோ அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமைவது அந்தாதி முறை ஆகும்.

தோள் வகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தூது, தவம், மடக்கு, மறம், பாண், களி, சிந்து, இரங்கல், கைக்கிளை, ஊர், வண்டு, தழை, ஊசல் ஆகிய உறுப்புகளும் விரவி வருவதால் கலம்பகம் எனவும் பெயர் பெறும் என்பர். பலவகை மலர்கள் கலந்து தொடுத்த மாலை போன்று பலவகைப் பாக்களும் கலந்து யாத்த நூல் கலம்பகம் என்பாரும் உளர். கலம்பக நூலில் அகமும், புறமும் கலந்து அமையும்.

நந்திக் கலம்பகம் :

நந்தி[illegible]ன் என்ற பல்லவ மன்னனைப் புகழ்ந்து பாடப்பட்டமையால் இது நந்திக்கலம்பகம் எனப் பெயர் பெறும். எனவே அவன், இந்நூலின் பாட்டுடைத் தலைவன் ஆவான். அவனை மூன்றாம் நந்திவர்மன் என்பர் வரலாற்று ஆசிரியர் தெள்ளாறு என்னும் ஊரில் நடந்த போரில் வெற்றி பெற்றமையால் அவனைத் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்பர்.

நூல் எழுந்த வரலாறு :

நந்திக் கலம்பகம் எழுந்தமைக்கு வரலாற்று உண்மை எதுவும் இல்லை. ஒரு கதை வழங்கப்படுகின்றது. நந்திவர்ம பல்லவனைத் தொலைப்பதற்கு அவன் பகைவன் சில சூழ்ச்சிகள் செய்தான். அவை நிறைவேறாமல் போயிற்று, இறுதியாக ஒரு சுவையான நூல்பாடி, அதில் அவனுடைய மரணத்துக்கு உரிய வகையில், படிப்படியாகச் சில தொடர்களையும் செய்யுள்களையும் அமைத்து, ஈம விறகு அடுக்கி, அதன்மேல் அரசன் வீற்றிருந்து கேட்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டான். நந்திவர்மன் தமிழ்ப்பாட்டுகளின் சுவையில் மிகவும் ஈடுபட்டவன். ஆகையால் அந்த வேண்டுகோளுக்கு இசைந்தான். சூழ்ச்சியைப் பற்றி அறிந்த பிறகும் பாட்டுக்களின் சுவையில் திளைத்து ஒன்றுபட்ட அவனுடைய மனம் அதைவிட்டு எழ இடந்தரவில்லை. இறுதி வரை ஈமவிறகின் மேலே இருந்து நூறாவது பாட்டையும் கேட்டு அதன் மேலேயே உயிர் துறந்தான் என்று கதை கூறும் – நந்திவர்ம பல்லவமன்னனின் அரசாட்சியைக் கவர்ந்து கொள்வான் வேண்டி, அவனது தம்பியே சூட்சி செய்து நூறு கலம்பகப் பாட்டுகளையும் பாடினான் என்பாரும் உளர். ஆயினும், நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

செய்யுள் - 1 (எண் சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

ஊசல் :

நந்திவர்ம மன்னன் பால் காதல் கொண்ட பெண்டிர் பலர், தங்கள் நாட்டு, மன்னனின் சிறப்புப் பற்றிப் பலவாறு பேசிக் கொண்டனர். அவர்களுள் ஒருத்தி ஏனைய மகளிரை நோக்கி, "நாம் ஊசல் விளையாடுவோம்" என்று கூறும் பான்மையில் இப்பாடல் அமைந்துள்ளது.

கருத்து :

"செவ்வரிப் படர்ந்த கண்களையுடைய மடப்பம் (இளமை) பொருந்திய பெண்களே! நாம் ஊஞ்சலில் ஆடுவோம் பட்டாலாகிய மேலாடைகள் அசையுமாறு ஊஞ்சல் ஆடுவோம். 'ஆடகம்' என்னும் பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்கள் ஒளிவீசுமாறு ஊஞ்சல் ஆடுவோம். அழகும் மென்மையும் வாய்ந்த மலர்கள் சூடியுள்ள கூந்தல் நெகிழ்ந்து சரியுமாறு நாம் ஊஞ்சல் ஆடுவோம். தெள்ளாற்றுப் போரில் பகைவர்க்கு வானுலக வாழ்வு அளித்தவனும், பகை வேந்தர்களை முற்றுமைகயிடும் வலிமை வாய்ந்த படைகளை உடையவனும், மண்ணுலகிற்கு ஞாயிற்றைப் போன்றவனும், காடவன் என்னும் பெயர் உடையானுக்கு முன்னே தோன்றியவனும் ஆகிய நந்திவர்மனின் கையிலுள்ள வேற்படையையும் அவன் தலைநகராகிய காஞ்சிபுரத்தையும் பாடி நாம் ஊஞ்சல் ஆடுவோம் என்று ஒருத்தி கூறுகின்றாள்.

குறிப்பு :

மகளிர் ஊஞ்சல் ஆடும்போது, நந்திவர்மனின் வீரச்சிறப்பும் வெற்றிச் சிறப்பும் புகழப்படுகின்றன. ஈண்டு, தெள்ளாற்றுப் போரில் நந்திவர்ம பல்லவன் பெற்ற வெற்றிச் சிறப்பு முக்கியமாகச் சுட்டப்படுகின்றது.

செய்யுள் - 2 (சம்பிரதம்)

சம்பிரதம் :

இந்திர சால வித்தை வல்லவன் ஒருவன் தன் பெருமையைத் தானே பாடுதல். வலிமையால் தெள்ளாற்றுப் போரிலே பகைவரைக் கொன்று, மற்றைய பகைவரும் அழியும் வண்ணம் கோபித்த அவனி நாராயணன் ஆகிய நந்தி மன்னனே! பூமியை ஆளும் அரசனே! நீங்கள் இதனை நன்றாகப் பாருங்கள். இது சூதாடு கருவி அன்றோ? இதனை ஒரு கையில் வைத்து மறுகையில் வரும்படி செய்தேன். மாமரத்தின் விதை ஒன்றை நிலத்தில் புதைத்து அன்றைக்கே அவ்விதை முளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழம் பழுக்கச் செய்து அதனைப் பறித்து உண்ணுதலைப் பாருங்கள். இவை நமது சித்து அல்ல. மழைத் தண்ணீரை உள்ளங்கையினால் குடிக்கின்றேன். அது ஒரு சிறிய குட்டை அன்று. ஒலிக்கின்ற கடல் நீரையே குடிக்கின்றேன்.

குறிப்பு :

ஒரு கையில் வைத்த பொருளை மற்றொரு கையில் போகச் செய்தலும். மாமரத்தின் விதையை நட்டு அன்றே முளைத்து வளர்ந்து பழம் பழுக்கச் செய்தலும். குடம் தண்ணீரைக் குடித்துக் காட்டலும் சித்தர்கள் செய்யும் கண்கட்டு வித்தையாகும்.

செய்யுள் - 3 (அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மறம் :

கலம்பக உறுப்புக்களுள் இது ஒன்று. ஒரு பகை வேந்தன், பெண் வேண்டி, திருமுகம் எழுதித் தன் தூதுவனிடம் தந்து அவனை மறவன் ஒருவனிடம் அனுப்புவான். அம்மறவன், செய்தியறிந்து சினந்தெழுந்து பெண் கொடுக்க மறுப்பான். எனவே 'மறம்' என்னும் உறுப்பினை உடைய பாட்டுகள் இங்ஙனம் அமைபவை.

பெண் கொடுக்க மறுத்து இங்ஙனம், வீரம் கூறுவதை, 'மகட்கொடை மறுத்தல்' என்பார் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர்.

கருத்து :

"மன்னர் அனுப்பிவைத்த தூதுவனே! எனது அம்புடன் பொருத்தக்கூடிய வில், ஒடிந்து விட்டது. அவ்வில்லில் பூட்டக்கூடிய நாணும் அறுந்து விட்டது. நானோ வயது முதிர்ந்தமையால் தளர்ந்துவிட்டேன் என்று கருதியன்றோ நறுமணம் பொருந்திய கூந்தலையுடைய என் மகளை மணம் பேசி வருமாறு உன் மன்னர் உன்னைத் தூது அனுப்பியுள்ளார். (எனவே, என் ஆண்மையையும் குலப்பெருமையையும் அவர் அறியவில்லையோ?) செம்பொன்னால் செய்யப்பட்ட அழகு வாய்ந்த மணிமாட மாளிகைகளைக் கொண்ட தெள்ளாறு என்னும் ஊரில் நிகழ்ந்த போரில், எம் மன்னனின் திருவடிகளைப் பொருந்தாதவருடைய (திருவடிகளைத் தொட்டு வணங்கி மன்னிப்புக் கேட்காதவருடைய – பகைவருடைய) போர்யானைகளின் கொம்புகளே, எமது இச்சிறு குடிலினுக்குச் சிறிய தூண்களாகவும் நீண்ட வளைச்சட்டங்களாகவும் பொருத்தப்பட்டுள்ளன. ஐயம் ஏற்படின் நீயே குனிந்து நோக்குவாயாக" என்கிறான் பெண் கொடுக்க மறுத்த மறவன்.

குறிப்பு :

பாட்டுடைத் தலைவன் நந்திவர்மனன்றோ? எனவே இப்பாடலிலும் நந்திவர்மனது வீரச்சிறப்பும் வெற்றிச்சிறப்பும் சிறப்பிக்கப்படுகின்றன. ஈண்டுக் குறிக்கப்பெறும் மறவன் பல காலம் செய்த போரால் அவனது வில் ஒடிந்து, நாணும் தேய்ந்துவிட்டது. அவன் கிழவனாயினும் மறவனது தறுகண்மை தளரவில்லை என்பதற்கு அவனது இத்தகைய கூற்றே சான்றாகும்.

செய்யுள் - 4 (நேரிசை வெண்பா)

தலைவி வருந்துதல் :

நந்திவர்ம மன்னன்பால் காதல் கொண்ட நங்கையொருத்தியின் புலம்பலாக அமைந்துள்ளது இப்பாடல்.

கருத்து :

"பைந்தமிழ் நூல்களைக் கற்று ஆராயும் நந்திவர்ம மன்னனது மார்பைத் தழுவாமையால் வெப்பத்தால் கொதிக்கின்ற உடம்பை உடையவளானேன். இதனால் குளிர்ச்சி மிக்க சந்தனம் என்று கூறிச் செந்நிறமுடைய நெருப்பின் காற்றைப் பிழிந்து பூசிவிட்டனர்" என்கிறாள் தலைவி.

குறிப்பு :

நந்திவர்மன் பால் காதல் கொண்டவள், தன் வருத்தத்தின் மிகுதியால் உணவும் உட்கொள்ளாமல் உறக்கமும் கொள்ளாமல் வாடுகின்றாள். இந்நிலையில் அவள் உடம்பு வெப்பத்தால் கொதிக்கின்றது. வெப்பம் தணிப்பதற்குச் சந்தனத்தை உடலில் தடவினாள் தோழி. ஆனால், தலைவி சினந்து இவ்வாறு பேசுகின்றாள். செந்தழலின் சாறு – நெருப்புக்குச் சாறு கிடையாது; மிகுந்த வெப்பத்தைச் சுட்ட இஞ்ஞனம் கூறப்பட்டது.

செய்யுள் - 5 (எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

கையறுநிலை :

சுற்றத்தாரோ, நாட்டு மன்னரோ இறந்துபடச் செயலற்ற நிலையில் அவர்களின் ஈரம், வீரம் முதலிய பண்புகளைக் கூறி வருந்திக் கலங்குவது 'கையறுநிலை'.

நந்திவர்மன் இறந்த பின்னர் ஆசிரியர் வருந்தி, செயலற்ற முறையில் (கையறு நிலையில்) பாடியதாக இப்பாடல் அமைந்துள்ளது.

கருத்து :

"நந்தியே! நீ இறந்துபட்டமையால், உனது வதனம் வானிலுள்ள நிலவைச் சேர்ந்து விட்டது. உன் வீரம், காட்டிலுள்ள புலியிடம் சரண் அடைந்துவிட்டது. உன் கைகள் கற்பகத்தை அடைந்துவிட்டன. தேன் பொருந்திய செந்தாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய திருமகள் திருமாலிடம் புகுந்துவிட்டாள். உன் உடலோ செந்தழலில் (ஈமத்தீயில்) புகுந்து அழிந்து விட்டது. ஆனால் நானும் என் வறுமையும் எங்குப் புகுவோம்" என்று புலம்புகின்றார் இதனைப் பாடிய ஆசிரியர்.

குறிப்பு :

இங்ஙனம், நந்திவர்மனுடைய உயர்ந்த பண்புகள், உடம்பு ஆகிய யாவும் அவையவை அடைய வேண்டிய இடத்தைப் பற்றிக் கொண்டன. ஆனால், "எனக்கு என்னை இடைவிடாமல் பற்றி நிற்கும் எனது வறுமைக்கு புகலிடம் புரியாமல் திகைக்கின்றோமே" என்று புலவர் வருந்துகின்றார். உயிரோடிருந்த காலத்தில் வரையாமல் வழங்கியப் புலவரின் வறுமைப் பிணியை நீக்கிய நந்திவர்மன் இறந்துபடவே 'அவனைப் போன்று வழங்கக் கூடியவர் இனி யாருளர்? என்னும் கருத்தும் புலனாகின்றது. அதியமான் நெடுமான் அஞ்சி இறந்த போது ஔவையாரும் பாரி இறந்த போது கபிலரும் பாடிய கையறுநிலைப் பாடல்கள் ஈண்டு நினைக்கத்தக்கவை.

ஒரு கடலோரக் கிராமத்தின் கதை

(தோப்பில் முகம்மது மீரான்)

ஆசிரியர் : இசுலாமிய சமயத்தைச் சேர்ந்தவர். மலையாளத்தில் வைக்கம் முகம்மது பஷீர் போலத் தமிழில் எழுதுபவர் எனலாம். தன் இனத்து மக்களின் குறைபாடுகளை எடுத்துரைக்கும் கதையை எழுதத் துணிவு வேண்டும். அதை மனம் நோகாமல் உரைக்கத் திறம் வேண்டும். இரண்டும் இவரிடம் இருக்கின்றன. மேனாட்டுப் பெர்னார்டுஷாவின் படைப்புக்களில் காணப்படும் சமூக எள்ளல் நடையில் எழுதியுள்ளார்.

கதைச் சுருக்கம் :

முதல் உலகப் போர் முடிந்த காலத்தில் குமரி மாவட்டத்தில் உள்ள கடலோரக் கிராமம் ஒன்றில் வாழ்ந்த மக்களின் கதை இது. வடக்குவீட்டு அகமது கண்ணு முதலாளி ஊர்த் தலைவர். முதல் கூடி (பள்ளிவாசல் அறங்காப்பாளர்). உழைப்பு இல்லாமல் பரம்பரைச் சொத்தை உண்டு உட்கார்ந்து ஊரையெல்லாம் அதிகாரம் செய்பவர். மோதினாரும் மௌலவியும் (பள்ளி வாசலில் தொழுகைப் பணி புரிவோர்) அவர் முன் கைகட்டித்தான் நிற்கவேண்டும் அவர் வைத்ததே சட்டம். அவரை எதிர்க்கும் துணிவு யாருக்கும் அந்த ஊரில் இல்லை. ஆடம்பரமாகச் செலவு செய்பவராதலாலும் தோப்புகள் முதலிய சொத்துக்களை நேரடியாகக் கவனிப்பதில்லையாதலாலும் வரவுக்கு மேல் செலவு நடந்து கொண்டிருந்தது. வீட்டுப் பெண்களும் விவரம் இல்லாதவர்கள் மெல்ல மெல்லக் கடனில் மூழ்கிக் கொண்டிருந்தார். ஆனால் இடையிடையே ஊரில் யாரிடம் நல்ல விளைச்சல் உள்ள தோப்பு இருக்கிறது என்று பார்த்து அவர்கள் மேல் ஏதாவது குற்றம் சாட்டத் தண்டனையாக அவர்கள் தோப்பைத் தன் பெயருக்கு எழுதி வாங்கிக் கொள்வார்.

அவர் தங்கை ஆயிஷா கணவனை இழந்து மகனுடன் தமையன் வீட்டுக்கே வந்து தங்கிவிட்டாள். அவள் மகன் பரீது வெள்ளை மனம் படைத்தவன். சூது வாது அறியாதவன், மாமன் வீட்டில் இட்ட பணி செய்து வாழ்ந்தான்.

அதே ஊரில் வடக்கு வீட்டு முதலாளிக்கு இணையான சொத்து சுகங்களுடன் வாழ்ந்தார் மேற்கு வீட்டு முதலாளி பரம்பரைச் சொத்துக்காரனான தனக்குப் போட்டியாக முளைத்த மேற்கு வீட்டாருடன் அகமதுக்கண்ணு பெரும்பகையை வளர்த்துக் கொண்டார். அவருடன் போட்டியிட்டுத் தன் கௌரவத்தை நிலைநாட்டவும் அவருக்குத்தான் எதிலும் குறைந்தவரில்லை என்று காட்டவுமே பல செயல்களில் இறங்கினார். மேற்கு வீட்டார் ஒரு முறை தங்கள் என்று அழைக்கப்படும் இகலாமிய சமயச்சாமியார் ஒருவரை அழைத்து வந்து நாள்தோறும் புலாலுடன் ஒரு மாதம் விருந்து வைத்தார். அதை மனத்தில் வைத்துக் கறுவிக் கொண்டிருந்த அகமதுக்கண்ணுவுக்கு தன் உயர்வைக்காட்ட ஒரு வாய்ப்புக் கிடைத்தது. முஹல்லத் தீவிலிருந்து வருவதாகச் சொல்லிக் கொண்டு இம்பிச்சி கோயா தங்கள் என்பவர் அந்த ஊருக்கு வந்தார். தீயசக்தி ஒன்று அந்த ஊருக்கு வந்திருப்பதாகவும் அதை அடக்கி அந்த ஊராரைக் காப்பாற்றவே தான் வந்திருப்பதாகவும் கூறினார். இதை நம்பி அவருக்குத் தன் வீட்டில் தங்க இடம் கொடுத்து

நாள்தோறும் பெரிய விருந்து கொடுத்தார். அகமதுக்கண்ணு. வேலையின்றி விருந்துண்டு கிடந்ததால் வயிற்றுக் கோளாறு நேர்ந்து அவதிப்பட்ட தங்கள், தனக்குப் புலால் வேண்டாம் என்றும் மீன் சாப்பிடுவதாகவும் கூறினார். கடலில் மீன்பிடிக்காலம் இல்லாத நேரம் அது. எனவே ஒன்றுக்குப் பத்து விலை கொடுத்து மீன் வாங்கப்பட்டது. தோப்புகளை விற்றாவது தங்களுக்கு ஆடம்பர விருந்து கொடுத்து மேற்கு வீட்டாரின் முன் தலை நிமிர்ந்து நிற்க விரும்பிய எண்ணத்தால் மேலும் கடன் ஏறியது.

அந்த ஊரிலேயே சுறாமீன் இறகை விற்றுப் பிழைப்பு நடத்தும் மகமூது என்பவர் மட்டுமே அகமதுக்கண்ணுவின் அடாவடித்தனங்களை எதிர்த்தார். முதலாளியின் பல்லக்கு வரும்போது வழியில் யாரும் ஏன் எதிர்ப்படக் கூடாது என்று கேட்டார். முதலாளி வரும் வரை மற்றவர்கள் தொழுகை தொடங்காமல் ஏன் காத்திருக்க வேண்டும் என்று கேட்டார். நினைத்தபோது முதலாளி அழைத்தால் வரமுடியாது என்று மறுத்தார். முதலாளி கட்டளையால் திருமணச் சடங்குகள் செய்ய வர இயலாதென எல்லோரும் மறுத்தபோது தாமே தனித்து நின்று மகளின் திருமணத்தைநடத்தி வைத்தார் அரசாங்க ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஊருக்கு அமைவதற்காகத் தனக்கிருந்த ஒரே சொத்தான நிலத்தைப் பள்ளிக்கூடம் கட்டக் கொடுத்தார். முதலாளி ஆங்கிலப் பள்ளிக் கூடத்திற்கு எதிரியாதலால் மகமூதின் இந்த நடவடிக்கை அவருக்கு மாபெரும் குற்றமாகத் தோன்றிது. ஆனால் என்ன முயன்றும், எவ்வளவு தொல்லைகள் கொடுத்தும் மகமூதை வழிக்குக் கொணர முடியவில்லை.

ஊரில் பள்ளிக்கூடம் கட்டப்பட்டது. அதற்கு ஆசிரியரும் வந்தார். ஆனால் ஊர்மக்களின் ஒத்துழைப்புத் தான் கிடைக்கவில்லை. ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பினால் பாவமென்றும் குரான் ஓதுதல் மட்டுமே நல்லதென்று கருதினர் ஊரார். அத்துடன் தலைமுடியை வெட்டிக் கால்சிராய் அணிந்த நகரநாகரிக ஆசிரியர் அவர்கள் கண்களில் 'பாவி'யாகத் தெரிந்தார். அவர் மனைவியின் ஆடைகளும் ஊராரின் எள்ளலுக்கு உள்ளாயின. வெளியில் தலைகாட்டினால் வெட்கமும் வேதனையுமான நிலையே ஏற்பட்டது. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு எப்படியோ சமாளித்துப் பள்ளியை நடத்தி வந்தார் ஆசிரியர்.

இதற்கிடையில் அகமதுக் கண்ணு முதலாளி மகளின் திருமணத்தைப் படாடோபமாக நடத்திக் கடனில் மூழ்கியிருந்தார். இத்தனைக்கும், இளவயதிலேயே விதவையான தங்கையின் மகன் பரீது வீட்டில் இருந்தான். அவனை, அகமதுக் கண்ணுவின் மகள் ஆயிஷா மனமார விரும்பினாள். ஆனால் அந்தஸ்து மோகம் கண்ணை மறைத்ததால் அகமதுக்கண்ணு பணக்கார மாப்பிள்ளை தேடினார். பணம் இருக்கிறதா என்று விசாரித்த அளவு பண்பு பற்றி விசாரிக்கவில்லை. மாப்பிள்ளைக்குப் பைத்தியம் என்பது மணமான பின்னரே தெரிந்து. மகள் ஆயிஷா திரும்பி வந்து விட்டாள். அகமதுக்கண்ணு மனமொடிந்து போனார்.

இந்த நேரத்தில் தங்கள் புதிய சிக்கலை ஏற்படுத்தினார். ஊருக்கு வந்து சில மாதங்கள் ஆகிவிட்டது என்றும் தான் உடனடியாகத் திரும்பிச் செல்லவேண்டுமெ என்றும் அப்படி இல்லாமல் தான் தொடர்ந்து மேலும் சில காலம் அந்த ஊரில் தங்க வேண்டும் என்றால் தனக்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் கூறினார். உண்மையில் அகமதுகண்ணுவின் விதவை தங்கையைத் தற்செயலாக வீட்டுச் சாளரத்தின் வழியே பார்க்க நேர்ந்ததால் அவளை மணம் செய்ய விரும்பியே அப்படிக் கூறினார். அதை அறியாத முதலாளியும்

தங்கள்கள் தங்கும் ஊரில் மணம் செய்து குழந்தைகள் பெற்று வாழ்கின்ற வழக்கம் உண்டாகையால் அவருக்கெனப் பெண் தேடினார். மனதில் கள்ளம் இருந்த தங்கள் அகமதுகண்ணு தேடிய பெண்களில் அதிர்ச்சி அடைந்தார். என்றாலும் இளவயதிலேயே விதவையான தங்கையின் மனத்தில் ஒரு வேளை இந்த ஏற்பாட்டிற்கு இணக்கம் இருக்கலாமோ என்று எண்ணி அவளை அழைத்துக் கேட்டார். ஒன்றும் அறியாத நல்ல மனத்தவள் மனம் நொந்து அழுது, தானும் மகனும் இருப்பது அண்ணனுக்குச் சுமையென்றால் வீட்டைவிட்டு வெளியேறுவதாகச் சொல்லவே அகமது தங்களிடம் அவர் விருப்பம் நிறைவேறாது எனத் தெரிவித்தார். அவர் சினந்து வீட்டைவிட்டு வெளியேறினார். தங்கள் கோபத்துடன் வெளியேறிய போது தீய ஆவியைக் கட்ட விழ்த்துவிட்டுச் சென்றுவிட்டதாக ஊரில் வதந்தி பரவியது.

பள்ளிவாசல் பணியும் பள்ளிக்கூடப் பணியும் செய்து முதலாளியின் பணிவான ஏவலாளியாக அதுவரை வாழ்ந்து வந்த மோதினார். அசனார் லெப்பை அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொண்டார். கடைக்காரர் உசன் பிள்ளை மூலமாகத் தங்கள் பற்றியும் தன்னைப் பற்றியும் சில செய்திகளைப் பரவச் செய்தார். அவர் தங்களின் பிரதிநிதி என்றும் தான் ஊரைவிட்டுச் சென்ற பின்பே தன்னைப் பற்றிய 'உண்மைகளை' வெளியே சொல்ல வேண்டுமென தங்கள் தன்னிடம் சத்திம் வாங்கிக் கொண்டதாகவும் கூறினார். தங்கள் ஒருமுறை கோழியை உயிருடன் வரச்செய்தது மட்டுமின்றிக் கூவவும் வைத்தாகச் சொன்னார். ஊரைவிட்டுச் சென்ற தங்கள் கனவில் வந்ததாகவும் திங்களும் வெள்ளியும் தன் ஆற்றில் அவர் வீட்டு அறையில் நிலவும் என்று சந்தன மணம் அதற்கு அடையாளம் என்றும் கூறியதாகவும் தெரிவித்தார். அந்தச் செய்தி ஊரில் பரவியது. வெளியூரில் இருந்து கூட மக்கள் வரத் தொடங்கினர். தங்களுக்குக் காணிக்கை செலுத்தி வணங்கிச் சென்றனர். அதன் பின் அசனார் லெப்பைக்கு முதலாளிடம் கைகட்டிச் சேவகம் புரிய வேண்டிய தேவையில்லை அல்லவா? தன் பணிகளுக்கு அவர் செல்லவில்லை. நிலைமையில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் தெரியாமல் நிலத்தில் தலை புதைத்த நெருப்புக் கோழியாக இருந்த அகமதுகண்ணு முதலாளி பழைய பெருமை உணர்வில் லெப்பையை அழைத்து விசாரிக்க அவர் மிகவும் அலட்சியாக வேலையைவிட்டு நீங்குவதாகச் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். முதலாளி மிரட்டலுக்கும் தண்டனைக்கும் அவர் அசராமல் சென்றது முதலாளிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

தனக்கு ஏற்பட்ட இழிநிலைக்குத் தன் நடத்தையே காரணம் என்று உணராத முதலாளியின் சினம் ஊரைக் கெடுப்பதாக அவர் எண்ணிய ஆங்கிலப் பள்ளியின் மேலும் ஆசிரியர் மேலும் பள்ளிக்கு இடம் கொடுத்த மகமூதின் மேலும் திரும்பியது. பள்ளியைத் தீக்கிரையாக்க எண்ணி வழக்கமாக அவர் கொடுமைகளுக்குத் துணை நிற்கும் அடியாள் கருப்பனை அழைத்து ஆணையிட்டார். ஆனால் அதுவரை அவர் விருப்பப்படி நடந்து வந்த அவன் – அவரிடம் கொடுத்து வைத்திருந்த பணத்தைக் கவர்வதற்காக அநாதை லட்சுமியைத் தீர்த்துக்கட்டச் சொன்னபோது கூடச்செய்து முடித்த அவன் – பள்ளியைத் தீக்கிரையாக்க மறுத்துவிட்டான்.

இதற்கிடையே அகமதுகண்ணுவின் மகள் ஆயிஷா கணவனுடன் வாழாமல் திரும்பி வந்து வீட்டில் நாளெல்லாம் அடைந்து அழுது கொண்டே கிடந்ததைக் காணப் பொறுக்காத பரீது அன்னையிடம் சொன்னால் கூடத்தடுத்து விடுவாள் என்று ஆயிஷாவிடம் மட்டும் சொல்லிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். முதலாளிக்கு மேலும் ஓர் அடியாக அது அமைந்தது.

எல்லாவற்றிலும் முதலாளியின் நிலை தாழ்ந்து வரவின்றி நடத்திய ஆடம்பரச் செலவுகளால் சொத்துக்கள் அனைத்தும் இழந்தார். ஊர் மக்களின் மதிப்பையும் அவர் நடத்தையாலேயே இழந்தார். அவர் மக்களின் வாழ்வு மகிழ்ச்சி இழந்தது. பரீதும் சென்றுவிடவே மனிதத்துணையையும் இழந்தார். வீட்டில் கட்டியிருந்த குதிரையும் இறந்தது. பழம்பெருமையின் கடைசிச் சின்னமும் போகவே பைத்தியம் பிடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அந்த நிலையிலும் அவரது ஆணவம் அழியவில்லை. பள்ளிக்குத் தாமே தீயை வைத்தார். யாருக்கும் தெரியாதென அவர் நினைத்திருந்த அந்தச் செயல் இரவில் அவர் திரும்பித் தனியாக வருவதையும் திரும்பிவந்த சில நிமிடங்களில் பள்ளி பற்றியெரியும் செய்தி பரவியதையும் இணைத்து பார்த்த மகள் ஆயிஷாவுக்கு புரிந்து விட்டது. பரீதின் பிரிவாலும் தன் வாழ்வின் முறிவாலும் மனம் நொந்து கிடந்த அவளைத் தந்தையின் செயல் பெரிதும் பாதித்து. தற்கொலை செய்து கொண்டாள். ஒரு கடலோரக் கிராமத்தின் கதை அதற்குப் பின்னும் தொடர்கிறது. தனிமனிதர்கள் வரலாம்; தங்கலாம்; மறையலாம். வாழ்க்கை தொடர்ந்து நடப்பதல்லவா? அவரவர் பாத்திரத்தை நடித்து முடித்ததும் அந்தந்த நடிகர்கள் அகலலாம். ஆனாலும் உலக மேடையும் வாழ்க்கை நாடகமும் தொடர்ந்து இருப்பதல்லவா? அதற்குத் தோற்றமும் முடிவும் இருக்கலாம். ஆனால் ஒரு தலைமுறை வாழ்வில் – ஒரு தனிமனித வாழ்வில் – தோற்றமும் முடிவும் தெரியாதல்லவா? நடப்பியற் கதைக்கும் அப்படித்தான். இரண்டு முனைகளும் தெரியாத இடைப்பட்ட வாழ்வை மட்டும் காட்டும் – இந்தக் கதை போல!

திறனாய்வு :

கருப்பொருள் :

சமயத்தின் பெயரால் நிகழும் அநியாயங்களையும் மூடநம்பிக்கைகளால் மக்கள் ஏமாறுவதையும் எடுத்துரைப்பது ஆசிரியரின் நோக்கமாகத் தோன்றுகிறது. கதையின் மைய நிகழ்ச்சிகள் அனைத்தும் அவ்வாறே அமைகின்றன. வடக்கு வீட்டு அகமது கண்ணு பள்ளியின் அறங்காவலர். அவரிடம் கொண்ட அச்சத்தால் மக்கள் அவர் சொன்னபடி நடக்கிறார்கள். தங்கள் என்று சொல்லிக் கொண்டு வந்தவரை அவர் தன் வீட்டில் தங்கவைக்கிறார். அவரால் மனிதர்களின் எல்லாக்குறைகளையும் தீர்க்க முடியும் என்று ஊரார் நம்புகின்றனர். அவர் ஊதிக் கொடுத்த நீரைப் புனித நீராகப் பருகுகின்றனர். அவர் பெட்டைக் கோழியைச் கூவச் செய்ததாகவும் பரப்பப்பட்ட செய்தியை நம்புகின்றனர். இறந்த பிறகும் அவர் ஆற்றல் ஊரில் தங்கியிருப்பதாகச் சொல்லப்படுவதை ஏற்றுக் கொண்டு காணிக்கை செலுத்துகின்றனர். இசுலாமிய சமயத்தைச் சாராதவர்கள் அனைவரும் காபிர்கள் என்பதும் பள்ளிக் கரும்பலகையில் எழுதுவது ஹராம் என்றும் காபிர்கள் போல உடுத்தி வாழ்ந்தால் நரகம் கிடைக்கும் என்றும் ஆங்கிலப் பள்ளிக் கூடத்திற்கு இடம் தருவது மாபெரும் குற்றம் என்றும் இப்படியே சமயத்தின் பெயரால் பலப்பல மூடநம்பிக்கைகள் ஊராரிடம் இருக்கின்றன. கயவர்கள் அவற்றைக் காசாக்கிப் பிழைக்கிறார்கள். ஆனால் இசுலாமிய சமயத்தில் பிறந்தாலும் கல்வி கற்று வெளியில் சென்று உலகம் அறிந்தவரான ஆசிரியரும் அந்த ஊரிலேயே வாழ்ந்த போதும் தன்மானமும் வெளியில் சென்று உலகம் அறிந்தவரான ஆசிரியரும் அந்த ஊரிலேயே வாழ்ந்த போதும் தன்மானமும் பகுத்தறிவும் கொண்டு தனித்து நின்ற சுறா இறக்கை வியாபாரியும் ஊராரைப் போல இல்லாமல் உயர்ந்து நிற்கிறார்கள். ஆசிரியர் அவர்கள் மூலமாகத் தன் குரலை வெளியிடுகிறார். அத்துடன் ஊராரை ஏமாற்றிய அகமது கண்ணு முதலாளியின் அவல முடிவின் மூலம் தான் இந்தக் கதையில் சொல்லவரும் கருத்தைப் புலப்படுத்தி விடுகிறார் கதைப் பின்னலும் அதற்கேற்பவே அமைகிறது.

கதைப்பின்னல் :

நடப்பியல் சார்ந்த கதையில் தலைவன், தலைவி எனத் தனித்துச் சுட்ட யாரும் இருக்கமாட்டார்கள். எதிர்த் தலைவன், சதி என்ற வகையில் சிக்கல்கள் இராது. ஒரு சிக்கல், வளர்ச்சி, உச்சநிலை, முடிவு என்ற பொதுவான போக்கு இருக்கக்கூடும் என்றாலும் தனியொரு மனிதனின் சிக்கலாக இராது. இந்தக் கதையிலும் ஒரு ஊரின் – ஒரு சமூகத்தின் – மனித இனத்தின் என்று கூடச்சொல்லலாம் – மூடநம்பிக்கைகளே சிக்கலின் மையம். சிக்கலுக்குக் காரணமும் அவர்கள். சிக்கலில் சிக்குவதும் அவர்கள். தீர்க்க வேண்டியவர்களும் அவர்களே. பணமும் பதவியும் சமயத்தலைவமையும் கொண்டவர்களிடம் ஊர் அகப்பட்டு ஏமாந்து கிடப்பதைச் சொல்வதே கதைப்பின்னல். கதை முடிவில் பெரிய மாயாஜலம் எதுவும் நடந்துவிடவில்லை. ஊரார் மனம் மாறிய பகுத்தறிவுப் பாதையில் நடந்துவிடவில்லை. அப்படியே தான் இருக்கிறார்கள். அது தான் இந்தக் கதைப்பின்னலின் சிறப்பு. வாழ்க்கையில் அப்படித்தான் இருக்கும். ஒரு தனிமனிதன் அல்லது ஓரிரு சீர்திருத்தவாதிகள் திடீரென்று ஓர் ஊரைத் திருத்தி மாற்றிவிட முடியாது. மாற்றங்கள் நிஜவாழ்க்கையில் மிகமிக மெல்லத்தான் நடக்கும் நடக்காமலேயும் போகும். இந்தக் கதையிலும் கடைசிவரை யாரும் திருந்தவில்லை. மனம் வருந்தவில்லை ஆனால் பலரின் வாழ்வில் மாற்றங்கள் நிகழ்கின்றன. அகமது கண்ணு பள்ளியை தீக்கிரையாக்கிவிட்டுப் பைத்தியமாகிறார். அவர் மகள் இறக்கிறாள். மருமகன் வெளியேறிச் சென்று விடுகிறான் – அவருக்கு அடங்கி நடந்த கருப்பன் அவர் கூறியபடி நடக்க மறுத்து விடுகிறான். அவரிடம் கைகட்டி வேலை செய்த மோதீன், தங்களின் பெயரால் பள்ளி வாசல் நடத்திப் பணம் சம்பாதிக்கிறார். அவ்வளவுதான். ஊராரின் மூடநம்பிக்கைகள் குறையவில்லை பள்ளி ஆசிரியரின் சிக்கல்கள் தீரவில்லை – அழகான, நடப்பியல் சார்ந்த கதைப்பின்னல்.

கதைமாந்தர் :

வடக்குவீட்டு அகமதுகண்ணு, மகள் பாத்திமா, தங்கை நூருன்னிசா, மருமகன் பரீது, மோதீன், உசேன்பிள்ளை, தங்கள் சுறாவியாபாரி, ஆசிரியர், அவர் மனைவி ஆகியோர் முதன்மைப் பாத்திரங்கள் என்று சொல்லலாம். அது கூடக் கதையில் அவர்கள் நிறைய இடம் பெறுவதால் மட்டுமே. மற்றபடி, தங்களிடம் வந்து ஏமாறும் பெண் கூடக்கதையில் முக்கிய பாத்திரம் தான் மக்களின் மூடநம்பிக்கையைச் சாட வந்த கதையில் மூடத்தனத்தின் மொத்த உருவமாக விளங்குவபள் அந்தப் பெண். எனவே இந்த கதையில் உண்மையில் இரண்டே பாத்திரங்கள் தான். மூடநம்பிக்கைகளில் அழிந்தோர், அவற்றிற்கு ஆளாகாத அறிவுடையார் ஆகிய இருவரே அந்தப் பாத்திரங்கள். ஊர் முழுவதும் முதல் வகை. பள்ளி ஆசிரியரும் சுறா இறகு வியாபாரியும் இரண்டாம் வகை.

அகமது கண்ணு :

பணக்காரர். பள்ளிவாசலின் அறங்காவலர். பரம்பரைப் பெருமை உடையவர். தான் என்ற செருக்கு மிகுந்தவர். கோபம் மிகுந்தவர். அடியாளின் துணையுடன் நினைத்ததை நடத்திக் கொள்பவர். ஏழையும் கைம் பெண்ணும் ஆதரவற்றவளும் தன்னை நம்பியவளுமான பெண்ணை, இரவில் தூங்கும்போது ஆளை வைத்துக் கொன்று அவள் பணத்தைக் கவர்ந்தவர் – வறட்டுக் கௌரவம் கொண்டவர். மேற்கு வீட்டு முதலாளி அவர் வீட்டில் ஒரு சமயப் பெரியாரைத் தங்க

வைத்து ஒரு மாதம் விருந்து வைத்தார் என்பதற்காகத் தான் அவரினும் உயர்ந்தவர் என்பதைக் காட்டவே தங்களை இரண்டு மூன்று மாதம் உபசரித்தவர். வயிறு சரியில்லை என்று கூறியபோதும் தன் கௌரவத்திற்காகச் சாப்பிடவேண்டும் என்று தங்களை வற்புறுத்துவார். மீன் கிடைக்காத காலத்தில் அதிக விலை கொடுத்து வாங்குவதுடன் அவருக்குப் போட்டியான வடக்கு வீட்டு முதலாளியின் ஆள் கேட்டதற்காகவே விலையை ஏற்றி முந்நூறு ரூபாய் கொடுத்து மாலா மீன் வாங்கிய வேலையாளைப் பாராட்டியவர். குந்தித் தின்றே குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைத்தவர். வருவாய் பெருக்க வழிதேடாமல் செலவு மட்டும் செய்பவர். தன்னை மதிக்காதவர்கள் மேல் ஏதாவது குற்றம் சாட்டித் தண்டனையாக அவர்கள் சொத்துக்களைத் தன் பெயரில் எழுதி வாங்கிக் கொள்பவர். பெண்ணின் திருமணத்தைக் கடன் வாங்கி ஆரம்பரமாக முடித்துவிட்டு நொடிந்துப் போனவர். தன் தந்தையின் முட்டாள்தனத்தால் தங்கை வாழ்வு பாழானதைப் பார்த்திருந்தும் நன்கு விசாரிக்காமல் பணமே முதன்மையாகக் கருதித் திருமணம் செய்து தன் மகளின் வாழ்வு பாழாகக் காரணமானவர். தன்வினை தன்னைச் சுடும் என்பதற்கு இணங்கக் கதை முடிவில் தனியாளாகித் தவித்துப் பைத்தியம் பிடித்து அலைகிறார்.

நூஹு பாத்திமா :

அகமது கண்ணுவின் தங்கை. இளம் விதவை. பணப்பெருமையில் மூழ்கிய தந்தையின் முட்டாள்தனத்திற்குப் பலியானவள். மறுமணத்திற்கு இடம் தரும் இனமும் சமயமும் அவளுடையது இருந்தபோதும் அதை விரும்பாமல் கடைசிவரை மனவுறுதியுடன் வாழ்ந்தவள். மகன் பரீது அவன் வயதுக்கேற்ற மற்றவர்கள் அளவு அறிவுக்கூர்மை இல்லாதவள். அதை எண்ணி, அண்ணன் மகளை அவனுக்கு மணம் செய்யுமாறு கேட்காத மனநாகரிகம் கொண்டவள். அண்ணன் மகளிடம் பாசம் கொண்டவள். மரபில் ஊறிய மனத்தவள். மகனுக்காகப் பேசிய பெண்ணைத் தானே மணம் செய்து கொள்ள முன்வந்த கிழவருடன் வாய் பேசாமல் வாழ்ந்தவள். எனவே மருமகளுக்கும் தனக்கு ஏற்பட்டது போலவே மனதுக்கும் தகுதிக்கும் பொருந்தாத பைத்தியக் கணவன் வாய்த்தபோது வேறுவழியின்றி ஏற்கத்தான் வேண்டும் என எண்ணியவள். தன் மகனை அண்ணன் மதிக்காமல் வேலையாள் போல நடத்திய போதும் பொறுமையுடன் இருந்தவள். பழமரபில் ஊறிய பெண்ணினத்துப் பிரதிநிதி.

ஆயிஷா :

கதையில் இவள் பங்கு மிகச் சிறியது. ஆனால் மனதில் பதிகின்ற பாத்திரம். பணக்கார வீட்டில் பிறந்து செல்லமாக வளர்ந்தவள். சமயம் விதித்த நியதிகளின்படி வளர்க்கப்பட்டவள். அத்தை மகன் பரீதிடம் அன்பு கொண்டவள். அவன் தன் வீட்டில் நடத்தப்படும் முறைக்காக வருந்தியவள். அத்தையிடம் அன்பும் மதிப்பும் கொண்டவள். பரீதின் மனத்தில் வளர்ச்சி ஏற்படக்காரணமாக இருந்தவள். பரீதை விரும்பியபோதும் பெற்றோரின் பேச்சை மீறி நடக்கும் துணிவு இல்லாதவள். தந்தை பார்த்து மண முடித்த பையனுடன் வாழச் செல்பவள். ஆனாலும் அத்தையைப் போல அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள அவளால் இயலவில்லை. கணவனுக்குப் பைத்தியம் என்று தெரிந்ததும் தந்தை வீடு திரும்பி விடுகிறாள். காரணம் கேட்போரிடம் வாய் திறந்து பேச மறுத்துவிடுகிறாள். ஆளனுப்பி உண்மையறிந்த தந்தையின் துயரத்தை உணர்ந்தாலும் மறுபடி கணவன் வீடு செல்ல மறுத்துவிட்ட மனவுறுதி கொண்டவள். தந்தைதான் பள்ளியை எரித்தார் என்ற உண்மை தெரிந்து மனம் வெதும்புகிறாள். அவளுக்கு

ஆறுதலாக எண்ணியிருந்த பரீதும் ஊரைவிட்டு சென்றிருந்த நிலையில் மன உளைச்சல் தாங்காமல் தற்கொலை செய்து கொள்கிறாள்.

பரீது :

அகமதுகண்ணு முதலாளியின் தங்கை மகன். அறிவுக்கூர்மை குறைந்தவன். மனத்தில் அன்பு நிறைந்தவன்.மாமன் மகளிடம் தூய்மையான பாசம் கொண்டவன். மாமனிடம் மதிப்பு நிறைந்தவன். இழிவு கருதாமல் அவர் இட்ட ஏவல் முடிப்பவன். பாத்திமாவின் முயற்சியால் அவன் மனத்திலும் அவள் பால் காதல் அரும்புகிறது. ஆனால் மாமனை எதிர்க்கும் துணிவில்லை. அவனுக்குச் சிறிது தாழ்வு மனப்பான்மையும் இருந்தது. கண்ணீருடன் மாமன் மகள் கல்யாணத்தில் பங்கு கொள்கிறான். அவள் இல்லறம் ஒழுங்காக நடக்கவில்லையே என வருந்துகிறாள். அவள் கண்ணீரைப் பார்த்திருக்கப் பொறுக்காமல் ஊரை விட்டுப் புறப்பட்டு விடுகிறான். அன்னையிடம் கூடச் சொல்லாமல் அவளிடம் மட்டும் சொல்லிவிட்டுச் செல்கிறான்.

கூறா இறக்கை வியாபாரி முகமது :

தன்மானமும் பகுத்தறிவும் கொண்டவன். ஊரில் தனித்து நின்று வடக்குவீட்டு முதலாளியுடன் போராடியவன். முதல் எதிர்ப்பு அவன் நடுத்தெருவில் சென்று கொண்டிருந்த போது நடந்தது. முதலாளி பல்லக்கில் வந்து கொண்டிருந்தார். வழக்கம் போல அவர் பல்லக்கு வரும் தெருவில் வழியில் நிற்கவும் அஞ்சி மக்கள் ஒடிஒளிந்தனர். முகமது மட்டும் அஞ்சவில்லை. அதுமட்டுமன்று தெருவோரம் அமர்ந்து சிறுநீர் கழிக்கவும் செய்தார். பல்லக்கு தூக்கிகள் எவ்வளவு கூறியும் அவர் தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. தெருவில் தான் ஓரமாக நடப்பதால் யாருக்கும் என்ன தொல்லையும் இல்லை என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். ஊரே தனக்குச் சொந்தம் என எண்ணி நடந்துவந்த முதலாளிக்கு, ஊரும் தெருவும் வாழ்வோர் அனைவருக்கும் சொந்தம் என்று உணர்த்திவிட்டுச் சென்றுவிட்டார். இதை அவமதிப்பாகக் கருதி அதையே சாக்காக வைத்து முகமதுவின் தோப்பு எதையேனும் தன் பெயரில் எழுதிவாங்கத் திட்டமிட்டார் முதலாளி. ஆனால் அவர் அழைத்தும் முகமது வரவில்லை. ஊரிலுள்ள மற்றவர் போல் அவர் அறியாமையிலும் அச்சத்திலும் மூழ்கியிருக்கவில்லை. முதலாளி தன்னை எதற்கு அழைக்கிறார் என்பதும் அவருக்கு தெரிந்தது. அதற்கு இசையாமல் இருக்கவும் அவரால் முடிந்தது. முதலாளிக்கு விழுந்த முதல் அடி முகமதின் மறுப்பு எனலாம். தொடர்ந்து அவர் முதலாளியுடன் மோத நேர்ந்தது. ஆனால் எல்லாச் சந்தாப்பங்களிலும் நியாயம் அவர் பக்கமே இருந்தது. இறைவனின் திருமுன்பு எல்லோரும் சமம். ஆனால் முதலாளி வராமல் தொழுகை தொடங்காது என்பது அவ்வூர் மரபு. தான் விரும்பும்போது வருவதும், தன் தலைப்பாகையை அனுப்புவதும் வழக்கமாகக் கொண்டவர் முதலாளி. ஆனால் அவர் வந்துதான் தொழ வேண்டும் என்ற அந்த மரபை முகமது உடைத்தார். அதேபோல் பள்ளிக்கூடம் கட்ட முதலாளி இடம் தராதபோது தன் மகளுக்குச் சீதனமாகத் தருவதற்கு வைத்திருக்கும் அவரது ஒரே சொத்தான நிலத்தைப் பள்ளிக்கூடம் கட்டத்தந்தார். இதைத் தனக்கு எதிரான செயலாக முதலாளி எண்ணியபோதும் முகமது அஞ்சவில்லை. முதலாளி அழைத்தபோதும் செல்லவில்லை. தண்டனையாகப் பள்ளிவாசலில் அவர் சவுக்கடி பெறவேண்டும் என முதலாளி தீர்ப்புரைத்தார். ஆனால் தன்னை யாரும் நெருங்கக்கூடாது என்று கூறிக் கத்தியைக் காட்டி மிரட்டி அடக்கிவிட்ட முகமது சென்றுவிட்டார். அவர் மகள் திருமணச் சடங்குகளை யார் துணையும் இன்றித்தானே நடத்த முடிவெடுத்தார். தன்னிடம் குற்றம் இல்லை என்பதாலும் தான் செய்வது

சரியென்று எண்ணியதாலுமே இப்படி செய்தாரே அன்றி அவர் இயல்பில் செருக்குடையவர் அல்ல. சிறுமை கண்டு பொங்கும் மனமும் சீறியெழும் துணிவும் அவரிடம் இருந்ததால் எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் மனச்சான்றின் குரலுக்குச் செவிசாய்த்து நடந்தவர்.

ஆசிரியர் :

படித்து முடித்துப் பட்டம் பெற்று ஆசிரியப் பயிற்சியை முடித்ததும் இளைஞர் உலகை ஆற்றுப்படுத்திச் சமூகத்தையே மாற்றிக் காட்டும் கனவுகளுடன் ஒரு கடலோரக் கிராமத்திற்கு வந்தவர். அவரது நகர நாகரிகப் புறத்தோற்றமே ஊரில் எதிர்ப்பை ஏற்படுத்துகிறது. அவர் செய்ய வந்த செயலோ பழியையே தோற்றுவித்தது. பெயர் கூட ஊராருக்கு அந்நியமாகத் தெரிகிறது. மெஹபூப்கான் என்பது இங்கிலீஷ் பெயர் என்கிறார்கள். பள்ளிக்கூடம் ஊரில் நடத்தப்படுவது நாசத்துக்குத்தான் என்கிறார்கள். பள்ளிவாசலில் சிறுநீர் கழிக்கும் இடத்துக்குத்தான் கான் என்று பெயர் என்கிறார்கள். தங்க இடமோ சாப்பாடோ கிடைக்காமல் அவர் தவிக்கிறார். மனைவியை அழைத்து வந்தால் மக்களின் ஏளனம் மேலும் கூடுகிறது. புடவையும் உள்ளாடைகளும் ஊர்ப்பெண்களின் கிண்டலுக்கு ஆளாகின்றன. பள்ளிக்குப் பிள்ளைகளை ஒழுங்காக அனுப்ப யாரும் தயாராக இல்லை – இரவில் தூங்கவிடாமல் வீட்டுக் கூரையில் கல்லெறிவதும் காலையில் வாசலைத் திறந்தால் வாசலில் கழிவறைக் கோலம் காணச் செய்வதும் என்ற ஆசிரியரை ஊரைவிட்டு விரட்டுவதையே குறிக்கோளாகச் செயல்படுகிறார்கள். ஒரொரு வேளை ஆசிரியரும் ஊரை விட்டுச் செல்ல எண்ணத்தான் செய்கிறார். ஆனால் நிதானமாகவும் பொறுமையாகவும் முடிவெடுக்கிறார். அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் மூழ்கிக் கிடக்கும் மக்களைக் காப்பாற்றுவது தம் கடமை என்று எண்ணிச் செயற்படுகிறார். அதற்குப் பலன் இருக்கிறது. உடனடியாக இல்லாவிட்டாலும் மெள்ள மெள்ள சமூகமாற்றங்கள் அப்படித்தான் நிகழும். கடலோரக் கிராமம் மூடத்தனக்கடலில் மூழ்கிவிடாமல் கரைசேர்க்கும் பாத்திரமாய் ஆசிரியர் திகழ்கிறார்.

பயிற்சி வினாக்கள்

ஒரு பக்க வினாக்கள்

1. ஒரு கடலோரக் கிராமத்துக் கதையின் களம் பற்றி எழுதுக.
2. பள்ளி ஆசிரியர் பட்ட பாட்டை விவரிக்க
3. நாவலில் பரீதின் பங்கு யாது ?
4. நூஹு பாத்திமாவின் வாழ்க்கை பற்றி எழுதுக.

கட்டுரை வினாக்கள்

1. நாவலின் கருப்பொருளை விளக்கி மதிப்பீடு தருக.
2. தோப்பில் முகமது மீரானின் பாத்திரப் படைப்பாற்றலை இரு சான்றுகளுடன் விளக்குக.
3. 'ஒரு கடலோரக் கிராமத்தின் கதை' வட்டார நாவலாக விளங்குமாற்றைப் புலப்படுத்துக.
4. நாவலின் மொழிநடை பற்றி ஆராய்க.
5. நாவலின் சமூகச் சித்திரிப்புப் பற்றி எழுதுக.

காப்பியங்கள்

முன்னுரை

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னிருந்து கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தவர்கள் சோழர்கள். அவர்கள் காலத்தில் அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம் ஆகியவை உயர்நிலையில் சிறப்புற்றிருந்தன. மூவேந்தருள் சோழரது வள்ளன்மையும் சமயப்பற்றும் யாவரும் போற்றும் தன்மையனவாகும். கம்பர் பெருமான்.

"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணா வதும்சோழ மண்டலமே"

என அந்நாட்டு நீர், இறை, நிலம் என்னும் மூன்றையும் ஒருங்கே போற்றுவாராயினர்.

"சோழப் பேரரசர் ஆண்டகாலம் தமிழ்ப்பண்பாட்டின் பொற்காலமாகும். இவர்கள் காலத்தில் இலக்கியங்கள் நன்முறையில் ஆதரிக்கப் பெற்று யாண்டும் பரவின" என்பது திரு.க.அ. நீலகண்ட சாஸ்திரியார் கருத்து. அக்கால இலக்கியங்கள் சிறப்பாக வளர்வதற்குச் சோழர்கள் ஆதரவே பெருங்காரணம் ஆகும். அக் காலத்திய கலை வளத்தை இராசராசனது தஞ்சைப் பெரிய கோயிலில் காணலாம். சோழர் காலத்தில் பௌத்த, சமணக் காப்பியங்கள் தோன்றின. சேக்கிழார், கம்பர் முதலிய பெருங்கவிஞர்கள் இக் காலத்தை இலக்கியங்கள் படைத்தனர்; சிற்றிலக்கியங்கள் தோன்றின; இலக்கண நூல்கள் பல எழுந்தன.

1. ஐம்பெருங்காப்பியங்கள்

பெருங்காப்பியத்தின் இலக்கணம்

சைவ வைணவ நூல்களுக்குப் போட்டியாகச் சமணரும் பௌத்தரும் இயற்றிய காப்பியங்களைக் கற்ற பிற்கால அறிஞர்கள் அவற்றை ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் என்று பாகுபடுத்தினர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களும் அமைந்திருப்பின் அது பெருங்காப்பியம் என்று வழங்கப்படும். அதில் தொடக்கத்தில் வாழ்த்து அல்லது வணக்கம் சொல்லப்படும். பொருளை உணர்த்தல் அமைதல் வேண்டும்; ஒப்பற்ற தலைவன் ஒருவன் காவியத் தலைவனாக அமைய திருமணம், முடிசூடுதல், பொழில் விளையாட்டு, நீர் விளையாட்டு மது உண்டு களித்தல், மக்கட்பேறு, ஊடல், கூடல் முதலியன அமைதல் வேண்டும்; மேலும் அமைச்சரோடு ஆராய்தல் தூது, பயணம், போர் வெற்றி ஆகியவை தொடர்புற்று அமைதல் வேண்டும்; சுருக்கம், இலம்பகம், பரிச்சேதம் ஆகிய நூற்பிரிவுகளுடன் எண்வகைச் சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்பும் அமைந்திருத்தல் வேண்டும்.

காப்பியம் என்பது காவியமெனும் வடச்சொல்லின் திரிபு 'ஐம்பெருங் காப்பியமென்னும் வழக்குப் பிற்காலத்தது என்பது திரு.கி.வா. ஜகந்நாதன் கருத்தாகும். தொல்காப்பியத்திற்கு

முன்னும் பல காப்பியங்கள் இருந்திருக்கலாம் என்பர். கடைச்சங்க காலத்தில் இருந்த இராமாயணம், பாரதம், தகடூர் யாத்திரை முதலிய காப்பியங்கள் இன்று நமக்குக் கிடைத்தில. ஐம்பெருங்காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவையாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டும் சங்கம் மருவிய காலத்தனவாகும்.

சீவக சிந்தாமணி

ஐம்பெருங்காப்பியங்களில் தலையாயதாக அமைவது சமணக் காப்பியமாகிய சீவகசிந்தாமணியாகும். இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் என்னும் சமண சமயத் துறவியாவர். 'A Prince among the Tamil Poets' என்று வீரமாமுனிவர் பாராட்டும் பேற்றினை அவர் பெற்றவர். தமிழ் நூல்கள் வெண்பா, அகவற்பா ஆகியவற்றால் அமைந்த அமைப்பில் பெரும்மாறுதலை உண்டாக்கி விருப்பத்தப்பாவால் இந்நூலை அவர் பாடினார். காப்பியத் தலைவனான சீவகன் காந்தருவத்தை முதலிய எண்மரையும் மணம் புரிவதாகக் கூறுவதனால், இதனை மணநூல் எனவும் வழங்குவர். இது பதின்மூன்று இலம்பகங்களையும், 3145 செய்யுள்களையும் கொண்டது. நாமகள் இலம்பகம் முதல், முத்தி இலம்பகம் வரை உள்ள இந்நூல் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் இலக்கிய நயம் வாய்ந்த உரையொன்று எழுதியுள்ளார்.

கதைச் சுருக்கம்

ஏமாங்கத நாட்டு மன்னனான கச்சந்தன் தன் மனைவியான விசயை என்பவளது அழகில் ஈடுபட்டு நாடுகாவலை மறந்தான். அவனுக்கு அமைச்சனாகிய 'கட்டியங்காரன் அவனைச் சூழ்ச்சியால் கொன்று தான் முடிசூடினான். கருவுற்ற விசயை, நகர்க்கு வெளியே ஒரு சுடுகாட்டில் சீவகனாகிய குழந்தையைப் பெற்றாள். கந்துக்கடன் என்ற செட்டி, அக்குழந்தையை எடுத்து வளர்த்தான். பல்கலைகளில் வல்லவனான சீவகன், குணமாலை முதலிய எண்மரை மணந்தான். கட்டியங்காரனைப் போரில் வென்று ஆட்சிபுரிந்து இறுதியில் துறவை மேற்கொண்டான்.

நூலின் சிறப்பு

'சீவகசிந்தாமணி இப்பொழுதுள்ள தலைசிறந்த தமிழிலக்கிய சின்னமாகும்; தமிழ்ப் பெருங்காதற காப்பியம்; உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்று' என்பார் டாக்டர் ஜி.யு. போப் முத்தியின்பமே சிறந்த இன்பம் என்ற சமண சமயக் கொள்கை இந்நூலில் வற்புறுத்தப்படுவதால் முத்தினூல் என்று இதனைக் கூறுவர். வடமொழி நூலாம் கூடித்திர சூடாமணி தழுவலாக இருப்பினும் தமிழ் மரபிற்கேற்ற வருணனைகளுடன் சுவையுடன் இந்நூல் அமைந்திருக்கும் பாங்கு போற்றத்தக்கது. எண்வகைச் சுவையும் இதில் நிரம்பியுள்ளது.

விருத்தப்பாவில் எழுந்த முதல் காப்பியமானது இது; கம்பர் முதலான புலவர்கள் காப்பியம் இயற்ற வழிகாட்டியாக இருந்தது, எவரது துணையும் இல்லாமல் திக்கற்றவனாய்ச் சுடுகாட்டில் சீவகன் பிறந்ததை, நினைத்து விசயை புலம்பும் காட்சி, சிறந்ததொரு அவலக் காட்சியாகும்.

"வெவ்வாய் ஓரி முழவாக
விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்(டு) உயர் அரங்கில்
நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந் திரங்கிக்
கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ
இதுவோ மன்னர்க்(கு) இயல்வேந்தே" (நாம. 309)

என்பது அப்பாடல். "நரியின் குரலே முழவு என்ற வாத்தியமாகப் பிணத்தைச் சுடும் ஈமத்தீயே மங்கல விளக்காக, சுடுகாடாகிய கலையரங்கில் பேய்கள் நிழல்போல் கூத்தாட, ஆந்தை எழுப்பும் குரலே பலர் பாராட்டாக அமைய இந்நிலைக்கு ஆளாகிப் பிறக்க நேர்ந்ததே அரசே, இதுவோ அரசருக்குப் பொருத்தம்?" என்ற அவளது பாடல் உள்ளத்தை உருக்குவதன்றோ?

சீவகன் தவசிகள் சிலருக்குச் சமண சமயக் கொள்கைகளை விளக்கினான்.

"மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சியும் பொறியும் வாட்டி
உய்வக்கை உயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம் மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்" (கேமசரி. 1436)

என்பது அப்பாடல், "உண்மை அறிதல் ஞானம், அவ்வாறு அறிந்த உண்மைப் பொருள்களைப் பொய்மையின்றித் தெளிதல் காட்சியாகும். ஐம்பொறிகளையும், ஐம்புலன்களிற் செல்லவிடாமல் தடுத்து உயிர் கெடாமல் அது உய்யும் வகையில் ஒழுகுதல் ஒழுக்கமாகும். இத்தகு ஞானம், காட்சி, ஒழுக்கம் ஆகிய மூன்றும் இருப்பின் ஒருவனது நல்வினை தீவினை ஆகிய இரண்டும் கெடும்" என்ற சீவகனது சமய அறிவுரை எக்காலத்தும் போற்றத்தக்கதாகும்.

காந்தருவதத்தையார் இலம்பக்தில் அனங்கமாலை என்ற நாடகப் பரத்தை சீவகனிடத்துக் காதல் கொண்டவளாய் நடமாடும் நிலை இன்சுவையானது, "ஆடவரின் உள்ளங்கள் என்ற அரங்கில் அனங்கமாலை ஆடினாள். கொடிபோன்ற அவள் தான் காமநோயையும், அதனால் தான் வாட்டமுற்றதையும், உரைத்து நீண்ட செவ்வரி படர்ந்த கண்களாகிய ஓலையில் எழுதினாள்; அதனை முறுவல் என்ற தோழியிடம் கொடுத்து அதனைச் சீவகன் காணுமாறு விட்டாள்" என்ற பொருள்படும் அப்பாடல்.

"ஆடவர் மனங்கள் என்னும் அரங்கின்மேல் அனங்கமாலை
ஆடினாள் முறுவல் என்னும் தோழியை ஐயன் காண
ஓடரி நெடுங்கண் என்னும் ஓலையை எழுதி விட்டாள்
வாடிய வாறும் நோயும் உரைத்துவார் கொடிய ணாளே"

என்பதாகும். (காந்தருவ. 682)

இந்நூல், பிற்கால இலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தது என்பதை உணர்த்தும் கதையும் ஒன்று உண்டு. எடுத்துக்காட்டாக இராமாயணம் பாடிய கம்பர் என்னும் பெரும்புலவர். இந்தக் காப்பியத்திலிருந்து ஓர் அகப்பை முகந்து கொண்டதாகக் கூறினார் என்று அக்கதை கூறும். சில இடங்களில் இக்காப்பியத்தைப் பின்பற்றிப் பாடியுள்ளார் கம்பர் என்பதை விளக்குவதற்குச் சான்றுகள் உள்ளன. கம்பரைப் போலவே, பிற்காலப்புலவர் பலரும் இந்நூலைப் போற்றிக் கையாண்டுள்ளனர்; தம் நூலாகிய தேம்பாவணியை இக்காப்பியப் போக்கில் இயற்றியுள்ளார் வீரமாமுனிவர் எனலாம்.

இந்நூலில் பல நற்கருத்துக்களைக் காணலாம். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. "அமைச்சர் எதையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்; பகைமையைக் களைய ஏற்ற காலம் சூழ்நிலை ஆகியன வேண்டும்; பகைவரை எளிதில் நம்புதல் கூடாது. தீயோரைத் திருத்தல் வேண்டும்; நன்றி மறத்தல் கூடாது; எவ்வுயிரிடத்தும் அருளும் அன்பும் உடையவராய் இருத்தல் வேண்டும்" என்ற கருத்துக்கள் என்றும் பொதுவான உயர்கருத்துக்கள் ஆகும்.

வளையாபதி

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான வளையாபதி என்னும் சமணநூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை. அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய மேற்கோள் பாடலொன்றில்,

"துக்கந்துடைக்குந் துகளறு காட்சியர்
நிக்கந்த வேடத்து இருடி கணங்களை"

என்று காணப்படும் தொடராலும் இது ஒரு சமணநூல் எனத் தெரிகிறது. இப்பொழுது எழுபத்திரண்டு செய்யுள்கள் மட்டும் கிடைத்திருக்கின்றன. இச்செய்யுட்கள் அழகான விருத்தங்களால் இயற்றப்பட்டுள்ளன. இதன் ஆசிரியர் காலம் முதலியவை பற்றி அறிதற்கிடமில்லை. பண்டைக் காலத்து உரையாசிரியர்கள் இதன் பாடல்களை மேற்கோளாகக் கையாண்டனர். ஒப்பற்ற புலவராகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணி என்னும் நூலின் உரையாசிரியர், இவ்வளையாபதி செய்யுளழகு நிரம்பிய இனியதொரு காப்பியம் என்பதனை வலியுறுத்துகிறார். "இவர் (ஒட்டக்கூத்தர்) வளையாபதியை நினைத்தார் கவியழகு வேண்டி" என்று அவர் குறிப்பிடுவது, அக்கருத்தை உறுதிப்படுத்தும். தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றின் உரைகளில் இதன் பாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; புறத்திரட்டிலும் இதன் செய்யுள்கள் காணப்படுகின்றன.

வளையாபதிக்கதை வைசிய புராணத்தின் முப்பத்தைந்தாவது அத்தியாயத்தில் காணப்படுகிறது. நவகோடி நாராயணன் என்னும் வைவசியன் வேற்றுக்குலப்பெண்ணை மணந்ததற்காக அவன் குலத்தார் அவனை வெறுக்க அவன் தன்னாடு நீங்கினான். பல ஆண்டுகளுக்குப்பின் அப்பெண்ணின் மைந்தன் புகார் நகரத்தில் தன் தந்தையைக் கண்டு தாயிடம் சேர்ப்பித்தான் என்பது இக்காப்பியக்கதை.

இந்நூலில் திருக்குறளின் உயர்ந்த கருத்துக்கள் பேசப்படுகின்றன. கொலை, களவு, காமம், கள்ளுண்ணல் ஆகியவை இகழ்ந்துரைக்கப்படுகின்றன. பல இடங்களில் உலகியல் உண்மை, கவியழகுடன் வெளியாவதைக் காணலாம். கணிகையர் தமக்குக் காமுகர்பொருள் வழங்கும்வரை நாளுக்கு நாள் காதல் மிகுவார் போல் காட்டுவர்; பொருள் குறையுங்காலத்தே நாளுக்கு நாள் அன்பினைக் குறைப்பர். இந்நிலைகளுக்கு முறையே வளர்மதி, தேய்மதி ஆகியவை உவமைகளாக அமைந்துள்ளன.

"நாடொறு நாடொறு நந்திய காதலை
நாடொறு நாடொறு நய்ய ஒழுகலின்
நாடொறு நாடொறு நந்தி உயர்வெய்தி
நாடொறுந் தேயு நகைமதி யொப்ப"

என்ற அப்பாடல் உலக நடையைக் கவிதைச் சுவையுடனும் சந்த நயத்துடனும் விளக்கும்.

குழந்தைச் செல்வத்தின் சிறப்பை,

"பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்
துறையிலா வனச வாவித்துகிலிலாக் கோலத் தூய்மை
நிறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னார்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வமன்றே" என்ற விளங்குகிறது.

குண்டலகேசி

பெரும்பாலான பகுதிகள் மறைந்துபோன காப்பியங்களில் இதுவும் ஒன்று. இந்நூலின் செய்யுள்களாக இப்போது கிடைப்பவை இருபத்தொன்பது மட்டுமே ஆகும். குண்டலகேசி என்ற வணிகப்பெண் சமண சமயத்தினள், தன்னைக் கொல்ல முயன்ற கணவனை ஒழித்துப் பிறகு பௌத்தத் துறவி ஒருவரிடம் உபதேசம் பெற்றுப் பௌத்த சமயத் தொண்டு செய்து உயர்நிலை அடைந்தாள் என்பது இக்கதை. இதை ஆசிரியர் நாதகுத்தனார் ஆவர். இது விருத்த யாப்பால் அமைந்த பௌத்தக் காப்பியமாகும். இது சமண சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே எழுந்தது என்பர். குண்டலகேசி விருத்தம் என்றும் இது அழைக்கப்படும். இதனைத் தர்க்க நூல் எனலாம்.

இந்நூல் நிலையாமையைப்பற்றி வற்புறுத்துகிறது இது ஒரு காலத்தில் புகழுடன் விளங்கியதாகத் தெரிகின்றது. அதனால்தான், பழைய உரையாசிரியர் பலர் இதன் செய்யுள்களை மேற்கோள் காட்டியுள்ளனர். இது கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது எனலாம்.

இதில் வாழ்வின் தன்மையினை ஒரு பாடல் உணர்த்தும் அழகினைக் காண்போம் :

"பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பும் இன்னே மேல்வரும் மூப்பும் ஆகி
நாளுநாள் சாகின்றோமால் நமக்கு நாம் அழாத தென்னோ" (9),

என்பது அப்பாடல், "பாளை போன்ற இளங்குழந்தைப் பருவம், காளைப் பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் ஆகியவையெல்லாம் ஒவ்வொரு நிலையாகச் சாக, அடுத்த நிலை ஏற்படுவதால் மக்கள் நாள்தோறும் சாகின்றார்கள் அவற்றிற்கு அழாதது ஏனோ?" என்று கூறி ஒருவர் இறப்பின், ஏனையோர் அழுவது அறியாமை என ஆசிரியர் வலியுறுத்துகின்றார். இந்நூலின் செய்யுள்கள் பல புறத்திரட்டில் காணப்படுகின்றன.

ஐஞ்சிறு காப்பியங்கள்

"அறமுதல் நான்கினும் குறைபா(டு) உடையது
காப்பியம் என்று கருதப்படுமே" (தண்டி. 10)

என்ற கருத்தின்படி, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு வகை உறுதிப் பொருள்களில் ஒன்று குறையினும் அது காப்பியம் (சிறுகாப்பியம்) என்று கூறப்படும். மேற்கூறப்பட்ட நான்கும் அமைந்த ஒன்று பெருங்காப்பியம் என்ற வழக்கு முற்காலத்தில் தோன்றியது; ஆனால் ஐஞ்சிறு காப்பியம் என்ற வழக்கு பிற்காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகும். சூளாமணி யசோதா காவியம், உதயண குமார காவியம், நாககுமார காவியம், நீலகேசி என்னும் இவை ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள் எனப்படும்.

சூளாமணி

ஐஞ்சிறு காப்பியங்களில் சுவையான நூலான இதன் ஆசிரியர் தோலா மொழித்தேவர், சீவகசிந்தாமணியின் அடியொற்றி அமைந்த இனிய ஓசைத் திறமுடைய இந்நூல் விருத்தப்பாவால் அமைந்தது. இது, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட செய்யுட்களை உடையது. ஸ்ரீபுராணம் என்னும் வடமொழிச் சமண நூலில் உல்ள திவிட்டன், விசயன் என்பவரின் கதையை இக்காப்பியம் விளக்கும். இயற்கையின் எழிலைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியச் சொல்லோவியங்கள் இதில் உள்ளன. இதன் விருத்தப்பாக்களை நோக்குமிடத்துச் சீவகசிந்தாமணியையும் இது மிஞ்சிவிட்ட நிலை புலனாகும். கம்பரும் தோலாமொழித் தேவரின் செய்யுள் ஓசைத் திறத்தை மிகுதியாகப் பின்பற்றியுள்ளார் என்பதற்குச் சான்றுகள் உண்டு. இதன் ஆசிரியர் சமண மதக் கருத்துக்களை வலியுறுத்துகின்றார். சீவக சிந்தாமணியைப் போலவே இதன் முடிவிலும், துறவும் முக்தியும் விளக்கப்படுகின்றன.

இந்நூலில் கூறப்படும் நிலவருணனைகள் கற்போருக்குக் கழிபேருவகை ஊட்டுவனவாகும். குறிஞ்சி நிலவருணனை பற்றிய,

"கைவிரிந்தன காந்தளும் பூஞ்சுனை
கைவிரிந்தன நீலமு வான்செய் நாண்
மெய்விரிந்தன வேங்கையும் சோர்ந்ததேன்
நெய்விரிந்தன நீளிருங் குன்றெலாம்" (நாட்டு 17)

என்ற பாடல் கற்பனை நலமிக்க பாடல்.

"செங்காந்தள் மலர்கள் மங்கையர் கைகளைப்போல் மலர்ந்தன; அழகிய சுனையின் நீலமலர்கள் மை பரவினாற்போல் மலர்ந்தன; வேங்கை மரங்கள் நன்னாளில் மெய்நிரம்ப மலர்ந்தன; மலர்கள் ஒழுகவிட்ட தேனாகிய நெய், பெரிய குன்றெல்லாம் 'பரவிற்று' என்ற இவ்வருணனையை நோக்க இப்பாடலின் தெவிட்டாத சுவை தெளிவாகும்.

"ஆனை துரப்ப அரவுரை ஆழ்குழி
நானவிர் பற்றுபு நாலும் ஒருவன் ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
மானுடர் இன்பம் மதித்தனை கொள் நீ"

என்ற பாடல் உலக வாழ்வின் தன்மையினை உணர்த்துகிறது.

யசோதர காவியம்

இது, வடமொழியில் உள்ள யசோதர சரிதத்தைத் தழுவி எழுதப்பட்ட சமணக் காப்பியம்; தூய எளிய நடையில் விருத்தப்பாக்களால் அமைந்தது; ஐந்து சருக்கங்களையும் 320 பாக்களையும் உடையது. உயிர்க்கொலை தீது என்ற கொள்கை இதில் வற்புறுத்தப்படுகிறது. சிற்றின்பத்தின் இழிவையும் தவ ஒழுக்கத்தின் உயர்வையும் சிறப்பிக்கும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலில் காணப்படும் மாரிதத்தன் வரலாறு வேறு எந்தத் தமிழ் நூலிலும் இல்லை. அணிநலன்கள் மிகுதியாக இந்நூலில் இல்லை.

உதயண குமார காவியம்

உதயணன் வரலாற்றை, 367 செய்யுள்களில் விருத்தப்பாவால் கூறும் காவியமாம். இது 'பெருங்கதை' நூலில் வழிநூலாகும். இதனை இயற்றிய புலவர் பெயர் தெரியவில்லை. இந்நூல் காப்பிய இலக்கணம் பொருந்தியதன்று என்பர். எனினும் சந்த நடையுள்ள பாடல்களும் இதில் உண்டு என்பதற்கு ஒரு சான்று காண்போம். மதவெறி பிடித்த களிறு புறப்பட்டு ஓடி வருவதை ஆசிரியர்,

"வெடிப டும்முழக்கிடியெ னவிடும்
கொடியு டைமதில் கிடுகி டென்றிடும்
விடுபற் கோட்டினில் வெட்டி விட்டிடப்
படப டென்னாவ பய மானதே"

என்கிறார். "நிலம் வெடிக்குமாறு உள்ள யானையின் பிளிறல் முழக்கம் இடி இடிப்பதுபோல இருக்கும்; கொடிகளுடைய மதில் கிடுகிடுவென அசையும்; பாகர் அதன் பல்லாகிய கொம்பினை வெட்டி அடக்க முயன்றும் அது அடங்காமல் படபடவென விரைந்தோடலாயிற்று" என்று மதயானையின் ஆரவாரத்தைச் செஞ்சொற்களால் நாம் கேட்குமாறு அமைந்திருக்கும் பாங்கு போற்றற்குரியது.

நாககுமார காவியம்

இந்நூலாசிரியர் சமண சமயத்துறவி என்பதைத் தவிரப் பிற செய்திகள் தெரியவில்லை.

நீலகேசி

இதனை 'நீலகேசித் தெருட்டு' என்றும் கூறுவர். இது குண்டலகேசி என்ற பௌத்தக் காப்பியத்தை எதிர்த்துச் சமண சமயத்தின் சிறப்பை நிலை நாட்ட வந்த நூல் என்பர். இது பத்துச் சருக்கங்களையும் 894 பாக்களையும் உடைய ஒரு நூல். வாமன முனிவர் இந்நூலுக்கு உரையொன்று எழுதியுள்ளார்.

பிற காப்பியங்கள்

"மேரு மந்திர புராணம்" என்ற மணக்காப்பியம் 1406 செய்யுள்களையும் பதின்மூன்று சருக்கங்களையும் கொண்டது. இதன் ஆசிரியர் வாமனாச்சாரியர் ஆவர். பல பிறவிகள் எடுத்து அலைந்த பிறகு 'மேரு, மந்தரன்' என்ற இரு சகோதரர்கள் தவம் செய்து பிறப்பினை நீக்கி முத்தியின்பம் அடைந்ததை இந்நூல் விளக்கும். இந்நூலில் அக்காலத்திய மணக் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் காணலாம்.

விம்பசார கதை என்ற நூல், புத்தரது உபதேசம் பெற்றுப் பௌத்தன் ஆன மகதநாட்டு மன்னனாகிய விம்பசாரன் வரலாற்றினைக் கூறுவது அழிந்துபோன நூல்களில் ஒன்றாக இப்பௌத்தக் காப்பியத்தின் நான்கு அடிகளை நீலகேசி உரையாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார்.

2. சமயக் காப்பியங்கள்

பெரியபுராணம்

பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார், தேவாரம் பாடிய மூவர் உட்பட அறுபத்து மூன்று அடியார்களின் வரலாற்றினை இதில் எழுதியுள்ளார். குலோத்துங்க சோழனிடம் அவைப்புலவராக இருந்த இவர் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரை இதற்கு இட்டார். இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். சீவகசிந்தாமணி என்ற சமணக்காப்பியத்தில் ஈடுபாடு கொண்டிருந்த சோழ மன்னனைச் சைவ நெறிக்குத் திருப்பவே இது இயற்றப்பட்டது என்பர். ஆனால் இக்கருத்தினைத் திரு.வி.கல்யாணசுந்தரனார் முதலிய சிலர் மறுப்பர்.

நூலின் சிறப்பு

சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி என்பவை அறுபத்துமூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பாகக் கூறுவன. அவற்றைச் சேக்கிழார் விரிவாக்கிப் 'பெரிய புராண'மாக இயற்றினார். இந்நாயன்மார்களின் வாழ்ந்த ஊர்களுக்குத் தாமே சென்று உண்மை வரலாறுகளைக் கேட்டு எழுதினார். கற்பனையாக எந்த வரலாற்றினையும் இவர் சேர்க்காதது ஒரு தனிச்சிறப்பாகும்.

தழுவலோ மொழி பெயர்ப்போ இல்லாமல் இடைக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் தெரிவிக்கும் ஒரு வரலாற்றுக் காப்பியம் இதுவாகும்.

சேக்கிழார், சுந்தரமூர்த்தி நாயனாரைக் காப்பியத் தலைவராக அமைத்தார்; சுந்தரமூர்த்தி நாயனார் தோன்றியது முதல் கைலாயம் சேர்தல் வரையுள்ள அவருடைய வாழ்க்கையைக் கூறுவதாகக் காப்பியத்தை அமைத்தார்; இடையே தாம் பாடிய அறுபத்து மூவருடைய வரலாறுகளையும் விளக்கினார். பன்னிரண்டாம் திருமுறையாகிய இதில் திருநீலகண்டரது துறவு, சாக்கியரது முத்தி, சுந்தரர் சங்கிலியார் மணம் ஆகிய புதிய செய்திகளையெல்லாம் இவர் குறிப்பிடப்பட்டுள்ளார். தமிழ் நாட்டிலிருந்த பல்வேறு கல்வெட்டுகளையும் ஊன்றிக் கவனித்துப் பாடிய இவரது நுண்மாண் நுழைபுலம் போற்றற்குரியது. முதலாம் இராசேந்திர சோழனின் தஞ்சாவூர்க் கல்வெட்டில் காணப்பட்ட 'தத்தா நமரேகாண்' என்ற தொடர் அப்படியே மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் கையாளப்பட்டது.

நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட இந்நூலில் காப்பியச்சுவை விஞ்சி இராவிடினும் காப்பியப் பண்புகள் நிகழ்வதைக் காணலாம். சிவனடியார்கள் இறைவனை வழிபடும் ஒன்றையே விரும்பும் தன்மையில் முத்தியையும் நாடாதவர்கள் என்று அவர்களை இவர் போற்றுகின்றார். அச்சிவனடியார்கள் ஓட்டையும், பொன்னையும் ஒன்றாக மதிப்பவர்கள் என்கிறார்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" (திருக்கூட்ட. 8)

என்ற இப்பாடலில் சிவனடியாரது உள்ளப்பான்மையை நன்கு சித்திரித்துள்ளார். மேலும் அச்சிவனடியார்கள் உலகை வெல்பவராய் இடையூறின்றி அன்பின் வழி இன்பம் நுகர்ந்து, நல்வினை தீவினைகளைக் கடந்தவர்கள் என்று பாராட்டுகின்றார்.

பெரிய புராண வருணனைகள் பெரும்பாலும் இயற்கையில் முகிழ்த்தவையாகும்

"காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னம் குளமெல்லாம் கடலன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்" (பெரிய நாட்டு. 17)

என்ற பாடல் கவிதை நயமிக்க ஒன்றாகும்.

காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வரம் கேட்பதாக உள்ள உருக்கமான பாடல் சேக்கிழாரது உள்ள வேட்கையைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
என்றும் மறவாமை வேண்டும்"

என்று கேட்டுச் சிவபிரானது அடியின்கீழ்ப் பாடிக்கொண்டே இருக்கவும் வேண்டுகின்ற இவர்தம் உயரிய பண்பாடு பாராட்டற்குரியது.

இவருடைய பாடல்களில் இறைமணமும் தமிழ் மணமும் கமழுவதைக் காணலாம். வயலில் விரிந்து அசையும் நெற்கதிர்கள் சிவனடியாரின் மனம்போல் மலர்ந்து அழகாக உள்ளனவாம். மலர்கள் கொத்துக் கொத்தாக தொங்கும் கொன்றைமரம் சடைகளையுடைய சிவபிரான் போல் தோன்றுகிறதாம்.

அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயருடைய இவர், எளிய சொற்களால் இனிமையான வருணனைகளைக் கொண்டு பக்திக்காப்பியம் படைத்தவர். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தம் நூலில் 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று இவரைப் பாராட்டுவார். அளவில்லாத பெருமையராகிய அடியார் புகழ் பாடியதால் 'தொண்டர் சீர் பரவுவார்' என்று இவர் வழங்கப்பெறுகிறார்.

கம்பராமாயணம்

'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'கவிச்சக்கரவர்த்தி கம்பர்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி சொல்லும்' என்ற தொடர்கள் கம்பரது பெருமையினை உணர்த்தும். இவர், 'புகழ்க்கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்று சொல்லுமாறு தமிழ் நாட்டிற்குப் பெருமை தந்தவர், இவர் விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' என்று பாராட்டப்படுகிறார். இவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு எனச் சிலரும், பன்னிரண்டாம் நூற்றாண்டு எனப் பலரும் கூறுவர். இவர், தம்மை ஆதரித்த சடையப்பவள்ளலைத் தம் இராமாயணத்தில் உரிய இடத்தில் ஏற்றிப் பெருமைப்படுத்துகிறார். சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சிலையெழுபது, ஏரெழுபது, திருக்கை வழக்கம் முதலிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

இந்நூலின் பாடல்கள் ஏறத்தாழப் பன்னீராயிரம் ஆகும். இது திருவரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது என்பர். முதல் நூலாகிய வடமொழியில் எழுந்த வான்மீகி இராமாயணத்தை ஒட்டி இது எழுந்ததாகும். ஆனால் கற்போருக்கு ஒரு புதுக் காப்பியம் போல் விளங்குமாறு கம்பர் தம் கற்பனைத் திறனால் இதனைத் தமிழ் பண்பாட்டிற்கேற்பப் படைத்தார். இவரது இராமாயணத்தையும் வான்மீகி இராமாயணத்தையும் ஒருங்கே கற்ற கால்டுவெல் என்ற மேல்நாட்டு அறிஞர் இதனை மேலை நாட்டுக் காப்பியமாகிய இலியட் (ILIAD) என்பதோடு ஒப்பிடுகிறார். வ.வே.சு. ஐயர் இவ்விரு இராமாயணங்கலையும் கற்று, கம்பராமாயணம் பலவகையில் சிறப்புடையது என்று குறித்துள்ளார். இதன் கவிதையுணர்வு ஆற்றொழுக்காகச் செல்வதால் இது முதற்காப்பிய நிலையில் உள்ளது என்கிறார்.

நூலின் சிறப்பு

கம்பராமாயணம் காப்பியக் கட்டுக்கோப்பினை உடையது. பாத்திரப்படைப்பு, நாடக அமைப்பு, உரையாடல் ஆகியவற்றில் தனித்தன்மை பெற்று இந்நூல் விளங்குவதால், இது 'கம்பநாடகம்' என்று

பாராட்டப்படுகின்றது. சிறந்த கவிதை எப்படி இருக்கவேண்டும் என்பதைக் கம்பர் கோதாவரி ஆற்றுக்கு அதனை உவமை கூறுமுகத்தான் விளக்குகின்றார். 'புவிமாந்தர்க்கு அலங்காரமாய் அறம், பொருள், இன்பம், வீடு என்ற பொருள்களுடன் அகப்பொருள் துறைகளை ஏற்று முல்லை முதலான ஐவகை நிலங்களிலும் விரவித் தெளிவுடையதாய், குளிர்ந்த இனிய நடையைத் தழுவிக் கவி அமையும்' என்ற இவரது கருத்தின்படி, இவரைச் சான்றோர்கவி என்றால் சாலும்,

"புலியினுக்(கு) அணியாய் ஆன்ற
பொருள் தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்(று)
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்" (சூர்ப்ப. 1)

என்ற அப்பாடல் கவிதைக்கும் கோதாவரி நதிக்கும் சிலேடையாக அமைந்து இன்பம் பயப்பதாகும்.

கோசல நாட்டு வளமான வாழ்வை வருணிக்கும் இடத்தில் கம்பர் ஒப்பற்ற கற்பனையில் ஈடுபடுகின்றார். "பெண்கள் யாவரும் அழகு வடிவங்களாகத் திகழ்கின்றனர். அவர்கள், பொருட்செல்வம், கல்விச்செல்வம் ஆகிய இரண்டும் நிரம்பியவர்கள். எனவே, கோசல நாட்டில் துன்புற்று வந்தவர்களுக்குக் கொடுத்து உதவுவதும், நாள்தோறும் விருந்தினரை உபசரிப்பதும் தவிர வேறு நிகழ்ச்சிகள் இல்லை. மக்களின் வாழ்வில் குற்றங்கள் இல்லாமையால் எமன் வருவதில்லை. மக்களின் மனம் செம்மையாக இருப்பதால் சினம் கொண்டு விதிக்கும் தண்டனை இல்லை. நல்ல அறம் தவிர வேறு ஒரு தீமையும் இல்லாமையால் உயர்வு உண்டே தவிர வீழ்ச்சி அல்லது கேடு இல்லை. மக்களிடையே பொருள்களைக் கவர்ந்து செல்லும் கள்வர் இல்லாமையால் பொருள்களுக்குக் காவல் இல்லை" என்பது இவரது கற்பனையோட்டமாகும்.

கம்பர், கற்பனை நயத்துடன் கோசல நாட்டின் சிறப்பைக் கூறும் வருணனையில் எதிர்காலம் இப்படியிருக்க வேண்டும் என்று முன்பே கூறும் அரசியல் ஞானியின் தன்மையைக் காணலாம். 'கோசல நாட்டில் வறுமை இல்லாமையால் கொடைச் சிறப்பானது தெரிவதில்லை; பகைவர் இல்லாமையால் வலிமையின் சிறப்புத் தெரிவதில்லை; பொய் பேசுதல் இல்லாமையால் உண்மையின் உயர்வு தெரிவதில்லை; உயர்ந்த கேள்வியறிவு மேம்பட்டிருந்தமையால் அறிவு மேம்பாடு தனியே விளங்குவதில்லை என்ற இவரது பாடல் ஒப்பற்ற கற்பனைக் காட்சியாகும்.

"வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரை இலாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஒங்கலால்". (பால. 85)

அறுபதுக்கும் மேற்பட்ட (ஓசைகளை) சந்த நயங்களைக் கம்பர் இடத்திற்கு ஏற்பக் கையாளுகிறார். கதைப் போக்கிற்கும் பாத்திரங்களுக்கும் இயைந்த முறையில் ஒலிநயம் சிறப்பாக அமைவது பாட்டின் சிறப்பியல்புகளாகும். சூர்ப்பநகையின் கவர்ச்சி தரும் நடையோடு கவிஞரின் பாட்டினது ஓசை போட்டியிடுவதை நாம் காண்கிறோம்.

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்" (சூர்ப்ப. 31)

பாத்திரங்களுக்குத் தக்கவாறு இயல்பான பேச்சின் ஓசையைக் கம்பர் அழகுறக் கையாளுந் திறத்தால் இது ஒரு நாடகக் காப்பியமாகத் திகழ்கின்றது. கும்பகர்ணன், இராவணனிடம் பேசுகையில் "பேசுவது மானம்; இடைபேணுவது காமம்; கூசுவது மானுடரை; நன்று நமகொற்றம்" என்று மிக இயற்கையாக இடித்துரைப்பது நயமாக உள்ளது.

கம்பரின் பாடல்களின் வீரம், வெகுளி, அழுகை முதலிய பல சுவைகளுக்கு ஏற்றவாறு சொற்களின் ஓசையும் பொருளும் இணைந்து ஏவல் புரிகின்றன. தாடகையின் மேல் இராமன் எரிந்த அம்பு, அரக்கியின் வலிமையை உருவிக்கொண்டு சென்றதுமட்டும் அல்லாமல், அடுத்து இருந்த மலையையும் மரங்களையும் மண்ணையும் உருவிக்கொண்டு சென்றது என்கிறார் கம்பர்.

"அலை உருவக் கடல் உருவத் தாடகைதன் நீண்டுயர்ந்த
நிலை உருவப் புயவலிமை நீஉருவ நோக்கையா,
உலை உருவக் கனல் உழிழ்கண் தாடகைதன் உரம்உருவி
மலை உருவி மரம் உருவி மண்உருவிற்று ஒருவாளி"

என்ற பாடல், அம்பானது பலவற்றை உருவிக்கொண்டு சென்ற காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இங்ஙனம் தமிழ்ச் சொற்களின் ஓசை வளத்தையும் பொருள் வளத்தையும் நன்கு பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளார் கம்பர்.

"சுட்டது குரங்கெரி சூறையாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டதிவ் வரியணை இருந்த தென்னுடல்

என்ற பாடல், இராவணனுடைய மான உணர்ச்சியையும் கடுஞ்சினத்தையும் புலப்படுத்துகிறது. உணர்ச்சிகளை இப்பாடலிலுள்ள சொற்களின் பொருள் உணர்வதற்கு முன்னமே இப்பாடலிலுள்ள நடையும் ஓசையும் உணர்த்தி விடுகின்றன. இதுபோல, இலக்குமணனின் ஆத்திரமும் கொதிப்பும், குகனுடைய ஆர்வமும், வீரமும், பரதனின் பக்தியும் பணிவும் முதலியவற்றை விளக்குமிடங்களில் கம்பரின் பாடல்கள் சொற்களால் ஆக்கப்பட்டவைகளாகத் தோன்றவில்லை. உணர்ச்சிகளாலேயே படைக்கப்பட்டனவாகத் தோன்றுகின்றன.

நிகழ்ச்சிகளைச் சுவைபட விளக்குவதிலும் கம்பர் வல்லவர். இராமன் சுக்கிரீவனிடம் அன்பு கொண்டது, "உன் பகைவர் எனக்கும் பகைவர், தீயவர் ஆனாலும் உன் நண்பர் எனக்கும் அன்பர், உன் சுற்றத்தார் எனக்கும் சுற்றத்தார். என் உறவினர் உனக்கும் உறவினரே. நீ என் உயிர்த் துணைவனான தம்பி" என்றான். பிறகு விபிஷணனிடம் அன்பு கொண்டபோது, முன்பு குகனோடு சேர்ந்து ஐந்து பிள்ளைகள் ஆனோம். பின்பு சுக்கிரீவனோடு அறுவரானோம். உன்னோடு சேர்ந்து எழுவரானோம். உன் தந்தையாகிய தசரதன் இவ்வாறு என்னைக் காட்டுக்கு அனுப்பிப் பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டான்" என்றான் இச்செய்தியினை,

"குகனோடு ஐவர் ஆனேம்
முன்புபின் குன்றுசூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனேம்
எம்முறை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய
நின்னொடும் எழுவர் ஆனேம்
புகலருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை"

என்னும் பாடல் சுவைபடச் சித்திரிக்கின்றது. கதைப்போக்கில் நிகழ்ச்சிகளை விளக்குவதிலும் இவர் இணையற்றவர். அனுமன் சீதையைக் கண்டபின் கிஷ்கிந்தைக்குத் திரும்பி வந்து, இராமனிடம் செய்தி கூறுகின்றான்; 'இலங்கையில் கணவனைப் பிரிந்து தவம் புரியும் ஒரு நங்கையை மட்டும் காணவில்லை, ஐயா! நல்லகுடிப் பிறப்பு என்ற ஒன்று, பொறுமை என்ற பண்பு ஒன்று, கற்பு என்ற பெயருடையது ஒன்று அங்கே மகிழ்ந்து நடம் புரிவதைக் கண்டேன்" என்று தன் ஆர்வமும் மகிழ்ச்சியும் சீதையின் உயர்வும் தூய்மையும் ஒருங்கே புலப்படும் வகையில் இராமனிடம் எடுத்துரைக்கின்றான். இதனை,

"விற்பெருந் தடந்தோள் வீர
வீங்குநீ ரிலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லேன்;
இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்"

என்னும் பாடல் சீதையின் மாண்பினை எழிலுறச் சித்திரித்துக் காட்டுகின்றது. இங்ஙனம், வளமான காப்பியம் பாடித் தமிழிலக்கிய வானில் பேரொளி வீசித் திகழ்கின்றார் கம்பர். இதனாலன்றோ பாரதியாரும், "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்று கம்பரைப் போற்றிப் பாராட்டியுள்ளார்."

கந்த புராணம்

கந்த புராணம் கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப் பெற்றது. ஆறு காண்டங்களாகப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுட்களில் முருகப் பெருமானின் கதையை வடித்துத் தந்துள்ளார். இவர் வடமொழியிலிருந்து ஸ்கந்தனின் வரலாற்றைக் கூறியுள்ளார் என்று கூறுவர். முருகன் வள்ளி கதை தமிழகத்து நிலவிய கதையே என்றும் அதில் வடமொழிப் புராணக் கலப்பு உண்டு என்றும் கூறுவர். ஆறுமுகப் பெருமானின் பிறப்பு, வீரம் இவற்றுடன் சூரபன்மாவுடன் போரிட்டு வெற்றி பெற்ற சிறப்பும் வள்ளி தெய்வயானை ஆகியோருடன் நடைபெற்ற திருமணங்களும் இந்நூலில் மிக விரிவாகப் பேசப்படும்.

சோழப் பேரரசு ஏற்றம் பெற்றிருந்த காலத்தில் இப்புராணம் இயற்றப்பெற்றது. இதன் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று கூறுவர்.

வில்லி பாரதம்

சங்க நூல்களில் பாரதக் கதையின் செய்திகளைக் காணமுடிகின்றது. சிலம்பிலும் சில குறிப்புகளை நாம் காணவியலும். பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று ஒரு புலவர் வாழ்ந்தமை இங்கே எண்ணத்தகும். கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் பாரதவெண்பா.

பல்வேறு பாரத நூல்கள் இருப்பினும் வில்லி பாரதமே செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. வில்லிபுத்தூராழ்வார் வில்லிபாரதத்தைக் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் இயற்றினார். வியாச பாரதமே இதற்கு முதனூலாகும். இது பதினெட்டுச் சருக்கங்கள் கொண்டது. வில்லிபாரதம், இதன் முதல் பத்துச் சருக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது.

திருமுனைப்பாடி நாட்டுச் சனியூரில் வில்லிபுத்தூராழ்வார் பிறந்தார். இவர் தமிழிலும் வடமொழியிலும் தோந்த புலமை பெற்றவராக விளங்கினார். வில்லிபுத்தூராரின் மகன் வரந்தருவார். வில்லிபாரத நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார். இந்நூலில் வடசொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன. ஆயினும் சந்தப் பாக்கள் மிகுந்து, சொன்னயமும், பொருள் நயமும் சிறந்தோங்க விளங்குகின்றது.

திருவிளையாடல் புராணம்

மதுரைச் சொக்கநாதப் பெருமானின் 64 திருவிளையாடல்களைச் செப்புவது மதுரைத் தலப்பெருமையை எடுத்துரைக்கும் நூல் இது. இதனைத் தலபுராண வகை என்ற கருதுவர். இது வடமொழியிலிருந்து மொழியாக்கம் செய்யப்பெற்றது என்று கூறுவாரும் உண்டு.

வேம்பத்தூரார் இயற்றிய திருவிளையாடல் நூலே முதலில் இயற்றப்பட்டது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பார் 'திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம்' இயற்றினார். இதன் பின்னர் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் 'திருவிளையாடல் புராணத்தை' இயற்றியுள்ளார். இது நான்கு காண்டங்களையும் 68

படலங்களையும் 3363 பாடல்களையும் கொண்டு விளங்குவது. இது ஆல்வாய்ப் பெருமானின் 64 திருவிளையாடல்களைக் கூறுவது. இது கவிச்சுவையும் கருத்துச் சுவையும் நிரம்பப் பெற்றது.

3. பிறசமயக் காப்பியங்கள்

சீறாப்புராணம்

குறிப்பிடத்தகுந்தது. சீதக்காதி என்ற வள்ளலின் முயற்சியால் உமறுப்புலவர் பாடியுள்ளார். காப்பியம் முடியுமுன் அவ்வள்ளல் இறக்கவே அபுல்காசிம் என்ற செல்வர் உதவியால் முடிந்தது.

நபிநாயக வரலாறே காப்பியப் பாடுபொருள் 92 படலங்களும் 5027 பாடல்களும் கொண்டது. நூல் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு, கம்பராமாயணத்தின் அமைப்பை ஒட்டியது இந்நூல். நாட்டுநகரச் சிறப்புடன் நூல் தொடங்குகிறது. நாற்பொருளும் பேசும் பெருங்காப்பியமாக அமைகிறது. உமறுப்புலவரால் விடப்பட்ட செய்திகளை அகமது மரைக்காயர் என்பவர் 'சீன்னச்சீறா' என்ற பெயரில் பாடியுள்ளார்.

முகமதியர் காவியம்

என்ற நூலொன்று இருந்தாகத் தெரிகிறது. அது வண்ணப் பரிமளம் என்பவரால் பாடப்பட்டது. இசுலாமிய சமயத்தின் கொள்கைகளையும், உயர்வையும், மதத்தை நிறுவியவரான நபியின் பெருமையையும், தழுவியவர்களான அபூபக்கர், உதுமான், உமான், அலி முதலானோர் சிறப்புக்களையும் எடுத்துரைக்கும் நூலெனவும் தெரிகிறது.

கிறித்தவக் காப்பியங்கள்

19–ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமயம் தமிழ் நாட்டிலும் தமிழர் வாழ்ந்த பகுதிகளிலும் வேகமாகப் பரவத் தொடங்கியது. அப்போது அவர் தம் சமயக் கருத்துக்கள் தமிழில் புகுந்தன. தமிழ் இலக்கியச் சுவையில் மூழ்கிய சில பாதிரிமார்கள் தமிழில் இலக்கியங்கள் படைத்தனர். இம்முயற்சியில் வீரமாமுனிவரின் தொண்டு தலையாயது.

தேம்பாவணி

1726–இல் முடிக்கப்பட்டு 1729–இல் ஆசிரியராலேயே உரையும் எழுதிச் சேர்க்கப்பட்ட காப்பியம். பெருங்காப்பிய இலக்கணங்கள் கொண்ட நூல். இயேசுவின் தந்தை சூசையப்பரே காப்பியத் தலைவர். அவருக்கு 'வளன்' என்ற தமிழ்ப்பெயர் தந்து பாடியுள்ளார். ஆசிரித் என்னும் நகரில் வாழ்ந்த மரியம்மைக்குத் தேவமாதா காட்சிதந்து தன் கணவரின் பழங்கதை கூறி எழுதுவித்தாள் என்றும் அவ்வழியில் தாம் அதைத் தமிழில் ஆக்குவதாகவும் நூல் வந்த வழிபற்றிப் பாயிரத்தில் குறிப்பிடுகிறார். இது, கந்தபுராணம் முதலான பிற புராண வரலாறுகள் எழுதப்பட்ட முறைகளை நினைவூட்டுவதாக அமைகிறது.

நூல் 3 காண்டங்களையும் 36 படலங்களாகவும் பிரிக்கப்பட்டு 3615 பாடல்களைக் கொண்டுள்ளது. நடையில், கம்பர், திருத்தக்கதேவர் ஆகியோரின் சாயல் காணப்படுகிறது.

இரட்சணிய யாத்திரகம்

கிருஷ்ணபிள்ளை என்பவர் எழுதியது. ஜான்பனியன் என்னும் ஆங்கில நாட்டவர் எழுதிய, "பரதேசியின் மோட்சப் பயணம்" என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இதன் காப்பியத் தலைவர் ஏசுநாதர்.

சிறப்புப் பாயிரம், பதிகம் ஆகியவற்றில் தொடங்கி, ஆதிபருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என ஐந்து பருவங்களால் ஆகியது. 47 படலங்களையும் 3776 பாடல்களையும் கொண்டது. இடையிடையே இசைப்பாடல்களைப் புகுத்தியுள்ளார் ஆசிரியர்.

திருவாக்குப் புராணம் :

யாழ்ப்பாணத்துக் கனகசபைப் புலவரால் எழுதி 1866–இல் வெளியிடப்பட்டது. பதிகம் மட்டுமே 111 பாடல்கள் கொண்டது. நூல் விருத்தப்பாவில் அமைந்தது. ஐநந காண்டம், யாத்திரைக் காண்டம் முதலிய 10 காண்டங்களை உடையது.

சுவிசேஷ புராணம்

புதிய ஏற்பாட்டு வரலாறு கூறுவது இந்நூல், ஸ்காட் என்ற ஆங்கிலேயர் பாடியது. மத்திமக் காண்டம், மாற்கக் காண்டம், லூக்கா காண்டம், யோவா காண்டம், அப்போஸ்தலக் காண்டம் என 5 காண்டங்களையும் பகுதிகளையும் 420 படலங்களையும் உடையது. 3360 பாடல்கள் கொண்டது.

கிறிஸ்தாயணம்

ஜான் பால்மார் என்பவரால் 1865–இல் வெளியிடப்பட்டது. பால காண்டம், கிரியா காண்டம், அவஸ்தாக் காண்டம், ஆரோகணகாண்டம் என நான்கு காண்டங்களையும் 842 பாடல்களையும் கொண்டது; ஏசுவின் வரலாறு பற்றியது.

கிறிஸ்து மான்மியம்

கிறிஸ்துவின் வரலாறு பற்றிய மற்றொரு காப்பியம் இது. தோஷ் ஐயர் என்பவர் முயற்சியால் 1891–இல் வெளியிடப்பட்டது. 39 சருக்கங்களை உடையது.

சுத்தானந்த பாரதியின் 'ஏசுநாதர் சரிதை'யும் கண்ணதாசனின் இயேசு காவியமும் கிறித்தவக் காப்பியங்களே.

இற்றைக் காப்பியங்கள்

காப்பியங்களை எழுதவோ, படிக்கவோ, சுவைக்கவோ, எடுத்துரைக்கவோ நேரமில்லாத இற்றை நாளிலும் சிற்சில காப்பியங்கள் எழாமல் இல்லை.

பாரதியாரின் பாஞ்சாலி சபதம்

சிறுகாப்பியம் எனக் கருதப்படும் நூல் பாரதியாரின் பாஞ்சாலி சபதம். அத்தினபுரி அரண்மனைச் சிறப்பு சூதாட அழைப்பு, சூதாடல் தோற்றம், பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்துவரல், துகிலுரிதல், அவள் சபதம், பீம அர்ச்சுனர் சபதம் ஆகிய நிகழ்ச்சிகள் பாடப்பட்டுள்ளன.

விடுதலை உணர்ச்சியின் வெளியீடாக அமையும் ஒரு குறியீட்டுக் காப்பியம் இது. தருமன், பாரதத்தை ஆண்ட ஓர் அரசன், துரியோதனன் ஆங்கிலேய ஆட்சியாளன், வீமன் – விடுதலை வேட்கை கொண்ட வீரன், பாஞ்சாலி – அடிமைப்பட்ட பாரத அன்னை என ஒவ்வொன்றாய்ப் பொருத்தும் வண்ணம் நூற்போக்கு அமைகிறது. வீமனுடைய விடுதலை முழக்கம் சுதந்திர வீரனின் போர் முழக்கமாகவே அமைவதை,

"கோயிற் பூசை செய்வோர் சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயிற் காத்து நிற்போன் வீட்டை
வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான நீதி
அவையுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் – சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்"

"இது பொறுப்பதில்லை – தம்பி
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் அண்ணன்
கையை எரித்திடுவோம்"

என்ற பாடலிற் காணலாம்.

வெள்ளையருக்கு நாட்டை அடிமையாக்கிய நம்மவரைக் கண்டு சாடுகின்ற குரலொலி இது.

துரியோதனன் சூழ்ச்சிச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என 5 சருக்கங்களாக 308 பாடல்களில் அமைந்த நூல்.

குயில் பாட்டு

குயில், குயிலின்பாட்டு, குயிலின் காதற்கதை, காதலோ காதல், குயிலும் குரங்கும், இருளும் ஒளியும், குயிலும் மாடும், நான்காம் நாள், குயில் தனது பூர்வஜென்மக் கதையுரைத்தல் என 9 பகுதிகளாக 732 வரிகளில் அமைந்த பாடல், கற்பனை நயம், நகைச்சுவை எளிய நடை ஆகியன இதன் சிறப்புக்கள், மாட்டையும் குரங்கையும் குயில் உரைக்கும் பேச்சுக்கள் கற்போரை விலாப்புடைக்கச் சிரிக்க வைப்பன.

பாரதிதாசன் படைப்புக்கள்

புரட்சிக் கவிஞர் பாடல்களில் பாண்டியன் பரிசு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், தமிழச்சியின் கத்தி, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம் ஆகியன சிறுகாப்பியங்கள்.

இவற்றில் தமிழரின் ஒற்றுமை இன்மையைச் சாடுவதும், மூடப்பழக்கவழக்கங்களைக் கண்டிப்பதும், சாதி வெறியை இடித்துரைப்பதுமாகத் தம் சமுதாய உணர்வை வெளியிடுகிறார் கவிஞர்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமைஎன்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு"

என்றும்,

"எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமையெல்லாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக"

என்றும் பாடுமிடங்கள் அவர் கருத்தை உணர்த்தும்.

பிற நூல்கள்

மருமக்கள், தாய முறையைக் கதைப்போக்கில் எள்ளற் சுவையொடு கண்டித்து எழுதிய நகைச்சுவைக் குறுங்காப்பியம், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் மருமக்கள் வழி மான்மியம்.

கண்ணதாசனின் மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, இயேசு காவியம் ஆகியவையும், முடியரசனின் பூங்கொடியும், புலவர் குழந்தையின் இராவண காவியமும், சுத்தானந்த பாரதியின் பாரத சக்தி மகாகாவியமும் இவ்வரிசையில் அடங்குவன.

முடிவுரை

பக்திக் காப்பியங்களான பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலானவை பக்தி இலக்கிய வரலாற்றிற் சுட்டப்பட்டமையால் இவண் குறிக்கப்படவில்லை. மேலும் பல நூல்கள் பெயரளவில் மட்டும் உரைகளிலும் மேற்கோள் செய்யுள்களிலும் உணரப்பட்டு, நூல் கிடைக்காமல் இருக்கின்றன. விம்பசாரகதை, காந்தி புராணம், நாரத சரிதை, கலியாணன் கதை பருப்பதம், புராணசாகரம், அமிர்தபதி முதலான பல அவற்றில் அடங்கும்.

மாணவர்க்குக் குறிப்பு

கட்டுரை வினாக்களுக்கு விடை எழுதும் வசதி நோக்கித் தலைப்புகள் பாடத்திட்டக் குறிப்புக்களின் படியே அமையாமல் காப்பிய, வகை வாரியாக அமைக்கப்பட்டுள்ளன.

வினா வங்கி

1. இரட்டை காப்பியங்கள் குறித்து எழுதுக.
2. ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்து ஓர் இலக்கிய வரலாற்றுக் கட்டுரை வரைக.
3. பெரியபுராணம் காப்பியமாகும் திறத்தைப் புலப்படுத்துக.
4. கம்பராமாயணம் குறித்து ஓர் இலக்கிய வரலாற்றுக் கட்டுரை வரைக.
5. பிறசமயக் காப்பியங்கள் குறித்துத் தொகுத்து வரைக.

சிற்றிலக்கியங்கள்

முன்னுரை :

பிரபந்தம் என்ற வடசொல்லிற்கு நன்கு கட்டப்பட்டது நன்குயாக்கப்பட்டது என்பது பொருள். தமிழில் யாப்பு என்பதேனோடு அதுரைக்கும். இலக்கிய நூல்கள் அனைத்தையும் அது பொதுவாகச் சுட்டத்தக்கது. அதனால் சிலர் சிறுபிரபந்தம் என்றும், சில்லரைப் பிரபந்தம் என்றும் கூறினர். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்னும் போது தமிழில் உள்ள காப்பியம் புராணம், சிறுநூல்கள் அனைத்தையும் உட்கொண்டே அவ்வாறு கூறினர் என்பதைப் பாட்டியல் நூல்களைப் பார்த்துத் தெளியலாம். ஆயினும் பிரபந்தம் என்னும் சொல் பிற்காலத் தமிழ் வழக்கில் சிறிய இலக்கிய நூல்களைச் சிறப்பாகச் சுட்டியது.

பாட்டியல் நூல்கள் என்பன இவ்விலக்கிய வகைகளின் இலக்கணம் கூறவந்த நூல்களாகும். அவை பல்வேறு எண்ணிக்கைகளைத் தருகின்றன. பன்னிருபாட்டியல் 62 இலக்கிய வகைகள் பற்றியும் வெண்பாப் பாட்டியல் 55 வகை பற்றியும், நவநீதப் பாட்டியல் 53 வகை பற்றியும், சிதம்பரப்பாட்டியல் 63 வகை பற்றியும் இலக்கண விளக்கப்பாட்டியல் 63 வகை பற்றியும், முத்துவீரியப் பாட்டியல் 90 வகை பற்றியும் கூறுகின்றன. பிரபந்த மரபியல், பிரபந்ததீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் முதலியன 96 இலக்கிய வகைகள் பற்றிக் கூறுகின்றன. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய நாற்பத்திரண்டு வகை பற்றியும், பாட்டியல் நூல்களில் கூறப்படாத எண்பத்தைந்து சிற்றிலக்கிய வகைகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். இவை அகம் பற்றியவை, புறம் பற்றியவை, வாய்மொழி இலக்கியம் பற்றியவை, யாப்பு பற்றியவை, பக்தி பற்றியவை என ஐந்து பெரும் பிரிவுகளாக நோக்கத்தக்கவை. மேலும் அந்தாதி என முடிவன, கோவை என முடிவன, மாலை என முடிவன, விருத்தம்–மஞ்சரி, பத்து என முடிவன என்றிவ் காணப்படுவன பன்னிரண்டு வகைகளே. அவை ஆற்றுப்படை, தூது, பள்ளு, குறவஞ்சி என்பன. இவற்றுள் பள்ளும் குறவஞ்சியும் இசை நாடக இலக்கியத்தின் பாற்படும்.

தோற்றமும் வளர்ச்சியும் :

சங்க காலத்திலேயே சிற்றிலக்கிய விதை நன்கு ஊன்றப்பட்டதெனினும் பக்தி இலக்கியமே அதனைக் கிளைவிட்டு வளரச் செய்தது. எடுத்துக்காட்டாக ஒன்பதாம் திருமறை, பதினொன்றாம் திருமறை, நாலாயிரம் போன்றவற்றை ஆராய்ந்தால் பலவான சிற்றிலக்கியப் படைப்புகளைக் கண்டு மகிழமுடியும். ஒன்பதாம் திருமறையில் அடங்கியுள்ள திருவிசைப்பாக்கள் பெரும்பாலும் பல்வேறு தலங்கள் பற்றிய பதிகங்களாகும். பதினோராம் திருமுறையில் அந்தாதி, இரட்டை மணிமாலை முதலிய சிறு நூல்களாக எழுந்தவை பல.

சிறப்பியல்புகள் :

உதிரிப் பாடல்களாகவும் அல்லாமல் மிகப் பெரும் காப்பியங்களாகவுமல்லாமல் சிறு நூல்களாக, நெடும் பாடல்களாகப் பாடுவது புலவர்கட்கும் எளிமையாக இருந்தது. கேட்பவர்கட்கும் ஏற்புடையதாக இருந்தது.

சிற்றிலக்கியம் சிலவற்றை விருந்து என்ற வனப்புக்கு எடுத்துக்காட்டுவர். அவை மாற்றவும், புதுமை புகுத்தவும் இவை மிகுந்த இடமளித்தன. வளர்ச்சி காட்டுவதற்கு எளிமையுடையனவாக இருந்தன. புலமைப் போட்டிக்கும், புலவர்கள் தம் திறமையனைத்தையும் புகுத்துவதற்கும் இவை நிரம்ப வாய்ப்பளித்தன. தமிழ் இலக்கியத்தில் சொல்லணிகள், பொருளணிகள், யாப்பு வடிவங்கள் சிறக்க இவையே காரணமாயின. ஒவ்வோரிலக்கிய வகையும் ஒரு யாப்பைப் பலவகையில் பயன்படுத்திச் சிறப்புறுத்தியமையால் இதை உய்த்துணரலாம்; ஆற்றுப் படை ஆசிரியம்; அந்தாதி வெண்பா அல்லது விருத்தம்.

காலம் :

ஏனைய இலக்கிய வகைகளைப் போலவே சிற்றிலக்கிய வகையும் தமிழில் காலந்தோறும் கிளைத்து வந்திருக்கிறது. சங்க இலக்கியத்திலேயே இவ்வகைகள் பல உண்டு. அவற்றுள் தலைமையானது ஆற்றுப்படை. பிறவகைகளுக்கான விந்துக்களை இவ்விலக்கியத்தில் காண்கிறோம். நீதியிலக்கியங்கள் சில சிற்றிலக்கிய வகைகளாகவே அமைந்து விளங்கின. ஆயினும், பக்தி இலக்கியம் சார்ந்த சிற்றிலக்கியங்களே பின்பு சிற்றிலக்கியங்களாயின. அதன் பிறகு இன்று வரை முன்னைய மரபுகளின் வழிப்பட்ட சிற்றிலக்கியங்கள் சாத்திர சமயத்தோத்திரப் பாட்டுத் துறைகளனைத்திலும் தோன்றி வந்துள்ளன. எனினும் சிற்றிலக்கிய வகை மேலோங்கிய காலம் ஒன்று இருக்க வேண்டுமல்லவா? அது கி.பி 12ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கியது. பதினைந்து, பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளை நாம் சிற்றிலக்கியக் காலமென்றே வழங்கலாம். முனைவர் ந.வீ.செயராமன் தம் சிற்றிலக்கியச் செல்வம் என்ற நூலில் "தொல்காப்பியர் காலத்தில் இடம் பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்ந்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகச் செடியாகி எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பாதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோரம் நூற்றாண்டில் சதகமாகவும், பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழ் மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, பதினாறாம் நூற்றாண்டில் பள்ளமாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது என்று கூறுவது இதன் வளர்ச்சியினைக் காட்டும்.

புலவர்கள் :

அந்தாதி மாலை பதிகம் போன்றவற்றைக் காரைக்காலம்மையாரும், உலாவைச் சேதுராமன் பெருமாளும் தூதினை உமாபதி சிவாசாரியளும், பரணியைச் சயங்கொண்டாரும் சிறப்பாக இயற்றி வழிகாட்டினர். ஒட்டக் கூத்தர், குமரகுருபரர், சிவப்பிரகாசர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் போன்றவர்கள் சிற்றிலக்கிய வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர்கள்.

1. ஆற்றுப்படை இலக்கியம்

ஆற்றுப்படை இலக்கணம் :

ஆற்றுப்படை இலக்கியம் சங்கத்துச் சான்றோரால் போற்றி வளர்க்கப்பட்டது. காலத்தால் முந்தியது, சுவை செறிந்தது.

புரவலன் ஒருவனிடம் பரிசல் பெற்ற இரவலன் ஒருவன் வறுமையில் வாடும் மற்றொருவனை வழியில் சந்தித்து தனக்குப் பொருள் தந்த அப்புரவலனிடம் சென்று பொருள் பெற்று வாழுமாறு அவனை வழிப்படுத்தலே ஆற்றுப்படையின் பொதுவிலக்கணம் தொல்காப்பியர்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்."

என்ற கூறுகின்றார். புறப்பொருள் வெண்பாமாலையிப் பாடாண் படலத்துள்

"சேணோங்கிய வரையதரிற் பாணனை ஆற்றுப்படுத்தன்று"
"எத்திச் சென்ற இரவலன் கூத்தரை ஆற்றுப்படுத்தன்று"
"பெருநல்லாள் பிழையீராகெனப் பொருநனை ஆற்றுப்படுத்தன்று"
"திறல்வேந்தன் புகழ்பாடும் விறலியை ஆற்றுப்படுத்தன்று"

எனவரும் கொளுச் செய்யுட்களில் பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை ஆகிய ஆற்றுப்படை நூல்களின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. பாட்டியல் நூல்களும் ஆற்றுப்படை இலக்கணம் கூறுகின்றன.

பத்துப் பாட்டில் ஆற்றுப்படை இலக்கணம் :

திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்ற மலைபடுகடாம் ஆகிய ஐந்தும் பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியங்களாகும். பொருநராற்றுப்படையே ஆற்றுப்படை இலக்கியத்துள் காலத்தால் முந்தியது. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புறப்பொருள் நூல்களிலும் ஆற்றுப்படைச் செய்யுளைக் காணலாம். மேலும் பிற்காலத்தில் எழுந்த கலம்பகம் முதலானவற்றுள்ளும் மற்றும் சில தனிப்பாடல்களிலும் ஆற்றுப்படைப் பாடல்களைக் காணலாம். பிற்காலத்தில் கச்சியப்ப முனிவர், திருமேனி இரத்தினக் கவிராயர், தொழுவூர் வேலாயுத முதலியார், குலாம் காதிறு புலவர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஆகியோர் முறையே தணிகையாற்றுப்படை, புலவரலற்றுப்படை, நெஞ்சாற்றுப்படை, இறையனாராற்றுப் படை ஆகியவற்றை எழுதி இவ்வகையைப் போற்றினர்.

பொருளமைதி :

ஆற்றுப்படையில் புலவராற்றுப்படை யொழிந்த ஏனைவெல்லாம் மன்னர்களையும் வள்ளல்களையுமே பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடப் பெற்றுள்ளன. எனவே இத்தகைய நூல்கள் பாட்டுடைத் தலைவனின் குலப்பெருமை, அறச்சிறப்பு, வீரச்சிறப்பு, அவனது நாட்டிற்குச் செல்லும் வழிகள், அவனிடத்தில் பெறத்தக்க பரிசில் வகைகள் பற்றிக் குறிப்பிட்டுரைக்கும். திருமுருகாற்றுப்படையில் முருகனின் சிறப்பு, வீரம், அவன் குடி கொண்டுள்ள ஆறுபடை வீடுகளின் பெருமை முதலிய செய்திகள் பேசப்பட்டுள்ளன. முருகனிடத்தில் அவனருட் செல்வம் பெற்றானொருவன், பெறச் சமைந்து நின்றானொருவனை ஆற்றுப்படுத்தும், பொருளமைதியை இதனுள் காண்கிறோம்.

பெயர் பெறும் முறை :

யார் ஆற்றுப்படுத்துகின்றார்களோ அவர்கள் பெயரால் நூல்கள் பெயர் பெற்று விளங்குகின்றன. புலவரை ஆற்றுப்படுத்தும் நூல் புலவராற்றுப்படை என்றும், கூத்தரை ஆற்றுப்படுத்தும் நூல் கூத்தராற்றுப்படை என்றும், பொருநரை ஆற்றுப்படுத்தும் நூல் பொருநராற்றுப்படை என்றும், பாணரை ஆற்றுப்படுத்தும் நூல் பாணாற்றுப்படை என்றும் பெயர் பெறும். திருமுருகாற்றுப்படை யாரிடம் ஆற்றுப்படுத்தப் படுகின்றாரோ அத்தலைவன் பெயரால் பெயர் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பத்துப்பாட்டில், சிறுபாணாற்றுப்படை 260 அடிகளையுடைய நூலாதலால் சிறுபாணாற்றுபடை எனவும், பெரும்பாணாற்றுபடை 500 அடிகளை உடைய நூலாதலால் பெரும்பாணாற்றுபடை எனவும் பாடல்களின் அடி அளவின் அடிப்படையில் இந்நூல்கள் பெயர் பெற்றன என்பது சிலர் கருத்து சிறும்பாணாற்றுப்படையில் வரும் பாணன் கையில் சீறியாழ் இருந்தாகவும் பெரும்பாணாற்றுப் படையில் வரும் பாணன் கையில் பேரியாழ் இருந்தாக்வும் வருவதால் முறையே சிறும்பாணாற்றுப்படை பெரும்பாணாற்றுபடை என்று பெயர் பெற்றன என்பதே பொருந்தும்.

அகவற்பாவில் ஆற்றுப்படை :

ஆற்றுப்படை இலக்கியம் அகவற்பாவில் அமைய வேண்டும் என்று பாட்டில் நூல்கள் பகர்கின்றன. பத்துப்பாட்டில் உள்ள ஐந்து ஆற்றுப்படை நூல்களும் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளன.

முடிவுரை :

கருத்து வளமும் நடை நலமும் வாய்ந்த ஆற்றுப்படை இலக்கியம் சிற்றிலக்கியத் தாயின் மூத்த மகவாய்த் தோன்றிய பிற்காலச் சிற்றிலக்கியங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்துள்ளது.

2. அந்தாதி இலக்கியம்

முன்னுரை :

சிற்றிலக்கியங்களுள் எண்ணிக்கையாலும், பொருட்சிறப்பாலும் முதலிடப் பெற்றுத் திகழும் பெருமை அந்தாதி இலக்கியத்துக்கு உண்டு.

அந்தாதியின் இலக்கணம் :

அந்தாதி என்பது, நூலின் ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து, அசை, சொல், சீர், அடி ஆகிய இவற்றுள் யாதனும் ஒன்று அதற்கு அடுத்த பாடலின் முதலாக வரும்படி அமைத்துப்பாடி, இறுதிப்பாடலின் முடிவும், முதற்பாடலின் தொடக்கமும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலை போலத் தொடுத்துப் பாடப் பெறும் யாப்பு வகையிலமைந்த சிற்றிலக்கியமாகும். தொல்காப்பியர் கூறிய விருந்து என்னும் தொடர் நிலைச் செய்யுட்குரிய வனப்புக்கு அந்தாதி இலக்கியத்தையே நேர்முகச் சான்றாகப் பேராசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

அந்தாதிப் போக்கு :

சங்க இலக்கியங்களின் பல இடங்களில் அந்தாயின் இலக்கியப் போக்கைக் காணலாம். பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து அந்தாதி யாப்பினதாக அமைந்துள்ளது. சிலம்பிலும் சில இடங்களில் அந்தாதியின் சாயலைக் காணலாம். திருமந்திரத்தில் நான்காம் மந்திரம் முழுமையும் அந்தாதி யாப்பினது ஞானசம்பந்தரும் மணிவாசகரும் அந்தாதி யாப்பினைப் பயன்படுத்தியுள்ளனர்.

அந்தாதி சிற்றிலக்கியமாதல் :

அந்தாதியைத் தனியொரு சிற்றிலக்கியமாக உருவாக்கிய பெருமை காரைக்காலம்மையாருக்கே உண்டு. அவரது காலம் 5 ஆம் நூற்றாண்டு. அவர் பாடிய அற்புதத் திருவந்தாதியே முதலில் தோன்றிய அந்தாதி இலக்கிய நூல். சேரமான் பெருமாள் நாயனார் கபிலதேவநாயனார், பரணதேவநாயனார், பட்டினத்துப் பிள்ளையார், நப்பியாண்டார் நம்பி, நம்மாழ்வார், முதலாழ்வார் மூவர் ஆகியோர் அந்தாதி இலக்கியப்பயிரை மேலும் வளர்ந்தவராவர்.

அந்தாதி இலக்கிய வகைகள் :

1. **வெண்பா அந்தாதி :** நூறு வெண்பாக்களால் அந்தாதி யாப்பு அமையப்பாடப் பெறுவது. நேரிசை வெண்பாவே இதனுள் அதிகமாகப் பயின்று வரும்.

2. **கலித்துறை அந்தாதி :** நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் அந்தாதி யாப்பு அமையப் பாடப் பெறுவது.

3. **பதிற்றந்தாதி :** வெண்பாவினாலோ, கலித்துறையினாலோ பத்துப்பாடல்கள் அந்தாதி யாப்பில் அமையுமாறு பாடும் நூல்.

4. **நூற்றந்தாதி :** நூறு வெண்பாக்களாலோ, நூறு கலித்துறையாலோ, அந்தாதி யாப்பில் அமையுமாறு பாடப் பெறும் நூல். வெண்பாவாலாயதெனின் வெண்பா அந்தாதி என்றும், கலித்துறையாலாயதெனின் கலித்துறை அந்தாதி என்றும், பொதுவாக நூற்றந்தாதி என்றும் இதனைக் கூறலாம்.

5. **பதிற்றுப்பத்தந்தாதி :** ஒவ்வொரு பத்துப்பாடலும் ஒவ்வொரு சந்தமாகப் பல்வேறு சந்தங்களால் அந்தாதி யாப்பில் அமையுமாறு நூறு பாடல்கள் பாடப்பெறுவது. இதனைப் பலசந்த மாலை என்ற பெயராலும் குறிப்பிடுவர்.

6. **ஒலியலந்தாதி :** பதினாறு கலை ஒரடியாக வைத்து நான்கடிக்கு அறுபத்து நான்கு கலையாக வகுத்துப் பல சந்தமும் வண்ணமும் கலைவைப்பும் தவறாமல் அந்தாதியாப்பில் முப்பது செய்யுள் பாடுவது ஒலியலந்தாதி எனப்படும். இதனை ஒலியலந்தாதி என்று கூறுவர். இனி, வெண்பா, அகவல், கலித்துறை என்னும் இம் மூன்றும் பாவினத்தில் இனத்திற்குப் பத்து வீதம் அந்தாதியாப்பில் பாடிய நூலையும் இப்பெயரால் கூறுவர்.

7. **கலியந்தாதி :** பாடல் தோறும் முப்பத்திரண்டு கலைவைப்பு அமையுமாறு அந்தாதியாப்பில் முப்பது பாடல்கள் பாடப் பெறுவது.

8. **சிலேடையந்தாதி :** இரு பொருள் பயக்கும் சிலேடைப் பொருளமைப்போடு நூறு பாடல்கள் அந்தாதியாப்பில் அமையுமாறு பாடப் பெறுவது.

9. **திரிபந்தாதி :** ஒரு செய்யுளின் நான்கடியினும் முதல் எழுத்து மட்டும் திரிந்து மாறுபட்டு ஏனைய பல எழுத்துக்களும் ஒத்து நின்று பொருள் வேறுபட்டு அந்தாதியாப்பில் அமைவது.

10. **யமக அந்தாதி :** வந்த சொல்லும், தொடரும் மீண்டும் மீண்டும் வந்து பொருள் அடிதோறும் வேறுபட்டு அந்தாதியாப்பில் அமைவது.

11. **நிரோட்டயமக அந்தாதி :** ஒவ்வொரு செய்யுளையும் படிக்கும் போது இதழ்கள் இரண்டும் ஒட்டாமல் ஒலிக்குமாறு அந்தாதியாப்பில் அமைந்த நூறு பாடல்கள் உடையது. எனவே இவ்வந்தாதி இதழ் ஒலிகளாகிய ப,ம முதலியவை வாராது பாடப் பெறும். இதனை இ.நழகவந்தாதி என்ற பெயராலும் கூறுவர்.

அந்தாதி அதிகம் எழக் காரணம் :

பாடல்கள் மனனம் செய்து வைப்பது பழங்காலத்தில் பல்கிப் பரவியிருந்த முறை. மனனம் செய்யுங்கால் தொடர்பாக ஒன்றன் பின் ஒன்றாகப் பாடல்களை நினைவு கூர்வதற்கு அந்தாதி யாப்பு மிகவும் பயன்பட்டது. எனவே அந்தாதி இலக்கியங்கள் பல்கிப் பரவின.

பிற சிற்றிலக்கியங்களில் அந்தாதி :

அந்தாதி யாப்பில் அமைந்த சிற்றிலக்கியங்களை அந்தாதி என்னும் பெயரில் வழங்குகின்றோம். ஆயினும் பொருளமைதியால் மாறுபட்டு, வேறுபட்ட பல பெயர்களைக் கொண்டுள்ள அட்டமங்கலம், இரட்டைமணி மாலை, இணைமணிமாலை, நவமணிமாலை, நான்மணிமாலை, மும்மணிமாலை, ஒருபா ஒருபஃது, இருபா இருஃது, அலங்கார மஞ்சகம் முதலான பல்வேறு சிற்றிலக்கியங்களும் அந்தாதி யாப்பிலேயே அமைந்தவையாகும்.

பெயர் பெறும் முறை :

அந்தாதி இலக்கியங்கள் இறைவன், இறைவி, ஞானம், குரவர், அடியார்கள் ஆகியோர்களைப் பாட்டுடைத் தலைவர்களாக வைத்துப் பாடப் பெற்றுள்ளன.

முடிவுரை :

அந்தாதி இலக்கியங்கள் காலந்தோறும் பூத்துப் பொரிந்து இன்று பரந்து விரிந்துள்ளன.

3. கோவை இலக்கியம்

கோவை இலக்கியத்தின் இலக்கணம் :

அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவி ஐந்திணையில் திரியாததாய்ப் பொருந்திய களவு கற்பினுக்குரிய கிளவிகளையுடையதாய், கட்டளைக் கலித்துறை யாப்பில் நானூறு பாடல்களால் செய்யப்படுவது கோவை என்னும் இலக்கியத்தின் இலக்கணம் ஆகும்.

முதல் கோவை இலக்கியம் :

கோவைச் சிற்றிலக்கியத்தில் காலத்தால் முந்தியது. நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டியன் காலத்தில் எழுந்த பாண்டிக் கோவை ஆகும். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப்போது இந்நூல் 350 பாடல்கள் கிடைத்துள்ளன. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் நின்ற சீர் நெடுமாறன் ஆதலால் அவனது போர்ச் சிறப்பு, கொடைச் சிறப்பு, குணச்சிறப்பு ஆகியவை அழகாகப் பேசப்படுகின்றன.

மேற்கோள் இலக்கியம் :

இறையனாராகப் பொருள் நூற்பாக்களுக்கு மேற்கோள் இலக்கியமாகப் பாண்டிக் கோவையும், நம்பியகப்பொருள் நூற்பாக்களுக்கு மேற்கோள் இலக்கியமாகத் தஞ்சை வாணன் கோவையும் எடுத்தாளப்பட்டுள்ளன.

பெயர் பெறும் முறை :

குமரேசனாசிரியக் கோவை, அம்பிகாபதிக் கோவை என்பன பாடிய நூலாசிரியர் பெயரால் பெயர் பெற்றுள்ளன. பாட்டுடைத் தலைவனாகிய இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களின் பெயரால் வழங்கப்படும் கோவைகள் திருச்சிற்றம் பலக்கோவை, மதுரைக் கோவை, திருவாரூர் கோவை முதலியன பாட்டுடைத் தலைவனாகிய வள்ளல் பெயராலும், அவனுடைய ஊர்ப்பெயராலும் பல கோவை நூல்கள் பெயர் பெற்று விளங்குகின்றன. காங்கேயன் நாலாயிரக் கோவை, குலோத்துங்கன் கோவை, தஞ்சைவாணன் கோவை, குளத்தூர்க் கோவை முதலியனவும் இம்முறையில் அமைந்தவை.

பிற கோவை நூல்கள் :

ஐந்திணைக்குரிய நானூறு துறைகளும் அமையப் பாடப்பெற்ற கோவை இலக்கியங்கள் ஐந்திணைக்கோவை என்றும் அகப்பொருட் கோவை என்றும் பெயர் பெற்று விளங்குகின்றன. எல்லாத்துறைகளும் வராமல் ஒரே துறையில் மட்டுமே வருவனவாகச் செய்யுள்கள் அமைந்திருப்பதை ஒரு துறைக் கோவை என்பர். வண்டோச்சி மருங்கணைதல், நாணிக் கண் புதைத்தல், வெறி விலக்கல் என்னும் துறைகளில் இதுவரை ஒரு துறைக் கோவை நூல்கள் வெளிவந்துள்ளன. மொழிக்கு முதலாக வரக்கூடிய எழுத்துக்களால் தொடங்குவதாக, ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரு செய்யுள் வீதம் இயற்றப் பெறுவது வருகக் கோவை எனப் பெயர் பெறும். நெல்லை வருகக்கோவை முதலியன இம்முறையில் அமைந்தவை.

கோவையில் மாந்தர் :

கோவை இலக்கியங்களில் வரும் கதை மாந்தர்களில் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரும் இன்றியமையாதவர்கள். பெரும்பாலான துறைகள் இம்மூவரில் ஒருவர் கூற்றாகவே அமையும். கோவையில் குறிப்பிடப் பெறும் தலைவர்கள் இருவர். ஒருவன் பாட்டுடைத் தலைவன் என்றும், மற்றொருவன் கிளவித் தலைவன் அவன் பெயர், வரலாறு முதலியன நூலில் கூறப்படும். ஆனால் கோவையின் பொருட்றொடர்பாகிய வரலாற்றுக்குரிய தலைவன் கிளவித் தலைவன் என்று கூறப்படுவான். கிளவித் தலைவனின் பெயர் கூறுதல் இலக்கிய மரபன்று. எனவே இக்கிளவித்

தலைவர்கள் வெற்பன், நாடன், விடலை, ஊரன், சேர்ப்பன் முதலிய திணைநிலைப் பெயர்களால் குறிக்கப்பெறுவர். பாட்டுடைத் தலைவன் இன்றியே பாடப்பெற்ற ஒரு கோவை நூல் அம்பிகாபதிக் கோவையாகும்.

கோவையில் கொளு :

கோவை இலக்கியங்களில் திருச்சிற்றம்பலக்கோவையார் என வழங்கும் திருக்கோவையாரில் ஒவ்வொரு செய்யுளுக்கும் முன்னர்ச் செய்யுளின் கருத்தைக் குறிக்கும் முறையில் உள்ள வரிகள் கொளு என்று கூறப்படும். திருக்கோவையிருக்கு இருப்பது போலவே திருவாரூர்க் கோவைக்கும் கொளு செய்யுட்கள் இருக்க வேண்டும் என்ற விருப்பினால் யாரோ ஒருவர் பிற்காலத்தில் கொளுச் செய்யுட் மாறுபட்டும் மயங்கியும் உள்ளன. இங்ஙனம் கொளுச் செய்யுட்கள் அமைக்கும் முயற்சி பிற்காலத்தில் எழுந்து தோல்வியுற்றது.

நாடக நூல் :

தலைவன், தலைவி, பாங்கன், தோழி, பாணன், செவிலி, ஊரவர், அயலவர் ஆகிய கதை மாந்தர்களால் ஐவகை நிலத்திலும் கதை நிகழ்வதாக வகுத்து நிகழ்ச்சிகளை நாடக போக்கில் வழங்கும் கோவை நூல்களை நாடக நூல்கள் எனலாம்.

கோவை பாடுதல் :

பல கோவை நூல்கள் தமிழில் உள்ளன. அவையனைத்தும் ஒரே வகையான இலக்கண அமைதியும், பொருளமைதியும் உடையனவாய் இருப்பினும், ஒரே செய்தி பல்வேறு கோவையாசிரியர்கள் வாயினால் பாடப்பெறும் பொழுது ஒவ்வொரு நூற்பாடல்களும் சுவை மிகுந்தனவாகவே விளங்குகின்றன. இத்தகைய சுவை வேறுபாடு தோன்றக் கோவை பாடுவது அருமைப்பாடுள்ள செயலாக விளங்கியதால் தான் 'யாவையும் பாடிக் கோவையும் பாடுக' என்ற மொழியும் எழுந்தது.

4. உலா இலக்கியம்

உலா இலக்கிய இலக்கணம் :

இறைவனின் திருவுருவோ, உலகம் போற்றுப் பெருமகனோ, அரசனோ, கரி, தேர், பரி, ஆகியவற்றுள் யாதானும் ஓர் ஊர்தியில் ஏறி உடன் வருவோர் சூழ, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதியில் பவனி வருவதாகவும், அப்பொழுது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவ மகளிரும் பவனியில் வரும் தலைவனைக் கண்டு, காதல் கொண்டு வாடுவதாகவும் புலவர் பெருமக்களால் கற்பனைச் செறிவுடன் கலிவெண்பாவில் பாடப் பெறுவதே உலா இலக்கியமாகும்.

உலா இலக்கியங்களுள் தலைவனுடைய தசாங்கத்தை விரித்துரைப்பது மரபு என்று பிரபந்தத்திரட்டு மொழியும், சிற்றில் இழைத்தல், பாவை யாடல், கழங்காடல், அம்மானையாடல், ஊசல், கிள்ளைக்குச் சொற் பயிற்றல், யாழ் மீட்டல், புனலாடல், மொழிலாடல் முதலிய மகளிர் விளையாடல்கள் உலாவில் இடம் பெற வேண்டும் என்கிறது பன்னிருபாட்டியல்

பதினாறு முதல் நாற்பத்தெட்டு வயது வரையுள்ள தலைவர்களுக்கு உலா பாடப்பெறுதல் வேண்டும் என்கிறது பன்னிருபாட்டியல்.

பெண்டிர் கொண்ட ஒருதலைக் காமத்தைப் பற்றியே உலா நூல்கள் உரைத்தலால் பெண் பாற்கைக்கிளைத் துறையைச் சார்ந்தனவாகக் கொள்ளலாம். மானிடப் பெண்டிர் இறைவன் மீது காதல் கொண்டனர் எனக் கூறும், உலா நூல்களைக் கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயற் த பக்கம் என்னும் துறையினுள் அடக்கலாம். தலைவனது சிறப்பு பெருமை முதலியவற்றைக் கூறி உலாச் செல்வதற்கு அவன் நீராடி, அணிகள் அணிந்து உடன் வருவார் சூடி, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க யாதேனுமொரு வாகனத்தில் ஏறி உலாச் செல்லுதலைக் கூறும் வரையுள்ள பகுதி முன்னெழுநிலை என்றும், ஏழு பருவ மகளிரையும் முறையே அவரவர் பருவத்திற்கேற்ற விளையாடல்களைக் கூறி அறிமுகப்படுத்தி, ஒவ்வொருவரும் தலைவனைக் கண்டு மையல் நோயுற்று வாடுவதாகப் பாடுவது பின்னெழுநிலை என்றுப் பாட்டியல் நூலால் இரு கூறாக வகுத்துள்ளனர்.

இலக்கியக் கூறு :

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு இவணிய வகைமை யான'

என்னும் தொல்காப்பியப் பகுதிக்கு உரை வகுத்த இளம்பூரணர். ஊரின் கண் காமப் பகுதி நிகழ்த்தலும் உரித்து என்று சொல்லுவர் புலவர். அது நிகமும் காலத்து வழக்கொடு பொருந்தி நடக்கும் வகையின்மையின் கண் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் ஊரொடு தோற்றமும் என்பது பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக வருவது; வழக்கு என்பது சொல்லுக்கு ஏற்ற நிலைமை, வகை என்பது அவரவர் பருவத்திற்கு ஏற்றுக் கூறும் வகை செய்யுள் என்றும், அவர் விளக்கம் கூறியுள்ளார். இத்தொல்காப்பியப் பகுதிக்கு பக்கு நிறை காலம் ஊரிற் பொதுமகளிரொடு கூடி வந்த விளக்கமும் பாடாண் திணைக்கு உரித்து என்று கூறுவர் ஆசிரியர். அத்துடன் தோற்றமென்பது அக்காமம் தேவரிடத்தும், மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டால் செய்யுள் உலாச் செய்யுளாம் என்ற விளக்கங்கள் நச்சினார்க்கினியர் வரைந்துள்ளார். ஆகவே பிற்காலத்தில் எழுந்த உலா இலக்கியத்திற்குரிய விதியும், வித்தும் தொல்காப்பியத்திலேயே அமைந்துள்ளன என்று உணரலாம்.

தேவார ஆசிரியர்கள் இறைவன் திருவீதி உலாவரும் கோலத்தைக் கூறுகின்றனர். உலாவின் இலக்கியக் கூறு, பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய காப்பியங்களிலும் இடம் பெற்று விளங்குகின்றது.

முதல் உலா இலக்கியம் :

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவே உலா நூல்களில் காலத்தால் முந்தியது. ஆகவே அது ஆதியுலா என்று சிறப்பிக்கப்பெறுகிறது. கைலாயத்தின் இறைவன் முன்னர் இது அரங்கேற்றப்பட்டது. கயிலை வெற்பில் அரங்கேற்றும் ஆதியுலா என்று இது சிறப்பிக்கப்படுகிறது.

உலாவில் மாறுதல் :

நம்பியாண்டார் நம்பியின் ஆளுடைய பிள்ளையார் திருஉலா மாலையுள் ஏழு பருவ மகளிரின் செயல்களும் தனித்தனியே விரித்துக் கூறப்படாமல் ஒரு சேரத் தொகுத்துரைக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க மாறுபட்ட அமைப்பாகும். இறைவன் திருவுலாவைக் கண்டு மானிட மகளிர் மையல் கொண்டனர் என்று பாடும் பொதுப் பொருளமைதியினின்றும் மாறுபட்டு, தேவ மகளிர், நாக மகளிர், வித்தியாதர மகளிர், நீரா மகளிர், கானக மகளிர், வரையர மகளிர் முதலிய பெண்கள் இறைவன் மீது காதல் கொண்டனர் என்று திருக்குற்றால நாதர் உலா உரைக்கின்றது. ஏழு பருவ மகளிர் என்பதற்கேற்ப இறைவன் ஏழுநாள் உலாப் போந்தன் என்று மதுரைச் சொர்க்கநாதர் உலாவில் கூறியிருப்பதும் மாறுபட்ட அமைப்பாகும்.

ஏழு பருவ மகளிர் :

'பக்கு நின்ற காமம் ஊரில் பொது மகளிரோடு கூடிவந்த விளக்கமும் பாடாண் திணைக்கு உரித்து' என்றால் நச்சினார்க்கினியர். 'உத்தமகளிரொழிய மற்றைக் கன்னியரெல்லாம்' உதயணன் உலா வந்தபோது மையல் கொண்டனர் என்கிறார் கொங்கு வேளிர் சீவகன் உலாவின் போது அவன் பொலிவைக் கன்டு கற்புடைய மகளிர் பொலிக என்று ஆசி கூறினர் என்றும் பிறமகளிரே காமமீதூர்ந்து வாடினர் என்றும் திருதக்கதேவர் உரைத்துள்ளார். 'இழை புனை நல்வாரிவர் மணிமறுகின்'என்னும் இலக்கண விளக்கப்பாட்டியல் நூற்பாவிற்குப் 'பரத்தையர் வீதியை' என உரைகளாக விளக்கம் கூறியுள்ளார். எனவே உலா இலக்கியங்களில் கூறப்படும் ஏழு பருவ மகளிர் குலமகளிரொழிந்த பொதுமகளிரே கொள்ளலாம்.

ஐந்து முதல் ஏழு வயது வரை பேதைப் பருவம் என்றும், எட்டு முதல் பதினான்று வரை பெதும்பைப் பருவம் என்றும், பன்னிரண்டு முதல் பதின்மூன்று வரை மங்கைப் பருவம் என்றும், பதினான்கு முதல் பத்தொன்பது வரை மடந்தைப் பருவம் என்றும், இருபது முதல் இருபத்தைந்து வரை அரிவைப்பருவம் என்றும், இருபத்தாறு முதல் முப்பத்தொன்று வரை தெரிவைப் பருவம் என்றும், முப்பத்திரண்டு முதல் நாற்பது வரை பேரிளம் பெண் என்றும் இலக்கண விளக்கப்பாட்டியால் அறியலாம். ஆனால் இதில் கருத்து வேறுபாடு உண்டு.

உலாவில் பெதும்பைப் பருவம் :

காமவுணர்ச்சி ஒருவாறு அரும்பி அதனை உணர்த்தும் உணராத நிலையில் உள்ளவள் பெதும்பைப் பருவம் பெண். இவருடைய செயல்களையும், உணர்ச்சிகளையும் பாடுவது மிகவும் கடினமானது. இதனால் தான் "பேசும் உலாவிற் பெதும்பைப் புலி" என்கிறார் ஔவையார்.

பெயர் பெறும் முறை :

பாட்டுடைத் தலைவனோடு தொடர்புடைய ஊரின் பெயரால் சில உலாநூல்கள் பெயர் பெற்றுள்ளன. திருவாரூர் உலா, பேரூர் உலா, முதலியன இவ்வகையினவாகும். பாட்டுடைத் தலைவன் இயற்பெயரோடு சார்த்திச் சில உலாநூல்கள் பெயர் பெற்றுள்ளன. காளத்தி நாதருலா, வாட்போக்கி நாதருலா, விக்கிரம சோழனுலா, இராசராச சோழனுலா முதலியன இவ்வகையினவாகும். பாட்டுடைத் தலைவனின் ஊர்ப்பெயர், இயற்பெயர் ஆக இரண்டொடும்

சார்த்திச் சில உலா நூல்கள் பெயர் பெற்றுள்ளன. குறைக்குடி சண்முக நாதர் உலா, கயத்தாற்று அரசன் உலா முதலியன இவ்வகைகளைச் சார்ந்தவை. சிலேடையுலா, பொருட் சிறப்பால் பெற்ற பெயராகும்.

கடவுள் மீது இயற்றப்பெற்றவை, ஞானக் குரவர் மீது இயற்றப் பெற்றவை, வள்ளல் அல்லது அரசர் மீது பாடப்பெற்றவை என்று உலா நூல்களை வேறு மூவகையினவாகவும் பிரித்துக் காட்டலாம்.

உலாவின் வேறு பெயர்கள் :

உலா இலக்கியங்களைப் பவனி, பவனியுலா, உலாப்புறம், உலாமாலை என வேறு பெயர்களாலும் குறிப்பிடுவர்.

முடிவுரை :

பாட்டுரைத் தலைவனின் பெருங்கருணைத் திறத்தையும் வள்ளன்மையையும் குடிச்சிறப்பையும் பெருமைகளையும், உலா நூல்கள் எடுத்துரைக்கும். இறைவனைப் பற்றிய உலா நூல்களில், தலத்தின் சிறப்பும், தீர்த்தச் சிறப்பும், அத்தலத்தில் பேறுபெற்ற அடியார்களின் பக்திச் சிறப்பும், தலபுராணச் செய்திகளும் அமைந்து விளங்கும்.

5. கலம்பக இலக்கியம்

இலக்கணம் :

தெய்வங்களையோ, மக்களுள் சிறந்தாரையோ தலைவனாக வைத்து, அகம், புறம் ஆகிய பொருட் கூறுபாடுகள் விரவ, பலவகை உறுப்புகளைப் பெற்றுப் பலவகைப் பாவினங்களால் இயற்றப்பட்டு, நகை, பெருமிதம், வெகுளி முதலான பலசுவைகளும் விரவி வந்து அந்தாதித் தொடையில் அமைவது கலம்பக இலக்கியமாகும்.

பாட்டியல்களை நோக்க புயம், அம்மானை, ஊசல், மடக்கு, களி, மறம், சிந்து, காலம், வண்டு, மேகம், கைக்கிளை, சம்பிரதம், மதங்கி, தவம் ஆகிய பதினான்கு உறுப்புக்கள் பழமையானவை என்றும், சிதம்பரப்பாட்டியல், வெண்பால் பாட்டியல் ஆகிய இரண்டு பாட்டியல்களிலும் கார் என்னும் உறுப்பு கார், தூது என்ற பெயரில் ஒரே உறுப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது என்றும், பிற்காலத்தில் குறம் பாண், தழை, இரங்கல், ஊர் ஆகிய உறுப்புகள் சேர்க்கப்பட்டன என்றும் அறிய முடிகிறது.

உறுப்புக்களின் இலக்கணம் :

புயம் : பாட்டுடைத் தலைவனுடைய தோளின் வனப்பையும் ஆற்றலையும் புகழ்ந்து பாடுவது.

அம்மானை : மூன்று பெண்கள் பாடிக் கொண்டே காய்களை வைத்து ஆடுவது, ஒருத்தி தலைவனைப் புகழ, இரண்டாமவள் அதில் ஓர் ஐயம் உண்டாக்க மூன்றாமவள் இருவரும் ஏற்கும் விடையைக் கூறுவதாகக் பாடுவது.

ஊசல் : பெண்கள் ஊசலாடிக் கொண்டு பாடுவது.

மடக்கு : நூலின் இடையிடையே சொல், சீர், ஆகியன மீண்டும் பொருள் வேறுபாட்டுடன் அமையுமாறு பாடுவது.

களி : கட்குடியர் கள்ளைச் சிறப்பித்துப் பாடுவது.

மறம் : ஓர் அரசன் மறவர் மகளைத் தனக்கு மணம் பேசுமாறு ஒரு தூதனை அனுப்ப, அத்தூதனிடம் மணவினை மறுத்தும், அரசனை இகழ்ந்தும் மறவர் பேசுவதாகப் பாடுவது.

சிந்து : சித்தர்கள் தங்கள் ஆற்றலைப் புகழ்ந்து ஒரு தலைவனிடம் பாடுவதாக வருவது.

காலம் : பொருள் வயிற் பிரிந்த தலைவனை எண்ணி வாடும் தலைவி, கார் காலத்தால் தனக்குண்டாகும் துன்பங்களைப் பாடுவதாக அமைவது

மதங்கி : இசைக்கும், கூத்துக்கும் உரிய ஒரு சாதியார் மதங்கள். இவ்விதியின் பெண்ணொருத்தி இருகைகளிலும் வாளேந்திச் சுழற்றி ஆட, அவளது எழில் கண்டு ஒருவன் பாராட்டிப் பாடுவதாக வருவது.

வண்டு : பிரிந்து சென்ற தலைவனிடத்துத் தலைவி மேகத்தைத் தூது விடுப்பதாகப் பாடுவது

கைக்கிளை : ஒரு தலைக் காமம் தோன்ற, காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என நான்கு வகையும் அமையப் பாடுவது.

சம்பிரதம் : சாலவித்தை வல்லார் தம் ஆற்றலைக் கூறுவதாக அமைவது

தவம் : தவத்தை விலக்கி, இறைவனை எண்ணிச் செயல்படுமாறு பாடுவதாக அமைவது

இவை பதினான்கும் பழமையான கலம்பக உறுப்புக்கள். மேலும் பாட்டியல் நூல்களில் காணப்படும் வேறு சில புதிய உறுப்புக்கள்.

பாண் : ஊடல் கொண்ட தலைவியிடம் சேர எண்ணும் தலைவன், தலைவியின் கோபத்தைத் தணிக்கப் பாணனைத் தூது அனுப்புவதாகப் பாடுவது.

தழை : தலைமகள் அணிதற்குத் தலைவன் தழையுடைய ஏந்தி வந்து தோழியிடம் தன் குறை கூறிக் கொடுத்து அதனைத் தலைவி ஏற்றுக் கொள்ளும் படி செய்யுமாறு வேண்ட, தோழியும் அதனைத் தலைவியிடம் தந்து, தலைவியின் விருப்பத்தைத் தலைவனுக்குக் கூறுவதாக அமைவது.

இரங்கல் : தலைவனைப் பிரிந்த தலைவி, பிரிவாற்றாது கடல், கழி முதலியவற்றை நோக்கி இரங்கிப் பாடுவதாக வருவது.

ஊர் : பாட்டுடைத் தலைவன் வாழும் ஊரின் பெருமை தோன்றப்பாடுவது

குறம் : தலைவி விரும்பிய தலைவனுடன் சேரும் வாய்ப்பினைக் குறமகள் ஒருத்தி குறிப்பது உரைப்பதாக வ்ருவது.

தூது : தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவனிடம் தன் கருத்தை உரைக்குமாறு அஃறிணைப் பொருள், பாக்கி முதலியோரைத் தூது விருப்பதாக வருவது.

பாட்டியல் நூல்களில் குறிக்கப்பெறாமல், கலம்பக இலக்கியங்களில் பயின்று வரும் வேறு சில உறுப்புக்கள்.

ஆற்றுப்படை : புரவலன் ஒருவனிடம் பொருள் பெற்ற இரவலன் ஒருவன் மற்றொருவனை அவனிடத்து ஆற்றுப்படுத்துவதாக வருவது.

இடைச்சியார் : தெருவில் தயிர் விற்கும் இடைச்சியொருத்தியின் எழிலைக் கண்டு காதல் கொண்ட ஒருவன் பாடுவதாக வருவது.

கீரையார் : கீரை விற்கும் ஒருத்தியின் அழகைக் கண்டு காதல் கொண்ட ஒருவன் பாடுவதாக உள்ளது.

கொற்றியார் : வைணவப் பெண் துறவியாகிய ஒருத்தியைக் கண்டு காதல் கொண்ட ஒருவன் பாடுவதாக வருவது.

யோகினியார் : சூலப்பொறி உடம்பில் திகழக் கையில் கபாலத்துடன் காட்சி தரும் யோசினி என்னும் மங்கை சிவனை நோக்கித் தவம் செய்பவன். இவனது பெருமையை உரைப்பது இப்பகுதி.

சிலேடை : செம்மொழியோலோ, பிரிமொழியாலோ ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைப் பாடப்பெறுவது.

பள்ளு : பள்ளரது வாயுவியல் நிகழ்ச்சிகளைக் கூறும் முறையில், இறுதியில் 'பள்ளீரே' என்று கொண்டு முடிவதாகப் பாடுவது.

பாத வகுப்பு : களவொழுக்கம் ஒழுகிய தலைவியின் மேனி வேறுபாடு கண்டு தெய்வக் குற்றம் என எண்ணிய தாய் வெறியாட்டயரச் செய்வாள். அப்போது தோழி தலைவியின் காதலை வெளிப்படுத்துவாள்.

கலம்பகம் - பெயர் காரணம் :

கலம்பகம் என்ற சொல்லுக்குக் 'கலவை' என்பது பொருள். பாக்களாலும், பொருளாலும், உறுப்பாலும் கலவைநிலை பெற்று விளங்குவது கலம்பகம்.

கலம்பகம் = கலம்பு + அகம் என்பர் சிலர். கலம்பகத்தின் பல்வேறு உறுப்புக்களும் கலத்ததைக் கொண்ட நூல் கலம்பகம் என்று பெயர் பெற்றது.

கலம் என்றால் பன்னிரண்டு என்றும், பகம் என்றால் ஆறு என்றும் பொருள் கொண்டு, இரண்டையும் உம்மைத் தொகையாக்கிக் 'கலம்பகம்' என்பது பதினெட்டு உறுப்புக்களை உடைய நூல் என்று பொருளுரைப்பர் கலம்பக நூல் பல பதினெட்டு உறுப்புக்களும் பெற்று வாராமையொனறே இப்பொருளின் பொருத்தமின்மையை விளக்கும்.

முதல் கலம்பக இலக்கியம் :

கி.பி.9 ஆம் நூற்றாண்டில் எழுந்த நந்திக் கலம்பகமே காலத்தால் முந்தியது. தெள்ளாறெறிந்த நந்திவர் மண் தன் மீது இயற்றப்பட்ட நந்திக் கலம்பகத்தாலேயே உயிர் நீத்தான் என்பது வரலாறு.

பெயர் பெறும் முறை :

பாட்டுடைத் தலைவன் பெயரோலோ, பாட்டுடைத் தலைவன் ஊர்ப் பெயராலோ கலம்பகம் பெயர் பெறும். 'அழகர் கலம்பகம்' திருவேங்கடக் கலம்பகம், முதலியவை எடுத்துக்காட்டுக்கள். இம்முறைகளுக்கு மாறாக மயிலையில் உள்ள அருகதேவரைப் பற்றிய கலம்பகம் திருக்கலம்பகம் என்று பெயர் பெற்றுள்ளது.

6. சதக இலக்கியம்

சதகத்தின் இலக்கணம் :

இலக்கண விளக்கப் பாட்டியல் மட்டும் சதகத்தில் இலக்கணத்தைக் கூறுகிறது.

"விழையும் ஒரு பொருள் மேலோரு நூறு
தழைய வுரைத்தல் சதக மென்ப"

அகப்பொருள் புறப்பொருள் இரண்டனுள் யாதானும் ஒரு பொருள் மீது நூறு பாடல்களைப் பாடுவது சதகத்தின் இலக்கணமாகும். சதம் என்ற பெயரைக் கொண்டே சதக நூல் நூறுபாடல்களால் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டிருப்பினும் கூட, புலவர்களின் உள்ள நிலைமைக்கும், கற்பனை வளத்திற்கும் ஏற்ப இவ்வெண்ணிக்கை சற்றே மாறுபட்டும் சிற்சில சதகங்களில் அமைந்துள்ளன.

சதம் என்ற சொல்லின் இடையில் 'க' என்ற ஓர் எழுத்து கூடிச் சதகம் என்றாகின்றது. இங்ஙனம் இடையில் 'க' என்ற ஓர் எழுத்துக் கூடி வருவை. வடமொழியாளர் பிரத்தியம் என்பர்.

திருவாசகத்தில் சதகம் :

மாணிக்கவாசகர் திருச்சதகம் என்ற பெயரில் நூறு பாடல்களைத் தமது திருவாசகத்தின் கண்ணே பாடிச் சேர்த்துள்ளார். இம்முறையில் சதகம் என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலாக ஆண்ட பெருமை மாணிக்கவாசகருக்கே உரியது. முதல் சதக இலக்கியம் என்ற பெருமை அத்திருச்சதகத்திற்கே உரிமையாகும்.

முதல் சதக இலக்கியம் :

அவிநாசி ஆறைக் கிழார் இயற்றிய கார்மண்டலச் சதகமே சதக இலக்கியங்களில் அடுத்த நூலாகத் திகழ்வது. இதன் காலம் கி.பி.11–ஆம் நூற்றாண்டு.

பொருளமைதி :

கார் மண்டல சதகத்தில் கார்மண்டலத்தின் வரலாறு எல்லை, அதனுள் வாழ்ந்த அறிஞர்கள் பெருமை முதலியவை விளக்கிப் பாடப்பட்டுள்ளன. கார் மண்டல சதகத்திற்குப் பின்னர் எழுந்த சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், நந்த மண்டல சதகம், ஈழ மண்டல சதகம், முதலிய மண்டல சதக நூல்கள் கார்மண்டல சதகத்தின் பொருளமைதியை அடியொற்றி எழுந்தன.

பழமொழிகளைச் செய்யுள்தோறும் பெற அமைத்து இறைவனைப் பற்றிய துதி நூலாக அமைந்த பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகத்தைப் படிக்காசுப் புலவர் பாடினார். சதக இலக்கியம் என்பது மண்டல வரலாற்றை நயம்பட விரித்துரைக்கும் பொருளமைதியை மட்டும் கொண்டது அன்று. வேறு எப்பொருளை வேண்டுமாயினும் கொண்டு இயற்றப்படலாம் என்ற மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை படிக்காசருக்கே உண்டு. பின்னர் இறைவனைத் துதிப்பதுடன் மட்டுமின்றி மக்கள் வாழ்வதற்கு இன்றியமையாத நீதிகளை உணர்த்தும் முறையிலும் பல சதக நூல்கள் எழுந்தன.

எனவே சதக இலக்கியங்களைப் பொருளமைதி அடிப்படையில் வரலாற்று நூல்கள், துதி நூல்கள், நீதி நூல்கள் என்னும் முப்பெரும் பிரிவினவாக வகைப்படுத்தலாம்.

பெயர் பெறும் முறை :

மண்டல வரலாற்றை விரித்துரைப்பவை ஈழ மண்டல சதகம் சோழ மண்டல சதகம் என வழங்கப்படுகின்றன. துதி நூல்களாக விளங்கும் சதக நூல்களாக விளங்கும் சதக நூல்கள், இறைவர் பெணஷயராலும், இறைவர் பெயருடன் சார்ந்து வரும் தலத்தின் பெயராலும் குறிப்பிடப் பெறுகின்றன. அண்ணாமலையார் சதகம், அவயம்பிகை சதகம், திருச்செந்தூர் செந்தில் விநாயக சதகம் என்ற இவை அம்முறையில் பெயர் பெற்றவை. இறைவன் எழுந்தருளியுள்ள தலத்தின் பெயரோடு சார்த்தி வழங்கப்படும் திருச்செங்கோட்டுச் சதகம், திருப்போரூர்ச் சதகம் என்பனவும் உள இராமாயணம், கந்தபுராணம், மகாபாரதம் ஆகிய கதைக் குறிப்புக்களை நூறுபாடல்களால் பாடி இறைவனைத் துதிக்கும் முறையில் அமைந்தவை அவ்விதிகாசங்களின் பெயரால் சதகம் என வழங்கப்படுகினறன.

மகுடம் பெறுதல் :

ஒவ்வொரு சதக நூலினும் செய்யுள் இறுதி தோறும் ஒரே வகையான சொல்லோ, சொற்றொடரோ மகுடமாக அமைந்திருக்கும் சான்றுகள் காரளர் மண்டலமே, கொங்கு மண்டலமே, சோழ மண்டலமே, வந்தடிமை கொண்ட கயிலை வாசனே, இராசலிங்கேசனே, சிவதை நகர் மாணிக்க மலை நாதனே, அச்சுதாநந்த கோவிந்தனே, மயிலேறி விளையாடு குகனே, புல்வயல் நீடு மலைமேவு குமரேசனே, கற்பகவிராச மேவுங் கங்கை புனை ஈசனே, மங்கை மகிழ் நேசனே, கயிலையங்கிரி வாசனே!

யாப்பு :

சதக இலக்கியங்களில் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய பல்வேறு யாப்பினங்களையும் காணலாம். பொது வகையால் நோக்கும் போது ஆசிரிய விருத்தமே சதக இலக்கியங்களில் செல்வாக்கும் பெற்ற பாவினமாக விளங்கியுள்ளது.

7. பரணி இலக்கியம்

பரணியின் இலக்கணம் :

"ஆனையாயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி"

என இலக்கண விளக்கப் பட்டியல் பரணியின் இலக்கணம் கூறுகிறது. ஆனால் பன்னிருபாட்டியல், போர்க்களத்தில் எழுநூறு யானைகளைக் கொன்றவனுக்குப் பரணி பாடப் பெறும் என்று கூறுகிறது.

இலக்கியப் போக்கு :

தொல்காப்பியப் புறத்திணை இயலில் வாகைத் திணையின் துறைகளாகக் கூறப்படும் களம்பாடுதல், களவேள்வி, நேர்முன் ஆடுகுரவை தோப்பின் ஆடுகுரவை, மாணார்ச் சுட்டில் வாண்

மங்கலம் ஆகிய துறைகளின் கூட்டு வளர்ச்சியே பிற்காலத்தில் பரணி இலக்கியமாக உருப்பெற்றது எனலாம். இப்புறத்திணைத் துறைகளுடன் வரலாற்றுச் செய்திகளும் புனைந்துரைச் செய்திகளும் கலந்து பரணி இலக்கியப் பொருளைத் தோற்றுவித்துள்ளன. பரணிபாடும் பொருநர் என்றொரு வகைப் பொருநர்கள் இருந்ததைப் பற்றிய குறிப்பும் பரணி இலக்கியத்தின் தொன்மையான செல்வாக்கை உணர்த்துகிறது.

பரணி பெயர் காரணம் :

1. பரண் மீது அமர்ந்து தினைனையை அழிக்க வரும் பறவை இணங்களைத் துரத்துவது போன்று, போர்க்களத்தில் வீரன் யானை மீதிருந்து எதிரிகளைத் துரத்துவதால் இச்செய்தி பற்றிக் கூறும் நூல் பரணி எனப்பட்டது என்பர் சிலர்.

2. தினைப்புனங்காப்போர் பரண் மீது இருந்து பறவைகளைத் துரத்தப்படுதல் போல, அரசனின் வில், வாள், வேல் ஆகிய படைக்கலங்களால் அமைக்கப்பட்ட பரண் மீதிருந்து புலவர் பாடுவதாகப் பரணி எனப்பட்டது எனபர் சிலர்.

3. அணி மணி முதலியவற்றை வைக்கும் செப்பு, பரணி என அழைக்கப்படுதல் போல, பல்வேறு கற்பனை நலமும் சுவைகளும் தன்னகத்துக் கொண்டது. இவ்விலக்கிய மாதலால் இது பரணி என வழங்கப்படுகிறது எனபர் சிலர்.

இக்காரணங்கள் பொருத்தாது போர்களத்தில் ஒரு மன்னன் வெற்றி பெற்ற பின்னர் அப்போரில் உயிர் நீத்தோரின் உடலுறுப்புக்களால் பேய்கள் கூழ் சமைத்து, அக்கூழைப் பரணி நாளில் காளிக்குப் படைத்துத் தாமும் உண்டு. போரில் வென்றோனை வாழ்த்திப் பாடும் வழக்கினாலேயே இவ்விலக்கியம் பரணி எனப் பெயர் பெற்றதாகக் கொள்ளலாம். மேலும் பரணி என்பது கொற்றவைக்கும் நமனுக்கும் உரிய நாள். எனவே பரணி நாள் ஒரு பெரு வீரன் யானை பலகொன்று, காலனை அருத்திக் காளிக்குக் கூழ் சமைக்கும் நன்னாள் ஆயிற்று.

முதல் பரணி இலக்கியம் :

முதலில் தோன்றிய பரணி இலக்கியம் சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துல் பரணியேயாகும். அது முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (11–ஆம் நூற்றாண்டு) எழுந்தது ஆகும். இப்பரணி நூலைப் பாடிய புலமை வளத்தைப் பாராட்டிக் குலோத்துங்க மன்னன் தாழிசை ஒன்றிற்கு ஒரு பொன் தேங்காய் வீதம் புலவருக்குப் பரிசளித்துச் சிறப்புச் செய்தான்.

பரணியின் உறுப்புக்கள் :

கடவுள் வாழ்த்து, கடைத்திறப்பு, பாலை கூறல், கோயிற் சிறப்பு, காளியைப் போற்றல், இந்திர சாலம், மன்னன் மரபுரைத்தல், போர்ச்சிறப்பு உரைத்தல், போர்க்களம் காணல், கூழ் சமைத்து வார்த்தல், மன்னனை வாழ்த்தல் முதலியவை பரணி நூலில் இடம் பெறும் இன்றியமையாத உறுப்புக்கள். பேய்களைப் பாடியது இந்திர காலம், பேய் முறைப்பாடு, காளிக்குச் கூளி கூறியது, களம் பாடியது முதலிய பகுதிகள் பேய் உலகைப் பற்றியவைாகவும் கடைதிறப்பு, அவதாரம், இராசபாரம்பரியம், போர் பாடியது முதலில் பகுதிகள் மக்கள் உலகைப் பற்றியனவாகவும் உள்ளதைக் காணலாம்.

பெயர் பெறும் முறை :

போரில் வெற்றி பெற்றவர்களைச் சிறப்பித்து அவர் ஏற்றம் கூறுவது பரணியின் இலக்கணம் என்றாலும், வென்றவர் பெயரால் நூல் வழங்கப்படுவதில்லை. மாறாகத் தோற்றவர் பெயரோடு சார்ந்தே நூல் பெயர் பெற்று விளங்குகின்றது. கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, கஞ்சவதைப் பரணி, சூரவதைப் பரணி, இரணிய வதைப்பரணி ஆகிய அனைத்தும் இம்மரபின் வழியே பெயர் பெற்று விளங்குகின்றன.

மறைந்த பரணி நூல்கள் :

1. கூடல் சங்கமத்துப் பரணி 2. ஒட்டக்கூத்தர் பாடிய கலிங்கத்துப் பரணி 3. தமிழ்ப்பரணி 4. கொல்பத்துப் பரணி 5. தென்றமிழ்த் தெய்வப் பரணி ஆகியவை மறைந்து போன பரணி நூல்களாகும்.

8. பிள்ளைத்தமிழ் இலக்கியம்

பிள்ளைத்தமிழ் இலக்கியம் :

தெய்வத்தையோ மக்களுள் மாண்புற்றோரையோ குழந்தைப் பருவத்தாராக எண்ணி அக்குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் தொடங்கி இருபத்தோராம் திங்கள் வரை இரண்டு திங்களுக்கு ஒன்றாகப் பருவத்தைப் பகுத்துக் கொண்டு, பத்துப் பருவங்களால் பாடுவது பிள்ளைத்தமிழ் நூலாகும். இது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபாறை, சிற்றில், சிறுதேர் என்ற பத்தாகவும், வெண்பாற் பிள்ளைத்தமிழ், இறுதியுள்ள மூன்று பருவங்களுக்குப்பதில் நீராடல், அம்மானை, ஊசல் எனவும் இடம் பெற்று விளங்கும்.

காப்பு : திருமால் முதல் பல்வேறு தெய்வங்களையும் பரவிக் குழந்தையை காக்குமாறு பாடப் பெறுவது.

செங்கீரை : ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இருகைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்த்தி முகம் அசைய ஆரும் குழந்தையின் செங்கீரையாட்டைத்தைப் பாடுவது.

தால் : தாலாட்டுப் பாடுவது.

சப்பாணி : குழந்தை நிமிர்ந்து உட்கார்ந்து இருகைகளையும் ஒன்று சேர்த்துக் கொட்டி முழக்கும் நிலையைக் கண்டு போற்றிப் பாடுவது.

முத்தம் : பிள்ளையின் முத்தத்தை வேண்டிப் பாடுவது.

வருகை : தளர் நடையிட்டு வரும் குழந்தையை வருக வருக என வேண்டிப் பாடுவது.

அம்புலி : மதியைப் பிள்ளையுடன் விளையாட வருமாறு சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் நால்வகை உபாயங்களும் அமையப் பாடுவது.

சிற்றில் : சிற்றிலைச் சிதைக்க வரும் பிள்ளையைக் கண்டு, சிறுமியர் சிற்றில் சிதையேல் என வேண்டிப் பாடுவது.

சிறுபறை : குழந்தை சிறுபறை கொட்டி விளையாடுவதைப் பாடுவது.

சிறுதேர் : குழந்தை சிறுதேர் உருட்டி விளையாடுவதைப் பாடுவது

பெண்பிள்ளைகள் நீராடுவதாகவும், ஊசலாடுவதாகவும் அம்மானை ஆடுவதாகவும் வருகின்ற பகுதிகளே நீராடல், ஊசல் அம்மானை முதலிய பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள். பிள்ளைப் பருவத்தைத் தலைமையாக வைத்துப் பாடப் பெற்றிருந்தாலும், பாட்டுடைக் தலைவனின் வீரச்செயல்கள், திருக்குணங்கள் முதலியன இவற்றுள் சிறப்பாகப் பேசப்பட்டிருக்கும்.

இலக்கியக்கூறு :

"குழலி மருங்கினும் கிழவதாகும்" என்னும் தொல்காப்பியப் பகுதியும்

'இளமைந்தர் நலம் வேட்ட
வளமங்கையர் வகையுரைத் தன்று'

என வரும் புறப்பொருள் வெண்பாமாலைப் பகுதியும், பிள்ளைத்தமிழ் இலக்கணத்தைக் கூறுவனவாகும். ஆழ்வார்களின் பக்தி இலக்கியங்களில் மிகுதியான இடங்களில் பிள்ளைத்தமிழின் போக்கைக் காணலாம். பெரியாழ்வாரின் திருமொழியில் தாலப்பருவம், அம்புலிப் பருவம், அசோகப் பருவம். புறம் புல்கல், தளர்நடைப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், பூச்சி காட்டல், முலையுண்ணல், காது குத்தல், நீராட்டல், குழல் வாரக் காக்கையை வாவெனல், கோல்கொண்டு திருமொழியில் உள்ள சிறுமியர் மாயனைத் தம் சிற்றில் சிதையேலெனல் (நமமாயிரம்) முதலிய பகுதிகளும் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் உள்ள சப்பாணிப் பருவம், மாயன் வெண்ணையுண்ட மாட்சியை முதலிய பகுதிகளும் திருமாலின் பிள்ளைப் பிராயத்தைப் போற்றியவை ஆகும்.

முதல் பிள்ளைத் தமிழ் இலக்கியம் :

ஒட்டக்கூத்தர் இயற்றிய இரண்டாம் குலோத்துங்கள் பிள்ளைத்தமிழே முதல் பிள்ளைத் தமிழ் நூலாகும். இவரது காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு ஆகும்.

பெயர் பெறும் முறை :

பாட்டுடைத் தலைவர் பெயராலோ அல்லது அவரது தவப்பெயராலோ பிள்ளைத்தமிழ் பெயர் பெறும். அழகர் பிள்ளைத் தமிழ், சேது பர்வதவர்த்தினி பிள்ளைத் தமிழ், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், குலோத்துங்கள் பிள்ளைத் தமிழ், திருவாவடுத்துறை அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ் முதலியன இம்முறையில் பெயர் பெற்றவை.

சிவனும் பிள்ளைத் தமிழும் :

சிவனுக்குப் பிள்ளைத் தமிழ் பாடும் மரபு இல்லை காரணம், அவன் பிறவா யாக்கைப் பெரியோன்.

பாடல்களின் எண்ணிக்கை :

பெரும்பாலும் ஒவ்வொரு பருவத்திற்கும் பப்பத்துப் பாடல்கள் வீதம் பாடுவதே பெரும்பாலான பிள்ளைத் தமிழ் நூல்களில் காணும் முறையாகும். சில பிள்ளைத் தமிழ் நூல்களில் இம்முறை காணப் பெறுவதில்லை.

காப்புப் பருவத்தில் மாற்றம் :

காப்புப் பருவத்தில் முதற்கடவுளாகத் திருமாலைப் பாடவேண்டும் என்பது பன்னிருபாட்டில். இம்முறை பல பிள்ளைத் தமிழ்களில் காணப் பெறவில்லை.

பருவங்களின் வேறுபாடு :

பெண்பாற் பிள்ளைத் தமிழ் நூலில் இறுதியில் அமைய வேண்டிய மூன்று பருவங்கள் எவை என்று கூறுவதில் பாட்டியல் நூல்களிடையே வேறுபாடு நிறைந்திருக்கின்றது.

9. தூது இலக்கியம்

முன்னுரை :

தூது என்பது ஒருவர் தம் கருத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்கப் பிரிதொருவரை அனுப்புவது ஆகும். தூது அனுப்பும் வழக்கு பண்டைத் தமிழரிடத்தில் பல்கிப் பரவியிருந்தது.

இலக்கியக் கூறு :

தொல்காப்பியத்தில் அகத்திணை இயல், கற்பியல், பொருளியல், களவியல், மெய்ப்பாட்டியல் முதலிய பகுதிகளில் தூது இலக்கியத்தின் கூறுகள் பல இடம் பெற்றுள்ளன.

ஒதற்பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதிற் பிரிவு என்று பிரிவு மூன்று வகைப்படும் என்கிறது தொல்காப்பியம். மேலும் தூதிற்பிரிவுக்குரியார் அந்தணர் அரசர் என்றும் அது கூறுகிறது. அந்தணர் தூதிற்பிரிந்தமைக்கு பாரதக் கதையில் கண்ணன் தூதும் சான்றாகும். கற்புக்காலத்தில் தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகியோர் தலைவன் தலைவரிடையே உள்ள பிரிவைப் போக்கத் தூது செல்லுதல் உண்டு என்பதைவும், தூது செல்பவர்கள் வாயில்கள் என்று அழைக்கப்படுவர் என்பதையும் தொல்காப்பியம் குறிக்கிறது.

களவுக் காலத்தில், தலைவனின் பிரிவை ஆற்ற இயலாத தலைவி தன் காம மிகுதியை அஃறிணைப் பொருள்களிடத்தில் கூறித்தலைவனிடம் தூது சென்று வருமாறு வேண்டுவாள். அஃறிணைப் பொருள்களிடத்தில் தலைவியுரைக்கும் அக்கூற்றினைக் 'காம மிக்க கழிபடர் கிளவி' என இலக்கணத்தார் கூறுவர். இக்காம மிக்க கழிபடர் கிளவியினால் மேலும், இக்கிளவியைத் தலைவன், தோழி ஆகியோர் கேட்பினும் அதனாலும் தலைவிக்குப் பயன் உண்டு.

அஃறிணைப் பொருள்களை முன்னிலைப் படுத்தித் தலைவன், தன் ஆற்றாமையை உரைப்பது தூது முனிவின்மை என்னும் மெய்ப்பாட்டுள் அடங்கும் என்கிறார். தொல்காப்பியர் மேலும் அதன் காமமிக்க கழிபடர் கிளவியைக் 'குறிப்புரை' என்றும் கூறுகிறார்.

பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடத்தில் ஓர் அன்னச்சேவலைத் தூது விடுத்ததைப் புறநானூற்றில் காணலாம். அதியமான் தொண்டைமானிடத்தில் ஔவையைத் தூதாக அனுப்பினான்.

அகப்பொருள் துறையில் தூதுவிடும் பொருண்மையில் அமைந்துள்ள பாடல்கள் பெரும்பாலும் காமமிக்க கழிபடர் கிளவித்துறைப் பாடல்களேயாகும். திருக்குறளில் 'தூது' என்கிற அதிகாரமே உள்ளது. இது புறப்பொருள், சார்பானது ஐம்பெருங்குழுவில் தூதுவரும் ஓர் அங்கம் என்று திவாகரம் கூறுகிறது.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் நாயக–நாயகி பாவத்தில் பாடிய பல அகத்துறைப் பாடல்களிலும் தூதுப் பொருண்மை கொண்ட பல பாடல்கள் இடம் பெற்று விளங்குகின்றன.

சீவக சிந்தாமணியில் குணமாலை சீவகனுக்கு விடுத்த கிளி விடு தூது, சூளாமணியில் கவலனடி என்னும் மன்னன் பயாபதி என்பானுக்கு விடுத்த திருமணத்தூது. பெரியபுராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் தம் மனைவியான பரவை நாச்சியாரிடத்தில் விடுத்த இறைவன் தூது, பாரதத்தில் பாண்டவர் துரியோதனாதியரிடம் விடுத்த கண்ணன் தூது, இராமாயணத்தில் இராமன் இராவணனுக்கு விடுத்த அனுமன் தூது, அங்கதன் தூது, கந்தபுராணத்தில் முருகப்பெருமான் விடுத்த வீரவாகு தேவர் தூது, தேம்பாவணியில் சூசையப்பரின் விண்ணுலகத் தூது, நளவெண்பாவில் தமயந்தி நளனுக்கு விடுத்த அன்னத் தூது, மனோன்மணியத்தில் காணப்படும் பலதேவன் தூது ஆகியவை காப்பியத்தில் காணப்பெறும் தூதுப் பொருண்மையாகும்.

தூதின் இலக்கணம் :

எகினம், மயில், கிள்ளை, எழிலி, பூவை, கோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு ஆகிய பத்தையும், தலைவனிடத்தில் தூது சென்று வருமாறு தலைவி பாடுவதாகக் கலிவெண்பாவினால் பாடப்பெறுவது தூதின் இலக்கணம் என்று பாட்டியல் நூல்கள் கூறுகின்றன.

இப்பத்துப் பொருள்களேயன்றி பணம், தமிழ், மான், வசனம், சவ்வாது, நெல், புகையிலை, விறலி, துகில், காக்கை, கழுதை, பழையது, அன்பு, செருப்பு முதலிய பல்வேறு பொருள்களைத் தூது விடுப்பதாக அமைந்த பல நூல்கள் எழுந்துள்ளன.

தலைவனிடத்தில் தனக்குள்ள காதல் ஈடுபாட்டைத் தலைவி தான் அறிந்து கொள்வதற்காகத் தூது அனுப்பும் பொருளை நோக்கி மாலை வாங்கி வருமாறு பாடுவது தூது இலக்கியங்களில் மரபாக உள்ளது.

பொருளமைதி :

தூது இலக்கியங்களில் முதற்பகுதியில், எந்தப் பொருளைத் தூது சொல்லுமாறு வேண்டிப் பாடப் பெற்றுள்ளதோ, அந்தப் பொருளின் சிறப்பும் பெருமையும் உரைக்கப்படும். 'இரண்டாம் பகுதியில் யாருக்குத் தூது விடுக்கப்படுகின்றதோ, அப்பாட்டுடைத் தலைவனின் சிறப்பு உரைக்கப்படும். அவனது தலச்சிறப்பு, பெருமைகள், தசாங்கம் முதலியவை இப்பகுதியில் உரைக்கப்படும். இறுதிப் பகுதியில் தூது விடுக்கும் தலைவி, தலைவனைக் கண்டு மையலுற்ற செய்தி, தூது சென்று வருமாறு தூது விடுக்கும் பொருளை வேண்டும் பகுதி ஆகியன இடம் பெறும்.

முதல் தூது இலக்கியம் :

முதல் தூது இலக்கியம் என்னும் பெருமைக்கும் உரியது. கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியர் இயற்றிய நெஞ்சு விடுதூது என்னும் தூலேயாகும்.

பெயர் பெறும் முறை :

எந்தப் பொருள் தூதாக விடுக்கப்படுகின்றதோ, அப்பொருளின் பெயருடன் நூற்பெயரை வழங்குவதே பெரும்பாலான முறையாகும். நெஞ்சு விடு தூது, வண்டு விடு தூது, இதற்கு எடுத்துக் காட்டுக்களாகும். ஆயினும் ஒரே பொருளைத் தூது விடுப்பதாக ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் உள்ள போது பெயரில் முதற்பகுதியில் பாட்டுடைத் தலைவனின் பெயரும் சார்த்தி வழங்கப்படுதல் உண்டு. எடுத்துக்காட்டுகள்:– சிவஞான பாலைய தேசிகர் மீது நெஞ்சுவிடு தூது, கச்சியப்பர் தேசிகர் மீது நெஞ்சுவிடு தூது.

பத்துப் பொருள்களைத் தன் குருநாதராகிய தானப்பாசாரியர் மீது தூது விடுத்துப் பாடப் பெற்ற நூல் ஒன்று. தானப்பாசாரியர் மீது தசவிடு தூது என்னும் பெயரோடு விளங்குகிறது.

பகுப்பும் அமைப்பும் :

புறப்பொருள் சார்பான தூது இலக்கியங்களில் உயர்திணையும் அகப்பொருள் சார்பான தூது இலக்கியங்களில் அஃறிணையும் தூதாக விடுத்துப் பாடப் பெற்றவைாகப் பெரும்பான்மையான நூல்கள் உள்ளன. தூது விடுப்போரைப் போக்கித் தலைவியர் விடுத்த தூது நூல்கள். தலைவர் விடுத்த தூது நூல்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

10. பள்ளு இலக்கியம்

முன்னுரை :

பள்ளு என்பது பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒரு வகை இலக்கியம். பள்ளு இலக்கியத்தின் மூலம் உழவர்களின் பழக்க வழக்கங்கள், ஒழுகலாறுகள், அவர்களிடையே வழங்கும் சமுதாயக் கோட்பாடுகள், அவர்கள் தொழில் முறைகள் முதலாய பல்வேறு செய்திகளைப் பற்றி அறியலாம்.

இலக்கியக் கூறு :

தொல்காப்பியம் குறிப்பிடும் சேரிமொழி இலக்கியம் பற்றிய செய்தியைக் கருவாகக் கொண்டும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் விருந்திற்பரணி, ஏர்மங்கலம், முகவைப் பாட்டு முதலிய உழவுப் பாடல்களையும், ஆடும்பள்ளி, அயுமுகுடைய பள்ளி முதலிய வரிக்கூத்துக்களையும் தழுவி, கோலிலொழுகில் காணும் பள்ளுப் பாட்டு போன்றவற்றோடும் பன்னிருபாட்டியல் கூறும் உழத்திப் பாட்டின் பொருளமைதியோடும் இணைந்து, கதைப் போக்குடன் எழுந்த ஒரு வகை அமைப்பே பள்ளுச் சிற்றிலக்கியமாகும்.

முதற் பள்ளு இலக்கியம் :

பண்ணையொன்றில் பள்ளனொருவன் தன் இரு மனைவியருடனும் பரம்பரையாகத்

தொழில்செய்து வருகின்றான். பள்ளனுக்கு இளைய பள்ளியின் மீதுள்ள காதலால் மூத்தவள் மீது அவனுக்கு அன்பில்லை. மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் சென்று பள்ளன் பண்ணை வேலைகளைச் செய்யாமல் இளைய பள்ளியின் வீட்டிலே இருப்பதைக் கூறிவிடுகின்றாள். பண்ணைக்கார்ன் இளைய பள்ளியின் வீட்டிற்குச் சென்று அவளைக் கோபித்துத் திட்டுகின்றான். மறைந்திருந்த பள்ளன் வெளியே வருகின்றான். விதை வகை, மாட்டு வகை முதலியவற்றின் கணக்குகளைக் கூறுமாறு பள்ளனைப் பண்ணைக்காரன் கேட்கிறான். பள்ளனோ அதற்குரிய விடையைக் கூறாமல் சிலேடையாகத் தவறான கணக்கைக் கூறுகின்றான். நிலங்களுக்கு உரமிட ஆட்டிடையனை அழைத்து வருமாறு பள்ளனைப் பண்ணைக்காரன் ஏவுகின்றான். பள்ளனும் ஆட்டிடையனை அழைத்து வருகின்றான்.

நிலத்தின் உரமிடுமாறு ஆட்டிடையனை ஏவி விட்டுப் பள்ளன் இளைய பள்ளியின் வீட்டிற்குச் சென்று விடுகின்றான். மீண்டும் மூத்த பள்ளி பண்ணைக்காரனிடம் முறையிட, கள்ளத்தனமாக நடிக்கும் பள்ளனைத் தொழுவில் மாட்டுகிறான் பண்ணைக்காரன்.

பள்ளனின் துன்பத்தைப் பொறுக்க மாட்டாத மூத்தப்பள்ளி அவன் வேண்டியவாறே பண்ணைக்காரனிடம் சென்று தான் பிணைபட்டு அவனை விடுவிக்கிறான். பள்ளனும் கணக்குகளை முறையாகக் கூறிப் பிற பள்ளருடன் சென்று நிலத்தை உழ முற்படுகிறான். அவ்வேளையில் பள்ளனை மாடு முட்டவே மயங்கி விழுகிறான். பள்ளியர் இருவரும் வருந்துகின்றனர். சிறிது நேரத்தில் பள்ளன் மயக்கம் நீங்கி எழுகின்றான். உழவுத் தொழில் வேலைகள் முறையாக நடைபெறுகின்றன. பண்ணைக்காரன் முன்னிலையில் பள்ளன் அனைவருக்கும் நெல் அளக்கிறான். தன்னைப் புறக்கணித்துத் தனக்குரிய பங்கைச் சரியாக அளக்காத பள்ளன் இளையவளுக்கு மட்டும் அவள் பங்கிற்கு மேலும் நெல் அளந்தான் என்ற மூத்தப்பள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடுகின்றான். இதனால் இளையபள்ளி மூத்த பள்ளியை ஏசுகிறாள். பின் இருவரும் சமாதனமாகிப் பாட்டுடைத் தலைவனை வாழ்த்திப் பாடிப் பள்னோடு ஒத்து வாழகின்றார்கள்.

பெயர் பெறும் முறை :

பெரும்பாலான பள்ளு நூல்கள் பாட்டுடைத் தலைவனோடு தொடர்புடைய ஊர்ப்பெயரோடு இணைந்துள்ளன. முக்கூடற்பள்ளு, குருகூர்ப்பள்ளு முதலியன எடுத்துக்காட்டுகள். வடகரைப் பள்ளு, சேற்றுப் பள்ளு ஆகியன பாட்டுடைத் தலைவனாகிய குறுநில மன்னரின் ஊர்ப் பெயரோடு தொடர்பு பெற்றுள்ளன. சில பள்ளு நூல்கள் ஊர்ப் பெயரோடு தலைவன் பெயரும் சேர்த்துப் பெயர் பெற்று விளங்குகின்றன. திருமலைமுருகன் பள்ளு என்பது இதற்கு எடுத்துக்காட்டு பாட்டுடைத் தலைவர் பெயராலும் சில பள்ளுகள் வழங்குகின்றன. செண்பகராமன் பள்ளு, கண்ணுடையம்மைப் பள்ளு ஆகியன எடுத்துக் காட்டுக்கள்.

பிறவகைப் பள்ளு நூல்கள் :

மன்னர் மோகனப் பள்ளு என்பது இலக்கியத்திற்குரிய சிற்சில பகுதிகளை மட்டும் பெற்று, ஒவ்வொரு பாடலும் பள்ளீரே என்று முடிகிறது. பள்ளு இலக்கணத்திற்குரிய முழுப் பகுதியும் இந்நூலுள் கிடையாது.

திருநீலகண்டன் பள்ளுவில் திருநீலகண்ட நாயனாரின் வரலாற்றும், வைத்தியப் பள்ளுவில் வைத்தியம் தொடர்பான செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இந்நூற்களுக்கும், பள்ளு இலக்கணத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. ஆனால் இந்நூல்களில் உள்ள ஒவ்வொரு பாடலும் பள்ளீரே என்று முடிகின்றன.

நாடக இலக்கியம் :

பள்ளு இலக்கியங்கள் நாடகங்களாகவும் நடிக்கப் பெற்றன. எந்த இறைவன் மீது பள்ளு நாடகங்கள் இயற்றப்பட்டிருக்கின்றனவோ அந்தந்த இறைவன் திருமுன்னர்த் திருவிழாக்காலங்களில் பள்ளு நாடகமாக நடிக்கப் பெற்றது. பள்ளு நாடகங்கள் பொது மக்களால் விரும்பி வரவேற்கப்பட்ட நிலையில் பள்ளு இலக்கியங்களினின்று வேறுபட்ட பள்ளு நாடக நூல்களும் தனியே எழுந்தன. முக்கூடற்பள்ளு, முக்கூடற்பள்ளு நாடகம் இரண்டும் முற்றிலும் வேறான இலக்கியங்கள்.

அகத்துறைப் பாடல்கள் :

பள்ளு இலக்கியங்களில் இடையிடையே அகத்துறைப் பாடல்களும் சில இடம் பெற்றுள்ளன. வெள்ளம் வரவு என்னும் பகுதியில் பல நூல்களும், ஒவ்வொரு பகுதிக்கு முன்னதாகவும் சில நூல்களிலும் இத்தகைய அகத்துறைப் பாடல்கள் இடம் பெற வேண்டும் என்பது பள்ளுவின் இலக்கணத்தைக் கூறும் சதுரகராதியிலும் கூறப்பட்டுள்ளது.

ஏசல் இலக்கியம் :

பள்ளு நூல்களின் இறுதிப்பகுதியாக அமைந்தது ஏசல் பகுதி. இப்பகுதியில் மூத்த பள்ளியும், இளைய பள்ளியும் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வர். வாயுக்கை முறையில் ஒரே கணவனின் அன்பைப் பெறுவதற்காக இரு மனைவியரும் போட்டி போடுகின்ற முறையில் இவ்வேசல் பகுதி தொடங்கும். இதுவே பின்னர் சமயப் பூசலாக மாறுகிறது. பள்ளு இலக்கியங்களில் மூத்த பள்ளி ஒரு சமயத்தளாகவும் இளைய பள்ளி மற்றொரு சமயத்தளாகவும் இருப்பது மரபு. நூலின் இறுதியில், சமய வேறுபாடுகளோ, உருவ வேறுபாடுகளோ ஒழிந்து இரண்டும் ஒன்றே என்ற பெரும் சமயக்கோட்பாடு சிறப்பான முறையில் விளக்கப்பட்டிருக்கும். இத்தகைய பொருட் சிறப்பால் பள்ளு இலக்கியத்துள் ஏசல் பகுதியே முதன்மையும், பெருமையும் பெற்ற பகுதியாகும். இப்பகுதியின் சிறப்பிற்குச் சான்றாக பள்ளு இலக்கியத்தைப் 'பள்ளேசல்' என்று பல நூல்கள் குறிப்பிடுகின்றன. தாய்–மகளேசல், லட்சுமி–பார்வதி ஏசல் முதலிய இலக்கியங்கள் பள்ளியின் ஏசல் பகுதியினின்றும் கிளைத்த தனிச் சிற்றிலக்கியங்களாகும்.

11. குறவஞ்சி இலக்கியம்

குறவஞ்சி இலக்கிய இலக்கணம் :

நாடக இலக்கியத்திற்கு நல்ல சான்றாக விளங்குவது குறவஞ்சி இலக்கியம். பாட்டுடைத் தலைவனை அவனது உலாவின் போது கண்டு காதல் கொண்டு விரக வேதனையால் வாடித் தவிக்கும். தலைவியொருத்திக்குக் குறக்குலத்தைச் சேர்ந்த வஞ்சியொருத்தி குறி கூறுவதாக வரும் பொருளமைதியைக் கொண்டது குறவஞ்சி இலக்கியம்.

தொல்காப்பியத்தின் மூலம் குறக்குலத்தைச் சார்ந்த வஞ்சியொருத்தி தலைவிக்குக் குறி கூறுதல் உண்டு என்ற செய்தியை அறியலாம். களவுக் காலத்தின் போது தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த செவிலித் தாய் அவள் வேறுபாட்டிற்குரிய காரணத்தைக் கட்டு வைத்தும், கழங்கு வைத்தும் காண்பான் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்"

இத்தகைய குறிகளைக் காண்பவருக்கு, நச்சினார்க்கினியார் 'கட்டுவிச்சி' என்று தன் காலத்தில் வழங்கிய பெயரைக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுவிச்சியைக் குறுந்தொகை 'அகவன் மகள்' என்று குறிப்பிடுகின்றது.

குறத்திப் பாட்டு :

குறத்தி குறி கூறுவது என்னும் பொருளமைதியுடன் பத்துச்செய்யுட்களால் இயன்றது. குறத்திப்பாட்டு என்னும் இலக்கியமாகும் என்று பன்னிரு பாட்டியலின் மூலம் அறியலாம். இவ்விலக்கியம் குறவஞ்சியினின்றும் அமைப்பு நிலையில் வேறானதாயினும் பொருளமைதியில் ஒத்த நிலையினதே என்பதைக் காணலாம்.

குளுவ நாடகம் :

குறவன் குறத்தி ஆகிய இவர்களது வாழ்க்கை முறைகளையும், ஒழுகலாறுகளையும் விரிவான முறையில் நாடகப் போக்கில் கூறுவதாக எழுதப்பட்ட பிறிதொரு அருகிய சிற்றிலக்கியம் உண்டு. அதன் பெயர் குளுவ நாடகம் என்பது இக்குளுவ நாடகத்தின் நாடக அமைப்பும் குறத்திப் பாட்டின் இலக்கியச் சாயலும் இணைந்தே குறவஞ்சி என்ற சிற்றிலக்கிய வகையைத் தோற்றுவித்ததாகச் சிலர் கூறுவர்.

குளுவ நாடகம் என்பது மிகவும் பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியங்களுக்குப் பின்னர் எழுந்த அருகிய நாடக இலக்கியம். ஆதலால் குளுவ நாடகத்தின் நாடக அமைப்பு குறவஞ்சி இலக்கியத்தில் இடம் பெற்றிருக்க முடியாது என்று கூறலாம். ஆனால் குறவஞ்சி இலக்கிய வளர்ச்சிக்குப் பின்னர் அதனின்றும் கிளைத்த முழுமையான சிறு நாடக இலக்கியமே குளுவ நாடகம் என்று கொள்ளலாம்.

கலம்பகத்தில் குறம் :

கலம்பக நூல்களில் குறம் என்பது ஒருவகை உறுப்பாகும். தலைவியால் காதலிக்கப்பட்ட தலைவன் இன்னவள் என்றும் அவனைக் குறிப்பிட்ட காலத்துக்குள் தலைவி அடைவது உறுதி என்றும் குறத்தி தனது பெருமைகளைத் கூறிக் குறி தேர்ந்துரைப்பதாக வருவது இப்பகுதி.

முதல் குறவஞ்சி இலக்கியம் :

திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பெற்ற குற்றாலக் குறவஞ்சியே முதல் குறவஞ்சி இலக்கியமாகும். இது சுவையாலும், நடைநயத்தாலும், முதன்மை பெற்றது. இதனை இயற்றிய பெருமையால் திரிகூடராசப்பக் கவிராயருக்குக் 'குறவஞ்சிமேடு' என இன்று வழங்கும் நிலப்பகுதி முற்றூட்டாகக் கிடைத்தது. இவரது காலம் கி.பி.18ஆம் நூற்றாண்டு.

சிலர் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள் இயற்றியதாகக் கூறப்படும் மீனாட்சியம்மை குறமே குறவஞ்சி நூல்களில் காலத்தால் முந்தியது என்றும், மற்றும் சிலர் கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவர் இயற்றிய விதுரன் குறம் என்னும் நூலே முந்தியது என்றும் கூறுவர். ஆனால் இவ்விரண்டுமே இவ்விருவரால் இயற்றப்பட்டவை அல்ல என்பது அறிஞர்கள் கருத்து. ஆகவே குற்றாலக் குறவஞ்சியே முதல் குறவஞ்சி இலக்கியம்.

பொருளமைதி :

தலைவன் பவனி வரவு, மகளிர் காமுறுதல், தலைவி வரவு, உலாப் போந்த தலைவனைக் கண்டு விரக நோயால், வருந்துதல் திங்கள், தென்றல் ஆகியவற்றோடு புலம்பல், யாங்கியிடம் உற்றது கூறித் தூது சென்று வருமாறு வேண்டுதல், குறத்தி வரவு, தலைவி குறத்தியின் மலைவளம், ஊர்வளம், நதிவளம் முதலியவற்றை வினவுதல், குறத்தி அவற்றைக் கூறுவதோடு தலைவனின் தலவளம், கிளைவளம் முதலியன கூறுதல், குறி சொல்லி வந்த தன் பெருமையைக் குறத்தி கூறுதல், தலைவி குறி கூறுமாறு வேண்டுதல் தெய்வம் பராவிக் குறத்தி குறி கூறுதல், தலைவி அவளுக்குப் பரிசில் அளித்தல் குறவன் வரவு, குறவனோடு புள்வேட்டையாடுதல், குறத்தியை எண்ணிய குறவன் அவளைத்தேடுதல், குறவன் குறத்தியின் அணி முதலியவற்றைக் கண்டு ஐயுற்று வினவு போற்றி வாழ்த்தல் ஆகிய இவ்வுறுப்புக்களே குறவஞ்சி இலக்கியத்தின் பொருளமைதியைக் கூறுவனவாகும்.

பெயர் பெறும் முறை :

பாட்டுடைத் தலைவனின் பெயரோடு நூற்பெயர் சார்ந்து வருவது, பாட்டுடைத் தலைவனின் ஊர்ப்பெயரோடு நூற்பெயர் சார்ந்து வருவது, பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயர், இயற்பெயர் ஆகிய இரண்டோடும் நூற்பெயர் சார்ந்து வருவது ஆகிய மூன்று பிரிவுகளும் இந்த நூலின் பெயர்களை அடக்கலாம். பொய்யா மொழி ஈசர் குறவஞ்சி, வருணாபுரிக் குறவஞ்சி, சிதம்பரக் குறவஞ்சி ஆகிய நூல்கள் இவற்றிற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

இப்பகுப்பு முறையில் அடங்காத ஞானக் குறவஞ்சி, தத்துவக் குறவஞ்சி, மெய்ஞ்ஞானக் குறவஞ்சி முதலிய நூல்கள் தத்துவம் சாயல் பெற்று விளங்குபவை.

நாடக மாந்தர் :

குறவஞ்சி, தலைவன், குறவன், கட்டியங்காரன், தோழி பாங்கி, குளுவன், புலியன் முதலிய மாந்தர்களைக் கொண்ட குறவஞ்சி இலக்கியம் நாடக இலக்கியமாகவும் மிளிரும் பெற்றியுடையது.

யாப்பமைப்பு :

குறவஞ்சி நாடக இலக்கியமாதலால் இசைப்பாடல்களும் இடம் பெற்றுள்ளன. ஆசிரிய விருத்தம், சிந்து, கொங்ககக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கண்ணி முதலிய பல்வேறு பாவினங்களும் பயின்று வந்துள்ளன. தரு, விருத்தம் என்ற முறையில் சில பாடல்கள் அடுத்தடுத்துப் பயின்று வந்துள்ளன. தருவதாக விளங்கும் பல சிந்துப் பாடல்களுக்கு இராகம், தாளம், ஆகிய இசைக்குறிப்புகளும் விளக்கப்பட்டுள்ளன. பாடல்களின் இடையிடையே வசனம் என்றொரு பகுதியும் இடம் பெற்றுள்ளது.

புதின இலக்கிய வரலாறு

முன்னுரை :

மேலை நாட்டார் தொடர்பால் தமிழிற் சிறுகதை வளர்ச்சி பெற்றது போலப் புதினமும் (Novel) வளர்ச்சியடைந்துள்ளது. மனித வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்டு அவற்றிற்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டிக் கற்பனையாகப் புனைவதே புதினம் அல்லது நாவல் எனப்படும். தமிழ்ப் புதினங்களின் வகைமையும் வளர்ச்சியும் பற்றி கருத்துக்களை இக்கட்டுரையிற் காண்போம்.

உரைநடைக் காப்பியம் :

கதை சொல்வதும் கேட்பதும் எக்காலத்தவர்க்கும் எந்நாட்டவர்க்கும் உரிய இயல்புகளேயாம். முற்காலத்தில் காப்பியங்கள் பெற்றிருந்த இடத்தை இன்றைய புதினங்கள் பெற்றுள்ளன. எனவே புதினங்களை 'உரைநடைக் காப்பியங்கள்' எனலாம். கோவலன், சீவகன் கதைகளை முறையே காப்பியங்களாகப் பாடிய இளங்கோவடிகளும் திருத்தக்கதேவரும் இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தால் அவற்றை உரைநடையில் புதினங்களாகவே படைத்திருப்பர். அவ்வாறே வரலாற்றுப் புதினங்களை நம் காலத்தில் தந்த பேராசிரியர் கல்கியும் அரு. இராமநாதனும் பழங்காலத்தில் வாழ்ந்திருந்தால் அவற்றைச் செய்யுள் நடையிலான காப்பியங்களாகவே பாடியிருப்பர் என்பது நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய செய்தியாகும். இதனால் கதை சொல்லுதல் என்னும் பொதுவான போக்கு இக்காலத்திற்கு ஏற்பப் புதினம் என்னும் ஓர் இலக்கிய வகையாக, உரைநடை இலக்கியமாக மலர்ந்திருக்கிறது என்று நாம் அறியலாம்.

இப்புதிய துறையை முதன்முதலாகத் தமிழிக்கு அறிமுகம் செய்தவர் வேதநாயகம் பிள்ளை ஆவார். இவர் மாவட்ட நீதிபதியாக இருந்தவர். 1878–ல் தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் என்றும் நாவலை இயற்றினார். இந்நாவல் பிரதாப முதலியாரே கதையைக் கூறுவது போன்று அமைந்திருக்கும். இவரே 'சுகுண சுந்தரி' என்னும் பெயரில் இன்னொரு புதினத்தையும் எழுதியுள்ளார். இவரை அடுத்து ராஜம் ஐயர் 'கமலாம்பாள் சரித்திரம்' என்னும் புதினத்தைப் படைத்தார். இவருக்குப் பின் அ.மாதவையா புனைந்ததே 'பத்மாவதி சரித்திரம்' என்னும் புதினமாகும். இம்மூவர் எழுதிய நாவல்களையும் தமிழில் தோன்றிய முதல் மூன்று நாவல்களாகக் குறிப்பிடுவர். இவை 19–ஆம் நூற்றாண்டில் தோன்றியவை.

மேலை நாட்டார் நாவல்களை பண்பு விளக்க நாவல் (Character Novel) நிகழ்ச்சித் தொகுப்பு நாவல் (Dramatic Novel) என இரண்டாகப் பகுத்துக் கூறுவர். எனினும் தமிழில் இன்று தோன்றியுள்ள நாவல்களை நோக்க அவற்றைக் குடும்ப நாவல்கள், இலக்கிய நாவல்கள், சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள், துப்பறியும் நாவல்கள், மொழிப் பெயர்ப்பு நாவல்கள் எனப் பகுத்துக் காணும் வாய்ப்புள்ளது.

குடும்ப நாவல்கள் :

குடும்பச் சூழல்களை அடிப்படையாகக் கொண்ட நாவல்களை இவ்வகையினுள் அடக்கலாம். மகளிரே இவ்வகைப் புதினங்களைப் படைப்பதில் முன்னிற்கின்றனர். வை.மு. கோதை நாயகி அம்பாள். இத்தகைய நாவல்களை எழுதியுள்ளார். இவருடைய நாவல்களில் 'ஜகன் மோகினி' சிறந்தது என்பர். ராஜம்கிருஷ்ணன், அநுத்தமா, லட்சுமி, ராஜம் ராமமூர்த்தி, சூடாமணி முதலியவர்கள் இவ்வகை நாவல் எழுதியோரில் சிறப்பிடம் 'அசோகன் காதலி' என இரண்டு வரலாற்றுப் புதினங்களை எழுதியுள்ளார். இவற்றுள் முன்னது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிறப்பும் பெருமையும் உடையது.

சமூக நாவல்கள் :

சமூக நாவல்களில் சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் நிலைக்களமாக அமையக் காணலாம். டாக்டர் மு.வ. எழுதிய 'கள்ளே காவியமோ' 'கயமை' 'அகல்விளக்கு' 'கரித்துண்டு' முதலிய நாவல்கள் இவ்வகையில் குறிக்கத்தக்கன சோமுவின் 'நந்தவனம்' ஆர்.வி யின் 'அணையாவிளக்கு' பி.வி.ஆரின் 'தங்கம்' க.நா.சு.வின் 'ஒரு நாள்' ரா.கி. ரங்கராஜனின் 'இது சொர்க்கம்' 'படகு வீடு' முதலியன இன்றை சிறந்த நாவல்களாகும்.

விடுதலைப் போராட்டத்தையும் காந்திய நெறியையும கருவாகக் கொண்டு தமிழில் பல நாவல்கள் தோன்றியுள்ளன. கல்கி படைத்த 'மகுடபதி' 'தியாக பூமி', 'அலையோசை' முதலியனவும் அகிலனின் 'நெஞ்சின் அலைகள்' நா.ரா.பண்டரி நாதனின் 'மண்ணின் புதல்வர்கள்' சிதம்பர சுப்பிரமணியத்தின் 'மண்ணில் தெரியுது வானம்' முதலியனவும் இவ்வகையினவே. இவற்றைக் காந்திய நாவல்கள் என வகைப்படுத்தலாம். சமூக நாவல்களைப் படைத்தவர்களில் கு.இராஜவேலு, நா. பார்த்த சாரதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

துப்பறியும் நாவல்கள் :

படிப்போர்க்குத் திகிலையும் விறுவிறுப்பையும் சுவையையும் ஊட்டுவன துப்பறியும் நாவல்களே. ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் போன்றோர் முன்பு துப்பறியும் நாவல்களை எழுதிவந்தனர். மேதாவி, பி.டி.சாமி, சிரஞ்சீவி, சுஜாதா, தமிழ்வாணன் போன்றோர் இடம் பெறுகின்றனர். பி.எம்.கண்ணன், க.நா.சுப்பிரமணியம், மாயாவி போன்றோரும் குறிக்கத்தக்க குடும்ப நாவல்களைப் படைத்துள்ளார்.

வரலாற்று நாவல்கள் :

முதல் முதலாக வரலாற்றைக் கருவாகக் கொண்டு நாவல் எழுதியவர் கல்கியே இவரை வரலாற்று நாவல்களின் தந்தை எனலாம். இவரின் முதல் வரலாற்று நாவல் பார்த்திபன் கனவு ஆகும். 'சிவகாமியின் சபதம்' என்றும் நாவல் பல்லவர்களின் ஆட்சிக் காலத்தை அழகுபடச் சித்தரிக்கின்றது. இப்புதினத்தின் கதாநாயகியான சிவகாமி கற்பனை பாத்திரமேயாயினும் படிப்போர் நெஞ்சில் நீங்க இடம் பெற்றவள்.

பொன்னியன் செல்வன் நாவல் சோழர்களின் ஆட்சித் திறத்தைச் கூறுகிறது. கல்கியைப் பின்பற்றி பலர் தமிழில் வரலாற்றுப் புதினங்களைப் படைத்துள்ளனர். 'வேங்கையின் மைந்தன்' கயல்விழி, வெற்றித் திருநகர் முதலியன அகிலன் படைத்த வரலாற்றுப் புதினங்கள் ஆகும்.

அக்கினிக் கோலம், பீலிவளை, செம்பியன் செல்வி, முதலியன கோவி மணிசேகரனின் வரலாற்றுப் புதினங்கள் ஜெகச்சிற்பியின் எழுதிய திருச்சிற்றம்பலம், 'நாயகி நற்சோணை' 'ஆலவாய் அழகன்', 'மகரயாழ் மங்கை', 'பத்தினிக் கோட்டம்' முதலியனவும் வரலாற்று புதினங்களே ஆகும்.

ஆசிரியர் சாண்டில்யன் குமுதம் இதழில் தொடர்ந்து பல வரலாற்று புதினங்களை எழுதி வந்தார். 'யவனராணி', 'கடல்புறா', 'மன்னன் மகள்', 'மலைவாசல்', 'கன்னிமாடம்', 'பல்லவ திலகம்' முதலாக பல்வேறு வரலாற்றுப் புதினங்களை அவர் படைத்துள்ளார்.

அரு. இராமநாதன் 'வீரபாண்டியன் மனைவி' இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்துள்ளனர்.

இலட்சிய நாவல்கள் :

குறிப்பிட்ட இலக்கியம் அல்லது குறிக்கோளைப் பரப்பும் நோக்கில் எழுந்த நாவல்கள் இவ்வகையின. இத்துறையில் முன்னோடியாக நின்றவர் வாரா எனக் கூறுவர். இவர் எழுதிய நாவல்கள் கோதைத் தீவு, சுந்தரி எனபன. அறிஞர். அண்ணாத்துரை எழுதிய பார்வதி பி.ஒ. 'ரங்கோன் ராதா' முதலியனவும் விந்தனின் 'பாலும் பாவையும்' ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' நாரண துரைக்கண்ணனின் உயிரோவியம்' முதலியனவும் தமிழில் தோன்றிய இலட்சிய நாவல்கள் எனலாம்.

மொழி பெயர்ப்பு நாவல்கள் :

பிற நாட்டு நல்லறிஞர் படைத்த நாவல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. காண்டேகரின் மராட்டிய நாவல்களை கா. ஸ்ரீ. ஸ்ரீ.யும், தாகடரின் வங்க மொழி நாவல்களை த.நா.குமரசாமி ரங்கநாயகி போன்றோரும் மொழி பெயர்த்துள்ளனர். கன்னட, தெலுங்கு, மலையாள நாவல்களை சித்தலிங்கய்யா, ருத்ரா துளசிதாஸ் போன்றோர் தமிழாக்கியுள்ளனர். டால்ஸ்டாஸ், மாக்ஸிம் கார்க்கி, டிக்கன்ஸ், தாமஸ் ஹார்டி முதலிய மேல்நாட்டு அறிஞர்களின் நாவல்களும் மொழியாக்கம் பெற்றுள்ளன. இவ்வகையில் த.ரா.சேனாலதி, ரா.வீழிநாதன், சுந்தானந்தபாரதியார், நா. தாமராஜன், ரகுநாதன் ஆகியோரின் பணி போற்றத்தக்கது ஆகும்.

முடிவுரை :

இவற்றில் இருந்து தமிழில் உள்ள புதினங்களின் வகைகளையும் வளர்ச்சியும் பற்றி ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

1. வெண்பா, ஆசிரியப்பா

செய்யுளின் உறுப்புகளாகிய எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றால் யாக்கப்பட்டது யாப்பு ஆகும். (யாத்தல் – கட்டுதல்)

செய்யுள், பாட்டு, தூக்கு, கவி, கவிதை, பா, தொட்ர்பு என்பன யாப்புக்குரிய வேறு பெயர்களாகும்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் 'பா' நான்கு வகைப்படும்.

வெண்பா :

வெண்பாவின் பொது இலக்கணம் :

1. வெண்பாவின் ஈற்றடி முச்சீர்களாகவும், ஏனைய அடிகள் நாற்சீர்களாகவும் இருக்கும்.
2. இயற்சீரும், வெண்சீரும் (காய்ச்சீர்) பயின்று வரும்.
3. இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் வரும். (பிற துறைகள் வராது.)
4. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றைப் பெற்று முடியும்.
5. செப்பலொசை உடையது.
6. இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும்.
7. ஒரு விகற்பமாகவோ பல விகற்பமாகவோ வரும்

வெண்பா வகைகள் :

1. குறள் வெண்பா, 2. சிந்தியல் வெண்பா, 3. நேரிசை வெண்பா, 4. இன்னிசை வெண்பா, 5. பஃறொடை வெண்பா.

1. குறள் வெண்பா :

வெண்பாவின் பொது இலக்கணத்தோடு, இரண்டடி பெற்று வருவது குறள் வெண்பா ஆகும். திருக்குறள், குறள் வெண்பா வகையைச் சார்ந்ததாகும்.

(எ.கா) "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு".

இதில் இரண்டு அடியின் முதற்சீரும் ஒரே எதுகை பெற்று வந்துள்ளன. எனவே இது ஒரு விகற்பக் குறள் வெண்பா எனப்படும்.

(எ.கா) "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துறன்
ஆகுல நீர பிற"

இக்குறப்பாவில் முதலடியின் முதற்சிரிலும், இரண்டாம் அடியின் முதற்சீரிலும் எதுகை ஒன்றாக அமையவில்லை. இரண்டு விதமாக அமைந்துள்ளன. ஆதலின் இது இருவிகற்பக் குறள் வெண்பா ஆகும்.

2. சிந்தியல் வெண்பா :

வெண்பா பொது இலக்கணத்தோடு, மூன்றடி பெற்று வருவது சிந்தியல் வெண்பா எனப்படும். இது நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என இரு வகைப்படும்.

நேரிசைச் சிந்தியல் வெண்பா :

வெண்பாவிற்குரிய இலக்கணம் அமைந்து, இரண்டாம் அடியின் இறுதியில் (மூன்றாம் சீரையடுத்து) தனிச்சொல் பெற்று, மூன்று அடிகளால் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா ஆகும். அத்தனிச்சொல் முதலடியின் முதல்சீர் பெற்ற எதுகைத் தொடை பெற்று வரும்.

(எ.கா) "அறிந்தானை ஏத்தியறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செல்வ னுரைப்ப – சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு "

இது இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா :

வெண்பாவிற்குரிய இலக்கணம் அமைந்த, தனிச் சொல்லின்றி ஒரு விகற்பத்தால் மூன்றடிகளால் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஆகும்.

(எ.கா) "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்."

இது தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

நேரிசை வெண்பா :

வெண்பாவுக்கு உரிய பொது இலக்கணம் அமையப் பெற்று, நான்கு அடிகளாய், இரண்டு அடியில் (மூன்றாம் சீரையடுத்து) தனிச்சொல் பெற்று வருவது நேரிசை வெண்பா எனப்படும். அத்தனிச்சொல் முதல் அடியின் முதற்சீர் பெற்ற எதுகைத் தொடை பெற்று வரும். இது ஒரு விகற்ப நேரிசை வெண்பா, இரு விகற்ப நேரிசை வெண்பா என இரு வகைப்படும்.

ஒரு விகற்ப நேரிசை வெண்பா :

(எ.கா) "நெல்லுக் கிறைந்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு

எல்லார்க்கும் பெய்யும் மழை".

இச்செய்யுள், வெண்பாவுக்கு உரிய இலக்கணம் பெற்று, நான்கு அடிகளாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, நான்கு அடிகளிலும் ஒரே எதுகையைப் பெற்று வந்துள்ளது. எனவே இஃது ஒரு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா ஆகும்.

இரு விகற்ப நேரிசை வெண்பா :

(எ.கா) "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையின் – மேதனியில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிவேந்தோர்

பட்டாங்கில் உள்ள படி"

இச்செய்யுள் வெண்பாவுக்கு உரிய இலக்கணம் அமையப் பெற்று நான்கு அடிகளாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, முதலிரண்டு அடிகளின் முதற்சீர் ஒரெதுகையாகவும் பின்னிரண்டு அடிகளின் முதற்சீர் மற்றோர் எதுகையாகவும் வந்துள்ளன. எனவே இது இரு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா எனப்படும்.

இன்னிசை வெண்பா :

வெண்பாவிற்கு உரிய இலக்கணம் பெற்று நான்கு அடிகளாய் தனிச்சொல் இல்லாமல் வருவது இன்னிசை வெண்பா ஆகும். மேலும் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தான் வருவனவும், மூன்றாம் அடியின் இறுதியில் தனிச் சொல் பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும், பலவிகற்பமாக அடிதோறும் ஒருஉத் தொடை பெற்று வருவனவும் இன்னிசை வெண்பா எனப்படும்.

(எ.கா) தாளாளன் என்பான் கடன்படா வாழ்வான்

வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்

கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்

கேளாக வாழ்தல் இனிது.

இது ஒரு விகற்பத்தோடு தனிச்சொல் பெறாது வந்த இன்னிசை வெண்பா

(எ.கா) "கல்லாது போகிய நாளும் பெரியவர்கள்

செல்லாது வைகிய வைகலும் ஒல்வ

கொடாஅது ஒழிந்து பகலும் – உரைப்பான்

படாஅவலம் பண்புடையார் கண்"

இது இரு விகற்பத்தோடு மூன்றாம் அடியில் தனிச்சொல் பெற்று வந்த இன்னிசை வெண்பா.

பஃறொடை வெண்பா :

வெண்பாவுக்கு உரிய பொது இலக்கணம் பெற்று, ஐந்தடிகள் முதல் பன்னிரண்டு அடிகள் வரை வருவது பஃறொடை வெண்பா எனப்படும். (பஃறொடை – பல் + தொடை)

(எ.கா) நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோ(டு)

இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு

ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை

நல்லினத் தாரோடு நட்டல் – இவையெட்டும்

சொல்லிய ஆசார வித்து.

இது ஐந்து அடிகள் கொண்ட பஃறொடை வெண்பா.

ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் :

1. அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வரும்.
2. பெரும்பாலும் ஈரசைச்சீர்களாகிய மாச்சீர், விளச்சீர் (ஆசிரிய உரிச்சீர்) பெற்று வரும். பிற சீர்களும் பெற்று வரும். ஆனால் வஞ்சியுரிச்சீர்களாகிய (கருவிளங்கனி, கூவிளங்கனி) ஆகியவைகள் வாரா.
3. நேரொன்றாசிரியத்தளையும், நிரையொன்றாசிரியத்தளையும் மிகுந்து வரும். பிற தளைகளும் வரும்.
4. குறைந்தது மூன்று அடிகளைப் பெற்று வரும். மிகுதி, பாடுவோர் உள்ளக் குறிப்பு.
5. ஈற்று அடியின் இறுதிச்சீர் ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ என்பவற்றுள் ஒன்றைக் கொண்டு முடியும். எனினும் ஏகாரத்தால் முடிவது சிறப்பு
6. அகவல் ஓசை உடையதாக வரும். அகவலோசை பெற்று வருவதால் அதற்கு அகவற்பா என்ற பெயரும் உண்டு.

ஆசிரியப்பா வகைகள் :

1. நேரிசையாசிரியப்பா
2. இணைக்குறள் ஆசிரியப்பா
3. நிலை மண்டில ஆசிரியப்பா
4. அடிமறிமண்டில ஆசிரியப்பா

நேரிசை ஆசிரியப்பா :

ஆசிரியப்பாவுக்கு உரிய இலக்கணம் பெற்று, ஈற்றயலடி மட்டும் முச்சீராயும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாயும் வருவது நேரிசை ஆசிரியப்பா எனப்படும்.

(எ.கா) பாரி பாரி என்றுபல ஏத்தி

ஒருவர் புகழ்வர் செந்நாப்புலவர்

பாரி ஒருவனு மல்லன்

மாரியும் உண்டீன் டுலகுபுரப் பதுவே.

இதன் ஈற்றயலடி மட்டும் மூன்று சீர்களையும், ஏனைய அடிகள் நான்கு சீர்களையும் பெற்று வந்துள்ளன.

இணைக்குறள் ஆசிரியப்பா :

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று முதலடியும் ஈற்றடியும் நாற்சீராயும், இடையிடையே இரு சீரடிகளாயும் முச்சீரடிகளாயும் அமையின் அது இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும்.

(எ.கா) நீரின் தன்மையும் தீயின் வெம்மையும்

சாரச் சார்ந்து

தீரத் தீரும்

சார னாடன் கேண்மை

சாரச் சாரச் சார்ந்து

தீரத் தீரத் தீர்பொல் லாதே"

இதில் இடையடிகளில் ஒரிரு சீர்கள் குறைந்து வந்துள்ளன.

நிலைமண்டில ஆசிரியப்பா :

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, அனைத்து அடிகளிலும் நான்கு சீர்கள் அமையப்பெற்று வருவது நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

(எ.கா) நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால் யான் உயிர் என்பது அறிக

வேன்மிகு தாளன வேந்தர்க்குக் கடனே

இதில் எல்லா அடிகளிலும் நான்கு சீர்கள் வந்துள்ளன.

அடிமறிமண்டில ஆசிரியப்பா :

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, ஒவ்வொர் அடிக்குள்ளும் பொருள் முடியுமாறும் அந்த அடியையும் முதல் அடிகளாகவும், இடை அடியாகவும், கடைசி அடியாகவும் மாற்றி அமைத்தாலும் பொருளும் ஓசையும் கெடாமலும் அமைவது அடிமறிமண்டில ஆசிரியப்ப எனப்படும்.

(எ.கா) மாறாக் காதலர் மலைமறந் தனரே!
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே!
கூறாய் தோழி யான்வாழு மாறே!

இதில் எந்த அடியையும் முதல், நடு, இறுதி என மாற்றி அமைத்தாலும் பொருளும் ஓசையும் மாறுபாடாது.

2. அணிகள்

செய்யுளை அழகு பெறச் செய்வது அணி ஆகும். (அணி – அழகு) இதனை வடநூலார் அலங்காரம் என்று வழங்குவர். செய்யுளைச் சொல்லால் அழகு பெறச் செய்வது சொல்லணி ஆகும். பொருளால் அழகு பெறச் செய்வது பொருளணி ஆகும். இவ்விரண்டிலும் பொருளணியே சிறப்புடையது.

தொல்காப்பியத்தில் உவம இயலிலும், தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய இலக்கண நூல்களிலும் அணிகளைப் பற்றி விரிவாகக் காணலாம்.

உவமையணி :

பண்பு, தொழில், பயன், உரு என்ற நான்கின் காரணமாக ஒரு பொருளை, அத்தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டு கூறுவது உவமை அணி ஆகும்.

உவமை அணியில் உவமை, உவமேயம் (பொருள்), உவ உருபு, பொதுத்தன்மை ஆகியன இருக்கும். சில இடங்களில் உவம உருபு மறைந்தும், பொதுத்தன்மையை மறைந்தும் இரண்டுமே மறைந்தும் வருவது உண்டு.

உ.ம். பொன்னொத்த மேனி
புயலொத்த தடக்கையான்

இதில் இராமனின் உடம்பு பொன்னைப் போலவும் (பண்பு) கைகள் மழை மேகம் போலவும் (பயன்) இருந்தனவாய்க் கம்பர் கூறுகிறார்.

உவமை – பொன்; உவமேயம் – மேனி; உவமஉருபு – ஒத்த

உவமை – புயல், (மழை மேகம்), உவமேயம் – கைகள், உவம உருபு – ஒத்த இதில் பொதுத் தன்மை மறைந்துள்ளது.

(உ.ம்) பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்

வரிசை வரிசையா நந்தும்

இதில் பெரியவர்களின் நட்பு வளர்பிறையோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

உவமை – பிறை

உவமேயம் – பெரியவர் கேண்மை

உவமஉருபு – போல

பொதுத்தன்மை – நந்தும் (வளரும்)

உருவக அணி :

உவமைக்கும், உவமிக்கப்படும் பொருளுக்கும் உள்ள வேறுபாட்டினை நீக்கி, அவை இரண்டும் ஒன்றே என்ற ஒற்றுமை உணர்வு தோன்றக் கூறுவது உருவக அணி எனப்படும்.

(உ.ம்) உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து

ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்.

– தண்டி–31.

'தேன்மொழி' என்பது தேன் போன்ற மொழி என்று பொருள் தந்து உவமையணியாகும். அதையே 'மொழித்தேன்' என்று மாற்றும் போது உருவகமாகிறது. இதனால் உருவகத்தில், வருணிக்கப்படும் பொருளுக்கு அதிகச் சிறப்பு கிடைக்கிறது.

(உ–ம்) அங்கை மலரும் அடித்தளிரும் கண்வண்டும்

கொங்கை முகிழும் கழற்காடும் – தங்கியதோர்

மாதர்க்கொடி உளதால் நண்பா அதற்கெழுத்த

காதற் (கு) உளதோ கரை!

உவமையணியில் உவமானம் முன்னிற்கும் உவமேயம் பின்னிற்கும்.

(உ–ம்) மலர்க்கை (மலர் – உவமை. முன்னின்றது)

உருவக அணியில் உவமேயம் முன்னிற்கும், உவமானம் பின்னிற்கும்.

(உ–ம்) கை மலர் (மலர் – உவமை. பின்னின்றது)

உவமையணியில் போல என்னும் உவம உருபு மறைந்தும் வெளிப்பட்டும் வருதல் போல உருவக அணியில், உருவக உருபுகளான ஆகிய, ஆக என்னும், ஆகும் ஆம் என்பன மறைந்தும் வெளிப்பட்டும் வரும்.

(உ–ம்) 'அங்கை மலரும் அடிதளிரும் கண் வண்டும்'

இதில் ஆகிய என்னும் உருவக உருபு மறைந்து வந்துள்ளது.

(உ–ம்) 'கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக"

இதில் ஆக என்னும் உருவக உருபு வெளிப்படையாக வந்துள்ளது.

தற்குறிப்பேற்றம் அணி :

இயற்கையாக நிகழும் நிக்ழ்ச்சியின் மேல் புதல்வன் தன்னுடைய குறிப்பை ஏற்றி, சுவைபட கற்பனையாகக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி

வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட"

இதில் பாண்டியனின் அரண்மனை மீது கட்டப்பெற்றுள்ள மீன் கொடி காற்றில் இயற்கையாக அசைந்து கொண்டிருக்கிறது. இயற்கையாக நிகழும் இக்கொடியின் அசைவு மதுரை நகருள் நுழைய இருக்கும் கோவலனையும், கண்ணகியையும் பார்த்து நீவிர் இங்கு வராதீர் என்று கையசைத்துக் கூறுவது போன்றிருந்தது எனப் புலவன் தன்னுடைய கருத்தினை ஏற்றிக் கூறுகின்றான். எனவே இஃது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

சிலேடையணி :

ஒரு வகையாய் நின்ற தொடரில் பல பொருள் அமைந்திருந்தல் சிலேடை அணியாகும். இது வடமொழியில் சிலேஷாலங்காரப் எனப்படும்.

பூவிரி மதுகரம் நுகரவும்
பொருகயில் இருகரை புரளவும்
காவிரி எனவரும் மடநலீர்
கனகநெ டுங்கடை திறமினோ

இத்தாழிசை மாந்தர்களுக்கும் காவேரியாற்றுக்கும் சிலேடை மாதர்கள் மேல் கூறுமிடத்து.

(உம்) கைகளால் மலர்ந்த மலரிலுள்ள கன்னை நுகரவும், ஒன்றுடன் ஒன்று போர் புரியும் கெண்டை மீன் போன்ற

(உம்) "கண்கள் இருகரை போன்ற கண்ணிதழ்களிடையே புரளவும்" எனவும்.

காவிரியாற்றின் மேல் கூறுமிடத்து

மலர்ந்த மலரிலுள்ள வண்டு நுகரவும் கயல் மீன் புரளவும் (காவிரி நிதி) போல வரும் இளம் பெண்களே, பொன்னாலாகிய கதவினைத் (திறவுங்கள்) எனவும் பொருள் கொள்ள வேண்டுமெ.

வேற்றுப்பொருள் வைப்பணி :

கவிஞர் தாம் கூறக்கருதிய பொருளை நிலைநாட்ட உலகம் அறிந்த வேறொரு பொருளை எடுத்துக்காட்டி வற்புறுத்துவது வேற்றுப் பொருள் வைப்பணியாம். அங்ஙனம் கூறும் போது, பொதுப் பொருளைச் சிறப்புப் பொருளாலும், சிறப்புப் பொருளைப் பொதுப் பொருளாலும் வற்புறுத்திக் கூறுவது மரபாகும்.

(எ.கா) "உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லாமல் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

இதில் குலவிச்சை கல்லாமல் பாகம் படும் என்பது பொதுப் பொருள் இளமையோன் நரைமுடித்துச் சொல்லாமல் முறைசெய்தான் என்பது சிறப்புப் பொருள். பொதுப் பொருளால் சிறப்புப் பொருளை வற்புறுத்திக் கூறியமையால் வேற்றுப்பொருள் வைப்பணி ஆயிற்று.

3. நிறுத்தற் குறிகள்

நாம் படிக்கும்போது பொருளுணர்வுக்கேற்ப நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும், வியப்பு, அச்சம் போன்ற உணர்வுகள் வெளிப்பட வேண்டிய இடங்களில் அவற்றை வெளிப்படுத்தியும் படிக்க வேண்டும். இதற்காகக் கையாளும் குறியீடுகள் நிறுத்தற் குறிகளாகும்.

நிறுத்தற் குறிகள் :

1. காற் புள்ளி (,)
2. அரைப் புள்ளி (;)
3. முக்காற் புள்ளி (:)
4. முற்றுப்புள்ளி (.)
5. வினாக்குறி (?)
6. உணர்ச்சிக் குறி (!)
7. ஒற்றை மேற்கோள் குறி (‘ ’)
8. இரட்டை மேற்கோள் குறி (" ")
9. அடைப்புக் குறி (( ))
10. விடு குறி (’)
11. மேற்படிக் குறி (")
12. பகர அடைப்புக்குறி ([ ])

காற் புள்ளி : (,)

1. சொற்களைத் தனித்தனியாகவோ, அடுத்தடுத்தாகவோ பிரிக்கும் போது ஈற்றில் உள்ளதைத் தவிர்த்து ஏனையவற்றில் காற்புள்ளி இட வேண்டும்.

   (உ.ம்) 1. தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்று வகைப்படும்.

2. நட்புக்குக் குகனும், பரதனும், பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும், உதயணனும் யூகியும் தலை சிறந்த எடுத்துக் காட்டுக்களாகக் கூறலாம்.

2. விளிகளுக்குப் பின் காற்புள்ளி இடுக.

(உ–ம்) அன்புள்ள அம்பா, ஐயா பெரியீர்,

3. எச்ச சொற்றொடரை அடுத்து காற்புள்ளி இடுக.

(உ–ம்) கந்தன் காலையில் நூலகம் சென்று பல நூல்களைப் படித்து, மாலையில் வீடு திரும்பினான்.

4. அதனால், இதனால், ஆதலால், ஆகையால், ஆகவே, எனவே, எனினும், முதலிய சொற்களுக்கு அடுத்து காற்புள்ளி இடுக.

(உ–ம்) சாரணர் இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெறுவோர் எதிர்காலத்தில் நல்ல குடிமக்களாக விளங்குவர் ஆதலால், மாணவர்கள் ஒவ்வொருவரும் இவ்வியக்கத்தில் சேர்ந்து செயல்பட முனைதல் வேண்டும்.

5. மேற்கோள் குறிக்கு முன் காற்புள்ளி இடுக.

(உ–ம்) கந்தன், "நாளை நான் வருவேன்" என்றான்.

6. முகவரியில் இறுதி வரி நீங்கலாக ஏனைய வரிகளின் இறுதியில் (பெயர், தெருபெயர், ஊர்ப்பெயர்) காற்புள்ளி இடுக.

(உ–ம்) க.சாரதா

பிள்ளையார் கோவில் தெரு,

காந்திபுரம்,

மதுரை.

7. ஆங்கில முறையில் நாள், திங்கள், ஆண்டு இவற்றைக் குறிக்கும் போது காற்புள்ளி இடுக.

(உ–ம்) ஜீன், 10, 2004

8. பொருள் மயக்கம் நீங்கித் தெளிவுபடுத்த வேண்டிய இடத்தில் காற்புள்ளி இடுக.

(உ–ம்) மாணக்கர்கள் அளித்த பரிசுகளை உற்சாகத்துடன் பெற்றார்கள் (இதில் பொருள் மயக்கம் உள்ளது) மாணக்கர்கள், அளித்த பரிசுகளை உற்சாகத்துடன் பெற்றார்கள்.

இங்கே மாணக்கர்கள் என்னும் சொல்லுக்குப் பின் காற்புள்ளி இட்டதால் பொருள் தெளிவாகிறது.

அரைப்புள்ளி (;) :

1. ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடியும்போது, ஈற்றுப் பயனிலைத் தவிர்த்து ஏனைய பயனிலைகளின் பின் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

(உ–ம்) பாண்டியர்கள் தமிழ் மொழியை உயிரெனக் கொண்டார்கள்; தமிழ்ச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள்; புலவர்களுக்குப் பொன்னுப் பொருளும் வழங்கினார்கள்.

2. உடன்பாட்டுக் கருத்தையும், எதிர்மறைக் கருத்தையும் இணைத்துக் கூறும்போது இடையில் உள்ள பயனிலையை அடுத்து அரைப்புள்ளி இடுக.

(உ–ம்) கல்விச் செல்வம் நிலையானது; பொருட் செல்வம் நிலையற்றது.

3. எடுத்துக்காட்டு உவமை அணிகளில் வரும் பயனிலையை அடுத்து அரைப்புள்ளி இடுக.

(உ–ம்) மலர்களோ மோந்தால் வாரும்;

விருந்தாளிகளோ சிறிது முகம் கோனினும் வாடுவர்.

4. ஏனென்றால், ஏனெனில் போன்ற காரணம் காட்டும் சொற்களுக்கு முன் அரைப்புள்ளி இடுக.

(உ–ம்) 1. நான் இன்று சாப்பிட மாட்டேன்; ஏனென்றால் என் வயிறு வலிக்கிறது.

முக்காற்புள்ளி (:) :

1. ஒன்றைத் தொகுத்துக் கூறிய பின்னர் அதனை விளக்கிக் கூறும்போது முக்காற்புள்ளி இடவேண்டும்

(உ–ம்) உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை இரண்டு ஒன்று உணவு: மற்றொன்று நீர்

2. ஒருவர் கூற்றை விளக்குமிடத்து.

(உ–ம்) பாரதியார் பின் வருமாறு கூறுகின்றார்:

'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'

3. இடையில் வரும் உன் தலைப்புகளை அடுத்து

(உ–ம்) பாரதிதாசன் தமிழ்ப்பற்று :

4. பொருள் விளக்கங்களின் முன் –

(உ–ம்) ஐம்பொறிகளாவன : மெய், வாய், கண், மூக்கு, செவி எனபன.

முற்றுப்புள்ளி (.) :

1. ஒரு வாக்கியத்தின் முடிவில் முற்றுப்பள்ளி இட வேண்டும்.

(உ–ம்) மாலதி அழகாகப் பாடினாள்.

2. சொற் குறுக்கங்களுக்குப் பின்.

கி.மு.

கி.பி.

சிலப்.அரங்.47.

திரு. / உயர்திரு.

3. முகவரியின் இறுதியில்

(உ–ம்) க. கலைஞன்

4, நேரு நகர்,

மதுரை.

4. பெயர் குறுக்கத்தைக் குறிக்க

(உ–ம்) திரு.வி.க

5. ஆங்கிலப் பட்டத்தைக் குறிக்கும் எழுத்துக்களுக்குப் பின்

(உ–ம்) பி.ஏ.

வினாக்குறி (?) :

1. வினாப் பொருளைத் தரும் வாக்கியத்தின் இந்நூலில் வினாக்குறி இடுதல் வேண்டும்.

(உ–ம்) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார் ?

உணர்ச்சிக் குறி (!) :

1. வியப்பு, அச்சம், உவமை, அவலம், இரக்கம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்களை அடுத்து உணர்ச்சிக் குறி இடுதல் வேண்டும்.

(உ–ம்) என்னை அழகு!

2. உணர்ச்சியுடன் விளிக்கும் போது.

(உ–ம்) தம்பி! உன் நாவை அடக்கிப் பேசு!

3. வரவேற்றல், வாழ்த்தல், வைதல் ஆகியவற்றை தெரிவிக்குச் சொற்களுக்கு அடுத்து

(உ–ம்) வாருங்கள் ! வாருங்கள் !

வாழ்க ! வாழ்க !

ஒற்றை மேற்கோள் குறி (‘ ’) :

1. சிறப்புக் காரணம் கருதி ஒரு சொல்லையோ, தொடரையோ, குறித்துக் காட்ட ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.

(உ–ம்) ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’

2. நேர் கூற்றுக்குள் நேர் கூற்று வரும் போது ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.

(உ–ம்) பரதன், "நான் என் செய்வேன் தமையனார் ‘நீ போ நான் பதினான்கு ஆண்டுகள் கழித்தே வருவேன்’ என்று சொன்னார். அதனால் வந்து விட்டேன்" எனறான்.

3. பிரித்துக் காட்டும் இடம், பிறமொழிச் சொற்கள், பழமொழிகள், குறிப்பீடுகள் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்தில் ஒற்றை மேற்கோள் குறி இட வேண்டும்.

(உ–ம்) ‘பெஸ்கி’ என்பது அவர் பெயர்

இரட்டை மேற்கோள் (" ") :

1. நேர் கூற்று தொடங்கும் இடத்தில்

   (உ–ம்) நெடுஞ்செழியன், "இப்போரில் நான் செல்லாமல் போவேனாயின் என் குடிகள் பழி தூற்றும் கொடுங்கோலனாவோனாக!" என்றான்.

2. மேற்கோள்களை எழுத்தாரும் போது

   (உ–ம்) "சாதிகள் இல்லையடி பாப்பா" என்றார் பாரதியார்.

அடைப்புக் குறி (( )) :

1. மொழி பெயர்ப்பு, அருஞ்சொற்பொருள் விளக்கம், இடைப்பிறவரலுல் ஆகிய இடங்களில் அடைப்புக்குறி இட வேண்டும்.

   (உ–ம்) சாதி இரண்டு (ஆண், பெண்) ஒழிய வேறு இல்லை.

விடு குறி (‘) :

ஒன்றை விட்டு வரும்போது அந்த இடத்தில் விடுகுறி இடுதல் வேண்டும்.

(உ–ம்) 15.6.‘03 (2003 என்பதில் உள்ள ‘20’ என்றும் எண் விடுப்பட்டுள்ளது.

மேற்படிக் குறி (") :

மேற்குறித்தே இஃது என்று காட்டுவது மேற்படிக்குறி

(உ–ம்) ஆடுகொடி – வினைத்தொகை

கடிதாய் – "

ஊறுகாய் – "

பகர அடைப்புக்குறி ([ ]) :

பிறைக்குறியை உள்ளடக்கி இப்பகர அடைப்புக் குறி ([ ]) பயன்படும்.

கீழ்க்காணும் பத்தியில் இடப்பட்டிருக்கும் நிறுத்தற் குறியீடுயை நன்கு அறிந்து கொள்க :

சிலப்பதிகாரத்திலே குறிக்கப்படும் நகைகளுள் வளையலை மட்டும் சிறிது பார்ப்போம். ‘தங்க வளையலும், சங்கு வளையலும், பவள வளையலும், மாதவியின் கையில் அமைந்து அழகு செய்தன’ என்று சிலம்பு கூறுகின்றது. ஆயினும், இறுதியில் வெண்மையான சங்கு வளையல்களையே மாதர் அணிந்தார்கள். சங்கறுத்து வளையல் செய்யும் பணியாளர் பழந்தமிழ் நாட்டில் இருந்தார்கள். "சங்கறுப்பது எங்கள் குலம் சங்ரனார்க்கு ஏது குலம்" என்று நக்கீரர் பாடினார் என்பர். சீதை சங்கு வளையல் அணிந்திருந்தால் என்பது, "சங்கிற் பொதிந்தகையர்" என்று கம்பர் பாடுதலால் தெரிகின்றது. எனவே, முன்னாள் வளையல் சங்கு வளையல்; பின்னே வந்தன தங்க வளையல், பவள வளையல், வயிர வளையல் முதலியன. இந்த வகையில் தமிழ் நாட்டு நகைகள் சொல்லும் கதையை அறிந்து கொள்வது ஓர் ஆனந்தம்.

4. கடிதம் எழுதுதல் - பாராட்டு, புகார், விண்ணப்பம்

கடிதம் எழுதுதல் ஒரு கலை. நாம் நேரில் சென்று உரையாட இயலாத போது நாம் எழுதும் கடிதங்கள் நமக்காக உரையாடுகின்றன. கடிதங்களில் உள்ள வாக்கியங்கள் சிறு சிறு வாக்கியங்களாக இருத்தல் வேண்டும். நாம் சொல்லக் கருதும் உணர்ச்சி அனைத்தையும் கடிதம் தெரிவிக்க வேண்டும்.

கடித்ததில் எழுதுவோர் முகவரி, கடித்ததைப் பெறுவோர் முகவரி, பொருத்தமான விளி, கடிதப் பொருள், கையெழுத்து ஆகியன கடித்ததின் இன்றியமையாத உறுப்புகள், கடித்ததின் வலப்புற ஓரத்தில் இடமும், நாளும் தவறாமல் குறிப்பிடல் வேண்டும். கடிதப் பொருள் விரிவானதாயின் பல பத்திகளாகப் பிரித்து எழுதினால் கடிதம் சிறப்புடையதாய் அமையும்.

கீழே மாதிரிக் கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை படித்து அது போல் நீங்களும் எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்.

பாராட்டுக் கடிதம்

ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பெற்ற உன் நண்பனைப் பாராட்டி கடிதம் ஒன்று வரைக :

மதுரை–12
30.06.04

அன்புள்ள அ. தமிழ்ச்செல்வனுக்கு,

வணக்கம். நலம். நலமறிய விருப்பம். அங்கு உன் பெற்றோரின் நலத்தையும் தெரிவிப்பாயாக.

இந்த மடலை நான் மகிழ்ச்சிப் பெருக்கினால் எழுதுகிறேன். கடந்த வாரம் கோவையில் நடைபெற்ற மாநில தடகளப் போட்டியில் ஓட்டப் பந்தயத்தில் நீ முதல்வனாய் வந்ததை அறிந்து நானும் என் பெற்றோரும் மகிழ்ந்தோம். படிப்பில் நீ முதல்வனாய்த் திகழ்வதைப் போன்றே விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு முதல்வனாய் விளங்குவதை அறிந்து களிக்கிறோம். நீ மேற்கொண்ட பயிற்சியும், ஊக்கமும், முயற்சியுமே நீ பெற்ற வெற்றிக்குக் காரணம் என்பதை அறிவோம்.

உன் திறமை ஆசியப் போட்டியிலும், ஒலிம்பிக் போட்டியிலும் வெளிப்பட பெரிதும் விரும்புகிறோம்.

இங்ஙனம்,
அன்புள்ள,
மா.அம்பலவாணன்

உறை மேல் முகவரி :

திரு. அ. தமிழ்ச்செல்வம்,
5, அறிவு நகர்,
கமுதி,
இராமநாதபுரம் மாவட்டம்.

புகார்க் கடிதம்

நும் மிதிவண்டி காணாமல் போனது பற்றி காவல்துறைக்குப் புகார்க் கடிதம் எழுதுக.

அனுப்புநர் :

த. மதிவாணன்,

3, பாரதி தெரு, மீனாட்சி நகர்,

மதுரை – 10.

பெறுநர் :

ஆய்வாளர்,

காவல் நிலையம்,

மதுரை – 12.

ஐயா,

பொருள் : களவு போன மிதிவண்டியைக் கண்டுபிடித்து ஒப்படைக்குமாறு வேண்டுதல்

என்னுடைய வீட்டின் முன்புறத்தில் உள்ள தாழ்வாரத்தில் மிதிவண்டியை இரவு நிறுத்தி வைத்துவிட்டு, வீட்டின் உள்ளறையில் உறங்கினேன். அம்மிதிவண்டியைப் பூட்டி வைத்திருந்தேன். காலையில் எழுந்து பார்த்தபோது மிதிவண்டி தாழ்வாரத்தில் காணவில்லை. களவாடிச் சென்று விட்டார்கள் என் ஐயப்படுகிறேன். ஆகையால் என்னுடைய மிதிவண்டியைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

வண்டியின் பெயர் : ஹீரோ

வண்ணம் : கருப்பு

வாங்கிய ஆண்டு : 2002

விற்பனைச் சீட்டின் மறுதோன்றி இணைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம்,

தங்கள் உண்மையுள்ள,

நாள் : 16.07.2004

இடம் : மதுரை

த.மதிவாணன்

உறை மேல் முகவரி :

வட்டாட்சித் தலைவர் அவர்கள்,

தல்லாகுளம்,

மதுரை – 20

விண்ணப்பக் கடிதம்

விண்ணப்பக் கடித்ததில் விண்ணப்பித்துக் கொள்வோர், பணிவுடன் இனிய சொற்களால் தமக்கு வேண்டுவனவற்றை எடுத்துச் சொல்லுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பல வகைப்படும். அவை

1. அரசாங்கத்திற்குச் செய்து கொள்ளும் விண்ணப்பம்
2. வேலை பெறுதற்பொருட்டுச் செய்து கொள்ளும் விண்ணப்பம்
3. தேவையைக் குறித்தெழுதி நகராண்மைக் கழகத்தாரிடம் செய்து கொள்ளும் விண்ணப்பம்
4. அதிகாரிகளுக்குச் செய்து கொள்ளும் விண்ணப்பம்

விண்ணப்பம் I

சாதிச் சான்றிதழ் வழங்கக் கோரி வட்டாட்சித் தலைவருக்கு விண்ணப்பம் வரைக.

அனுப்புநர் :

ப. இலக்குவன்

62, வடம்போக்கித் தெரு,

மதுரை – 1.

பெறுநர் :

உயர்திரு. வட்டாட்சித் தலைவர் அவர்கள்

மதுரைச் சரகம்

மதுரை – 1.

பெருந்தகையீர்,

பொருள் : சாதிச் சான்றிதழ் கோருதல்

வணக்கம். நான் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டியுள்ளது. கல்லூரி நிர்வாகத்தினர் என்னுடைய சாதிச் சான்றிதழ்க் கேட்டுள்ளனர். நான் வன்னியர் குலத்தில் பிறந்தவன். என் மேல்நிலைப்பள்ளி மதிப்பெண் பட்டியலில் என் சாதி குறிக்கப் பெற்றுள்ளது. மேலும் என் பள்ளி மாற்றுச் சான்றிதழிலும் என் சாதி குறிக்கப் பெற்றுள்ளது. அவற்றின் நகலை உடன் இணைத்துள்ளேன்.

எனவே, தாங்கள் அருள் கூர்ந்து எனக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

மதுரை – 1

உண்மையுள்ள,

16.07.2004

ப. இலக்குவன்.

கவிதை எழுதுவது எப்படி ?

முன்னுரை :

இலக்கியம் என்பது எந்த காலக்கட்டத்தில் எழுதப்படுகின்றதோ அந்தக் காலக்கட்டத்தில் வாழ்கின்ற சமுதாயத்தின் பிரதிபலிப்பே ஆகும். காலத்தின் கட்டாயத்தால் சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை அவ்விலக்கியங்களும் உள்வாங்கிக் கொள்கின்றன. அப்படிப்பட்ட இலக்கியங்களே காலங்கடந்தும் நிலைத்து நிற்கின்றன. இன்றைய சமுதாயத்தின் தேவைக்கேற்ற இலக்கியமாக திகழ்வது சிறுகதை, நாவல், கவிதை போன்றவற்றை குறிப்பிடலாம். இதில் கவிதை என்பது நம்மிடையே காலந்தோறும் இருந்து வந்த ஒன்று. ஆனால் தனக்குள்ளே பலவிதமான மாற்றங்களை உள்வாங்கி இன்றும் நிலைத்து நிற்கக்கூடிய இலக்கியம் என்று கூறலாம். அந்த கவிதையை எழுதுவது எப்படி ? என்று பிரிந்துக் கொள்ள வேண்டுமென்றால். அக்கவிதையில் அடங்கியுள்ள பல கூறுகளையும் புரிந்துக் கொள்ளுதல் அவசியம்.

காலந்தோறும் கவிதை :

தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் உரைநடை என்பது பிற்காலத்தில் தோன்றியதுதான். அதற்கு முன்பு அனைத்துமே செய்யுள் வடிவில் தான் எழுதப்பட்டு வந்தன. மருத்துவம், வானசாஸ்திரம், தருக்கம், தத்துவம் போன்ற பிற அறிவுத்துறை நூல்களாக இருந்தாலும் அனைத்துமே செய்யுள் நடையில் தான் எழுதப்பட்டு வந்தன. செய்யுள் வடிவில் எழுதியதற்காக அவையெல்லாம் கவிதை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. கவிதையும் செய்யுள் வடிவில் இருந்தன என்று சொல்லாம். அச்சு எந்திரம் இல்லாத காலத்தில் விரைவில் எழுதிமுடிக்கச் செய்யுள் வடிவம் தேவைப்பட்டது. எழுதப்பட்டதை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல செவிவழி தான் புகட்டப்பட்டன. அதற்கு செய்யுளின் ஓசை வடிவம் துணைபுரிந்தது.

அச்சு இயந்திரத்தின் வருகையால் மனனம் செய்தல் என்பது மாறி மௌன வாசிப்பு என்ற ஒன்று உருவானது. இந்த மாறுதலால் எழுத்து வடிவம் செய்யுள் வடிவமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. பிற அறிவுத்துறைகள் எல்லாம் உரைநடை வடிவத்திற்கு மாறின. ஐரோப்பியரின் வருகையால் வசனநடை இலக்கியங்களான நாவல், சிறுகதை போன்றவைகள் தோன்றின. அவையெல்லாம் வசனநடையில் அமைய, கவிதை மட்டும் ஏன் செய்யுள் வடிவில் இருக்கவேண்டும் என்ற கேள்வி எழுந்தது அதன் விளைவு தான் வசன கவிதை.

வசன கவிதையும், புதுக்கவிதையும் :

சிறுகதை, நாவல் போன்றவை மக்களிடையே செல்வாக்குப் பெற, யாப்பின் நடுவில் சொற்கள் சிக்கிக் கொண்டிருந்த கவிதைக்கு எதிர்காலம் இல்லையோ என்ற எண்ணம் அச்சுறுத்தியதின் விளைவே வசன கவிதை, கட்டற்ற கவிதை போன்ற கவிதை வடிவங்கள். மேல்நாட்டில் ஏற்பட்ட இலக்கியப் புரட்சி இந்தியாவிலும் அறியப்பட்டன. வால்ட்விட்மன் எஸ்ராபவுண்ட், வேர்ட்ஸ்வெர்த்,

மில்டன் போன்றோரின் கவிதைகள் புதிய வடிவத்திற்கும், உள்ளடக்கத்திற்கும் வழிகாட்டின. இவற்றின் தாக்கத்திற்கு ஆட்பட்டவர் என்று முதலில் பாரதியைக் குறிப்பிடலாம். பாரதி காலம் வரை கவிதை என்பது புலவர்களுக்கும் பண்டிதர்களுக்கும் மட்டுமே உரியதாக இருந்தது. அதற்கு காரணம் அதன் செய்யுள் வடிவமே. இதன் விளைவு கவிதையை இழந்து யாப்பே முதன்மைப்படுத்தப்பட்டன. இதனை மாற்றியமைத்து புதுக்கவிதைக்கு வித்திட்டவர் பாரதியாரே. அவருடைய கவிதைகள் வசன நடையில் அமைத்தன. பாரதியின் புதிய முயற்சிதான் வசன கவிதை என்பது. ஆனால் வசனங்கள் எல்லாம் கவிதையாகி விடுமா என்றால் அதுவும் இல்லை என்று தான் சொல்ல தான் வேண்டும். செய்யுள், வசனம் இவை இரண்டிற்கும் அப்பாற்பட்டது கவிதை, வசனம், செய்யுள் ஆகிய பாகுபாடுகள் கவிதை இயங்கும் தளம். கவிதையின் புற உருவங்கள் அவை தெளிவாகச் சொன்னால் கவிஞன் கையாளும் கருவி. அப்படியென்றால் கவிதை என்பது எங்கே உள்ளது என்றால் அது கவிஞனின் உள்ளார்ந்த உணர்வினர் அவ்வுணர்வினை அவன் வெளிப்படுத்தும் திறனில் உள்ளது.

வசன நடையில் எழுதப்படும் கவிதைக்கு நிறுத்தம் என்பது பிரச்சனையாகி விடுகிறது. பல வாக்கியங்கள் இடம் பெறும் வசன கவிதையில் கவிதையின் அமைதிதான் நிறுத்தங்களை நிர்ணயிக்கிறது. கவிஞர்கள் கவிதையின் அம்சத்தை சொல்லின் மூலம் நிர்ணயிக்க முயற்சி செய்தனர். சொற்களுக்கு கவிதையின் தொனியை ஏற்ற முற்பட்டன வசன கவிதையின் நீர்மைத் தன்மையைத் தவிர்க்க செறிவும் இறுக்கமும் தேவைப்பட்டன. அப்போது பிறந்தது தான் புதுக்கவிதை என்பது யாப்பு என்ற கட்டுப்பாடுகள் இல்லாத அதே சமயம் ஒரு கட்டுக் கோப்புடன் கவிதை இருந்தது. இதுக்கவிதையும், செறிவையும் கவிதை நாடியபோது புதிய வெளியீட்டு உத்திகளையும் கவிஞர்கள் தேடினர். அதன் வினைவாகப் படிமம், குறியீடு, இருண்மை, இருபொருட் தன்மை போன்ற புதிய குணங்கள். இவைகள் கவிதைக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

கவிஞனும் கவிதையும் :

கவிதை எதற்காகப் படைக்கப்படுகிறது? ஏதாவது ஒரு கருத்தைச் சொல்வதற்காகப் படைக்கப்படுகிறது. அந்தக் கருத்தே உள்ளடக்கம் எனப்படும். இதை தான் கவிதைச் சிந்தனை அர்த்தம், உட்பொருள், பாடுபொருள் கருப்பொருள் என்று பல்வேறு சொற்களைப் பயன்படுத்துகின்றனர். கவிதையின் கருத்து என்பது நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் அர்த்தத்திலிருந்து வேறுபட்டது. ஏனெனில் மொழி என்பதே கருத்துக்களின் குறியீடு தான், அதிலிருந்து வேறுப்பட்டது கவிதையின் கருத்து என்பதும் என்பதை நாம் முதலில் புரிந்துக் கொள்ள வேண்டும்.

அன்றாட வாழ்க்கையில் நிகழும் ஒரு இயற்கை காட்சியை நாம் பார்ப்பதற்கும், கவிஞன் பார்ப்பதற்கும் வித்தியாசம் உள்ளது.

சான்றாக : இரவில் வானத்தை பார்க்கிறோம் அதிக நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. சிலபேர் அதை ரசிக்கின்றோம். பல பேர் அதை கண்டுகொள்வதில்லை. ஆனால் இதையே ஒரு புரட்சிக்கவிஞன் பார்க்கிறான் அவன் கண்களுக்கு அந்த காட்சி.

"மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம் இதைத்தான்
கண்மீதில் பகலில் எல்லாம்
கண்டுகண்டு அந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம்"

என்ற எழுதுகிறார். இந்த வேறுபாடு காட்சியைக் காணும் கண்களில் இல்லை. உள்ளத்து உணர்வில் உள்ளது.

கவிஞனும் அனுபவமும் :

கவிதை என்பது அது எழுதப்படுகின்ற காலத்தில் வாழ்கின்ற மனிதனின் கவிதை. இன்றைய கவிதை என்பதும் இன்றைய சமுதாயத்தில் வாழும் மனிதனின் கவிதை தான். அக்கவிதையைப் படைக்கின்றவன் மனிதன் தான். அவனும் மற்றவர்களைப் போலவே வாழ்க்கையை நேசிக்கிறான், வெறுக்கிறான், சிரிக்கிறான், அழுகிறான், கோபம் கொள்கிறான். அதே சமயத்தில் அவனால் இன்னொன்றும் முடிகிறது. அது வாழ்க்கையை பல்வேறு தளங்களில் நின்று உணரவும், உணர்ந்ததை அசை போடவும், தான் தெளிந்து முடிவு மேற்கொள்ளவதுமாகும். வாழ்க்கையை தன்னிலிருந்து தான் விலகி அனுபவிக்கவும், அந்த வாழ்க்கையோடு தானும் சேர்ந்த அனுபவிக்கவும் அவனால் முடிகிறது. இந்த உணர்வுதான் அவனை தான் வாழும் உலகத்தை மனிதனை, அவன் வாழ்கின்ற வாழ்க்கையை, அவனுடைய விசித்திரகுணங்களை காணச் செய்கிறது. அப்பார்வை வெறும் காட்சியின் பொருளாக இல்லாமல் தனக்குள் அக்காட்சியின் தன்மையை தீவிரப்படுத்தி மீண்டும் மீண்டும் உணரச் செய்கிறது. கவிஞன் பல்வேறு வகையான உணர்வுகள் மறைந்து போனாலும், சில உணர்வுகள் அவனுடைய ஆழ் மனதில் அகமன பதிவாக பதிந்து போகின்றன, அப்பதிவு அவனை எப்பொழுதும் அலைக்கழித்துக் கொண்டே இருக்கும். அவனுடைய இந்த உணர்ச்சியை தான் அனுபவம் என்கிறோம். கவிஞனுக்கு இந்த அனுபவங்கள் எங்கிருந்தோ கிடைப்பதில்லை. அவன் வாழ்கின்ற வாழ்க்கையிலிருந்து தான் கிடைக்கிறது. இந்த அனுபவம் தனித்த வாழ்க்கையிலும் கிடைக்கலாம். புறவுலக வாழ்க்கையிலும் கிடைக்கலாம். பிறப்பு, சாவு, வாழ்க்கைக்கு பிறகு என்ற கற்பனையில் அறிவு திளைக்கும் போதும் கிடைக்கலாம். இந்த அனுபவங்கள் கவிஞனின் சூழ்நிலையை, அவனுக்கு நேர்ந்த வாழ்க்கை திருப்பங்களை அவன் சந்திக்கும் புற வாழ்க்கையை ஒட்டிய அனுபவங்கள் கிடைக்கப் பெற்றவை. எனவே தான் அனுபவங்கள் காலம், வாழ்க்கை, களம் ஆகியவற்றின் மூலம் பெறப்படுகிறது.

இன்றைய கவிதையின் பாடுபொருள் :

சமுதாயத்தின் தேவைதான் இலக்கியம். அவ்விலக்கியத்தின் பாடுபொருள் அச்சமுதாயம் சார்ந்ததாகவே அமையும். சங்க காலத்தில் கவிதை என்பதன் பாடுபொருளாக காதலும், வீரமும் இடம்பெற்றன. அதன் பிறகு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கேற்ப அதன் பாடுபொருளும் மாறின. இன்றைய சமுதாயத்தின் கவிதை புதுக்கவிதை. அதுவும் தான் எழுதப்படுக்கின்ற சமுதாயத்தை உள்ளடக்கியதாகவே காணப்படுகிறது. புதுக்கவிதையின் பாடுபொருளாக எதை வேண்டுமானாலும் சொல்லலாம். புதுக்கவிஞன் தன்னுடைய புதிய வாழ்க்கை தரும் அனுபவங்களை கவிதையாக்குகிறான். காலம் தான் அவனுக்கு இந்த வசதியை அளித்துள்ளது. அதற்கு யாப்பின் கட்டுப்பாடில்லாத கவிதையும் துணை செய்கின்றன. அதே சமயத்தில் அவனுடைய கவிதையில் துவங்கும் பார்வையும், கவிஞனின் நோக்கும் இன்றைய வாழ்க்கையை அடி ஆழத்தில் போய்ச் சந்திக்க செய்கிறதா என்பதும், அக்கவிதை இன்றைய மனிதனின் பலதரப்பட்ட உணர்வுநிலைகளை இயல்பாகவும், அழுத்தமாகவும் வெளிக்காட்டுகிறதா என்றும் நாம் பார்க்க வேண்டும்.

சான்றாக : மு.மேத்தாவின் கவிதை

"என்னுடைய சம்பள நாளில்
எண்ணி வாங்குகிற
பளபளக்கும் நோட்டுகளில்
எவரெவர் முகமோ
தெரியும்
என் முகம் தவிர"

முதல் தேதியன்று ஊதியம் பெறுகிற பொழுது ஏற்படுகிற உணர்வுதான் இந்த கவிதை. எனவே கவிதை என்பது அது மரபு கவிதையோ, புதுக் கவிதையோ எதுவானாலும் வாழ்க்கை உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமையவேண்டும்

கவிதையின் உருவமும் உத்தியும் :

யாப்பின் கட்டுப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட புதுக்கவிதை கவிதையின் உருவத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் கருத்தை வெளியிடும் உத்திகளில் கவனம் கொள்கிறது. அதுவே கவிதைக்கு உருவத்தையும் அளித்து கவிஞன் தான் உணர்ந்ததை இன்னொருவனுக்கு உணர்த்திக் காட்டுகிறான். இந்த இடைக்காலத்தில் அது அவனுக்குள் உயிர்வாழ்கிறது. அதாவது கவிஞன் உணர்வு பூர்வமாக அறிந்த காட்சியை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்துகிறான். அது சரியான முறையில் வெளியிடப்பட்டால் அவனுடைய சிந்தனை அர்த்தமுள்ளதாக வாழ்கிறது. அர்த்தமுள்ளதாக்கும் பணியில் பயன்படுவது தான் சொற்கள். புதுக்கவிதையில் சொற்கள் தான் முக்கியம் அலங்காரமான சொற்களோ, தேவையற்ற சொற்களோ

பயன்படுத்தக் கூடாது என்பது தான் புதுக்கவிதையின் முக்கியமான விதி. கவிதையில் இடம் பெறும் ஒவ்வொரு சொல்லும் அக்கவிதையின் உயிர்துடிப்பாக அமைய வேண்டும். எந்த ஒரு சொல்லை நீக்கினாலும் அக்கவிதையை உயிரில்லாமல் செய்துவிடும் என்ற நிலையில் சொற்களை பயன்படுத்த வேண்டும். மேலும் சொற்கள் பொருட்களை நேரடியாகக் காட்டாமல், நாம் பொருட்களை அடையாளம் கண்டு கொள்ள நாம் உணர்வுகளைத் தூண்ட வேண்டும். அதாவது அழைப்பு பொருட்களுக்கல்ல நம் உணர்வுகளுக்குத் தான் இதற்குத் தான் கவிஞன் பல விதி உத்திமுறைகளைக் கையாளுகிறான்.

உத்தியின் வகைகள் :

புதுக்கவிதையில் பயன்படுத்தப்படும் உத்திகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பருப்பொருள் வடிவ உத்திகள்
2. நுண் பொருள் வடிவ உத்திகள்

பருவப்பொருள் வடிவ உத்திகள் :

கவிதையைப் படைக்கும் போக்கிலேயே வெளிப்படையாகத் தோன்றி கவிதைப் பொருளை சுளுவாக்கித் தருபவை பருப் பொருள் உத்திகள். இவற்றை 1. சித்திரமுறை 2. முரண் 3. தலைப்பு 4. சொல்லுடைப்பு 5. சொல்லாடல் 6. அடுக்கு வருணனை 7. அங்கதம் என்ற ஒரு வகையில் புதுக்கவிதையில் பயன்படுத்தலாம்.

சானறு : முரண்

“சுதந்திர இந்தியா
ஐம்பதாண்டு உயரத்தில்
அடிமை இந்தியன்
ஐந்நூறாண்டுப் பள்ளத்தில்

நுண் பொருள் வடிவ உத்திகள் :

இது கவிதையின் படைப்பு நிகழ்வில் நடைபெறுவது இதன் மூலம் அனுபவ தளத்தை விரிவடையச் செய்ய முடியும். கவிஞன் பயன்படுத்தும் சொற்களின் பொருளுக்குட்பட்ட எல்லையிலிருந்து கவிஞன் உணர்த்த விரும்பும் பொருளின் எல்லைக்கே வாசகனை அழைத்துச் செல்பவை இவை தான்

இவ்வகை உத்திகள்

1. உவமை
2. உருவகம்

3. படிமம்

4. குறியீடு என்ற வகையில் கவிதையில் பயன்படுத்தப்படுகின்றன

சான்றாக

குறியீடு : மு. மேத்தா

"பூக்களிலே நானு மொரு
பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே
பொன் விரல்கள் தீண்டலையே – நான்
பூமாலையாகலையே"

'அரளிப்பூ அழுகிறது' என்ற இந்தக் கவிதையில் கவிஞன் அரளியின் அழுகையைப் படம்பிடிக்கவில்லை. முதிர்கன்னிகளின் உள்ளக் குமுறலைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

முடிவுரை :

பேனாவை எடுத்த எவரும் புதுக்கவிதை எழுதிவிடலாம் என்ற மன போக்கு ஏற்பட்டுள்ளது. கவிதை எழுதுபடுவதால் மட்டும் வாழ்ந்துவிடாது அது வாசிக்கப்படுவதாலும் தான் வாழ்கிறது. வாசிப்பு என்பது காலத்தை கடந்த நன்றாக அமைந்தால் தான் கவிதை காலம் கடந்து நிலைத்து நிற்கும். கவிதையின் பாடுபொருளாகவும் அமையலாம் ஆனால் அப்பாடுபொருளின் உணர்வுநிலை தான் முக்கியம் அப்பொழுது தான் இன்றைய புதுக்கவிதை நாளைய தலைமுறையினருக்கு மரபுகவிதைகளாக பயன்படும் என்பதை மறந்துவிடக் கூடாது. கால வெள்ளத்தை கடந்து நிற்கும் கவிதைகளே சிறந்த கவிதைகள். அதற்கான முயற்சியில் கவிஞர்கள் முழுமையாக தங்களை ஆட்படுத்திக் கொள்ளுதல் அவசியம்.

தாள் 4 - பண்டை இலக்கியமும் உரைநடையும்

பாடத்திட்டம்

I செய்யுள்

1) முல்லைப்பாட்டு
2) ஐங்குறுநூறு – 10 பாடல்கள் (திணைக்கு 2)
3) குறுந்தொகை – 2 பாடல்கள்
4) நற்றிணை – 2 பாடல்கள்
5) அகநானூறு – 2 பாடல்கள்
6) கலித்தொகை – 2 பாடல்கள்
7) புறநானூறு – 5 பாடல்கள்
8) பதிற்றுப்பத்து – 1 பாடல்
9) திருக்குறள் – ஒப்புரவறிதல்
10) நாலடியார் – கல்வி– 5 பாடல்கள்

II உரைநடை

1. பயண இலக்கியம் – சோமலே
2. கண்டேன் கொள்ளிப்பிசாசை – பிலோ இருதயநாத்
3. சிங்கபுரத்தின் சிறப்பு – அவ்வை தி.க. சண்முகம்
4. நியூயார்க் நகரம் – மணியன் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்
5. கோவா – சாவி
6. பண்டை உரையாசிரியர்கள் – டாக்டர் உ.வே. சாமிநாதையர்
7. ஐரோப்பியர் வருகைக் காலத் தென்னிந்தியச் சமூக வாழ்க்கையும் இலக்கியமும்.
8. கல்வி – திரு.வி.க.
9. பெரியாரின் பெண்ணுரிமைப் பணி–நெ.து. சுந்தரவடிவேலு
10. பண்டிதமணி கதிரேசன் செட்டியார் – டாக்டர். அ. சிதம்பரநாதன்
11. குழந்தைகளுக்குக் கதை – டாக்டர். மு.வ.
12. தமிழ்க்கவிதையில் நாட்டுப்புற மரபு – சிற்பி
13. நாட்டுப் புறப் பாடல்கள் – டாக்டர் சரசுவதி வேணுகோபால்
14. ஒப்பிலக்கியம் – தமிழண்ணல்
15. சிற்ப உருவங்களின் அமைப்பு – மயிலை சீனி. வேங்கடசாமி

III இலக்கிய வரலாறு

1. சங்க இலக்கியங்கள்
2. பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்

IV இலக்கணம்

1. நான்கு வகைச் சொற்கள்
2. வேற்றுமை
3. பொருளிலக்கணம்
4. மொழிபெயர்ப்பு

V படைப்பாற்றல்

பொதுக்கட்டுரை எழுதுதல்

இப்பாடங்களை தொகுத்து எழுதியவர்கள் :

1. டாக்டர். இரா. காசிராஜன்
தமிழ்த்துறைத் தலைவர்.

2. டாக்டர். எபிநேசர்
விரிவுரையாளர்,
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,
நாகமலைபுதுக்கோட்டை.

தாள் 4 : பண்டை இலக்கியமும் உரைநடையும்

செய்யுள் தொகுப்பு

1. முல்லைப்பாட்டு

நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல்போல,
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி (5)
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது (10)
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள், கைய
கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர, (15)
இன்னே வருகுவர், தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்; அதனால்
நல்ல, நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனை கவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து
வருதல், தலைவர், வாய்வது; நீ நின் (20)
பருவரல் எவ்வம் களை, மாயோய் என,
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ் சிறந்து
பூப்போல் உண்கண் புலம்பு முத்து உறைப்ப
கான்யாறு தழீஇய அகல் நெடும் புறவில்,
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி, (25)
வேட்டுப்புழை அருப்பம் மாட்டி, காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇ,
படுநீர்ப் புணரியின் பரந்த பாடி
உவலைக் கூரை ஒழுகிய தெருவில்,
கவலை முற்றம் காவல் நின்ற (30)
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்கு நிலைக் கரும்பொடு, கதிர்மிடைந்து யாத்த,

வயல்விளை, இன்குளகு உண்ணாது, நுதல்துடைத்து,
அயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டென,
கவை முட் கருவியின், வட மொழி பயிற்றி,
கல்லா இளைஞர், கவளம் கைப்ப
கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப, நல்போர்
ஓட வல்வில் தூணி நாற்றி
கூடம் குத்திக்கயிறு வாங்கு இருக்கை
பூந்தலைக் குந்தம் குத்தி, கிடுகு நிரைத்து,
வாங்குவில் அரணம் அரணம் ஆக,
வேறுபல் பெரும்படை நாப்பண், வேறு ஓர்,
நெடுங்காழ்க் கண்டம் கோலி, அகம் நேர்பு,
குறுந்தொடி முன்கை கூந்தல் அம் சிறு புறத்து,
இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவு வரிக்கச்சின் பூண்ட, மங்கையர்
நெய் உமிழ்சுரையர் நெடுந்திரிக் கொளீஇ,
கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட,
நெடுநா ஒள்மணி நிழத்திய நடுநாள்,
அதிரல் பூத்த ஆடு கொடிப்பாடஅர்
சிதர்வரல் அசைவளிக்கு அசைவந்தாங்கு,
துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெருமூதாளர் ஏமம்சூழ
பொழுது அளந்து அறியும், பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர், தோன்ற வாழ்த்தி,
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய் நின்
குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப
மத்திகை வளைஇய, மறிந்து வீங்கு செறிவு உடை,
மெய்ப்பைப் புக்க வெருவரும் தோற்றத்து,
வலிபுணர் யாக்கை, வன்கண்யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் நல்இல்,
திருமணி விளக்கம் காட்டி, திண்ஞாண்
எழினி வாங்கிய ஈர்அறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்,
படம்புகு மிலேச்சர் உழையர் ஆக,
மண்டு அமர் நசையொடு கண்படை பெறாஅது
எடுத்து எறி எஃகம் பாய்தலின், புண்கூர்ந்து

பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமிய,
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்தி
சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்; தோல் துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலின், செவிசாய்த்து,
உண்ணாது உயங்கும் மாசிந்தித்தும்;
ஒருகை பள்ளி ஒற்றி, ஒரு கை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்,
நகை தாழ் கண்ணி நல்வலம் திருத்தி,
அரசு இருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை
இன்துயில் வதியுநற் காணால், துயர் உழந்து,
நெஞ்சு ஆற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு,
நீடு நினைந்து, தேற்றியும், ஓடுவளை திருத்தியும்,
மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும்,
ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி, இழைநெகிழ்ந்து,
பாவை விளக்கில் பரூஉச் சுடர் அழல
இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்கு இறைச் சொரிதரும் மாத்திரள் அருவி
இன்பல் இமிழ்இசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலினவென்று, பிறர்
வேண்டு புலம்கவர்ந்த, ஈண்டு பெருந்தானையொடு,
விசயம் வெல்கொடி உயரி, வலன்ஏர்பு,
வயிரும் வளையும் ஆர்ப்ப, அயிர
செறிஇலைக் காயா அஞ்சனம் மலர,
முறி இணர்க்கொன்றை நன்பொன் கால,
கோடல் குவிமுகை அங்கை அவிழ,
தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப,
கானம் நந்திய செந்நிலப் பெருவழி,
வானம் வாய்த்த வாங்கு கதிர் வரகின்,
திரிமருப்பு இரலையொடு மடமான் உகள,
எதிர் செல் வெண்மழை பொழியும் திங்களில்,
முதிர் காய் வள்ளிஅம் காடு பிறக்கு ஓழிய,
துனை பரிதுரக்கும் செலவினர்
வினை விளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

(காவிரிப்பூம்பட்டினத்து பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது)

2 ஐங்குறு நூறு

(அ) (குறிஞ்சித்திணை)

(கபிலர் பாடியது)

1. அன்னாய், வாழி வேண்டு, அன்னை நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய – அவர் நாட்டு
உவலைக் கூவற்கீழ
மாறுண்டு எஞ்சிய கலிழி நீரே.

(தோழிக்குக் கூறியது)

2. குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி;
வளையல்; முளை வாள் எயிற்றள்;
இளையள் ஆயினும், ஆர் அணங்கினளே.

(தோழிக்குத் தலைமகன் கூறியது)

(ஆ) பாலைத்திணை

(ஓதலாந்தையார் பாடியது)

3. விழுத்தொடை மறவர் வில் இடத்தொலைந்தோர்
எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பினர்ப்
பெருங்கையானை இருஞ்சினம் உறைக்கும்
வெஞ்சுரம் அரிய என்னார்,
வந்தனர் – தோழி – நம் காதலோரே

(தலைவன் வரவுணர்ந்த தோழி தலைவிக்குக் கூறியது)

4. நும் மனைச் சிலம்பு கழீஇ அயரினும்,
எம் மனை வதுவை நல்மணம் கழிக எனச்
சொல்லின் எவனோ மற்றே – வெல்வேல்,
மை அற விளங்கிய கழல் அடி,
பொய் வல்காளையை ஈன்ற தாய்க்கே?

(இ) முல்லைத்திணை

(பேயனார் பாடியது)

5. புதல்வற் கவைஇயினன் தந்தை; மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவைஇயினள்;
இனிதுமன்ற அவர் கிடக்கை;
நனி இரும் பரப்பின் இவ் உலகுடன் உறுமே.

(செவிலி நற்றாய்க்கு உரைத்தது)

6 நின்னே போலும் மஞ்ஞை ஆல, நின்
நல்நுதல் நாறும் முல்லை மலர,
நின்னே போல மா மருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென்–
நல்றுதல் அரிவை – காரினும் விரைந்தே.

(தலைமகன் வரவு தலைவிக்கு உரைத்தது).

(ஈ) நெய்தல் திணை

(அம்மூவனார் பாடியது)

7. ஒண்தொடி அரிவை கொண்டனள், நெஞ்சே
வண்டு இமிர் பனித்துறைத்தொண்டி ஆங்கண்
உரவுக் கடல் ஓலித்திரை போல,
இரவினானும் துயில் அறியேனே

(பாங்கற்குத் தலைவன் உரைத்தது)

8. நெய்தல் இருங் கழி நெய்தல் நீக்கி
மீன் உண் குருகினம் கானல் அல்கும்
கடல் அணிந்தன்று, அவர் ஊரே;
கடலினும் பெரிது, எமக்கு அவருடை நட்பே.

(தலைவி வாயில் மறுத்துரைத்தது)

(உ) மருதத்திணை

(ஓரம்போகியார் பாடியது)

9. அம்ம வாழி, தோழி மகிழ்நன்
ஒருநாள் நம் இல் வந்ததற்கு, எழு நாள்
அழுப என்ப, அவன் பெண்டிர்–
தீஉறு மெழுகின் நெகிழ்வனர் விரைந்தே.

(வாயில்கேட்ப தலைவி தோழிக்கு உரைத்தது)

10. மகிழ்நன் மாண்குணம் வண்டு கொண்டனகொல்?
வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டான் கொல்?
அன்னது ஆகலும் அறியாள்,
எம்மொடு புலக்கும், அவன் புதல்வன் தாயே.

(காதற்பரத்தை தலைமகன் கேட்டுமாற்றார் உரைத்தது)

3. குறுந்தொகை

குறிஞ்சித்திணை

1. யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.

2. இடிக்கும் கேளிர் நும் குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்று மன்தில்ல;
ஞாயிறு காயும் வெவ் அறை மருங்கில்
கை இல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று, இந்நோய்; நோன்று கொளற்கு அரிதே

4. நற்றிணை

(1) திணை : முல்லை

துறை : வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

"விரைப்பரி வருந்திய வீங்கு செலல் இளையர்
அரைச் செறி கச்சை யாப்பு அழித்து அசைஇ
வேண்டு அமர் நடையர், மெல்மெல வருக!
தீண்டா வைமுள் தீண்டி நாம் செலற்கு
ஏமதி, வலவ, தேரே! உதுக்காண்–
உருக்குறு நறுநெய் பால் விதிர்த்தன்ன
அரிக்குடல் மிடற்ற அம்நுண் பல்பொறிக்
காமரு தகைய கான வாரணம்
பெயல்நீர் போகிய வியல் நெடும் புறவில்
புலரா ஈர்மணல் மலிரக் கெண்டி,
நாள் இரை கவர மாட்டி, தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே!"

–மருதன் இளநாகனார்.

2. திணை : முல்லை

துறை : வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

"மறத்தற்கு அரிதால்–பாக! பல்நாள்
அறத்தொடு வருந்திய அல்கு தொழில் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க, மாண்வினை
மணிஓலி கேளாள், வாணுதல்; அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே

இல்புக்கு அறியுநராக, மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசுஅறக் கழீஇ
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின், மெய் வருத்துறாஅ
அவிழ் பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்து அயர்நிலையே"

— கீரத்தனார்

5 அகநானூறு

1) முல்லை

(தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது)

முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்புதிரிந்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்பக் (5)
கருவிவானம் கதழுறை சிதறிக்
கார்செய்தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற்புரவி
நரம்பார்த்தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த (10)
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும் பெருங்குன்றத் தமன்ற காந்தட் (15)
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அடிவைநின் மாணலம் படர்ந்தே.

— குறுங்குடி மருதனார்.

2) மருதம்

"அரிபெய் சிலம்பினாம்பலந் தொடலை
அரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத் தோளையை தந்தை
மழைவளந் தருஉ மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமாண் ஒள்ளிழை நீவெய்யோளொடு
வேழ வெண்புணை தமீஇப் பூழியர்

கயநாடியானையின் முகனமர்ந்தாஅங்
கேந்தெழில் ஆகத்துப் பூந்தார் குழைய
நெருநெல் ஆடினை புனலே இன்றுவந்
தாக வனமுலையரும்பிய சுணங்கின்
மாசில் கற்பின் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினைப் பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃதமை குந்தில்ல
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தூம்பு வள்ளை யாய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறிவும்
பல்வேன் மத்திகழா அரன்னவெம்
இளமை சென்று தவத்தொல்லஃதே
இனிமையெவன் செய்வது பொய்ம்மொழி யெமக்கே".

துறை : (பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது)

— பரணர்.

6. கலித்தொகை

(பாலைக்கலி)

1 தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,
அடங்காதார் மிடல் சாய, அமரர் வந்து இரத்தலின்,
மடங்கல் போல், சினைஇ, மாயம் செய் அவுணரைக்
கடந்து அடுமுன்பொடு, முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால், முகம்போல ஒண்கதிர் தெறுதலின்,
சீறு அருங்கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறு பெற்று உதிர்வனபோல், வரைபிளந்து, இயங்குநர்
ஆறுகெட விலங்கிய அழல் அவிர் ஆர் இடை—
மறப்பு அருங்காதல் இவள் ஈண்டு ஒழிய,
இறப்ப துணிந்தனிர், கேண்மின்மற்று — ஐஇய
தொலைவு ஆகி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என
மலை இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ—
நிலைஇய கற்பினாள், நீ நீப்பின் வாழாதாள்
முலை ஆகம்பிரியாமை பொருளாயின் அல்லதை?
இல் என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என
கல் இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ—
தொல் இயல்வழாஅமைத் துணை எனப் புணர்ந்தவள
புல் ஆகம் பிரியாமை பொருளாயின் அல்லதை?
இடன் இன்றி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என
கடன் இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ

வடமீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை?
என இவள்
புன்கண் கொண்டு இனையவும் பொருள்வயின் அகறல்
அன்பு அன்று என்று யான்கூற, அன்புற்று
காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தாங்கியாங்கு, தாழ்பு நின்
தொல்கவின் தொலைதல் அஞ்சி, என்
சொல்வரைத் தங்கினர், காதலோரே.

–தோழி கூற்று.

2) "எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்
உறித்தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஓரா நெஞ்சத்துக்
குறிப்பு ஏவல் செயல்மாலைக் கொளை நடை அந்தணீர்
வெல் இடைச்சொலல் மாலை ஒழுக்கத்தீர்; இவ் இடை,
என் மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம் அறிபுணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ?–பெரும!
காணேம் அல்லேம்; கண்டனம், கடத்திடை;
ஆண் எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்
பல உறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என்செய்யும்?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே,
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை,
நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்?
தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
ஏழ்புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை,
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?
சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
என ஆங்கு
இறந்த கற்பினாட்கு எவ்வம்படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறம் தலைபிரியா ஆறும் மற்று அதுவே,
(செவிலி கூற்றும் முக்கோற்பகவர் மாற்றமும்)

(உடன்போய தலைவி பின் சென்ற செவிலி, இடைச்சுரத்து முக்கோற் பகைவரைக் கண்டு, இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ என வினவியாட்கு அவரைக் கண்டு அஃது அறம் எனவே கருதிப் போந்தேம்; நீரும் அவர் திறத்து எவ்வம்பட வேண்டா என எடுத்துக்காட்டி அவர் தெருட்டியது)

7. புறநானூறு

1. செருப்பு இடைச் சிறுபரல் அன்னன்; கணைக்கால்
அவ்வயிற்று, அகன்ற மார்பின், பைங்கண்,
குச்சின் நிரைத்த குரூஉமயிர் மோவாய்,
செவிஇறந்து தாழ்தரும் கவுளன், வில்லொடு,
யார் கொலோ, அளியன் தானே? தேரின்
ஊர் பெரிது இகந்தன்றும் இலனே; காலை
புல்லார் இனநிரை செல்புறம் நோக்கி,
கையின் சுட்டிப் பையென எண்ணி,
சிலையின் மாற்றியோனே; அவை தாம்
மிகப் பலவாயினும், என் ஆம்–எனைத்தும்
வெண்கோள் தோன்றாக் குழிசியொடு
நாள் உறை மத்து ஓலி கேளாதோனே?

–திணை– வெட்சி
துறை–உண்டாட்டு

2. களிறு கடைஇய தாள்,
கழல் உரீஇய திருந்து அடி
கணைபொருது கவி வண்கையால்,
கண் ஒளிர்வரூஉம் கவின் சாபத்து,
மாமறுத்த மலர் மார்பின்,
தோல் பெயரிய எறுழ்முன்பின்,
எல்லையும் இரவும் எண்ணாய், பகைவர்
ஊர்சுடுவிளக்கத்து அழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை; ஆகலின், நல்ல
இல்ல ஆகுப்வால் – இயல் தேர் வளவ
தண்புனல் பரந்த பூசல்மண் மறுத்து
மீனின் செறுக்கும் யாணர்ப்
பயன் திகழ் வைப்பின் பிறர் அகன் தலை நாடே.

– திணை – வஞ்சி
– துறை – கொற்றவள்ளை ; மழபுல வஞ்சியும் – ஆம்

(சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.)

3. எனைப்பல் யானையும் அம்பொடு துளங்கி
விளைக்கும் வினை இன்றிப்படை ஒழிந்தனவே;
விறற்புகழ் மாண்ட புரவி எல்லாம்
மறத்தகை மைந்தரொடு ஆண்டுப்பட்டனவே;
தேர்தரவந்த சான்றோர் எல்லாம்,
தோல் கண் மறைப்ப, ஒருங்கு மறைந்தனரே;
விசித்து வினைமாண்ட மயிர்க்கண் முரசம்

பொறுக்குநர் இன்மையின், இருந்து விளிந்தனவே;
சாந்து அமை மார்பில் நெடுவேல் பாய்ந்தென,
வேந்தரும் பொருது, களத்து ஒழிந்தனர்; இனியே
என் ஆவதுகொல் தானே – கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கி, தண்புனல் பாயும்,
யாணர் அறாஅ வைப்பின்
காமர் கிடக்கை அவர் அகன் தலை நாடே?

திணை – தும்பை

துறை – தொகை நிலை

(பரணர் போர்க்களத்துப் பொருது வீழ்ந்தாரைப் பாடியது.)

4. புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்
நிலவரை இறந்த குண்டு கண் அகழி,
வான்தோய்வு அன்ன புரிசை, விசும்பின்
மீன் பூத்தன்ன உருவஞாயில்,
கதிர் நுழைகல்லா மரம்பயில் கடிமிளை,
அருங்குறும்பு உடுத்த கானப்பேர் எயில்
கருங்கைக் கொல்லன் செந்தீமாட்டிய
இரும்பு உண் நீரினும், மீட்டற்கு அரிது என,
வேங்கை மார்பன் இரங்க, வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பை புலவர்
பாடுதுறை முற்றிய, கொற்ற வேந்தே
இகழுநர் இசையொடு மாய,
புகழொடு விளங்கிப்பூக்க நின்வேலே

– திணை – வாகை

– துறை – ரசவாகை

(ஐயூர் மூலங்கிழார் கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதியைப் பாடியது)

5. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே;
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே.

திணை : வாகை

துறை : வல்லாண்முல்லை.

(பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாட்டு)

8. பதிற்றுப்பத்து

(2-ம் பத்து)

– (குமட்டூர்க் கண்ணனார்)

வரை மருள் புணரிவான் பிசிர் உடைய,
வளி பாய்ந்து அட்ட துளங்கு இருங்கமஞ் சூல்
நளி இரும் பரப்பின் மாக்கடல் முன்னி,
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
தூருடை முழுமுதல் தடிந்த பேர் இசை,
கடுஞ்சினவிறல் வேள்களிறு ஊர்ந்தாங்கு–
செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப,
அருநிறம் திறந்த புண்உமிழ் குருதியின்,
மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து,
மனாலக் கலவைபோல, அரண்கொன்று
முரண்மிகு சிறப்பின் உயர்ந்த ஊக்கலை;
பலர்மொசிந்து ஓம்பிய திரள் பூங்கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏ எய்,
வென்று எறி முழங்கு பணைசெய்த வெல்போர்,
நார் அரி நறவின், ஆர மார்பின்,
போர் அடுதானைச் சேரலாத –
மார்பு மலி பைந்தார் ஓடையொடு விளங்கும்
வலன் உயர் மருப்பின் பழிதீர்யானைப்
பொலன் அணிஎருத்தமேல் கொண்டு பொலிந்த நின்
பலர்புகழ் செல்வம் இனிது கண்டிகுமே–
கவிர்தை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்,
ஆரியர் துவன்றிய, பேர் இசை இமயம்
தென் அம்குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம் தபக் கடந்தே.

துறை : செந்துறைப் பாடாண்பாட்டு
வண்ணம் : ஒழுகுவண்ணம்
தூக்கு : செந்தூக்கு
பெயர் : புண் உமிழ்குருதி

9. திருக்குறள்

ஒப்புரவறிதல்

1 கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

2. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

3. புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

4. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

7. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

8. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

9. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயநீர
செய்யா தகைகலா வாறு.

10. ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

10. நாலடியார்

கல்வி

1 குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

2. இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

3. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

4. வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

5. கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின் பிணிபல; – தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

1. முல்லைப்பாட்டு

சங்க நூல்களைப் பொதுவாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்கணக்கு என்று பாகுபடுத்திக் கூறுவர். தமிழ்விடுதூதின் ஆசிரியர்,

– மூத்தோர்கள்

பாடியருள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்
கேடில் பதினெட்டுக் கீழக்கணக்கும்

என்று குறிப்பிடுவர். பத்துப்பாட்டு, பத்துப் பெரிய அகவற்பாடல்களைக் கொண்ட தொகுதியாகும். இவற்றுள் முல்லைப்பாட்டு 103 அடிகளையுடையது. பிற அனைத்தும் அளவில் பெரியவை எனலாம். ஏட்டுப் பிரதிகளில் பின்வரும் பாடலொன்று அமைந்துள்ளது.

முருகு பொருநாறு பாணிஇரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி–மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை, என்னும் மலைபடுகடாம் ஆகிய ஐந்தும் ஆற்றுப்படைகள். முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பன திணைவழிப் பெயர் பெற்றவை. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை என்னும் நான்கும் அகப்பொருள் உணர்த்தும். குறிஞ்சிப்பாட்டு முழுக்க முழுக்க அகப்பொருட் சுவை ததும்பி நிற்கும். பாலை, முல்லை, வாடை மூன்றும் அகமும், புறமும் விரிவடைந்து நிற்கும். அவற்றுட் பாலையில் புறச்செய்தி மிகுதி. பொதுவாக முல்லைப்பாக்கள் அமைந்துள்ள பாங்கினை அறிஞர் மு.வ.அவர்கள் அழகாக ஆராய்ந்துள்ளார். பத்துப்பாட்டு என்னும் தொகுப்பிலுள்ள முல்லைப்பாட்டு என்னும் பகுதியை மறைமலையடிகளும், தெ.பொ.மீ. அவர்களும் விரிவாக விளக்கியுள்ளார்கள். அன்பின் கோட்பாட்டை விளக்கும் பகுதி என்பார் மறைமலையடிகள். அகிம்சை என்னும் கொள்கையை விளக்கும் பாடல் என்பார் தெ.பொ.மீ.

'பூப்போல் உண்கண் புலம்பு முத்துரைப்ப' எனவரும் 23–வது அடிவரை அகப்பொருள் செய்தியும், இன்துயில் வதியுநற்காணா (80–ஆவது அடி) என்பதுவரை போர்நிலைச் செய்தியும் அதன்பின்னர் நெடுந்தேர் பூண்ட குதிரையின் ஓசை தலைவியின் அஞ்செவிநிறைய ஆலின என்னும் செய்தியும் பாடற் பொருளை முழுமை யாக்கும். அதனால் கற்பென்னும் முல்லை மணக்கும் காட்சி கண்முன் முழுமை பெறுகிறது. இற்பொறை என்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும் கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் காண்கிறோம். களம் நோக்கிச் சென்ற கணவனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பெண்ணின் தவக்கோலம் சிறப்படைகிறது. தனிமைத் துயரால் தவித்தாலும் நெஞ்சாற்றுப் படுத்த நிறை, பெண் மகளைப் பெருமைக்குரியவளாக மாற்றிவிடுகிறது. பள்ளியறையும், பாசறையும் இருவேறு அன்புலத்தை இதய தாபத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவளோ நீடு நினைந்து, நெஞ்சம் தேற்றி, ஓடுவளை திறுத்தி, மையல் கொண்டு ஓய்யென உயிர்த்து, அம்பு தைத்த மயில் போல் தடுக்கி, இழை நெகிழ்ந்து, அருவியிசையில் மனம்பதித்து மாடத்தில் கிடந்தாள். அவளோ கண்படை பெறாது வேலால் புண்கூர்ந்த பிடிக்கணம் மறந்த வேழங்களையும் செஞ்சேற்றுக்கடன் முடித்த வீரர்களையும், அம்பால் அழிந்து செவி சாய்த்து உண்ணாது உயங்கும் குதிரைகளையும் சிந்தித்துப் பாசறையில் கிடக்கிறாள்.

4th Proof

பொல்லாப் பிரிவின் கொடுமை அவளை வாட்டுகிறது. போர்க் காலத்தின் கொடுமை அவனை வாட்டுகிறது. இருதுயரும் இடம்மாறி இருவர் நெஞ்சையும் தொடுவதுண்டு. இருவேறு இயக்கங்களின் தாக்குதல் இரண்டு இதயங்களை வெவ்வேறு அளவில் பாதிக்கிறது. அரசு இருந்து பணிக்கும் முரசு முழங்கு பாசறையில் நள்ளிரவிலும் ஒரு கையள்ளி ஒற்றி, ஒரு கை முடியோடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து விரலால் நகைதாழ் கண்ணி நல்வலம் தியந்தியவாறு இன்துயில் கொள்கிறான் அவன். அவன் துயிலின்றிக் கிடக்கிறான். நினைவுகள் தூக்கத்தைக் கெடுத்தாலும், போராடிய சோர்வு இமைகளை இறுகப் பற்றியதால் இன்துயில் ஆயிற்று.

போர் முடிந்ததா என்ற செய்தி புலப்படவில்லை. அதிகாலையில் குதிரையின் காலடி ஓசை அவன் காதில் விழுந்தது. மன்னனே வருகிறானா? மாலையில் புறப்பட்ட மன்னனின் தூதுவனே வருகிறானா? நப்பூதனார் மிகவும் திறமையாக முல்லைப்பாட்டை அமைத்து விடுகிறார். ஆவல் பெருகும் விதத்தில் கலைப்படைப்பு அமைந்துவிட்டது.

முல்லைப்பாட்டு எப்போது தோன்றியது என்று வரையறுக்க இயலவில்லை. அகப்பாட்டில் இன்னார் இவரென்று சுட்டியுரைக்கும் மரபு கிடையாது. இருந்தாலும் போர்க்களத்தின் கொடுமையைப் பற்றி மன்னன் நினைத்து வருந்துகிறான். இது கலிங்கப் போரில் அசோகன் வருந்தியது போல இருக்கிறது. இட்லரின் நண்பனாகிய ரோமலை எதிர்த்து வெலிங்டன் போரிட்டு வென்றபோதும் இவ்வாறே வருந்தினான். பலிகொடுத்த உயிர்களை நினைக்கும்போது வெற்றிப் பெருமிதம் ஏற்படவில்லை. மனம், அமைதி இழக்கிறது. அமைதியை எதிர்நோக்கும் முல்லை மனம், நல்லோர்க்கெல்லாம் இருப்பது இயல்பன்றோ? அகிம்சை நெறி அசோகன காலம் முதற்கொண்டு தமிழகத்திலும் பரவிற்று. அதன் தாக்கம் இங்கும் ஏற்பட்டிருக்கலாம். மனம் வெறுத்த மன்னன் போரை நிறுத்திவிட்டுப் புறப்பட்டிருக்கலாம். ஆனால் கோழை என்று கருத முடியாது. போரை நிறுத்திய அசோகனை நாம் கோழை என்று எண்ணுவதில்லை. அதைப் போலவே முல்லைப்பாட்டின் வேந்தனும் போரை நிறுத்தி விட்டானோ என்று தெ.பொ.மீ. கருதுகிறார். எதிர்ப்புலவேந்தனும் இவ்வாறு போரை நிறுத்தியிருக்கலாமே. கலிங்கபோரில் கலந்துகொண்ட தென்பகுதி அணியைச் சார்ந்த மன்னனே இங்குக் குறிக்கப்பெறுகிறான் என்று தறிப்பிடலாம். ஆனால் அவையெல்லாம் ஆய்வுக்குட்பட்டவை.

குதிரைகளையும் யானைகளையும் இறந்துபோன இதயங்களையும் எண்ணி வருந்தும் அன்பு, மனிதகுலத்தின் இயற்கைப் பண்பாகும். காலங்கள் தோறும், பல்வேறு நிகழ்ச்சிகள் தோன்றினும் அன்பின் நீருற்று வறண்டு போகவில்லை என்பதை இவை எடுத்துரைக்கின்றன. அத்தொடர்மாலையில் இந்த முல்லையும் ஒன்று என முடிக்கலாம்.

தெ.பொ.மீ. முல்லைப்பாட்டை மூன்று பகுதிகளாகப் பிரிப்பார்.

1. நனந்தலை உலகம் முதற்கொண்டு காட்டவும், காட்டவும் காணலா (அடி 22) என்ற பகுதிவரை.

2. கலுறந்து பூப்போல உண்கண் புலம்பு முத்துறைப்ப எனும் பகுதி முதல் இன்துயில் வதியுறற் காணாள் (அடி 80) எனும் பகுதிவரை.

3. எஞ்சிய பகுதிகள் (81–103)

இப்பாட்டைப் பின்வருமாறும் பிரித்துக் காட்டலாம் :

1. நனந்தலை உலகம் முதற்கொண்டு, பூப்போல உண்கண் புலம்பு முத்து உறைப்ப என்பது வரை (1–23)

4th Proof

2. கான்யாறு தழீஇய என்பது முதல் முரசுமுழங்கு பாசறைவரை (21–79)

3. இன்துயில் வதியுநற் காணாள் முதற்கொண்டு அஞ்செவி நிறைய ஆலின் என்பது வரை (80–89)

4. வென்ற பிறர் முதற்கொண்டு இறுதிவரை (89–103), 103 அடிகளும் 23+57+23 எனப் பிரிவுபடுமாயின் எண்ணமைப்பு இயல் [Structural numerology] அடிப்படையில் வினக்கும் புது ஆய்வாளர்களுக்கு இம்முல்லை இனிமை தரும் எனலாம்.

பாட்டின் கருத்து :

மழைக்கால மாலைப்பொழுது :

கார்காலம் தொடங்கிவிட்டது. கடலநீரை முகந்து கொண்டு, மலையைத் தழுவிக்கிடக்கின்றன மேகங்கள். அவை விரைந்து எழும்போதே பெருமழை பொழிகிறது. அக்காட்சி கரியநிறம் படைத்த திருமால் பேருருக் கொண்டு நிமிர்வது போலவும், மாவலி தாரைவார்த்துக் கொடுத்த நீர் கண்ணபெருமானின் கைகளின் வழியே ஒழுகுவது போலவும் தோன்றுகிறது. அம்மாலை நேரத்தில் எல்லா திசைகளும் காரிருளால் சூழப்பட்டுக் கிடக்கின்றன. ஐம்பொறியும் செயலற்று ஒடுங்குமாறு குளிர்மிகுந்து வாட்டுகிறது. சில் என்ற குளிர்காற்றும் புல் என்ற தோற்றமும் எங்கும் நிறைந்திருக்கின்றன. உண்மையில் அவ்வேளை புன்மாலைப் பொழுதே, இல்லையெனில் கணவனைப் பிரிந்திருக்கும் பெண் மனத்தை அலைக்கழிக்க முற்படுமோ? அவளைத் தேற்றப் பெருமுது பெண்டிர் என்ன பாடுபடுகின்றனர்? எவ்வளவு முயற்சிகள் எடுக்கின்றனர்.

தலைவியின் ஆற்றாமை :

அவர்கள் ஊர்ப்பக்கத்தே அமைந்த கோயிலுக்கு விரைந்தனர். நிறைநாழி நெல்லும் அன்றலர்ந்த முல்லைமலரும் முன்வைத்து, பூச்சொரிந்து நற்சொல் கேட்கத் தொழுது நின்றனர். அப்போது ஆயச்சிறு மகள் ஒருத்தி கூறிய சொற்கள் அவர்களின் செவியில் விழுந்தன. அச்சிறு பெண்ணோ மழையாலும் குளிராலும் வருந்தித், தன்கைகளால் தோளை இறுக அணைத்தவாறு நடுங்கிக் கொண்டிருந்தாள். சின்னஞ்சிறு கயிற்றால் கட்டப்பட்ட பசுவின் இளங்கன்று வாடுவதுண்டு; 'இன்னே வருகுவர் நின்தாயர்' என்று அன்போடு உரைக்கின்றாள். கோவலர் கையில் கோலேந்தியவாறு ஆநிரையை ஓட்டிக் கொண்டு வருவர். தாயைக் கண்ட பசுங்கன்று துயர்நீங்கி மகிழும். இடைப்பெண் இவ்வாறு கூறியது கேட்டு நற்செயல் கேட்டதாக மகிழ்ந்தனர். தெவ்வர் முனைகவர்ந்து நிறைப் பொருளோடு உன் கணவர் வருவது உண்மை. மாயோய்! நீ துயர் ஆற்றாது அழுதாய். பூப்போலும் கண்களில் கண்ணீர் முத்து முத்தாய் அரும்பின. அவள் நெஞ்சம் என்ன நினைத்ததோ? யாரை நினைத்ததோ? அவள் மனத்திரையில் ஒரு பாடி வீடு: ஒரு பாசறை அங்கு இருப்பவன்?

பாடி வீட்டில் பல பாசறைக் காட்சி :

காட்டாறு தழுவிக் கிடக்கும் முல்லைவனத்தில் கடல்போல் பரந்து கிடக்கும் பாடிவீடு. பிடவஞ்செடிகளையும் பசிய நாறுகளையும் வேடுவர் அரண்களையும் அழித்து முள்ளால் வேலி கட்டியுள்ளனர். கூரை வேய்ந்த இருப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ள தெருக்கள் பல தோன்றியுள்ளன. அத்தெருக்கள் ஒன்று கூடும் சந்திப்பில் சிறுகண் யானைகள் காவல் நிற்கின்றன. கரும்புடன் கட்டிய கதிர்களையும், அதிமதுரத் தழைகளையும் உண்ணாமல் அவற்றைத் தும்பிக்கையில் ஏந்தியவாறு கொம்பின்மீது தொங்கவிட்டுக் கொண்டு யானைகள் நிற்கின்றன. முட்கருவியால் அவற்றை அச்சுறுத்தியும், வடமொழி கூறியும், கற்றறிவில்லா யானைப் பாகர் அவற்றிற்குக் கவளம் ஊட்டுகின்றனர் அங்கே.

4th Proof

தலைவனுக்கென்றால் தனியொரு பாசறை :

நற்போரில் புறங்கொடா வில்லையூன்றி அம்பறாத் தூணிகளைத் தொங்கவிட்டுள்ளனர். அக்காட்சி, காவிக்கல்லில் தேய்ந்தெடுத்த ஆடையை அந்தணர்தம் முக்கோலில் தொங்கவிட்டது போல அமைந்துள்ளது. பின் அவ்வில்களையெல்லாம் கயிற்றால் தொகுத்துக் கட்டி அமைந்த இருக்கையில் நீண்ட குந்தங்கோல்களை ஊன்றி கூடாரம் அமைத்து வில்லரணமே சுற்றுக்காவலாய் விளங்க அவ்விதம் அமைத்த பல்வேறு பெரும்படைகளின் நடுவே தனியாக வேறோர் இருக்கை அரசனுக்கு அமைந்துள்ளது.

விளக்கேற்றும் மங்கையர் :

அங்கு நீண்ட கழிக்கோலில் திரைச்சீலையைக் கட்டியுள்ளனர். அதனமாகக் குறுந்தொடி மகளிர்தம் கூந்தல் புறத்துப் பொருந்தத் திகழ்ந்த முன்கையில் இரவைப் பகலாக்கும் வீரவாள் ஏந்தி நெய்விட்டும் நெடுந்திரியிட்டுக் கைவிளக்கு அணையும் தோறும் கொளுத்தியும் பணிபுரிகின்றனர்.

காவல் நிற்கும் மாவீரர் :

நெடுநா படைத்த ஒண்மணியின் ஓசை ஓடுங்கிய நடுயாமத்தே ஓங்கும் நடைப் பெருமுதானர் காவல் புரிகின்றனர். அவர்கள் ஆடியசைந்து சூழ்ந்து திரிவது மோசி மல்லிகை பூத்துக்கிடக்கும்சிறு தூறுகள், அசைந்து வரும் காற்றிற்கேற்ப அசைவது போல தோன்றுகின்றது.

நாழிகைக் கணக்கர் :

இருள் செறிந்த இரவிலும் பொழுதினை நன்கறிந்து பொய்படாதவாறு கூறும் நாழிகைக் கணக்கர் மன்னனைக் கையால் தொழுதபடியே கண்டு பாராட்டி, கடல் சூழ்ந்த உலகை வெல்லக் கருதியவனே, குறுநீர்க் கன்னலில் சென்றுபோன நாழிகை இவ்வளவு என்று எடுத்துரைக்கின்றனர்.

யவனவீரர் :

அச்சமூட்டும் தோற்றமும், வலிமிக்க யாக்கையும், தறுகண்ணும் உடையவர்கள் யவனர்கள். அவர்கள் உடைந்த குதிரைச் சவுக்கு வளைந்து கிடப்பதோடு மடங்கில் புடைத்துத் தோன்றும் ஆடையை நெருங்கக் கட்டியுள்ளனர். அந்த உடையை மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை என்றனர். புலிச் சங்கிலியால் புனைந்த நல்ல இல்லில் மணிவிளக்கேற்றித் திரையிட்டு அமைத்த ஈரறைப் பள்ளியில் மெய்ப்பாட்டாலன்றி, நாவால் மொழி பேசாத இவ்யவனர்கள் அரசரின் அருகிருக்கின்றனர்.

புண்பட்டோரை நினைத்துப் புலம்பல் :

நெருங்கிய பேராசையில் கண் உறக்கம் பெறாமல் எடுத்தெறிந்த வேலால் புண்பட்டுப் பிடிக்கணம் மறந்து நிற்கும் யானைகளை நினைந்தும் தும்பிக்கையானது அடியுண்ட பாம்புபோல அறுபட்டுத் துடிக்க, தனது வஞ்சி மாலைக்கு வெற்றிதேடி, செஞ்சோற்றுக் கடனிறுத்து மடிந்துபோன மாவீரர்களை நினைத்தும், காவலாய் அணிந்த தோற்பரிசைத் துளைத்துச் சென்று வருந்துகின்ற காரணத்தால் செவிசாய்த்துப் புல் உண்ணாமல் வருந்தும் குதிரைகளை நினைந்தும் அரசன் மனம் வருந்துகிறது.

முடிவில் கண்ணையர்ந்தான் காவலன் :

ஒரு கையைப் படுக்கையின்மேல் வைத்துக் கையில் அணிந்த கடகம் மணிமுடியுடன் பொருந்துமாறு ஒரு கையால் தலையைத் தாங்கியும், இரவு முழுதும் நெடுநேரம் சிந்தித்தும்,

பகைவரைச் சாடும படைகலம ஏந்திய கைவிரலால தனது வளுச்i மாலையைச் சரி செய்தும் படுத்திருந்த மன்னன் பகைவர் நடுங்க முரசுகள் முழங்கும் பாசறையில் மெல்லக் கண்துயில்கின்றான்.

தலைவியின் நிலை :

அரசன் இங்கு இவ்வாறிருக்கத் தலைவியோ அவன் வருகையைக் காணாதவளாய்த் துயருற்று, தவித்து, அன்பால் தன்நெஞ்சை அனுப்பி மனநிறை கெடுமோ எனும் தனிமையில் தன்னைத் தேற்றினாள். கழன்றோடும் வளையல்களைத் திருத்தினாள். மீண்டும் மயங்கிப் பின்னர் பெருமூச்செறிந்தாள். அம்பு தைத்த மயில்போல நடுங்கி, அணிகலன்கள் நெகிழப் பாவை விளக்கில் சுடர்நின்று எரிய உயர்ந்த எழுநிலை ஓசையைக் கேட்டவாறே படுத்துக்கிடந்தாள்.

நெஞ்சம் மகிழச் செவியில் கேட்ட தேரில் பூட்டிய குதிரையின் ஓசை :

அவ்வாறு படுத்திருந்த அவளது செவி நிரம்பும்படி இன்னுமொரு இன்ப ஒலி கேட்டதே, அது என்ன ஆரவாரம்? மகிழ்ச்சியூட்டும் அது எதுவாக இருக்க முடியும்? போராடி வென்று பிறரது நிலம் கவர்ந்து பெருஞ்சேனையுடன் வெற்றிக்கொடி உயர்த்தி, வெற்றிக்கேற்ப, கொம்பும் சங்கும் முழங்க வருகின்ற ஓசையா? காயம்பூ அஞ்சனம் போல மலரக் கொன்றைமலர் பொன் சொரிய வெண்காந்தள் கைவிரிக்க, தோன்றிப் பூக்கள் குருதியின் நிறம் காட்ட, காடு செழித்துக் காட்டும் முல்லை நிலத்தின் பெருவழியில் வானம் பொழிய, வரகின் கதிர்முற்றி வளைந்திருக்கக், கலைமானும் மடமானும் துள்ளி விளையாடும். அங்கு வெண்மலைபோல் சிந்தும் நிலவின் ஒளியில் முதிர்ந்த காய்கள் நிறைந்த வள்ளியங்காடு பின்னாகும்படி குதிரையை மேலும் தூண்டிச் செலுத்தும் வீரரின் நெடுந்தேரில் பூட்டிய குதிரைகளின் குளம்படி ஓசையே செவியில் கேட்டது.

பொருள்நலம்

நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை.

பாட்டின் நிகழ்ச்சியோ முல்லைநிலம் பற்றியது. எனவே அந்நிலத்திற்குரிய காட்சிகளையெல்லாம் கண்முன் காட்ட முற்படுகிறார். உலக வாழ்வையே பெரிதும் கருதி நிற்கின்ற புலவர் உள்ளம் பாட்டு எழுதும்போது தனது தலை உலகம் என்று கவிதை கருக்கொள்ள ஆரம்பிக்கிறது.

எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும் குளிர்ந்த கடல்நீரைப் பருகி வலமாக உயர்ந்து கொடுஞ்செலவு எழிலி (விரைந்து செல்லும் மேகம்) மலையுச்சியில் ஏறுகிறது. அகன்ற இடத்தையுடைய உலகை வளைத்துச் சக்கரமும் வலம்புரிச்சங்கும் பொறித்ததும் இலக்குமி தங்கியிருப்பதுமான தடக்கைகளையுடைய திருமால்; மாவலி தாரை வார்க்கும் போது அந்நீர் சிதற, விசுவரூபம் எடுத்து வளர்ந்ததுபோல மேகத்தின் காட்சி அமைகிறது: அவ்எழிலி பெருமழை பொழிந்தபின் மாலைப்பொழுது ஒளிமழுங்கித் தோன்றுகிறது.

அருங்கடி முதூர் மருங்கில் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப.

4th Proof

அந்நேரம் வீட்டிலுள்ள வயது முதிர்ந்த பெண்கள், ஊர்ப்புறத்தே அமைந்த கோவிலுக்குச் சென்று, யாழிசை போல் இனத்தோடு வண்டுகள் ஆர்ப்பரிக்க நெல்லை நிறைத்து, நறுமண முல்லையின முகை அவிழும் பூக்களைத் தூவித் தெய்வத்தைக் கைதொழுது நற்சொல் கேட்டு நின்றனர்.

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள், கைய
கொடுங்கோற் கோவலற் பின்நின்று உயர்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம். அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனை கவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது நீதின்
பருவரல் எவ்வம் களை மாயோய்! எனக்
காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போல் உண்கண் புலம்பு முத்துறைப்ப'

பசுவின் இளங்கன்றினை ஒரு சிறு கயிற்றால் கட்டியிருக்கிறார்கள். தாயை எதிர்நோக்கி வருந்தும் அதன் உறுதுயர்கண்டு ஆய்மகள் ஆறுதல் கூறுகிறாள். அவளும் குளிரால் நடுங்குகிறாள். கைகளை நடுங்கும் தோள்மீது வைத்திருக்கிறாள். கையில் கம்பேந்திய கோவலர்கள் பின்நின்று செலுத்த இப்போது நின்தாயர் வருவர் என்று சொன்னாள். அச்சொல் பெருமுது பெண்டிர்க்கு நறசொல் போல அமைந்தது. நல்லோர் செய்தி வரும் என்று மகிழ்ந்தனர். போர் முனையில் கவர்ந்து கொண்ட பொருளோடும் பகைவர் செலுத்திய திறைப்பொருளோடும் வினைமுடித்துத் தலைவர் வருவது உண்மை. அதனால் மாயோய்! நீ நின் துன்பத்தைக் களைந்தெறிக என்று இடைவிடாது தேற்றினர். இருப்பினும், கலுழ்ச்சி மிக்குப் பூப்போலும் கண்கள் தனிமைத் துயரால் முத்துக்களைச் சிந்தின.

கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டி, காட்ட
இடுமுள் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியின் பரந்த பாடி

காட்டாறு தழுவி செல்லும் அகல்நெடும் முல்லைக் காட்டில், நெடுந்தூர மணற்பரப்பும் பிடவஞ்செடிகள் நெருங்கித் தழைத்துக் கிடக்கும் மைப்புதர் அனைத்தையும் வெட்டித் திருத்தியும், வேடர்கள் அமைத்த அரணை அழித்தும் முள்வேலி ஒன்றை உருவாக்கியும் வளைத்துக் கட்டிய வேலியின் நடுவே கடல்போல் விரிந்த பாடிவீடு காணப்படுகிறது.

உவலை கூரை ஒழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடந்து யாத்த
வயல்விளை இன்குளகு உண்ணாது நுதல்துடைத்து
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப

ஓலைக் கூரைகள் ஒழுங்காக விளங்கும் தெருக்கள், அவற்றின் நடுவே நாற்சந்தி கூடும் முற்றத்தில் காவலாக நின்ற யானை மதம் பொழியும் கன்னமும் சிறுகண்ணும் புடைததது. அது கரும்பொடுமிடைத்த நெற்கதிர்களையும் அதிமதுரத் தழைகளையும் உண்ணாமல், அவற்றால் நெற்றியைத் துடைத்துக் கொண்டும் மருப்பின் மேல் தொங்கவிட்ட தும்பிக்கையில் தாங்கிக் கொண்டும் நிற்கிறது. கல்லா யானைப்பாகர் அங்குசத்தால் அச்சுறுத்தியும் வடசொல்லால் அதட்டியும் சோற்றுக் கவளத்தை ஊட்டுகின்றனர்.

கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப, நல்லோர்
ஓடா வல்லில் தூணி நாற்றி
கூடம் குத்திக் கயிறுவாங்கு இருக்கை
பூத்தலைக் குந்தம் குத்திக் கிடுகு நிறைத்து
வாங்குவில் அரணம் அரணம் ஆக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி அகம்நேர்பு.

காவிக் கல்லில் ஆடையைத் தேய்த்து உடுத்த பார்ப்பானின் முக்கோல், ஆடை தொங்குவதற்கேற்ற அசைநிலையாக விளங்குவதுண்டு. அவ்வசைநிலை போல் போரில் புறங்கொடா வலிய வில்லில் துணியைத் தொங்க விட்டு கூடாரம் அமைக்க அவற்றை ஊன்றிக் கயிற்றால் வளைத்துக் கட்டிய இருக்கையில் குந்தக் கோல்களையும் நட்ட, அவற்றோடு கிடுகுகளை நிரைத்து வில்லால் அரணம் அமைத்துள்ளனர். அந்த வில் அரணே காவலிடமாக விளங்கப் பல்வேறு பெரும்படையின் நடுவே வேறோர் உள்வீடு ஒன்றை அரசனுக்காக உருவாக்கியுள்ளனர்.

குறுந்தொடி முன்கைக் கூந்தல்அம் சிறுபுறத்து
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்
நெய்உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇ
கைஅமை விளக்கம் நந்ததொறும் மாட்ட,

அதனுள், வளை அணிந்த கையும், முதுகின்புறம், புரளும் கூந்தலும் விரவுவரிக் கச்சும் கொண்ட மங்கையர் இரவைப் பகலாக்கும் ஒளி மிக்க வாளை ஏந்தியவாறு பாவை விளக்கில் நெய் ஊற்றியும் திரி அமைத்தும், விளக்குகள் கெடுந்தோறும் தூண்டிக் கொண்டும் இருக்கின்றனர்.

நெடுநா ஒள்ளணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக்கு அசைவந் தாங்க
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெருமூ தாளர் ஏமம் சூடி

நெடுநா மணியின் ஓசை அடங்கிய நள்ளிரவு மல்லிகை பூத்த சிறு தூறுகள் அசையும் காற்றிற் த ஏற்ப அசைவது போல் ஆடை உடுத்த மயக்க நடை கொண்ட மெய்க்காப்பாளர் காவலாகச் சுற்றித் திரிகின்றனர்.

பொழுதளத்து அறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர், தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெல்இய செல்வோய்!நின்
குறுநீர்க் கன்னல் இணைத்து என்று இசைப்ப

பொழுதை அளந்துரைக்கும் வேலையாட்கள் தொழுது நிற்கும் கையோடு அரசன் முன் தோன்றி வாழ்த்தினர். வையகம் முழுவதையும் வெல்ல வந்தவனே, நினது குறுநீர்க் கன்னல் [hour glass] காட்டும் நேரம் இவ்வளவு ஆயிற்று என்று கூறினர்.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை, வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் நல்இல்
திருமணி விளக்கம் காட்டி, திண்ஞான்
எழினி வாங்கிய ஈர்அறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
வடம்புகு மிலேச்சர் உழையர் ஆக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது

குதிரைச் சவுக்கு வளைந்து கிடக்கும் செறிந்த உடையோடு சட்டை அணிந்த அச்சமூட்டும் தோற்றம் கொண்ட, வலிமைமிக்க உடல் படைத்த வன்கண் யவனர்கள், காவல் புரிகின்றனர். புலிச்சங்கிலியால் பிணைத்த அழகிய உள்வீட்டில் விளக்கெரிய, திரைச்சீலையால் இரண்டு அறைகளை ஏற்படுத்திய பள்ளியறையில் மேற்கூறிய மிலேச்சர்கள் அருகே விளங்கப் பேராசையால் கண் உறங்காது இருக்கிறான் அரசன்.

எடுத்தெறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம்; வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்
சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்; தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து
உண்ணாது உயங்கும் மாசிந் தித்தும்
ஒருகை பள்ளி ஏற்றி ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசிருந்து பணிக்கும் முரசுமுழங்கு பாசறை

பகைவர் வீசிய வேலால் புண்கூர்ந்து பெட்டையானைகளை மறந்து நிற்கும் களிறுகள். களிற்றின் பருத்த தும்பிக்கை பாம்பு துடிப்பது போல் அற்றுவிழ, வஞ்சி மாலைக்கு வெற்றியளித்துச் செஞ்சோற்றுக் கடனை நிறைவேற்றி மடிந்த வீரர்கள் தோற்பரிசையினை அறுத்துக் கொண்டு அம்புகள் வந்து அழுத்த, செவிசாய்த்து உண்ணாமல் வருந்தும் குதிரைகள், எல்லாக் காட்சிகளும் மனத்திரையில் வருகின்றன. அனைத்தையும் சிந்தித்தவாறு ஒருகையைப் படுக்கையில் ஊன்றியும், ஒரு கையைத் தலைக்கு வைத்தும் நெடுநேரம் யோசனையில் ஆழ்ந்தான்.

பகைவரைக் குறிவைத்து விற்படையேந்தும் விரல் இப்போது வாகைமாலையைச் சரிசெய்து கொள்கிறது. பகையரசர் நடுங்கும் முரசு முழங்கு பாசறையில் மெல்ல இன்துயில் கொள்கிறான்.

இன்துயில் வதியுநற் காணாள், துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதடி புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும், ஓய்யென உயிர்த்தும்
ஏஉறு மஞ்ஞையின் நடுங்கி இழைநெகிழ்ந்து
பாவை விளக்கில் பரூஉச் அடர்அழல
இடம்இறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்குஇறைச் சொரிதரும் மாந்திரள் அருவி
இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்

பாசறையில் இன்துயில் கொள்ளும் தலைவனைக் காணாளாகித் துயருற்று நெஞ்சை ஆற்றுப்படுத்திய நிறையினை அழித்துவரும் தனிமையில் அவனை நீடு நினைந்து தன்னைத் தேறறியும், ஓடும் வளையைத் திருத்தியும், அறிவு மயங்கியும், பெருமூச்செறிந்தும் அம்பு தைத்த மயில்போல் நடுங்கியும், இழைநெகிழ்ந்தும் கிடக்கிறாள். பாவை விளக்கிலுள்ள பெரிய சுடர் நின்று எரிகிறது. இடமகன்ற உயர்ந்த எழுநிலை மாடத்தின் வளைந்த இறப்பின் நின்றும் பொழிகின்ற மழைநீர் அருவியின் இன்னோசை காதில்விழ அதைக் கேட்டவாறு கிடக்கிறாள்.

அஞ்செவி நிறைய ஆலின வென்றுபிறர்
வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி உயரி, வலனேர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப அலர
செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் கால
கோடல் குவிமுகை அங்கை அவிழ,
தோடார் தோன்றி குருதி பூப்ப,
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்ந்த வாங்குகதிர் வரகின்
திரிமருப்பு இரவையோடு மடமான் உகள
எதிர்சொல் வெண்மழை பொழியும் திங்களில்
முதிர்காய் வள்ளியம் காடு பிறக்கொழியத்
துளைபரி துரத்தும் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே

மாற்றாரை வென்று பகைப்புலம் கவர்ந்த பெரும்படையோடு வெற்றிக்கொடி உயர்த்தி, ஊது கொம்பும் சங்கும் முழங்க, செறியிலைக்காயா நீலமலர் பூக்க, கொன்றை பொன்போல் மலர, காந்தள் மொட்டுக் கைபோல் விரிய, தோன்றிப் பூக்கள் செந்நிறம் காட்ட, காடு செழித்த செந்நிலப் பெருவழியில் இரவையோடு மடமான்கள் தாவியோட வள்ளியம் காடு பின்னால் மறைய, விரைந்து வரும் வீரர் தம் தேரில் பூட்டிய குதிரையின் காலடி ஓசை அத்தலைவியின் செவி நிரம்ப ஒலித்தது.

சிறப்புடைய செய்திகள்

1. நீர்செல நிமிர்ந்த மாஅல் போல :

முல்லை நிலத்தின் தெய்வம் திருமால், மாவலி தாரை வார்த்து கொடுத்த போது மூன்றடி நிலம் கேட்ட திருமால் விசுவரூபம் எடுத்ததுபோல் கடல்நீரை முகந்து கொண்டு மேகம் விசுவரூபம் ஏடுக்கிறது. கைகளின் வழியே தரை வளர்த்த நீர் ஒழுகுவதுபோல் மேகமும் நீர்சிதற மேலெழும் காட்சியை மிகவும் அருமையான உருக்காட்சியாக அமைத்திருக்கின்றார். நிலத்திற்கேற்ற தெய்வக்குறிப்பும், மழை பொழியும் காட்சியில் அதனை இணைத்துக் கூறும் திறமும் பாராட்டிற்குரியவை கொடுஞ்செலவு எழிலி என்று அதன் வேகத்தையும் பெரும் செயல் பொழிந்து முடிந்த மாலை நேரத்தைச் சிறுபுன்மாலை என்று கூறிச் சோகத்தையும் விளக்குவது இனிமை தரும்.

2. பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப :

பாசறையில் வாழும் மன்னனை எதிர்நோக்கிப் பள்ளியறையில் வாடும் பெண்மகளின் துயரை ஆற்றப் பெருமுது பெண்டிர் பெரும் பாடுபடுகின்றனர். ஊர்ப்புறத்துள்ள கோயிலுக்குச் சென்று நாழியில் நெல் நிறைத்து முல்லை மலர் தூவி நற்சொல் கேட்டு நிற்கின்றனர். பசலைக்கன்றின் துயர்கண்ட ஆய்மகள் இன்னே வருகுவர் நின்தாயர் என்று கூறி ஆறுதல் கூறுகின்றாள். அதுவே நற்சொல் ஆயிற்று. பெருமுது பெண்டிர்க்கும் ஆறுதல் அளித்தது, அதனைத் தெய்வம் அளித்த விடையாகவே ஏற்று மகிழ்ந்தனர். இதுவோர் முல்லை நற்சொல் [Pastoral Prophecy] பல்வேறு இனமக்கள் இத்தகைய நம்பிக்கையுடையவர்களாக இருந்ததைப் பிற இலக்கியங்கள் வழியாகவும் அறிந்து கொள்கின்றோம். விரிச்சி என்பது நற்சொல் இன்னே வருகுவர். நின்தாயர் என்றதும் நன்னர் நன்மொழி கேட்டனம் என்று அகமகிழ்ந்தனர். தெவ்வர் அழிய வினைமுடித்துத் தலைவர் வருவது உண்மை என்ற நம்பிக்கை. இதயத்திற்கு இதமளிக்கிறது. இவ்வாறு நல்நிமித்தம், நற்சொல் முதலியவற்றில் நம்பிக்கை வைப்பதை இன்றும் பார்க்கிறோம். தலைவி இவற்றால் ஆறுதல் அடையவில்லை. தலைவியின் உண்கண் புலம்பு முத்துறைப்ப நீர்மல்கி நிற்கும் காட்சி நெஞ்சை உருக்கும்.

3. வயல்விளை இன்குனகு உண்ணாது :

காட்டாறு தழுவிக் கிடக்கும் முல்லை நிலத்தின் அரண் அமைத்துப் பாசறை ஒன்றை உருவாக்கியுள்ளார். அதில் பல்வேறு தெருக்களும் நாற்சந்திகளும் உதயமாயின. நாற்சந்தியின் நடுவே காவல் நிற்கும் யானைகள் தெவிட்டும் அளவிற்கு உணவைப் பெறுகின்றன. கரும்போடு கதிர்பிடைந்து கொடுத்த அதிமதிரத்தை உண்ணாமல் அதன் உதவியோடு நுதல் துடைத்து நிற்கும்

காட்சியில் யானையின் பசியற்ற நிலையைப் பார்க்கிறோம். அதனை உணர்ந்து கொள்ளாத பாகர்கள் மேலும் மேலும் கவளம் ஊட்டுகின்றனர். அந்த முறையாலும் அவர்கள் கல்லா இளைஞர்களே ஆவர். யானையையே இவ்வளவு தூரம் ஊட்டிப்பேணும் போது போர் வீரர்களைப் பேணாமல் இருப்பார்களா? அவர்கள் எவ்வளவு செழிப்போடு இருக்கவேண்டும். பலகுடையும் தம்குடைக்கீழ் ஆக்கும் அளவிற்கு வளம் மிக்கவனாக அம்மன்னன் இருந்தான் என்று அறிகிறோம். பிடிக்கணம் மறந்த வேயும் என்று பின்னர் வருவதால் களத்தில் பிடியை மறந்த களிறுகள் பாடிவீட்டில் பிடியை நினைத்து நின்றன. அதனால் இன்குளகும் கரும்பும் இனிக்காது போயிற்று என்றும் கூறுவர்.

4. நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி :

அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை :

பாடிவீடு அமைத்துப் படைநடுவே நெடுங்காழ்க்கண்டம் கோலி, மங்கையர் நெடுந்திரியிட்டு, நெய்விட்டு விளக்கு அணையும்தோறும் தூண்டிவிடுகிறார்கள். துகில்முடித்துப் போர்த்த ஓங்குநடைப் பெருமூதாளர் பலர் காவலாக விளங்கினர். தூங்கும் நேரம் இதுவென்று குறுநீர்க் கண்ணல் மூலம் அறிந்த பொய்யாமாக்கள் அரசரிடம் கூறினர். புனைமான் நல்இல் நடுவே ஈரறைப் பள்ளியில் யவனர் உழையராக இன்துயில் கொள்ள முனைகின்றான் அரசன். தூக்கம் வரவில்லை. போர்க்களக் காட்சிகள் நினைவிற்கு வருகின்றன. பகழி பாய்ந்த காரணத்தால் செவிசாய்த்து உண்ணாது உயங்கும் குதிரைகளை நினைக்கின்றான். செஞ்சோற்றுக் கடனுக்காக உயிர்விட்ட வீரர்களை எண்ணிப் பார்க்கிறான். நெருக்கமான போர் இறுக்கமான போர் இறுதி வெற்றி யாருக்கு என்று கணிக்க முடியாத தும்பைப்போர். எனவே ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை கடகம் சேர நெடிது நினைந்து இருக்கின்றான். நோன்விரல் நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி என்பதால் வெற்றிமகள் இவன் பக்கமே எனலாம். இருப்பினும் அரசிருந்து பனிக்கும் பாசறை என்பது ஏன்? கைதான பிற அரசர்கள் இருந்து நடுங்கும் பாசறை என்பர். நாளையும் போரை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பாசறை என்பர். இல்லை. பாட்டுடைத் தலைவனே முதல் நாள் போரின் கொடுமையும் ஒருநாள் போரின் முடிவையும் நினைத்துப் பார்க்கும்போது நடுங்குகின்றானா? போர் முடிந்ததாகத் தெரியவில்லை. ஆனால் குதிரையின் காலடி ஓசை தலைவியின் காதில் விழுகிறதே! எவ்வாறு இம்மன்னனே போரை நிறுத்திவிட்டானோ? அல்லது, எதிர்ப்புல வேந்தனே போரில்லை என்று கூறிவிட்டானோ? கலிங்கப்போரில் அசோகன் போரை நிறுத்தியதுபோல் ஆகிவிட்டதா? இவ்வாறெல்லாம் நினைக்கும் அளவிற்கு நப்பூதனார் கவிதையை அமைத்துவிட்டார். நல்வலம் திருத்தி என்பதால் வெற்றி பெற்ற பாட்டுடைத் தலைவனே ஒழிந்தோர் உள்ளியும் மாசிந்தித்தும் நீடு நினைந்தும் போரில்லாப் புதுவாழ்வு மலரட்டும் என்று முரசறைந் தானா? அந்த இரவில் அம்முரசு முதன் முதல் மாற்றார்க்கு அச்சத்தை ஊட்டியதால் அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை என்று கூறினாரா? என்றெல்லாம் நினைத்துப் பார்க்க இடமுண்டு.

5. நெஞ்சாற்றுப் படுத்த நிறைதடி புலம்பொடு :

பாசறையில் நீடுநினைந்து வருந்திய மன்னன் போர் நின்றதால் இன்துயில் கொள்கிறான். அவளோ பள்ளியறையில் நெஞ்சை ஆற்றுப் படுத்தியவாறு தனிமைத் துயரில் கிடந்து தவிக்கிறாள். வரும் வரும் என்பதோர் துணிவால் மனத்தைத் தேற்றிக்கொண்டாலும் வளைகள் கழன்றோடும். மையல் மிக்கெழும்; ஓய்யென் உயிர்ப்பான் அம்பு தைத்த மயில்போல் இருக்கவும் இயலாமல் நடக்கவும் இயலாமல் நலிந்தனள். பிரிவு என்னும் அம்பின் கொடுமை இதயத்தை ஊடுருவிக் கிடக்கும் வேதனை, எழுநிலை மாடத்தின் அருவி ஓசையில் நிலைகுத்தி நிற்கிறது. அதனால் இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தாள். இமிழிசை துயராற்றும் நிலையில் இன்பல் இமிழிசை ஆயிற்று. அவள் இதயம் இமிழிசையில் இயைந்து தவம்புரியும் வேளை, தேரில் பூட்டிய குதிரையின் காலடி ஓசை அம்செவி நிறையலாயின. வருகின்ற செய்தி நிச்சயமாக வளம் தரும் செய்தி மீண்டும் வாழ்வைத் தருகின்ற செய்தியே. எல்லாத் தலைவியரும் வெற்றி பெற்ற வீரனையே சந்தித்து இருப்பர் என்று கூறமுடியுமா? எத்தனை பாவையரின் வாழ்வு பாழாகியிருக்கும்? வரலாறு அவர்களின் இதயக் குமுறலைப் படம்பிடித்துக் காட்டியதுண்டா? இதயத்தின் பெருமூச்சை அன்பின் கனலை இலக்கியமே எடுத்துக் காட்டுகிறது. போர் ஒழிவதால் புகழ் ஓடுங்கிப் போவதில்லையே. போரில்லாத சமுதாயம் அமைந்தால் எவ்வளவு இனிமை? அந்நாள் மனித இனம் முறுவலிக்கும் நல்ல நாள் முல்லை நாள்! அதுவே முல்லைப்பாட்டின் இதயக் குரல் எனலாம்.

2. ஐங்குறுநூறு

சங்கத்தொகை நூலாகிய எட்டுத்தொகையில் எட்டு நூல்கள் உள்ளன. இவை அகத்திணை பற்றியும் புறத்திணை பற்றியும் பேசும் பாக்களின் தொகுப்பாகும். கலித்தொகையும் பரிபாடலும் கலிப்பாவிலும் பரிபாட்டிலும் அமைந்தவை. இவ்விரண்டினையும் தவிர ஏனைய ஆறு நூல்களும் ஆசிரியப்பாவினால் ஆனவை. இவ்வெட்டு நூல்களும் பொருள், பா, அடி வரையறை ஆகியவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை"

என்று தொகைப்படுத்துகின்றது பழைய வெண்பா ஒன்று. இந்நூல்களைப் பாடினோர் அடியளவைப் பற்றி எண்ணவில்லை. அடியெல்லையை அளவாகக் கொண்டமை இந்நூல்களைத் தொகுத்தோரின் எண்ணத்தின் கண்டு பிடிப்பாகும்.

மேலே கூறப்பட்ட எட்டுத்தொகை நூல்களுள் ஐங்குறு நூற்றுப்பாடல்கள் திணைக்கு இரண்டிரண்டு வீதம் பத்துப்பாடல்கள் நமக்குப் பாடமாகத் தொகுக்கப் பட்டுள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகளுக்கும் நூறுநூறு பாடல்களாக மொத்தம் ஐநூறு பாடல்களைத் தொகுத்துள்ளனர் சான்றோர். ஒவ்வொரு நூறு பாடல்களும் பத்துப் பத்துப் பாடல்களின் தொகுப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மஞ்ஞையைப் பற்றிப் பாடிய பத்துப் பாடல்களின் தொகுப்பிற்கு 'மஞ்ஞைப் பத்து' என்று பெயரிட்டுள்ளனர். இவ்வாறே ஒவ்வொரு பத்துக்கும் பெயரிட்டு போற்றியுள்ளமை எண்ணி மகிழத்தக்கதாகும். ஒவ்வொரு திணைப் பாடல்களையும் ஒவ்வொருவர் பாடியுள்ளனர்.

"மருதம்ஓ ரம்போகி நெய்தல்அம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் கருதிய
பாலைஓத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலைஓ தைங்குறு நூறு"

என்ற வெண்பா, பாடிய புலவர் தம் பெயர்களைத் தெளிவாகக் கூறுகின்றது.

1. குறிஞ்சித்திணை : கபிலர்

1. 'அன்னாய் வாழி' என்று தொடங்குகின்றது. இப்பாடல். இது குறிஞ்சித் திணையினைச் சார்ந்தது. இப்பாடல் அன்னாய் வாழிப்பத்து என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. ஐங்குறுநூறு 203–ஆம் பாடல் இது.

துறை: உடன்போய் மீண்ட தலைவன், "நீ சென்ற நாட்டு நீர் இனியவல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய்?, எனக் கேட்ட தோழிக்குக் கூறியது.

அஃதாவது, தலைவனுடன் தலைவி உடன்போக்கு நிகழ்த்தி இல்லறம் நடத்தி வந்தாள். மீண்டும் தலைவி தன்னுடைய பெற்றோர் இல்லத்திற்கு வந்த போது தோழி; "உன் தலைவனுடைய ஊரில் உள்ள நீர் இனிய நீரன்று என்பார்களே! அந்த நீரினை எவ்வாறு நீ பருகினாய்?" என்று கேட்டாள். அப்படிக் கேட்ட தோழிக்குத் தலைவி கூறுவது இது என்பதாகும். இப்பாடலில் 'அன்னாய்' என்றது தோழியைக் குறித்ததே.

பாடலின் பொருள் : அன்னையைப் போல அன்பு காட்டும் தோழியே! நான் கூறுவதனை நீ விரும்பிக் கேட்பாயாக. என் தலைவனுடைய நாட்டில் தாழ்ந்த பள்ளங்களில் தண்ணீர் தேங்கிக் கிடக்கும். அந்நீரில் இலைகள் மட்கிக் கிடக்கும். அந்நீரை மானினங்கள் உண்டு கலக்கியிருக்கும். அவை உண்டதன்பின் எஞ்சிக்கிடந்த கலங்கிய சின்னீர், நம் பூந்தோட்டத்தின்கண் வண்டுகளால் இயற்றப்பட்ட தேன் கலந்த பாலை விடவும் பருகுவதற்கு இனிய நன்மை உடையதாகும் என்பதனை நீ அறிவாயாக!

நயம் : தேன் கலந்த பால் இனிமை சிறந்தது. எனினும் அதனை விடவும் தலைவனூரில் தாழ்ந்த பள்ளத்தில் இலைகள் மட்கிப்போய்க் கிடக்கவும், விலங்குகள் கலங்கியதனால் கலங்கியதுமாகிய சின்னீர் மிகவும் இனிமையுடையது என்கிறாள். இதனால் தலைவியின் கற்புடைமையும் காதல் மாண்பும் அறமாண்பும் ஒருங்கே பெறப்படும்.

"தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில்"

என்னும் குறட் கருத்தினை ஒப்பு நோக்குதல் நன்று.

2. "குற்றக்குறவன்" எனத் தொடங்கும் இப்பாடல் குன்றக்குறவன் பத்தில் அமைந்துள்ளதாகும். இப்பாடல் 256வது பாடலாக அமைகிறது.

துறை : நீ கூறுகின்றவள் நின்னை வருத்தும் பருவத்தனல்லள் என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

அதாவது, தலைவன் தலைவியை இயல்பாகக் கண்டு, எதிர்ப்பட்டு அன்பு கொண்டான். இன்ன இடத்துக் தலைவனும் தலைவியும் சந்திப்பது என்று இடங்குறித்து ஓரிரு தடவை பேசிப் பயின்றனர். பின்னும் தலைவியைக் கூடி இன்பம் துய்க்க எண்ணிய தலைவன் தோழியை உதவும்படி வேண்டினான். அதற்கு அவளோ, "தலைவி மிகவும் இளைய பெண் ஆவாள்; தக்க பருவம் எய்திலள்" என்று மறுத்துக் கூறினள். அப்படி மறுத்துரைத்த தோழிக்கு தலைவன், "இளையவளாக இருப்பதனால் தான் என்னை வருத்தினள்" என்று தலைவியின் இயல்பு கூறி அவளைக் கூட்டுவிக்கும் எண்ணம் வேண்டுவதாக அமைவதே இப்பாடல்.

பாடலின் பொருள் : தோழி! நான் கூறுவதனைக் கேட்பாயாக நான் விரும்பும் தலைவி குன்றத்தின்கண் வாழும் குறவனின் அன்புக்குரிய இளைய மகள் ஆவாள். வண்டுகள் மொய்க்கின்ற நறுமணமுடைய கூந்தலை உடையவள். வளையலை அணிந்தவள். இப்பொழுதுதான் முளைத்து ஒளிவிடும் பற்களையுடையவள். இப்படிப்பட்ட தன் தோற்றப் பொலிவினால் இளையவளாக விளங்கினாலும், எனக்குத் துன்பந் தந்து வருத்துவதில் பெரியவள், எனவே நீ எனக்குத் துணை செய்வாயாக. இன்றேல் நான் இறந்துபடுதல் ஒருதலையாம்.

நயம் : தலைவியின் இளமை இயல்புகளைக் கூற எண்ணிய தலைவன் கூந்தல் முடித்தல், தழையறிந்தணிதல், மொழி நிரம்புதல் இல்லாத இளம் பருவத்தள் என்று கூறி விளக்குதல் எண்ணத் தகுவது. மடமகள், கொடிச்சி வளையள், முளைவாள் எயிற்றள் என்பன அவள் இளமையை உணர்த்த வந்தன.

பாலைத்திணை : ஓதலாந்தையார் :

3. ஐங்குறு நூற்றில் 352–ஆவது பாடலாக அமைந்துள்ளது. இப்பாடல் 'வரவுரைத்த பத்து' என்ற தலைப்பில் வருவதாகும்.

துறை ; பிரிந்த தலைமகன் வரவ!ணர்ந்த தோழி தலை மகட்குச் சொல்லியது.

தலைவனின பிரிவினால் பெரிதும் வருந்தினாள் தலைவி. பேதுற்று அழிந்த தலைவிக்குத் தலைவனின் வருகையினை உணர்ந்த தோழி அவனுடைய அன்பு மிகுதியை வியந்து கூறி, அவன் வரவினை உணர்த்தினாள்.

பாடலின் பொருள் :– "தோழியே! கேள்! உன்னை விரும்பும் தலைவன் நின்பாற் பேரன்புடையவன். தம் வில்லிலே அம்பைத் தொடுத்து எய்தமையினாலே புண்ணேற்று வீழ்ந்துபட்ட வீரர்கட்கு நடுகல் எடுப்பர். அவ்வாறு எடுக்கப்பட்ட நடுகல்லில் அவர்களுடைய பீடும் பெயரும் எழுதி வைப்பர். எழுதப்பட்டிருக்கும் கல்லில் உள்ள செதும்பினை ஒத்த பெரிய துதிக்கைகளை உடைய யானைகள் தம் வெஞ்சினத்தால் வருவார் போவாரைத் துன்புறுத்தும். அப்படித் துன்புறுத்தற்கு இடமான பாலை வழியைக் கடந்து விரைந்து வந்து சேர்ந்தான் தலைவன். எனவே, நீ படும் அவலத்தை விடுவாயாக என்றான்.

நயம் :– இப்பாடலின் மூலம், போர்க்காலத்திலே உயிரிழந்த வீரர்க்கு அவர்தம் பெயரும் பீடும் எழுதி நடுகல் எடுத்துச் சிறப்பிக்கும் வழக்கம் இனிது பெறப்பட்டது.

யானையின் துதிக்கையின் தோற்றத்திற்குக் கல் வெட்டில் காணப்படும் செதும்பு உவமையாகக் கூறப்பட்டது.

4. ஐங்குறு நூற்றில் 399 ஆம் பாடலாக விளங்குவது மறுதரவும் பத்து என்ற தலைப்பின் கீழ் வருவது இப்பாடல். மறுதரவு: மீட்சீ, அஃதாவது புணர்ந்துடன் போகிய தலைமக்கள் மீண்டு வருதல் பொருளாகத் தொடுக்கப்பட்ட பாட்டுக்களின் தொகையாதலின் இப்பெயர் பெறுவதாயிற்று.

துறை : உடன் கொண்டு போன தலைமகன், தலைவியைத் தன் இல்லத்துக் கொண்டு புக்குழி, அவன்றாய் அவட்குச் சிலம்புகழி நோன்பு செய்கின்றாள் எனக் கேட்ட நற்றாய் ஆண்டு நின்றும் வந்தார்க்குச் சொல்லியது.

தலைவன் தலைவியை உடன் போக்கில் தன்னுடைய ஊருக்கு அழைத்துச் சென்றான். தலைவனுடைய தாய் அவளை ஏற்றுக் கொண்டு, தாய் வீட்டில் நிகழ்த்த வேண்டிய சிலம்புகழி நோன்பினை நிகழ்த்தினாள். இதனைத் தலைவியின் தாய் அவ்வூரினின்றும் வந்தவர் வாயிலாகக் கேள்வியுற்றாள். அப்பொழுது நற்றாய் "சிலம்புகழி நோன்பினை அவள் செய்து மகிழட்டும். ஆனால் வதுவை மணத்தையேனும் என் வீட்டில் செய்து மகிழ அவளுடைய உடம்பாடு பெற்று வருவீராக" என்று அச்செய்தி கூறினார். மாட்டு வேண்டிக் கொள்வதாக அமைவது இப்பாடல்.

பாடலின் பொருள் :– பெரியீரே! வெற்றிமிகுந்த வேலையுடையவன் தலைவன் குற்றமற விளங்கிய கழலணிந்த காலையுடையவன். பொய்ம் மொழிந்து: தலைவியை என்னிடத்திலிருந்து பிரிக்கவல்ல நாவன்மை. சான்றவன் காளைப் பருவமுடையவன். அப்படிப்பட்ட காளையை ஈன்றெடுத்த தாய்க்கு "நும்முடைய மனையின்கண் சிலம்புகழிதலாகிய நோன்பினை நிகழ்த்தும் பேறு பெற்றனள். அவள் என் மகளின் திருமணத்தையேனும் எம்மனைக்கண் செய்வதற்கு இசைவானாக் என நீங்கள் அவளுக்குச் சொல்வதனால் வரக்கூடிய தீங்குதான் யாதோ? என்றாள்.

நயம் : இப்பாடற்கண் இருவகை மணங்கள் பொழியப்பட்டன. சிலம்புகழி நோன்பு, வதுவை என்ற பண்டை நாள் திருமண நிகழ்ச்சிகள் பெண்ணுடைய வீட்டிலேயே நிகழும் என்பதனை இப்பாடலால் அறிந்து கொள்ள முடிகிறது.

முல்லைத் திணை :– பேயனார்

5. 'புதல்வற் கவை இயினன்' என்ற இப்பாடலைச் செவிலி கூற்றுப் பத்துள் தொகுத்துள்ளார். இது 409–ஆம் பாடலாகும்.

துறை :– இது காதல் மிகுதி கூறுகின்றது.

இல்லறம் நடத்தும் தலைவன் தலைவியர் வாழ்வைக் காணச் சென்ற செவிலி, இருவரும் தம் புதல்வனைத் தழுவிக் கிடந்த அரிய காட்சியைக் கண்டு வந்தாள். அதனைச் செவிலி நற்றாயிடம் கூறுவதாக அமைவது இப்பாடல்.

பாடலின் பொருள் :– தலைவனாகிய தந்தை தன் புதல்வனைக் காதலால் அணைத்துக் கிடந்தாள். அப்புதல்வனுக்குத் தாயாகிய நம் மகளோ தன்னுடைய குறையாத காதலால் அவ்விருவரையும் ஒரு சேர அணைத்துக் கிடந்தாள். அவர்கள் காலலுள் மூழ்கிக்கிடக்கின்ற அவ்வினிய காட்சி நினைக்க நினைக்க இனிமை நல்குவதாயிருந்தது. அன்பினாற் பிணைப்புண்டு அவ்வாறு தழுவிக்கிடக்கின்ற இடம் மிகச் சிறியதே ஆயினும், அவ்விடத்திற்குள் உலகில் வாழும் எல்லாவுயிர்களும் அடங்கி விடும்' என்று செவிலி அவ்விருவரின் காதல் மிகுதியைக் கூறினாள்.

நயம் ;– காதல் மிக்கவர்களாக ஆணும் பெண்ணும் பழகும் போதே அவர்களைத் தலைவன் தலைவி என்பர். ஆயின் இப்பாடலில் புதல்வனைப் பெற்ற பின் அவ்விருவர்தம் அன்புக்கிடக்கை பேசப்படுகின்றது. எனவே புலவர் தந்தை தாய் என்ற சொற்களைப் பயன்படுத்திக் கூறும் நுட்பம் அறியத் தகுவதாகும்.

6. 492–ஆம் பாடலாக உள்ள இவ்வைங் குறுநூற்றுப் பாடல் வரவுச் சிறப்புரைத்த பத்துள் அமைந்துள்ளது.

துறை :– வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைவிக்குச் சொல்லியது. அஃதாவது, வினைவயிற் பிரிந்த தலைவன் தான் மேற்கொண்ட வினையை முடித்தான். முடித்தபின் தலைவியைக் காணப் பெரு விருப்புடையவனாய் விரைந்து வந்தமையினைத் தலைவிபாற் கூறி மகிழ்வித்தது.

பாடலின் பொருள் :– 'நல்ல நுதலை உடைய நங்கையே! வினை முடித்து யான் வரும் வழியின்கண் சாயலால் உன்னைப் போலவே தோன்றும் மயில்கள் கூத்தாடிடக் கண்டேன். உன் நல்ல நுதலைப் போலவே நறுமணமுடைய முல்லை மலர்கள் வழியில் மலரக் கண்டேன். நின்னைப் போலவே மான்கள் மருண்டு பார்க்கக் கண்டேன். இக்காட்சிகளால் பெரிதும் உன்னையே நினைந்து, மேகங்களின் விரைந்த செல்வைக் காட்டிலும் மிக விரைந்து வந்தேன்' என்றான்.

நயம் :– மயிலையும், முல்லை மலரையும், மானின் மருண்ட பார்வையையும் காணும் போது தலைவனுக்குத் தலைவியின் சாயலும், நறுநுதலும், மருண்ட பார்வையும் ஒருங்கே தோன்றின. இதனால் அவனுடைய உணர்ச்சி புலப்படுகின்றது. எனவே விரைந்து வரத் தலைப்பட்டான். அதனைக் கூறும் போது மேகத்தை விடவும் கடிது வந்ததாகக் கூறுகின்ற நுட்பம் நயமாக அமைந்துள்ளது. "காரினும் விரைந்தே" என்ற தொடரால் இதனைப் புலப்படுத்துகின்றார் புலவர்.

நெய்தல் திணை – அம்மூவனார் :–

7. 'ஓண்டொடி அரிவை' எனத் தொடங்கும் இப்பாடல் நெய்தல் திணையில் அமைந்துள்ள 'தொண்டிப் பத்தில்' வருவதாகும். இப்பத்தில் 'தொண்டி' என்னும் நகரமே சிறப்பித்துக் கூறப்படும். இது ஐங்குறுநூற்றில் 172–ஆவது பாடலாக அமைந்துள்ளது.

துறை:– கண் துயில்கின்றிலை, இதற்குக் காரணம் ஏன்? என்று வினவிய பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

விளக்கம் : ஊழின் வலியால் தலைவியைத் தலைவன் கண்டான் பின் அவளை அவன காணாமல் வருந்தினான். அவளைக் காணாமல் அவன் உறக்கம் தடைப்பட்டது. இதனைக் கண்ட பாங்கன், தூங்காமைக்குரிய காரணத்தை வேண்டினான். அப்போது தலைவன் காரணம் கூறுகின்றதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பாடலின் பொருள் : தோழனே! ஒளி பொருந்திய தொடியை அணிந்த தலைவி என் நெஞ்சைக் கவர்ந்து கொண்டான். தொண்டி நகரம் வண்டுகள் இமிர்கின்ற குளிர்ந்த துறையை உடையது ஆகும். அத் தொண்டி நகரம் பரந்த கடலையுடையது. அக்கடலில் இரவும் பகலும் அலைகள் ஓயாது எழுந்து ஒலிக்கும். அத்தொண்டி போன்று, என் நெஞ்சும் இரவின் கண்ணும் உறக்கம் கொள்ளாது துன்புறுகின்றது." எனவே என் உறக்கமின்மைக்குக் காரணம் தலைவியே என்றான் பாங்கனுக்கு.

நயம் :– துயிலும் நேரம் இரவு ஆகும். அவ்இரவுப் பொழுதிலும் கூடத் துயிலாது துன்புறுகின்றமையினால், பகலிலும் செயலற்று விளங்கினான் தலைவன் என்பது கூறாதே பெறப்பட்டது.

8. இப்பாடல் 'நெய்தற் பத்தில்' வருவதாகும். இப்பத்தின்கண் வரும் பாட்டுத்தோறும் நெய்தலாகிய கருப்பொருள் சிறந்து நின்றது. ஆகவே இப்பெயர் பெற்றது. 'நெய்தல் இருங்கழி' என்று தொடங்கும் இப்பாடல் 184–ஆவது பாடலாக உள்ளது.

துறை : வாயில் வேண்டி வந்தார் தலைமகன் அன்பு உடைமை கூறிய வழி வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

தலைவன் பரத்தையிற் பிரிந்தான். அதனால் தலைவி ஊடல் கொண்டாள். அவ்வூடலைத் தவிர்க்கும் பொருட்டுத் தலைவன் தன் நண்பர்களை அனுப்பி வாயில் வேண்டி நின்றான். அவன் வேண்டுதலைச் செவி மடுத்த நண்பர்கள் வாயில் வேண்டித் தலைவியிடம் அவனுடைய அன்பைப் புலப்படுத்தினர். அப்போது தலைவி வாயில் மறுத்துரைக்கின்றாள்.

பாடலின் பொருள் :– பாணனே! மீனைத் தின்னும் கொக்கு, மீனை உண்டபிறகு நெய்தல் நிலத்தின் கண்ணுள்ள பெரிய கழியிற் பூத்த நெய்தல் மலரிலே தங்காது, அக்குருகு தன் இனத்துடன் கூடி, நெய்தற் சோலையில் சென்று தங்கும். அப்படிப்பட்ட கடலால் அழகு பெற்றது தலைவனுடைய ஊர். என்மீது அவர் கொண்ட நட்பு, எமக்கு இக்கடலினும் பெரிதாயிருந்தது காண்'

இவ்வாறு கூறித் தலைவனின் அன்பைப் பாராட்டுவது போன்று தலைவி பழிக்கின்றாள்.

நயம் :– நெய்தல் நிலத்துக் குருகு நெய்தல் மலரின்கண் தங்குவது தான் இயல்பு. அனால் அதனை விடுத்து நெய்தற் சோலையில் சென்று தங்குவது போல, தலைவியினடத்துத் தங்கி இன்பம் பெறாது, பரத்தையிடம் சென்று தங்கினான் என்பது உள்ளுறையாக இப்பாடலில் கூறப்பட்டது.

மருதத் திணை ஓரம்போகியார் :–

9. ஐங்குறு நூற்றில் 32–ஆவது பாடலாக உள்ளது. இது 'தோழிக்கு உரைத்த பத்து' என்பதனுள் அடங்கும். கேட்போர் வகையுள் சிறந்தாளாகிய தோழிக்குரைப் பனவாகும். சிறப்புடைமை கருதி இஃது இப்பெயருடையதாயிற்று.

துறை: வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைவி தோழிக்குக் கூறியது.

அஃதாவது பரத்தையிற் பிரிந்தான் தலைவன். தலைவியிடம் அன்புற்று மீண்டு வந்தான். இது கண்ட பரத்தை பெரிதும் வருந்தினாள். இவ்வருத்தத்தினைக் கேள்விற்ற தலைவி, தலைவன் சார்பில் வந்த வாயில்கள் கேட்குமாறு தன் தோழியிடம் கூறி வாயில் மறுப்பதாக இது அமைந்துள்ளது.

பாடலின் பொருள் :– தோழி கேட்பாயாக! நம் இல்லத்தை நோக்கித் தலைவன் ஒருநாள் வந்தான். அது கூடப் பொறாது அவனுடைய பரத்தையர் நெருப்பிலே இட்ட மெழுகு உருகுதல் போன்று உளமம் நெகிழ்ந்தனராம். ஏழுநாள் வரை அவர்கள் அழுது தீர்த்தனராம் என்று பலரும் கூறுவர்.

"..... அவன் பெண்டிர்

தீயுறு மெழுகின் நெகிழ்வனர் விரைந்தே"

என்ற உவமை மகிழ்ந்து இன்புறுதற்குரியது.

10. 'மகிழ்நன் மான்குணம்' என்ற தொடக்கமுடைய இப்பாடல் ஐங்குறு நூற்றில் 90–ஆவது பாடலாகும். இப்பாடல் புலவி விராயபத்துள் வருவதாகும். தலைவியும் தோழியும் பரத்தையும் புலந்து கூறுவனவும், வாயில் மறுத்துரைப்பனவும், பிறவுமாய் விரவி வருதலின் இப்பெயர் பெறுவதாயிற்று.

துறை: தலைமகன் தன் மனைக்கட் செல்லாமல் தான் விலக்குகின்றாளாகத் தலைமகள் கூறினாள் என்பது கேட்ட காதற் பரத்தை தலைவன் கேட்குமாற்றால் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

பரத்தை வீட்டிலிருந்து தன் வீட்டிற்குத் தலைவன் வராமல் விலக்குகின்றாள் பரத்தை என்று குற்றம் சுமத்தினாள் தலைவி. இதனைக் கேள்விப்பட்ட காதற் பரத்தை தலைமகனின் காதில் விழும் வண்ணம் அவனுக்கு வேண்டியவர்களை நோக்கிக் கூறியது.

பாடலின் பொருள்: தலைவனுடைய மாண்புற்ற குணங்களை வண்டுகள் அடைந்தனவோ? அவற்றின் மாண்பமைந்த குணங்களை அவன் பெற்றனவோ? செயலொற்றுமையினால் வேறுபடுத்தி அறியக் கூடாமையினால் அச்செயல் அவனுக்கு இயல்பாக உள்ளது. அதனால அவனை விலக்குதலறியாதவளாய் அவன் புதல்வனுக்குத் தாயாகிய தலைவி மயங்குகின்றாள். யாம் தன் மனைக்கு ஏகாதவண்ணம் விலக்கிவிட்டோம் என எம்மோடு புலக்கின்றாள். அவளுடைய அறியாமை என்னே!

நயம் :– ஒரு பூவில் தேனை உண்ட பின்னும் இன்னொரு மலரை நாடுவது வண்டின் இயல்பாகும். இவ்வண்டின் இயல்பினை உடையவன் தலைவன் என்பதனைச் சுட்டிக் கூறுவது அங்கதமாக அமைந்துள்ளது.

3. குறுந்தொகை

எட்டு நூல்களையும் தொகுத்து மொழியும் பழைய வெண்பா குறுந்தொகைக்கு 'நல்ல' என்ற அடைமொழியைச் சேர்த்து நல்ல குறுந்தொகை, என்று கூறுகின்றது. நீண்ட பாடல் அடிகளையுடைய அகநானூற்றை நெடுந்தொகை என்பர், குறுகிய அடி எல்லை கொண்ட பாக்களின் தொகுப்பினைக் குறுந்தொகை என்றனர். கடவுள் வாழத்துப் பாடலையும் இணைக்க 401 பாடல்கள் இத் தொகையுள் உள்ளன. 4 முதல் 8 அடிப் பேரெல்லை உடைய பாடல்களின் தொகுப்பாகும். 307, 391 ஆகிய இருபாக்களும் ஒன்பதடிப் பேரெல்லை உடையனவாயுள்ளன. நமக்கு இரண்டு பாடல்கள் பாடமாகவுள்ளன.

1) "யாயும் ஞாயும்..." எனத் தொடங்கும் இப்பாடலைப் பாடியவரின் இயற்பெயர் கிடைக்கவில்லை. எனவே அப்பாடற்கண் வரும் தொடரைக் கொண்டே "செம்புலப் பெயர் நீரார்" என்று பெயரிட்டழைத்தனர். இது குறுந்தொகையில் 40 –ஆம் பாடலாக அமைகின்றது.

தலைவன் கூற்றாக வருவது:

துறை :– இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த வின்னர்ப் பிரிவரெனக் கருதியஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபட கண்டு தலைமகன் கூறியது.

இயற்கைப் புணர்ச்சியில் இன்புற்றிருந்தனர். தலைவனும் தலைவியும் அவ்வாறு இன்புற்றிருந்த பொழுது தலைவன் பிரிவானோ எனத் தலைவி கவலையுற்றாள். இப்பிரிவுக் குறிப்பு வேறுபாட்டினை அறிந்த தலைமகன் இனி ஒருநாளும் பிரியோம் என்று கூறித் தேற்றினான்.

பாடலின் பொருள் : என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் ஒருவருக்கொருவர் எவ்வகையில் உறவினர் ஆவர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவினர்? இப்பொழுது பிரிவின்றி இருக்கும் நீயும் நானும் எவ்வாறு நம்முள் ஒருவரையொருவர் முன்பு அறிந்தோம்? ஒரு தொடர்பும் முன்பு நமக்குள் இல்லை. ஆனால் செம்மண் நிலத்தின் கண்ணே பெய்த மழைநீர் அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடையும். அது போல அன்புடைய நம் நெஞ்சமும் தாமாகவே ஒன்றாய்ச் சேர்ந்து இணைந்தன.

நயம் : "செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"

இவ்வுவமைச் சிறப்பு அறிந்து இன்புறத்தக்கது. நிலத்தில் பெய்த நீர் எவ்வாறு நிலத்தின் தன்மையைப் பெற்றதோ அதே போன்று தலைவன் தலைவியாகிய இவ்விருவர் நெஞ்சமும் இரண்டறக் கலந்த நிலையை இவ்வுவமை மூலம் தெளிவுறக் கூறினார் புலவர், இக் குறுந்தொகை உவமையுடன்,

"நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு" (482)

என்ற குற்ள் ஒப்பு நோக்கத்தக்கது.

2) வெள்ளி வீதியார் என்ற பெண்பாற் புலவர் பாடியது. "இடிக்குங் கேளிர்...." எனத் தொடங்கும் பாடல். குறுந்தொகையில் 58–ஆம் பாடலாகும். இது தலைவன் கூற்றாக அமைந்துள்ளது.

துறை : கழற்றெதிர் மறை.

அஃதாவது, தலைவனைப் பாங்கன் இடித்துரைத்தான். அவ்வாறு இடித்துக் கூறிய பாங்கனுக்குத் தலைவன் எதிர் மறுத்துக் கூறுவது ஆகும்.

பாடலின் பொருள்: இடித்துரைக்கும் நண்பரே! உமக்காகவேணும் என் காதல் நோயை நிறுத்த முடிந்தால் நல்லது என் விருப்பம் அதுவே ஆகும். கதிரவன் வெயில் எரிக்கின்ற வெம்மை நிறைந்த பாறை. அப்பாறையின் மீது வெண்ணெயைக் காய வைத்துள்ளனர். அதனைப் பாதுகாக்கக் கையில்லாத, ஊமையைக் காவலுக்கு நியமித்துள்ளனர். அக்கையில்லாத முடவனால் வெண்ணெயை வேறு இடத்து எடுத்து வைக்க முடியாதது போலவும், பிறருக்கு

இத்தன்மையினைக் கூற முடியாதவாறு போலவும், என் காதல் நோய பரவுகின்றது. அந்நோயினைப் பொறுத்துக் கொள்ளவோ நீக்கவோ அரிதாய் இருக்கின்றது என்று தன் காதல் இயல்பினைத் தலைவன் பாங்கனுக்குக் கூறினான்.

உவமை நயம் :– கதிரவனின் வெப்பத்தினால் வெண்ணெய் பாறையில் உருகிப் பரவும். இவ்வெண்ணெய் உருகாமல் காக்க வேறு இடத்தில் எடுத்து வைத்தல் வேண்டும். ஆனால் அங்குக் காக்கும் காவலாளியோ கையில்லாதவன் ஆவான். அவனால் வேறிடத்து எடுத்து வைக்க இயலாது. மேலும் அவன் ஊமையானமையால் பிறரை அழைத்து இதனைக் கூறி உதவுமாறு வேண்டவும் இயலாது. அது போன்று இக்காதல் நோயை அடக்கிப் பாதுகாக்கவும் இயலவில்லையாம். பிறரிடம் வெளியிடக் கூடிய நிலையையும் பெற்றிலனாம். ஆகவே, இதனைக் காக்க இயலேன் ஆயினேன் என்றான்.

"கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல"

என்ற உவமை இக் குறுந்தொகைப் பாடலின் உயிர்த்துடிப்பைத் துலக்கிக் காட்டுகின்றது.

நற்றிணை - முல்லைத் திணை

நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும், பன்னிரண்டடிப் பேரெல்லையும் கொண்டது. நானூறு பாடல்கள் அடங்கிய தொகை நூல். இதில் 215 புலவர்களின் பாடல்கள் அமைந்துள்ளன. இதனைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி : தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. அளவால் அமைந்த பாடல்களைக் கொண்டதாதலின் 'நல்' என்னும் அடைமொழி பெற்றது. பாடல் தொடரால் பெயர் பெற்ற புலவர்களும் நற்றிணையில் காணப்படுகின்றனர்.

குறிஞ்சி முதலாகிய ஐந்திணைகளிலும் பாடல்கள் இருந்தாலும், முல்லைத் திணையிலுள்ள இரண்டு பாடல்களே இங்கு பாடப்பகுதியாக உள்ளன. முல்லை என்பது காடும் காடு சார்ந்த பகுதியும் ஆகும்.

1. "விரைப்பரி வருந்திய.....பெருந்தகு நிலையே" (நற்.21)

திணை : முல்லை.

துறை (கூற்று) : வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது. பொருள் தேடச் செல்வதும் ஒரு வினையாயினும் அஃது அக்கருத்தமைந்த சொல்லால் சுட்டப்படுவது வழக்கம். (வினை என்பது அரசனுக்குப் போரின்கண் உதவச் செல்லும் செயலாகும்)

பாடியவர் : மருதனிள நாகனார்.

பொருள் : பாகனே! விரைந்து செல்வதால் வருந்திய மிக்க செலவினையுடைய நம் வீரர், இடையில் செறிந்த கச்சையின் பிணிப்பை நெகிழ்த்து ஆங்காங்குத் தங்கித் தாம் விரும்பிய வண்ணம் அமர்ந்த நடையினராய் மெல்ல மெல்ல வருவாராக. உருக்கிய மணம் மிக்க நெய்யில் பாலைச் சிதறினாற் போன்ற கடைகின்ற குரலையுடைய மிடற்றினையுடைய அழகிய நுண்ணிய பலவாகிய புள்ளிகளமைந்த கண்டார்க்கு விருப்பம் வரும் தகுதிப்பாட்டினையுடைய கானங்கோழி, மழை பெய்த நீர் வடிந்த அகன்ற நெடிய காட்டிலே சுவறாத ஈரமணலை நன்றாக பறித்து, நாட்காலையில் இரையாகிய நாங்கூழ்ப் புழுவைக் கவர்தலும் அதனைக் கொன்று தன் பெடைக்கு ஊட்ட வேண்டி அப்பெடையை நோக்கிப் பெருமை மிக்கிருக்கின்ற நிலையை இங்கே பாராய்! ஆதலின் நாம் முன்னே விரைந்து செல்லுமாறு இதுகாறும் தீண்டாத கூரிய தாற்று முள்ளாலே குதிரையைத் தூண்டித் தேரைச் செலுத்துவாயாக! என்று தலைவன் தேர்ப்பாகனிடம் கூறினான்.

4th Proof

விளக்கம் : போர்வினையை முடித்த பெருமித உணர்வில் உள்ள தலைவன் தேரை விரைவாகச் செலுத்துமாறு தேர்ப்பாகனிடம் கூறுவதுதான் இப்பாடலின் திரண்ட கருத்து. அதற்கு 'இளையர்' (வீரர்) கச்சை என்ற சொல்லாட்சிகளும் பகைவனைத் தன் காலடிப்படுத்திப் பெருமிதத்துடன் பார்க்கும் வீரனின் இயல்பைச் சுட்டும். நாளிரை கவர மாட்டித் தன் காலடிப்படுத்திப் பெருமிதத்துடன் பார்க்கும் வீரனின் இயல்பைச் சுட்டும். 'நாளிரை கவர மாட்டித் தன் பெடை நோக்கிய பெருந்தகுநிலையே' என்னும் அடிகளும் சான்றாக உள்ளன. இருப்பினும் இந்நூலுக்கு உரையெழுதிய பெருமறைப் புலவர் பொருள்வயின் விரிவாக எடுத்துக்கொண்டு உள்ளுறை பொருள் கூறியுள்ளார். அதாவது, இதன்கண் வாரணம் அறவில் மணல் கெண்டிடல் பெற்ற நாங்கூழாகிய–நாளிரைத் தன் பெடையை ஊட்டி மகிழ்தற்கு அதனை விரும்பி நோக்கியிருத்தல் போன்று யாழும் வேற்று நாட்டின்கட் சென்று ஊக்கத்தோடு முயன்றபோது நம் பொருளை மனையோடிருந்து அறஞ்செய்து இன்புறுதற்கு இன்றியமையாத் துணையாகிய என் காதலியைக் கண்டதற்குப் பெரிதும் கண்விதுப்புறா நின்றோம் என்பது உள்ளுறை.

2. 'மறத்தற் கரிதால் பாக! ..... மகிழ்ந்தயர் நிலையே (நற்.42)

திணை : முல்லை

துறை : வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

பாடியவர் : கிரத்தனார்.

பொருள : பாகனே! நீரின்மையாலே கோடையில் பல நாளாக வறட்சியுற்ற உயிர்கள் மகிழ்ச்சியோடு தத்தம் தொழிலை மேற்கொண்டு நிகழ்த்துவதற்கேற்பத் தொன்று தொட்டுப் பெய்யும் வழக்கம் போல மழை பெய்தனலாய புதிய நீர் நிரப்பிய பள்ளங்கள் தோறும் நாவினால் ஓலிக்கின்ற பலவாய கூட்டத்தையுடைய தவளைகள் ஓலிக்கின்றன. ஆனால் நாம் செல்லுகின்ற தேரில் கட்டிய மணிகளின் ஓலியை ஒளிபொருந்திய நெற்றியுடைய நம் தலைவி கேட்டறியவில்லை. அதனால் நீங்கள் முன்னே சென்று கூறுங்கள் என்ற அக்கட்டளையை ஏற்ற இளையோர் விரைந்து நம் மாளிகையில் புகுந்து அறிவித்தனராக, உடனே மெல்ல அதுவரை நீரிட்டுக் கொள்ளாத கூந்தலின் மாசு போகத் தூநீராட்டிச் சிலவாய மலரைக் கொண்டு பலவாய கூந்தலில் முடிக்கின்ற அத்தறுவாயில் யான் உள்ளே புகுதலின், என்னை நோக்கித் தன் மெய் துவள வந்து, அவிழ்ந்து குலையும் முடியினவளாய் என்னை அணைத்துக் கொண்ட மடப்பத்தையுடைய சிறந்த நம் அறிவை மகிழ்ந்து கொண்டாடும் தன்மை யாம் மறத்தற்குரியது காண்; அத்தகையாள் இன்னும் மகிழ்ந்தனைக்குமாறு விரைவிலே தேரைச் செலுத்துவாயாக! என்று தலைவன் தேர்ப்பாகனிடம் கூறினான்.

விளக்கம் : பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்பது ஆன்றோர் வாக்கு. போர் வினைக்காகச் சில முறை சென்று திரும்பிப் பழக்கப்பட்ட தலைவன், தான் வீட்டிற்குள் நுழைந்தவுடன், ஏக்கம் மிக்க தலைவியின் வரவேற்பு எப்படியிருக்கும் என்பதைத் தன் கற்பனைக் கண்ணால் மீண்டும் படமெடுத்துப் பார்க்கிறான். இது முன்னோக்கு உத்தியோடு பின்விளைவு உத்தியும் கலக்கின்ற நிலையாகும்.

5. அகநானூறு

திணை – முல்லைத் திணை.

துறை – தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது

பாடியவர் – குறுங்குடி மருதனார்.

முல்லை வைந்நுனை போன்ற: என்ற தொடக்கத்தைக் கொண்ட இப்பாடல் அகநானூற்றின் 4–ஆம் பாடலாக அமைந்துள்ளது.

துறை விளக்கம்: வினைவயிற் பிரிகின்ற தலைவன் யான் கார்ப்பருவத தொடகததே மீண்டுவருவேன் அதுவரையிலும் ஆற்றியிருந்திடுக என்று தேற்றிச் சென்றான். தலைவி அவனது பிரிவினை ஆற்றாது மிகவும் வருந்தினாள். அது கண்ட தோழி தலைவன் குறிப்பிட்ட கார்ப்பருவ வரவினைத் தலைவிக்குக் காட்டி நம் தலைவர் இன்னே வருவார் நீ வருந்தற்க என்று அவளை வற்புறுத்தியதாகும்.

பாடலின் பொருள்: அழகிய வளையல்களை அணிந்துள்ள எம் பெருமாட்டியே கேள்! இன்னிசை முழங்குதற்குக் காரணமான திருவிழாக்களை உடையது உறையூர். அவ் உறையூரின் கிழக்கின்கண்ணே அமைந்த நெடுமலையில் அடர்ந்து வளர்ந்துள்ள காந்தள் மலரின் புதுப்போதுகள் நன்கு மலர்ந்து மணம் பரப்பின. அப்படி மணம் பரப்பும் மலரினைப் போன்று நாற்றம் கமழ்கின்ற உன்னுடைய மாட்சிமை மிக்க பெண்மை நலம் கமழ்கின்ற பேரின்பத்தை நினைந்து குறிய மலைகளையுடைய நாட்டை உடைய தலைவன் விரைவில் திரும்புவான் காண்பாயாக!

தலைவி, அதோ பார்! மின்னல் இடிகளையுடைய மேகம் வானத்தில் தோன்றும். முல்லைக் கொடிகளிலே கூரிய முனைகளையுடைய முல்லை அரும்புகள் தோன்றிவிட்டன. இல்லம் என்னும் தேற்றாமரம், பசுமையான அடிகளைக்கொண்ட கொன்றை ஆகிய மரங்களின் அரும்புகள் தோன்றித் தமது மெல்லிய கட்டவிழ்ந்து மலரும். இரும்பினைக் காய்ச்சி முறுக்கி விட்டாற் போன்ற கருமையான பெரிய கொம்புகளை உடைய இரலை மான்கள் நீர் வேட்கையால் பரற்கற்களையுடைய பள்ளங்களைச் சென்றடையும். அங்கே தேங்கிக் கிடக்கும் நீரைப் பருகிய மகிழ்ச்சியினால் துள்ளியாடும். பரந்த இவ்வுலகத்தில் வாழும் உயிர்கள் நீர் பெறாமையினால் வருந்திய வருத்தம் இப்பொழுது அகன்றது. ஏனென்றால் பொய்யா வானம், விரைந்து விழும் மழைத்துளிகளை வீழுமாறு செய்து. கார்ப்பருவத்தைத் தோற்றுவித்தமையினால், மழை பொழிந்தமையினால் முல்லை நிலத்தில் அமைந்துள்ள காடுகள் அழகு பெற்றுத் திகழ்கின்றன. நம் தலைவர் குறித்துச் சென்ற கார்ப்பருவமும் இதுவேயன்றோ!

வளைந்த தலையாட்டமுடைமையினால் பொலிவுற்றும் கொய்து மட்டரூ செய்து விடப்பட்டமையினால் அழகுடன் திகழ்கின்ற பிடரி மயிரினையும் உடைய குதிரைகள் தலைவனுடைய தேரில் பூட்டப்பட்டன. விரைந்து செல்லும் பொருட்டு வலித்து இழுக்கப்பட்ட வார்கள், யாழின் நரம்புகள் ஒலிக்குமாறு விண்ணென்று ஒலிக்கும் படியாக அமைக்கப்பட்டன. தலைவன் வரும் வழி எங்கும் மலர்ச் சோலைகள் நிறைந்திருக்கும். அம்மலர்களில் தேன் உண்டு மகிழும் அறுகாற் பறவைகளாகிய வண்டுகள் தம் காதற் பெடைகளோடு மலர்களின்மேல் கூடி மகிழ்ந்திருக்கும். தலைவனோ தான் வரும் வழியில் கூடி மகிழ்ந்திருக்கும் வண்டுகளின் கூட்டம் கலைந்து வருந்துமே என்று அஞ்சி, ஒலி செய்யா வண்ணம் மணிகளின் நாக்குகளைக் கட்டியுள்ளான். அவ்வாறு கட்டிய மாட்சிமையுடைய கலைத் தொழிலமைந்த தேரினை உடைய தலைவன் இன்னே வந்துவிடுவான், என்று தேற்றினாள் தோழி.

நயம் :– கார்காலம் தொடங்கிவிட்ட பின்னும் தலைவன் வந்திலனே என்று கவலையுற்றாள் தலைவி. அவன் வருத்தத்தினைக் களையு முகத்தான் தோழி தலைவன் வரக் காலந் தாழ்த்தியமைக்குரிய காரணத்தைக் கூறினாள். அவன் வருகின்ற வழியின் பக்கங்களில் உள்ள சோலைகளில் வண்டுகளாகிய சிற்றுயிர்கள் இன்பந் துய்த்துக் கிடக்குமாம். அவை பேதுறா வண்ணம் கூர்ந்து நோக்கியும் குதிரைகளை மெல்லச் செலுத்தியும், தேரின் மணிகளில் தொங்கும் நாவினைக் கட்டியும் வருகின்றமையினால் தான் காலம் தாழ்த்துகின்றான் என்று கூறிய நுட்பம் அறிந்து போற்றத்தக்க–தாகவுள்ளது.

"பூதத பொங்கா துணைபையாடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்"
என்று தேற்றுகின்றாள் தோழி.

முதல் ஏழு அடிகளில் கார்காலத் தொடக்கத்தினை முல்லை, கொன்றை, இல்லம் ஆகியவற்றையும் இரலை மான்கள் பள்ளம் நோக்கிச் சென்று நீர் பருகி வேட்கை தணித்துக் கொண்டமையினையும் காட்டி விளக்கும் பெற்றி இனிதாய் அமைந்துள்ளது.

இச்செய்யுள் மொழிமாற்றுப் பொருள்கோளுக்கு எடுத்துக் காட்டாகும் என்கிறார் உரையாசிரியராகிய பெருமழைப் புலவர் திரு.பொ.வே. சோமசுந்தரனார்.

1. அரிபெய் சிலம்பின்.....பொய்ம்மொழி எமக்கே (அகம்.6)

திணை : மருதம்.

துறை : பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது.

பாடியவர் : பரணர்

தலைவன் பரத்தையோடு சென்று நீராட்டு அயர்ந்து மீண்டும் வந்து தலைவியைப் பாராட்டும் போது தலைவி அவன் செயலைத் தன் பாங்காயினார் கூறக் கேட்டிருந்தமையால் அவனோடு ஊடிப் பின் வருமாறு கூறினான்.

பொருள் :

மணிகள் உள்ளிடற்பெற்ற சிலம்பினையும், ஆம்பல் மலரால் தொகுக்கப்பட்ட மாலையினையும் அரத்தால் அரிந்து இயற்றப்பட்ட அழகிய வளையோடு பொலிவு பெற்றுள்ள முன்கைகளையும், பொன்மணி முதலியவற்றால் இயன்ற அணிகலன் களையுடைய மூங்கில் போன்ற தோள்களையுடைய கற்புடைமையால் புகழ் பெற்ற ஐயை என்பாளின் தந்தையாகிய சிறந்த வள்ளன்மைமிக்க தித்தன் என்னும் மன்னனுக்குரிய மழைவளம் தோற்றுவித்த குவியலாகிய நெல்லுடைமையிற் சிறந்தது உறையூர். அவ்வூரிடத்தே ஓடக்கோலும் நிலைபெறாமைக்குக் காரணமான காவிரிப் பேரியாற்றின் வெள்ளத்தின்கண் நேற்று நீ மாட்சிமை மிக்க குழை முதலிய ஒள்ளிய அணிகலன் களையுடைய நின்னால் விரும்பப்பட்ட பரத்தையோடு வேழக்கரும்பால் இயன்ற வெள்ளிய தெப்பத்தைத் தழுவிக் கொண்டு, பூமி நாட்டாருடைய குளத்தின்கண் பிடியோடு சென்று நீராடுகின்ற களிற்று யானை போன்று அவ்விடத்தே நினது உயர்ந்த அழகான மார்பிலணிந்த பூமாலை குழையும்படி நீராடினை அல்லவா? இவ்வாறு பெரிதும் பரத்தையர் கேளாமையுடைய நீ தூயவன் போல இன்று இங்கு வந்து, எம்மைப் பணிந்து, மார்பின் கண்ணவாகிய அழகிய முலையின் மேல் அழகிய தேமலையுடைய குற்றமற்ற கற்பினையுடைய நம் அரும்பெறல் மகனுக்குத் தாயே என்று எம்மை பாராட்டுவாய் போல வஞ்சகமாய்ப் பொய்ம்மொழிகள் பல பலகாலும் கூறி, எமது முதுமையைச் சுட்டி எம்மை இகழாதே. அம்முதுமைக்கு யாம் நாணமாட்டோம். நெருப்பு பிழம்புகள் போன்ற அழகிய தாமரை மலர்களையுடைய நீர்மிக்க பொது நிலத்தின்கண் படர்ந்த, அழகிய உள்துளை பொருந்திய வள்ளையினது நுண்ணிய கொடிகளை உழக்கித் திரிந்து வாளை மீனைப் பற்றித் தின்ற கூர்ந்த பற்களையுடைய நீர் நாயானது முட்கள் பொருந்திய அடிப்பகுதியை யுடைய பிரம்பினது பழைய கொடிப் பிணக்கத்தினூடு புதைந்து கிடத்தற்கு இடனான பலவாகிய வேற்படைகளையுடைய மத்தி என்னும் வேந்தனுடைய கழாஅர் என்னும் மூதுரை ஒத்த, ஐம்புல இன்பங்களும் நிரம்பத் தருகின்ற எம்முடைய இளமையானது எம்மைக் கைவிட்டுச் சென்று மிகவும் பழையதாயிற்று. ஆகவே எமக்கு நின்மாயப் பொய்ம்மொழி செய்யக்கூடிய இன்பம் யாதோ? கூறுதி" என்று தலைவி தலைவனோடு ஊடுகின்றான்.

விளக்கம் : இளமைமிக்க பரத்தையை நாடும் நீ, குழந்தையைப் பெற்றதால இளமை ஓரளவு நீங்கி முதுமை எய்தியுள்ள என்னிடம் வந்து மாயப் பொய்ம்மொழி கூறி, என்னைப் பாராட்டுவதால் என்ன பயன் விளையப் போகிறது? என்பதுதான் இப்பாடலின் திரண்ட கருத்தாகும்.

பரணர் பாடலின் தனிச்சிறப்பு, வரலாற்றுச் செய்திகளைப் பாடற் செய்திகளுக்கு உவமையாகக் கூறுவதுதான். இங்கே மூன்று வரலாற்றுச் செய்திகள் சுட்டப்படுகின்றன.

1. உறையூரை ஆண்டு வந்தவன் தித்தன். சிறந்த வள்ளல். மழை வளத்தால் மிக்க செல்வமுடையவன். அவன் மகள் ஐயை. அவள் கற்பிற் சிறந்தவள். பேரழகு படைத்தவள். (சிலம்பு, மாலை, வளையல், அணிகலன்கள் அணிந்து அழகான தோளும், முன்கையும் உடையவள்) தித்தனுக்குரிய உறையூரைச் சார்ந்து ஓடுவதுதான் காவிரியாறு. அதில் புதுவெள்ளம் அடிக்கடி வருவதுண்டு. மக்கள் விரும்பி அதில் ஆடுவர்.

2. பெண்யானையும் ஆண்யானையும் நீராடும் சிறப்பினை உடையது பூழிநாட்டுக் குளங்கள்.

3. மத்தி என்னும் வேந்தனுக்குரிய ஊர் கழாஅர் என்பது. அவன் வேற்படைகளை மிகுதியாகக் கொண்டவன்.

அகநானூற்றின் பழைய உரையாசிரியர் இப்பாடலில் அமைந்துள்ள உள்ளுறையைப் பின்வருமாறு கூறுவார். நீர்நாய் வாளைக்குக் காவலாகிய வள்ளையினது நிலையை நெகிழ்த்து, இழிந்ததாகிய வாளையை நுகர்ந்து பிரம்பாகிய முதிய தூற்றிலே தங்கினாற்போல நீயும் பரத்தையர்க்குக் காவலாகிய தாய் முதலாயினாரது நிலைமையை நெகிழ்ந்துக் குலமகளிரல்லாத விலைமகளிரை நுகர்ந்து முன்பு நுமக்குண்டாகிய எங்கள் பழமையைப் பற்ற ஒரு பயன் கருதாது தங்குதல் மாத்திரத்திற்கு எம்மில்லில் வந்தீர் என்றானாம்.

மூன்று பக்க வினாக்கள்:

1. ஐங்குறுநூற்று உவமைகள்:

இரண்டு பொருள்களிடத்துக் காணப்பெறும் ஒரு பொதுத்தன்மையின் அடிப்படையில் உவமைகள் எழுந்தன. பொருள் புலப்படுத்துவதே உவமையின் அடிப்படை நோக்கமாகும். தொல்காப்பியர் உவமை ஒன்றையே கூறினார். பிற்காலத்தோர் உவமையின் பல்வேறு விகற்பங்களாகத் தொல்காப்பியர் கூறியவற்றைப் பல்வேறு பிரிவுகளாக்கி, அணிகளாகக் கருதினார். பொருள் விளக்கம் கருதி வந்த உவமை பிற்காலத்து அலங்காரமாகிக் கேட்பவர்க்கு இன்பம் பயக்கும் ஒன்றாக மாறி வளர்ந்தது.

"உவமை என்னும் தவலருங்கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்தமை"

பற்றி அம்பையதீட்சிதர் சித்திரமீமாம்சை என்ற நூலில் குறிப்பிடுவார். இத்தகைய உவமைகள் ஐங்குறுநூற்றில் நமக்குப் பாடமாக உள்ள பகுதியில் எவ்வாறு அமைந்துள்ளன என்று காண்போம்.

பாலைத்திணைப் பாடலாக ஓதலாந்தையார் பாடியுள்ள பாடலில் தலைவன் வருகின்ற வழியின்கண் வெஞ்சுரத்தில் காணப்படும் யானையின் துதிக்கைக்கு உவமை கூற வந்தார். யானையின் துதிக்கை சொரசொரப்பான செதிளை உடையது. அச்செதிலை விளக்க உவமை கூறினார் புலவர். அறம் மாறாது அப்பெய்யும் மறவர்களின் வில்லாற்றலால் வீழ்ந்த மறவர்க்கு நடுகல் எடுப்பர். அந்த நடுக்கல்லில் அம்மறவனின் பெயரும் பீடும் எழுதி வைப்பர். அவ்வாறு

எழுதப்பட்ட நடுகல் சொரசொரப்பாக இருக்கும். அத்தகைய செதிலை உடைய யானை எவ்வாறு விளக்குகின்றார்.

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்,
எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பினர்ப்
பெருங்கை யானை... ... "

என்பதே அப்பாடல் அடியாகும்.

வினைமுடித்துத் தலைவியைக் காண விரைந்து வந்தான் தலைவன். அவ்வாறு விரைந்து வந்தமைக்குக் காரணம் கூறப்புகுந்தான் அவன் தலைவன் தான் வரும் வழியில் மயில்களையும், முல்லை மலர்களையும், மான்களையும் கண்டானாம். அவற்றைப் பார்க்கும் போது தலைவியின் சாயலும் நுதலின் நாற்றமும் மருண்ட பார்வையும் மனக்கண்முன் தோன்றினவாம். வழக்கமாக மயிலின் சாயலைப் போன்ற சாயல் என்றும் முல்லையின் நறுமணம் போன்ற நறுநுதல் என்றும் மானின் மருண்ட பார்வை போன்ற பார்வை என்றும் உவமை கூறுவர் புலவர். ஆனால் இப்பாடலிலோ தலைவியின் சாயலையும், நறுநுதலையும், மருண்ட பார்வையையும் பிற பொருள்களிடத்துக் கண்டதாக உரைப்பது உவமையில் ஒரு புதுமை ஆகும். இதோ இந்த உவமை.

"நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க"

என்பது பேயனாரின் ஐங்குறு நூற்றுப் பாடல் ஆகும்.

அம்மூவனாரின் பாடலில் வாயில் மறுக்கும் தன்மையில் தலைவி கூற்றாக வரும் பாடலில் வரும் உவமையைக் காண்போம். பரத்தை வீட்டிற்குச் சென்றிருந்தான். பின் ஒருநாள் தன் இல்லத்திற்கு வந்து மீண்டும் பரத்தை வீடு சென்று தங்கினான். அவ்வாறு ஒருநாள், தன் காதல் மனையாளுடன் தங்கியமைக்காக அவனால் விரும்பப்படும் பரத்தையர் ஏழு நாள்கள் வரை உருகி உருகி அழுதன நாம் தீயிலே பட்ட மெழுகு உருகுவது போன்று அவர்கள் உருகினர் என்று உவமை மூலம் கூறி விளக்குதல் காண்க.

"ஒரு நாள் நம்மில் வந்ததற்கு ஏழுநாள்
அழுப என்ப அவன் பெண்டிர்
தீயுறு மெழுகின் நெகிழ்வனர் விரைந்தே"

என்பதே அவ்வுவமை ஆகும். இவ்வாறு புலவர்கள் உவமைகளைக் கூறுவதன் மூலம் பொருளைத் தெளிவுபடுத்துவதோடு கூறுகின்ற செய்திக்கு வலிமையும் தருகின்றனர்.

2. குறுந்தொகையில் வரும் உவமைகள் சில.

கீழ் வருவனவற்றைக் கட்டுரை வடிவில் எழுதிப் பார்க்க.

அ "செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"

ஆ. "ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் ... ... "

3. எட்டுத்தொகை நூல்களில் அறியலாகும் பழந்தமிழர் பழக்க வழக்கங்கள் (ஐங்குறுநூறு. குறுந்தொகை, அகநானூறு).

(குறிப்பு: கீழ் வருவனவற்றைக் கட்டுரை வடிவில் எழுதிப் பயில்க)

1. போரில் புண்பட்டு இறந்த வீரர்க்கு நடுகல் எடுக்கும் வழக்கம் உண்டு. அக்கல்லில் இறந்த வீரனின் பெயரும் பீடும் எழுதுவர்.

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர் எழுத்துடை நடுகல் (ஐங்)

2. தலைவிக்குச் சிலம்பு கழிக்கும் நோன்பும் வதுவை நன்மணம் செய்வித்தலும் தலைவியின் மனையிலேயே நடந்தன என்பதைக் கூறுவது இது.

"நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மனம் கழிகென" (ஐங்)

3. திருமணம் புரிந்து புதிதில் தலைவி எவ்வாறு சமையல் தொழிலில் ஈடுபட்டாள் என்பதனைக் காட்டுவது கூடலூர் கிழார் பாடிய" முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்..."

என்ற குறுந்தொகைப் பாடல்.

4. இப்பிறப்பு மட்டுமல்லாமல் மறுபிறப்பிலும் கணவன் மனைவியாகப் பிறக்க வேண்டும் என விரும்பினர் பழந்தமிழர் என்பதனை.

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியரென் நெஞ்சுநேர். பவனே" (குறுந்)

என்ற அம்மூவனாரின் பாடலால் அறிய முடிகின்றது.

6. கலித்தொகை

"கலித்தொகையில் உள்ள பாட்டுகள் காதல் பாட்டுகள். நல்ல சொல்லோவியங்களாக இருப்பதோடு, இனிய ஓசை நயம் உள்ளவைகளாகவும் இருக்கின்றன. அவற்றின் தாழிசைகள் பழங்காலத்து மக்கள் பாடலின் இனிய ஓசையை ஒட்டி அமைந்தவை. ஒரே இருத்தையோ. உணர்ச்சியையோ மூன்று தாழிசைகளில் மூன்று முறை ஒரே வகை ஓசையில் உணர்த்தும் அந்தத் தாழிசைப் பாட்டுகள் உள்ளத்தைத் தொடும் இனிமை உடையவை.

– டாக்டர். மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு. ப–37

இக்கலித்தொகையில் முதற்கண் நின்ற பாலைக்கலியைப் பாடியவர் பெருங்கடுங்கோன் ஆவார். சேரர் குல மன்னனாகிய இவரைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று போற்றுவர். இக்கலித்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர், நெய்தற்கலியைப் பாடிய நல்லந்துவனார் ஆவார். குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற முறையில் தொகுக்காது. பாலையை முதற்கண் வைத்துத் தொகுத்துள்ளார். துன்பம் மிக்க பாலைத் திணையை முதற்கண் வைத்தமைக்குரிய தக்க சான்றுகளைப் புலவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

"ஆண்கடன் அகறல் அதுநோன்று ஒழுகுதல்
மாண்பொடு புணர்ந்த மாசறு திருநுதல்
கற்புடை மகளிர் கடன்"

என வரும் பெருங்கதை அடிகளை மேற்கோள் காட்டி இதன்கண் முல்லைத் திணையே முதற்கண் கூறப்பட்டது என்பார் அவர்.

நமக்குப் பாடமாக அமைந்துள்ள பாடல் "தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக" என்று தொடங்கும் பாலைக்கலியின் முதற்பாடலாகும். 29 அடிகளைக் கொண்டது இது. கலித்தொகையில் ஐந்து திணைகளுமாகச் சேர்ந்து 149 பாடல்கள் உள. கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றினைச் சேர்த்தால் 150 பாடல்கள் ஆகும்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ	– பாலை	– 35 பாடல்கள்
கபிலர்	– குறிஞ்சி	– 29 பாடல்கள்
மதுரை மருதன் இளநாகனார்	– மருதம்	– 35 பாடல்கள்
சோழன் நல்லுருத்திரன்	– முல்லை	– 17 பாடல்கள்
நல்லந்துவனார்	– நெய்தல்	– 33 பாடல்கள்
கடவுள் வாழ்த்து		– 1 பாடல்கள்
		– 150

கலிப்பாவின் அமைப்பு முறையை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டு விளங்குவது கலிப்பாவின் முதற் கண்ணாக அமையும் உறுப்பு தரவு ஆகும். பாடலின் கருத்தினைத் தந்து நிற்றலின் தரவு எனப்பட்டது. முன்னுரைப் பகுதி போல அமையும் கலிப்பாவின் கருத்துகளைக் கூறும்பகுதி தாழிசையாகும். இது கேட்போன் உள்ளம் கூறுகின்ற கருத்தில் தாழ்ந்து படியுமாறு மூன்று முறை அடுக்கி வருவதாகும்.

தாழிசையின் தெளிவான கருத்தையும் சுரிதகத்தினால் விளையப் போகும் பயனையும் இடைக்கண் நின்று இணைப்பது தனிச் சொல்லினுடைய செயலாகும். இதனை அடுத்த அமைவது சுரிதகம். முடிவைச் சுருக்கித் தரும் அமைப்புடையது சுரிதகம் ஆகும்.

இனி, பாடலைக் காண்போம்,

"ஒன்றாத் தமரினும் என்ற சூத்திரத்து நாளது சின்மையும் மிளமைய தருமையுந், தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியு மின்மைய திழிவுமுடைமைய துயர்ச்சியு, மண்பின தகலமு மகற்சிய தருமையு மொன்றாப் பொருள் வயினூக்கிய பாலினும்," என்பதனால் இன்மையது இழிவு கூறி இல்வாழ்க்கை நெறி ஆற்றுதற்குப் பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்குத் தலைமகளது இயல்பு கூறி, "இப் பெற்றியாளைப் பிரியாமையே பொருளாவருதனச்" சொல்லிச் செலவழுங்குவித்தமை தோழி தலைமகட்கு உவந்து சொல்லியது.

தலைவன் தன்னை நாடி வந்து இரப்பவர்க்கு வழங்க முடியா வறுமையின் கொடுமையைக் கூறி, இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளைத் தேடும் பொருட்டுத் தலைவியை விட்டுப்பிரியப் போகின்றேன் என்று தோழியிடம் கூறினான். தோழி தலைவியின் இயல்பைக் கூறி அத்தகையவளைப் பிரியாமல் இருப்பதே பொருளாகும் என்று கூறினாள். தலைவன் பயணத்தைத் தள்ளிப்போட்டான். தலைவனை, தலைவியைப் பிரியாமல் தான் தடுத்து நிறுத்திவிட்ட செய்தியைத் தலைவியிடம் தோழி உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

கருத்துரை: "தொடங்கற்கண் ... ... தைஇய" (1–10)

4th Proof

தலைவன் பிரிவானே என்று அஞ்சிக் கண்ணீர் விட்டுக் கலங்கினாள் தலைவி. அவ்வாறு கண்ணீர் விடும். ஆருயிர்த் தோழியாகிய தலைவியை நோக்கித் தோழி கூறுவது இது.

"தோழி! கலங்காதே! நம் தலைவனை நான் கண்டேன்! கண்டு, இறைவன் உலகைப் படைத்த காலம் அவ்வமயம், படைக்கும் தொழிலைச் செயயும் நான்முகன், பிற தேவர்கள் பின் தொடர அவுணர்களின் ஆணவத்தை அழிக்குமாறு முக்கண் முதல்வனாகிய சிவபெருமானிடம் வந்து வேண்டினன். அது கேட்ட சிவன், கூற்றுவன் போற் சினங்கொண்டு எழுந்தான். அழிவு செய்யும் அவ்வரக்கர்கள் வாழ்கின்ற திரிபுரக் கோட்டைகளைச் சினந்து நோக்கினான். அவ்வாறு சினந்து நோக்கிய பொழுது, அவன் முகம் செந்தீப் பொறிகளைச் சிதறியது. அக்கோட்டைகளின் மேல் அது போல், வெண்கதிர் வீசும் ஞாயிறு வெயிலைக் கக்கிற்று தலைவன் செல்கின்ற பாலை நிலம். சிவபெருமான் அக்கோட்டைகளைச் சினந்து நோக்கப் பொடிப் பொடியாயின அவை. அதனைப் போன்று பாலை வழிகளில் உள்ள கற்கள் கதிரவனின் கடுமையான வெப்பத்திற்கு ஆற்றாமல், வெடி, பட்டுச் சிதறி அவ்வழியே செல்வாரைச் செல்ல விடாமல் தடுத்தன. அத்தகைய பாலை வழியில் உம்மை மறக்க இயலாத பெருங்காதலுடைய தலைவியை இங்கே கிடந்து வருத்தி அழத் தனியே விடுத்துச் செல்லத் துணிந்து விட்டாய்! அவ்வாறு நீ செல்வதற்கு முன்பாக நான் கூறுவதனைக் கேட்பாயாக.

"தொலைவாகி ... ... வல்லதை" (11–14)

முன்பு சேர்த்து வைத்து வைத்த செல்வமெல்லாம் தொலைந்து விட்டமையினால், இப்போது வந்து இரந்து கேட்கும் வறியோர்க்குக் கொடுத்து உதவ முடியாதிருப்பது இழிவாகும் என்று எண்ணி மலைகள் பலவற்றைக் கடந்து சென்று தேடக் கருதிய செல்வம் சிறந்த செல்வமே ஆயினும், நீ கூறும் கட்டளையின் வழியே நிற்கும் கற்பும் நீ பிரிந்து விட்டால் உயிர் வாழ மாட்டாத காதலும் உடையவளாகிய உன் தலைவியைப் பிரியாதிருப்பதே செல்வம் ஆகுமே அல்லது, அவளைப் பிரிந்து போய்ச் சேர்க்கின்ற செல்வமும் சிறப்புடைய செல்வம் ஆகுமோ? ஆகாது!

"நிலைஇய கற்பினார், நீ நீப்பின் வாழாதாள்"

பிரியாமையே பொருளாகும்.

"இல்லென இரந்தோர்க்கு ... ... அல்லதை" (15–18)

–வாழ வழியில்லை என்று வறுமை நிலை கூறி வந்து இரப்பவர்க்குக் கொடுக்க முடியாமல், நாமும் வருந்துவது நமக்கு இழிவாகும் என்று எண்ணிக் கற்கள் மலிந்த காட்டு வழியினைக் கடந்து சென்று சேர்க்க எண்ணிய செல்வம் சிறந்த செல்வம் ஆகுமோ?

இல்லென இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவெனக் கல்லிறந்து செயல் தூண்ந்த பொருள் பொருளாகுமோ?" ஆயினும் முன்பு கொண்ட காதல் கெடாவண்ணம் வாழ்க்கைத் துணையாய் வாய்த்த உன் தலைவியின், தழுவ மகிழ்ச்சி தரும் மார்பைப் பிரியாதிருப்பதே பெருஞ்செல்வம் ஆகுமே அல்லது, அவளைப் பிரிந்து போய்ச் சேர்க்கும் செல்வம், சிறப்புடைய செல்வம் ஆகுமோ? ஆகாது!

"இடன் இன்றி ... ... அல்லதை" (19)

–வாழ்வதற்கு இடம் இல்லாமையினால் உன்னை வந்து இரப்பவர்க்குப் சிறிது பொருளேனும் கொடுக்க மாட்டாமை இழிவாகும் என்று எண்ணிக் காட்டைக்கடந்து போய்ச் சேர்க்க விரும்பிய செல்வம் சிறந்த செல்வமே! ஆயினும் அருந்ததி போலும்

4th Proof

வணங்கி வழிபடத் தக்க கற்புடைய உன் தலைவியின் பருத்த மெல்லிய தோள்களைப் பிரியாதிருப்பதே பெருஞ்செல்வமாகும். அஃதல்லது அவளைப் பிரிந்து போய்ச் சேர்க்கும் செல்வமும் செல்வம் ஆகுமோ எனில் ஆகாது.

"வடமீனின் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்
தடமென் தோள் பிரியாமை"
ஒன்றே சிறந்த செல்வமாகும்.
"என இவள்
புன் கண் கொண்டு ... . காதலோரே" (23–29)

–என்று நான் உனக்குக் கூறுமாறு இவள் துன்பம் கொண்டு துயர் உறவும், பொருள் தேடிப் போவது அன்புடையார் செய்யும் செயல் அன்று என்று நான் கூறினேன். அவ் அறிவுரைக்கு அடங்கித் தன் கருத்தை. மாற்றிக் கொள்ளாத தலைவன், பாகனுடைய குத்துக் கோல் கொண்டு குத்தவும் அடங்காது மதம் பட்டுத் திரியும் யானை, யாழிசையைக் கேட்டவுடன் அடங்கிவிடுவது போல, உன்னைப் பிரிந்தால் உன்னுடைய பேரழகு பாழாய்ப் போகும் என்று கூறக் கேட்டவுடனே, அஞ்சினான், அஞ்சி உன்பால் அன்பு நனிகொண்டு, என் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தன் கருத்தைக் கைவிட்டு விட்டான் . எனவே, தோழி! நீ கலங்காதே! என்று கூறித்.

"தொல்கவின் தொலைத லஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காதலோரே!"

என்று தலைவன் செலவழுங்கினமையினைக் கூறினான்.

திணை : பாலை

துறை : இஃது உடன்போய தலைவியின் செவிலி இடைசுரத்து முக்கோல் பகவரை ளமுன்வரைக்ன கண்டு இவ்வகைப் பட்டாரை ஆண்டுக் காணீரோவென வினவிளாளுக்கு, அவரைக் கண்டு அஃது அறமெனது கருதிப் போந்தோம். நீரும் அவர் திறத்து எவ்வப்பட வேண்டாவென எடுத்துக்காட்டி., அவர் தெருட்டியது ளதெளிவடையச் செய்தது.ன

பாடியவர் : பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள் : "பெருமா! அந்தணீர்! உறியிலே தங்கின கமண்டலத்தையும், அரி அயன் அரன் என்னும் மூவரும் எறித்தலைச் செய்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குகையாலே எடுக்கப்பட்ட குடைநிழலிலே, வெவ்விடக் காட்டிடத்தே போதலை இயல்பாகவுடைய ஒழுக்கத்தினை உடையீராதலின் உம்மை வினவுகின்றேன். இக்காட்டிடத்து என்னுடைய மகளொருத்தியும் வேறொருத்தியும் மகனொருவனும், பிறரறியாமல் தங்களிலே கூடினவர்கள், இப்பொழுது பிறர் அறிந்த கூட்டத்தை உடையராயினர். அத்தன்மையாளர் இருவரைக் காணாதிருந்தீரோ" ளசெவிலி கூற்றுன

இக்காட்டிடைக் காணாதிருந்தோம் அல்லேம். கண்டு அஃது அறமென்றே கருதிப் போந்தோம். ஆண் மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனோட இவ்வரிய சுரத்தைக் கடக்கக் கருதிப் போந்த மாட்சிமைப்பட்ட அணியினையுடைய மடப்பத்தையாளுக்குத் தாயாகும் தன்மையை உடையீர் போல இருந்தீர்.

"நறியன பலவும் கூடும் நறிய சந்தனம் மெய்யில் பூசுவார்க்குப் பயன் கொடுப்பதல்லது மலையிடத்தே பிறந்தனவாயினும் அச்சந்தனங்கள் தாம் அம்மலைக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நும் மகளும் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்பட்டாள். தலைமை பொருந்திய வெள்ளி முத்துக்கள் அணிபவர்க்குப் பயன்படுவதல்லது கடலிடத்தே

பிறந்தனவாயினும் அம்முத்துக்கள் தாம் அக்கடலுக்கு என்ன பயனைக் கொடுகுகும ? ஆராயுங்கால் நும் மகளும் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்படாள். ஏழு நரம்பாற் கட்டிய இனிய ஓசைகள் பாடுவோர்க்குப் பயன் கொடுத்தல்லது யாழிடத்தே பிறந்தனவாயினும் அவ்வோசைகள் தாம் அந்த யாழுக்கு என்ன பயனைக் கொடுக்கும் ? சூழுங்கால் நும்மகள் நுமக்கு ஆங்கு அணையளே. ஆதலால் மிக்க கற்பினையுடையாளுக்கு வருத்தப்படாமல் கொள்ளுமின் ? இருமுது குரவரிலும் சிறந்த கணவனை வழிபட்டு அவன் பின்னேபோனாள். இவ்வில்லறமே அறங்களில் தலையாய அறம். மறுமைப் பயனும் இதுவேயாம்".

விளக்கம் : உண்மையான காதலுக்குத் தன் வீட்டோர் தடையாக இருப்பதை அறிந்த தலைவி தோழியின் உதவியோடு வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தலைவனுடன் பயணத்தைத் தொடங்குகிறாள். அதுதான் 'உடன்போக்கு' என்று அக்காலத்தில் கூறப்பட்டது. அப்படி உடன்போக்கில் சென்ற மகளையும், பையனையும் தேடிக் கொண்டு தலைவியின் வளர்ப்புத் தாய் காட்டிற்கு வருகிறாள். வழியில் முனிவர்களைக் கண்டு அவர்களைப் பற்றி பேரார்வத்தோடு விசாரிக்கிறார். முனிவரோ உடன்போக்கிச் சென்றோரைத் தாம் கண்டதாகக் கூறி, புகுந்தவீடு நோக்கிச் செல்லும் அவள் இனிப் பிறந்த வீட்டிற்குப் பயன்படாள் எனக் கூறிச் செவிலிக்கு ஆறுதல் தந்து அவளைத் திருப்பி அனுப்புகிறார். சந்தனம், மணி, யாழிசை ஆகிய மூன்றும் பிறக்கும் இடத்தில் பயன்படாமல் சேரும் இடத்திற்கே பயன்தரக்கூடியவை. அவற்றைத் தலைவியோடு ஒப்புமைப்படுத்தும் பெருங்கடுங்கோவின் புலமைத்திறம் எண்ணி வியக்கத்தக்கது.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்(கு) அல்லதை
மலையுளே பிறப்பனு மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்(கு) அனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என் செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்(கு) அனையளே
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என் செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

என்னும் தாழிசை நாட்டுப்புறப்பாடல் அமைப்பில் உள்ளதை நோக்க வேண்டும். சங்கப் புலவர்களின் உளவியல் பாங்கை இவ்வடிகளில் காண முடிகின்றது. இம்மைக்கும் மறுமைக்கும் உதவும் இல்லறத்தின் சிறப்பு – வள்ளுவர் போற்றும் இல்வாழ்வின் மாண்பு – இப்பாடலில் அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முப்பக்க வினா:

1. பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியுள்ள பாலைக்கலியின் கருத்தைத் தொகுத்துரைக்க.

   விடை: பாலைக்கலிப் பாடலின் கருத்துரைகள் முழுவதையும் தொகுத்துக் கற்க.

2. பாலைக்கலியுள் பயின்று வரும் உவமைகளின் சிறப்பினை விளக்குக.

   விடை : .... தொடர்ந்து வருகிறது.

பாலைக்கலியில் உவமை

முன்னுரை:

"தொடங்கற்கண் .... " என்று தொடங்கும் இப்பாலைக்கலிப் பாடலைப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆவார். இவர் பாலைத் திணை பாடுவதில் வல்லவர் என்பதனால் இவ்வடை மொழியுடன் அழைக்கப்படுகின்றார். புலமை நலம் சான்ற மன்னராவர். இவர் இவருடைய பாடலில் ஐந்து உவமைகளைக் கையாண்டு சிறப்பித்துள்ளார். புராண அடிப்படையிலும் இயற்கைச் செய்தியினையும் உவமைகளாகக் கையாண்டுள்ளமை இவண் எண்ணி மகிழத்தக்கது.

பாலைக் கலியின் தொடக்கத்தில் பாலையின் வெம்மையும் பாலையைக் கடக்க முடியாத நிலைமையும் பேசப்படுகின்றன. அவற்றை விளக்க எண்ணிய கடுங்கோ புராண உவமைகளைத் திறம்படக் கையாண்டு சுவை கூட்டியுள்ளார்.

தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்ல எண்ணினான். அவன் செல்ல எண்ணிய பாலை நிலத்தின் வெம்மை எளிதில் பொறுத்துக் கொள்ள இயலாதபடி இருந்தது. கதிரவனின் வெங்கதிர் சுட்டெரித்தது. அப்பாலை வழியில் கனல் பொறி பறக்கும் பாலை நிலத்து வெம்மையைச் சுட்ட எண்ணிய புலவர் சிவபெருமான் அவுணர்களின் பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று கோட்டைகளைச் சுட்டெரிக்க விழித்தான். அவற்றை அழித்தான். அப்போது அவன் முகத்துத் தோன்றிய கோபக்கனல் போன்று கனன்றது பாலைவழி என்றார்.

"மடங்கல் போற் சினைஇ மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்" (3–5)

பாலைவழியில் வெங்கதிர் சுட்டெரிப்பதனால் அங்குள்ள கற்பாறைகள் வழி எங்கும் பொடிப்பொடியாய்ச் சிதறிக் கிடந்தன. அத்துண்டுகள் வழிச் செல்வோரைப் போகாதவாறு தடுத்து நிறுத்தும். அப்படிக் கற்கள் சிதறி விழுந்தமைக்கு உவமையாக இங்கே சிவபெருமான் முப்புரத்தை அழித்தபோது அக்கோட்டைகள் சிதறி விழுந்தமை கூறப்பட்டது.

"சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந்து இயங்குநர்
ஆறுகெட விலங்கிய அழலவிர் ஆர்இடை (6–8)

இவ்விரு உவமைகளை அடுத்துத் தலைவியின் கற்பு மேம்பாட்டை உயர்த்திக் கூற எண்ணிய பெருங்கடுங்கோ அருந்ததியைக் கூறுவார். அவ்வுவமை இதோ வருமாறு:

"வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்" (21)

இதனுடன் சிலப்பதிகாரத்தில் வரும் , "தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்" என வரும் பகுதி ஒப்பிட்டுக் காணத்தக்கதாகும்.

புராண உவமைகளைக் கூறுவதோடு இப்புலவர் நின்று விடாமல் இயற்கைக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் உவமையாகக் கூறும் பண்பினர் என்பதற்கு ஒரு சான்று காண்போம்.

பொருள்தேடி வரத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிய எண்ணுகின்றான். ஆனால் தலைவியோ அப்பிரிவினைப் பொறுத்துக் கொள்ள இயலாதவளாகத் தவிக்கின்றார். அவளுக்காகத் தோழி பாலைவழியின் வெம்மையையும் வழியின் அருமையையும் கூறினாள். ஆயினும் அவன் பிரியத் தலைப்பட்டான். அந்நிலையில் அவள் தலைவியின் எழில்நலம்

சிதைந்துகெடும் என்று கூறினாள். அதனைக் கேள்வியுற்ற உடன் தன் செலவினை நிறுத்தி விட்டான். இதற்கு உவமை கூறி விளக்குகின்றார் புலவர். யானைப் பாகனுடைய கையில் உள்ள குத்துக்கோலுக்கு அஞ்சாத மதங்கொண்ட களிறு, இனிய யாழின் இசையைக் கேட்டுக் கட்டுண்டு வசப்பட்டு நிற்கும் தன்மை தலைவனின் பண்புள்ளத்திற்கு–அன்புள்ளத்தின் மென்மைக்குச் சான்றாக உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி ஆங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைதல் அஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே" (25–29)

என்பதே அவ் இயற்கைக் காட்சி படம் பிடிக்கப்பட்டுள்ள உவமை ஆகும். இவ்வாறு பாலைக்கலிப் பாடல் ஒன்றிலேயே இத்தனை உவமைகளைச் சிறப்புற அமைத்துக் காட்டும் இவர் பிறபாலைக் கலிப்பாடல்களில் எத்தனை கூறியிருப்பாரோ என்று வியக்கத் தோன்றுகின்றதன்றோ.

7. புறநானூறு

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு புறத்திணை பற்றிய நானூறு பாடல்களின் தொகுப்பாகும். புறநானூற்றைப் பாடிய புலவர்கள் 160 பேர் ஆவர். தமிழகத்தின் பழங்கால வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் வரலாற்றுப் பெட்டகமாகக் வேந்தர்தம் வீரமும் கொடைச் சிறப்பும், அறநெறி தழுவிய ஆட்சி முறைமையும் இனிது விளக்கப்பட்டுள்ளன. மூவேந்தர் தம் வரலாறு கூறும் ஒரு பெரு நூலாகும். இதில் கடை ஏழு வள்ளல்களைப் பற்றிய குறிப்பும் பெறப்படுகின்றது. சங்க காலத்துப் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றது. இந்நூல் ஒவ்வொரு பாடலுக்கும் திணை–துறைகள் வகுத்துரைக்கப் பட்டுள்ளன. இத்தகைய புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களமாக விளங்கும் இத்தொகை நூலிலிருந்து ஐந்து பாடல்கள் நமக்குப் பாடமாக உள்ளன.

பாடல்-1

"செருப்பிடைச் சிறுபரல் அன்னன் ... ... கேளாதோனே"

திணை : வெட்சி

வெட்சிப் பூவைச் சூடிக் கொண்டு பகைவருடைய பசுக் கூட்டத்தைக் கவர்தலை வெட்சி என்பர்.

"வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றி கன்முனை ஆதந் தன்று"

என்பது புறப்பொருள் வெண்பாமாலைக் கூற்று.

துறை : உண்டாட்டு.

உண்டாட்டு என்பது பகைவர்தம் ஆநிரைகளைக் கவர்ந்து கொண்டு வந்த வீரர் மதுவையுண்டு மனங்களித்தல் என்பதாகும்.

"தொட்டிமிழுங் கழல் மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று"

என்பது புறப்பொருள் வெண்பா மாலையில் வரும் நூற்பா.

கருத்துரை:– செருப்பின் இடையில் அகப்பட்ட சிறிய கல்லைப் போன்று எம் தலைவன் பகைவர்களை மேற்செல்லாத வண்ணம் தடுத்து நிறுத்திப் போர் புரியும் ஆற்றலன். திரண்ட காலையும், அழகிய வயிற்றினையும், பரந்த மார்பினையும் உடையவன். பசிய கண்களையும், குச்சப்புல் நிரைத்தாற் போன்ற நிறம் பொருந்திய மயிரினையும் தாடியினையும் உடையவன். கன்னத்தில் உள்ள மயிர் செவியை மறைத்து வாய் வரை வளர்ந்திருக்கும். வில்லொடு நிற்கும் இரக்க மிக்க இவன் யார்? எண்ணிப் பார்ப்பின், இவன் இவ்வூரை விட்டே நீங்கினதும் இல்லை. பகைவரைக் கண்டு அஞ்சித் தனக்கு அரண் என்று கருதிக் காட்டைக் கைக்கொண்டதும் இலன். இன்று காலையிலேதான், பகைவர்தம் ஆநிரைகளை அவை செல்கின்ற இடத்தைப் பார்த்துத் தன் கையாற் குறித்து மெல்லத் தன் மனத்துள் எண்ணிக் கொண்டான். அவற்றைக் கவர்ந்த சுவடு தெரியா வண்ணம் கரந்தை மறவர் செய்யும் பூசலை மாற்றித் தன் வில்லாற்றலால் ஆநிரைகளைக் கவர்ந்து வந்தான். அவன் கவர்ந்த ஆக்களின் எண்ணிக்கை பலவாகும். இருப்பினும், அவன் வீட்டுப் பாற்பானை பால் கறந்த சுவடு பார்த்ததில்லை தயிர் கடையும் ஓசையை ஒருநாள் கூடத் தன் செவியாரக் கேட்டதில்லை. அனைத்து ஆநிரைகளையும் மற்றவர்கட்கே வழங்கி விட்டான். தன் தலைவன் என்று கள்ளுண்டு மகிழும் ஒரு வீரன் இவ்வாறு பாராட்டுகின்றான்.

பசுவினைக் கவர்ந்து வந்தமை கூறப்பட்டமையால் இது வெட்சித் திணை ஆயிற்று. பகைவர் தம் ஆநிரைகளைக் கவர்ந்து வந்து வீரனின் பெருமையைப் புகழ்ந்து அவன் கொடையைப் பாராட்டி மதுவுண்ட வீரன் கூற்றாக வருவதனால் இப்பாடல் உண்டாட்டு என்னும் துறையாயிற்று.

பாடல் - 2

"களிறு கடைஇய தான்
--- --- --- --- --- ---
பயன்திகழ் வைப்பிற் பிறர் அகன்தலை நாடே" (புறம்–7)

திணை–வஞ்சி துறை – கொற்றவளளை.

சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.

சோழ வேந்தருள் தலைசிறந்த கரிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனாரைப் போன்று முடத்தாமக் கண்ணியாரும், கடியலூர் உருத்திரங் கண்ணனாரும் பாடிச் சிறப்பித்துள்ளனர். புறநானூற்றில் 7. ஆவதாகத் திகழும் இப்பாடலைப் பாடியவர் கருங்குழலாதனார். இவர் சேர நாட்டைச் சேர்ந்த செந்தமிழ்ப் புலவர் ஆவார். இரும்பிடர்த் தலையார் பால் கல்வி கற்றவன். இளமையிலேயே தன் பகைவரை வென்று புகழ் ஈட்டியவன் ஆவான்.

வஞ்சித் திணை : கரிகால்வளவன் பகைவர் நாட்டின் மீது வஞ்சி ஆடிப் படையெடுத்த பெற்றியினைக் கூறுவதால் இது வஞ்சித்திணை ஆயிற்று.

"வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல்குறித்தன்று"

என்பது புறப்பொருள் வெண்பாமாலையார் கூற்று.

கொற்றவள்ளைத் துறை: பகைவர் நாடு அழிவது கருதி இரங்குவதாகும்.

"மன்னவன் புகழ்கிளந்து
ஒன்னார் நாரு அழிழ்பிரங்கின்று"

என்ற இலக்கணத்தின் படி இப்புறப்பாடலில் பயன்திகழ் வைப்பிற் பிறர் அகன்றலை நாட்டின் அழிவிற்கும் புலவர் இரங்கிக் கூறுவதனால், இது கொற்றவள்ளைத் துறை ஆயிற்று.

மழபுலவஞ்சியுமாம் என்பது தீயிட்ட வேளையில் பகைவர் வழியின்றி அழவும், அப்போது கொள்ளையிடுதலைக் கூறுவதனால் இது இத்துறையின்பாலும் கூறப்படுதல் பொருந்தும்.

கருத்துரை: கரிகால் வளவனே! நீ களிற்றைச் செலுத்திய தாளை உடையாய் உன் அடிகள் வீரக்கழல் உரிஞ்சிய இலக்கணத்தால் திருந்திய அடிகளாய்த் திகழ்கின்றன. அம்புகளைத் தொட்டுப் பொருதும், நாடிவந்த இரவலர்க்கு அள்ளி வழங்கியமையினால் கவிந்தும் விளங்கும் உன் கைகள். காண்பதற்கு அழகிய வில்லை ஏந்தியுள்ளாய். பிறர் மார்பை மறுத்து உன் மார்பிலேயே தங்குவதற்கு விரும்புவாள். திருமகள்.அத்தகைய அகன்று பரந்த மார்பினையுடையாய். யானையைப் பெயர்த்த மிக்க வலியினை உடையாய்! நீ இரவும் பகலும் என்று பாராது, பகைவரது ஊரைச் சுடுகின்ற தீயினது ஒளியின் கண்ணே தம் சுற்றத்தை அழைத்துக் கொண்டே அழுது அரற்றுகின்ற ஆரவாரத்துடன் கூடிய கொள்ளையை விரும்புகின்றாய்! ஆதலால், அப்பகைவர் நாடுகள் நலமிழந்து நல்ல பொருள்கள் கெட்டழிந்து போயின. இயற்றப்பட்ட தேரினையுடைய வளவனே! புதுப்புது வருவாயினையுடைய பயன் விளங்கும் ஊர்களையுடைய மாற்றாரது அகன்ற இடத்தையுடைய நாடுகள், குளிர்ந்த நீர் பரந்த ஓசையையுடைய உடைப்புக்களை மண் மறுத்தது. ஆனால் மீன்களால் அடைக்கும்.

"தண்புனல் பரந்த பூசல் மண்மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்திகழ் வைப்பிற்பிறர் அகன்தலை நாடே"

பாடல் - 3

"எனைப்பல் யானையும் அம்மொடு துளங்கி
--- ---- ---- --- --- ---- --- -- --------
காமர் கிடக்கையவர் அகன்றலை நாடே " (புறம்–63)
திணை – தும்பை துறை – தொகை நிலை.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கின்னியாகிய இவ்விருவரையும் அக்களத்திற் பரணர் பாடியது. இப் பெரு வேந்தர்கள் இருவரும் போர்க்களத்திற் பட்டு வீழ்ந்தது கண்டு, பரணர் போர்க்களத்திற்கே சென்று இரங்கிப் பாடியதாக அமைவதே இப் புறப்பாடல் ஆகும். இப்பாடலைப் பாடியவர் பரணர்.

தும்பைத் திணை : "செங்களத்து மறங்கருதிப்
பைந்தும்பை தலை மலைந் தன்று"

என்பது புறப்பொருள் வெண்பாமாலை நூற்பா தும்பைப் பூவினைச் சூடித் தம் முடைய ஆற்றலைப் புலப்படுத்த வேண்டிச் சேரனும் சோழனும் போரிட்டமையால் தும்பைத்திணை ஆகும்.

தொகை நிலைத் துறை: இருபெரு வேந்தருப் ஆற்றல் காரணமாகப் போரிட்டனர். ஆனால் போர்க்களத்தில் தம் புகழை நிலை நிறுத்திவிட்டு மாய்ந்து போயினர். எனவே இது தொகைநிலைத் துறை ஆயிற்று.

'அழிவின்று புகழ்நிறீஇ
ஒழிவின்று களத்தொழிந்தன்று" என்பது இலக்கணம்.

கருத்துரை : சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி ஆகிய இவ்விரு வேந்தர்களிடத்தும் எத்துணையோ யானைப் படைகள் இருந்தன. அவ்யானைகள் எல்லாம் அம்புகளால் கலங்கி, இனிமேல் போரின்மையினால் படையிடத்து அழிந்துபட்டன. வெற்றியை ஈட்டிப் புகழ் குவித்த குதிரைப் படைகள் எல்லாம் மறத்தன்மை சிறந்த வீரர்களுடன் போர்களத்திலே இறந்துபட்டன. தேரைக் கொண்டு வந்த வீரர் அனைவரும், தாம் பிடித்த கேடயங்கள் தம் கண்களை மறைப்பவும் ஒருங்கே பாய்ந்தனர். முரசங்களை முழக்கி முன்னேறும் வீரர்கள் இறந்துபட்டமையினால், வாரால் கட்டப்பட்டு மயிர் சீவாத தோலினால் போர்க்கப்பட்ட முரசங்கள் மூலையில் கிடந்தன. சந்தனம் பூசிய மார்பின் மீது நெடிய வேல் பாய்ந்தழித்தமையினால், வேந்தர்கள் இருவரும் பொருது களத்தின் கண்ணே மடிந்தனர்.

பொருகளத்து மடிந்த இருபெரு வேந்தர் தம் நாடுகளும் பெரியன, பரந்தன. புதுவருவாய் அற்றுப் போகாத ஊர்களை நிரம்பவுடையன. வயல்களில் வளர்ந்துள்ள ஆம்பல் தண்டைத் தம் கைகளில் வளையல்களாய் அணிந்த மகளிர், புதிய அவலைக் கழுத்து வரையிலும் தின்று விட்டுப் புதுப்புனலில் பாய்ந்து ஆடுவர். அத்தகைய வேலையற்ற அழகிய, கிடையையுடைய அவர்தம் அகன்ற இடத்தையுடைய நாடுகள் இனி என்னாகுமோ? என்று வினவுகின்றார் புலவர்.

"சாந்தமை மார்பின் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர் இனியே
என்னா வதுகொல் தானே!"

என்பது புலவருடைய இரங்கலுரையாகும்.

பாடல் - 4

"புலவரை யிறந்து புகழ்சால் தோன்றல்

--------- ---- - ----- -- - -- - -- ---

புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே (புறம் – 21)

திணை – வாகை துறை – அரசவாகை

கானப் பேரெயில் கடந் உக்கிரப்பெருவழுதியை ஐயூர்மூலங்கிழார் பாடியது.

கானப் பேரயில் என்பது காளையார் கோயில் ஆகும். இவ்வூர் பாண்டி நாட்டிலுள்ளது. இக் கானப்பேரெயிலைக் கடந்து வெற்றி பெற்ற சிறப்பினை வியந்து ஐயூர் மூலங்கிழார் பாடிச் சிறப்பிக்கின்றார். ஐயூர் மூலம் என்பது ஓரூர் என்கின்றார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை.

வாகைத்திணை: புறப்பொருள் வெண்பா மாலை,

"இலைபுனை வாகை சூடி யிகன்மலைந்து
அலைகடல் தானை அரசட்டு ஆர்த்தன்று"

என்கின்றது. கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி காணப்பேரெயிலைக் கடந்து அவ்வரணுக்குரியவனாகிய வேங்கை மார்பனை வென்று வாகை சூடியமை இதன்கண் கூறப்பட்டது.

அரசவாகைத் துறை : இப்புறப் பாடலின்கண் உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னனின் பெருவெற்றியின் இயல்பு சிறப்புறப் பேசப்படுவதனால் இப்பாடல், அரசவாகைத் துறை ஆயிற்று.

"பகலன்ன வாய்மொழி
இகல் வேந்தன் இயல்புதைத் தன்று"

என்ற புறப்பொருள் வெண்பா மாலையின் கூற்று இங்கு அறியத்தக்கது.

கருத்துரை: புலவர்களால் பாடுகின்ற புலமையின் எல்லையையும் கடந்த புகழ் அமைந்த தலைவனே! நில எல்லையைக் கடந்து பாதாளம் வரையிலும் செல்லும் ஆழ்ந்த இடத்தையுடைய அகழியினையும் உயர்ந்து தோன்றும் தன்மையால் விண்ணையே பொருவது போன்று ஓங்கி உயர்ந்து விளங்கும் மதிலையும் அவ்வானிடத்துத் தோன்றுகின்ற விண்மீன்களைப் போன்ற வடிவையுடைய உச்சியினையும் உடையது மதிலை அடுத்துள்ள காடு. அது வெயிலின் கதிர் நுழையாத அளவிற்கு மரங்கள் செறிந்து விளங்குவது. நெருங்குதற்கு அரிய சிறிய சிறிய அரண்கள் பலவற்றால் சூழப்பட்டது காணப்பெரெயில் என்னும் அரண். இவ்வரணைக் கைப்பற்றினான் உக்கிரப் பெருவழுதி. அது, வலிய கையையுடைய கொல்லனால் செந்தீயின் கண்ணே மாட்டப்பட்ட இரும்பு உண்ட நீரினைத் திரும்பவும் அவ்விரும் பினின்று. பிரித்தெடுப்பது அரிதாவது போன்றது. அத்தகைய அரும்பாட்டைக் கருதி வேங்கைமார்பன் வருந்தினான். அவ்வாறு நாடோறும் வென்றிகொளத் தழைத்த தும்பையை உடைய புலவர்களால் பாடப்படும் துறைகளை முடித்த வெற்றியினையுடைய வேந்தனே! உன்னை மதியாத பகைவர் தம்முடைய புகழுடனே மாயவும் வெற்றிப் புகழுடனே விளங்கிப் பொலிவதாகுக உன்னுடைய வேல்!

"அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிங
இரும்புண் நீரினும் மீட்டதற்கு அரிதென"

வேங்கை மார்பன் வருந்துமளவிற்கு, உக்கிரப்பெருவழுதியின் வெற்றி விளங்கிற்று.

பாடல் - 5

"உற்றுழி உதவியும் .....மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" (புறம்–183)

திணை : பொதுவியல்

துறை : பொருண்மொழிக்காஞ்சி

பாடியவர் : பாண்டியன் ஆரியப்படை கடந்த உக்கிரப் பெருவழுதி

கருத்து : தன் ஆசிரியருக்கு ஓர் ஊறுபாடு உற்றவிடத்து அது தீர்த்தற்கு உவந்து உதவியும் மிக்க பொருளைக் கொடுத்தும், வழிபாட்டு நிலைமையை வெறுக்காது கற்றல் ஒருவருக்கு அழகாகும் (அதற்கு காரணம் என்னவென்றால்) பிறப்பு ஒரு தன்மையாகிய ஒரே வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி கற்ற சிறப்பால் தாயும் தன் மனம் வேறுபடுவாள். ஒரு குடியின்கண் பிறந்த பலருள்ளே மூத்தோனை வருக என்று அழைக்காமல் அவருள் அறிவுடையோன் வழியில்தான் அரசனும் செல்வான். வேறுபாடு தெரிந்த நான்கு குலத்துள்ளும் கீழ்க்குலத்தவன் ஒருவன் கற்பின் மேற்குலத்துள் ஒருவனும் (இவன் கீழ்க்குலத்தோன் என்று பாராதுன கல்வியின் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவான்)

விளக்கம் : கல்வியின் சிறப்பைப் பாண்டியன் மிக அழகாக எடுத்துரைத்துள்ளான். கற்கும்போது ஆசிரியரிடம் பயமும் பக்தியும் இருக்க வேண்டும். அம்முறையில் படித்தவனிடம்தான் உண்மைக் கல்வி அமையும். அக்கல்வி காரணமாகப் பாசத்துக்கும் பாதுகாத்தலுக்குமுரிய தாய்,

அரசன் ஆகியோர் கூடச் சற்று வேறுபாடாக நடந்து கொள்வார்கள். கீழ்க்குலம் என்ற வேறுபாடும் மறைந்துவிடுமாம்.

போர் அல்லாத பொதுவான செய்திகளைக் கூறுவது பொதுவியல் திணையாகும். இங்குக் கல்வியின் பெருமை கூறப்பட்டமையின் அத்திணைக்கும் பொருந்துகின்றது. பொருண்மொழிக் காஞ்சித்துறை என்பது, நிலையாமை மிக்க இவ்வுலகில் அந்நிலையாமையை வெல்வதற்கு 'நன்மை தருவது இது, தீமை தருவது இது' என நடுவு நிலைமையுடன் சிந்தித்துக் கூறுவதாகும்.

"எரிந்திலங்கு கடைமுடி முனிவர்

புரிந்துகண்ட பொருள் மொழிந் தன்று"

எனப் புறப்பொருள் வெண்பா மாலை இத்துறையின் இலக்கணத்தை எடுத்துரைக்கின்றது. ஒத்த பாசம் காட்ட வேண்டிய தாயும், மக்களை ஒன்று போலவே கருதிப் புரக்க வேண்டிய மன்னனும் மேற்குடியாளனும் கற்றவனிடம் மதிப்பும், மரியாதையும் காட்டுவர் என்ற நல்லதொரு கருத்தைக் கூறியதால் இப்பாடல் இத்துறைக்குப் பொருந்துகின்றது.

புறநானூற்றுப் பாடல்களில் வரும் உவமைகள்

1. தலைவனுடைய வீரத்தைப் பற்றிக் கூறும்போது,

'செருப்பிடைச் சிறுபரல் அன்னன்'

என்ற உவமை வருகின்றது. செருப்பின் இடையிலே அகப்பட்ட சிறிய பால்கல் போன்று பகைவரை மேற் செல்லாதவாறு எதிர்த்துத் தடுத்து நிறுத்திப் போரிட்டான் அத்தலைவன் என்று கூறுகின்றார் புலவர்.

2. "அருங்குறும் புடுத்த காணப் பேரெயில்

கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய

இரும்புண் நீரினும் மீட்டற் கரிதென

வேங்கை மார்பன் இரங்கலும்"

உயர்ந்த மதிலையும், ஞாயிற்றின் கதிர் உள்ளே நுழைய முடியாத அளவிற்குச் செறிவான மரங்கள் கொண்ட காவற் காட்டினையும் உடைய அரண்கள் நிறைந்த காணப்பேரெயில் வேங்கை மார்பனுடைய அரணாகும். அவ்வரணை வென்றான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்பான். அவ்வாறு கானப் பேரெயிலைக் கைப்பற்றிய உக்கிரப்பெருவழுதியிடமிருந்து அவ்வரணை வேங்கை மார்பன் மீட்க முடியாது. அந்நிலையை எண்ணிய புலவர் அவன் வருத்தத்தைப் பாடும் பொழுது உவமைகூறி விளக்குகின்றார்.

கொதிக்கும் செந்தீயில் செருகப்பட்ட இரும்பில், தண்ணீரை ஊற்றினால் அந்நீரை இரும்பு உறிஞ்சிக் கொள்ளும். பின்னர் அவ்விரும்பு சூடுதணிந்த பின்பு ஊற்றிய நீரை– அதாவது அது உண்ட நீரைத் திரும்பவும் பெற இயலாது. அது போன்றதே உக்கிரப்பெருவழுதியிடமிருந்து கானப்பேரெயிலை மீட்பதும் ஆகும். என்பதே அவ்வுவமை கருத்தாகும்.

வினாக்களும் விடைக்குறிப்புக்களைப் பற்றிய செய்திகளும்

1. வெட்சித்திணை உண்டாட்டுத் துறைகளை விளக்கி அத்திணை துறைகள் அமைந்த பாடல் கருத்தையும் புலப்படுத்தி, அவற்றைப் பாடலுடன் பொருத்திக் காட்டுக?

விடை:– முதற் புறநானூற்றுப்பாடல் கருத்துரையும் அதன் முன் விளக்கப்பட்டுள்ள திணை துறைகளையும் சேர்த்துக்கற்க.

2. சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாராட்டில் போற்றும் வகையினை எழுதுக.

விடை: இரண்டாவது புறநானூற்றுப் பாடலின் கருத்துரையினைத் தொகுத்தெழுதுக.

குறிப்பு :

இவ்வாறே பிற இரு பாடல்களுக்கும் திணை துறை விளக்கங்களுடன், பாடற் கருத்தினையும், பாடலில் திணை, துறைகள் பொருந்த அமைந்துள்ள திறத்தையும் நன்கு கற்றுக் கொள்க.

8. பதிற்றுப் பத்து

"Patirrupattu is the only source book of ancient cera history Among all the sangam works this is unique is being a collection of the poems on ceras" என்கிறார் முனைவர். தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.

எட்டுத்தொகைகள் நூல்களுள் புறப்பொருள் வகையால் அமைந்தவை. புறநானூறும் பதிற்றுப்பத்தும் ஆகும். ஒவ்வொரு பத்திற்கும் பத்துப்பத்துப் பாடல்கள் வீதம் நூறு பாடல்கள் உண்டு. ஆனால் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைத்தில.

கிடைத்துள்ள ஒவ்வொரு பத்திலும் முன்னதாக ஒரு பதிகம் விளங்குகின்றது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பாடினோர் பெயரும் பாடப்பட்டோர் பெயரும் குறிக்கப்படட்டுள்ளன. ஒவ்வொரு பாடலைத் தொடர்ந்தும் வண்ணம், துக்கு, துறை, பெயர் முதலியன அமைந்துள்ளன. இது குறித்து டாக்டர் உவே சாமிநாதஐயரவர்கள் "இவை உரையாசிரியர்களால் எழுதப்பட்டனவல்ல. என்றும், நூலாசிரியர்களாலோ தொகுத்தோராலோ எழுதப்பட்டனவென்றும்" கருத்துரைக்கின்றார்.

நமக்குப் பாடமாக உள்ள பாடல் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் பாடியதாகும். "வரைமருள் புணரிவான் பிசிருடைய.... ..." எனத் தொடங்கும் இப்பாடல் இரண்டாம்பத்தின் முதற் பாடலாகும். இப்பாடலின் இறுதியில் அமைந்துள்ள துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகியவற்றைக் காண்போம்.

திணை	–	பாடாண்திணை.
துறை	–	செந்துறைப் பாடாண்பாட்டு.
தூக்கு	–	செந்தூக்கு
வண்ணம்	–	ஒழுகுவண்ணம்.
பெயர்	–	புண்ணுமிழ் குருதி.

துறை : செந்துறைப் பாடாண்பாட்டு. செந்துறையாவது, விகார வகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப் போலாது. உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல் இது செந்துறைப் பாடாண்பாட்டு எனப்படும்.

தூக்கு: செந்தூக்கு: அஃதாவது ஆசிரியப்பா. ஈற்றயலடி முச்சீரடியாக முடிதலின் இது ஆசிரியப்பாவாகிய செந்தூக்காயிற்று. தூக்கு என்பது செய்யுள் அடி வரையறை கொண்டு பாக்களைத் துணிப்பது. அஃதாவது பாவகையள் இன்ன பாவெனத் துணித்துக் கூறுவதென அறிக.

வண்ணம்: ஒழுகுவண்ணம். இது வண்ண வகை இருபதினுள் ஒன்று. அஃதாவது ஒழுகிய ஓசையாற் செல்வது. வண்ணம் என்பது சந்த வேறுபாடு.

பெயர்: புண்ணுமிழ் குருதி நெடுஞ்சேரலாதனின் வாள், பகைவருடைய திண்ணிய மார்பைப் பிளந்து புண்ணாக்கிற்று. அப்புண்உமிழ்ந்த குருதி வடிந்து உப்பங்கழிகளில் தேங்கி நிற்கும் நீலநிற நீரைக் குங்குமக் குழம்பு போல சிவப்பாக்கியது என்று இப்பாடலில் வருணிப்பதனை உட்கொண்டு இப்பாடலுக்குப் 'புண்ணுமிழ் குருதி' என்று பெயரிட்டனர்.

"மணிநிற இங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல"

என்பதே அவ்வடிகள் ஆகும்.

கருத்துரை:

1–6 : 'வரைமருள் .... களிறூர்ந் தாங்கு'

மலை போலும் எழுகின்ற பேரலைகள் வெண்மை நிறங்கொண்ட பலதுளிகளாக உடையுமாறு காற்று உட்புகுந்தது. அப்படிப்பட்ட பரந்த ஒலியுடைய கரிய கடற்பரப்பிற்குள் பிறரை வருத்துதலை இயல்பாகவுடைய அவுணர்களை அரணாக நின்று பாதுகாவலைச் செய்யும் சூரபன்மன் மாமரமாகச் சென்று ஒளிந்து கொண்டான். அவ்வாறு ஒளிந்து கொண்ட மாமரத்தை வேருடன் வெட்டிச் சாய்த்தான். மிகுபுகழும் கடுஞ்சினமும் வெற்றிச் சிறப்புமுடைய செவ்வேள். அச்செவ்வேள் பிணிமுகம் என்னும் யானையின் மீது பெருமிதத்துடன் உலா வந்தான்.

7–16: 'செவ்வாய் ... ... சேரலாதே!'

நெடுஞ்சேரலாதனின் கூரிய வாயினையுடைய வாட்படையானது எதிர்த்துக் குறுக்கிட்டு நிற்கும் பகைவரை அறுத்தது. அதனால் பகைவரின் அரிய மார்புகள் பிளந்தன. பிளந்த அம்மார்புகளிலிருந்து குருதி நீர் கொட்டிற்று. அக்குருதியினால், பெரிய கழிகளிடத்துள்ள நீலமணி போலும் நீர் தன் நிறம் மாறிக் குங்குமக் கலவை போல விளங்கிற்று. பகைவரின் அரண்களை அழித்தான். வலிமை நிறைந்த சிறப்பினால் உயர்ந்த மன எழுச்சியுடையவனாகிய சேரலாதன், பகைவர்கள் பலரும் ஒன்றாக இணைந்து நின்று காத்த மலர்ந்த பூக்களை உடைய கடப்ப மரத்தினைக் காவலமைந்த அடியோடு கடிந்து ஒழிக்குமாறு வீரர்களை ஏவினான். போரில் வென்று முழங்குகின்ற முரசினைச் செய்து கொண்ட வெல்லும் போரினையும் நாரால் வடிக்கப்பட்ட கள்ளையும் ஆரம் அணிந்துள்ள வலிய மார்பினையும் அஞ்சாமற் போர் செய்யும் தானையையும் உடையவன் சேரலாதன் ஆவன்! அத்தகைய 'போரடு தானைச் சேரலாதன்', மாமுதல் தாழ்ந்த செவ்வேளைப் போன்று களிற்றின் மீது உலா வந்தான்.

17–25 – "மார்புவலி ... ... கடந்தே"!

கவரிமான்கள் முருக்க மரங்கள் செறிந்துள்ள மலையிடத்தே இரவில் உறங்கும். பதற்பொழுதிலே அவை மேய்ந்த நரந்தம் புற்களையும் அவை வளர்ந்துள்ள அருவிகளையும் கனவிலே கண்டு மகிழும். ஆரியர் நிறைந்து வாழ்கின்ற பெரும்புகழுடைய இமயம் தெற்கின்கண் உள்ள குமரியாகிய இவற்றிற்கு இடைப்பட்ட நாட்டிலுள்ள மன்னர்களின் செருக்கினை அடக்கும் வகையில், அம்மன்னர்களின் மறம் கெட்டழியுமாறு பொருது வென்றான். சேரலாதன் நெடுஞ்சேரலாதனுடைய மார்பிற் கிடக்கும் பசிய மாலை, ஓடையளவும் தாழ்ந்து அதனோடு விளங்கும். வெற்றியால் உயர்ந்த மருப்பினையுடைய குற்றமற்ற யானை, பொன்னரி மாலை அணிந்துள்ள பிடரி பொலிந்து தோன்றும். அப்பொலிவுடைய பிடரியில் ஏறியிருந்து சிறப்பிக்கும் நின்னுடைய பலரும்

புகழதறகுரிய செல்வச் சிறப்பினை யாம் இனிது கண்டு துய்க்கின்றோம். எனவே சேரலாதனே! நீ வாழ்க!

"வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல் கொண்டு பொலிந்த நின்
பலர்புகழ் செல்வம் இனிதுகண் டிகுமே"! (18–20)

முப்பக்க வினா :–

1) இமயவரப்பன் நெடுஞ்சேரலாதனின் மறந்தபக் கடந்த பேராற்றலை விளக்கிடுக.

(அல்லது)

'புண்ணுமிழ் குருதி' என்ற பெயர்ப் பொருத்தத்தினைப் பதிற்றுப்பத்துப் பாடலுடன் பொருத்தி விளக்குக.

9. திருக்குறள்

ஒப்புரவறிதல்

பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகவும், உலகப் பொதுமறை என்றும் வள்ளுவர் வாய்மொழி என்றும், தமிழர்களின் புகழை தரணிக்கு உயர்த்திக் காட்டிய தனிப்பெரும் நீதி நூலாகவும் விளங்குவது திருக்குறள். இது ஒன்றே முக்கால் அடியில் உயரிய ஒழுகலாறுகளை மக்களுக்கு உணர்த்தி, காலத்தால் என்றும் புதுமை மணம் மாறா பொக்கிஷமாய்த் திகழ்கிறது. அறம், பொருள், இன்பம் எனும் முப்பெரும் பகுப்பில் அமைந்து ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்பாக்களை நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் விளக்கி நிற்கிறது. இதன் வடிவச் சிறுமை கருதியே,

"அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள்"

என்று வள்ளுவமாலை குறிப்பிடுகிறது.

திருக்குறளைத் தந்த திருவள்ளுவப் பெருந்தகைக்கு நாயனார், தேவர், தெய்வப்புலவர், செந்நாப்போதகர், முதற்பாவலர், நான்முகனார் மாதானுபங்கி, பெருநாவலர் போன்ற வேறு பெயர்களும், திருக்குறளுக்கு பொதுமறை, தமிழ்மறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தெய்வநூல், உத்தரவேதம், முப்பானூல் என்றெல்லாம் வேறுபெயர்களும் உண்டெனில் அதன் சிறப்பை சொல்லவும் வேண்டுமோ?

நம் பாடப்பகுதியாக அமையும் ஒப்புரவறிதல் எனும் அதிகாரம் அறத்துப்பாலில் இடம்பெறுகிறது. ஒப்புரவறிதல் என்பது உலக நடையினை அறிந்து செய்தல். உலகநடை வேதநடை போல அறநூல்களில் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யும் தன்மைத்தாகலின் ஒப்புரவறிதலென்றார் என்பார் பரிமேலழகர். இவ்வதிகாரப் பாடல்களின் பொருள் பின்வருமாறு அமைகின்றன.

(1) கைம்மாறு – உலகு.

இந்த உலகத்தார் தம் வாழ்க்கைக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு (பிரதிபலன்) செய்கின்றனர்? இந்த உலகில் மழை போன்றவர்கள் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவையே.

(2) தாளாற்றித் தந்த – – – – – – – – – – – – – – – – – –பொருட்டு.

ஒரு ஓப்புரவாளன் தன்னால் இயன்ற முயற்சி செய்து சேர்த்த எல்லாப் பொருள்களும் தகுந்தவர்க்கு (தேவைப்படுவதற்கு) ஏற்ப உதவி செய்து வாழ்வதற்கேயாகும்.

(3) புத்தேளுலகத்தும் – – – – – – – – – – – – – – – – – – பிற.

பயன்கருதாமல் பிறர்க்கு உதவிசெய்து வாழும் ஓப்புரவைப் போன்ற நல்ல செயல்கள் வேறு அறப்பகுதிகளை தேவர் உலகத்திலும் இவ்வுலகத்திலும் எங்கும் காணப்பெறுதல் இயலாது.

(4) ஒத்த தறிவான் – – – – – – – – – – – – – – – படும்.

ஓப்புரவை அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவனே உயிருடன் வாழ்கின்றவன். மற்றவன் உயிர் வாழ்ந்தாலும் செத்தவனாகவே கருதப்படுவான்.

(5) ஊருணி நீர் – திரு.

ஓப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார் நீரைப் பருகும் குளம் நீர்நிறைந்து எப்பொழுதும் பயன்படுதலைப் போன்றது.

(6) பயன்மரம் – – – – – – – – – – – – – – – – படின்.

ஓப்புரவாகிய நல்ல பண்பு உடையவனிடம் சேரும் செல்வம், ஊரின் நடுவில் எல்லாருக்கும் பயன்தரக்கூடிய மரம் பழங்களால் நிறைந்து பயன்தருதலை ஒத்துக் காணப்படும்.

(7) மருந்தாகித் – – – – – – – – – – – – – – – – – – –

10. நாலடியார

கல்வி

நீதி நூல்களில் திருக்குறளுக்கு அடுத்தபடியாக பெருமையுற்று விளங்கும் நூல். சங்க நூல் உரையாசிரியர்கள் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லோர் முதலிய உரையாசிரியர்கள் இந்நூலிலிருந்து மேற்கோள் எடுத்தாண்டுள்ளனர். இந்நூலைத் தொகுத்து உரையெழுதிய பெருமைக்குரியவர் பதுமனர். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்றாக இந்நூல் பகுக்கப்பட்டுள்ளது.

நமது பாடப்பகுதி பொருட்பாலில் அமையும் கல்வி எனும் தலைப்பில் அமைந்த முதல் ஐந்து பாடல்கள்.

(1) குஞ்சியழகும் – – – – – – – – – – –அழகே அழகு.

விளக்கம் : மனிதர்களுக்கு புறத்தோற்றத்தில் அழகு என்று கருதப்படும் தலைமுடி அழகும், உடுத்தும் நளின ஆடையின் அழகும் உண்மையான அழகில்லை. மாறாக நெஞ்சத்தால் நல்லவன் எனும் எண்ணமுடைய கல்வியால் பெறும் அறிவே உண்மையான அழகு.

(2) இம்மை பயக்குமால் – – – – – – – – – – – மருந்து.

விளக்கம் : கல்வி நல்வாழ்க்கையாகிய இம்மைப் பயனை நல்கும். பிறர்க்குக் கற்பித்தால் எந்த அளவில் கல்வி குறைவுபடுதல் இல்லாமல் அறிவாலும் புகழாலும் சிறந்து விளங்க செய்யும். எந்தப் பிறவியிலும் கல்வியைப் போல் உலகத்தில் அறியாமை மயக்கம் தீர்க்கும் பிற மருந்து வேறு யாம் கண்டதில்லை.

(3) களர்நிலத்து ---------- வைக்கப்படும்.

விளக்கம் : உவர் நிலத்தில் தோன்றிய உப்பினை பெரியோர் செழிப்பான விளைநிலத்தில விளைந்த நெல்லிற்குப் பண்டமாற்றாகப் பெறுதல் போல, கீழ்க்குடியில் பிறந்தாலும் கல்வியறிவுடையோனை மேல்நிலத்து மக்களும் மதித்துப் போற்றுவர்.

(4) வைப்புழிக் கோட்படா----------பிற.

விளக்கம் : கல்வி இருக்கும் இடத்திலிருந்து பிறரால் களவு கொள்ளப்படாதது. நல்ல மாணாக்கர் கல்வியைக் கற்பதனால் அதற்கு அழிவு இல்லை. செல்வ மிகுதியால் அரசர்கள் வெகுண்டாலும் கல்வியைக் கவர்ந்து கொள்ள இயலாது. ஒருவன் தன் பிள்ளைகளுக்குத் தேடி சேர்த்து வைக்க வேண்டியது கல்வியைத் தவிர பிற இல்லை.

(5) கல்வி கரையில கற்பவர் ----------தெரிந்து.

விளக்கம் : கல்வி கற்பவர் சிலநாள் தான் வாழ்ந்தாலும் கல்விக்கு இவ்வளவுதான் என வரையறையில்லை. நிதானமாக நினைத்தப் பார்த்தால் மனிதனின் வாழ்நாளான சில நாளில் நோய்கள் பெருகியிருக்கின்றன. அறிஞர்கள் தகுந்த மெய்நூல்களைத் தெரிந்த கற்பது நீருடன் கலந்த பாலில், நீரைத் தவிர்த்தப் பாலை மட்டுமே உண்ணும் அன்னப்பறவையின் செயலை ஒத்துள்ளது.

பயிற்சி வினாக்கள் :

1. கல்வியின் சிறப்பாக நாலடியார் கூறுவன யாவை?

2. பாடப்பகுதியாக அமைந்த 'கல்வி' குறித்து நாலடியார் பாடல்கள் குறிப்பிடுவன யாவை?

1. பயண இலக்கியம்

சோமலெ

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார் கணியன் பூங்குன்றனார்.

"பயணம் செய்வது நன்று. பயணத்தால் ஏற்படும் நன்மைகள், பயன்கள் கணக்கிலடங்கா. அந்த அனுபவச் செல்வத்தை அடையும் பேறு பெறாதவர்கள் பயண நூல்களைப் படித்து ஈடு செய்து கொள்ள வேண்டும்" என்பார் ஜவஹர்லால் நேரு.

வளர்ந்து வருகின்ற எண்ணற்ற இலக்கியக் கூறுகளில் ஒன்று, பயண இலக்கியம்.

பழந்தமிழ் இலக்கியத்தில் : பயண இலக்கியம் நம் தமிழ் மொழிக்குப் புதிதன்று. சங்க காலத்துத் தமிழ்ப்புலவர்கள் தாங்கள் கண்டதைக் கவிதையில் வடித்துள்ளார். தமிழ் இலக்கியம் குறிப்பிடும் ஒவ்வொரு திணைக்கும் சில வகை மலர்களும் சிலவகை உயிரினங்களும் உண்டு. அவற்றில் வாழும் மக்கள் இனத்தாரும் வேறுபடுவர். அந்த இனத்தாரின் தொழில், அவர்களுடைய தலைவனுக்கு வழங்கப் பெற்ற பெயர் முதலியனவும் பழந்தமிழ் நூல்களில் தெளிவாகச் சுட்டப்பட்டிருக்கின்றன.

கொடைக்கானல் மலையில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப்பூ போன்ற விபரம் இலக்கியங்களில் காணலாம்.

பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான ஆற்றுப்படை என்ற நூலில் புலவர்களும் வறுமையும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. எனவே புலவர்கள் தங்களுக்கு ஆதரவுத்தரக்கூடிய புரவலர்களை, செல்வர்களை, வள்ளல்களைத் தேடிச் செல்லுவார்கள். அவர்களிடமிருந்து தக்க உதவியைப் பெற்ற பிறகு, "யாம் பெற்ற இன்பம் வையகம் பெறட்டும்" என்ற மனப்பான்மை, ஏனையப் புலவர்களிடம் நீங்களும் போங்கள், அவரிடம் உதவிப்பெறுக, என்று கூறுவார்கள். "அவர் இருக்கும் ஊர் எது? அந்த ஊருக்குச் செல்லும் வழி யாது?" என்பனவற்றிற்கு விடையாக அமைந்ததே ஆற்றுப்படை.

மதுரைக்காஞ்சி தமிழ்நாட்டின் பகுதிகளை நமக்குப் படம் பிடித்துக் காட்டும் கவிதை. தமிழ்நாட்டின் நகரங்கள், வாயில்கள், வடிகால்வாரியங்கள், அங்காடிகள், இரவு நேரத்துக் காவலர்கள், அன்றாடவாழ்க்கை, பௌத்தத் துறவிகளின் மடாலயங்கள், சமணர் கோயில்கள், மக்களின் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி எல்லாம் மதுரைக் காஞ்சி நமக்கு அறிவிக்கிறது.

சோழ, பாண்டிய, சேர நாடுகளின் காட்சிகளைப் பிற்காலத்தவர்க்கு விளங்குவதாகச் சிலப்பதிகாரம் அமைகிறது.

மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள அடர்த்தியான காடுகள் கம்பராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அந்த மாநிலத்தில் ஆதிவாசிகள் வாழும் தண்ட காரண்யப் பகுதியில் 1983–இல் நான் விரிவாகப் பயணம் செய்தேன். கம்பனும் அங்குச் சென்றிருந்ததால் தான் அவ்வாறு பாடியிருக்க முடியும் என்பதை உணர்ந்தேன். மஹாராஷ்டிரா, ஆந்திர மாநிலங்களில் கோதாவரி ஆற்றால் அளவு கடந்த வளம் கொழிக்கும் பகுதிகளைக் கம்பன் பாடியிருப்பதைப் படித்த போதும் இந்தக் கருத்து என்னுடைய பயணங்களில் உறுதிப்பட்டது.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடியுள்ள பக்திப்பாடல்களும் ஓரளவு பயணப் பாடல்களே.

14–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரட்டையர் பாடல்களில் தமிழ் நாட்டுக் கோயில்களின் நிலை, திருவிழாக்களின் சிறப்பு, மடைப்பள்ளிகளில் நடைபெற்ற சூழ்ச்சிகள், குருக்கள்மார் கடைப்பிடித்த தந்திரங்கள், புரவலர்களின் தராதரம் இவையாவும் சுவையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இன்றைய பயண இலக்கியங்கள்: இன்று வெளிநாடுகளுக்குச் சென்று, தாங்கள் கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் எழுத்தில் வடிப்பது பயண இலக்கியமாகக் கொள்ளப்படுகிறது.

சிலர் ஒரு நாட்டுக்குச் சென்று அங்குள்ள தங்கள் உறவினர் அல்லது நண்பர் வீட்டில் தங்கியிருந்து அந்தத்தமிழன்பர் சொல்வதை எல்லாம் தங்களுடைய கருத்தாகக் கொண்டு ஒரு பயண நூலை உருவாக்கி விடுகின்றனர். ஒரு மலாய்க்காரருடன் பேசாமல், ஒரு சீனர் வீட்டில் சாப்பிடாமல், மலேசியாவைப் பற்றித் தமிழில் நூல்கள் எழுதியிருப்பவர்களை அறிவேன். ஒரு சிங்களவர் வீட்டிற்குள்ளும் கால் வைக்காதவர்கள் இலங்கையைப்பற்றி நூல்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒரு நாட்டைப்பற்றி எழுதும்போது கவனமாக எச்சரிக்கையாக எழுத வேண்டும். மேட்டுப் பாளையத்திலிருந்து உதகைக்குச் செல்லும் கவின்மிகு வழியில் ஊர்ந்து செல்லும் குட்டி இரயிலில் பயணம் செய்யாமலும், பழனி அடிவாரத்திலிருந்து அருள் மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் கொண்டுள்ள மலைக்கு நம்மை ஏற்றிச் செல்லும் இழுவை இரயிலைக் கண்ணால் கூடக் காணாமலும் தாய்லாந்துக்கும் மலேசியாவுக்கும் செல்லுவதால் ஏற்படும் விளைவு இது. இத்தகை நூல்களைப்படிக்கும் போது, சிரிக்க வேண்டியிருக்கிறது.

மக்களுடைய நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், உறுதிப்பாடுகள், வாழ்க்கை நெறி முறைகள், மரபுகள் முதலியவற்றை வாசகர்களுக்குத் தெரிவிப்பதே ஓர் எழுத்தாளனின் தலையாயக் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

தாஜ்மஹாலைப் பார்க்கிறவன் ஷாஜஹானின் கண்களைக் கொண்டு காண வேண்டும். கிளியோபாத்ராவைப் பார்க்கிறவன் ஆண்டனியின் கண்களைக் கொண்டு காண வேண்டும்.

பயணம் மேற்கொள்பவர்கள் புதியன காணும் ஆர்வமும் புத்தம் புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பசியுமே பயணத்தைத் தூண்டுவன. எதையும் நுட்பமாக, கூர்மையாகப் பார்க்கும் வேட்கை வேண்டும். கையிலே ஒரு காமிராவை எடுத்துச் செல்வது இன்றியமையாதது.

சிலர் எழுதும் பயண நூல்களில் தங்களுக்கு விருந்து படைத்தவர்களைப் பற்றிப் பல பக்கங்கள் எழுதி உள்ளனர். விருந்து வழங்கியவர், பொதுமக்களுக்கு அறிமுகமானவராயின் அல்லது அவரைப்பற்றித் தெரிந்து கொள்வது வாசகர்க்குப் பயன்படுமாயின் மட்டுமே அவரைப் பற்றிப் பயண நூலில் குறிப்பிட வேண்டும்.

போர்க்காலத்தில் அமெரிக்கக் கடற்படை வீரர்கள் சென்னையில் தங்கியிருந்தவர்கள். இட்லியைச் சுவைத்துச் சாப்பிட்டார்கள். அமெரிக்காவிலுள்ள தங்கள் நண்பர்களுக்கு அந்த உணவை அவர்கள் அறிமுகப்படுத்தி எழுதினர். இட்லி என்பது தென்னிந்தியச் சிற்றுண்டி அரிசியால் ஆனது, நீர்முழ்கிக் கப்பல் போல, இட்டலியைச் சாம்பாருக்குள் முழுகச் செய்து

உண்ணுகிறார்கள். சாம்பாருடன் சேர்ந்து இட்லியும் மணக்கிறது. பயணம் செய்யத் திட்டமிடுபவர்கள் தேடுகிற விவரங்கள் ஒரு பயண நூலில் இருக்க வேண்டும்.

ஒரு நாட்டுக்கோ நகருக்கோ எப்போது செல்லுவது நன்று என்ற குறிப்பு நூலில் கட்டாயமாக இடம் பெற வேண்டும். நள்ளிரவில் சூரியன் ஒளிவீசும் நான்கு மாதங்களில் சுவீடனுக்குப் போகவேண்டும். உலக இசை, நடன விழாக்கள் நிகழும் மாதத்தில் வியன்னாவுக்குச் செல்வது ஒரு பேறு. நமது தலைநகரமான புதுடில்லியை நவம்பர் மாதத்தில் அதுவும் நாடாளுமன்றத் தொடர் கூட்டங்கள் நிகழும் காலத்தில் பார்ப்பது அழகு. தாஜ்மஹாலைப் பௌர்ணி நிலவில் கண்டு மகிழ வேண்டும். இந்தியாவின் அழகான மாநிலங்களில் ஒன்றான இராஸ்தானத்துக்கு ஜனவரி மாதத்தில் அங்குச் சென்றால் குளிர் "சைபர்" டிகிரிக்குக் குறைவாக இருக்கும். பலவாறு அல்லல்படுவீர்கள். அக்கினி நட்சத்திர நாட்களில் (மே மாதம்) சென்னைக்குச் சென்று அவதிப்படுபவர்களை நினைத்து எத்தனையோ முறை வருந்தி இருக்கிறேன். அருவியில் நீர் விழும் காலத்தில் திருக்குற்றாலம் புறப்பட வேண்டும்.

பயணநூல்கள் கதை வடிவிலும் எழுதப்படுகின்றன. இதை Travel fiction என்பர். திருமதி. ராஜம் கிருஷ்ணன் இந்த உத்திகளைப் பயன்படுத்தி, தாம் பல்லாண்டுகள் வாழ்ந்த பகுதிகளைக் களமாக வைத்துத் தமக்கே உரிய முறையில் தமிழில் தரமான பயண நூல்களைப் படைத்துள்ளார். இருவர் உரையாடிக் கொண்டிருக்கும் முறையில் சுவைபடப் பயணநூல் எழுதுவதும் ஒரு கலை. கடிதமாக எழுதுவது மற்றொரு கூறு.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பயண இலக்கியத் தந்தையாக விளங்கியவர் உலகம் சுற்றிய தமிழன் ஏ.கே.செட்டியார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் அவர் கைதேர்ந்தவராகத் திகழ்ந்தார். சான்றாக மார்க்கோனியையும் "மக்ரோனியையும் தந்தது இத்தாலி, மார்க்கோனி உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி. மக்ரோனி இடியாப்பம் போன்ற உணவு".

உலகம் எவ்வளவுதான் விரிந்ததாக இருந்த போதிலும், ஆகாய விமானத்தால் உலகம் சுருங்கி விட்டது. நிறையப் பயணம் செய்யுங்கள். நிறைய எழுதித்தமிழில் பயண இலக்கியத்தைப் பெருக்குங்கள், குவியுங்கள்.

வெளிநாடுகளுக்குச் செல்லுமுன் இந்தியாவையும் தமிழ் நாட்டையும் நன்றாக, ஆழமாக, விரிவாக, ஆற அமரச் சுற்றிப் பாருங்கள்.

2. கண்டேன் கொள்ளிப்பிசாசை!

– பிலோ இருதயநாத்

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சலிப்படையாத உள்ளம், இவையே வெற்றிக்குக் காரணம். உன் சாதியைப் பற்றியோ மதத்தைப்பற்றியோ கவலைப்படாதே. உன் ஏழ்மையைப் பற்றிக் கவலைப்படாதே. நன்றாகப்படி. மனத்தைச் சிதறவிடாதே. விடாமுயற்சியுடன் வேலை செய். துன்பங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு வேலை செய். தன்னம்பிக்கையை இழக்காதே. வெற்றி உன்னைத் தேடி வரும். நீ வாழ்வில் சுகம் பெறுவாய்" என்று ஆப்ரஹாம்லிங்கன் அவர்கள் அடிக்கடி பொதுக் கூட்டத்தில் பேசுவதுண்டாம். இதை நான் அடிக்கடி என் உள்ளம் சோர்வு அடையும் போது நினைத்து ஆறுதல் அடைவதுண்டு. மேலும், ஒரு சமயம் நானும் என் நண்பரும் நீலகிரிப் பக்கத்திலிருக்கும் குன்னூர் மலைக்குச் சென்று அங்கிருந்து, "நான் சச்சு எஸ்டேட்டு" வழியாகப் பக்காசூரன் மலைக்குச் சென்றோம். இந்த மலைக்குப் போவதற்கு முன் அந்த மலையைப் பற்றி நான் கேள்விப் பட்டது என்ன தெரியுமா?

அந்த மலைக்கு யாராவது சென்றால் உடனே அவர்கள் இறந்து விடுவார்கள். மற்றொன்று அங்குப் பெரிய பெரிய வண்டுகள் இருக்கின்றன. அவைகள் மனிதர்களை முகத்திலேயே வந்து கொட்டுமாம். மேலும் ஒரு பெரிய சங்கிலி இருக்கிறது. அதை இழுக்க இழுக்க அதுமேல் நோக்கி வரும். குறிப்பிட்ட அளவு மேலே வந்ததும், அது திடீரென்று கீழே ஓடுமாம். அதை இழுப்பவர்கள் சற்று ஏமாந்தால் அவர்களையும் சுருட்டிக் கொண்டு போகும் என்றும், அது கடைசியில் விழும் பொழுது ஏதோ ஒரு பணப் பெட்டியின் மேல் விழும். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. பக்காதூரன் மலைக்குப் போகத்தீர்மானித்தேன். நான் போகப் போகிறேன் என்று சிலருக்குத் தெரிந்ததும் அவர்களும் என்னுடன் வரத் தொடங்கினார்கள்.

மலையின் மேல் யாரும் தனித்தனியாகப் பிரிந்து போகக் கூடாது. மலையின் மேல் புகை புகைத்தல் கூடாது. காரணம் புகையிலையின் நாற்றமும் புகையும் அந்தக் காட்டிலிருக்கும் வண்டுகளுக்குப் புதியவை அல்லவா? ஆகையில் காட்டிலிருக்கும் வண்டுகள் அந்தப் புகையின் நாற்றத்தை உணர்ந்ததும், உடனே அந்தப் புகை வரும் இடத்தை நோக்கி வரும். அந்த மலையில் நாங்கள் கண்டது என்ன தெரியுமா? ஒரு பெரிய மலைப் பாதையின் மேல் சுற்றிலும் சுவர் கட்டியிருப்பதைக் கண்டேன். மேலும் அந்த மலைக்குச் செல்ல ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அந்த மலையின் மேல் வண்டுகளுமில்லை. மனிதர்களுமில்லை. முழுதும் காட்டு மயம் தான் என்ற முடிவுக்கு வந்தோம். சங்கிலியுமில்லை மக்கள் எவ்வளவு விஷயங்களைப் பொய்யாகப் பரப்பி விடுகின்றனர் என்று பேசிக் கொண்டே மலையை விட்டு இறங்கினோம்.

கடினமான பயணம் மேற்கொள்வதால் என்னைத் துப்பாக்கி வைத்துக் கொள்ளக் கூடாதா? என்று பலர் கேட்பதுண்டு. ஆம்! உண்மைதான். துப்பாக்கி வைத்துக் கொள்வதும் லைசன்ஸ் எடுப்பதும் எனக்கு கஷ்டமில்லை. ஆனால் துப்பாக்கி வைத்துக் கொண்டால் கை சும்மா இருக்காது ஒன்று. மற்றொன்று நான் முன்பின் பழகாத புதிய காடுகளுக்குச் செல்லுகின்றேன். பழக்கமான காடாக இருந்தால் எந்த இடத்தில் யார் இருப்பார்கள் என்பது சாதாரணமாய்த் தெரியும். ஆனால் புதிய காட்டுக்கு நான் போவதால் திடீரென்று எதையாவதுப் பார்த்துச் சுட்டால், அது மறுபக்கத்திலிருக்கும் மானிடர் மேல் பட்டுவிட்டால் என்ன செய்வது? ஏனென்றால் கல்லைத் தூக்கிப் போட்டுக் கொண்டு விளையாடினால், அது மானிடரைத் தேடிக் கொண்டு தான் போகும் என்பார்கள். அதைப் போல் காட்டில் துப்பாக்கியால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்பல. காட்டில் வழி தவறிப் போனால் உடனே ஒன்றும் யோசனை செய்யக் கூடாது. ஏதாவது ஒரு மரத்தின் மேல் ஏறி நான்கு பக்கங்களிலும் பார்த்தாலும் காடர்கள் வீடுகளில் வாழை மரங்கள் வளர்ப்பது நன்றாகத் தெரியும். உடனே அந்தப்பக்கமாகப் பார்த்து நாம் குரல்கொடுத்தாலும் சரி, அல்லது அந்த மார்க்கமாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்றாலும் சரி நமக்கு உதவி கிடைக்கும்.

கொள்ளிப்பிசாசு :– ஐயா! எங்கள் வாயால் அதைப் பற்றிக் கூறுவதற்கே பயமாக இருக்கிறது. நீங்களும் பல்லாண்டுகளாகப் பயணம் செய்கிறீர். ஆனாலும் இந்த மாதிரியான கொள்ளிப் பிசாசைப் பார்த்திருக்க மாட்டீர்கள். சூரியன் மறைந்து, கொஞ்சம் இருள் சூழ்ந்ததும் ஒரே தீ ஜோதியாக ஒரு மரத்தின் அடியில் நின்று கொண்டே இருக்கும். அந்தப் பக்கத்தில் யாராவது போனால் உடனே லபக்கென்று விழுங்கி விடுவதை எங்கள் கண்ணால் பார்த்தோம் என்று கூறினார்கள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர்கள் பேயோ, பிசாசோ, எதையோ

ஒன்றைக் காண்பது உண்மை. ஆனால் அது என்னவென்பதைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பேயாக இருந்தால் என்னுடைய காமராவில் விளக்கை இணைத்துப் புகைப்படம் பிடிக்க வேண்டும். அதனிடம் பேசி, பல கேள்விகள் கேட்டு அதைப் பேட்டி கண்டதைப்போல் பத்திரிக்கையில் பிரசுரிக்க வேண்டும் என்று பல சிந்தனைகள் என் உள்ளத்தில் உதயமாயின. அன்று, மாலை எப்பொழுது சூரியன் மறையும் என்று காத்துக் கொண்டிருந்தேன். மனதிற்குள் எனக்குக் கொஞ்சம் அச்சமாகத்தான் இருந்தது. பல்லாண்டுகளாகப் பயணம் செய்யும் நான் இதைப்போல் ஒன்று கேட்டதே இல்லை. ஆனால் பயணத்தில் பல செய்திகளைக் கேட்டிருக்கிறேன். கண்டும் இருக்கிறேன். அன்று மாலை சுமார் ஏழு மணி இருக்கும்.

ஒரு மரத்தடியில் இருளில் ஓரே பிரகாசமாக இருந்தது பைனாக்குலர் மூலம் கண்டேன். எந்த உருவத்தையும் பார்க்க முடியவில்லை. எனக்குக் கொஞ்சம் அச்சமாகவும் கவலையாகவும் இருந்தது. என்னுடன் அன்றிரவே சில காடர்கள் வருவார்களா? என்று கேட்டேன். யாரும் என்னுடன் வர மறுத்து விட்டார்கள். என்னையும் தனிமையில் போக வேண்டாம் என்றும் தடுத்துவிட்டார்கள். எனக்கும் தனிமையாக போகக் கூடிய தைரியமில்லை. மறுநாள் காலையில் அந்த மரத்தடிக்கு நான் சில காடர்களுடன் சென்றேன். அந்த இடத்தில் மரங்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. மறுபடியும் அன்றிரவே அதே மரத்தடியில் பெரிய ஒளிமயமாக இருந்ததைக் கண்டேன். என்னுடன் ஒருவர் வந்தால் போதும், நான் முதலில் போகிறேன் என்று கூறினேன். அன்றிரவும் ஒருவரும் வரவில்லை. ஆனால் அன்றிரவு பைனாக்குலர் மூலம் கொஞ்சம் அருகில் போய்ப் பார்க்கலாம் என்று என் குடிசையை விட்டுக் கொஞ்சம் தூரம் போய் பார்த்தேன். ஏதோ மரத்தடியில் மரமே பற்றி எரிவதைப்போல் தோன்றியது. மறுநாள் காலையில் இரவு ஜோதியாக எரிந்த அந்த மரத்தடியில் போனேன். அந்தப் பகுதியை நன்றாகச் சுற்றி வந்தேன். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. என் கத்தியை எடுத்து அந்த மரத்தை வெட்டிக் கொஞ்சம் மரக்கட்டையை எடுக்க முயன்றேன். என்னுடன் வந்த காடர்கள் "ஐயா! ஐயா! வாயிலும் மூக்கிலும் இரத்தம் வந்து இறந்து விடுவீர்கள்" என்று ஒரே கூச்சல் போட்டார்கள். என்ன செய்வதென்றே தெரியாமலும் திகைத்து நின்றேன். அன்றிரவே என்ன வந்தாலும் சரி, இதை ஆராய்ச்சி செய்து விட வேண்டும். பயணத்தின் நன்மை, தீமைகள் இரண்டும் வரும். உலகில் பேய், பிசாசு இல்லை என்று நான் கூறவில்லை. ஆனால் நம்மை ஒன்றும் செய்யாது. ஆண்டவன் கட்டளை இல்லாமல் அது ஒன்றும் செய்யாது ஆகையால் அன்றிரவு நானே தனிமையில் பைனாக்குலர் மூலம் பார்த்துக் கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக அருகில் சென்றேன். கடைசியில் மரத்தடியில் போய்ச் சேர்ந்தேன்.

டார்ச்சுலைட் மூலம் நன்றாகப் பார்த்தேன். பிறகு அந்த மரத்தின் பட்டையை வெட்டிச் சிறு சிறு துண்டுகளாக ஆக்கி ஒரு ஆர்லிக்ஸ் புட்டியில் போட்டு என் மேஜையின் மேல் வைத்து விட்டுப் பக்கத்திலிருந்த விளக்கை அணைத்து விட்டேன். அந்த ஆச்சரியத்தை என்னால் கூறவே முடியவில்லை.

பிறகு எல்லோரையும் அழைத்து என் குடிசைக்குள் புட்டியில் இருக்கும் ஒளியைக் காட்டினேன். இது ஒரு வகை "ஒளியுள்ள மரம்" இது பேயுமில்லை. பிசாசுமில்லை. இயற்கையாகவே மரங்களின் சில இப்படி ஜோதி மயமாகத் தோன்றும் "ஜோதிமரம்" என்றும் பண்டைக்காலத்தில் கூறுவதுண்டு. பிரயாணத்தில் பல விஷயங்களை ஆராய்ச்சி செய்யும் திறமை வேண்டும். எதையும் உடனே முடிவு செய்யக் கூடாது என்று அவர்கள் உள்ளத்தில் இருந்த அச்சத்தைப் போக்கினேன்

சிங்கபுரத்தின் சிறப்பு

– அவ்வை. தி.க.சண்முகம்.

புத்தனேரி.ரா. சுப்பிரமணியம்

உலகப் புகழ்பெற்ற துறைமுக நகரமான சிங்கப்பூரின் சிறப்பை நாங்கள் ஏற்கனவே பலர் வாயிலாகப் பலபடக்கேட்டு நெஞ்சத்திலே பதிய வைத்திருந்தோம்.

"எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்" – நல்லகுறட்
பாவுக்கு மேவுமிந்தப் பாராட்டு சிங்கப்பூர்த்
தீவுக்கும் சேரும் சிறந்து"

என்று பாராட்டத்தக்கவாறு, மனிதருக்குத் தேவையான பொருள் அனைத்தையும் மலிவாக வழங்கும் மாபெரும் சந்தையே சிங்கப்பூர் என்பதை எங்கள் உள்ளத்திலே ஒருவாறு கற்பனை செய்திருந்தோம்.

நீங்கள் புறப்படுமுன் ஒரு வார்த்தை சிங்கப்பூரிலும் சரி, மலேசியாவிலும் சரி, "ஐடெண்டிடி கார்டு" என்னும் அடையாள சீட்டு இல்லாமல் யாரும் வெளியே நடமாடக் கூடாது என்ற சட்டத்தை மறந்து விடாதீர்கள்!" என்று நண்பர்கள் எச்சரிக்கைச் செய்தனர். "நாங்கள் இன்னும் அடையாளச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவில்லையே! அப்படியானால் நாங்கள் வெளியே போகவே முடியாதா?" என்று ஏக்கத்தோடு கேட்டோம். புகைப்படம், பெயர், முகவரி, முதலான எல்லா விவரங்களும் அடங்கியிருக்கும். வீதியில் நடமாடுவோர் ஒவ்வொருவரிடமும் அடையாளச் சீட்டு இருக்கிறதா? என்று திடீரென்று சோதிக்கும் அதிகாரம் போலீசாருக்குத் தரப்பட்டுள்ளது. எவரிடம் ஐயம் ஏற்படுகிறதோ அவரிடந்தான் அடையாளச் சீட்டைக்காட்டுங்கள் என்று போலீசார் கேட்பார்கள். எனவே எப்போதும் அடையாளச்சீட்டு அல்லது பாஸ்போர்ட்டை உடன் எடுத்துச் செல்ல வேண்டுவது அவசியம் என்பதை உணர்ந்து கொண்டோம்.

நாங்கள் சிங்கப்பூர் சேர்ந்த நாள் திங்கட்கிழமை வியாழக்கிழமையன்றே அதாவது, மூன்று நாட்களுக்குள் தமிழ் நாடக விழாவைப் தொடங்கிவிடவேண்டும் என்று திட்டம் வகுத்து விட்டார். திரு. ஓலிமுகமது. நாடக விழாவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இடம் பாட்மின்டன் ஸ்டேடியம்! முழுமையாக மூன்று நாட்கள் தானே உள்ளன! இந்தக் குறுகிய காலத்துக்குள் மேடை அமைத்து விட முடியுமா? என்ற ஐயத்தோடு அந்தப் பூப்பந்து விளையாட்டு அரங்கத்தைப் பார்வையிடச் சென்றோம். அந்த அரங்கம் நிரந்தரமான கொட்டகையாகக் கட்டப்பட்டுள்ளது. மிக விசாலமானது. நாலாப்புறமும் காலரிகள் கட்டப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் உணவு விடுதியும் இணைக்கப்பட்டுள்ளதைக் கண்டோம்.

போதிய அகல நீளத்துடன் கூடிய அந்த அரங்கத்தின் இடப்பக்கத்திலுள்ள காலரியை ஒட்டி விசாலமான நாடக மேடை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சீனத்துக்காண்களுடைய சுறுசுறுப்பு வியக்கத் தக்கதாக இருந்தது. கொட்டகையின் மேல் முகட்டுக்கு அருகில் உள்ள இரும்புக் குறுக்குச் சட்டங்களிலிருந்து முறுக்குக் கம்பிகளைத் தொங்கவிட்டுப் பரணையும் மேடையையும் ஆடாமல் அசையாமல் இழுத்துக் கட்டிய அவர்களுடைய திறமையை வியந்து பாராட்டி மிகவும் மெச்சினோம்.

வேலை நேரம் முடிந்து விட்டால் ஒரு விநாடி கூடத்தாமதிக்காமல் வெளியேறி விடுவார்கள் சீனத் துக்கான்கள். பெரிய அதிகாரிகளைப் போல் ஓய்யாரமாக உடை

உடுத்தி கொண்டு வந்து உற்சாகமாக எங்களோடு கை குலுக்கி விட்டு, "நாளைக்குப் பார்ப்போம்!" என்று அவர்களுக்குரிய பாணியிலே வேடிக்கையாகக் கூறிச் செல்வார்கள். உற்சாகமாக உழைப்பதிலும் வாழ்க்கையை உல்லாசமாக கழிப்பதிலும் சிறிது கூட அலுப்படையாதவர்கள் அந்த சீனத்துக்கான்கள்.

புதிதாக மேடையமைக்க வேண்டிய அவசியம் என்ன? சிங்கப்பூரில் நல்ல மேடை வசதிகளோடு கூடிய கொட்டகை கிடையாதா? என்றால் கிடையாது என்று ஒரே வார்த்தையில் பதிலளித்துவிடலாம். தமிழர் பிரதிநிதித்துவசபை ஏற்பாடு செய்த பொது வரவேற்பு விழாவுக்குச் சிங்கப்பூர்க் கல்வி மந்திரி திரு. சியூ. சுவீ. கீ. தலைமை வகித்தார்.

கலாச்சார உயர்வில் இந்தியா எந்த நாட்டுக்கும் இரண்டாவதாகாது. சிங்கப்பூர் அநேகத் துறைகளில் இந்தியாவை எதிர் நோக்கி இருக்கிறது. இந்தியாவை நோக்கிச் சீனத்துறவி ஒருவர் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சென்று, சுற்றிக் கலை உயர்வு கண்டு, சீனாவுக்குத் திரும்பி இந்தியாவின் சிறந்த கலாச்சார வகைகளைச் சீன நாடடிலும் பரப்பினர். எனவே அப்படிப்பட்ட பழம் பெருமை வாய்ந்த இந்தியாவின் கலாச்சாரத் தூதுவர்களாகவே டி.கே.எஸ். குழுவினரை மதித்து மகிழ்வித்து வரவேற்கிறேன்! என்று பாராட்டினார் கல்வி அமைச்சர்.

ஏப்ரல் இருபத்து நாலாந்தேதி மாலையில் சிங்கப்பூரிலேயே மிக உயர்ந்த பதினான்கு அடுக்கு மாடியுள்ள மாளிகையும், ஆசியா இன்ஷ்யூரன்ஸ் கட்டிடமுமான விண்மாளிகையில்,7 திரு. ஒலிமுகமது நம் கலைக் குழுவினருக்கு ஒரு தேநீர் விருந்தளித்துப் பாராட்டினார். விண்மாளிகையின் அழகு கண்கொள்ளாதது. சிங்கை மாநகரின் பெருமையை வானளாவ உயர்த்திக் காட்டுகிறது இந்த விண் மாளிகை. இந்த விண்மாளிகையில் நாள்தோறும் ஆடல் பாடல் முதலிய கேளிக்கைகளுக்கும் விருந்துகளுக்கும் குறைவே இல்லை.

சிங்கப்பூரில் நடமாடும் கடைகளும் உண்டு. அவற்றில் எங்களை மிகவும் கவர்ந்தது பழக்கடைநாலு சக்கரச் சிறு வண்டியிலே பல வகையான பழங்களை அடுக்கி வைத்திருக்கும் அழகே தனி. கடைக்காரர் ஆப்பிள் பழத்தின் தோலைச் சீவிய முறையே ஓர் அற்புதக் கலையாகத் தோன்றியது.

சிங்கப்பூர் ஆஸ்திரேலியாவுக்கு அருகாமையில் இருப்பதால் நாக்கில் நீர் ஊறத் தக்க சுவையுள்ள அருமையான ஆப்பிள் பழம் கிடைக்கும் என்று தான் நாங்களும் முதலில் எண்ணினோம். ஆனால், அங்கே கிடைத்த பழங்கள் பேரிக்காயைப் போன்று புளிப்பு கலந்தனவாக இருந்தன.

தமிழ் நாடக விழாவுக்கென்றே பதினோருபேர் செல்லக்கூடிய பெரிய வான் ஒன்றைப் புதிதாக வாங்கி அதிலே "டி.கே.எஸ். நாடகக்குழு" என்ற பெயரைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் துலாம்பரமாகப் பொறித்து, நாங்கள் தங்கியிருந்த வீட்டிலேயே நிறுத்தியிருந்தார். திரு. ஒலிமுகமது. ஆயினும், விழா சம்பந்தமான முன்னேற்பாடுகளுக்கும் விளம்பரத்துக்கும் அந்தக் காரை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொள்ள நேரிட்டதால் எங்கள் விருப்பம் போல வெளியே செல்வதற்கு அந்தப் பெரிய கார் அவ்வளவாகப் பயன்படவில்லை.

நாங்கள் கார் வேண்டுமென்று நினைத்த போதெல்லாம் தங்கு தடையின்றித் தாமதம் ஏதும் இன்றித் தமது காடியை அனுப்பி உதவிய நண்பர் திரு. சி.ஆர். தசரதராஜ் அவர்களை மறக்க முடியவில்லை. சிங்கப்பூரிலே பிறந்து வளர்ந்த இந்தியர். சிறந்த தமிழ் உணர்ச்சி

உடையவர். இந்திய நுண்கலைக் கழகம், இந்து சபை முதலிய நிறுவனங்களின் பொறுப்பாளராகப் பணியாற்றுபவர். திரு தசரதராஜ் தான் காரோட்டியாக மனக்கசப்பில்லாதவராகப் பணியாற்றினார்.

அன்று காலையில் மவுண்ட்பேட்டன் சாலை வழியாகக் காரை ஓட்டிச் சென்றார் சாரதி. மெர்டேகா பாலத்தின் அமைப்பையும் அழகையும் ரசித்தோம். பாலத்தைக்கடந்ததும் "எஸ்பிளனேட்" என்னும் அகல் வெளியின் கண்கவர் காட்சி. மிக நேர்த்தியாகப் பராமரிக்கப்படும் இந்த "எஸ்பிளனேட்" பகுதி சிங்கப்பூர் நகரத்துக்கே ஒரு வரப்பிரசாதம் போன்றது.

பூந்தோட்டங்களும், அவற்றோடு இணைந்து கம்பீரமாக நிற்கும் சுப்ரீம் கோர்ட், நகரமன்றம், யுத்தத்தில் மரணமடைந்த வீரர்களின் நினைவுச் சின்னம் முதலிய கட்டிடங்களும் கண்ணுக்கினிய காட்சிகளாகும். சற்றுத் தொலைவிலே விக்டோரியா நினைவு மண்டபத்தின் மணிக் கூண்டும், சைனா பாங்கின் உயர் மாளிகையும் நகரத்தின் சிறந்த சின்னங்களாகத் திகழக்கண்டோம்.

"எஸ்பிளனேட்" பகுதியைக் கடந்து விக்டோரியா நினைவு மண்டபத்துக்கு அருகில் கார் சென்றபோது மண்டபத்துக்கு முன்னால் ஒரு சிலையைக் கண்டோம். இது தான் "ராபின்ஸ்" என்பாரின் சிலை என்று சுட்டிக்காட்டினார் சாரதி. அது மட்டுமல்ல, நாம் இப்போது போய்ச் சேரவிருக்கும் மிகப் பெரிய கடைத்தெருவுக்குக்கூட "ராபின்ஸ் பிளேஸ்" என்று தான் சொல்லப்பட்டது. ஆண்டர்ஸன் பாலத்தைத் தாண்டிச் சற்று நேரத்தில் "ராபின்ஸ் பிளேஸ்" எனற இடத்தை அடைந்தோம். நாலாபுறமும் மதில் போன்ற உயரமான மாளிகைக் கடைகளுடன் கூடிய சதுரப் பெருவீதியாக விளக்குவது ராபின்ஸ் பிளேஸ் என்று தான் பெயர் என்று சொல்லப்பட்டது. ஆண்டர்ஸன் பாலத்தைத் தாண்டிச் சற்று நேரத்தில் "ராபின்ஸ் பிளேஸ்" அது சிங்கப்பூரின் மிகப்பெரிய வர்த்தகக் கேந்திரம் என்பதைப் புரிந்து கொண்டோம்.

சிங்கப்பூர்த் தீவு உலகப் புகழ்பெற்ற துறைமுகமாக ஆவதற்குக் காரணமாக இருந்தவர் ஸ்டாம் போர்டு ராபின்ஸ். இவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஓடிக் கொண்டிருந்த ஆன் என்ற கப்பலில் 1781 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தகப்பனார் அந்தக் கப்பலின் மாலுமி. பதினாலாவது வயதில் ராபின்ஸ் குமஸ்தாவாகச் சேர்ந்தார். இலக்கியத்திலும், விஞ்ஞானத்திலும் மிகுந்த விருப்பம் கொண்டார். இவர் பன்மொழிகளைக் கற்றவர் மாலாய் மொழிபெயர்ப்புகளைப் பலரும் பாராட்டினர். மொழித்துறையில் இவரது ஆற்றலைப் பாராட்டி கல்கத்தா பல்கலைக்கழகம் இவருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தியது.

தமது சொந்த முயற்சியாலும் ஊக்கத்தாலும் படிப்படியாக முன்னேறினார் ராபின்ஸ்! தமது திருமணத்திலே கூட இவர் முன்னேற்றம் கண்டாராம். தம்மைவிடப்பத்து வயது மூத்தவரான திருமதி ஓலீவியா பேன் கோர்ட் என்ற ஒரு விதவையைத் திருமணம் செய்து கொண்டார்!

ராபின்ஸின் அரசியல் அறிவும் ஆட்சித்திறமையும் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த மின்டோ பிரபுவைக். கவர்ந்தன. டச்சு ஆதிக்கத்தில் இருந்த ஜாவாவை முற்றுகையிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும் படி மலாக்காவுக்கு அனுப்பப்பட்டார் ராபின்ஸ். ஜாவாவும் சரணாகதியடைந்தது. அதற்கு லெட்டினன்ட் கவர்னராகவும் ராபின்ஸ் அமர்த்தப்பட்டார்.

நிலச்சீர்திருத்தம், நீதிநிர்வாகம் போன்ற ஆக்க வேலைகளினால் புகழ்பெற்ற ராபின்ஸ் அடிமை வியாபாரத்தை ஒழிப்பதிலும் வெற்றி கண்டார். மக்களுக்கு எல்லா வகையான சுதந்தரத்தையும் அளித்தார்.

இடைக்காலத்தில் ராபின்ஸ் ஓய்வுக்காக இங்கிலாந்து சென்ற போது ரீஜண்ட் பூங்காவில் விலங்கு நூல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றுக்கு அடிப்படையிட்டார். இவருடைய விஞ்ஞான அறிவின் சின்னமாக இன்றும் இலங்குகிறது அந்த நிலையம்.

பின்னர் சுமத்திராத் தீவின் மேற்குக் கரையில் உள்ள பென்கூலன் என்ற பகுதிக்குக் கவர்னரானார். பென்கூலன் மிக மட்டமான இடமாகத் தோன்றியது. ஆங்கிலேயருக்கு நல்லதொரு வியாபாரக் கேந்திரம் வேண்டும் என்று தேடிக்கொண்டு புறப்பட்ட ராபின்ஸ், சிங்கப்பூர்த்தீவிலே 1819. ஜனவரி 29 இல் இறங்கினார். அதன் இயற்கை அமைப்பிலே இதயத்தைப் பறிகொடுத்தார்.

சிங்கப்பூர்த் தீவில் இருந்த தெமங்காய் என்ற பட்டப்பெயருடைய மலாய் கவர்னரிடமும், ஜோகூர் சுல்தானிடமும் 1819, பிப்ரவரி 6–இல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார் ராபின்ஸ் அதன்படி, தெமங்காங்குக்கு மூவாயிரம் வெள்ளியும், சுல்தானுக்கு ஐயாயிரம் வெள்ளியும் கொடுத்துச் சிங்கப்பூரில் ஒரு வர்த்தகக் கேந்திரத்தை ஏற்படுத்திக் கொண்டார். இப்போது நினைத்தால் வேடிக்கையாக இருக்கும்! மொத்தம் எண்ணாயிரம் வெள்ளிக்கு வர்த்தகக் கேந்திரமாக இடத்தைப் பிடித்துக் கொண்டு சுமார் ஐந்து ஆண்டுகளுக்குள் 1924, ஆகஸ்டு மாதத்தில், அந்தத்தீவு முழுவதையுமே சுல்தானிடமிருந்து எழுதி வாங்கி விட்டனராம் ஆங்கிலேயர்! இவ்வளவு தந்திரமாகவும் திறமையாகவும் சிங்கப்பூரில் ஆங்கிலேய ஆட்சியை நிலைநாட்டிய ராபின்ஸுக்கு ஒரு சிலை நாட்டியது தானா பெரிது!

ராபின்ஸ் காலத்துக்கு முந்திய சிங்கப்பூரின் பழைய வரலாற்றையும் சிறிது தெரிந்து கொள்வது நல்லது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தத் தீவுக்கு இந்தியாவுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது.

சிங்கப்பூர் என்ற பெயரே மலாய் வார்த்தையல்ல. சிங்கப்பபுரம் என்ற இரு தமிழ்ச் சொற்களின் இணைப்பே சிங்கப்பூராக மருவியுள்ளது என்பது தெளிவு இத்தீவுக்குச் சிங்கபுரம் என்று பெயரிட்டவன் சோழர் பரம்பரையைச் சேர்ந்த நீல உத்தமன் என்னும் மன்னன் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு

நீல உத்தமன் கி.பி. 1160 இல் ரியோ என்னும் தீவை ஆண்டு வந்தான்என்றும், அவன் ஒரு நாள் கட்டுமரத்தில் சிங்கப்பூர்த் தீவில் வந்து இறங்கினான் என்றும், இறங்கிய சமயம் குடாவிலே சிங்கத்தைப் போன்ற விலங்கு ஒன்றைக் கண்டான் என்றும், அதன் காரணமாகவேதான் கண்ட தீவுக்குச் சிங்கப்புரம் என்று பெயரிட்டான் என்றும் மலேயாவின் கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது.

மலாய்க்காரர்கள் இந்தக் தீவை துமாசிக் என்றே அழைத்தார்கள். துமாசிக் என்றால், கடல் நகர் என்று பொருளாம்.

பதின்மூன்றாவது நூற்றாண்டில் சிங்கப்பூர் புத்தமதம் தழுவிய மலாய்க்காரர்களின் அரசாங்கத் தலைநகராக விளங்கியது. இந்த அரசைக் கி.பி. 1377–இல் மஜாபஹித் என்னும் இந்த அரசினர் கவிழ்த்து விட்டனர். இவர்கள் ஜாவாவை அரசாண்டு வந்தனர். மஜாபஹித்தர்களின் படையெடுப்பினால் சிங்கப்பூரில் ரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது என்றும், அதனால் தான் சிங்கப்பூர் சமவெளி இன்னும் இரத்த நிறமாகக் காட்சி தருகிறது என்றும், ஜாவா அரசினர் கொடுத்த சாபத்தினால் தான் சிங்கப்பூர் மண்ணில் நெற்பயிர் தலையெடுக்கவில்லை என்றும் மலாய்க்காரர்கள் இப்போது கூட நம்புகின்றனராம்!

சிங்கப்பூரிலே அதுவரை யாரும் கண்டிராத முறையில் அமைந்திருந்தது நாடகமேடை. நாடகத்துக்கான ஒலிபெருக்கி ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே அசோசியேடட் ரேடியோ

ஏஜன்ஸீஸ் என்ற நிறுவனத்தாரின் பிரதிநிதிகளைக் சென்னையிலிருந்தே அழைத்துக் கொண்டு போயிருந்தோம். அரங்கின் தரம் அறிந்து ஒலிபெருக்கி அமைப்பதிலே வல்லுநர்களான இவர்களே சிங்கப்பூர் அரங்கத்திலே திணற வேண்டியதாயிற்று.

ஏப்ரல் இருபத்தைந்தாம் தேதி எங்கள் நாடக விழா தொடங்கியது. இராஜராஜசோழன் நாடகத்தைச் சிங்கப்பூர் முதலமைச்சர் திரு. லிம் யூ ஹாக் தொடங்கி வைத்தார். தமிழ் முரசு ஆசிரியர் திரு. கோ. சாரங்கபாணி தலைமை வகித்தார்.

சிங்கப்பூர் முதலைச்சருக்கு தமது தென்னாட்டுக்கலையின் மீதுள்ள மதிப்பை உணர்த்தும் ஒரு சிறப்பு அம்சத்தை நாடக ஆரம்ப விழாவின் போது கண்டோம். சிறப்புரையாற்றிய முதலமைச்சர், நாடகம் முடியும் வரை அமர்ந்திருந்து ஒவ்வொரு காட்சியையும் ரசித்த சிறப்பைத்தான் குறிப்பிடுகிறோம்.

தமது இந்தியப் பெருநகரமான பம்பாயிலே தமிழ் நாடக விழாக்களைத் தொடங்கி வைக்க எழுந்தருளிய பிரமுகர்கள் வாய் இனிக்கப் பேசி விட்டு நாடகத்தின் முதல் திரை உயர்த்தப்படுவதற்கு முன்பாகவே அரங்கை விட்டுச்சென்ற காட்சிகள் மனத்திரையில் 'பளிச்' என்று தெரிந்தன. நமது சொந்த நாட்டுப் பிரமுகர்களிடம் கூடக காண முடியாத கலை உணர்ச்சியை அயல் நாட்டார் என்று கருதக் கூடிய சிங்கப்பூர் முதல் அமைச்சரிடம் கண்டு வியந்து களிப்புற்றோம்.

அரங்கிலே ஆயிரக்கணக்கில் கூடியிருந்த ரசிகப் பெருமக்களின் கலையார் வத்துக்கும் தலை வணங்கவேண்டும். எதிரொலி காரணமாக நாடகத்தின் சுவை குன்றுமோ, ரசிகர்கள் பொறுமை இழந்து கூக்குரல் எழுப்புவார்களோ என்றெல்லாம் உண்மையில் எங்களுக்கு அச்சமாகத்தான் இருந்தது. ஆனால் கண்ணை முடித்திறப்பதற்குள் காட்சி மாறும் விந்தைகளையும் பன்னிற ஆடையணிகளின் பளபளப்பையும், அன்பைக் கவர்ந்த நடிகர்களையும் கண்டு ஒவ்வொரு ரசிகரும் பிரமித்து நாடகத்தைச் சுவைத்தனர்.

4. நியூயார்க் நகரம்

— மணியன்

நியூயார்க்கில் இருந்தபோது பொதுமக்கள் பங்கு பெறும் டெலிவிஷன் நிகழ்ச்சி ஒன்று, இரவு பத்து மணிக்கு ஒரு குறிப்பிட்ட 'சானலில்' வெளியாவதைக் கண்டேன். அது மிகவும் சுவையான நிகழ்ச்சி. குறிப்பிட்டதுறையில் நிபுணராக இருக்கும் ஒருவரை டெலிவிஷன் நிருபர் பேட்டி காண்கிறார். அந்தப் பேட்டியில் பொதுமக்களும் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள். பேட்டியாளரைத் தவிர, பொது மக்களும் அந்த நிபுணர்களிடம் தங்கள் சந்தேகத்தைக் கேட்கிறார்கள். அவர் விளக்கம் தருகிறார். இவையனைத்தும் டெலிவிஷனில் தெரிகிறது.

இது மட்டுமல்ல, குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சிக்கு ஒரு டெலிபோன் நம்பரும் கொடுத்து விடுகிறார்கள். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள், திடீரென்று ஏதாவது சந்தேகம் எழுந்தால், அந்த எண்ணுக்கு டெலிபோன் செய்யலாம். நிபுணரும் நிருபரும் அந்த டெலிபோன் அழைப்பைக் கேட்கிறார்கள். டெலிபோன் செய்தவர் கேட்டும் கேள்வி, நிபுணர் சொல்லும் பதில் எல்லாம் டெலிவிஷனில் ஒளி பரப்பாகிறது.

நான் பார்த்த இந்தப் பொது மக்கள் பங்கு பெறும் டெலிவிஷன் நிகழ்ச்சியை நடத்திய நிருபரின் பெயர் ஆலன் பர்க். புகழ்பெற்ற நிபுணராம் அவர். இரவு பத்து மணிக்கு மேல் நடைபெறும் அந்த நிகழ்ச்சியை வயது வந்தவர்களுக்கு மட்டும் உள்ள நிகழ்ச்சி என்று குறிப்பிடுகிறார்.

"இப்போது நடைபெறப்போகும் நிகழ்ச்சி, வயது வந்தவர்களுக்கு மட்டுமான நிகழச்சி அடல்ட்ஸ் ப்ரோக்கிராம். எனவே, உங்கள் அருகில் குழந்தைகள் இருந்தால் அவர்களை வேறு அறைக்குப் போகச் சொல்லுங்கள். அவர்கள் போக மறுத்தால், இந்த நிகழ்ச்சியை நீங்கள் பார்க்காதீர்கள். அலை வரிசையை மாற்றி, டெலிவிஷன் நிகழ்ச்சியை வேறு ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லுங்கள்..." என்று அறிவுப்புக் கொடுக்கிறார்கள். இந்த அறிவிப்பைக் கேட்டவுடன் நான் உண்மையிலேயே அமெரிக்க டெலிவிஷன் ஸ்தாபனத்தாரின் பொறுப்பு உணர்ச்சியையும், குழந்தைகளிடம் அவர்களுக்குள்ள அக்கறையும் மனமாரப் பாராட்டினேன்.

முதல் தினம் ஒரு போட்டி பெண்களை வைத்துக் கொண்டு விபச்சாரத் தொழில் செய்யும் ஒருவர், தம்முடைய சுயசரிதையை எழுதியிருக்கிறார். அவரை ஆலன் பர்க் பேட்டி கண்டார். அந்த நபர் முகமூடி அணிந்து கொண்டு வந்திருந்தார். தான் செய்யும் தொழிலில் இழிவு எதுவும் இல்லை என்று வாதாடினார் அவர். திகைத்த வண்ணம் அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான்.

இரண்டாவது நாள், வயதுக்கு வந்த குழந்தைகளிடம் உள்ள சில தவறான பக்கங்கள் பற்றி விவாதம். மனோதத்துவ நிபுணர் ஒருவரைப் பேட்டி கண்டார் ஆலன்பர்க். சரியான வயதில் திருமணம் செய்து கொடுத்து விட்டால் குழந்தைகளிடம் இத்தகைய கெட்ட பழக்கங்கள் இருக்காது என்று வாதாடினார்கள் பலர். அவர்களுக்கெல்லாம் பதிலளித்துக் கொண்டிருந்தார் நிபுணர்.

மூன்றாவது நாள், அறுபது வயதிற்குப் பிறகு இவ்வாழ்க்கை என்பது விஷயம். மீண்டும் அந்தத் துறையில் புகழ் பெற்ற நிபுணர் ஒருவரை ஆலன் பர்க் பேட்டி கண்டார். வயதான பெண்களும் ஆண்களும் அந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று கூச்சமில்லாமல் விவாதித்தார்கள்.

சான்பிரான்ஸிஸ்கோ நகரில் இருக்கும் போது, டெலிவிஷனில் வேறொரு சுவையான நிகழ்ச்சியினைக் கண்டேன். சமூகப் பிரச்சனைகளைப்போல், சட்டப் பிரச்சனைகளையும் அரசியல் பிரச்சனைகளையும் அங்கே டெலிவிஷனில் கருத்தரங்குகள் மூலம் விவாதிக்கிறார்கள். அந்தரங்கத்தில் தலையீடு என்றொரு நிகழ்ச்சி. சர்க்கார் எப்படி எப்படியெல்லாம் தனி மனிதனுடைய அந்தரங்க விஷயங்களில் தலையிடுகிறது என்பது பற்றிப் பலத்துறைப் பிரமுகர்கள் ஒன்று கூடி விவாதித்தார்கள். மிகவும் சுவையாக இருந்தது.

வாஷிங்டனில் ஒரு மனிதர் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அந்தப் பஸ்ஸில் இன்னிசை ஒலிப்பரப்பாகிக் கொண்டிருந்தது. அந்த இசை, தனது அந்தரங்கத்தில் குறுக்கிட்டு விட்டதாக அவர் வழக்குப் போட்டார். பயணம் செய்யத்தான் 'பஸ்' சங்கீதம் கேட்க அல்ல. அதில் ஒலிபரப்பப்பட்ட இசை என்னைப் பறித்து விட்டது. என்பது அவர் வாதம் வழக்குத் தோற்று விட்டது. ஆனால் இசைக்குப் பதிலாக அரசியல் செய்திகள் ஏதாவது ஒலிபரப்பாகி இருந்தால், அதை அந்தரங்க குறுக்கீடு என்று சொல்லாம் என்று நீதிபதி தீர்ப்பளித்தாராம்!

நியூயார்க் நகர மன்ஹாட்டன் தீவைச் சுற்றிப்பார்க்க உல்லாசப் படகுகள் நிறைய இருக்கின்றன. அதைப்படகு என்று சொல்வதை விட, சிறிய கப்பல் என்றே சொல்லாம். எல்லாவித வசதிகளும் நிறைந்த அந்தப் படகில், ஒருநாள் நான் பயணம் செய்தேன். புகழ்பெற்ற எம்பயர் ஸ்டேட் கட்டிடம், ஐ.நா. சபைக் கட்டிடம், விடுதலைச் சிலை எல்லாவற்றையும் படகிலிருந்தே பார்த்து மகிழலாம். அந்த நாட்டுக்கு வரும் உல்லாசயாத்திரிகர்கள் அனைவரும் இந்தப் படகுப் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இதேபோல் ஸ்டாடன் ஐலண்ட் என்ற தீவிற்கும், ஒரு படகு இருக்கிறது. அந்தத் தீவில் பலர் வாழ்கின்றனர். அவர்களை நியூயார்க் நகருக்கு அழைத்து வரவும், திரும்பி அழைத்துச் செல்லவும் 'போட்சர்வீஸ்' ஒன்று நடக்கிறது. இந்தப் படகில் தங்கள் கார்களையும் ஏற்றிக் கொண்டு தீவிற்குச் செல்கிறார்கள் மக்கள் இரவு வேளையில், இந்தப்படகில் பயணம் செய்தால்

சற்றுத் தொலைவில், நம்மை விட்டு அப்பால் செல்வது போல் தோன்றும். நியூயார்க் நகரக் கட்டிடங்களின் ஜகஜ்ஜோதியான விளக்குகள், ஒரு கண் கொள்ளாக்காட்சியாகத் தெரிகிறது.

வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாசயாத்திரிகர்களை ஊர் சுற்றிக் காட்ட பல ஸ்தாபனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு நியூயார்க் நகரில் இயங்குகின்றன. இதற்கென்றே நவீன வசதிகள் நிறைந்த பஸ்கள் இருக்கின்றன. பிரெஞ்சு மொழிக்காரர்களுக்கு ஒரு பஸ், ஸ்பானிஷ் மொழிக்காரர்களுக்கு ஒரு பஸ், இங்கிலீஷ் தெரிந்தவர்களுக்கு ஒரு பஸ் என்று பல பஸ்களை விட்டு, மொழிப் பிரச்சனைக்கே இடமில்லாமல் செய்து விடுகின்றனர்.

இந்தியாவைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் திரு. ராகவன் அவர்கள் ஐ.நா.சபைக் காரியாலயத்தை எனக்குச் சுற்றிக் காட்டினார். காரியதரிசியின் பிரஸ் கான்பரன்ஸுக்கும் நான் சென்றிருந்தேன். புகழ்பெற்ற அந்த உலக ஸ்தாபனத்தில், ஆங்காங்கே பல கலைப்பொருள்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. இது 'ஜப்பான் நாட்டு அன்பளிப்பு' இதைப் பிரெஞ்சு நாடு கொடுத்தது என்று அங்குள்ள கார்ப்பெட்டுகளையும் கலைப் பொருட்களையும் காட்டிக் கொண்டே வந்தார் திரு. ராகவன்.

இது இந்தியாவின் அன்பளிப்பு என்று எதைக்காட்டப் போகிறார் என்று காத்திருந்தேன். கடைசிவரை அவர் ஒன்றையும் காட்டாததால், இந்தியாவின் அன்பளிப்பாக, கலைப் பொருட்கள் எதுவும் இங்கே இல்லையா? என்று கேட்டேன்.

நியூயார்க் நகரில் பல தமிழர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, நான் நியூயார்க் நகரில் இருந்தபோது, 'பாரதியார் சங்கம், என்று ஒரு சங்கத்தை அமைத்தார்கள்' தமிழர் புத்தாண்டு தினத்தன்று இந்தச்சங்கம் ஆரம்பமாயிற்று. கடல் கடந்துச் சென்று வாழும் இந்தச் சங்கம் ஆரம்பமாயிற்று. கடல் கடந்து சென்று வாழும் இந்தத் தமிழ் அன்பர்களின் தமிழ் ஆர்வத்தைக் கண்டபோது எனக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

சிகாகோ நகரை அடைந்தவுடன், நான் டாக்டர் சந்திரசேகர் அவர்களுக்குப் போன் செய்தேன். என்னிடம் அன்புடன் பேசிய டாக்டர் "வாருங்கள், அரைமணி நேரம் பேசுவோம்....." என்றார். நான் சென்றேன். என்னுடன் நான்கு மணிநேரம் பேசினார். அவருடைய கருத்துக்கள் ஆணித்தரமானவை. இந்திய விஞ்ஞானிகள் இந்தியாவை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு யார் காரணம் என்பதைப் பற்றித் தமது கருத்தை விளக்கிச் சொன்னார். அவருடைய பேட்டியைத் தனியாக எழுதப் போகிறேன்.

திரு. விசுவநாதன் தம்பதி, நியூயார்க் நகரில் இருந்த போதிலும், தமிழ் நாட்டிற்குள் வாழ்வது போலவே வாழ்கிறார்கள். அவர் வாழும் கட்டிடத்திற்குச் சென்றால், அவர் வாழும் தளத்தை சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம். எந்தத் தளத்து வாசலில் கோலம் போடப்பட்டிருக்கிறதோ, அது அவருடையதாக இருக்கும். எந்தத் தளத்திலிருந்து மெல்லிய ஓசையில் மதுரை மணியன் இசையும், எம்.எஸ்.ஸின் குரலில் வேங்கடேசு சுப்ரபாதமும் கேட்கிறதோ, அது அவருடைய வீடாக இருக்கும்.

தமிழ் நாட்டிலிருந்து நியூயார்க் நகருக்கு யாராவது சென்றால், அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் சென்றால், அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் தாமாக முன் சென்று செய்து வருகிறார் இவர். விசுவநாதன் போன்றவர்கள் எங்கிருந்தால் என்ன? அவரைப் போன்றவர்களால் இந்தியாவிற்குப் பெருமைதானே!

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களைப்பற்றிக் குறிப்பிட்ட ரோட்ரிக், மாணவர்களுக்கு, அங்குள்ள சுதந்திரத்தைப் பற்றி வலியுறுத்திச் சொன்னார். 'ஆசிரியன் மாணவன் என்ற இருவர், கருத்துப் பரிமாறிக் கொள்ளும் இடம் தான் சர்வகலாசாலை' என்றார் அவர்.

அமெரிக்க சர்வகலாசாலைகள் பலவற்றிலும், நீச்சல் குளங்கள் இருப்பதைக காணலாம. மாணவர்களும் மாணவிகளும் உல்லாசமாக நீந்திக் கொண்டிருப்பதைப் பார்த்த போது "கல்விக் கூடத்திற்குள் இது எதற்கு"? என்ற ஐயம் எனக்கு எழுந்தது. அதை ஒரு பேராசிரியரிடம் கேட்டேன்.

"சர்வகலாசாலைக்குள் இது இருப்பது எவ்வளவோ விதத்தில் உதவுகிறது. ஒரு மாணவனுக்கோ, மாணவிக்கோ நீச்சலடிக்க வேண்டும் என்று தோன்றினால், அதற்காக நீச்சல் குளத்தை தேடிப் போய் நேரத்தை செலவழிப்பர். வெயிலில் காய்ந்து கொண்டே படிக்கிறார்கள்" என்றார்கள்.

ஆமாம் கொஞ்ச நேரம் நீந்திவிட்டு வெயிலில் படுத்திருந்த மாணவர்களும் மாணவிகளும் ஒரு கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டு, இன்னொரு கையால் 'சாண்ட்விட்சைக்' கடித்துக் கொண்டே படித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். குறைந்த உடையுடன் இருந்த அந்தப் பெண்களை எந்த மாணவனும் தவறான கண்ணுடன் பார்க்கவில்லை. அது அவர்களுக்குப் பழகிப் போன காட்சி அல்லவா.

5. கோவா

—சாவி

பம்பாயிலிருந்து கோவா செல்ல மூன்று மார்க்கம் (தரை, கடல், ஆகாயம்) உண்டு. நாங்கள் ரயில் மூலம் பெல்காம் வழி லோண்டா சென்று இன்னொரு ரயில் பிடித்து எழுபது என்பது மைல் தூரமுள்ள வாஸ்கோ—ட—காமாவிற்குச் சென்றோம்.

கேஸல் ராக்கைத் தாண்டிச் சில மைல் தூரம் சென்றதும், அழகிய இயற்கைக் காட்சிகள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன. வானுற ஓங்கி நிற்கும் மலை உச்சியினின்று பொங்கி வரும். 'தூத்ஸாகர்' என்னும் பால் அருவியைக் காணும் போது நம் பசி தாகம் எல்லாம் பறந்தோடி விடுகின்றன.

காடுமலைகளையெல்லாம் கடந்து சமவெளியை அடையும் போது வறண்ட செம்மண் பூமியைக் காண்கிறோம். செந்நிறம் என்றால், சூரியன் மலை வாயில் விழும் வேளையில் வான முகட்டில் மேகங்கள் சிவந்திருக்குமே, அம்மாதிரியான நிறம்! அதைக் கண்டபோது, கோவாவின் விடுதலைப் போராட்ட காலத்தில் தியாகிகள் பலர் தங்கள் குருதியை இந்த மண்ணிலே சிந்தியது என் நினைவுக்கு வந்தது.

சாலைகள் மிக மோசமான நிலையில் காட்சி அளித்தன. சாலை மரங்கள் யாவும் செம்புழுதி அபிஷேகத்தால் பசுமை மறைந்து சந்நியாசிகள் போல் தோற்றமளித்தன.

நானூற்றைம்பது ஆண்டுக்காலம் போர்ச்சுகீசியரின் அவல ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த கோவாவின் பரிதாபத் தோற்றத்தைப் பற்றி அந்தச் சாலைகளே கட்டியம் கூறிக்கொண்டிருந்தன.

கோவாவில் மொத்தமே ஆறு லட்சம் பேர்தான் வாழ்கிறார்கள். அவர்களில் பாதிப்பேர் இந்துக்கள். மற்றப் பாதிபேர் கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் இந்த ஆறு லட்சம் பேருக்கு வேண்டிய அரிசையைக் கூடக் கோவாவில் உற்பத்தி செய்வதில்லை. மூன்றில் ஒரு பங்கு நிலங்களே பயிர் செய்யப்படுகின்றன. இவ்வளவு பெரிய ஊரில் மருந்துக்குக்கூட ஒரு தொழிற்சாலை கிடையாது. என்ன சொன்னேன்? மருந்துக்குக்கூட என்றா சொன்னேன்? தப்பு இரண்டொரு மருந்துத் தொழிற்சாலைகள் இருக்கின்றன" என்றார்.

இரும்புக் கனி வளம் இங்கே மலை மலையாகக் கிடக்கிறது. கடந்த நானூறு ஆண்டு காலமாக அந்த மலைகளை யெல்லாம் வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். இரும்புக்கனி என்றால் ஏதோ பாதாளச் சுரங்கம் என்று எண்ணிவிடாதீர்கள். மலைகளை அப்படியே வெட்டி எடுக்க வேண்டும்.

"இரும்பை வெட்டி வெட்டி அனுப்பிக் கொண்டிருந்ததால் தான் போர்ச்சுகீசியரின் இதயமும் இரும்பாகவே ஆகிவிட்டதோ?" என்ற ஐயமும் ஏற்படும்.

"கேரளாவைக் காட்டிலும் அழகிய இயற்கைக் காட்சிகள் சூழ்ந்தது தான் கோவா!" என்றார் அவர்.

கோவா, மல்கோவா, அல்போன்ஸோ, பாதிரி என்றெல்லாம் மாம்பழத்திற்குப் பெயர் வைத்திருக்கிறார்களே, அந்த பெயர்களெல்லாம் இங்கிருந்து வந்தவைதானே?

ஆமாம், அல்பான்லோ டீ அல்பு கெர்க் என்னும் போர்ச்சுகீசியன் தான் 1509–ம் ஆண்டில் முதல் முதலாக இந்தியாவுக்கு வந்தவன். அவனுக்குப் பிறகே வாஸ்கோ – டீ– காமா வந்தான். அல்பான்ஸோ, கீழ்த்திசையில் போர்ச்சுகீசிய சாம்ராஜ்யத்தை நிறுவ முயற்சி எடுத்துக் கொண்டான். அவனுடைய பெயரைக் கொண்டதுதான் அந்தப் பழம். பாதிரி என்பது கிறிஸ்துவப் பாதிரிமார்களைக் குறிப்பது. போர்ச்சுகீசிய மொழியில் பாதிரியை Padre என்று கூறுவார்கள்" என்றார்.

மேல்நாட்டு முறையில் உடையணிந்த ஆண்களும் பெண்களும் தெருக்களில் உல்லாசமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

கோவா, இந்தியாவின் ஒரு பகுதியே என்றாலும் அங்கு வாழும் மக்கள் யாவரும் நம்மைப் போலத்தான் இருக்கிறார்கள் என்றாலும், மரங்களின் மீது செம்மண் படிந்திருப்பது போல் போர்ச்சுகீசியரின் கலாசாரப்பூச்சு அவர்கள் மீது படிந்து நிற்பதை நாங்கள் காணத் தவறவில்லை.

ஒரு போர்ட்டரைப் பிடித்து இருவரும் ஸுவாரி ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

கோவாவில் ஓடும் இரண்டு முக்கிய நதிகளுக்கு 'ஸுவாரி' 'மண்டோவி' என்று பெயர். இவ்விரண்டு ஆறுகளும் அரபிக் கடலில் போய்ச் சங்கமாகின்றன. அந்த இடங்களில் தான் கோவாவின் இரண்டு பிரசித்தி பெற்ற நகரங்களும் உள்ளன. கோவாவின் தலை நகரமான பஞ்சிம், மண்டோவி நதிக்கரையின் இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது. சரித்திரப் புகழ் வாய்ந்த வாஸ்கோ–டீ–காமா நகரம் ஸுவாரி நதிக்கரையில் உள்ளது.

நதிகளைப் போலவே, கோவாவில் வழக்கிலிருந்து வரும் முக்கிய மொழிகளும் இரண்டு தான். ஒன்று கொங்கணி, மற்றொன்று மராத்தி, படித்த வகுப்பார் மட்டுமே போர்ச்சுகீஸ், ஆங்கிலம் இரண்டு பாஷைகளும் பேசுகிறார்கள்.

கோவாவில் வாழும் கிறிஸ்துவர்களில் பலர் கொங்கணி மொழியே பேசுகிறார்கள். கொங்கணிக்கென்று சொந்த லிபி கிடையாதாகையால் ரோமன் லிபியில் எழுதுகிறார்கள். இந்துக்களில் பெரும்பாலோர் பேசுவதும் கொங்கணி தான் என்றாலும் அவர்கள் மராத்தி மொழியில் கல்வி அறிவைப் பெறுகிறார்கள். கோவாவில் மொத்தம் 250 மராத்திப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. கொங்கணி மொழிப் பள்ளிகள் இல்லாததால் அங்குள்ள கிறிஸ்துவர்களைக் காட்டிலும் இந்துக்களே அதிகம் கல்வி அறிவு பெற்றவர்களாயிருக்கிறார்கள். இன்று மராத்தி எழுத்தாளர்களில் பெரும்புகழ் பெற்று விளங்குபவர்கள் பலர் கோவா இந்துக்களே.

ஒருபுறம் கிறிஸ்துவ மதமும் அதற்குரிய சின்னங்களும், கலாச்சாரங்களும் பழக்க வழக்கங்களும் மலிந்துகிடந்த போதிலும் இன்னொருபுறம் இந்து மதம் தனக்குரிய, புராதனப் பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கிறது.

கோவாவை, பழைய கோவா, புதிய கோவா என்றும் இரண்டு பகுதியாகப் பிரித்துக் கூறுகிறார்கள். முதன் முதலில் போர்ச்சுகீசியர் வந்து பிடித்த பகுதியைப் பழைய கோவா என்றும் பின்னால் சேர்ந்த பகுதியைப் புதிய கோவா என்றும் அழைக்கின்றனர்.

காஞ்சீபுரத்தில் கால் வைத்த இடமெல்லாம் கோயில் என்பார்கள். அதைப் போலவே, இந்தப் போண்டாப்பகுதியிலும் கோயில்கள் அதிகம். மங்கேஷ் ஆலயம், சாந்த துர்க்கை கோயில், ராம்நாத், மகாலட்சுமி, நாகேஷ், தேவகி கிருஷ்ணா ஆகிய அத்தனை தேவாலயங்களும் இங்கே தான் இருக்கின்றன.

பஞ்சிம் நகரின் பசிய காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியவில்லை. துறைமுகத்தைச் சுற்றி நிற்கும் கப்பல்கள் கவர்ச்சி மிக்க கட்டிடங்கள், நேர் நேரான வீதிகள், விசாலமான சாலைகள், அழகிய சோலைகள், குளுமை மிக்க குன்றுகள், அந்தக் குன்றின் மீது உயர்ந்து நிற்கும் ஆர்ச்பிஷப் அரண்மனை இவ்வளவையும் பார்த்தால் பசி தீரும். நகருக்குள் மண்டிக்கிடக்கும். 'பார்' களைப் பார்த்தாலோ பழக்கமுள்ளோருக்குத் தாகமெடுக்கும்.

போர்ச்சுகீஸ் சோல்ஜர்களைக் கண்டால் நீங்களும் தான் சிரிப்பீர்கள். அவர்களெல்லாம் பெரிய வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்கள்! வார் என்றால் ஸ்பெல்லிங் என்னவென்று கேட்பார்கள். மதுபானம் அருந்துவதிலேயே வாழ்நாளைக் கழித்தவர்கள். குடித்துக்குடித்து 'தொந்தி' பருத்துப் போனவர்கள். அவர்களால் ஓட முடியாது. மார்ச் என்றால் "மார்ச்சாவது ஏப்ரலாவது?" என்று சொல்லக் கூடியவர்கள். சில மாதங்களுக்கு முன் இராணுவ முகாமைப் பஞ்சிலிருந்து போண்டோவுக்கு மாற்றிய பொழுது ஐயோ! பதினேழு மைல் தூரமா மார்ச் செய்ய வேண்டும்? என்று தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள்! சமீபத்தில் போர்ச்சுகீஸ் இராணுவ டாங்கி ஒன்றை நம் இந்திய வீரர்கள் கைப்பற்றிய போது அந்த டாங்கி நிறைய மதுபான புட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தனவாம். என்றார் டிஸில்வா.

மதுபான புட்டிகள் இராணுவ முகாமில் மட்டும் இருக்கவில்லை. கோவா முழுவதும் பார்த்த இடங்களில் எல்லாம் 'பார்'கள் தான்! பாட்டில் மலைகள் தான். சிலர் அந்தப புட்டிகளைக் கொண்டே தோட்டத்துக்குக் காம்பவுண்டுச்சுவர் போட்டிருக்கிறார்கள்.

"ஆமாம்" இந்திய இராணுவத்தினர் கோவாவுக்குள் வந்த போது இந்த சோல்ஜர்கள் என்ன செய்தார்கள்?

கோவா முழுவதும் சுற்றிப் பார்த்த போது நாங்கள் திரும்பத்திரும்பக் கண்ட காட்சி வயல்களும் மலைகளும் காடுகளும் தான். வயல்களிலும் பெரும் பகுதி பாழ்பட்ட தோற்றமே அளித்தன. "போர்ச்சுக்கீசிய ஆட்சியில் இங்கே எந்தவிதமான தொழிலும் முன்னேற்றம் அடையவில்லை. விவசாயம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதற்குக் காரணம் நிலத்தில் பாடுபட்டுப் பயிர் செய்கிறவர்கள் மிகக் குறைவு" என்றார் டிஸில்வா. அப்படியானால் இங்குள்ள மக்கள் பிழைப்புக்கு என்ன செய்கிறார்கள்?

சுமார் நாற்பதாயிரம் பேர் சுரங்கங்களில் வேலை செய்கிறார்கள் சுரங்கத் தொழிலில் நாள் ஒன்றுக்கு ஆறு ரூபாய் வரை கூலி கிடைக்கிறது. நிலத்தில் பாடுபட்டால் இன்றைக்கெல்லாம் ஒன்றரை ரூபாய்க்கு மேல் கிடைப்பதில்லை".

"மற்றவர்கள் என்ன செய்கிறார்கள்?"

"சிலர் வியாபாரம் செய்கிறார்கள்" சிலர் பள்ளிக்கூட ஆசிரியராயிருக்கிறார்கள். வேறு சிலர் பாங்குகளிலும் தபாலாபீசுகளிலும் வேலை பார்க்கிறார்கள். பள்ளிக்கூட ஆசிரியராக வேலை பார்த்தால் கோவாவில் பார்க்க வேண்டும். தாபல்காரராக வேலை செய்தால் கோவாவில் செய்ய வேண்டும்" என்றார் அவர்.

இங்குள்ள வியாபாரிகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இலலை. வெளிநாடுகளிலிருந்து ஆடம்பரப்பொருள்களை இறக்குமதி செய்து கள்ளக் கடத்தல் மூலமாகக் கொள்ளை விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். டிரான்ஸிஸ்ட்டர் ரேடியோ, மதுபான வகை, கைக்கடிகாரம், தங்கம், பௌண்டன் பேனா, நைலான் போன்ற சட்டைத் துணி இன்றளவும் வந்து கொண்டிருந்தன. உலகத்திலுள்ள நவ நாகரிகப் பொருள்கள் அனைத்தும் கோவா மக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன. ஆனால் ஒன்று மட்டும் தான் இல்லை...."

"அது என்ன ?"

"சுதந்திரம்! பேச்சுரிமை கிடையாது. பொதுக்கூட்டம் போட முடியாது. எதற்கெடுத்தாலும் அடக்கு முறை தான். 1948–ல் மகாத்மாஜி சுட்டுக் கொல்லப்பட்ட சேதி கேட்டு நாங்கள் துடி துடித்துப் போனோம்.

கோவாவில் வாழும் இந்தியார்கள் வாய்மூடி மௌனிகளாயிருப்பதற்குப் போர்ச்சுகீசிய ஆட்சியின் பெருந்தன்மை காரணமல்ல. அவர்களுடைய பயங்கர ஆட்சியே காரணம் கோவா மக்கள் பூரண சுதந்திரத்துடன் வாழ்கிறார்கள் என்று நீங்கள் கூறுவதை நான் ஒப்புக் கொள்வதற்கில்லை. பாரத தேசம் சுதந்திரம் பெறும் வரை கோவா மக்கள் கோவாவில் விடுதலைக்காகக் காத்திருக்க முடியும். ஆயினும் அவர்கள் தங்களுக்குள்ள மனித உரிமைகளையும் சுயமரியாதையையும் இழந்து விடமுடியாது".

"விவா கோவா லிவ்ரே" வாழ்க கோவா சுதந்திரம்!".

6. பண்டைய உரையாசிரியர்

— டாக்டர். உ.வே. சாமிநாதய்யர்

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம் முதலியவைகளின் உரையாசிரியர்கள் பற்றி பார்ப்போம்.

உரையாசிரியர்கள் நூலின் பொருளை நூலாசிரியர் பால் நேரே அறிந்தவர்களாயிருப்பினும் அந்நூற் கருத்தை விளங்கத் தெரிவித்தலில் அவர்களுக்கு அதிக வருத்தமிராது. அங்ஙனம் தெரிந்துகொள்ளாமல் இருந்தால் கருத்தைத் தெரிந்து கொள்ளுதலிலும் இன்னதற்குப் பொருள் இன்னதென்றும் இதற்கு ஆதாரமின்ன தென்றும் ஆராய்ச்சி செய்தலிலும் அதற்காகப் பல நூல்களைப் படித்தலும் காலப்போக்கும் அதிக வருத்தமும் அவர்களுக்குண்டாம். நடுவு நிலைமையை உடையவராயிருத்தல் உரையாசிரியருக்கு இன்றியமையாததென்றும் பெரியோர் கூறுவர் அவர் பல சமய நூல்களையும் பல கலைகளையும் முறையே கற்று உலக வழக்கத்தையும் நன்கறிந்திருத்தல் வேண்டும் கல்வியுடன் கேள்வியிலும் சிறந்திருத்தல் வேண்டும்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியோர் :

தொல்காப்பியத்திற்கு உரை செய்தவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார் போன்ற அறுவரும் தொல்காப்பிய உரை செய்தோர் ஆவர்.

ஒல்காப் பெருந்தவத் தொல்காபிய முனி, தன் பெயராலுல கின்புறத் தருநூல், உளங்கூருரையாமிளம்பூரணமும், ஆனாவியல்பிற் சேனாவரையமும், உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்கினியமும், மற்றுமற் றிடபொருள் முற்று முணர்ந்து என்னும் இலக்கணக்கொத்துப் பாயிரத்தால், இளம்பூரணம் சேனாவரையம், நச்சினார்க்கினியம் என்னும் இம்மூன்று உரைகள் தொல்காப்பிய மூலத்தோடு சில இடங்களில் சில நூற்றாண்டுகளுக்கு முன் வழங்கி

வந்தனவென்று தெரிகின்றது. இம்மூன்றுரையன்றிப் பேராசிரியர், கல்லாடர், தெய்வச் சிலையாரென்பவர்களும் அந்நூலுக்கு உரை செய்திருக்கிறார்களென்று சில ஆதாரங்களால் தெரிய வருகின்றது. இவற்றிற் சில பாகங்கள் இப்போது கிடைக்கின்றன. இந்த ஆறு உரைகளில் இளம்பூரணரும் பேராசிரியரும் நச்சினார்கினியரும் செய்த உரைகளே தொகாப்பிய முழுமைக்குமுள்ளன.

சேனாவரையார், கல்லாடர், தெய்வச்சிலையார் என்னும் மூவரும் சொல்லிதிகாரத்துக்குச் செய்துள்ள உரைகள் இப்போதுள்ளன. கல்லாடர் இயற்றிய உரை முற்றும் கிடைக்கவில்லை.

இளம்பூரணர் :

இவர் தொல்காப்பியத்துக்கு முதலில் உரைசெய்தவராக நினைக்கப்படுகிறார். அதனால், இவர் உரையாசிரியரென்ற பெயராலும் வழங்கப்படுவர். மூவாயிரம் வருடங்களுக்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியத்திற்கு இவர் காலம் வரையிலும் உரை இல்லாமலிருந்தது என்றும் சுருக்கமாக ஏதேனும் ஒருரை இவர் காலத்திற்கு முன்பு இருந்திருக்க வேண்டும் என்றும் சிலர் கருதுவதுண்டு. இளம் பூரணவடிகளென்றும். சிலர் கருதுவதுண்டு இளம்பூரணவடிகளென்றும், அடிகளென்றும், புலவுதுறந்த பெரியோரென்றும் பேராசிரியர் அடியார்க்கு நல்லார் முதலியோரால் இவர் பாராட்டப் பெறுவர். நன்னூல் மயிலை நாதர் உரை இவர் உரையைத் தழுவியே இயற்றப் பெற்றதென்று விளங்குகிறது. "இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி யிளம் பூரண ரெனுமேதமின் மாதவரோதிய உரையென்று ணர்க" என்று எழுதியிருந்ததால் இவர் பெருமை நன்கு விளங்கும்.

பேராசிரியர் : இவர் நச்சினார்க்கினியருக்கு முந்தியவர். நச்சினார்க்கினியர் இவரை மிகவும் பாராட்டிக் கூறுவர். தொல்காப்பிய மெய்பாட்டியலுக்கும் உவமவியலுக்கும் இவர் எழுதிய உரையும் காட்டிய மேற்கோள்களும் அவற்றை விளங்கிய பகுதிகளும் அறிந்து மிக இன்புறற்பாலன. குறுந்தொகையில் முதல் 380 பாடலுக்கும் இவர் உரை எழுதிருந்தார். இப்போது அது கிடைக்கவில்லை. திருச்சிற்றம்பலக் கோவையாருக்கும் இவர் உரை எழுதியுள்ளார். இவர் எழுதிய உரை பாராட்டத்தக்கனவாகும்.

சேனா வரையர் : இவர் வடமொழியிலக்கணம் நன்கு கற்றவர். ஸ்ரீ சிவஞான யோகிகள் முதலியோர்களால் மிகவும் பாராட்டப் பெற்றவர். இவரது தொல்காப்பிய சொல்லதிகார உரை சிறந்தது ஆகும்.

நச்சினார்க்கினியர் இவர் உச்சி மேற் புலவர் நச்சினார்க்கினியர் என்று சிறப்பு பெயர் பெற்றவர். இவர் சீவக சிந்தாமணிக்கு எழுதிய உரை சிறப்புப் பெற்றது. இவர் சரித்திரம் சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு முகவுரைகளில் மிக விரிவாக எழுதப் பெற்றுள்ளது. இவருரையில் 82 – பழைய நூல்கள் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. குறுந்தொகையில் பேராசிரியர் உரை எழுதாதொழிந்த 20 பாடல்களுக்கு இவர் உரை எழுதியுள்ளார். இவருடைய உரை நயங்கள் சீவகசிந்தாமணி முதலிய நூல்களின் உரையிற் பல காணப்படும். பதினெண் கீழ்க்கணக்குகளுள் சிலவற்றின் உரைகள் நச்சினார்க்கினியர் உரையென்றே பதிப்பிக்கப்பட்டு வந்தமையும் பலர் அறிந்தனவே.

கல்லாடர் : இவர் தொல்லிகாப்பியத்திற்கு உரையெழுதியவர். இவர் சங்கப் புலவராகிய கல்லாடர் அல்லர்.

இறையனார் அகப்பொருள் : இறையனார் அகப்பொருளுக்கு இப்பொழுதுள்ள உரை மேற்கோள்களாக வந்துள்ளன. ஆகையால் நக்கீரர் அதை இயற்றியிருக்கமாட்டார். அவர் மாணாக்கர் பரம்பரையில் உரைமட்டும் வந்ததென்று தோன்றுகின்றது. மேற்கோள்கள் பிற்காலத்து ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் உரையாசிரியர்கள்: நாலடியார் என்ற நூலுக்கு உரை வகுத்தவர் பதுமனார். திருக்குறளில் அதிகாரப்பகுப்பு உள்ளது போல நாலடியார்க்கும் அதிகாரப் பகுப்பு வகுத்தவர் இவரே. குடத்துக்குள் யானையைப் புகுத்துவது போல, பல பாடல்களைச் சில அதிகாரங்களுக்குள் புகுத்தியிருக்கின்றார் பதுமனார்.

திருக்குறளுக்கு பதின்மர் உரையெழுதியுள்ளனர். அவர்களுள் பரிமேழகர் உரையே சிறந்தது ஆகும். திருக்குறளுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார் என்ற கருத்தும் உண்டு. "வாண்மிகு வயமொய்ம்பின்" (பரிபாடல் 9 : 57) என்பதற்குப் பரிமேழகர் எழுதியுள்ள பொருளை நச்சினார்க்கினியர் மறுத்து பொருள் எழுதியுள்ளதால் நச்சினார்க்கினியர் பரிமேலழகர்க்கு பிந்தியவர் என்று புலனாகிறது.

காப்பிய உரையாசிரியர்கள்: சிந்தாமணிக் காப்பியத்தின் உரையாசிரியர் நச்சினார்க்கினியர். இவருக்கு முன்பு ஒருவர் சிந்தாமணிக்கு உரை செய்ததாகக் தெரிகிறது. சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரை என்ற உரை உள்ளது. இது மிகவும் சிறந்தது. அடியார்க்கு நல்லாரும் உரை இயற்றினார். இவர் நாடக நூல், இசை நூல் முதலியவற்றை மேற்கோள் காட்டியுள்ளார். "இஃது இன்ன நூல்", "இன்ன நூலாசிரியர் வாக்கு" என்று அடியார்க்கு நல்லார் புலப்படுத்துவார்.

நீலகேசி என்ற சைன நூலுக்கு உரை எழுதியவர் திவாகரவாமன முனிவர். இவ்வுரை மிக சிறந்தது. அரிய பல செய்திகளும் கிடைத்தற்கரிய பல நூல்களின் பெயர்களும் இவர் உரையில் காணக் கிடைக்கின்றன.

இலக்கண நூல்களின் உரையாசிரியர்கள்: நன்னூலுக்கு உரை செய்தவர் மயிலை நாதர். இவருடைய உரையினால் தான் அவிநய நூலின் உரையாசிரியரின் பெயரும் வெளியாகியது.

தண்டியலங்கார உரை அந்பாய சோழன் காலத்தில் இயற்றப்பட்டது. ஆனால் உரையாசிரியர்கள் யாரென்பது விளங்கவில்லை.

வீரசோழியத்தின் உரையாசிரியர் பெருந்தேவனார். இவர் இருமொழிப் புலமை வாய்ந்தவர்.

பக்தி நூல்களின் உரையாசிரியர்கள்: மறைஞான சம்பந்தர் முதலியவர் சைவ சாஸ்திரங்களுக்கு உரை செய்தனர். இவர்களில் திருவாவடுதுறை ஆதினத்து ஸ்ரீ சிவஞானயோகிகள் மிகச் சிறந்த உரையாசிரியர் ஆவார். திவ்யப் பிரபந்த உரையாசிரியர்கள் பெரிய வாச்சான் பிள்ளையும் நஞ்சீயரும் ஆவர். இவர்களுடைய உரையில் ஒரு பாடலுக்கு உரையைக் கேட்டுவிட்டால் மனம் வேறு ஒன்றில் செல்லாது.

7. ஐரோப்பியர் வருகைக் காலத் தென்னிந்தியச் சமூக வாழ்க்கையும் இலக்கியமும்

— டாக்டர் கே.கே. பிள்ளை

சமூக வாழ்க்கை: 17, 18–ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. உள்நாட்டு அரசுகளும் ஐரோப்பிய வர்த்தகக் குழுக்களும் பற்பல போர்களில் ஈடுபட்டன. பாளையக்காரர்கள், ஓரியா, தெலுங்கு நாடுகளைச் சார்ந்த ஜமீன்தார்கள், அவர்கள் அலுவலாளர்கள் முதலியோர் மக்களைப் பல வகையாகத் தொல்லைப்படுத்தினர். நாட்டில் அமைதி குறைந்தது. களவும், கொள்ளையும் வழிப்பறியும் கொலையும் பல இடங்களில் நடைபெற்றன. இத்துடன் தொற்று நோய்கள், பஞ்சம் முதலியனவும் தாண்டவமாடின. இக் குறைகளை கிறித்தவ சமயகுரவர்கள் தங்கள் எழுத்துக்களில் கூறியுள்ளனர்.

சாதிகள் வாயிலாகவும் மக்களிடையே சண்டைகள் ஏற்பட்டன. பார்ப்பனர் உயர் நிலையிலிருந்தனர். சமூக வாழ்க்கையிலும், அரசியல், உயர்பதவிகள் போன்றவற்றில் செல்வாக்கு

பெற்றிருந்தனர். கல்வித்துறையிலும் செல்வாக்கு இருந்தது. கேரளத்தில் நம்பூதிரிகள் ஆதிக்கம் வளர்ந்து வந்தது. அரசர்களும் நம்பூதிரிகள் ஆணைக்கு உட்பட்டுச் செயலாற்றினர். கோயில், சமூகம் யாவற்றிலும் செல்வாக்கு பெற்றிருந்தனர். பதினாயிரத்திற்கு மேற்பட்ட மார்ப்பன மாணவர்கள் மதுரையில் கல்விப் பயிற்சி பெற்றனர் என்று கிறிஸ்து சமயத் தொண்டரான இராபர்ட் டி–நொபிலி 17 ஆம் நூற்றாண்டில் எழுதியுள்ளார். தொடக்கக்கல்வி திண்ணைப் பள்ளிக் கூடங்களில் நடைபெற்றது. ஆங்காங்குச் சிற்றூர்களிலும், பெருநகரங்களிலும் சில ஆசிரியர்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வந்தனர். ஆனால் பெண்களுக்கு கல்வி அளிக்கவில்லை.

பெண்கள் நிலை: பெண்கள் நிலை தாழ்வடைந்தது. அவர் ஒதுங்கி இருந்து தம் வாழ்க்கையை நடத்தினர். வீடும் குடியுமே அவரது முழுக் கவனத்தையும் கவர்ந்தன. விலை மகளிர் கூட்டம் கிராமங்களிலும், நகரங்களிலும் காணப்பட்டது. அவருள் தேவதாசிகள் என்பார் ஒருபிரிவினர். முற்காலத்தில் இறைவன் தொண்டிலேயே ஈடுபட்டிருந்தனர். அதனால் தேவரடியார் என்னும் பெயர் சிறப்பாக அவருக்கு வழங்கியது. அப்பர் தமக்கையார் திலகவதியார் முதலான கல்வியறி வொழுக்கம் சான்ற கன்னியர் திருக்கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டுத்தூய வாழ்க்கை நடத்தி வந்தச் செயலைப் பெரிய புராணத்தில் காணலாம். 15ஆம் நூற்றாண்டு முதல் தேவரடியார் வாழ்க்கை முறை சீர்குலைந்தது.

மன்னர் இறந்தால் மனைவியர் அனைவரும் உடன்கட்டை ஏறினர் அல்லது தீயில் பாய்ந்தனர். செல்வர் உயர் குலத்தோர் ஆகியோரிடம் இவ்வழக்கம் தொடர்ந்து வழக்கத்தில் இருந்தது. 18–ஆவது நூற்றாண்டில் கன்னட நாட்டில்தான் இது மிகுதியாகக் காணப்பட்டது. பெரும்பாலும் கைம்பெண்டிர் தனியாக உடன்கட்டை ஏறினர். தெற்குப் பகுதிகளில் உடன்கட்டை ஏறுதல் மிகக்குறைவாக இருந்தது. நம்பூதிரிகள், நாயர்கள் மற்ற வகுப்பினர் எவரும் இதைக் கைக் கொள்ளவில்லை. தமிழகத்திலிருந்து சென்ற பார்ப்பனர் மட்டுமே அவ்வழக்கத்தைக் கையாண்டு வந்தனர்.

உணவு பழக்க முறைகள்: மக்கள் உணவில் பெரும் மாற்றமொன்றும் தோன்றவில்லை. தக்காணத்தில் வாழ்ந்த முகம்மதியர் பலர் கோதுமை உணவைப் பயன்படுத்தினர். அவரைச் சுற்றியிருந்த இந்துக்களும் இதைப் பின்பற்றினர். பார்ப்னர், வீரசைவர், சைவவேளாளர் மற்றும் உயர்ந்த வகுப்பினர் அனைவரும் மரக்கறி உணவையே உண்டனர். சமூக உயர்நிலைக்குப் புலால் மறுத்தல் காரணம் என பலர் கருதினர் எளிய மக்களும், தாழ்ந்த வகுப்பினரும், தொழிலாளிகளும் கள்ளும், சாராயமும் உழைப்பிற்கு ஊக்கம் அளிப்பன என கருதி அவற்றைப் பருகி வந்தனர்.

ஆடை அணிகலன்கள் : பொதுமக்கள் ஆடை அணிகலன்களில் குறிப்பிட்டத்தக்க மாற்றம் நிகழவில்லை. மன்னர்களும் அவரைச் சார்ந்த அலுவலாளர்களும் தமது ஆடை அணிகலன்களுக்காகப் பெருந்தொகை செலவு செய்தனர். பகட்டணியில் விருப்பம் மிகுதியாகக் காணப்பட்டது. அரசவைகளும் அரசர் மாளிகைகளும் சிறந்த வேலைப்பாடுகள் மிகுந்த சிற்ப ஓவியங்களால் அழகுபடுத்தப் பெற்றன.

விழாக்கள் : மக்கள் பல்வேறு வகையான விழாக்களைக் கொண்டினர். தசரா, தீபாவளி, தைப்பொங்கல், சித்திரை விழா, கார்த்திகை விளக்கு, திருவாதிரை நோன்பு முதலியன நாடெங்கும் விமரிசையாக நடைபெற்றன. தீபாவளி கேரளத்தைத் தவிர ஏனைய நாடுகளில் கொண்டாடப்பட்டது. கேரளத்தில் ஓணமும் தமிழ் நாட்டில் தைப்பொங்கலும், கன்னட தெலுங்கு நாடுகளில் சங்கராந்தியும் தனிச் சிறப்பு பெற்றிருந்தன. மகாராஷ்டிரத்தில் கணபதி விழாக்கள், ஹோலி பண்டிகை என்னும் காமன் விழா பத்து நாள் திருவிழா முதலியவை விமரிசையாக நடந்தன. இவை பற்றிய விவரங்கள் நாட்டுப்பாடல்கள், கல்வெட்டுகள், இலக்கியங்கள், வெளி

நாட்டு அறிஞர் வரைந்துள்ள குறிப்புக்கள் முதலியவற்றில் கிடைக்கின்றன. சிறுமிகள் இசையுடன் ஆடும் கோலாட்டம் எங்கும் பரவியிருந்தது. மேலும் கழைக் கூத்தாடிகள் பாம்பாட்டிகள், மாய வித்தைக்காரர் முதலியோர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு மகிழ்ச்சியளித்து ஊதியம் பெற்றனர்.

சமயம் : கிறிஸ்தவம், சைவம், வைணவம், முகமதியம் போன்ற பல்வேறு சமயங்கள் விளங்கின. இவற்றிற்கிடையே கருத்து வேறுபாடுகளும், அவை பற்றிய விவாதங்களும் தோன்றிய போதிலும் மதவெறியும் பிறரைத் துன்புறுத்தும் மனப்பான்மையும் எழவில்லை. வீர சைவராயிருந்த இக்கேரி நாயக்கர் வைணவக் கோயில்களுக்கு நன்கொடை அளித்துள்ளார்.

16–ஆம் நூற்றாண்டு முதல் கிறிஸ்தவ சமய குரவர் ஐரோப்பாவிலிருந்து வந்து தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் சமயப் பணியாற்றினர். கேரளம், கொங்கணம், மேற்குக கன்னட நாடு தமிழகம் முதலிய பகுதிகளில் இவரது முயற்சிகள் பயனளித்தன. இராமநாதபுரம் கிழவன் சேதுபதி தமது நாட்டிற்குச் சென்ற கிறிஸ்தவத் தலைவர்களுக்குக் கொடும் தீங்கு விளைவித்தார். 18–ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கரைத் தவிர மற்றப் பிரிவினைச் சார்ந்த கிறிஸ்தவர்களும் தம் சமயப் பணியில் பெரிதும் ஈடுபட்டுழைத்தனர். மேல் நாட்டினர் கல்வி நிலையங்களை நிறுவினர். கல்வி, ஒழுக்கம் முதலியவற்றை சீர்திருத்தினர்.

தமிழ் இலக்கியங்கள்: பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் அரசியல் போராட்டங்கள் நடைபெற்ற போதிலும் இலக்கிய உணர்ச்சி குன்றிப்போகவில்லை. முன்போலவே பிரபந்தங்களும், புராணங்களும் தொடர்ந்து இயற்றப்பட்டுவந்தன. சமயத்தைத் தவிர வரலாற்றுத் தொடர்புள்ள சில கவிதைகளும் தோன்றின. எடுத்துக்காட்டாக தொண்டை நாட்டு வரலாறு பற்றியச் செவி வழி அறிந்த செய்திகளைத் நூறு செய்யுட்களால் படிக்காசுப் புலவர் "தொண்டை மண்டலசதகம்", அதே போலப் புலவர் ஆத்ம நாத தேசிகர் சோழர் வரலாற்றைத் தழுவிச் சோழ மண்டல சதகம் என்ற பனுவல் செய்தார். வரலாற்றுத் தொடர்புள்ள நூல்களில் மிகப் பயனளிப்பது புதுச்சேரியில் வாழ்ந்த ஆனந்தரங்கன் பிள்ளை தமிழில் எழுதியுள்ள நாட்குறிப்பாகும்.

கவிதையுலகில் சீறாப்புராணம் என்ற அரும்பெருங்காப்பியத்தை இஸ்லாமிய கவிஞர பெருமான் உமறுப்புலவர் இயற்றினார். அக்காப்பியம் முகம்மது நபியவர்கள் வாழ்க்கை வரலாற்றையும், அரேபியாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இஸ்லாம் மதத்தைப் பரப்பும் பொருட்டு அவர் செய்த அரிய செயல்களையும் விரித்துரைக்கின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மஸ்தான் சாகிப் என்னும் முஸ்லீம் ஞானியார் சென்னை நகரில் வாழ்ந்திருந்து, தாயுமான அடிகள் போன்று சமய ஒற்றுமை பற்றி உள்ளங்கவரும் பன்னூறு செய்யுட்கள் இயற்றினார்.

குற்றாலக் குறவஞ்சி என்னும் நாடகப் பனுவலைத் திருக் குற்றாலத்தை அடுத்த மேலகரம் என்னும் சிற்றூரில் வாழ்ந்திருந்த திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றினார். இந்த நாடகம் பொது மக்கள் துய்த்து மகிழக் கூடிய தனிச் சிறப்பு வாய்ந்ததாயுள்ளது. குறவஞ்சி வகையின் ஒப்பற்றநூல் ஆகும்.

சமயத்துறையைச் சார்ந்த நூல்களில் மெய் கண்ட தேவர் இயற்றிய சிவ ஞான போதம் என்னும் மெய் நூல் பெருஞ்சிறப்புடையது. இந்நூல் சைவ சமயக் கருவூலமாகத் திகழ்வது. பதினெட்டாம் நூற்றாண்டு முதலே கிறிஸ்து சமயகுரவ பலர் தொண்டாற்றி வந்தமையால் தமிழிலே விரைவாக மேல் நாட்டுக் கருத்துக்கள் நுழைந்தன.

வீரமாமுனிவர் என்னும் பெருந்துறவி தமிழ இலகக்ய இலகக்ண நூல்களைல் ஹயற்தறிபறக் கற்றுணர்ந்து, கிறிஸ்து சமயத் தொண்டாற்றி வருங்காலதில் பண்டைத் தமிழ் நூல்களை ஆராய்வதிலும், பனுவல்கள் செய்வதிலும் செய்யுள் இயற்றுவதிலும். ஆர்வ முடையவராய்த் திகழ்ந்தார். அவரது தேம்பாவணி முதன் முதல் தமிழ் மொழியில் வெளியான கிறிஸ்து சமய பெருங்காப்பியம். அது கிறிஸ்து சமயத்திருமறைக் கருத்துக்களையும் நிகழ்ச்சிகளையும், தமிழில் விளக்குகின்றது. வீரமாமுனிவர் திருக்காவலூர் கலம்பகம், அடைக்கலமாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை, தேம்பாவணி முதலிய செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார்.

தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு அப்பெரியார் செய்துள்ள தொண்டு சிறிதன்று. தற்காலத் தமிழ் உரைநடையை வகுத்தவருள் அவர் தலைசிறந்த புலவர் என்பது மிகையாகாது. தமிழ் உரைநடைத் தந்தை என்றே போற்றப்படுகின்றார். அவர் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், ஞானவுணர்த்தல் முதலான உரைநடை நூல்கள் வாயிலாகக் கிறிஸ்து சமயக் கொள்கைகளை விளக்கினார். கதை இலக்கியத்திற்கு வழிகாட்டியாக "பரமார்த்த குரு கதை" இடம் பெறுகிறது. இலக்கணத் துறையிலும் சாதனைகள் பல புரிந்தார். தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் இலக்கண நூல்களைப்படைத்தார்.

சதுரகராதி என்ற அகராதியை முதன் முதலில் இயற்றியவரும் அவரே. தமிழ் அகராதிகளின் தந்தையாகக் காணப்படுகிறது.

உரைநடை வளர்த்தவருள் ரேனியஸ் என்பவர் சிறந்தவர் விவிலியத்தை மொழிபெயர்த்து 1844–ஆம் ஆண்டு வெளியிட்டார். அவர் இயற்றிய வேத உதாரணததிரட்டு பெயர் பெற்றது.

8. கல்வி

– திரு.வி.க

பிறவியாலாய பயன் எஃது என்பதை அறிவுறுத்துவது கல்வி. மக்கள் உடலுக்கு உணவு எத்தகைத்தோ அத்தகைத்து மக்கள் அறிவிற்குக் கல்வி. மனிதன் அறியாமையைக் கல்வி அறிவை விளக்கி அவனது வாழ்வை நேர்மையில் செலுத்த வல்லது கல்வி. ஏட்டின் எழுத்து மீது கருத்துச் செலுத்தாது பொருளின் மீது கருத்துச் செலுத்தி அப்பொருளை வாழ்வில் இரண்டறப்படியச் செய்து, அதன்வழி நடப்பதே கல்வி நெறியாகும்.

இயற்கைப் பெருங்கழகம்: காடும் மலையும் ஆறுங் கடலும் நடப்பன பறப்பன ஊர்வன முதலியனவும், ஆண்மக்களும் பெண் மக்களுமாக விரிந்து பரந்து விளங்கும் இவ்வுலகம் எத்துணைப் பெருங்கழகம். இக்கழகத்தில் பயின்று பேறுபெற்ற பெரும் புலவர் நமது காந்தியடிகள்.

காந்தியடிகள் இளமையில் நாட்டுப் பள்ளிக் கூடத்தில் பயின்றார். பின்னர் ஆங்கிலப் பள்ளியில் தற்காலக் கல்வி பயின்றார்; தென்னாப்பிரிக்காவில் இயற்கைக் கல்வி பயின்றார். இப்பயிற்சியே அடிகளை எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராக்கிருக்கிறது. இளமையில் காந்தியடிகள் தாய்மொழிக் கல்வியே கற்றார். இந்நாளில் நாட்டுக்கல்விக்குரிய தெருப் பள்ளிக் கூடங்கள் நகரங்களில் அழிந்தே போயின.

காந்தியடிகள் பின்னர்ப் பெற்ற ஆங்கிலப் பயிற்சியாலெழுந்த அவாவால் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். இக்காலக் கல்வியின் பாழ்நிலை காந்தியடிகட்கு அவரது பின் வாழ்வில் புலனாயிற்று. உண்மைக் கல்வி நிலை விளங்கிய பின்னர் காந்தியடிகள் இக்காலக் கல்விமுறை அழிவிற்கும் நாட்டுக் கல்வி முறை ஆக்கத்திற்கும் உழைப்பதில் ஊக்கம் செலுத்தலானார்.

இயற்கைமொழி: ஒவ்வொரு நாட்டின் இயற்கை வளத்திற்கு ஏற்றவாறு மக்கள் நிறம் மொழி பழக்க வழக்கம் முதலியன அமைந்து கிடக்கின்றன. இயற்கை மறவாத வாழக்கையே உயிர்களைச் செம்மைப்படுத்தும். இயற்கை வழிப் பிறந்த நாட்டுமொழி இயற்கை வழி காட்டும். இயற்கை வாழ்விற்கு முதன் முதல் வேண்டற்பாலது நாட்டு மொழியின்பமே ஆகும். ஒருவனுக்கு நாட்டு மொழி மீது கலந்த அன்பு நிகழுமேல், அவன்மாட்டு மற்ற இயற்கை வாழ்வுத் துறைகளெல்லாம் தாமே அமைவுறும். ஒருவனது இயல்புக்கு ஊற்றாயிருப்பது அவனது நாட்டு மொழியேயாகும். ஓவியம், இசை முதலிய யாவும் மக்கள் இயற்கை வாழ்க்கைக்கென ஏற்பட்டனவேயாம்.

காந்தியடிகள் என்றும் உரிமை வேட்கை உடையவராக வாழ்தலைப் பற்றிப் பார்க்கிறோம். உரிமையின் பொருட்டு அவர் பட்டு வரும் பாடு நமக்குத் தெரியும். உரிமைக்காக அவர் உயிரையும் விட முனைந்து நிற்கிறார். தாய் மொழியிடத்தில் அன்பில்லா ஒருவன் தாய் நாட்டன்பனாகான். நாட்டன்பிற்கு நாட்டு மொழியன்பே உயிர். காந்தியடிகள் தாய் மொழியினிடத்துத் தாம் கொண்டுள்ள அன்பைப் பன்முறை பலவிடங்களில் காட்டியிருக்கிறார். அவ்வன்பைப் பலமுறை பலவிடங்கில் அறிவுறுத்தியுமிருக்கிறார்.

காந்தியடிகள் நீண்டகாலம் தென்னாப்பிரிக்காவில் தங்கித் தமது தாய் நாடாகிய இந்தியா திரும்பியபோது, அவரை வரவேற்று நன்றி தெரிவிக்க கூட்டிய கூட்டத்தில் ஆங்கிலத்தில் பேசியவர்களுக்கு, நீண்ட நாள் வேறு நாட்டில் வாழ்ந்து திரும்பிய நம் காந்தியடிகள் தாய்மொழிலேயே பெரிதும் விடையளித்தார். "சத்திய சோதனை"யில் விடையளிக்கும் முறை எனக்கு வந்த போது நான் குஜராத் மொழியிலேயே நன்றி கூறினேன். குஜராத்திகள் அடங்கிய கூட்டத்தில் ஆங்கிலம் பேசுவதை மறுத்துரைத்தேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் மாயவரமென்னும் மாயூரத்தில் நமது காந்தியடிகள் முதன்முறை எழுந்தருளிய போது அவர், அவருக்கு நன்றி தெரிவித்தபோது பதிலாக கூறியது, எனக்குத் தமிழ் மொழி தெரியாதென்று நீங்கள் உணர்ந்தால் அம்மொழியை எனக்குக் கற்பிக்கவும், அதைப் பயிலுமாறு என்னைக் கேட்கவும் வேண்டும். அவ்வினியமொழியில் அறிக்கை அளித்து, அதை மொழி பெயர்த்துணர்த்தி யிருப்பீர்களாயின் உங்கள் கடனை ஒருவாறு ஆற்றினவர்களாவீர்கள் என்று குறிப்பிட்டார். மேலும் தாய் மொழியின் வழிபிள்ளைகட்குக் கல்வி பயிற்றல் மிக முக்கியமானது. தாய் மொழியை அவமதிப்பது தேசீயத் தற்கொலையாகும் என்று கூறினார்.

தென்னாப்பிரிக்காவில் இந்திய மக்கள் படும்பாட்டைக் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில் முறையிட்டுக் கொள்ள அடிகள் கோபால கிருஷ்ணகோகலே அவர்களுடன் போயிருந்தார். அவைகளுள் ஒன்று தாய் மொழியைப் பற்றியது. "நமது நிகழ்ச்சி முறைகளில் ஆங்கிலம் எவ்வளவு வீறுடன் ஆட்சி பெற்றிருக்கிறதென்பதை அந்நாளிலேயேயான் வருத்தத்துடன் நோக்கினேன் என்று அடிகள் சொல்கிறார். அன்று அவர் கொண்ட மன நிலை அவர் உரைகளால் புலனாகிறது. அடிகள் அன்று கண்ணீரும் கம்பலையுமாய்க் கலங்கியிருப்பர். காந்தியடிகள் தம் வழிக் காங்கிரஸ் நடைபெற்ற மற்றொரு பொழுது காங்கிரஸில் தாய்மொழி மணம் கமழுமாறு ஒல்லும்வகை முயன்றார். இந்தியத்தலைவருள் தாய்மொழி வளத்துக்கு பாடுபட்ட பெருமை மகாத்மா காந்திக்கே உண்டு. நாம்பெறும் கல்வி ஆங்கிலக் கல்வியே. ஐம்பதாண்டுகளாகத் தாய்மொழி வாயிலாகக் கல்வி பெற்றிருப்போமாயின் நாம் எந்நிலையிலிருப்போம்? நாம் உரிமை இந்தியாவில் வாழ்வோராயிருப்போம்.

ஐம்பதாண்டுகளாகத் தாய்மொழி வாயிலாகக் கல்வியறிவு பொற்றிருப்போமாயின், நம் மூத்தோரும், ஊழியரும், சுற்றத்தாரும் நமது கூல்வியறிவில் கலப்புற்றிருப்பர். ஒரு போஸோ ஒரு

ராயோ கண்டு வரும் புதுமைகள் இராமாயண பாரதம் போல ஒவ்வொரு வீட்டுச் செல்வமாயிருக்கும். தாய்மொழிக் கல்வி மிக முக்கியம். அம்மொழியிலுள்ள எல்லா நூல்களும் அடங்கிய ஒரு கருவூலம் அமைக்க எண்ணியிருக்கிறேன்.

தாயின் அமுத மொழியால் பெற்ற பயிற்சி அந்நிய மொழி வாயிலாகப் பயிற்சி தரும் பள்ளிக்கூடத்தில் இல்லாமற்போகிறது. பள்ளிக்கூட வாழ்வையும் வீட்டு வாழ்வையும் பிணித்துள்ள பாசத்தை அறுக்கிறவன் நாட்டின் பகைவன். இத்தகையக் கல்வி முறையில் நாம் வீழ்ந்து கிடப்பதால் தாயை வஞ்சித்தவர்கள் ஆகிறோம்.

தற்போதைய கல்வி முறை: தற்போதைய கல்வி முறை குறையுள்ளது. அது நாட்டுக்கல்வித் தொடர்பின்றி அந்நியக் கல்வியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அக்கல்வி மனதையும் கையையும் நெகிழவிடுத்துத் தலையில் மட்டும் கட்டுப்பட்டு நிற்கிறது. அந்நியக் கல்வி வாயிலாக உண்மைக் கல்வி பெறலரிது.

அந்நியக்கல்வி முறை நமது பிள்ளைகளை நமது நாட்டிலே அந்நியராக்கி இருக்கிறது. தற்கால முறை பெருங்கொலைத் துன்பமாயிருக்கிறது. அந்நிய மொழி வாயிலாகக் கல்வி பெறுவதினின்றும் நிறுத்தி மாறுதல் நிகழ்த்த வேண்டி ஆசிரியன்மார்களை விலக்கிவிடுவேன். பாடபுத்தகங்கள் ஆயத்தப்படுத்துமளவு கூட நான் பொறுத்திரேன். ஆங்கிலக் கல்வி இல்லையேல் அரசாங்கவேலை பெற முடியாது என்று சிலர் நினைக்கிறார். சிறுமியர்கள் மணத்தின் பொருட்டு ஆங்கிலம் பயில்கிறார்கள். ஆங்கிலேயருடனே ஆங்கிலத்தில் பேசவேண்டுமென்று ஆங்கிலம் பயிலப் பெண் மக்கள் விரும்புகிறார்களென்பது எனக்குத் தெரியும் தங்களுடனும் தங்கள் நண்பர்களுடனும் தங்கள் மனைவிமார்கள் ஆங்கிலம் பேச இயலாமை நோக்கி வருத்தமுறும் நாயகன்மார்களிருப்பதும் எனக்குத் தெரியும். தாய் மொழிகள் நசுக்கப்படுவது காண என்னால் பொறுக்க முடியவில்லை. தாய் தந்தையர் தங்கள் குழந்தைகட்கும், நாயன்மார்கள் தங்கள் நாயகிமார்கட்கும் கடிதங்கள் தாய்மொழியில் எழுதாது ஆங்கிலத்தில் எழுத எண்ணுவது குறித்து என் மனம் பொறுக்கவில்லை.

"குழந்தையிலேயே ஆங்கிலத்தில் கருத்துக்களை நினைக்குமாறும், வெளியிடுமாறும் பிள்ளைகளைப் பழக்கும் இந்தியப் பெற்றோர்கள் குழந்தைகளையும் நாட்டையும் வஞ்சிக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளை நாட்டு வழக்க ஒழுக்கங்களினின்றும் விலக்கி நாட்டுச் சேவைக்கே அருகதையற்றவர்களாகச் செய்கிறார்கள். ஆதலால் யான் குழந்தைகளுடன் தாய்மொழியிலேயே பேசுவதென உறுதி கொண்டுள்ளேன்."

காந்தியடிகள் இக்காலக் கல்வி முறை மீதுகொண்டுள்ள கருத்தும் நாட்டுக்குரிய இயற்கைக் கல்வி மீது கொண்டுள்ள கருத்தும் இனிது புலனாகின்றன. காந்தியடிகள் ஆங்கில மொழியில் புலமை வாய்ந்தவர் என்பது உலகறிந்த ஒன்று. மேலைநாட்டில் வசித்து அந்நாட்டு வழக்க ஒழுக்க நுட்பங்களைச் செவ்வனே உணர்ந்தவர் நமது காந்தியடிகள். அவ்வனுபவம் வாய்ந்த ஒருவர் வாய்மொழிகள் பின் வருவோர் வாழ்க்கைக்கு உறுதுணை செய்தலாகும். காந்தியடிகட்கு மொழி மீது எவ்விதக் காழ்ப்புமில்லை என்பதும், அவர் அம்மொழி பயிலலாகாது என்னுங் கொள்கை யுடையரல்லர் என்பதும் மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள அவர் உரைகளால் நனி விளங்கும்.

ஒருவன் தனக்குரிய நாட்டுக் கல்வியால் அறிவு பெற்று நிலைத்த நெஞ்சம் பெற்ற பின்னர் அறிவு விளக்கத்துக்கு உலகிலுள்ள மொழிகளையெல்லாம், கல்வித் துறைகளையெல்லாம் பயிலலாம். தாயைக்கொன்று பிறமாதரைப் போற்றுதல் கூடாதென்பதே ஈண்டுக் கருதற்பாலது. நம் நாட்டார் நமது நாட்டுக்கலைகளைக் கொலைபுரிந்து பிறநாட்டுக் கலைகளைக் கொலை புரிந்து பிறநாட்டுக் கலைகளை வளர்ப்பதில் உலகை வென்றவரல்லரோ? அவர் உடல் பாரத

நாட்டினதாயினும் அவர் மனம் இங்கிலாந்துக்குச் சுவீகாரம் போயிருக்கிறது. இம்மாறுபட்ட வாழ்க்கையை உடைய அண்ணல்களை இந்தியரென்றழைப்பதா? இங்கிலீஷ்காரர் என்றழைப்பதா? என்னும் ஐயம் நிகழ்கிறது. தாய் நாட்டுக் கல்வியில் பற்றில்லாத ஒருவன் நாட்டினிடத்து எவ்வாறு பற்றுடையவனாவான்?

கல்வி என்பது அறிவினூடே ஒன்றி வாழ்வில் கலப்பதாயிருத்தல் வேண்டும். கல்வி அறிவு ஒழுக்கம் என வரும். கல்வியறிவின் பயன் ஒழுக்கமேயாகும். பன்னூல் பயின்ற ஒருவன் ஒழுக்கமிலனாயின் அவன் கல்வியாளனாகான். நூலே பயிலாது ஒருவன் ஒழுக்கமுடையனாயின் அவன் கல்வியாளனாகிறான். நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கக் கல்வியேயாகும்.

9. பெரியாரின் பெண்ணுரிமைப்பணி

– நெ.து.சுந்தரவடிவேலு

தந்தை பெரியார் என்றும் "பகுத்தறிவுப் பகலவன்" என்றும் போற்றப்படும் ஈ.வே.ராமசாமி அவர்கள் சமுதாயச் சீர்திருத்தத்தில் நாட்டம் கொண்டவர். பெண்மை முன்னேற்றம் கருதியும் உரிமை கருதியும் அவர் பட்டபாடுகளைக் கட்டுரையாளர் நெ.து.சுந்தரவடிவேலு எடுத்துரைக்கிறார்.

குடும்பத்தில் புரட்சி: ஈ.வே.ராவின் தங்கை பொன்னுத்தாய் மகள் அம்மாயிஅம்மாள். இந்தப் பெண்ணிற்கு 9 வயதிலே திருமணம் நடந்தது. திருமணமான முப்பதாவது நாள் மணமகன காலரா நோயால் இறந்தார். 9 வயதான பெண் விதவையானாள். இதனைக் கண்ணுற்ற பெரியார் திருமணப்பருவம் வந்ததும் மறுமணம் செய்து வைக்க திட்டமிட்டார். அதன்படி பெண், மணமகன், நம்பிக்கையுள்ள ஒரு பெண் மணி மூவரையும் சிதம்பரத்திலுள்ள பெரியாரின் நண்பர் வீட்டில் வைத்து திருமணம் நடைபெற செய்தார். திருமணம் முடிந்ததும் மணமக்கள் ஈரோடு வந்தனர். புகை வண்டி நிலையத்தில் மணமக்களை வரவேற்றார். இச் செய்தி ஊரில் பரவியது. பெரியாரின் தந்தை அவமானம் நிகழ்ந்து விட்டதாக வருந்தினார். 6 ஆண்டுகள் மூன்று வீட்டாரையும் தள்ளி வைத்தனர். பின்னர் பெரியார் நகர் மன்ற தலைவரானதும் ஒன்று சேர்ந்தனர். இவ்வாறு குடும்பத்திலே புரட்சியை ஏற்படுத்தினார்.

பெண்ணுரிமைக் கோரிக்கை: பெரியாரின் தன்மான இயக்கம் தொடக்க காலம் முதல் குழந்தை மணத்தை எதிர்த்தது. குழந்தை மணம் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்படும் வரை எதிர்த்து வந்தது. மாநாட்டில் 16 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கே மணம் செய்விக்க வேண்டும். பெண் விதவைகளுக்கு மறுமண உரிமை தேவை. பெண்களுக்கு மணவிலக்கு உரிமை வேண்டும் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை வேண்டும். ஆண்களைப் போலவே எந்த தொழிலையும பெண்கள் செய்வதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். பள்ளிக்கூட ஆசிரியர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படவேண்டும். தொடக்கக் கல்வி ஆசிரியர் பணிக்கு பெண்களே நியமிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திரு.எம்.ஜெயக்கர், "உங்களுடைய இயக்கத்தில் ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவர்களும், முகமதியர்களும் சேர்ந்திருப்பது சிறப்பாகும். மதத் தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் செய்ய முடியாத காரியத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்று பாராட்டினார்.

விருதுநகர் மாநாட்டில் இதே சம உரிமை கோரி பொது மாநாடு முடிவு செய்தது. விருதுநகரிலும் பெண்கள் சுயமரியாதை மாநாடு நடந்தது. ஆண்களும், பெண்களும் சாதி பேத

மின்றித் தங்கள் மனைவி கணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முழு உரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும், அதற்கேற்றவாறு திருமணச் சடங்குகள் திருத்தப்பட வேண்டும் என்றும், திருமணச் சடங்குகள் குறைந்த பணச் செலவில் நடத்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

தேவதாசி முறை : இந்தியாவிலும் பிற சமயங்களில் இல்லாத அநீதி, கேவலம், அநாகரீகம் இந்து சமயத்தின் பேரால், இந்து வாழ்க்கை முறையின் இன்றியமையாத பகுதியாக இருந்து வந்தது. புத்தி தெரியாப் பருவத்தே சிறுமி ஒருத்தி உள்ளூர் அல்லது பக்கத்து ஊர்க் கோயிலுக்கு அடியாளாகப் பொட்டுக் கட்டி விடுவது. சாமிக்குப் பொட்டுக் கட்டிவிடப்பட்ட அவள், பின்னர் யாரையும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. கோயில் பணிவிடைகளில் ஈடு பட வேண்டும். இசை, நாட்டியம் முதலியவைகளைக் கற்று கோயில் திருவிழாக்களில் ஆடியும், பாடியும் ஆண்டவன் தொண்டைச் செய்ய வேண்டும்.

இந்த அவமானத்திற்கு, இழிவிற்கு, கொடுமைக்கு உட்பட வேண்டிய சாதி, தனியாக ஒன்று இருந்தது. இந்த இழிவைப் பற்றி எந்த ஒழுக்கசீலனும பொங்கி எழவில்லை. சமய முத்திரையோடு புனிதத் தன்மை என்னும் வெண்குடையின் கீழ், பட்டிமாட்டு ஆண்களின் தேவைக்காக நாடு தழுவிய தேவதாசி முறை கொடிகட்டிப்பறந்தது.

தேவதாசி முறையை ஒழிப்பதற்கு திருமதி.டாக்டர்.முத்துலெட்சி அம்மையார் எடுத்த முயற்சி.

திருமதி டாக்டர். முத்துலெட்சுமி அம்மாள் அவர்கள் தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று சென்னை மாகாணத்தின் அன்றைய சட்டமன்றத்திற்கு மசோதா ஒன்றை அனுப்பி வைத்தார்கள். மசோதா என்று சொல்லப்படும் சட்டத்தின் முன் வடிவமாகிய இதனைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்குமாறு அரசாங்கம் தந்தை பெரியாரைக் கேட்டுக் கொண்டது.

தேவதாசி முறையை ஒழிப்பதற்கு 1868 ஆம் ஆண்டு முதலே பல முயற்சிகள் நடந்தன. 1906, 1907 ஆம் ஆண்டுகளில் பல மாகாண அரசுகள் இக் கொடுமையை ஒழிக்க முயன்றன. 1912 ஆம் ஆண்டு இந்திய சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் மாணிக்ஜி தாதாபாய், முதோல்கர், மேட்கித் ஆகியோர் இத்தகைய மசோதாவைக் கொண்டு வந்ததை நினைவுபடுத்தினார். 1922 ஆம் ஆண்டு டாக்டர் கோர் கொண்டு வந்த மசோதா 1924 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்ட வரலாற்றை நினைவுபடுத்தினார்.

தேவதாசி என்ற ஒரு வகுப்பு இருப்பது இந்து சமூகத்திற்கே இழிவானதும் அல்லாமல் இந்து மதத்திற்கே பெரும் பழியாகும். ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏற்படும் இழிவு பெண்ணுலகத்திற்கே ஏற்பட்டதாகுமாகையால் இவ்வழக்கம் பெண்களின் அந்தஸ்தையும் கவுரவத்தையும் பெரிதும் பாதிக்கக்கூடியதாய் இருக்கின்றது. அன்றியும் ஒரு குறிப்பிட்ட சாதியையோ சமூகத்தையோ விபசாரத்திற்கு அனுமதி கொடுப்பதும் பின்னர் அவர்களை இழிந்த சமூகமாகக் கருதுவதும் பெரும் சமூகக் கொடுமையாகும். பொட்டுக் கட்டுவதைத் தடுக்கம் சட்டத்திற்கு நாடறிய ஆதரவு கொடுத்தார்கள்.

ஒரு நாட்டின் நாகரீகமுள்ள அரசாங்கமாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, குடிமக்களின் ஒழுக்கத்தையோ நலத்தையோ கோரின பழக்கம் கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும் தேசிய வழக்கத்தின் பேராலும் இருந்து வர ஒரு கணநேரமும் விட்டுக் கொண்டு வந்திருக்காது என்றே சொல்வோம் என்று சாடினார். டாக்டர்.முத்துலட்சுமி

அம்மையார் கொண்டு வந்த மசோதா சட்டமாக்கப்பட்டது. அதன் வாயிலாக தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.

ஆண பெண் ஏற்றத்தாழ்வு: சாதி ஏற்றத்தாழ்வை விட ஆழமாகவும் அகலமாகவும் பரவியிருப்பது ஆண் பெண் ஏற்றத்தாழ்வாகும். இருவகை ஏற்றத்தாழ்வும் விரைந்து ஒழிக்கப்பட வேண்டும். சாதி ஏற்றத்தாழ்வை ஒழிப்பது காட்டாற்றில் எதிர் நீச்சல் போடுவது போலாகும். ஆண், பெண் சமத்துவத்தை அடைவது நெருப்பாற்றில் எதிர் நீச்சல் போடுவதற்கு ஒப்பாகும். "கற்பு என்பதைச் சுகாதரத்தையும் சரீரத்தையும் பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும் இன்று அந்த முறையில் கற்பு கையாளப் படுவதில்லை. கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை" என்பதிலிருந்தே இதை உணர்ந்து கொள்ளலாம்.

பெண விடுதலை: பெண ஆணுடைய சொத்து என்பதுதான் இன்றைய மனைவி என்பவர்களின் நிலை. ஆதலால், ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்ற கற்பு முறை ஒழிக்கப்பட வேண்டும். ஆண்கள் திருந்த வேண்டின் இத்தகைய அதிர்ச்சி மருத்துவம் தேவை. பெண்கள் விடுதலை பற்றிப் பெரியார் ஒளிவு மறைவின்றிப் பேசியும் எழுதியும் வந்தார். பெண்களுக்கு மதிப்பு கொடுப்பதாகவும் பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குக் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. மேல் சாதிக்காரன் கீழ்ச் சாதிக்காரனை நடத்துவதை விட, பணக்காரன் ஏழையை நடத்துவதை விட, எசமான் அடிமையை நடத்துவதை விட மோசமானதாகும். பெண்கள் உரிமை வேண்டும் என்பவர்கள் பெண்களை நன்றாகப்படிக்க வைக்க வேண்டும். தங்கள் ஆண பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல், பெண்களுக்கே செலவு செய்து படிக்கவைக்க வேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும். தாய் தகப்பன்மார்கள் பார்த்து ஒருவனுக்கு மணம் செய்து கொடுப்பது என்ற நிலைமாறி பெண்ணாகவே எனக்குத் தேவையான கணவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வர வேண்டும்.

பெண்கள் குடும்ப வாழ்க்கையோடு முடங்கிக்கிடக்காமல் நாட்டின், சமுதாயத்தின் பொது வாழக்கையிலும் பங்கு கொள்ள வேண்டும் என்பது பெரியாரின் குறிக்கோள. அதற்கு ஏற்றபடி மனைவி நாகம்மாளும், தங்கை கண்ணம்மாளும் ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே பொது வாழ்க்கையில் மட்டுமல்லாது பொதுக்கிளர்ச்சிகளிலும் ஈடுபட ஊக்குவித்தார். ஈரோடு கள்ளுக்கடைமறியலில் பங்கு கொண்டதையும் வைக்கம் போராட்டத்தில் வெற்றி பெற்றதையும் அனைவரும் அறிவர்.

திருமதி நாகம்மையார் தம் வாழ்நாள் முழுவதுமே சுயமரியாதை இயக்க மாநாடுகளில் கலந்துக்கொண்டு தமிழ்ப் பெண்களுக்கு வழிகாட்டினார். திருமதி நாகம்மையார் எல்லா வகையிலும் பெரியாருக்கு வாழ்க்கைத் துணையாக இருந்தார். 1929 இல் அவரோடு மலேயா நாட்டில் சுற்றுப் பயணம் செய்தார்.

10. பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

—டாக்டர் அ.சிதம்பரநாதன்

பண்டிதமணியோடு 23 ஆண்டுகள் பெற்றிருந்த பழக்கம். 1953 அக்டோபர் 24—ல் வயது முதிர்ந்த நிலையில் அவரது மறைவு. தனக்குக் கிடைத்த அவருடனான பழக்கம். அவருடைய ஆளுமைத்திறன், கற்பித்தல் உத்தி முதலியனவற்றை கட்டுரையாசிரியர் இங்கு நினைவுகூர்ந்து உரைக்கிறார்.

1930—ல் சென்னையில் சைவசித்தாந்த மகாசமாச வெள்ளி விழாவில் முதலில் அறிமுகம். நீளமான மஞ்சள் நிறக்கோட்டு அணிந்து, கழுத்தைச் சுற்றிலும் வெள்ளிய மேல்வேட்டி ஒன்றினைச் சுற்றிப் போட்டுக் கொண்டு தலைப் பாகையுடன் அவர் உட்கார்ந்திருந்த காட்சி இன்னும் நினைவுக்கு வருகிறது. கும்பகோணம் அரசினர் கல்லூரியில் எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர் திரு.கே.எஸ்.வைத்தியநாத ஐயர் அவர்களுடைய நினைவு பண்டிதமணியைக் கண்டபொழுது எனக்கு ஏற்பட்டது. பண்டிதமணி அவர்கள் தமிழ்ச் செய்யுட்களைச் சுவைத்து அவற்றை எளிய தெள்ளிய நல்ல நடையில் பலருக்கும் எடுத்து வழங்கும் ஆற்றல் படைத்திருந்தார். பள்ளிக்கூட வாயிலாக அல்லது கல்லூரிவாயிலாகத் தமிழ் இலக்கியம் கற்கும் வாய்ப்புப் பெற்றாரில்லையேனும், நல்லறிஞர்கள் துணைக் கொண்டு தாமே பல தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் துருவித்துருவி ஆராய்ந்து கற்ற பெருமையுடையவர். அவர் கற்றறிந்த செய்திகள் பலவற்றையும் எழுதிக் குறிப்புப் புத்தகத்தில் வைத்துக் கொள்ளும் மரவுடையவராகக் காணப்பட்டார்.

மேடைகளுக்கு வரும்பொழுது அவர் கையில் இரண்டு அல்லது மூன்று குறிப்புப் புத்தகங்கள் இருக்கம், அவற்றில் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, காளிதாசர் நூல்கள் போன்றவற்றிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் காணப்படுகின்றன. பண்டிதமணி அவர்கள் சமாச மாநாட்டிற்கு வந்திருந்தபொழுது அவர்களையும், திரு.மா.வே.நெல்லையப்பப்பிள்ளை அவர்களையும் பாலசுப்பிரமணிய பக்தசன சபைக்கு அழைத்துத் திரு.கலியாணசுந்தரமுதலியார் அவர்கள் பெருமைப்படுத்திச் சொற்பொழிவு ஆற்றுமாறு செய்வித்தார்கள்.

"இருதலைக் கொள்ளி எறும்பு" என்பதற்குப் பண்டிதமணி அவர்கள் தந்த விளக்கம் நினைவுகூர்ந்து பாராட்டத்தக்கது. இரண்டு பக்கத்திலும் நெருப்பு இருக்கின்ற கொள்ளிக்கட்டையில் தாவுகின்ற எறும்புபோல ஆன்மா இருக்கிறது என்று பொதுவாகக் கூறுவது பொருந்தாது என்றும், உள்ளே புழையினையுடைய ஒரு தீக்கோலின் இரண்டு பக்களிலும் தீப்பற்றிக் கொண்டு இருக்கிறபொழுது, ஓர் எறும்பு உள்ளே அகப்பட்டால் எவ்வாறு வாடி வருந்துமோ அவ்வாறு ஆன்மா பொறி உணர்ச்சியால் வருத்தப்படுகிறது எனக்கூறுதல் வேண்டுமென்றும் அவர் கூறிவந்தவை நினைவில் கொள்ளத்தக்கது. இரண்டு பக்கங்களிலும் நெருப்பு உள்ள குச்சி ஒன்றின் மீது எறும்பு இருந்தால், இரண்டு பக்கத்திலும் போகமுடியாமல் தவிக்கும் என்றாலும், இரண்டு மூலைக்கும் போகாமல் நடுவிடத்தின் ஓரத்திலிருந்து எவ்வாறாவது குதித்துத்தப்பித்துக்கொள்ளுதல் முடியும். ஆனதால், இதனை விளக்கவே "கொள்ளியின் உள் எறும்பு" என மாணிக்கவாசகர் கூறினார் என அழகுபட அவர் எடுத்துக் காட்டியதை 1930—31—ஆண்டுகளில் ஆராய்ச்சியாளர்கள் பலர் பாராட்டியவை இன்றும் என்நினைவில் உள்ளன.

1933 முதல் 35 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாவலர் ச.சோமசுந்தரபாரதியார் பேராசிரியராக இருந்த பொழுது, நான் தமிழ் எம்.ஏ.பட்டப்படிப்பு பயின்று கொண்டிருந்தேன். அப்பொழுது பண்டிதமணி எனக்கு சிலப்பதிகாரத்தையும் அக நானூற்றையும்

கற்பித்தார். சிலம்பில் அடியாருக்கு நல்லார் உரையில்லாத வஞ்சிக்காண்டம் பாடப்பகுதி, அடியார்க்கு நல்லார் உரை வஞ்சிக்காண்டத்திற்குக் கிடைக்கப் பெற்றிருந்தால் நாங்கள் அடையும் மகிழ்ச்சியை பண்டிதமணி தந்த உரை மூலம் நாங்கள் அடைந்தோம்.

பண்டிதமணி பாடம் சொல்லும் மரபு ஆசிரியர் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியதாகும். தாம் கற்பிக்கப்போகும் பாடப் பகுதியைக்கவனமான வீட்டில் பலமுறைபடித்து ஐயம், திரிபுகள் அற அறிந்து கொண்டு வகுப்பிற்கு வருவது அவர் வழக்கம். மாணவர்களுக்கு ஏற்படும் ஐயங்களை முன்கூட்டியே எதிர்பார்த்து அவ்வையங்களைக் களைவதற்கு ஆயத்தமாக வருதல் அவர் இயல்பு. அவர் எதிர்பாராத ஐயங்களை மாணவர்கள் எழுப்பினாலும் தயங்காமல் பதில் தருவார்.

சங்கச் செய்யுட்களிலிருந்து ஒத்த மேற்கோள்கள் தருதல் பண்டிதமணியின் இயல்பு. இத்துடன் இலக்கண நயம்பட உரைத்தலும் தாம் கூறக்கருதும் கருத்துக்களை இன்முகத்தோடு கூறுதலும் அவரது இயல்பு. பண்டிதமணி மாணவர்களோடு ஆசிரியர் என்ற முறையில் மட்டும் பழகாமல், மாணவர்களுள் ஒருவரைப் போல சிலவேளைகளில் அளவளாவுவார். இது மேல்நாட்டுமேலை மொழி ஆசிரியர்களின் திறன் என்பார்கள். இதனால் மாணவர்களின் பேரன்பிற்குப் பண்டிதமணி உரியவராகி அவர்களிடம் பேரன்பு காட்டுவார்.

பண்டிதமணி தமிழில் புலமையுற்றிருந்த அளவு வடமொழியிலும் சிறந்த புலமை பெற்றிருந்தமையால் பற்பல வடமொழி நூல்கள் தமிழில் மொழி பெயர்த்துத்தரப்பட்டன. அவற்றுள் தலையானது, நல்ல தமிழ் மணம் உடையதும் மொழி பெயர்ப்பென தோன்றாததும் "மண்ணியல்சிறுதேர்" எனும் நாடகம் வடமொழியில் மிருச்சகடிகம் எனும் நாடகமே மண்ணியில் சிறுதேர் எனத் தமிழ்ப்படுத்தப்பட்டது. சிலப்பதிகாரத்திற்கும் மண்ணியல் சிறுதேருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அடிக்கடி எடுத்துக்காட்டுவார்.

பண்டிதமணி நகைச்சுவை தோன்றப்பேசும் இயல்பினர். ஒருநாள் நண்பர் வீட்டில் அவருக்குக் குடிக்க பால் கொடுத்தார்கள் என்றும் அதனுள் எறும்பு ஒன்று கிடக்கவே, அதை நேரிடையாகக் கூறாமல், பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்ளுகிறான் என்று நகைச்சுவையாகக் கூறினார். பொதுக்கூட்டம் ஒன்றில் தலைமை தாலங்கி பண்டிதமணி பேசிக்கொண்டிருந்த பொழுது பெண்கள் தங்களுக்கள் பேசி ஓலிஎழுப்பிக் கொண்டிருந்தனராம் இதனைத் தாங்கமுடியாது, அவர்கள் பெண்மணிகள் அல்லவா மணிகள் ஓலித்துக் கொண்டுதானே இருக்கும், என்று குறும்பாகக் கூறிட மகளிர் பேசாமல் அடங்கிவிட்டனர்.

தொல்காப்பியர் கூறியதுபோல, "உவகையெல்லாம் அல்லல் நீத்தனவாக இருக்க வேண்டும்" என்று கூறியதை நினைவில் கொள்ளுபவர் பண்டிதமணி,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" – எனும் திருவள்ளுவர் கூற்றுக்குமுற்றும்

எடுத்துக்காட்டாய் விளங்கியவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார். 'நவில்தொறும் நூல் நயமம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" எனும் வள்ளுவரின் கூற்று பண்டிதமணி அவர்களுக்குப் பொருந்தும்.

பண்டிதமணி எனும் பெரியாரோடு தொடர்பு கொண்ட மாணவர்களும் அறிஞர்களும், பிறரும் களங்கமில் மகிழ்ச்சி கொள்ளுதற்கு உரியவர் என்ற பெருமைக்குரியவர், அவர்நினைவு நாட்டில் நெடுங்காலம் நிலைத்திருப்பதாக.

11. குழந்தைகளுக்குக் கதை

—டாக்டர் மு.வரதராசனார்.

மனிதன் குழந்தையாக இருக்கும்போது முதல் மூன்று ஆண்டுகளில் நிறைய கற்றுக் கொள்கிறான். மனித மூளை அந்த மூன்று ஆண்டுகளில் பெறும் வளர்ச்சியே பெரிய வளர்ச்சி. அதன்பின் பத்து அண்டுகள் சிறிது குறைந்த வேகத்துடன் அறிவு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. பின்னர் அந்தவேகம் வாழ்நாளில் எப்போதும் காண்பதில்லை. வேகமாக மூளை வளரும் அந்தச் சிறு பருவத்தில் மூளைக்கு உரிய அறிவு விருந்தைக் குழந்தைகளுக்குக் கொடுத்தபடியே இருக்க வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் சிறுவர்களுக்கு அறிவு விருந்து ஊட்டிக் கொண்டே இருக்க வேண்டும். ஒருவகையில் மிக விழிப்பாக இருக்க வேண்டும். அறிவு விருந்து தானே என்று கருதி, கட்டுரை வடிவில் கருத்துகளைத் திணிக்கக்கூடாது. கட்டுரைகள் சமைக்கப்படாத பச்சைக் காய்கறிகள் போன்றவை. குழந்தைகளின் இளமூளைகள் அவற்றைச் செரிப்பது அரிது.

கட்டுரைகளுக்கு ஈடாகக் குழந்தைகள் விரும்பும் அறிவு உணவு ஒன்று உண்டெனில், அது குழந்தைகளின் கண்கள் பொருள்களை நேரே பார்த்துக் கற்றுக்கொள்ளும் காட்சி அறிவ ஆகும். பொருள்களைக் காட்டி இயக்கியும், அவை பற்றிய படங்களைக் காட்டிவிளக்கியும் சிறுவர்களின் அறிவைப் பெருக்கலாம். அவற்றை சிறார்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையில் காட்டி விளக்க, சில இடங்களுக்கு நேரே அழைத்துச் சென்று, காணும் காட்சிவழி அறிவு பெறச் செய்யலாம்.

அறிவு என்பது புலன்களின் துணைக்கொண்டு, சிறப்பாக, கண், செவி ஆகியவற்றின் துணைக்கொண்டு வளர்வதாகும். எனவே சிறுவர்களுக்கு அத்தகைய காட்சிகளைக் கண்டு அறிவுபெறுமாறு செய்வது கடமையாகும். சிறுவர்களிடத்தில் சிறு பொருள்களைக் கொடுத்து அவர்களின் கையால் அந்தப் பொருள்களைக் கொண்டு ஏதேனும் செய்யச் சொல்வது அறிவுவளர்ச்சிக்கு உதவும். விளையாட்டுப் போன்ற இந்தக் கல்வி மூளையில் கிளர்ச்சி உண்டு பண்ணும் கல்வி, சிறுவர்களின் இயல்பான படைப்புத்திறன் வளர்வதற்கு இது உதவும்.

குழந்தைகளின் அறிவுப்பசிக்கும் போதிய உணவளிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் குழந்தைகளின்மனம் சரியானவழியில் போகாமல் கோணல் வழியில் செல்லும். எனவே வருமுன் காப்பதே முதல் கடமை. அதுவே அறிவுடைமை. நல்ல சமுதாயம் குழந்தைகளின் நன்மையையே முதலில் போற்றி மகிழும். மனிதன் வளர்ந்தபின் அவனிடம் குறை இருப்பதற்குக் காரணம், குழந்தைப் பருவத்தில் அவனிடம் இருந்த குறை திருத்தப்படாதது தான் என்று மேனாட்டு உளநூல் அறிஞர்கள் கண்டனர். நாம் உடலை எப்படிக் குழந்தைப் பருவத்திலிருந்து காக்கின்றோமோ அப்படியே உள்ளத்தையும் அப்பருவத்திலிருந்து கருத்துடன் காக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு இயற்கையாகவே கலையுள்ளம் இருக்கிறது. இது வளர்க்கப்பட வேண்டும். விளையாட்டாகவே படிக்க பண்படுத்த வேண்டும். கல்வியிலே விளையாட்டு, விளையாட்டிலே கல்வி என்றமுறை நல்லது. சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுவன கதையும் பாட்டும் ஆகும். சிறுவர்களுக்கு இவற்றில் தீராப்பசி உண்டு. வளரும் வயதில் கதைகளையும் பாட்டுக்களையும் கற்பிப்பதால் அவர்களின் மூளை திறமான வளர்ச்சி பெறும். வயதுக்குத் தக்கபடி சிறுவர்களுக்கான புத்தகங்கள் எழுதப்படவேண்டும். குழந்தைகளிடம்

நல்ல ஒழுக்கமும் ஆராய்ச்சி மனப்பான்மையும் ஏற்பட நல்ல கருத்துக்களைத் தர வேண்டும். கதைகள் பெரும்பாலும் பறவைகளைப் பற்றியும் விலங்குகளைப்பற்றியும் அமையலாம். சில கதைகள் சிறுவர்களைப் பற்றி அமையலாம். குழந்தைகளின் கதையிலே, ஆண், பெண்களைக் கணவன் மனைவி என்பதைவிட அப்பா, அம்மா என்று அறிமுகப்படுத்தவேண்டும். வயது உணர்ச்சிக்கேற்ற சொற்களையும் பொருள்களையும் பாத்திரங்களையும் வைத்தே எழுதவேண்டும். அந்தக்கதைகளைக் கேட்பதால் சிறுவர்களின் மனம் விரிவடையும்.

சிறுவர்கள் வளர்ந்து இளைஞராகும்போது, வரலாறு, மொழிகள், அறிவியல், அரசியல் முதலியவற்றைக் கற்கவேண்டியுள்ளது பெரும்பங்கு நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது, இளைஞர்களின் நெஞ்சம், எந்தக் கதையையும் உண்மை என நம்புவதில்லை. கதைகளைக் கற்றாலும், சிறுவர்கள் போல் நம்பிக்கற்பதில்லை. சிறுவர்களின் மனம் தம்மை மறந்து கதைகளில் நாடகம் பார்ப்பவர்கள் நாடக நிகழ்ச்சிகளில் ஒன்றி விடுவது போல் மனம் ஒன்றிவிடுகிறார்கள்.

நெஞ்சில் நல்வாழ்க்கை பற்றிய கதைகள் பதியாதசிறுவர்களே இளைஞர்களாக வளரும்போது நெறிபிறழ்ந்து விடுகிறார்கள். நல்ல நெறியைப் புகட்டும் கதைகளைக் கற்று மனம் பண்பட்ட சிறுவர்கள் சீரழிவதில்லை. நல்ல கதைகள் நன்மை தீமைகளைத் தெளிவாகப் பிரித்துக்காட்டி நெஞ்சில் ஒருவகை அடிப்படை இருப்பதால், இளைஞராக வளரும்போது நல்லவற்றை விரும்பவும், தீயவற்றை வெறுக்கவும் ஆற்றல் பெறுகிறார்கள் இந்நிலையில் உதவாத நூல்கள், இதழ்களைப் படித்தாலும் அவர்கள் உள்ளம் கெடாதவாறு உரம் பெற்று விடுகிறார்கள்.

கதைகளுக்கு அடுத்ததாக சிறவர்களின் மூளைவிரும்புவது உணவுப்பாடல்கள். சிறுவர்களின் பாடல்களில் ஆழ்ந்த பொருள் பொதிந்திருக்கத் தேவையில்லை; நயங்கள் தேவையில்லை. ஒரு கருத்து அல்லது இரண்டு கருத்துக்குமேல் அமையாத எளிய சிறுபாடல்கள் வேண்டும். வந்த சொற்களே திரும்ப வரவேண்டும். வந்த ஓலியே திரும்ப அமையும் எதுகை, மோனைகள் அமைய வேண்டும். அளவுபட்ட அழகான ஓசை நயங்கள் நன்றாக அமைய வேண்டும், பாடல்களை வாய்விட்டுப் பாடச் செய்ய வேண்டும். பொருளை இன்னது என்று சுட்டிக்காட்டி, அந்த அளவோடு விட்டுவிட வேண்டும். பின்னர் பொருளை அவர்களே பாடிப்பாடி உணர்ந்து கொள்வார்கள். பாடல்கள் எளிமையும் தெளிவும் ஓலிநயமும் உடையனவாக இருக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் சில தலைமுறைகளுக்கு முன் சிறுவர்களுக்குக் கதையும் பாட்டும் ஊட்டி வளர்க்கும் முறை வீடுதோறும் இருந்து வந்தது. கதையுணவும் பாட்டுணவும் பள்ளிக் கூடங்களில் தருவதைவிட மிகுதியாக வீடுகளில் பாட்டிமாரும் பெற்றோரும் அளித்தனர். "கற்றலின் கேட்டலே நன்று" என்று இருந்த காலம் அது. காலம் மாறியது. அச்சு நூல்கள் பெருகின. கதைகளையும் பாடல்களையும் அச்சிட்டு படங்களுடன் விளக்கங்கள் தந்து, சிறுவர்களே தட்டுத் தடுமாறிப் படித்து, ஈடுபாடு கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. உணவைப்பிசைந்து ஊட்டும் நிலை குறைந்து, உணவைத் தாமே அள்ளி உண்ணும் நிலை உள்ளது. கதை நூல்களும் பாட்டு நூல்களும் எழுதிவழங்குபவர் பலரின் தேவை மிகுந்த காலம் இது. உலகமெல்லாம் இந்த நிலை உள்ளது. தமிழகத்தில் சென்ற தலை முறையில் கா.நமச்சிவாயர் முதலியவர்கள் சிறுவர்களின் தேவைக்கு ஏற்றபடி சிறுசிறு சொற்களால் எளிய கதைகளையும் பாடல்களையும் இயற்றித் தந்தார்கள். இந்த தலைமுறையில் இத்துறையில் பலர் தொண்டாற்றுகின்றனர். குழந்தைக் கவிஞர் திரு. அழ.வள்ளியப்பாவின் தொண்டு தனிச்சிறப்புடன் போற்றத்தக்கது.

12. தமிழ்க் கவிதையில் நாட்டுப்புற மரபு

–சிற்பி

ஒவ்வொரு காலத்தின் விதம் விதமான இலக்கிய வடிவங்களுக்குள்ள நாட்டுப்புற மரபுகள், பாடல்கள், கசிந்து கலந்து கொண்டு புத்துயிர்ப்போடு வாழ்ந்து வருவது இலக்கிய உலகின் சத்தியங்களுள் ஒன்று. அமெரிக்க மாந்தவியலாளரான ராபர்ட் ரெட்பீல்டு நாட்டுப்புற மரபைச் "சிறுமரபு" எனப் பெயரிட்டழைப்பார். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரை பழம் பெரும் இலக்கணமான தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் நாட்டுப்புற மரபின் கூறுகளோடு தொடர்புடையன எனலாம்.

தொல்காப்பியம்:– சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டதாகத் தொல்காப்பியத்தைக் கூறலாம். பொருளதிகாரச் செய்யுளியலில் தொல்காப்பியர் எழுவகை இலக்கியங்களைப் பற்றிக் கூறுகின்றார்.

பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்

இவற்றுள் பிசி என்ற விடுகதையும், முதுசொல் என்கிற பழமொழியும் நாட்டுப்புற மரபைச் சார்ந்தவை. தொல்காப்பியர் குறிப்பிடும் பண்ணத்தி நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கிறதெனக் கருதுவோர் உளர். கிவா.ஜ, நா.வானமாமலை ஆகியோர் இதனை வாய்மொழி இலக்கியம் என ஒரு மனதாகக் கூறுகின்றனர்.

சங்க இலக்கியம்:

வாய்மொழி இலக்கியத்தின் செல்வாக்கு சங்க இலக்கியங்களில் காணப்படுவதை திறனாய்வாளாரான கைலாசபதி தம் ஒப்பற்ற ஆய்வு நூலான தமிழ் வீரயுகக் கவிதை என்ற நூலில் தெளிவு படுத்துகிறார். தார்த்தாரியர்களின் வாய்மொழி இலக்கியத்தைத் திரட்டிய ராட்லோவ், கிரேக்க இலக்கியத்தை ஆழ்ந்தாராய்ந்த சாட்விக், ஹோமா காவியங்களைப் பகுப்பாய்வு செய்த மில்மன்பேரி ஆகியோர் தாம் ஆராய்ந்த இலக்கியங்களில் வாய்மொழி இலக்கிய உத்திகள் உள்ளன.

தொடர்ந்து கையாளப்படும் பெயரடைகள், திரும்பத் திரும்ப வரும் முழுவரிகள், இட்டுக்கட்டி நிறைவு செய்து கொள்ளும் வாய்பாட்டு அலகுகள், ஒரு பொருட் பன்மொழிகள் வரையறுக்கப்பட்ட தொடக்கங்கள், முடிவுகள் தலைவனின் வழி மரபு கூறுதல், வீரயுகக் கவிதைகள் போன்ற வற்றில் நாட்டுப்புற உத்திகள் இருப்பதாக கைலாசபதி கூறுகிறார்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற திணைப்பாகு பாடுகள், அத்திணைக்குரிய புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகிய உரிப்பொருள்கள், அவற்றுடன் இணைந்த கவிதையின் அடிக்கருத்துகள் நாட்டுப்புற மரபைச் சார்ந்ததே. சங்க அகக் கவிதைகளில் தலைவன், தலைவி பெயர்கள் சுட்டிக் கூறலாகாது என்ற மரபினை நினைவு கூரும் தமிழண்ணல் இப்பண்பு வாய்மொழி மரபு சார்ந்ததாகக் கருதுகின்றார். சங்க இலக்கியத்துள் காணப்படும் வள்ளைப்பாட்டு, குரவைப்பாட்டு, ஆகியன நாட்டுப்புற வகையைச் சார்ந்தனவாகும். கிளி கடி பாடல், குன்றம் பாடிய பாட்டு, வேள்பாட்டு, துணங்கைப் பாட்டு, களமர் ஆர்ப்பு ஊசல் பாட்டு என்றாற் போல் அமையும் சங்கப்பாடல்கள் பற்றிய குறிப்புகள் தமிழக நாட்டுப்புறச் சூழல்களையே நினைப்பூட்டுகின்றன.

"ஐங்குறுனூறு" என்ற சங்க இலக்கியத்தின் அமைப்பு நாட்டார் பாடல் வடிவம் கொண்டது என்பர் தெ.பொ.மீ. எடுத்துக் காட்டாக, வேட்கைப் பத்து பாடல்களில் முதல் வரியும் மூன்றாம் வரியும் ஒவ்வொரு பாடலிலும் திரும்பச் சொல்லப் பெற்றிருக்கக் காணலாம்.

சங்க காலத்துக்குப்பின்: திருக்குறளில் நாட்டுப்புற செல்வாக்கு அறவே இல்லை. பழமொழி நானூறு மட்டும் விதிவிலக்காக விளங்குகிறது. வெண்பா யாப்பில் அமைந்த இந்நூல் வெண்பாவின் ஈற்றடி மட்டும் ஒரு பழமொழியாக அமைந்துள்ளது. அப்பழமொழியின் விளக்கம் பிற அடிகளில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"யானையால் யானையாத் தற்று"

"பாம்பறியும் பாம்பினது கால்"

"கொற்றெருவில் துன்னாசி விற்பவர் இல்"

"குரங்கினுள் நன்முகத்த இல்"

"நிறைகுடம் நீர்தளும்பல் இல்"

போன்ற அடிகளில் நாட்டுபுற செல்வாக்கு அமைந்துள்ளது.

காப்பிய இலக்கியம்: நெடுங்காலமாக மக்களிடையே வாய்மொழிக் காப்பியமாகவும், கதைப் பாடலாகவும் செல்வாக்குப் பெற்றபின் எழுத்துமொழிக் காப்பியங்கள் உருவாகி இருக்க வேண்டுமெனக் காப்பிய இயல் அறிஞர்கள் கூறுகின்றனர். நாட்டுப்புற கதைகள் பலவற்றின் இழைகளிலிருந்தே சிலப்பதிகாரம் கூட உருவாகியிருக்க வேண்டும் என எஸ். வையாபுரிப் பிள்ளை தம் 'காவியகாலம்' நூலில் சிலப்பதிகாரப் பழங்கதைகளைக் கண்டறிந்து எழுதியுள்ளார். சிலப்பதிகாரக் காப்பியத்துள் கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என வரும் வரிப்பாடல்களும் தமிழகத்தின் வெவ்வேறு நிலப்பகுதிகளில் வழங்கிய நாட்டுப்புறப் பாடல்களே என்பர். பெரியபுராண உருவாக்கம் கூட இவ்வாறே நேர்ந்தது எனலாம். பல்வேறு பகுதிகளில் வழங்கிய சைவநாயன்மார்களின் கதைகளைத் தேடித் தொகுத்துச் சேக்கிழார் காப்பியமாக்கினார்.

பக்தி இலக்கியம்: கி.பி. 7,8 ஆம் நூற்றாண்டுகளில் தழைத்த பக்தி இலக்கியம் நாட்டுப்புற மரபுகளைத் திறம்படபெற்றுள்ளது. அம்மானை, தெள்ளேணம், ஊசல், சாழல் முதலிய பாடல்வகைகள் எல்லாம் மகளிர் விளையாட்டுகளில் பாடிய பாடலின் சாயலில் உருவாக்கப்பட்டவை. திருத்தோள் நோக்கம் நடனக்கலையிலிருந்தும், திருப்பொற்சுண்ணம், சுண்ணம் இடிக்கும் தொழிலாளர் பாடல் மரபிலிருந்து எடுத்தாளப் பெற்ற இசையமைப்பைக் கொண்டதாகும்.

பெரியாழ்வாரின் தாலாட்டுப் பாடலும், குலசேகர ஆழ்வாரின் தாலாட்டுப் பாடலும் நாட்டார் வழக்காற்றுப் பாடல்களை அடியொற்றி எழுந்தன.

தமிழ்ச் சித்தர்கள் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ள நடையும், சொற்றொடர்களும் கூட நாட்டுப்புறச் சாயல் கொண்டவையே. கடுவெளிச் சித்தரின் நந்தவனத்திலோர் ஆண்டி ஒரு விடுகதைத் தொனியில் அமைந்திருப்பது கூட நாட்டுப்புற மரபை உட்கொண்டது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சீர்திருத்தச் சித்தரான இராமலிங்க அடிகள் நாட்டுப்புறக் கூறுகளையும், பாடல் மெட்டுக்களையும் திருவருட்பாவில் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

சிற்றிலக்கியங்கள்: சோழப் பேரரசின் தகர்ச்சிக்குப் பின் தமிழ்ச் சமுதாயமும் தமிழ் மொழியும் பல்வேறு வகையான சிக்கல்களை அடைந்தன. காளமேகப் புலவர் இரட்டைப் புலவர்கள் ஆகியோரை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவர்களின் இலக்கணத் தூய்மையையும் மீறி நாட்டார் கொச்சை வழக்குகள் கவிதைகளில் இடம் பெற்றன.

"போனால் மயிர் போச்சுப் போ"

"சோறுகண்ட மூளி யார் சொல்"

"சீத்துப் பூத்தென்று"

"கோட்டானே நாயே குரங்கே"

இவ்வாறு செய்திகளைப் பச்சையாகச் சொல்லும் வழக்குகள் காணப்படுகின்றன.

சிற்றிலக்கியக் காலத்தில்தான் எளிய மக்களின் வாழ்வியலும், அவர்தம் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் இலக்கியத்தில் இடம் பிடித்தன. குறவர் வாழ்வு பற்றி பேசும் குறவஞ்சி எழுந்தது. வேளாண்மைத் தொழிலில் தாழ்ந்து போன பள்ளர் வாழ்வியலோடு தொடர்புடைய பள்ளுப்பாட்டு தோன்றின. கும்மி, சிந்து, ஏசல், பந்தாட்டம் முதலிய நாட்டுப்புற இசைப் பாடல்கள் மரபுகள். இலக்கிய வடிவு கொண்டன. பத்தென்பதாம் நூற்றாண்டில் கோபால கிருஷ்ணன் பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை மக்கள் மனம் கவர்ந்த படைப்பாகத்திகழ்ந்தது.

இக்காலக்கவிதை: சுப்பிரமணிய பாரதியார் நாட்டுப்புற இலக்கிய மரபைப் பெரிதும் நேசித்தார். மெய்சசிலிர்ப்போடு அவர் குறிப்பிடுவதாவது, கும்மிப்பாட்டு, பல்லிப்பாட்டு, கிளிப்பாட்டு, நலுங்குப்பாட்டு, பள்ளியறைப்பாட்டு, அம்மானைப்பாட்டு, தாலாட்டுப்பாட்டு முதலிய பெண்களுடைய பாட்டெல்லாம் மிகவும் இன்பமாக இருந்ததாக பாரதியார் உணர்ந்திருந்தார். அவருடைய கும்மிப்பாட்டு பாப்பாப்பாட்டு, புதிய கோணங்கி, முத்துமாரி பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய படைப்புகள் நாட்டுப்புற பாடல்களின் மெட்டுகளையும் இசையையும் வடிவத்தையும் ஏந்தி வந்துள்ளன. பாரதிக்குப் பின்வந்த பெருங்கவிஞர்களும் நாட்டுப்புற மரபில் நாட்டம் கொண்டிருந்த போதிலும் அவருக்கு அப்பாடல்களில் இருந்த நெருக்கமும், மயக்கமும் வேறு எவருக்கும் இல்லை.

கண்ணதாசன், பட்டுக்கோட்டை, கொத்தமங்கலம் சுப்பு முதலிய கவிஞர்களிடம் நாட்டுப்புறத்தாக்கம் குறிப்பிடத்தக்க அளவு காணப்படுகின்றது.

நாட்டுப்புற இலக்கியம் சமகாலக் கவிதை மீது செலுத்தும் செல்வாக்கைக் குறித்து நாட்டுப்புற இயலாளர் சு. சண்முகசுந்தரம் ஒரு தனி நூலே எழுதி இருக்கின்றார். நா. காமராசன், ஞானக்கூத்தன், கலாப்ரியா, மு. மேத்தா, சிற்பி ஆகிய கவிஞர்கள் நாட்டுப்புறப்பாடல் உத்திகளைத் தம் கவிதைகளில் கையாண்டிருப்பதாக அவர் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக மு. மேத்தாவின் "ஒரு அரளிப் பூ அழுகிறது" என்ற கவிதை,

"பூக்களிலே நானுமொரு
பூவாகப் பிறப்பெடுத்தேன்
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே
பொன்விரல்கள் தீண்டலையே – நான்
பூமாலை ஆகலையே"

ஓப்பாரிப் பாட்டின் நயத்தோடு ஒரு சோகம் உருவெடுத்திருப்பதை இப்பாடலில் காணலாம்.

"அண்ணன்மார் கதை" போன்ற நாட்டுப்புறக்கதைப் பாடல் இன்றும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு காலத்தின் விதம் விதமான இலக்கிய வடிவங்களுக்குள்ளும் நாட்டுப்புற மரபுகள், பாடல்கள் கசிந்து கலந்து கொண்டு புத்துயிர்ப்போடு வாழ்ந்து வருவது இலக்கிய உலகின் சத்தியங்களுள் ஒன்று.

13. நாட்டுப்புறப்பாடல்கள்

– டாக்டர். சரசுவதி வேணுகோபால்

எழுத்திலக்கியத்தைப் பேணி பாதுகாக்கும் கல்வியறிவு மிக்க பெரியோர் நாட்டுப்புற இலக்கியத்தைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை. எனவே அப்பாடல்கள் பாதுகாக்கப்படாமலே அழிந்து போகின்றன என்று பேரறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தம் தமிழிலக்கிய வரலாறு நூலில் கூறுகிறார். கடந்த பத்தாண்டுகளாகத் தமிழ் நாட்டில் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் நாட்டுப்புறவியல் ஆராய்சிகள் நடந்து வருகின்றன.

இக்கட்டுரையில் வாய்மொழி இலக்கியத்தின் ஒரு பகுதியாக விளங்கும் தாலாட்டு, ஒப்பாரிப்பாடல்களில் காணப்படும் சில சுவையான சமுதாயச் செய்திகளைக் காணபோம்.

காதுகுத்து விழாவும் தாய் மாமனும்; தாலாட்டுப் பாடல்களைப் பற்றிய பல அறிஞர்களின் கருத்துக்களில் ஒன்று நாட்டுப் புறப்பாடல்களில் தாலாட்டு வகை உலகனைத்துக்கம் பொதுவானது. தாய்மை என்னும் மிகச் சிறந்த உணர்ச்சிப் பெருக்கிலே பிறப்பதால் தாலாட்டுப்பாடல்கள் கற்பனை நயமும் சொல்லழகும் பெற்றுத் தனக்கு உவமையின்றி விளங்குகின்றன என்பதாகும்.

குழந்தையை வருணித்தல் தொட்டில், சங்கு ஆகியவற்றின் வருணனை, காதுகுத்துவிழா, குழந்தையின் கல்வி, விளையாட்டு, வளையடுக்குதல், நீராட்டுதல், இறை நம்பிக்கை, புராண நிகழ்ச்சிகள், சமயப்பற்று உறவினர்கள் தாய்மாமனின் சிறப்பு, மலட்டுத்தன்மைக்கு அஞ்சல், சாதிப் பற்று, அவரவருடைய தொழில் பற்றிய செய்திகள் போன்ற பல தாலாட்டில் காணப்படுகின்றன. அவற்றுள் காதுகுத்துச் சடங்கும் தாய்மாமனின் சிறப்பும் பற்றிப் பாடாதோரே இல்லை எனலாம். அதே போல் இறை நம்பிக்கையும், மலட்டுத்தன்மைக்கு அஞ்சலும் எல்லா பெண்டிரின் பாடல்களிலும் இடம் பெறுகின்றன. இதிலிருந்து இவை தமிழ்ச்சமுதாயத்துக்க ஆணி வேர் போல் விளங்கும் உண்மையை உணரலாம்.

காதுகுத்து விழா தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் மக்கள் அறிந்த–நடத்துகின்ற ஒன்றே. இவ்விழாவில் முக்கியமான பங்கேற்பவர் குழந்தையின் தாய்மாமன். அவருடைய சீர்வரிசையைப் பற்றி மகிழ்ச்சியுடன் பாடுகிறாள் அவர் தங்கை,

"என்னரசு காதுகுத்த என்னசீர் வேணு மின்னு,
மண்ணில்லா நல்லவெல்லம் மறுவில்லாப் பச்சரிசி
எள்ளு இருகலங் எளந்தேங்கா முந்நூறு
பாக்கு பதின்பலம் பச்சரிசி முக்குறுணி
காதுகுத்த வாராக கருணரே ஓம்மாமன்
சீலைகொண்டு வாராக சேவுகரே ஓம்மாமன்
பட்டுக்கொண்டு வாராக பாண்டியரே ஓம்மாமன்
பட்டெடுத்தா தொட்டி கட்ட –பசும்
பொன்னெடுத்தா காதுகுத்த"

என்ற மாமனின் சிறப்பைக் கூறி மகிழும் மற்றொரு பாடலும் மேற்கூறிய காதுகுத்து விழா அதில் தாய்மாமன் பங்கு ஆகியவற்றைக் காட்டவல்லன.

நம் பண்பாட்டில் பொதுவாகப் பொறுமை என்னும் அரிய பண்பு சிறந்த பங்கு வகிக்கும் ஒன்று. மக்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் மனத்துயர், ஏமாற்றங்கள் ஆகியவற்றை இறைவனை முழுமையாக நம்புதல் என்ற ஒன்றின் மூலமாகவே பொறுத்துக் கொள்ளும்

இயல்பினைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கைக்கொள்ளுதலைக் காணலாம். அவரவருடைய சமயத்துக்கு ஏற்பவும் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பவும் கோயில்களுக்குச் சென்று தான தருமங்கள் செய்து குழந்தை வரம் வேண்டி நிற்பர். அவ்வாறு வரம் கிடைக்கப் பெற்ற நிலையில், பெற்றோர் அகமகிழ்ந்து அத்தெய்வத்தின் பெயரையே தாம் பெற்ற குழந்தைக்கு வைத்தலைக் காணலாம். இராமேச்சுரம் சென்ற வணங்கிப் பெற்றக் குழந்தைக்கு இராமநாதன் என்றும், மதுரை மீனாட்சி அம்மனை வணங்கிப் பெற்ற குழந்தைக்கு "மீனாட்சி" என்னும் பெயரிடுதலைக்காணலாம். புதிதாக வந்திருப்போரிடம் குழந்தை பெயரைக் கூறும்பொழுது கூடவே அதன் காரணத்தையும் கூறி அத்தெய்வத்தை நன்றியோடு நினைவுகூர்தலைக் காண்கிறோம்.

தாலாட்டுப் பாடல்களை விட இன்னும் சிறப்பாகக் கருதப்படுவன ஒப்பாரிப்பாடல்கள். நாட்டுப்புறங்களில் வாழும் பெண்கள் ஒப்பாரிப்பாடல்களைப் பாடுதலிலும் புதிய பாடல்களைத் தெரிந்து கொள்ளுதலிலும் பாடல் இயற்றவல்லவராயிருப்பின் இயற்றுதலிலும் மிகுந்த விருப்புடையோராய் இருத்தலைக் காணலாம். பாடலுக்கு இடையே இறந்து போனவருக்கு ஏற்ற முறையில் விளிகளை அமைத்துப்பாடுவர்.

கணவன்–மனைவி, அண்ணி–நாத்தி உறவு நிலைகள்: கணவனை இழந்த மனைவி பொதுவாக அவனை உயர்த்திப் பாடுதல் இயல்புதான். ஆயின் சிலபொழுது தன் பெற்றோரின் இறப்பின் பொழுது சில பெண்கள் தன் கணவன் செய்யும் கொடுமையையும் குறிப்பாக உணர்த்துதலும் உண்டு. "இப்படிப்பட்ட கொடிய மருமகனிடம் என்னை விட்டு விட்டுப் போய்விட்டீர்களே" என்று தொனிக்கும் பாடல்கள் சில பின் தங்கிய வகுப்பாரிடம் நிறையவே உள்ளன. எடுத்துக்காட்டாக,

ஆளக் கெணறுவெட்டி – என்னப் பெத்த அம்மா
அடி வரிசை கல்பாவி
ஆளமின்னும் பாராம – என்னெ
அமுக்கினீங்க கங்கையிலே
நீளக் கெணறு வெட்டி – என்னப் பெத்த அப்பா
நெடுவரிசை கல்பாவி
நீளமின்னும் பாராம – என்னெ
நிறுத்தினீங்க கங்கையிலே"

என்ற பாடலை காணும் பொழுது அப்பாட்டைப் பாடும் பெண்ணின் உள்ளம் எத்தகைய துன்பத்திலும் வெறுப்பிலும் சிக்குண்டிருக்கிறது என்பதையுணரலாம்.

ஒரு குறிப்பிட்ட இன மக்களின் உண்மையான பண்பாட்டை, மனவுணர்வுகளை, ஆசைகளை குறிக்கோள்களை விருப்பு வெறுப்புக்களை, சமுதாய மதிப்புக்களை, உள்ளது உள்ளவாறே உணர்த்தவல்லது. அவ்வின மக்களின் வாய்மொழி இலக்கியமேயாகும். நமது மொழியில் அமைந்துள்ள நாட்டுப்புறப் பாடல்களில் சில தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களின் துணைக் கொண்டு இக்கட்டுரையில் மேற்கூறிய பண்பாடு, சமுதாய மதிப்புக்கள் போன்றவற்றைச் சுருக்கமாகக் கண்டோம். வாய்மொழி இலக்கியம் என்னும் தேனைச் சுவைத்தால் தான் அதன் இனிமை எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளவியலும், அத்தகைய சுவையனுபவத்திற்கு இக்கட்டுரை சிறுவாயிலாக அமையின் மகிழ்வேன்.

14. ஒப்பிலக்கியம்

– தமிழண்ணல்

ஒப்பியல் முறை: திறனாய்வு அல்லது ஆய்வது பல வகைப்படும். அதற்கான ஆராய்ச்சி அணுகு முறைகள் பலவாகும். இலக்கிய நலம் பற்றி ஆராய எண்ணினால் திருக்குறளில் இடம் பெறும் உவமைகள், உருவகங்கள், அணிநலன்கள், கற்பனை, சொல்லாட்சி, நடைத்திறன் யாப்புவடிவம் என்று இவ்வாறு பெரும் பிரிவுகளாகவும் அதன் உட்பிரிவுகளாகவும் பகுத்துப் பகுத்துக் கொண்டு ஆராய்வதாகும்.

"பொதுநீர்மை காணுதல்" என்பது ஆய்வு முறையாகும். அதற்குப் பொது விதி நிறுவுதல் முறை என்று பெயர். ஒரு காப்பியம் என்றால் அது தன்னிகரில்லாத தலைவன் அல்லது தலைவியை உடையதாக இருக்கும். நாடு, நகர், ஆற்று வருணனைகள் இடம் பெறும். படலம், சருக்கம் முதலிய பல இயல்களையுடையதாய் அளவாலும் பாட்டு எண்ணிக்கையாலும், பெரியதாக இருக்கும். நம்பமுடியாத நிகழ்ச்சிகள், இயற்கைப் புனைகள் வருணனைகள் நிறைந்து காணப்படும் என்றிவ்வாறு எத்தனையோ பண்புகளை வரிசைப்படுத்திக் கூறலாம். இவையெல்லாம் மேற்கண்ட ஆய்வில் அடங்கும். சமயக்கணக்கர் மதிவழி கூறாது, பொது மனநிலையில் அறங்கூறியவர் என்ற முடிவுக்குவரின் அஃது உய்த்துணராய்வின் பாற்படும்.

"ஒப்பியல்" என்பதும் இது போன்ற ஓர் ஆய்வு முறையாகும். தாயுமானவர் "பராபரக் கண்ணி" பாடியுள்ளார். இராமலிங்க வள்ளலார் "மகாதேச மாலை" பாடியுள்ளார். இரண்டும் கடவுளை முன்னிறுத்திக் காட்டும், மெய்ப்பொருள் விளக்கப் பாடல்களேயாகும். பராபரன் என்றாலும் மகாதேவன் என்றாலும் பெரியோனாகிய இறைவனையே சுட்டும்.

ஒருபெண் தான் பிறந்த இடத்தை விட்டு வாழச்சென்ற இடத்தைத்தான் துலங்க வைக்கின்றாள். அவள் தன் பெற்றோர்க்கு உற்றவளாவதை விடத்தன் கணவனுக்கும் புகுந்த குடும்பத்திற்குமே மிகவும் உற்றவளாகின்றாள். இதை விளக்கும் கலித் தொகைப்பாட்டில் காணப்படும் தாழிசைகள் வருமாறு:

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என் செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கு மாங்கு அனையளே!"
"சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்க வைதாம் என் செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கு மாங்கு அனையளே!"

மேற்காட்டிய வாய்மொழிப் பாடல்களை இதனுடன் ஒப்பிட்டால், திரும்ப வரும் அழகு வரிவடிவப் பாடலில் – புலவர் பாடிய பாடலில் இடம் பெற்றமை புலனாகும். வாய்மொழிப் பண்பைப் பெற்றே எழுத்துவடிவில் உருவான பாடல்கள் ஏற்றம் பெற்றன என்ற உண்மையை இவ்வொப்பீடு நிலைநிறுத்தும்.

ஒப்பியல் முறை: ஒப்பிலக்கியம் தனி ஒரு துறையாக மேலை நாடுகளில் திறனாய்வில் பல அறிவியல் முறைகள் புகுத்தப்பட்டுள்ளன. எத்தனையோ முறைகளும் வகைகளும் இங்கு பின்பற்றப்படுகின்றன. இதற்கெனச் சில வரன் முறைகளும் விதிவகைகளும் ஏற்பட்டுவிட்டன. அதைப்பற்றி ஒரு சிறிதும் அறியாமல் ஒப்பிலக்கியம் பற்றிச் சிலர் பேசுவது கேலிக்கூத்தாகும்.

இலக்கியத்தின் ஒருமையும் முழுமையும்: இலக்கியத்தை உலக நோக்கில் காண்பதும் ஆய்வதும் வேண்டும். உலக இலக்கியமனைத்தும், அஃது எம்மொழியில் எழுதப் பட்டிருந்தாலும் ஒன்றே என்ற மனப்பான்மை வளர வேண்டும். சேக்ஷ்பியர் எந்த நாட்டில் பிறந்திருந்தாலும் நாம் விரும்பிக்கற்றால் நமக்கு மிகவும் அணியமானவராகவே கருத தக்கவர் ஆவார். திருவள்ளுவர் காலத்தால் மிகமுற்பட்ட வராயினும் நம் வாழ்க்கைக்கு வழி காட்டுவதில் இன்றும் நம் முன்னிற்பவரேயாவார் இலக்கியத்திற்கு இவ்வாறு இட வேறுபாடு, சேய்மை, அண்மை கிடையாது. அதற்குக் கால வேறுபாடும் கிடையாது. இலக்கியத்திற்கு நிகழ்காலமே உண்டு. இறந்த காலம் கிடையாது என்பர் ஒப்பீட்டறிஞர். ஒருமொழியில் ஓர் இலக்கியம் தோன்றி இருக்கிறது என்றால் அது தவிர்க்க முடியாதது. அதனாலேயே அவ்விலக்கியம் பிறமொழியினருக்கு, பிற நாட்டவர்க்கு உரியதன்று என்றாகிவிடாது.

இலக்கியத்தின் தனித்துவம்: இலக்கியத்தில் தேசிய உணர்வு, நாட்டுப்பண்பாடு, மக்கள் நாகரிகம், படைத்தோனின் தனி ஆளுமை போன்ற தனித்துவங்களை மறுப்பதாகவோ புறக்கணிப்பதாகவோ கருதுதல் கூடாது. இலக்கியத்திலுள்ள தனிப்பண்புகளுக்காகவே நாம் அவற்றை விரும்பிப் படிக்கின்றோம். அவற்றின் தனிச் சிறப்புக்களைக் கண்டறிவதற்கும் பொது நீர்மைகளை உணர்ந்தால்தான் முடியும் என்ற உண்மை நாம் மனங்கொள்ள வேண்டும். இங்ஙனம் பொதுநீர்மையையும் தனிச்சீர்மையையும் வேறுபடுத்தி அறிந்து கற்க ஒப்பிலக்கியம் வழிகாட்டுகிறது.

அறிவியல் முறை ஆய்வு: "ஒப்பிலக்கியம்" அறிவியல் வழி ஆய்வை வற்புறுத்துகின்றது. தற்சார்பின்மை, நடுவுநிலைமை போற்றல், சில விதிமுறைகளையும் கொள்கைகளையும் வைத்துக்கொண்டு அவற்றை இலக்கியத்தில் ஏற்றிப் பார்த்தல், ஆய்வுக் கூடத்தில் செய்வது போல் செய்ம் முறைப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல், எத்தனை முறை செய்து பார்த்தாலும் ஒரே முடிவிற்கு வரமுடிகிறதா எனச் சோதித்துப் பார்த்தல் என்றிவ்வாறு அறிவியல் முறை ஆய்வுகளை எல்லாம் இலக்கியத்தில் மேற்கொள்ளலாம் என்று ஒப்பீட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் உடற்கூற்றுப் பகுப்பாய்வு முறை. டார்வினின் கூர்தலறக் கோட்பாட்டு வழி ஆய்வு போன்றவற்றையும் இலக்கியத்தில் ஏற்றிப்பார்த்து ஆராய்ந்து வருகின்றனர். எனவே ஒப்பிடுவதுதான் ஒப்பிலக்கியம் என்று கருதுதல் கூடாது. இத்தகைய ஆய்வு நெறிகளை எல்லாம் இன்று ஒப்பிலக்கியத்தில் அடக்கியுள்ளனர்.

ஒப்பிலக்கியத்தின் பயன்பாடு:– ஒப்பிலக்கியத்தின் பயன்பாடு யாது எனவும் நாம் உணர்தல் வேண்டும். ஒப்பீட்டுப் பேரறிஞர் ரெனிவெல்லக்கு குறிப்பிடுவது போல இவ்வொப்பீடு, இலக்கியத்தை மேலும் மேலும் விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்றது. மேலும் இஃது இலக்கிய நுகர்ச்சியில் அழகுணர்ச்சியை ஏற்படுத்தி இன்பம் நல்குகின்றது. ஒப்பீட்டினால் பிறிதொரு நற்பயன் விளைய வேண்டுமே தவிர வெறுமனே "ஒப்பீட்டிற்காக ஒப்பீடு" செய்வது என்பது கூடாது.

ஒப்பிலக்கிய விளக்கம்:– ஒப்பிலக்கியம் இன்று மூன்று நிலைகளில் செயல்படுகிறது. பிரஞ்சு நாட்டவர் முதலில் சில நெறிகளைப் பின்பற்றினர். பிறகு அமெரிக்கர் சில முறைகளைப் புகுத்தினர். முதலில் பிரெஞ்சுக் கோட்பாட்டிற்கும் அமெரிக்கக் கோட்பாட்டிற்கும் முரண் இருப்பது போல் தோன்றியது. பின்னர் ஒப்பீட்டறிஞர்களிடையே ஓர் ஒற்றுமை ஏற்பட்டு, சில பொது நெறிமுறைகள் வரையறுக்கப்பட்டன. ஒப்பீட்டறிஞர் எச்.எச்.ரிமாக்கு என்பார் ஒரு பொது விளக்கத்தைத் தந்தார். ஒப்பிலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டு எல்லைகளைத் தாண்டிய மொழி இலக்கியங்களை ஆய்வதாகும். மேலும் ஒருபுறம் இலக்கியத்தையும் மறுபுறம் அறிவு மற்றும் நம்பிக்கை சார்ந்த துறைகளையும் ஒப்பீட்டு அவ்ற்றிடையேயுள்ள உறவு நிலைகளை ஆராய்வதும் ஒப்பிலக்கியமேயாகும். கலைகள், மெய்ப்பொருளியல், வரலாறு, சமூக அறிவியல் துறைகள், இயற்கை அறிவியல் துறைகள் சமயம் முதலியன இவற்றில் அடங்கும்.

அறிவியல் முறைகளைப் பின் பற்றும் ஆய்வுகளும் இன்று பல்கி வருகின்றன. ஆய்வதற்கென்று தனித்தனி ஆய்வுக் கோட்பாடுகள்,. அளவுகோல்கள் கண்டுபிடிக்கப்பட்டு,

அவை இலக்கியத்தில் ஏற்றிப் பார்க்கப்படுகின்றன. தமிழியல் ஆய்வு பல்கிப் பெருகுங்காலம் இது. இவ்வேளையில் ஒப்பிலக்கிய ஆய்வு நெறி முறைகளே. தமிழ் இலக்கியச் சிறப்புகளை பிறரும் ஏற்குமாறு கூறுதற்கு வழிவகுப்பனவாகும். ஏனெனில் ஒப்பிலக்கியம் நடுவுநிலைமையை நம் உள்ளத்தில் பதிவிக்கின்றது. பிறரும் ஏற்குமாறு எடுத்துச் சொல்லக் கற்றுத் தருகின்றது. அறிவியல் ஆய்வுமுறைகளாகிய அளவு கோல்ககளில் நமக்குப் பயிற்சி தருகிறது. தமிழர்கள் எதனையும் உணர்ச்சி வசப்பட்டுக் கூறுவார்கள் என்ற குறையினை நம்மிடமிருந்து அகற்றுகிறது. முன்னேறி வரும் உலகத்தில் காணப்படுகின்ற வளர்ச்சி பெற்ற ஆய்வுகளுடன் நாமும் பழகிக் கலந்து போட்டியிட்டு முன்னேற வாய்ப்பு நல்குகிறது.

15. சிற்ப உருவங்களின் அமைப்பு

– மயிலை.சீனி.வேங்கடசாமி

பழமையான நான்கு மதங்கள்: நமது நாட்டிலே சைவம், வைணவம், பௌத்தம், சமணம் என்னும் நான்கு மதங்களும் தொன்று தொட்டு நிலவும் பழைய மதங்களாகும். இந்த நான்கு சமயத்தாரும் தத்தமக்கென்ற கோயில்கள் அமைத்து, அக்கோயில்களில் தத்தம் தெய்வ உருவங்களைச் சிற்பத்திலும் ஓவியத்திலும் அமைத்து வணங்கினார்கள். இந்தத் தெய்வங்களின் உருவ அமைப்பிலே சிறப்பாகச் சில வேறுபாடுகள் உண்டு. சிற்பக்கலைகளை ஆராய்வோர் அந்த வேறுபாடுகளை அறிய வேண்டும். இந்த நான்கு சமயங்களில் சைவ, வைணவ சமயங்கள் ஒருவகையில் ஒத்த தன்மை உடையன; பௌத்த சமண சமயங்கள் ஒரு சார்புடையன.

சைவ–சமணத் தெய்வ உரு ஒற்றுமை: சைவ சமயத்தில் முதல் தெய்வமாகிய சிவபெருமான் திருவுருவம் நின்ற வண்ணமாகவும் இருந்த வண்ணமாகவும் அமைக்கப்படுகிறது.

அதுபோலவே சமண சமயத்தின் தெய்வமாகிய அருக பெருமான் திருவுருவமும் நின்ற, இருந்த வண்ணமாக அமைக்கப்படுகின்றது.

வைணவ– பௌத்தத் தெய்வ உரு ஒற்றுமை : திருமாலின் சிற்ப உருவம், நின்ற, இருந்த, கிடந்த வண்ணமாக அமைக்கப்படுகின்றது.

புத்தபெருமானுடைய திருவுருவம் நின்ற, இருந்த, கிடந்த வண்ணமாக அமைக்கப்படுகின்றது.

கூத்தாடும் திருவுருவம்;

சிவபெருமான் திருவுருவமும் திருமால் திருவுருவமும் கூத்தாடும் உருவமாக அமைக்கப்படுவதும் உண். அவற்றை நடராஜர் மூர்த்தத்திலும் குடக்கூத்து காளிங்க மர்த்தனம் முதலிய மூர்த்தத்திலும் காணலாம். ஆனால் அருகர், புத்தர் உருவங்கள் கூத்தாடும் கோலமாக அமைக்கப்படுவது இல்லை.

சிவன் திருமால் உருவங்களின் கையமைப்பு : சிவபெருமான் திருவுருவத்திலும் திருமால் திருவுருவத்திலும் பொதுவாக நான்கு கைகள் அமைக்கப்படுகின்றன. சில சமயங்களில் எட்டு அல்லது பதினாறு கைகள் அமைக்கப்படுவதும் உண்டு. இரண்டு கைகள் மட்டும் உள்ள சிவபெருமான் திருமால் திருவுருவங்களைக் காண முடியாது.

எட்டு பதினாறு கைகள் அமைந்திருந்தால் அக்கைகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு ஆயுதங்கள் ஏந்தியிருப்பன போல அமைக்கப்படுகின்றன.

அம்மன் திருவுருவம்; சிவபெருமானின் சக்தியாகிய அம்மன் திருவுருவம் சிவபெருமானுக்குப் பக்கத்தில் அமைக்கப்படும் போது, அம்மன் சிவபெருமானக்கு ஆற்றலில் குறைந்தவர் என்பதைக் காட்டும் பொருட்டு, அவ்வுருவத்திற்கு இரண்டு கைகள் மட்டும் அமைக்கப்படுகின்றன.

சிறு தெய்வங்களின் அமைப்பு : சைவ, வைணவ சமயத்துச் சிறு தெய்வங்களும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இரண்டு கைகளைமட்டும் உடையவர்களாக அமைக்கப் படுகிறார்கள். புத்தர்,

அருகர் திருவுருவங்களுக்கு இரண்டு கைகள் மட்டுமே உள்ளன. ஆனால் சிறு தெய்வங்களுக்கு மட்டும் எட்டு கைகள் மட்டும் அமைக்கப்படுகின்றன. ஜைன சமயத்துச் சிறு தெய்வங்களாகிய பிரமயக்ஷன், ஜீவாலாமாலினி முதலியவர்களுக்கு நான்கு, எட்டுக் கைகள் உள்ளன.

நான்குமதங்களிலும் பெரிய சிறிய தெய்வங்கள் : சைவ, வைணவ சமயங்களின் பெரிய தெய்வங்களுக்கு நான்கு கைகளும் சிறு தெய்வங்களுக்கு இரண்டு கைகளும் நான்கு கைகளும் சிற்ப உருவத்தில் அமைக்கப்படுகின்றன. இதற்கு நேர்மாறாகச் சமண பௌத்த சமயங்களில் பெரிய தெய்வங்களுக்கு இரண்டு கைகளும், சிறு தெய்வங்களுக்கு நான்கு கைகளும் சிற்ப உருவத்தில் அமைக்கப்படகின்றன. சைவ, வைணவ சமயத்தவர் இந்திரனை சிவன், திருமாலுக்குக் கீழ்ப்படுத்திக்காட்ட சிற்ப உருவத்தில் இந்திரன் இரண்டு கைகளுடன் அமைக்கப்படுகிறான். மாறாக புத்தருக்கும் ஜீனனுக்கும் கீழ்ப்பட்டவன் எனக்காட்ட நான்கு கைகள் இந்திரனுக்கு அமைந்துள்ளனர் பௌத்தரும் சமணரும்.

சிவன்திருமால் உருவங்களின் தத்துவம் : சைவர் வணங்கும் சிவனும் வைணவர் வணங்கும் திருமாலும் உருவம் இல்லாத கடவுள்கள். உருவம் இல்லாத இந்தக் கடவுளர்க்கு உருவத்தை பண்டைக் காலப் பெரியோர்கள் கற்பித்தார்கள். எல்லாப் பிறப்புக்களிலும் மனிதப்பிறப்பே பல வகையிலும் சிறந்து காணப்படுகிறபடியால் கடவுளுக்கு உருவத்தைக் கற்பனை செய்தபோது, அவருக்கு மனித உடம்பையே கற்பித்தார்கள். மனித உடம்பைக் கற்பித்த போதிலும் கடவுள் ஆகாயத்தையே உடலாகக் கொண்டவர் என்றும், திசைகளையே கைகளாக உடையவர் என்றும் கற்பனை செய்தார்கள். இதற்குச் சைவ, வைணவ நூல்களே சான்று கூறுகின்றன.

சிவபெருமானுக்கு உடம்பாக இருப்பது ஆகாசம் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. ஆகாசமாம் உடல் என்று திருமந்திரம் கூறுகிறது. விசும்பே உடம்பு என்று சேரமான் பெருமாள் தமது பொன்வண்ணத்தந்தாதியில் (19) கூறுகிறார்.

"விண்ணவர் முதலா வேறோர் இடமாகக்
கொண்டுறை விசும்பே, கோல நின் ஆகம்"

என்று பட்டினத்துப்பிள்ளையார் தமது ஒருபா ஒருபஃதில் கூறுகிறார். திருமாலின் திருவுருவத்தையும் இவ்வாறே மிக அழகாகப் பாடுகிறார் நற்றிணைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார்.

சிற்ப–ஓவியக்கலை ஆய்வோர் அறிய வேண்டுவன : சைவ வைணவ பௌத்த சமண சமயங்களில் சிற்ப உருவங்களிலும் ஓவியப்படங்களிலும் இத்தகைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. நமது நாட்டுச் சிற்பக் கலை ஓவியக்கலைகளை ஆராய்வோர் இவற்றையெல்லாம் அறிய வேண்டும். நமது நாட்டில் கணக்கற்ற சைவ வைணவ பௌத்த ஜைன உருவச்சிலைகள் கல்லிலும் செம்பிலும் அமைக்கப்பட்டுள்ளன. அவை அங்கங்கே பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. அவற்றைக் காணும்போது நமது உள்ளத்திலே ஏதேதோ உணர்ச்சிகளை ஊட்டுகின்றன. சிற்பக்கலைச் செல்வங்களைப் பொன்னை போல் போற்றிப் பாதுகாக்க வேண்டும் உடைந்துபோன அல்லது சிதைந்து போன சிற்பங்களாக இருந்தாலும் அவற்றைப் போற்றிவைக்க வேண்டும்.

சிற்பக்கலை சிறந்தகலை :– சிற்பக்கலை சிறந்த அழகுக்கலை; அழகிய நுண்கலை. ஏனைய அழகுக்கலைகள் உள்ளத்திற்கு உணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஊட்டுவது போலவே இந்தச் சிற்பக்கலையும் உணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் அளிக்க வல்லது. சிற்ப உருவங்களில் கலையின்பத்தைக் காணலாம். நம் முன்னோர் வளர்த்த சிற்பக் கலையை நாம் கைவிடுவது பேதைமைத்தனமாகும். இந்தக் கலைச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். எத்தனையோ இடங்களில் எத்தனையோ சிற்ப உருவங்களைக் காண்கிறோம், எல்லாச் சிற்பங்களும் கலையழகு உள்ளவற்றையும் அல்லாதவற்றையும் ஆராய்ந்து அறிய வேண்டும்.

III இலக்கிய வரலாறு

1. சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

"நற்றிணை நல்லகுறுந் தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத் (து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோ (டு) அகம்புறமென் (று)
இத்திறத்த எட்டுத் தொகை "

என்பது ஒரு பழம்பாடல். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, ஆகியவை எட்டுத் தொகை நூல்கள் என்பதை இப்பாடலால் நாம் அறிகிறோம். இந் நூல்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பல்வேறு சூழ்நிலைகளில் பாடப்பெற்றவை. இவை பிற்காலப் புலவர்களால் தொகுக்கப்பெற்ற காரணத்தால் தொகை நூல்கள் என்று அழைக்கப்பெறுகின்றன.

இவற்றுள் புறநாநூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டும் புறப்பொருள் பற்றியன. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் ஐந்தும் அகப்பொருள் பற்றியன. பரிபாடல் அகம், புறம் ஆகிய இரண்டையும் பேசும். இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்னும் ஆறுநூல்களும் ஆசிரியப்பாவால் ஆனவை. கலித்தொகைச் செய்யுள்கள் பரிபாடல் என்னும் பாட்டுவகையினால் ஆனவை.

1. ஐங்குறுநூறு : இதன் பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையும், ஆறடிப்பேரெல்லையும் கொண்டவை. இது மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்து திணைகளுக்கும் வகைக்கு நூறாக ஐந்நூறு பாடல்களைக் கொண்டது. இவை அவ்வத்திணையின் ஒழுக்கம் பற்றியவை. ஓரம்போகியார் மருதத்திணை பற்றிய பாடல்களையும், அம்மூவனார் நெய்தல் திணை பற்றிய பாடல்களையும், கபிலர் குறிஞ்சித்திணை பற்றிய பாடல்களையும், ஓதல் ஆந்தையார் பாலைத்திணை பற்றிய பாடல்களையும், கபிலர் குறிஞ்சித்திணை பற்றிய பாடல்களையும், பேயனார் முல்லைத் திணை பற்றிய பாடல்களையும் பாடியுள்ளனர்.

"மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன்–கருதி
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓது ஐங்குறுநூறு "

என்ற தனிப்பாடல் மூலம் அதனைப் பாடியவர்களை நாம் நினைவு கொள்ளலாம்.

நூலுக்குப் புறம்பாகவுள்ள கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். ஒவ்வொரு நூறும் பத்துப்பத்துப் பாடல்களடங்கிய பத்துத் தொகுதிகளையுடையது. இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் என்றும், தொகுப்பித்தவர் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்றும் நூல் இறுதியிலுள்ள பழங்குறிப்பினால் அறிந்து கொள்கிறோம்.

யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் இறப்பைப் பற்றிக் கூடலூர்கிழார் என்னும் புலவர் வருந்திப்பாடிய பாடல் ஒன்று (229) புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. இதிலிருந்து புறநானூறு தொகுக்கப் பெறுவதற்கு முன்பாகவே ஐங்குறுநூறு தொகுக்கப் பெற்றிருக்க வேண்டும் என்று அறிகிறோம்.

ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணைக்கும் பத்துப்பத்துப் பாட்டுக்கள் கொண்ட பத்துப்பிரிவுகள் உள்ளன.

மருதத் திணை : வேட்கைப்பத்து, வேழப்பத்து, கள்வன்பத்து, தோழிக்குரைத்தபத்து, புலவிப்த்து, தோழிகூற்றுப்பத்து, கிழத்திகூற்றுப்பத்து, புனலாட்டுப்பத்து, புலவிவிராயபத்து, எருமைப்பத்து, எனப் பத்துப் பகுதிகளைக் கொண்டு மருதத்திணை திகழ்கிறது. தலைவன் பரத்தையிற் பிரியாது இல்லறத்தை இனிதே நடத்தவேண்டும் என்னும் வேட்கையைத் தோழி தலைவனுக்குத் தெரிவித்தமை முதல் பத்தில் கூறப்பட்டுள்ளது. இதுபோல் ஒவ்வொரு திணையிலும் பத்துப் பிரிவுகள் வந்து இந்நூலை அழகுபடுத்துகின்றன.

நெய்தல் திணை : தாய்க்குரைத்தபத்து. தோழிக்குரைத்தபத்து, கிழவற்குரைத்தபத்து, பாணர்க்குரைத்தபத்து, ஞாழற்பத்து, வெள்ளாங்குருகுப்பத்து, சிறுவெண்காக்கைப் பத்து, தொண்டிப்பத்து, நெய்தற்பத்து, வளைப்பத்து ஆகிய பத்துப்பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன.

குறிஞ்சித் திணை: அன்னாய்வாழிப்பத்து, அன்னாய்ப்பத்து, அம்மவாழிப்பத்து, தெய்யோப்பத்து, வெறிப்பத்து, குன்றக்குறவன்பத்து, கேழற்பத்து, குரக்குப்பத்து, பிள்ளைப்பத்து, மஞ்ஞைப்பத்து ஆகிய பத்துப் பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன.

பாலைத் திணை: செலவழுங்குவித்தபத்து, செலவுப்பத்து, இடைச்சுரப்பத்து, தலைவி பிரங்குப்பத்து இளவேனிற்பத்து, வரவுரைத்தப்பத்து, முன்னிலைப்பத்து, மகட் போக்கிய வழித்தாய் இரங்குபத்து, உடன்போக்கின்கண் இடைச்சுரத்து உரைத்த பத்து, மறுதரவுப்பத்து ஆகிய பத்துப்பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன.

முல்லைத் திணை: செவிலிகூற்றுப்பத்து, கிழவன் பருவம் பாராட்டுப்பத்து, விரவுப்பத்து, புறவணிப்பத்து, பாசறைப்பத்து, பருவங்கண்டுகிழத்தியுரைத்தபத்து, தோழி வற்புறுத்தபத்து, பாணன்பத்து, தேர்வியங்கொண்டபத்து, வரவுச் சிறப்புரைத்தபத்து ஆகிய பத்துப்பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன.

பாடல்களால் அறியப்படும் சிறப்புச் செய்திகள் :

ஐங்குறுநூற்றுப் பாடல்களினால் ஆதன் அவினி, கடுமான் கிள்ளி, தேர்வண்கோமான், கொற்கைக் கோமான் முதலிய மன்னர்களைப்பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். தொண்டி, கொற்கை, ஆமூர் முதலிய ஊர்களைப்பற்றியும் இவ்விலக்கியம் பேசுகிறது.

மன்னரும் அமைச்சரும் போர் புரியத் தங்கியிருக்கும் இடம் பாசறை என்றும், வீரர்கள் தங்கியிருக்கும் இடம் பாடி என்றும், புதிதாக வீரர்கள் ஆக்கிக் கொண்ட ஊர் கட்டூர் என்றும் ஐங்குறுநூற்றுப் பாடல்களால் அறிந்து கொள்கிறோம். குறிஞ்சி நிலத்தில் முருகனை வழிபட்டனர். உண்ணுகின்ற நீர்த்துறையில் தெய்வம் உறையும் என்று மக்கள் நம்பினர்; அது வெகுண்டால் மக்களுக்கு நோய் செய்யும் எனவும் நம்பினர்; ஊழ் வினையிலும் தவம் நோன்பு ஆகியவை இயற்றுவதிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். தைத்திங்களில் இளமகளிர் நீராடி நோற்பது வழக்கம். மக்கள் இந்திரனுக்கு விழாவெடுத்தனர்.

குறிஞ்சி நிலவீடுகள் புல்லால் வேயப்பட்டிருந்தன என்பதும், ஊரைச் சேர்ந்திருப்பது சேரி என்பதும், நூறாயிரம் என்னும் எண்ணுக்கு மேலாகத் தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்கள் வழக்கிலிருந்தன என்பதும், பகல் பன்னிரண்டு மணியிலிருந்து நாளைக் கணக்கிட்டனர் என்பதும் இந்நூற்பாடல்களால் தெரியவருகின்றன.

உள்ளுறை, உவமை, இறைச்சி முதலிய நலங்களெல்லாம் புலப்படப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. நயமிக்க பாடல்களும் இத்தொகுப்பு நூலில் மிகுந்துவரக் காணலாம்.

"அம்ம வாழி தோழி, நம்வயின்
மெய்யுற விரும்பிய கைகவர் முயக்கினும்
இனிய மன்ற தாமே
பனியிருங் குன்றஞ் சென்றோர்க்குப் பொருளே "

(ஐங்குறு. 337)

என்பது ஒரு நயமான பாடல். அந்தணர்களை மக்கள் போற்றி வந்தனர்.

"அறம்புரி அருமறை நவின்ற நாவின்
திறம்புரி கொள்கை அந்தணீர் தொழுவல் "

(ஐங்குறு. 387)

என்ற பகுதி இதற்கு எடுத்துக்காட்டாகும். ஐங்குறு நூற்றுப்பாடல்களில் வடசொற்கள் குறைவாகவே வந்துள்ளன.

குடிமக்கள், நாடுகாவல் பொருட்டு அரசனை வாழ்த்துதல் மரபாயிருந்தது. கரை உடைந்து ஊருக்குத் தீமை விளையாதிருக்கக் குளங்களில் காவலர்களை நிறுத்தினர். தினைப் பயிரை அழிக்க முடியாதபடி புலி போன்ற உருவங்கள் அமைத்துக்குறவர்கள் தினைப்புனத்தைக் காத்தனர். தலைவன் தன் மகனுக்குத்தந்தையின் பெயரையிட்டு அழைத்தனன். மகளிர்க்கு இடக்கண் துடித்தல் நல்ல அறிகுறியாகக் கருதப்பட்டது. பெண்கள் பந்தும் பாவையும் கழங்கும் ஆடினர். வண்டல் மண்ணைக் கொண்டு பாலை செய்து விளையாடினர் சிறுமியர்.

தலைவனது நினைவையே தலைவி எண்ணியுள்ளாள் என்ற நிலைமையைத் தோழி உணர்த்தியதன் மூலம் தலைவியின் கற்புநிலை புலனாகின்றது. இக்கருத்தை

"வாழி ஆதன் வாழி அவினி
விளைக வயலே வருக இரவலர்
எனவேட் டோளே யாயே யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்டுரை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க எனவேட் டேமே " (ஐங்குறு–2)

என்ற பாடலால் அறியலாம்.

2. குறுந்தொகை : இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது. (இன்று 402 பாடல்கள் காணப்படுகின்றன. இரண்டு 9 அடிப் பாடல்களாக உள்ளன). இது நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடையது. பாரதம் பாடிய பெருந்தேவனார், இதன் கடவுள் வாழ்த்துச் செய்யுளைப் பாடியுள்ளார். இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ என்பவர்; தொகுப்பித்தவர் இன்னார் என்பது தெரியவில்லை. இந்நூற் பாடல்களை இருநூற்று ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர். இதன் முந்நூற்று எண்பது பாடல்களுக்குப் பேராசிரியர் உரையும் ஏனைய இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரையும் இருந்தன எனத் தெரிகின்றது. ஆயின் அவை இப்போது கிடைக்கவில்லை. உரிப்பொருட்கே சிறப்பிடம் நல்கப்படுமாற்றைக் காணலாம் என்பர் வ. சுப. மாணிக்கம்.

சிறப்புச் செய்திகள் : படைத் தலைவருள் சிறந்தவர், 'ஏனாதி' எனப்பட்டார். நாணயங்களைப் பரிசோதித்த அரசாங்க அலுவலன் 'வண்ணக்கன்' எனப்பட்டான். 'தேவகுலம்' என்பது

கோவிலைக்குறித்தது. அரசியலில் சிறந்த அறிஞனாக விளங்கியவன் 'முதுகண்ணன்' எனப்பட்டான். அந்தணர்களுடைய தெரு 'ஆசில் தெரு' எனப்பட்டது. ஊர்மக்கள் கூடிப்பேச மன்றங்கள் இருந்தன. வீடு கட்டும் தொழிலாளர் கொற்றனார்' எனப்பட்டனர். சங்கப்புலவருள் பெண் பாற்புலவர்களும் இடம் பெற்றிருந்தனர். அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஓக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார் மதுரை நல்வெள்ளியார், வெள்ளி வீதியார் முதலியோர் அவர்களிற் சில்ர்.

பெரும்பூண் பொறையன், திண்டேர்ப் பொறையன் முதலிய சேர மன்னர்களைப் பற்றியும் வளங்கெழுசோழன், பசும்பூண் பாண்டியன் முதலிய சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றியும் பாடல்கள் இதில் காணப்படுகின்றன.

எவ்வி, நன்னன், எழினி, ஆய், அஞ்சி, ஓரி, பாரி, மலையன், நள்ளி, அழிசி, அகுதை, விச்சிக்கோ முதலிய சிற்றரசர்கள் பற்றியும் இதன் பாடல்கள் கூறுகின்றன. உறையூர், தொண்டி, முள்ளூர், குறும்பூர், ஆர்க்காடு முதலிய ஊர்கள் பற்றியும் இதில் பேசப்படுகின்றன.

குறிஞ்சி நிலத்தில் குறவன் மரங்களை வெட்டி நிலத்தைப் பண்படுத்தி உழுது பயிரிடுவான்; தினை அறுவடையானவுடன் மீண்டும் தினை விதைப்பான்; உயர்ந்த பரண் மீதிருந்து தினைப்புனத்தைக் காப்பான்; உயர்ந்த பரணிலிருந்தமையால் அவன் 'சேணன்' எனப்பட்டான். கொல்லி மலையின் ஒரு பகுதியில் செதுக்கப்பட்ட பாவை 'கொல்லிப்பாவை' என வழங்கப்பட்டது. மகளிரின் தோள்மீதும், மார்புமீதும், சந்தனக் குழம்பு கொண்டு வரிக்கோலம் எழுதப்பட்டது. கூத்தர் 'துணங்கை' முதலிய கூத்துக்களை ஆடினர். சுவர்க்கம், 'பெரும்பேருலகம்' எனப்பட்டது. கடவுள் என்ற சொல் முனிவர் என்ற பொருளிலும் வழங்கிற்று. உயிர்களை உடலிலிருந்து பிரிப்பவன் 'கூற்றம்' எனப்பட்டான். நாழிகைக் கணக்கர்கள் இரவில் தூக்கம் கொள்ளாமல் காலக்கணக்கை ஆராய்ந்து அறிவித்தனர்.

மறு பிறவியிலும், தான் தன் கணவனையே அடைய வேண்டும் என்று தலைவி விரும்பினாள்,

"இம்மை மாறி, மறுமை ஆயினும்
நீயா கியர்எம் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே" (குறுந். 49)

"வினையே ஆடவர்க்கு உயிரேவாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" (குறுந். 135)

"நல்கின் வாழும் நல்கூர்ந் தோர்வயின்
நயனிலர் ஆகுதல்நன்று" (குறுந். 327)

என்பன நயம்செறிந்து, தமிழர் பண்பாட்டினைச் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

"சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங் (கு) இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந். 18)

"செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாம்கலந் தனவே" (குறுந் 40)

"ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற்கு அரிதே" (குறுந் 58)

"கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே" (குறுந் 290)

என்பன போன்ற தொடர்களில் உள்ள சிறந்த உவமங்கள் மகிழ்வூட்டுவன.

கரும்பினது தோகை சூல் பசும்பாம்பு போன்றும், கல்குழியில் கொன்றை மலர் வீழ்ந்திருத்தல் பொன் பெட்டியைத் திறந்து வைத்தாற் போலவும், காந்தள் பூவிலிருக்கும் வண்டு பாம்பின் மணி போலவும் கொன்றைக்காய் மகளிர் கூந்தல் போலவும் இருப்பதாக இந்நூலில் உவமிக்கப்பட்டுள்ளன.

ஆவின் கழுத்தில் மணி அணிதல், மகளிர் வண்டல் அயர்தல், சிறு பிள்ளைகள் சிறு தேர் உருட்டல், குற மகளிர் குறி சொல்லுதல், வண்ணாத்தி கஞ்சிப் பசை போடுதல், குயில் மூங்கிலில் தங்குதல், சூல் கொண்ட மகளிர் புளிப்பை விரும்புதல், கிளி வேப்பம் பழத்தைத் தின்னுதல், யானை, வாழைத்தண்டால் மதம் அழிதல், துயரத்தால் வரும் கண்ணீர் வெப்பம் உடைத்தாதல், அன்றில் பறவை பனை மடலில் கூடு கட்டுதல், வாளை மீனுக்குக் கொம்பிருத்தல் முதலிய செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

இந்நூல் பாடல்களில் இயற்பெயரும் சிறப்பும், பெயரும் ஒருங்கே அமையப் பெற்ற புலவர்களாக ஐந்து புலவர்களும், உவமை நயத்தால் பெயர் பெற்றவர்களாகப் பதினெண்மரும் காணப்படுகிறார்கள். பரணர் பாடிய பாடல்களல் அரிய வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

3. நற்றிணை : இது ஒன்பதடிச் சிற்றெல்லையும், பன்னிரண்டடிப் பேரெல்லையும் கொண்டது; நானூறு பாடல்கள் அடங்கிய தொகை நூல். இதில் 275 புலவர்களின் பாடல்கள் அமைந்துள்ளன. இதனைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி; தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. அளவாய் அமைந்த பாடல்களைக் கொண்டதாதலின் 'நல்' என்ற அடைமொழி பெற்றது. பாடல் தொடரால் பெயர் பெற்ற நற்றிணைப் புலவர்கள் எழுவராவர். அவர்கள் வண்ணப்புறக் கந்தரத்தனார், மறையனார், தனிமகனார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார் தேய்புரிப் பழங்கயிற்றினார், மடல் பாடிய மாதங்கீரனார் ஆவர்.

சிறப்புச் செய்திகள்: மன்னன், பெருவணிகருக்குக் 'காவிதிப்' பட்டம் வழங்கினான். பல நாடுகளிலிருந்த கப்பல்கள் வந்த துறைமுகத்தில் தங்குவது வழக்கம். கடைத்தெரு 'நியமம் ' எனப்பட்டது. உப்பு வணிகர்கள் உப்பை விற்று நெல்லைப் பெற்றனர். எனவே பண்டமாற்று முறை இருந்தது என அறிகிறோம். சோதிடம் பார்த்தவர் 'கணியர்' எனப்பட்டனர். மருத்துவர் ' அறவோர் எனப்பட்டனர். குறிஞ்சி நில ஊர்களில் ஊர்க்காவல் இருந்தது. தகுதியுடையவரது ஊரையும் பெயரையும் ஏட்டில் எழுதி ஊர்ப் பொது மன்றத்தில் வைத்திருப்பது வழக்கம். பரதவர் வீடுகள், பனை ஓலைகளாலும் இலைகளாலும் வேயப்பட்டன. தொண்டி, கொற்கை, கிடங்கில் ஆர்க்காடு, மருங்கூர்ப்பட்டினம், முள்ளூர், குடந்தைவாயில், வெண்ணி முதலிய ஊர்கள் இப்பாடல்களால் குறிக்கப்படுகின்றன. தைந்நீராடல் இந்நூலில் கூறப்படுகிறது. நீண்ட சடையையுடைய முனிவர்கள் அக்காலத்திலிருந்தனர். கடற்கரையில் மகளிர் தங்கியிருந்து நோன்பு இயற்றுவது வழக்கம்; அவர்கள் 'படிவமகளிர் ' எனப்பட்டனர்.

தேர் உருளையில் நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடி தேரைச் செலுத்தினான் வளவன். இது அவனுடைய அருளுணர்ச்சியைக் காட்டுகிறது. செல்வம் நிலையாத பொருள் என்பதையும் இன்பமும் இளமையும் விரைவில் கழிவன என்பதையும் மக்கள் அறிந்திருந்தனர்; இரவில் விருந்தினர் வரினும் மக்கள் அவர்களை உவகையோடு உபசரித்தனர்.

"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாம் அறிந்த உணர்க என்பமாதோ " (நற். 116)

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வஞ் செல்வமென் பதுவே"

(நற். 210)

முதலிய செய்யுள்கள் தமிழர் பண்பாட்டை இனிது விளக்குகின்றன.

உயிர்வாழ்க்கைக்கு நீர் எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு தலைவி உயிருடன் இயங்குவதற்குத் தலைவனின் காதல் நெஞ்சம் இன்றியமையாததாகும் என்ற பொருள்பட,

"நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நம்நயந் தருளி " (நற் 1)

என்ற தொடர் அமைந்துள்ளது.

"கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கியுடன் வீழ்பு
பலர்கொள் பலகை போல " (நற். 30)

"இசைபட வாழ்பவர் செல்வம் போலக்
காண்தொறும் பொலியும் கதழ்வாய் வேழம் " (நற். 217)

"ஒளிறேந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவதுகொ ல்என் வருந்திய உடம்பே " (நற். 284)

இவை உவமை நயத்திற்கு எடத்துக்காட்டுகள். நற்றிணைப் பாடல்களில் சாபம், தாமம், அச்சிரம் என்பன போன்ற சில வடசொற்கள் விரவி வருகின்றன.

உணர்ச்சிக்கு இன்பம் பயக்கும் எண்வகைச் சுவைகளும் பல பாடல்களில் காணப்படுகின்றன. சில புலவர்களுக்கு அவர்கள் செய்யுளில் கண்ட சிறந்த சொற்றொடர்கள் அவர்களுக்குரிய பெயர்களின் அடைமொழிகளாக அமைந்துள்ளன.

நற்றிணை 24–ஆவது பாடலில், துள்ளி ஓடும் புள்ளிமானை 'விழிக்கட்பேதை' என்றமையால், அச்செய்யுளை இயற்றிய புலவர் 'விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் ' என்று அழைக்கப்பட்டார். இரண்டு யானைகளால் இரண்டு பக்கமும் இழுக்கப்பட்ட பழங்கயிற்றைப் போலத் தமது உடம்பு வருந்தி அழியும் என்று பாடிய புலவருக்குத் தேய்புரிப் பழங்கயிற்றினார் ' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. புறாவினை 'வண்ணப்புறவு' என்று பாடியமையால் 'வண்ணப் புறக்கந்தரத்தனார் ' என்று மற்றொரு புலவர் பெயர் பெற்றார்.

இந்நூலில் குருகு, கிள்ளை, நாரை ஆகியவற்றைத் தூதுவிடுத்த செய்தியும் காணப்படுகிறது.

இல்லறத்தின் சிறப்பு, மழலைச் செல்வத்தின் மாண்பு, பிரிவு பொறாத பெருங்காதல் தன்மை ஆகியவை கீழ்க்காணும் பாடலில் பொதிந்து காணப்படுகின்றன.

"செல்க பாகநின் செய்வினை நெடுந்தேர்
விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்
– — — — — — — —
பூங்கண் புதல்வன் உறங்குவயின் ஓல்கி
வந்தீக எந்தை என்னும்
அந்தீம் கிளவி கேட்கம் நாமே" (நற் 221)

4. அகநானூறு : இது, பதிமூன்றடிச் சிற்றெல்லையும், முப்பத்தோரடிப் பேரெல்லையும் உடைய நானூறு பாக்களையுடையது. அகம் என்ற பெயரமைந்த பழைய இலக்கிய நூல் இஃது ஒன்றே. இதற்கு நெடுந்தொகை என்ற பெயருமுண்டு. இதனைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி; தொகுத்தவன் மதுரை உப்பூரிகுடி கிழான் மகன் உருத்திரசன்மன். இதன் கண்ணுள்ள முதல் நூற்றிருபது பாடல்கள் களிற்றியானை நிரை எனவும் நூற்றிருப்பத்தொன்று முதல் முந்நூறு வரையுள்ளவை மணிமிடை பவளம் எனவும் இறுதி நூறு நித்திலக்கோவை எனவும் பெயர் பெற்றுள்ளன. இந்நூலில் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 158. இவர்களில் மூவர் பெயர் தெரியவில்லை.

இந்நூலில் ஐந்திணை பற்றிய பாடல்களின் வைப்பு முறை நோக்கற்பாலது. ஒற்றைப்படை எண்ணுள்ள பாடல்கள் பாலைத்திணையைச் சார்ந்தவை. இறுதியில் பத்தாம் எண் பெற்றுவரும் பாடல்கள் நெய்தல் பற்றியவை, நான்கு என்ற எண் பெற்று வரபவை முல்லை; இரண்டும் எட்டும் பெற்று வருபவை குறிஞ்சி; ஆறு என்னும் எண்களைப் பெற்று வருபவை மருதம். இந்நூலில் குறிஞ்சி பற்றிய பாடல்கள் எண்பது; பாலை பற்றியவை இருநூறு; முல்லை பற்றியவை நாற்பது; மருதம் பற்றியவை நாற்பது; நெய்தல் பற்றியவை நாற்பது. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு.

சிறப்புச் செய்திகள்: இந்நூலில் உதியன் சேரல், உதியன் சேரலாதன், குட்டுவன், வானவன் முதலிய சேர மன்னர்கள் பற்றியும், தித்தன், கரிகாலன், கிள்ளிவளவன் முதலிய சோழ மன்னர்கள் பற்றியும், பசும்பூண் பாண்டியன், பழையன், மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் முதலிய பாண்டிய மன்னர்கள் பற்றியும், வேள் ஆவி, காரி, எழினி எருமையூரன் இருங்கோவேண்மான், பொருநன், நன்னன், அத்தி, பழையன், கணையன் பண்ணன், வேள் ஆய், அகுதை, பிட்டன் முதலிய சிற்றரசர்கள் பற்றியும் குறப்புக்கள் வருகின்றன.

ஊர்மன்ற உறுப்பினர்கள் ஊர்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டமையும் ஊர்மன்றத்தார் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கியமையும் இந்நூலால் அறியப்படுகின்றன. சோழரது தலைநகரான உறையூரில் அறங்கூறு அவையம் இருந்தமை தெரிகிறது. தமிழக ஆட்சியில் ஒற்றர்களும் தூதுவர்களும் இருந்தனர். அகநானூற்றுப் பாடல்கள் இரண்டு, சங்க காலத்துத் தமிழரின் திருமணத்தைப் பற்றி எடுத்துச் சொல்கின்றன. அகநானூற்றுப் பாடல்கள் ஐவகை நிலங்களின் இயற்கைத் தோற்றங்களை அழகுற எடுத்துச் காட்டுகின்றன. ஐவகை நிலத்து மக்களின் ஒழுக்கங்களைச் சுவைபடக் கூறுகின்றன.

மதுரையடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகன் திருக்கோவில் இருந்தது. திருப்பரங்குன்றத்தில் ஓய்வில்லாமல் விழாக்கள் நடந்தன. மதுரையில், மலையையொத்த உயர்ந்த கோவில் இருந்தது. ஒவ்வோர் ஊரிலும் பொதியில் (பொதுமன்றம்) இருந்தது பொதியில் 'கந்து' என வழிபடுதற்குரிய மரத்தூண் அமைந்திருந்தது. சங்ககாலத் தமிழர் தம் பிள்ளைகளுக்குத் தாலி அணிவித்தனர். அதில் திருமாலின் ஐந்து படைகளின் உருவங்களை அமைத்திருந்தனர். அதனை

"ஐம்படைத்" தாலி எனவும் அழைத்தனர். உயர்ந்த மலைகள் மீது கார்த்திகை விழாவிற்கு விளக்கிட்டனர். பந்தாடுதல், கழங்காடுதல் முதலிய விளையாட்டுகளில் மகளிர் ஈடுபட்டனர். அக்காலத்துக் காதல் மாண்பை,

"யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரி(வு) அரியோளே" (அகம் 339)

என்ற அடிகளால் அறியலாம்.

"கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்" (அகம் 112)

என்ற பாடல், களவு மணம் கற்பு மணத்திற்கு அடிகோல வேண்டும் என்று கூறுகிறது. தமிழர் பண்பாட்டை விளக்க வல்ல இத்தகைய பாடல்கள் இந்நூலில் மிகுதி. அகநானூற்றுப் பாடல்களில் பரணரும் மாமூலனாரும் பாடிய பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் மிகுதியாக உள்ளன.

"நந்தன் வெறுக்கை எய்தினும் மற்(று) அவண்
தங்கலர் வாழி தோழி" (அகம் 251)

எனவும்

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியம் கொல்லோ?" (அகம் 265)

எனவும் வரும் பாடல் அடிகள் நந்தர்பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றன இது போன்ற வரலாற்றுச் செய்திகள் அகநானூற்றில் மிகுதி.

இந்நூலில் கூறப்பட்டுள்ள உவமைகள் சிறப்பானவையாகும். கரையான் புற்றினைத் தோண்டியெடுக்கும் கரடியை இரும்பு செய் கொல்லனுக்கும், பன்றி மயிரைப் பனையின் செறும்பிற்கும், கோழியின் தூவியை முருங்கம் பூங்கொத்திற்கும், கார்மேகங்களைப் பெண் யானைகட்கும் கள்ளினுடைய காரத்தைப் பாம்பின் விடத்திற்கும், கொன்றைப் பூவைப் பொன் மாலைகளுக்கும், வானவில்லைக்கிளியின் கழுத்து வரிக்கும் உவமையாகக் கூறக் காணலாம்.

வெண்கல் உப்பிற்கு விலையாக நெல் வாங்குவதும், நடுகல்லை வழிபடுதலும், தெய்வங்களைத் தலை வணங்குவதும், புள் நிமித்தம் பார்ப்பதும், முருகனை வழிபடுதலும், பண்டை வழக்கங்களாகக் காணப்படுகின்றன. காட்டு நெல்லிக்காயைக் காழற்சிக் காயாகக் கொண்டு செம்முக மந்தி விளையாடுகவதும், வேங்கைப் பூவைப் பறிக்கம் பொழுத புலி புலி என்ற மகளிர் குரல் எழுப்புவதும், அந்த ஒலியைக்கேட்டுப் புலியை ஓட்டுவதற்கு ஆடவர் வில்லும் அம்பும் கொண்டுவந்து புலியைக் காணாமல் வெட்கிப் போவதும், தான் கொன்ற யானை இடப்பக்கம் வீழ்ந்ததால் மானத்தினால் புலி அந்த ஊனைத்தின்னாதிருப்பதும் முதலான செய்திகள் சுவை ததும்பப் புனைந்துரைக்கப்பட்டுள்ளன.

'ஊட்டியன்ன' என்ற சொற்றொடரைப் பாடலில் வழங்கியமையால் 'ஊட்டியார்' என்ற பெயரும், பிரிவு நோயைப் பாடியமையால் 'நோய் பாடியார்' என்ற பெயரும் பெற்ற புலவர்கள் இந்நூலில் உளர்.

5. கலித்தொகை: 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்று போற்றப்படும் கலித்தொகை 150 பாடல்களையுடையது. (பாலையில் 35, குறிஞ்சிக்கு 29, மருதத்தில் 35, முல்லைக்கு 17, நெய்தலில் 33, கடவுள் வாழ்த்து 1 ஆக 150) பாலைக் கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக்கலியைக் கபிலரும், மருதக்கலியை மருதன் இளநாகனாரும், முல்லைக் கலியைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தற்கலியை நல்லந்துவனும் பாடியுள்ளனர். ஆயின் ஆராய்ச்சியாளர் கலித்தொகை முழுவதும் இயற்றியவர் ஒருவராய்த்தான் இருத்தல் வேண்டும் என்பர்.

இந்நூற்பாடல்கள் கலிப்பாவினால் அமைந்தவை; இவற்றுள் சில எண்பது அடி நீளமும் உடையவை; தொல்காப்பியம் பொருளியலில் கூறியுள்ள பல விதிகட்கு இலக்கியமாக அமைந்தவை. எனவே ஏனைய அகத்திணை நூல்களிலும் மாறுபட்டுக் கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் இழிந்தோர் காதல் முதலியன பற்றிய பாடல்களையும் கொண்டு இந்நூல் விளங்குகிறது. இத்தன்மையாலும், புராணக் கதைகள் பல இந்நூலுள் கூறப்பட்டிருப்பதாலும் இது காலத்தால் மிகப் பிற்பட்டது என்பர்.

சிறப்புச் செய்திகள்: சங்கத்தைப் பற்றிய சிறப்பான செய்தியைப் பாலைக் கலிப்பாடல் ஒன்று தெரிவிக்கின்றது. புலவர், தம் செவியை வயலாகவும், சான்றோர் சொல்லை நீராகவும் கொண்டு தம் அறிவுடைய நாவாகிய கலப்பையால் உழுது உண்பவர் என்ற குறிப்பும் இதில் காணப்படுகிறது. (பாடல் 68) கலித்தொகைப் பாடல்களில் சில, பாண்டியனையே தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றிருக்கின்றன. இந்நூலில் பல அணிகலன்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. வயந்தகம், வல்லிகை, புல்லிகை, தெய்வஉத்தி, முத்துவடம், தொடி, மகரக்குழை, இழை, தெள்ளரிச்சிலம்பு முதலியன அவற்றுள் சில. முல்லைக் கலிப்பாடல்கள் வீரத்திற்குச் சிறப்பிடம் தருகின்றன. கொல்லேறு தழுவிய வீரர்களையே மணம்புரிய மங்கையர் விழைந்தனர். திருமால், பலராமன், சிவன், முருகன் ஆகிய நால்வரும் சிறப்புடைக் கடவுளராய் மதிக்கப் பெற்றனர். தைத்திங்கள் நோன்பு பற்றியக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

செல்வம் நிலையில்லாதது (பாடல் 8); இளமையும் காமமும் நாள்தோறும் கழியும் இயல்பின (பாடல் 12); நேர்மையற்ற முறையில் தேடும் பொருள் இம்மையிலும் மறுமையிலும் பகையாகும் (பாடல் 14); நிலையாமையை உணர்பவர் கொடைபுரிபவர் (பாடல் 32); மனித யாக்கை பெறுதற்கரியது (பாடல் 141); பொருள் இல்லாதார் நிகழ்த்தும் இல்லறம் இன்பம் தராது (பாடல் 148). மனித இனத்திற்குப் பொதுவான இன்னோரன்ன பல உண்மைகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

கலித்தொகைப் பாக்களில் திருக்குறள், அகநானூறு, சிலப்பதிகாரம் முதலிய சங்க கால நூல்களின் கருத்துக்களும், தொடர்களும் மிகுதியாகப் பயின்று வருகின்றன.

தலைவனுடன், தலைவி உடன்போக்குச் சென்றதை உணர்ந்த தாய் மிகவும் கலங்குகிறாள். அதையறிந்த அந்தணர் ஒருவர் அவளுக்கு ஆறுதல் கூறுகிறார். 'சந்தனம் மலையில் பிறக்கிறது. ஆனால், அது மலைக்குப் பயன் தராமல் பூசிக்கொள்ளும் மாந்தர்களுக்குப் பயன் தருகிறது. முத்து கடலிலே பிறக்கின்றது. ஆனால், அது கடலுக்குப் பயன் தராமல் அதை அணிபவருக்குப் பயன் தருகிறது. இசை யாழிலே பிறக்கின்றது. ஆனால், அது யாழிற்குப் பயன் தராமல் அதைக் கேட்பவருக்குப் பயன் தருகிறது. அது போல்தான் உன் மகளும் உன் வயிற்றில் பிறந்தாலும் அவள், தான் உற்ற காதலனுக்கே இறுதிவரை உயிர்போலத் திகழ்வாள்'என்ற கருத்தினை உணர்த்தும் பாட்டு மிகவும் சுவைதரக் கூடிய ஒன்றாகும்.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிற்பிபனும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவருக்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என் செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செயும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே " (கலி 9)

முல்லைக்கலியில் ஆயர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுகின்றன. ஆயர் மகளிரது கற்புடைமை

"அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணங் கூடுதல் இல்லியல் பன்றே " (கலி 114)

என்பதால் விளங்கும். உதவல், போற்றல், பண்பு, அன்பு முதலிவைபற்றி நெய்தற்கலி குறிப்பிடும் கருத்து சீரியதாகும்.

"ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறா அமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் " (கலி 133)

பாலைக்கலியில், ஒரே ஆடையை உடுத்துவாழும் வறிய நிலையில் இருந்தாலும் காதலரிருவர் அன்புடன் கூடிவாழ்தலே சிறந்தது என்ற கருத்து வரும் பாடல் சிறப்புமிக்க ஒன்றாகும்.

"ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோ ஒகை
ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை " (கலி 18)

6. பரிபாடல்: பரிபாடல் என்னும் இசைப் பாக்களால் தொகுக்கப் பெற்றமையால் இந்நூல் பரிபாடல் என்ற பெயர் பெற்றது. இப்பாடலுக்குப் பண்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. பரிபாடலின் சிற்றெல்லை இருபத்தைந்து அடிகள் என்றும், பேரெல்லை நானூறு அடிகள் என்றும் இலக்கணம் கூறும். இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தாரும் இன்னார் எனத் தெரியவில்லை. பாடலால் பெயர் பெற்ற இத்தொகையில் திருமால்–8; செவ்வேள் –31; காளி–1; வையை–26; மதுரை–4; ஆக 70 பாடல்கள் இருந்திருக்க வேண்டும். பரிபாடல் பாக்களில் இப்பொழுது நமக்குக் கிடைப்பன இருபத்திரண்டு பாடல்களே. இவற்றில் திருமால் பற்றியன எட்டு. ஆறு

முருகன் பற்றியன. எட்டு, வையை பற்றியன பரிபாடலில் அகம் புறம் ஆகிய இரண்டும் பறறிய பாடல்கள் கலந்திருக்கின்றன. வையை பற்றிய பாடல்களும் முருகன் பற்றிய பாடல்களில் சிலவும் அகம் பற்றியன; ஏனையவை புறம் பற்றியன.

பரிபாடலுக்கு, இசை வகுத்தோர் பதின்மர். மூலப் பொருளிலிருந்து ஆகாயமும், அதிலிருந்து காற்றும், அதிலிருந்து நெருப்பும், அதிலிருந்து நீரும், அதிலிருந்து நிலமும் தோன்றுவதற்குப் பல ஊழிகள் ஆயின என்பதும் ஞாயிறும் திங்களும் கெட்டவிடத்து விண்ணுலகும் மண்ணுலகும் மறைந்து ஒழியும் என்பதும் திருமால் பற்றிய பாடல்கள் மூலம் அறிகிறோம்.

பரங்குன்றில் வாழும் முருகனை வழிபடாத மகளிர் காதலரது அன்பைப் பெறார் எனவும், இனிய கணவரைப் பெறார் எனவும் இதில் கூறப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றத்தினைப் புலவர் யானையாக உருவகித்துள்ளார். புதுநீர் விழாவின் கொண்டாட்டம் வையை பற்றிய பாடல்களில் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. புதுநீர் வரும் பொழுது மக்கள் தமக்குரிய ஊர்திகளின் மேல் ஏறிச்சென்று பொன்மீன் முதலியன கொண்டு சென்று ஆற்றினுள் போடுவர். தெப்பம், ஓடம் முதலியவைகளில் ஏறி நீர் விளையாடுவர். வையையின் நீர்ப்பெருக்காகிய உதவிக்குப் பாண்டியனது கொடையைப் புலவர் உவமையாகக் கூறியுள்ளார்.

பதின்மூன்று புலவர்கள் இந்நூலின் பாக்களைப் பாடியுள்ளனர். ஒவ்வொரு பாடலுக்கும் இசை வகுத்தவர் வெவ்வேறு புலவராவார். பரிமேலழகர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். இந்நூலில் இருங்குன்றம், இருந்தையூர், தண்பரங்குன்றம் முதலிய ஊர்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. வையை தமிழ் வையை எனப்படுகிறது. தைந்நீராடல் 'அம்பா ஆடல்' எனக் குறிக்கப்படுகிறது. தண்பரங்குன்றத்து மலைமீது முருகன் திருக்கோவிலில் ஒரு மண்டபத்தில் பல ஓவியங்கள் வரையப் பட்டிருந்தன. பேரெண்களைக் குறிக்க நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. அடியவர்கள்,

"யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பன் ஓலிதா ரோயே " (பரிபாடல் 5)

என முருகப் பெருமானிடம் வேண்டினர்.

7. பதிற்றுப்பத்து : இது சேரவேந்தர் பதின்மரைப் பற்றியது; அகவற்பாக்களால் அமைந்தது; பத்துப் பகுதிகளைக் கொண்ட நூலாதலின் பதிற்றுப்பத்து என்ற பெயர் பெற்றது. இந்நூலுள் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பனவற்றைப் புலப்படுத்தும் குறிப்புகள் உள்ளன. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அதனைப் பாடியோர், பாடப்பட்ட மன்னன் அவன் செய்த அரும்பெரும் செயல்கள், புலவர்க்கு அவனளித்த பரிசில் முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

இரண்டாம்பத்து உதியன் சேரலாதனுக்கு மகனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றியது. அவனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடி உம்பற்காட்டைச் சேர்ந்த ஐந்நூறு ஊர்களைப் பிரமதேயமாகப் பெற்றார். தன் ஆட்சிக்குட்பட்ட நாட்டின் தென்பகுதி வருவாயில் முப்பத்தெட்டு ஆண்டுகள் பாகம் கொடுத்தான் மன்னன்; இமயம் வரை பகையிலனாகித் தமிழகம் விளங்கத் தனியாட்சி புரிந்தனன். கடல்மேற்சென்று கடம்பினை வெட்டிப் பகைவரை வென்றான்; பாவலர்களுக்குப் பாரிபோல் வழங்கினான்.

மூன்றாம்பத்து, பாலைக் கௌதமனார் பாடியது. நெடுஞ்சேரலாதன் தம்பியான பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பற்றியது. சேரன், புலவர் விருப்பப்படி பத்துப் பெருவேள்விகளைச் செய்து அவரையும் அவர் மனைவியையும் துறக்கம் புகுவித்தான்; அவன் பெரிய யானைப் படையை உடையவன்; உம்பற்காட்டில் தன் ஆட்சியை நிறுவினான்; அகப்பா என்ற அரணை அழித்தான்; ஆநிரைமிக்க கொங்கு நாட்டைக் கைக்கொண்டான்; உணவும் ஊன்கறியும் பெரிய பானைகளில் சமைத்து வந்தவர்க்கெல்லாம் வயிறார அளித்து மகிழ்ந்தான்.

நான்காம்பத்து, காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. நெடுஞ்சேரலாதன் மகனான களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைப் பற்றியது. சேரன் அவருக்கு நாற்பது நூறாயிரம் பொன் பரிசளித்தான். தன் நாட்டின் ஒரு பகுதியையும் அவர்க்குக் கொடுத்தான். சேரன் போர் பல கண்டவன்; பூழி நாட்டை அழித்தவன். நன்னனது காவல் மரத்தை வெட்டி அவனையும் அழித்தவன். இவனைக் கண்டு பகைவர் அஞ்சியோடுவர். இவன் பொறை மிக்கவன்.

ஐந்தாம்பத்து, நெடுஞ்சேரலாதன் மகனான செங்குட்டுவனைப் பரணர் பாடியது. சேரன் உம்பற்காட்டு வாரியை அவர்க்குக் கொடுத்தான். இவனே சிலப்பதிகாரச் செங்கட்டுவன். மோகூர்ப் பழையனை வென்று அவனது அடையாள மரமாகிய வேம்பினை வெட்டித் தனக்கு முரசம் செய்து கொண்டான். பகைவர் எழுவருடைய மணிமுடிப் பொன்னால் செய்த ஆரத்தையுடையவன் செங்குட்டுவன்.

ஆறாம்பத்து, நெடுஞ்சேரலாதன் மகனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது. பாடிய அவர் ஒன்பது காப்பொன்னும், நூறாயிரம் காணமும் பரிசிலாகப் பெற்றார். இவன் கலைஞர்க்கு மென்மையானவன்; ஆனால் பகைவர்க்கு வன்மையானவன். மகளிரது ஊடலாகிய சினத்தீ தன்னினும் பகைவரால் மக்களுக்கு ஏற்படும் துன்பம் கண்டு அஞ்சுபவன்; கூத்துக்கலை பயின்றவன்.

ஏழாம்பத்து, அந்துவஞ்சேரல் இரும்பொறைக்கு மகனான செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. அவர் நூறாயிரம் காணம் பொன்பரிசில் பெற்றார். சேரன், 'நன்றா' என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் அவர்க்கு வழங்கினான். அவன் பார்ப்பார்க்கு அஞ்சி ஒழுகுபவன்; பெரும்பொருள் வழங்கல், சொல் தவறாமை ஆகிய பண்புகள் அமைந்தவன்.

எட்டாம்பத்து, செல்வக்கடுங்கோ வாழியாதன் மகனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில் கிழார் பாடியது. ஒன்பது நூறாயிரம் காணமும் தன் அரசாட்சியும் அவர்க்குக் கொடுத்தவன். பெரிய யானைப்படை உடையவன். அதிகனைக் கொன்று தகடூரை அழித்தவன்.

ஒன்பதாம்பத்து, குட்டுவன் இரும்பொறைக்கு மகனான இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்க்கிழார் பாடியது. சேரன் அவர்க்கு முப்பதாயிரம் பொன் கொடுத்து ஓர் ஊரையும் மனையையும் வழங்கி அம்மனை நிறைய செல்வத்தையும் வழங்கினான்.

சிறப்புச் செய்திகள்: நான்காம்பத்து மட்டும் அந்நாதித் தொடையில் அமைந்திருக்கிறது. பதிற்றுப்பத்திற்குப் பழைய உரை ஒன்று உண்டு. இப்பாடல்களுள் சேர மன்னர் கொடைச் சிறப்பும் கடம்பர் முதலிய கடற் கொள்ளைக்காரர்களை வென்ற அவர்கள் வீரமும் கூறப்படுகின்றன. இது புறம் சார்ந்தது. இதனுள் வரும் உழிஞை அரவம், பெருஞ்சோற்றுநிலை, தும்பை, அரவம் காவல் முல்லை என்ற துறைப்பெயர்களால் இதனை அறியலாம். சேரமன்னரது வரலாற்றை மட்டுமன்றி அவர் காலத்து மக்கள் வாழ்வியலையும் நன்கு காட்டும் வரலாற்று நூல் என்று இந்நூலைப் பாராட்டலாம்.

8. புறநானூறு : எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு வரலாற்றுச் சிறப்புடையது. 157 புலவர்கள் பாடிய பாடல்களையுடையது; பல்வேறு ஊரில் பல்வேறு காலங்களில் பல்வேறு தொழில்கள் இயற்றி வந்த புலவர் பெருமக்கள் பாடிய பாடல்களின் தொகை இது; நாடுகள், நகரங்கள், ஊர்கள், மலைகள் பேரரசர், சிற்றரசர் குறுநில மன்னர், போர்கள், ஒழுக்கம், வீரம், கொடை, அறிவுரை முதலிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டது; வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற புறப்பொருள் கருத்துக்களைத் தழுவியது. இந்நூலைத் தமிழர் வாழ்வியலின் கண்ணாடி எனலாம். இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. பாரதப் பெரும் போரில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் இரு பக்கத்துப் படைகளுக்கும் சோறிட்டதாக முரஞ்சியூர் முடி நாகராயர் ஒரு பாடலில் தெரிவிக்கிறார்.

சிறப்புச் செய்திகள்: மன்னன் தன் நாடு முழுவதும் காவலர்களை வைத்திருந்தான். மன்னர், தம்மைப் பழித்தோரை வஞ்சினம் கூறிப் போரிட்டு வெல்வர். சோழர் தலைநகரான உறையூரில் அறங்கூறு அவையம் இருந்தது. புலவர்கள் பெருமித வாழ்வுடன் திகழ்ந்தனர். எடுத்துக்காட்டாக,

"முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பின் (று) ஈதல் யாம்வேண்டலமே (புறம். 205)

எனறு ஒரு புலவர் இறுமாந்து கூறியமை காணலாம். மன்னர் தவறு செய்த வழி இடித்துரைக்கும் பண்பினராய்ப் புலவர் இருந்தனர். கோவூர்கிழார் சோழர் இருவர்க்கிடையே நடைபெற இருந்த போரைத் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது. புலவர்கள் தமக்கென வாழாப்பெற்றியர். வீரர்கள் மார்பில் புண்பட்டு மடிவதையே விரும்பினர். போரில் இறந்த வீரர்களுக்குக் கல் நடப்படும். அக்கல்லில் அவருடைய பீடும் பெருமையும் பொறிக்கப்படும். மன்னர்கள் வேள்வி இயற்றுவித்தனர். சிவபெருமான், கண்ணன், பலதேவன், முருகன் ஆகிய தெய்வங்களை மக்கள் வழிபட்டனர். கல்வி கேள்விகளால் சிறந்த சான்றோர் போரில் ஈடுபட்டு வாழ்ந்த மன்னருக்கு வாழ்க்கை நிலையாமையை உணர்த்தித் துறவுள்ளம் கொள்ளச் செய்தனர்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே " (புறம் 168)

என்பது புலவர் ஒருவர் கூறிய அறிவுரை. அந்தணர்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கினர். அவர்களை,

"ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான் மறை முதல்வர் சுற்றம் ஆக" (புறம். 26)

என்று புலவர்கள் பாராட்டினர். அங்ஙனமே, அரசர்களை உயிராகக் கொண்டு போற்றியமை,

"நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்" (புறம். 186)

என்ற தொடரால் புலனாகின்றது.

அக்காலமக்கள் பயன்படுத்திய போர்க்கருவிகள், நகைகள், உடைகள், ஊர்திகள், மாலைகள் முதலியவற்றின் பெயர்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. சங்ககாலத் தமிழருடைய உழவு, கைத்தொழில், வாணிகம், பழக்கவழக்கங்கள் முதலியவற்றையும் இந்நூல் கூறுகிறது.

மன்னர்கள் குடிமக்களைப் பாதுக்காக்கும் பொறுப்புள்ள அரச மரபில் பிறப்பதைச் சிறப்பாகக் கருதினர். நல்லோரைப் போற்றித் தீயோரை ஒறுத்தனர்; ஒழுக்கத்தில் உயர்ந்து

விளங்கினார். புலவர்கள் வறுமையில் வாடினாலும் உயர்ந்த பண்பாட்டைப் பெற்றிருந்தனர். புலவர்கள் தம்முள் ஒருவரையொருவர் மதித்துப் போற்றினர்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் இருந்தனர். முடியுடைவேந்தர், சிற்றரசர், வீரர், செல்வர் அனைவரும் பைந்தமிழைப் பாங்குற வளர்த்தனர். தம்மை மறந்திருந்த வேந்தரையும் தம் தகுதி அறியாமல் சிறிது வழங்கிய மன்னரையும் பொருள் கொடாமல் காலந்தாழ்த்திய காவலரையும் புலவர்கள் கடிவது வழக்கம்.

தமிழ்நாட்டு வீரர் போர் என்றவுடன் பொருக்கென எழுவர். போர் புரியும் நாடு தொலைவில் இருப்பினும் அயராமல் சென்று அருஞ்சமர்புரிவர். அடிக்குங் கோலுக்கு அஞ்சாத பாம்பைப் போன்ற ஊக்கத்துடன் திகழ்வர். பெண்களும் தம் மைந்தர் போரில் மார்பில் புண் ஏற்று இறத்தலையே பெரிதும் விரும்பினர். மக்களுக்கு மறுமையின் மீது நம்பிக்கை இருந்தது. தெய்வத் திருவுருவங்கள் வழிபாட்டிற்குரியவை களாக மதிக்கப்பட்டன. உலகத்தை இறைவன் படைத்தான் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது. நல்லது செய்வோர் துறக்கம் பெறுவோர்; அல்லது செய்வோர் மாறிப் பிறப்போர் என்ற நம்பிக்கையும் இருந்தது.

பத்துப்பாட்டு: பத்துப்பாட்டின் செய்யுள் மிகுந்த அடிகளையுடையன. இப்பாடல்களில் பெரும்பாலும் ஆசிரியப்பாவே பயின்று வந்துள்ளது. இத்தொகுதியில் 103 அடி முதல் 782 அடிவரையுள்ள பாடல்களைக் காணலாம். பத்துப்பாட்டு நூல்கள் இன்னின்ன என்பதைப் பின்வரும் பாடல் கூறுகிறது.

"முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து "

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப்பாட்டு நூல்கள். இவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்ற மூன்றும் அகத்திணைக்குரியவை; ஆயின் நெடுநல்வாடையைக் குறித்து மாறுபட்ட கருத்துமுண்டு. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் ஐந்து. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பனவாகும். பத்துப்பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியார் அழகியதோர் உரை எழுதியுள்ளார், பத்துப்பாட்டின் சிறப்பு.

"ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து
சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபத்துப் பாட்டும் "

என நச்சினார்க்கினியரது உரைச் சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது. பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கு என்னும் தொடரில் பத்துப்பாட்டு முதற்கண் வைத்து எண்ணப்படுவதே இந்நூலின் பெருமையை விளக்குகிறது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை,

"பத்துப்பாட்(டு) ஆதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே "

என இதன் புகழைப் பாடுகிறார்.

நச்சினார்க்கினியர் மலைபடுகடாத்திற்கு எழுதிய உரையினால் சங்கப் புலவர்களே இந் நூலைத் தொகுத்தனர் எனத் தெரியவருகிறது. ஆயினும் கி.பி. 14–ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே இந்நூற்றொகுதிக்குப் பத்துப்பாட்டு என்னும் பெயர் வழங்கலாயிற்று எனக் கருதலாம்.

பத்துப்பாட்டே காவியங்கட்கு வித்து : எட்டுத்தொகைப் பாடல்களுக்கும் பத்துப்பாட்டுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. அளவில் நீண்டிருத்தலும், மிகுந்த இயற்கை வருணனை பெற்றிருத்தலும், பாட்டுடைத் தலைவனை வீர வழிபாட்டிற்குரியவனாகப் பாராட்டலும் பத்துப்பாட்டின் இயல்புகள் ஆகும். எட்டுத் தொகையிலே முகிழ்த்த கவிதை பத்துப்பாட்டிலே மலர்ந்து காவியங்களிலேகனிந்து நிற்கக் காண்கிறோம். ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாக ஏற்று அவனுடைய பண்பு, வீரம், கொடை, வெற்றிச் செய்திகள் ஆகியவற்றைப் பெருக்கக் கூறுதல், அவனுடைய நாடு, ஊர், மலை, ஆறு அரண் ஆகியவற்றை வருணித்தல், அவனது உறைவிடம் செல்லுதற்குரிய வழியை வருணித்தல் போன்ற பல அடிப்படைக் கூறுகளில் சிறு காவியம் போல் திகழ்கிறது பத்துப்பாட்டு. எனவே இலக்கிய வரலாற்றினை ஆய்பவர் இலக்கிய வளர்ச்சியை உற்று நோக்குவோர் பத்துப்பாட்டே பிற்காலக் காவியங்கள் தோன்ற வித்தாயிற்று என்று உரைப்பார்.

1. திருமுருகாற்றுப்படை : புலவராற்றுப்படை, முருகு என இதற்கு வேறு பெயர்களை வழங்குகின்றன. 317 அடிகளைக் கொண்ட இந்நெடும்பாட்டு ஆசிரியப்பாவினால் அமைந்ததாகும். பதினோராம் திருமுறையிலும் இப்பாட்டு கோத்து வைக்கப்பட்டுள்ளது.

சைவர்கள் நாள்தோறும் ஓதியுணரும் நூல் இது. இதன் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள வெண்பாக்களுள் ஒன்று இவ்வுண்மையை உணர்த்தும்

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் – முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த எல்லாம் தரும்"

முருகாற்றுப்படை என்பதற்கு 'வீடு பெறுவதற்கு ஆயத்தமான இரவலன் ஒருவனை முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவது' என நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

பிற ஆற்றுப்படைகட்கும் இதற்கும் உள்ள வேற்றுமைகள் :

1) ஏனைய ஆற்றுப் படைகள் ஆற்றுப்படுத்துவோருடைய பெயரோடு சார்த்தி வழங்கப் பெறும். இதுவோ பாட்டுடைத் தலைவனின் பெயரோடு விளங்குகிறது.

2) ஏனைய ஆற்றுப்படைகளில் காணப்படும் செய்திகளாக ஆற்றுப்படுத்து வோனை விளித்தல், அவனது நிலையை விவரித்தல் ஆற்றுப்படுத்துவோன் தனது பழைய நிலையைக் கூறுதல், அவன் பரிசில் பெற்ற முறை ஆகியவற்றை முருகாற்றுப்படையின் ஆசிரியர் உய்த்துணர வைக்கிறார்.

திருமுருகாற்றுப்படையினை நக்கீரனார் இயற்றினார். இவரது காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பர். திருமுகாற்றுப் படையை மட்டுமின்றி, நெடுநல் வாடையையும், நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு முதலானவற்றில் சில பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார். திருவள்ளுவமாலையில் ஒரு வெண்பாவும், சைவத்திருமுறைகளில் ஒன்றாகிய பதினொன்றாம் திருமுறையில் உள்ள பாடல்கள் சிலவும் இறையனார் களவியலுரையும் இவரே இயற்றியுள்ளார் என்பர்.

இந்நெடும்பாட்டு ஆறு பிரிவுகளையுடையது; முற்பகுதியில் முருகனின் திருவுருவச சிறப்பு, அவன் அணியும் மாலை வகைகள், சூரர மகளிர் செயல்கள், முருகன் அசுரனை அழித்த திறன், மதுரையின் பெருமை, திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளம் ஆகியன கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில் அடியவர்க்கு அருள்புரிய முருகன் எழுந்தருளும் போது அவனைத் தாங்கி வரும் யானையின் இயல்பு, ஆறுமுகங்களின் செயல்கள், பன்னிரு கைகளின் செயல்கள், திருச்சீர் அலைவாயில் அவன் எழுந்தருளியுள்ள நிலை ஆகியவை இடம் பெற்றுள்ளன.

மூன்றாம் பகுதியில் முனிவர் ஒழுக்கம், முருகனைக் காணவரும் பெண்டிர் இயல்பு, திருமால், பிரமன், சிவன், இந்திரன் முதலானோரைப் பற்றிய செய்திகள், திருவாவினன் குடியில் முருகன் எழுந்தருளியுள்ள இயல்பு ஆகியன அமைந்துள்ளன.

நான்காம் பகுதியில் அடியவர் முருகனை வழிபடும் முறையும், திருவேரகத்தினது இயல்பும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாம் பகுதியில் குன்றக்குரவையும், ஆடல் மகளிர் இயல்பும் முருகப் பெருமானுடைய அணி, ஆடை, செயல் முதலியனவும் அப்பெருமான் குன்றுதோறும் ஆடும் இயல்பும் இடம் பெற்றுள்ளன.

ஆறாம் பகுதியில் முருகன் எழுந்தருளியிருக்கும் இடங்களும், பழமுதிர்சோலையும், முருகனைத் துதித்து ஏத்தும் முறையும், முருகனின் திறமும், தொண்டர்தம் இயல்பும், அருவியின் காட்சியும் பாடப்பட்டுள்ளன. பழமுதிர் சோலையில் விழுகின்ற அருவியினது சிறப்பினை.

"இழும் என இழிதரும் அருவிப்
பழமுதிர்சோலை மலைகிழ வோனே"

என்ற பகுதியில் ஆசிரியர் பாடுகின்றார்.

சிறப்புச் செய்திகள்: முருகப் பெருமானை மக்கள் வழிபட்ட முறை இந்நூலில் கூறப்படுகிறது. 'காடும் காவும்' கவின்பெறும் துருத்தியும். யாறும், குளனும் வேறு பல்வைப்பும், சதுக்கமும், சந்தியும், புதுப்பூங்கடம்பும், மன்றமும், பொதியிலும், கந்துடை நிலையினும் (223–229) ஆகிய பல இடங்களையும் தெய்வம் நிலைபெறும் இடங்களாக எண்ணி வணங்கினர் தமிழர். அக்கால மக்களின் சமயக்கோட்பாடு இதனின்றும் புலனாகிறது. அவர்கள் இயற்கையில் இறைவனைக் கண்டனர். முருகனின் ஆறுமுகங்களின் தோற்றமும் பன்னிருகரங்களின் செயல்களும் எழிலுறப் பேசப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, முருகனுடைய கரங்களின் செயல்களைக் காண்போம்; வானத்தில் திரியும் முனிவரைத் தாங்குகிறது ஒரு கை. இடையிலே ஊன்றியிருக்கிறது ஒரு கை, தொடையின் மீது கிடக்கிறது ஒரு கை. அங்குசத்தை ஏந்தியுள்ளது ஒரு கை. பரிசை என்னும் கருவியைத் தாங்குகிறது ஒரு கை. வேலேந்தியது ஒரு கை. மார்பின் நேரே ஞானக் குறிப்புடன் திகழ்கிறது ஒரு கை. மாலையோடு இணைந்திருக்கிறது ஒரு கை. கொடியுடன் சுழல்கிறது ஒரு கை. மணியை அசைத்து ஒலிக்கிறது ஒரு கை. மேகத்தினின்று மழை பொழிவிக்கின்றது ஒரு கை. தேவ மகளிர்க்கு மணமாலை தருகின்றது ஒரு கை. இவ்வாறாகப் பன்னிரு கரங்களின் செயல்கள் திருமுருகாற்றுப்படையில் பாங்குறத் தீட்டப்படுகின்றன. இக்காட்சி படிக்கப் படிக்கப் பரவசம் தருவது ஆகும்.

மாவுரியை உடுத்தவர்கள், வலம்புரிபோல் தூக்கி முடித்த நரைமுடியினர், குற்றமற்ற காட்சியினர், மான்தோல் பூண்டவர், எலும்பு எழுந்து தோன்றும் உடம்பினர், பன்னாள் உண்ணாவிரதம் இருப்பவர், பகையும் சினமும் அற்றவர், மாசற்ற மதியினர், துன்பம் அறியாத துறவியர், கற்றோர்க்கு வரம்பாகிய தலைமையர் என்று முனிவர்களை வருணிக்கிறார் நக்கீரர். அக்கால முனிவர்கள் எத்தகு வாழ்வு நடத்தினர் என்பதை இதிலிருந்து நாம் அறியலாம்.

முருகனை இவ்வாறெல்லாம் வழிபடுக என்று இன்தமிழிலே பாடுகிறார் நக்கீரர் அருச்சித்தற்குரிய அருமந்திரமாக அது அமைந்துள்ளது.

"விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபின் பெரும்பெயர்முருக! "

என்பது அதற்குச் சான்று.

முருகக் கடவுளுக்குரிய காந்தள், செங்கடம்பு, வெட்சி என்னும் மலர்களும் கோழி, மயில் என்னும் கொடிகளும், மயில், யானை என்னும் ஊர்திகளும் இப்பாட்டில் நுவலப்பட்டுள்ளன. பலவகையிலும் நோக்கும் போதும், முருகப்பெருமானைப்பற்றிய பழையதொரு முழு நூலாக இப்பாட்டு காட்சியளிக்கின்றது.

2. பொருநராற்றுப்படை : கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடிய பாடல் இது. இது 248 அடிகள் கொண்டது. பரிசில் பெற்ற பொருநன் பரிசில் பெற விழையும் பொருநனை ஆற்றுப்படுத்தியதாக இது அமைந்துள்ளது. (பொருநர்; மற்றொருவர் போல வேடங்கொள்பவர்) பொருநர் ஏர்க்களம் பாடுவோர் என்றும், போர்க்களம் பாடுவோர் என்றும், பரணி பாடுவோர் என்றும் பலவகைப்படுவர். இப்பாட்டில் வரும் பொருநன் போர்க்களம் பாடுபவன் ஆவான்.

பொருநர் ஒரு திருவிழாவில் கூடி தத்தம் கலைத் திறனைக் காட்டி விழா முடிந்தபின் வேற்றூருக்குச் செல்வதாகக்கூறி இந்நூல் தொடங்குகிறது. பாலை யாழின் வருணனை நயம்பட உள்ளது.

"மணங்கமழ் மாதரை மண்ணி அன்ன
அணங்குமெய்ந் நின்ற அமைவரு காட்சி
ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை"

ஈண்டு மணக்கோலப் பெண் யாழிற்கு உவமிக்கப்பட்டுள்ளான். விறலியின் அழகு சுவைபடப் பாடப்படுகின்றது. தலைமுதல் தாள்வரை அவர் அழகு வருணிக்கப்படுகிறது.

கருவிலே திருவுடையான் கரிகாலன் என்று பாராட்டுகின்றார் முடத்தாமக் கண்ணியார். அவன் சிறுவனாக இருக்கையிலே செருக்களத்தில் வீரம் காட்டினான் என்ற செய்தியைச் சொல்ல வந்தவர் அவனை ஆளியின் குருளைக்கு ஒப்பிடுகின்றார். தாய்ப்பால் அருந்தும் ஆளிக்குருளை களிற்றை வீழ்த்தி வென்றது என்று உவமிக்கிறார்.

கரிகாலன் ஆண்மையிற் சிறந்து, வீரத்தில் உயர்ந்து, கொடையில் ஒப்பற்றுத் திகழ்ந்தவன், அவன் பொருநரை விருந்தோம்பிய திறத்தை ஆசிரியர் சிறப்பாகப் பாடுகின்றார். கரிகாலனைக் காணுமுன், ஈரும் பேனும் நிறைந்து, வியர்வையால் நனைந்து, வேற்றிழை நுழைந்திருக்கும் கந்தலாடையை இரவலர் அணிந்திருந்தாராம். இதனை,

"ஈரும் பேனும் இருந்து இறைகூடி
வேரோடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதா அர் "

என்று அவர் வருணிக்கும் காட்சி உள்ளத்தை உருக்குவது ஆகும். இந்த ஆடையை நீக்கி,

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை "யும் (82–83)
"கொட்டைக் கரைய பட்டுடை "யும், (155)

அன்பாய் நல்குகிறான் சோழன். வந்த இரவலர்க்கு அரிசிச்சோறு, ஊன்சோறு, புளிக்கறி போன்ற பல்வகை உணவும் தந்து உபசரிக்கிறான். ஊன்துண்டங்களைப் பொருநர் சுடச்சுட உண்ட காட்சியை,

"ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி" (106)

என்று அழகுறக்காட்டுகின்றார் ஆசிரியர். அவர்களது சோற்றுக்குப் பயன்படுத்திய அரிசியை,

"முரவை போகிய முரியா அரிசி " (117)

என்று பாராட்டுகின்றார். இவையேயன்றிப் பொருநருக்கு அழகிய இளம் பெண்கள் புன்னகையுடன் பொற்கலம் நிறைய மதுவை ஊற்றித் தருகின்ற காட்சியையும் தீட்டுகின்றார். கரிகாலன் தந்த ஊன் உணவை உண்டு உண்டு பொருநரது பல்லே கூர்மழுங்கிப் போனது என்று புலவர் பாடுவது சுவைமிக்கது ஆகும்.

அக்கால மக்கள் நாள்தோறும் காக்கைக்குச் சோறு இடுவர் என்ற செய்தியும், தேனும் கிழங்கும் கொடுத்து மீனும் கள்ளும் பண்டமாற்றாகப் பெறும் காட்சியும், ஒரு வேலி நிலத்திலே ஆயிரம் கலம் நெல் விளைகின்ற காவிரி நாட்டின் உழவு மாட்சியும் பொருநராற்றுப் படையிலே பேசப்படுகின்றன. அச்சிறப்பு.

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும்–நாடுகிழ வோனே (246–248)

என்று இப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

3. சிறுபாணாற்றுப்படை: இது பரிசில் பெறக்கருதிய பாணனைப் பரிகில் பெற்ற ஒரு பாணன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடன்பால் ஆற்றுப்படுத்தியதாகப் பாடியது.

இதன் ஆசிரியர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார். நல்லியக்கோடனின் செவ்விய பண்புகளை நத்தத்தனார் இதன்கண் புலப்படுகின்றார். இது 269 அடிகளை உடையது. இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ (35) என வருதலான் சிறிய யாழை மீட்டும் பாணனின் ஆற்றுப்படை எனவும் கொள்வர்.

ஒரு கால் வளம் சுரந்து, இன்று வறண்டுவிட்ட ஒரு கான்யாறு இவ்வாற்றுப் படையில் முதற்கண்காட்டப்பெறுகிறது. ஊற்றுவளமின்மையும் வெயிலின் கொடுமையும் இதில் நன்கு புனைந்துரைக்கப்பட்டுள்ளன. பாணர் கூட்டத்தை நோக்கி, பரிசில் பெற்று வந்த இரவலன். அக்கூட்டத்தலைவனை அழைத்துத் தான் இருந்த முந்தைய நிலை, இப்போதைய நிலைக்குக் காரணம் ஆகியவற்றைக் கூறி அவர்களை நல்லியக் கோடனிடத்தே ஆற்றுப்படுத்தகிறான்.

நல்லியக்கோடனது வீரமும் கொடையும் ஆகிய பண்புகள் பாராட்டப் பெறுகின்றன. அவன், சிறுகண் யானையோடு பெயருந்தேர் நல்கினான் என்று புலவர் பாடுகிறார். பாரி, காரி முதலிய பழம்பெரு வள்ளல்கள் எழுவருக்குப் பின்னர் நல்லியக்கோடனே வண்மையிற் சிறந்து விளங்குகின்றான் என்பதைப் பின்வருமாறு புலவர் பாராட்டுகின்றார்.

"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்றாள் " (113–115)

"பாம்பு வெகுண்டன்ன தேறலை நல்கி" (பாம்பின் விடம் ஏறி மயங்கினாற் போன்ற மயக்கத்தை உண்டாக்கும் கள்ளின் தெளிவைத் தந்து பல்வேறு அடிசில் கொடுத்து ஆனாவிருப்பின் தான் நின்று ஊட்டி விருந்தினனை மகிழ்விப்பான் நல்லியக்கோடன் என்றும் அறிகிறோம்.

சிறுபாணாற்றுப்படையில், கிணைமகள் ஒருத்தியின் வறுமையைச் சித்திரித்துக் காட்டுகிறார் ஆசிரியர். இயல்பாகவே நுண்ணிடையாள் அவள். பசியால் உழந்து மேலும் ஒடுங்கிவிட்டது அவள் இடை உண்ண உணவில்லை, ஊருக்குத் தெரிந்தால் தன் மானம் என்னாகும் என்று தயங்குகிறாள் அவள் இரத்தல் இழிவு; ஆயின் பெருஞ்சுற்றம் பேய்ப்பசியால் நலிகின்றது என் செய்ய? கொல்லையில் முளைத்திருக்கும் குப்பைக் கீரையைக் கொய்து அவள் வேக வைக்கிறாள். அதற்கு உப்பு இல்லை. உப்பை இரந்து பெற்று உயிரின் இனிய மானம் அழிவதா? எனவே, உப்பின்றி வெந்த கீரையைத் தன் குடும்பத்திற்கு உண்ணத்தருகிறாள் அவள். தகவில்லாதவர் சிலர் தம் வறுமை கண்டு நகைப்பரே என்று அஞ்சித் தலைவாயிற் கதவைத் தாழிட்டுக் கொள்கிறாள். இந்த உள்ளமுருக்கும் காட்சியைத் தீட்டிய அவரே உள்ளத்தை உலுக்குகின்ற ஒரு காட்சியையும் காட்டுகிறார். இல்லத்தில் மனிதருக்கே உணவில்லை மனிதரை அண்டி வாழும் நாய் என்ன செய்யும்? அது நெருப்பறியாத அட்டிலைத்தான் குட்டியை ஈனுவதற்கு ஏற்ற இடமாகக் கொண்டுவிட்டது. கண்திறக்காத காதுநிமிராத புனிற்றிளம் குருளைக் குட்டிகள் பாலின்றித் தவிக்கின்றன. நாய்க்கு உணவு கிட்டினால்தானே குருளைக்குப் பால் ஊறும்? பால் ஊறாத வறுமுலையைச் சுவைத்து அவை அடையும் ஏமாற்றம்! இந்த வேதனை பொறாத புனிற்று நாய் குரைக்கின்ற புல்லென்ற அட்டில் என்று ஆசிரியர் தீட்டும் ஓவியம் காண்பார் விழியில் குருதி கசியச் செய்வது ஆகும்.

இவ்வறுமையின் கொடிய நிலையை ஆசிரியர் பின்வருமாறு ஓவியமாகத் தீட்டுகிறார்.

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது.
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்" (130–132)

நல்லியக் கோடனின் விருந்தோம்பல் திறத்தைப் புலவர் மிக அழகுற,

"பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க் காயினும்
கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயில் " (203–206)

எனக் கூறிப் பாராட்டுகிறார்,

சேர, சோழ, பாண்டியர் மூவரையும் கடையெழு வள்ளல்களையும் நிரல்படப் பாடி இறுதியில் நல்லியக்கோடனை நயம்படப் பாராட்டுகின்றார் நத்தத்தனார். அவ்வாறு முறையே பாடி வருகையில் ஒவ்வொரு மன்னனின் நாட்டு வளத்தையும், சிறப்பையும் நவிலுகின்றார். சேர நாட்டைப் பற்றிப் பாடுகையில் அவர் காட்டும் செழுமைமிகு மாட்சி பின்வருவதாகும்.

"பெருவாயையுடைய எருமையொன்று, கொழுமீன்கள் தன்காலடியில் பட்டு நசுங்குமாறு வயலில் இறங்கி நடந்து சென்று செழுங்குவளை மலர்களைத் தின்று, பின் பசும் மிளகுக் கொடி

படர்ந்த பலா மரத்தின் நிழலை அடைந்தது. மஞ்சள் செடியின் இலைகள் அதன் முதுகை நீவின. வயலில் கவர்ந்த மலர்களை அசைபோட்டுக் கொண்டே அம்மரநிழலில் காட்டு மல்லிகை மலர்கள் குவிந்து தீட்டிய மலரணை மேல் படுத்துக் கொண்டது" இக்காட்சி கிழியில் தீட்டிய ஓவியம் போன்று உள்ளத்தில் நிறைகிறது.

இதைப் போன்றே பாண்டிய நாட்டை வருணிக்கும் போதும் கண்ணுக்கு விருந்தாய் மற்றொரு காட்சியை ஆசிரியர் படைக்கின்றார். உமணப்பெண்டிர் தம் சிறாருடன் குரங்குகள் விளையாடுகின்ற காட்சி. சிப்பிகளில் முத்தை இட்டு அதைக் கிலுகிலுப்பையாக்கி அச்சிறாருர்க்குக் கிலுக்கிக் காட்டுவதாக அவர் புனைகின்றார். திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரைகளைப் பொன் ஆசனமாகக் கொண்டு தும்பிகள் தம் படைகளுடன் அமர்ந்து சீகாமரப் பண்ணை இசைக்கின்ற சிறந்த காட்சியைச் சோழநாட்டுவருணனையாகக் காட்டுகின்றார். இவ்வாறு பாண்டிய சோழநாடுகள் இரண்டையும் சிறக்கப் பாடிவிட்டு, இவ்விரண்டைக் காட்டிலும் வளத்தில் சிறந்தது நல்லியக்கோடனது ஓய்மா நாடு என்று உரைத்துத் தம் புலமை மெருகைப் புலப்படுத்துகின்றார் புலவர்.

4. பெரும்பாணாற்றுப்படை : காஞ்சியை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனிடம் பெரிய யாழை உடைய பாணனை மற்றொரு பாணன் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது இது. இதனை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இது 500 அடிகளையுடையது. 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி (462) என யாழினுடைய பெயராலும், ஐந்நூறு என்ற அடி அளவாலும் இப்பாட்டு இப்பெயர் பெற்றது. பாணாறு என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு. இதன் கண் யாழ்பற்றிய புனைவு, அந்தணரின் ஒழுக்கம், ஐந்திணை ஒழுக்கம், கலங்கரை விளக்கம், ஐவகை நில உணவு வகைகள் ஆகியன அழகுறப் பேசப்படுகின்றன. காஞ்சி மநாகரின் சிறப்பு' கொற்றவைக்குப் பேய்கள் தம் பசிப்பணியைக் கூறல், விலங்குகள் முனிவர்க்கு அடங்கி நிற்றல் போல்வன விளக்கப்படுகின்றன.

இளந்திரையானது நாட்டில் காட்டு வழிகள் உண்டெனினும் அத்தம் செல்வோரை அலறத்தாக்கிக் கைப்பொருள் வவ்வும் கானவராகிய கொடியோர் இலர் என அவனது ஆட்சிச் சிறப்புப் பாராட்டப் பெறுகின்றது. அவன் நாட்டு மக்கள் அச்சம் சிறிதும் இன்றி ஆண்மைமிக்கிலங்கினர் என்பதற்குப் பின்வரும் அடிகள் சான்று பகரும்;

"யானை தாக்கினும் அரவுமேற் செலினும்
நீல்நிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை " (134–136)

சூலுற்ற மகளிரே இங்ஙனம் மறப்பண்பு பெற்று இலங்கினர் எனின் ஆடவரைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமோ ?

மறக்குல ஆடவர் புல்லிய தாடி வைத்திருந்தனர். அவர் பகைப்புலத்தே சென்று ஆனிரை கவர்ந்து வந்து கள்ளுக்கு விலையாக அவற்றைப் பண்டமாற்றுச் செய்தனர்.

கோவலர் குடியை உருத்திரங்கண்ணனார் அழகாகச் சித்திரிக்கிறார். செறிந்த இருள் மெல்லெனப் புலர்கிறது. புட்கள் ஒலிக்கும் அவ் வைகறையில் ஆய்மகள் எழுந்து விடுகிறாள். குடைக் காளானின் எடுத்த மோர்ப்பானையை, தலைமீது சுமந்து விற்று வரப் புறப்படுகிறாள். அவள் நெய் விற்றதைக் கொண்டு எருமைகளை வாங்குகிறாள். இம்மகளிர் வீட்டிற்கு வரும் விருந்தினர்க்குத் திணையரிசிச்சோற்றைப் பாலோடு தருவர். அடுத்து இடைமகனை அறிமுகப்படுத்துகிறார் கவிஞர். அவன் தன் அடிகளில் தொடுவதால் தோளில் தழும்பேறிய அவன் அன்பால் தடவிய தலைமயிர் உடையவன்; காட்டுப்பூக்களை மாலையாகத் தொடுத்து அணிந்திருக்கிறான். ஆனிரை கன்றுகளோடு அவன் காட்டில் தங்கிக் குழலில் பாலைப்

பண்ணை இசைக்கிறான்; அவ்விசையை வெறுத்தபோது குமிழங்கோட்டில் செய்த யாழில் குறிஞ்சிப் பண்ணை எழுப்புகிறான்.

பெரும்பாணாற்றுப்படையில் அழகிய உவமைகள் இடம்பெறுகின்றன. வரகுச் சோற்றுக்கு உவமையாகப் பூளைப்பூவினை ஆசிரியர் காட்டுகின்றார். அதே போன்று கலப்பையின் கொழுவிற்கு உடும்பின் முகத்தையும், வரகு வைக்கோல் வேய்ந்த அழகிய குடிலுக்கு வானத்து மேகத்தையும், பன்றியின் கொம்புக்கு அகத்தியின் பூவையும் உவமிக்கின்ற சிறப்புப் பாராட்டத்தக்கது.

பெரும்பாணாற்றுப்படையில் அழகிய உவமைகள் இடம்பெறுகின்றன. வரகுச் சோற்றுக்கு உவமையாகப் பூளைப்பூவினை ஆசிரியர் காட்டுகின்றார். அதே போன்று கலப்பையின் கொழுவிற்கு உடும்பின் முகத்தையும், வரகு வைக்கோல் வேய்ந்த அழகிய குடிலுக்கு வானத்து மேகத்தையும், பன்றியின் கொம்புக்கு அகத்தியின் பூவையும் உவமிக்கின்ற சிறப்புப் பாராட்டத்தக்கது.

நீர்த்துறையிலே மகளிர் நீராடுகின்றர். அம்மகளிரின் மகரக் குழையைத் தன் இரையென்று கருதிச் சிச்சிலிப் பறவையானது கவர்ந்து சென்று அந்தணர் வேள்வித்தூணின் மீது அமர்ந்திருக்கும் காட்சியவனரின் அன்னவிளக்குப் போலுள்ளது என்பது மிக அழகிய வருணனையாகும்.

முனிவர்கள் உறைகின்ற இடங்களில் அவர்கள் வேள்வி செய்வதற்கு உரிய விறகுகளை யானைகள் ஒடித்துக் கொடுத்தன; குரங்குகள், அவ்விடத்திலுள்ள செத்தைகளைப் போக்கின; அங்கே புலியும் மானும் பகையின்றி உறங்கின என்னும் செய்திகள் இப்பாட்டில் இடம் பெற்றள்ளன.

உழைப்புக்கும் இயற்கை வருவாய்க்கும் வழியில்லாத பாலை நிலத்திலே எயினர் எயிற்றியர் வாழும் வாழ்வையும் அவர் காட்டுகிறார். உளி போன்ற வாயுடைய கடப்பாரையால் கரம்பு நிலத்தைத் தோண்டிப் புழுதியைக் கிண்டி உள்ளே புல்லரிசியைப் பொறுக்கி எடுத்து உரலில் இட்டுக்குத்தி விளிம்பு முரிந்த பானையில் உலையேற்று கின்ற அவலக்காட்சி இதில் காட்டப் பெறுகின்றது. பெறும்பாணாற்றுப்படையில் ஐவகை நிலங்களும் அங்குள்ள மக்களின் வாழ்வியலும் முறையே விளக்கப்படுகின்றன.

"மழைவிளை யாடு கழைவளர் அடுக்கம் " (257)

என்பதால் இளந்திரையனின் நாட்டுவளம் நமக்குப் புலனாகிறது.

"விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை " (348–351)

என்ற அடிகள் கலங்கரை விளக்கு அங்கு இருந்தமையைத் தெரிவிக்கின்றன. இளந்திரையனது விருந்துபேணும் நற்பண்பு பாராட்டப்பெறுகின்றது.

5. முல்லைப் பாட்டு : இதன் ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவர். இது பத்துப்பாட்டிலேயே சிறியது; 103 அடிகளைக் கொண்டது; முல்லை எனவும் இதற்குப் பெயருண்டு; அகப்பொருள் பற்றியது. முல்லைத் திணைக்குரிய 'இருத்தல்' ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது; மனைவி தன்னைப் பிரிந்து சென்ற கணவன் கூறியபடியே, அவன் வரும் வரையில் அவனது பிரிவை ஆற்றியிருந்து இல்லறம் நடத்தும் ஒழுக்கமே முல்லை என்பது ஆகும்.

பாட்டின் தொடக்கத்தில் கார்கால வருணனையும், இடையில் அரசனின் பாசறை அமைப்பும், இறுதியில் முல்லை நிலத்தின் இயல்பும் நுவலப்படுகின்றன.

சிறப்புச் செய்திகள்: கார்காலத்தில் வருவதாகச் சொல்லிச் சென்றவன் இன்னும் வரவில்லை. தலைவியின் வளையல்கள் கழல்கின்றன. தோழி, செவிலி முதலியோர் ஆறுதல் சொல்கின்றனர். அரசனோ பாசறையில் கூடாரத்தில் மெய்க்காப்பாளர், மிலேச்சர், வீரர் ஆகியோர் நடுவே இருக்கிறான். அரண்மனையைச் சார்ந்த பெருமுது பெண்டிர் சிலர் முல்லையும் நெல்லும் தூவித் தொழுது விரிச்சி (நற்சொல்) கேட்டு நிற்கிறார்கள். ஆங்கு ஓர் ஆயர்மகள்,

"இன்னே வருகுவர் தாயர்" (16)

என்று கன்றுகளைப் பார்த்துக் கூறுகிறாள். இதைக்கேட்ட முதுபெண்டிர்,

"நன்னர் நன்மொழி கேட்டனம்" (17)

என்று மகிழ்ந்து மீண்டும் மீண்டும் வந்து அரசியிடம்,

"வினை முடித்து
வருதல் தலைவர் வாய்வது நீ நின்
பருவரல் எவ்வம் களைமா யோய்! ". (19–21)

என்று வேண்டுகின்றனர்.

பாசறையில் உள்ள யானைகளைப் பாடுகிறார் புலவர். மதநீர் ஒழுகும் பெரிய யானையானது கரும்பையும், நெல்லையும் அதிமதுரத்தையும் உண்ணாமல், அத்தழைகளைக் கொண்டு நெற்றியைத் துடைத்தபடியே நிற்கின்றது. பாகர் வடமொழிச் சொற்கள் கூறி அங்குசம் காட்டி அதனை அதட்டுகின்றனர். பாசறையில் பெண்கள் காவல் புரிந்த செய்தியையும் கூறுகின்றார் ஆசிரியர். இரவில் அரசனின் பள்ளியறையைப் பாதுகாப்பவர் அப்பெண்கள்; சிறு வளையல் அணிந்தவர்; அவிழ்ந்த தலைமயிர் உடையவர்; ஒளிமிகுந்த வாளைக் கையில் ஏந்தியவர்! எண்ணெய் சிந்தும் தீப்பந்தத்தை ஏந்தியபடி வந்து விளக்குகள் அணையாமல் அவற்றைக் கொளுத்திக் கொண்டே இருந்தனர். சட்டை அணிந்திருக்கும் யவனவீரரும் பாசறையில் இருந்தனர். வாய் பேசாத சில மிலேச்சரும் அங்கு இருந்தனர். ஊமையர் அவர்கள் என்று சொல்ல வந்த புலவர், நாவால் உரையாமல் உடம்பால் சைகை காட்டுபவர் என்று கூறுகின்ற வகையில்,

"உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் " (65–66)

என நாகரிகமாய் மொழிகின்றார்.

மாவலி என்ற மன்னனிடம், மூன்றடி மண் வேண்டிக்குறள் வடிவினனாய்ச் சென்ற திருமால், அவன் மண் கொடுக்க உடன்பாடு நீர் வார்த்தவுடன், அம் மண்ணினை அளக்க நெடிய நெடுமாலாகிய செய்திக்குறிப்பு இப்பாட்டில் காணப்படுகின்றது. அக் காலக் கட்டிடக்கலையின் சிறப்பு தலைவி ஏழடுக்கு மாளிகையில் இருந்தாள் என்பதால் புலப்படுகிறது. சட்டைக்கு 'மெய்ப்பை' என்னும் அழகிய பெயர் முற்காலத்தில் வழங்கப் பெற்றது.

கார்காலத்தில் மலர்கள் பல பூத்திருந்தன என்பதை மிக நயம்பட ஆசிரியர்.

"முறிஇணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப " (94–96)

என்று காட்டுகிறார். "பூத்தது " என்ற ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்தாமல் அழகிய வேறு வேறு சொற்களை ஆண்டு நயம்படப் படைக்கிறார்.

6. மதுரைக்காஞ்சி : இது மதுரையில் அரசனுக்குக் கூறிய காஞ்சி எனப் பொருள்படும். பத்துப்பாட்டிலேயே மிகப் பெரிய பாட்டு; 782 அடிகளையுடையது. இடையிடையே வஞ்சி அடிகள் விரவிய ஆசிரியத்தால் ஆனது; தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மாங்குடிமருதனார் நிலையாமையை அறிவுறுத்த வீடு பேற்றை நாடும்படி செயயும் கருத்துடன் பாடப்பட்டது.

காஞ்சித்திணை என்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் கூறும் குறிப்பினது என்பர் தொல்காப்பியர். புறப்பொருள் வெண்பாமாலை, 'உட்காது எதிரூன்றல் காஞ்சி' எனக் கூறும்.

"அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ
கொன்னொன்று கிளக்கவல் அடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் அவலம்" (206–208)

என்ற அடிகளால் வீடுபேற்றிற்குரிய நிமித்தத்தை ஆசிரியர் கூறுகிறார்

"திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலகம் ஆண்டுகழிந் தோரே " (236–237)

என்பதனால் பல்வேறு நிலையாமைகள் புலப்படுத்தப்படுகின்றன.

பெருகு வளமதுரைக் காஞ்சி என்ற தொடர் இதனது பெருமையைப் புலப்படுத்தும். நெடுஞ்செழியனுடைய நாட்டைப் பாடுகின்ற புலவர்,

"பகற்செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண்டிங்களும்
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க " (7–9)

என அவனது நாட்டைச் சிறப்பிக்கின்றனர். சிற்சில இடங்களில் வான்நூல் குறிப்புகள் காணப்படுகின்றன. நெடுஞ்செழியனது போர்த்திறத்தை ஆசிரியர் நயம்படப் பாராட்டுகின்றார். தலையாலங்கானத்துப் போருக்குப் பின்னர்ப் பகைமன்னர் இவனது மண்ணை உண்ண விரும்பவில்லை. மன்னனுடைய அரிய பண்புகளை மாண்புறக் கூறுகின்றார் புலவர்.

"உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட்பினையே" (197–198)

எனவும்,

"பகைவர்க்(கு) அஞ்சிப் பணிந்தொழு கலையே" (201)

எனவும்,

"ஈதல் உள்ளமொ(டு) இசைவேட்குவையே" (205)

எனவும் நெடுஞ்செழியனை அவர் புகழ்ந்துரைக்கின்றார். மதுரை மாநாகரின் வளம் பல்வேறு வகையில் விளக்கப்படுகின்றது. "பயன் அறவறியா வளங்கெழு திருநகர்" (216) என்று பாராட்டப்பெறுகின்றது.

"வையை அன்ன வழக்குடை வாயில்" (356)

எனவும்,

"யாறு கிடந்தன்ன அகனெடுந் தெரு" (359)

எனவும் மதுரையின் சிறப்புக்கள் இதில் கூறப்படுகின்றன. நால்வகைப் படைகளின் அணிவகுப்பு, நாளங்காடி, அல்லங்காடி ஆகியவை பற்றியும் அறங்கூறும் அவையத்தார். ஐம்பெருங்குழுவினர், காவல் இளைஞர், கடுங்கண் மறவர் ஆகியோர்பற்றியும் செய்திகள் இதன்கண் காணப்படுகின்றன. மதுரை மாநகரிலே பல்வகைக் கொடிகள் நுடங்கின. அவ்வாறு கொடிகள் நுடங்கிய காட்சியை ஆசிரியர்,

"பெருவரை மருங்கின் அருவியின் நுடங்க" (374)

என்று உவமிக்கிறார்; அச்சம், அவலம், ஆர்வம் ஆகியவற்றை நீக்கி, விருப்பு வெறுப்புக் கொள்ளாமல் சமன் செய்து சீர்தூக்கும் கோல் போன்ற நடுநிலைமை உடையதாய்த் திகழ்ந்த அறங்கூறவையத்தையும் காட்டுகிறார்; அறநெறி பிறழாது ஆற்றின் ஒழுகும் வணிகர் கூட்டத்தையும் காட்டுகிறார். மதுரை மாநகரிலே மறைவாய்த்திருடும் கள்வர்கள் இருந்தனர்; அவர்கள் கரிய உடையணிந்திருந்தனர். கல்லையும் மரத்தையும் வெட்டி விடுகின்ற கூரிய வாளை வைத்திருந்தனர்; இடையில் நூலேணி சுற்றி வைத்திருந்தனர்; இத்தகைய திறன்மிகு திருடரைப் பற்றிக்கவர விறல்மிகு வீரரும் இருந்தனர்; அவர்களைப் பற்றிக் கூறும் போது ஆசிரியர் 'வயக்களிறு பார்க்கும்' வயப்புலி போன்று உறங்காத விழியுடையர்; அஞ்சாத கொள்கையுடையர்; ஆண்மையுடையர்; நூலறிவுடையர்; நுட்பமும் தேர்ச்சியும் உடையவர் அவ்வூர்க்காப்பாளர் எனப் பாராட்டுகின்றார். மதுரையிலே இருந்த அன்னசாலையில் வழங்கிய உணவை வருணிக்கும் போது கற்போர் செவியினிக்கிறது. தேன் மணம் கமழும் பலாச்சுளைகள், மாங்கனிகள், காய்கறி, வாழைக்கனி, மழைக்கு முளைத்தகீரை, இனிய சோறு, புலவுச் சோறு, கிழங்குகள் ஆகியன இன்சுவை விருந்தாயினவாம்.

7. நெடுநல்வாடை: நெடுநல்வாடையை இயற்றியவர் நக்கீரர், இப்பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். இது 188 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பா ஆகும். பகை மேற்சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு அவ்வருத்தம் நீங்கும்படி அவன் பகையை வென்று விரைவில் வருவானாக என்று கொற்றவையைப் பரவுவாள் கூறியதாக நக்கீரர் பாடியது என்பார் உ.வே. சாமிநாதையர் அவர்கள். இப்பாட்டில் பெரும்பாலும், அகத்திணைக்குரிய செய்திகளே விளக்கப்பட்டுள்ளன. எனினும், பாண்டியனுடைய அடையாளப் பூவை ஆசிரியர் குறிப்பிடுவதால் இதனைப் புறப்பாட்டு எனக்கொள்பவரும் உண்டு. வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம் என்ற அடியில் பாண்டியனது அடையாள மாலை (176) கூறப்பட்டதால் இது அகமாகாது என்பர் நச்சினார்க்கினியர்.

நெடுநல்வாடை என்பது நெடியதாகிய நல்ல வாடை ஆகும். தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு ஒரு நாள் ஓர் ஊழி போல இருந்ததால் அவ்வாடை அவளுக்கு நெடுவாடையாயிற்று. தலைவனாகிய மன்னன் இன்பத்தில் நாட்டம் அற்று வேற்றுப்புலம் சென்று பாசறையில் தங்கிப் பகை முடித்தற்குத் துணை செய்தமையின் அவனுக்கு இது நல்வாடையாயிற்று.

இப்பாட்டின்கண் மக்களும், புள், விலங்கு முதலியனவும் கூதிர்க்காலக் குளிரால் வருந்தும் நிலையும் நயமுறப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்" (9–12)

கூதிர்க்கால மாமழை கடுங்குளிராய் நடுக்குகிறது. இடையர்கள் பசுநிரையை மேயவிட்டுப் பல்பறைகொட்டக் குளிர்தாங்காமல் ஓடுங்குகிறார்கள். விலங்குகள் இக்குளிரில் இரைதேட மறந்து நிற்கின்றன. குரங்குகளும் குளிரால் விறைக்கின்றன. ஊதைக்காற்றால், பறவைகள் நிலத்தில் வீழ்கின்றன. மழை நீரோடையில் கொக்கும் நாரையும் ஒரு காலில் நிற்கின்றன. புதுப்புனலில் மீன் தேடும் மகிழ்ச்சி அவைகளுக்கு மலைச்சாரலில் பனித்துளிகளைத் தாங்கிநிற்கும் பசுஞ்சோலைகள் உள்ளன. இவ்வாறு இயற்கை எழில் நடம் புரியும் இனிய பகுதிகட்கு நம்மையே நேரில் அழைத்துச் செல்வது போன்று எழில் ததும்ப வருணிக்கிறார் ஆசிரியர். ஆறுபோலக் கிடக்கும் அகல் நெடுந்தெருக்கள், இத்தெருக்களிலே, முடலை யாக்கை முழுவலி மாக்கள் வாடைத்தண் துளிகள் தம்மீது விழுவதையும் பொருட்படுத்தாமல் மதுவருந்திய மயக்கத்தில் களிமீதூரப் பெற்று வீதிதோறும் விரும்பியபடி திரிகிறார்கள். மகளிர் மாலைசூட விழையாமல் கூந்தலில் சில மலர்களே சூடியுள்ளனர். மேன்மாட அறையில் சாளரங்களைத் துளையில்லாதவாறு மூடி அவர்கள் வாடை தவிர்க்கின்றனர். குன்றினைக்குடைந்து வாயில் அமைத்தது போல அரண்மனைவாயில் உள்ளது. அரண்மனை முற்றத்தின் மணற்பரப்பில் கவரிமான், அன்னம் ஆகிய விலங்குகள் விளையாடி மகிழ்கின்றன.

அன்னத்தூவி பரப்பித் துகில் போர்த்த தந்தக்கட்டிலிலே, அரசி கூந்தல் புனையாமல் மார்பில் மங்கல நாண் மட்டும் இலங்க, காதிலே தாளுருவியும் கையிற் சங்கு வளையும் அணிந்து கட்டில் விதானத்தில் வரையப்பட்டுள்ள திங்கள் உரோகிணிச்சித்திரம் கண்டு பெருவுயிர்ப் பெய்திக் கண்ணீர் வடிக்கின்றாள். துயர் பெருகுகிறது; தோழியர் அவளது அடிவருடி ஆறுதல் உரைக்கின்றனர். அரசியின் நிலையை ஆசிரியர்,

"புனையா ஓவியம் கடுப்ப" (147)

என்று தீட்டியிருப்பது நெடுநல்வாடை இலக்கியத்தின் உயிர்மையாகத் திகழ்கிறது.

அரசியின் நிலை இவ்வாறாக, அங்கே பொருகளத்தில் பாசறையில் அரசன் இவ்வாழ்வின்பத்தை முற்றிலுமாய் மறந்து கடமை வீரனாய்க் காட்சியளிக்கின்றான்; நள்ளென்ற இரவில் காரிருளில் தவ்வென்று மழைத்துளி தெளிப்பத் தோளில் நழுவும் துகிலை அணைத்துப் பிடித்தபடி வீரனொருவன் விழுப்புண்பட்ட வீரர்களை முறையே காட்ட அவர்களை நேரில் கண்டு உசாவி ஆறுதல் அளிக்கிறான். அவன் நினைவெல்லாம் போரிலும் அதில் புனையும் வெற்றியிலும் ஆழ்ந்துள்ளது

"நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே" (186–188)

என்கிறார் ஆசிரியர், இப்பாசறைத் தொழில் விரைந்து வெற்றியுடன் முடிக என்ற பொருள்படச் செவிலியும், "இன்னே முடிகதில் லம்ம" என்று தெய்வத்தை வேண்டுகிறாள்.

பூ மலர்தலைக் கொண்டு பொழுதறியும் வழக்கமும் மாலைக் காலத்தே மகளிர் தெய்வத்தை வழிபடும் முறையும், வேலுக்கு அடையாளப் பூ அணியும் மரபும் நெடுநல்வாடையால் அறியப்படுகின்றன.

8. குறிஞ்சிப் பாட்டு : குறிஞ்சித் திணையைப் பாடவல்ல கபிலர், ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அகப்பொருள் வாயிலாகத் தமிழின் சிறப்பை உணர்த்துவதாகப் பாடியதே இந்நூல். ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு எனப் பழங்குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அகவற்பாவால் ஆன இது 261 அடிகளைக் கொண்டது. நச்சினார்க்கினியர் இதனைப் பெருங்குறிஞ்சி என்பர்.

தோழி செவிலிக்கு அறத்தோடு நிற்பதாக இப்பாடல் அமைகிறது. அன்பொழுக்கத்தில் தடையேற்பட்டதால் தலைவி துன்புற்றாள். அறத்தோடுநின்று இருவரது துன்பத்தையும் போக்க நினைத்தாள் தோழி இவ்விடத்துத் தோழியின் நிலையை அழகியதோர் உவமையால் பின்வருமாறு ஆசிரியர் புலப்படுத்துகிறார். "இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்

வினையிடை நின்ற சான்றோர் போல
இருபேரச்சமோ (டு) யானும் ஆற்றலேன்" (27–29)

தினைப்புனம் செல்கையில் தலைவியும் ஆயமகளிரும் புனலாடிப் பூக்கொய்த் திறனைத் தோழி கலை நயம்படப் பேசுகிறாள். செங்காந்தள் பூ முதலாகப் புழுகு என்னும் மலை எருக்கம் மலை எருக்கம் பூ ஈறாகத் தொண்ணூற்றொன்பது பூக்களைக் கபிலர் குறித்துள்ளார்.

விளையாட்டிற்குப் பிறகு தலைவியும் ஆயத்தாரும் அசோக மரநிழலில் தலைவனை அவனுடைய வேட்டை நாய்களுடன் சந்திக்கின்றனர். யானை ஒன்று வர அதைத் தடுத்துத் தலைவியைக் காத்தான் தலைவன். தலைவியையே மணந்து கொள்வதாகத் தன் குலதெய்வத்தின் பேரால் சுனைநீரை வாயினால் பருகிச் சூளுரைத்தான்.

ஆரிய மணமாகிய காந்தருவத்திற்கும் தமிழ் ஒழுகலாறாகிய களவொழுக்கத்திற்கும் உள்ள வேற்றுமையையும் களவொழுக்கத்தின் தூய்மையினையும் ஆரிய மன்னன் பிரகத்தனுக்குத் தெளிவாக்கியுள்ளார் கபிலர். இதில் முப்பத்திற்கும் மேற்பட்ட உவமைகள் வந்துள்ளன.

பாறையில் உள்ள சுனையின் பழச்சாறுகளோடு தேன் கலந்து நிரம்பியிருந்தது; அத்தேன் கலந்த பழச்சாற்றை எளிய நீராகக் கருதி உண்டமயில், மயக்க மிகுதியில் தன் ஆடலை மறந்து தளர்ச்சியுறற செய்தி இப்பாட்டில் இடம் பெற்றுள்ளது. இதனால் உயர்குடியில் பிறந்த தலைவனை ஊழ்வயத்தால் நுகர்ந்த தலைவி, அக்களவு ஒழுக்கத்தினால் பிறந்த இன்பம் காரணமாக வருந்தி உடல் நலிவுற்றாள் என்ற குறிப்பும் புலனாகிறது. இது உள்ளுறை உவமம் என்று சொல்லப்படும்.

குறிஞ்சிப் பாட்டு தோழியின் சொல்வன்மைக்கு ஒப்பற்ற சான்றாக விளங்குகிறது. கபிலரின் கவித்திறத்திற்கு அது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 'அறத்தொடு நிற்றல்" என்ற அழகிய துறையின் அருமையும் இதனால் விளங்குகிறது. தலைவியின் கற்பு திரியாத ஒழுக்கம், தலைவனின் நிலை மாறாத ஆண்மை, செவியின் அன்பு நிறைந்த கண்டிப்பு, தோழியின் அறிவு நிறைந்த திறமை இவையனைத்தும் இப்பாடலில் சொல்லோவியமாக நிற்கின்றன. இவளுக்கு வந்த நோய் காதல் நோய் என்று அறியாமல் நீயும் வருந்துகிறாய். தெய்வத்தை வாழ்த்தியும் வணங்கியும், வழிபட்டும் நீ துன்புறுகிறாய், என்று தொடங்குகிறாள் தோழி. அவள் "எய்யா மையலை நீயும் வருத்துதி " (8) என்று பேசும் போது செவிலியின் மீது கருணைகாட்டுபவள் போல் பேசுகிறாள். "இந்தப் பிறவியில் அவரும் நானும் இணைய முடியாவிடினும் அடுத்த பிறவியிலாவது இருவருக்கும் இணைந்த வாழ்வு கிடைக்கட்டும் என்று கூறி மான் போன்ற விழிகள் கலங்கி, ஆறுதல் பெறமுடியாத சிறுமையால் தலைவியும் தேம்புகிறாள் " என்று பேசும்போது தலைவி மீது பரிவு கொண்டவளாகப் பேசுகிறாள்.

"மையல் வேழம் மடங்கலின் எதிர்தர
உய்விடம் அறியேம் ஆகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
தூர்உறு மஞ்ஞையின் நடுங்க " (165–169)

எனறு தலைவனும் தலைவியும் சந்திக்க நேரிட்ட நிகழ்ச்சியைத் திறம்பட உரைக்கிறாள்; யார்மீதும் குற்றமில்லை என்ற முடிவுக்கு வரச்செய்கிறாள். "திடீரென்று வேழம் வந்தது, என்ன செய்வது எனத் தெரியவில்லை. ஓதுங்கிடம் புரியவில்லை. எவ்வாறேனும் தப்பிவிடுவோம் என்ற அச்சத்தில் நாணத்தை மறந்து அவனருகில் நெருங்க மயில்போல் நடுங்கி நின்றோம்? தன்னை வந்து தஞ்சம் அடைந்த பெண்டிரின் அச்சம் நீக்கி ஆறுதல் அளித்தான் அவன்; "உன்னை வாழ்வுத் துணையாகப் பெறுவேன்" என்று வஞ்சினம் கூறி அருவி நீரைக் குடித்தான்,

"மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி
அம்தீம் தெண்ணீர் குடித்தலின் " (209–211)

என்பதால், தலைவன் நேர்மையும் தூய ஒழுக்கமும் நிறைந்தவன் என்பது தெரிகிறது. "அன்னையே இத்துணைக்கும் நடுவில் இன்னது செய்வதென்று அறியாமல் தான் தவிக்கிறேன். மனம் உழல்கின்றேன்." என்று உரைத்துத் தனது தவிர்க்க முடியாத இக்கட்டினை விளக்குகிறாள் அத்தோழி.

குறிஞ்சிப் பாட்டிலே மனித இனத்துக்கெல்லாம் மணியாகத் திகழும் அறிவுரை ஒன்று இடம் பெறுகிறது. முத்தும் மணியும் பொன்னும் மாசடைந்தால் கழுவி அம்மாசைப் போக்கிவிடலாம். ஆனால்,

"சால்பும் வியப்பும் இயல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்துதல் "
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார்" (15–18)

என்பது ஆகும் அது. கற்பும் இயல்பும் ஒழுக்கமும் குன்றினால் எவ்வாறு ஈடு செய்ய இயலும்?

குறிஞ்சிப் பாட்டில் கூறப்படும் மாலைப் பொழுதின் வருணனை சிந்தை கவரும் செவ்விய சித்திரமாகும்.

"ஆன்கணம்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர" (217–218)

"கொடுவாய் அன்றில்
ஓங்கிரும் பெண்ணை அகமடல் அகவ" (219–220)

"கோவலர்
ஆம்பலந் தீங்குழல் தெள்விளி பயிற்ற" (221–222)

"ஆம்பல் ஆயிதழ்க் கூம்புவிட" (223)

"பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயர " (224–225)

என அந்திமாலையைச் சிந்தையில் நிறுத்துகிறார் ஆசிரியர். இவ்வாறு இனிய காட்சிகளும், வருணனைகளும், தெள்ளிய அறிவுரைகளும் நிகழும் குறிஞ்சிப்பாட்டைச் செந்தமிழின் தீம்பாட்டு எனலாம்.

9. பட்டினப்பாலை : இஃது அகப்பொருள் பற்றியது ஆகும். பாலையானது, பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். இப்பாட்டு, பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணைப் பாட்டாதலின் பட்டினப்பாலை என்று பெயர் பெற்றது. இதன்கண் சோழன் கரிகால் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார். 'தலைவன் செலவழுங்கிக் கூறுவது' என்ற துறையில் பட்டினப்பாலை அமைந்துள்ளது. வேறு நாடு செல்ல விழைந்த தலைவன் தன்னெஞ்சை நோக்கித் தலைவியைப் பிரிந்து வாரேன் என்று செலவழுங்கிக் கூறுகிறான். சோழநாடும் காவிரியாறும் இதில் சிறப்பிக்கப் பட்டுள்ளன. காவிரிப் பூம்பட்டினம், கரிகாற் பெருவளத்தானது நெஞ்சப் பாங்கு, அவனது செயலாற்றும் திறன் ஆகியவற்றை அழகுறத் தீட்டியுள்ளார். இப்பாட்டு 301 அடிகளைக் கொண்டது.

இந்நூலின் தொடக்கத்தில் தம் வானநூல் புலமையை ஆசிரியர் புலப் படுத்தியுள்ளார். இப்பாடலின் இடையே வஞ்சியடிகள் வந்துள்ளன. சோழனது துறைமுகப்பட்டினச் சிறப்பு இதில் கூறப்படுகிறது. பூம்புகாரில் பல்வகையான விளையாட்டுகள் நடைபெற்றன. பாடல் ஓர்ந்தும் நாடகம் நயந்தும், வெண்ணிலவின் பயன் துய்த்தும் மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்ததாக ஆசிரியர் கூறுகிறார். ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை ஆசிரியர் தொகுத்த உரைக்கிறார். தலைவியைப் பிரிந்து செல்ல விரும்பிய தலைவன்

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே" (218–220)

என்று கூறி, தான் கடக்க இருக்கும் காட்டின் வெம்மையையும் தலைவியது தோளின் தன்மையையும் ஒப்பிட்டு,

"வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே" (300–301)

என்று சொல்கிறான்.

புகாரினது செல்வச் சிறப்புக்கு ஒரு சான்றினைப் பட்டினப்பாலையில் காண்போம். உலரும் நெல்லைப் பாதுகாக்கும் மகளிர், அதனைக் கவர வந்த கோழியைத தம் பொற்குழையினை எறிந்து விரட்டுவர். அக்குழைகள் சிறார் தெருவில் உருட்டும் சிறு தேர் செல்வதற்குத் தடையாக அமையும் என்று புனைகிறார் புலவர்.

"கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்" (23–25)

என்ற அடிகள் அவை,

வாணிபத்தில் சிறந்து விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். பல்வேறு நாட்டினர் வாணிபத்தின் காரணமாகப் புகாரில் குழுமியிருந்தனர் என்ற செய்தி,

"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்" (216–218)

என்ற அடிகளால் அறியப்படுகிறது.

புகாரில் கோயில் கொடிகள், திருவிழாக் கொடிகள், அறிஞர் பட்டிமன்றக் கொடிகள், பாய்மரக் கொடிகள் எனப் பல்வேறு கொடிகள், கதிரவனுடைய கதிர்கள் நுழையாதவாறு நெருங்கி நுடங்கின என்றுரைக்கிறார் ஆசிரியர். நிறைமதி நாளன்று வலைஞர் மீன் பிடிக்கச் செல்ல மாட்டார்கள்; இல்லத்தில் இருந்து மனைவியருடன் இனிதே பொழுது கழிப்பர் என்ற செய்தியும் இதனால் தெரிகிறது. மதுரையின் சிறப்பை மாட்சிமைப்படக்கூறும் மதுரைக் காஞ்சிபோல் புகாரின் சிறப்பைப் புகழும் பட்டினப்பாலையும் உயர்வும் சிறப்பும் மிக்கதாய்த் திகழ்கிறது.

10. மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) : நன்னன் சேய் நன்னனைப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய இப்பாடல் கூத்தராற்றுப்படை என்றும் வழங்கப் பெறுகிறது. கூத்தரை ஆற்றுப்படுத்துவதாக இதன் பொருள் அமைந்துள்ளதால் இது இப்பெயர் பெற்றது. மேலும் இந்நூலில் மலைக்கு யானையை உவமித்தும் அம்மலையின்கண் ஒழுகும் அருவியின் ஓசையை, யானையின் மத்தகதின்கண் ஒழுகும் மதநீரின் ஓசைக்கு உவமித்தும் கூறியமையால், இது மலைபடுகடாம் எனப்பெயர் பெற்றது. இது 583 அடிகளை உடையது.

"அலகைத் தவிர்த்த எண்ணரும் திறந்த
மலைபடு கடா மாதிரத் (து) இயம்ப "

என்ற அடிகள் நூலின் பெயர்க்காரணத்தைப் புலப்படுத்துகின்றன.

இவ்வாற்றுப்படையில் நன்னனதுகாட்டிற்குச் செல்லும் வழியின் தன்மை, சிவபெருமானின் அருள் முதலியன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

நன்னனது நவிர மலைச் சிறப்பை நவில்கிறார் புலவர் கௌசிகனார். மலையில் எழும் பல்வேறு ஓசைகளை வருணிப்பதன் மூலம் தவிர மலைக்கே நம்மை அழைத்துச் சென்றுவிடுகிறார் அவர். தேவர்கள் நவிரமலை அருவியை நாடி வந்து திளைந்து நீராடுவதால் உண்டாகும் ஓசை, குழாத்தை விட்டு பிரிந்து வந்து தனியே நிற்கும் ஆண்யானை தினைப்புனத்தை அழிக்காதவாறு குறவர் சங்கு ஊதுகின்ற சத்தம் முள்ளம்பன்றி தன் கூரிய முட்களை வீசியதால் காயம்பட்ட கானவர் கதறும் குரல், கொடிச்சியர் தம் கணவரது மார்பில் புலி பாய்ந்து கீறிய புண் ஆறுமாறு பாடும் பாடலின் ஒலி, பூத்திருக்கும் பொன் வேங்கை மலர்களைப் பறிப்பதற்காகப் பெண்டிர் 'புலி புலி' என்று ஒலிக்கும் ஆரவாரம், தூல் கொண்ட பெண்யானையைப் புலி கொன்றமை கண்டு ஆண்யானை அதிருகின்ற பிளிறல், மந்திக்குட்டி ஒன்று தன்தாயை இறுகப் பற்றிக் கொள்ளத் தவறியதால் மலைப்பிளவில் விழுந்து உயிர் நீக்கவே மந்தி தன் சுற்றத்தோடு கூக்குரலிட்டு அழும் அழுகை ஒலி, இம்மென வீழும் அருவியின் இசை, யானைப்பாகர் நீர்ச்சுழலில் சிக்கிய யானையைக் கட்டுவதற்காக அதன் சினம் தணியுமாறு யானை மொழியில் பேசும் அரவம், தினைக்கதில் கவரவரும் கிளிகளை விரட்டும் ஓசை, கரும்பு ஆலைகளில் எழும் ஓசை, தினைகுற்றும் மகளிர் பாடும் பாடல், சேம்பு, மஞ்சள் இவற்றை உண்ண வரும் பன்றிகளை விரட்டுவதற்காகப் பறையடிக்கும் ஒலி, இத்துணை ஒலிகளும் மலையில் மோதி ஓலிக்குமாறு எதிரொலி என மலை ஓசைகளை நம் செவியில் ஒலிக்க வைக்கிறார் கௌசிகனார்.

நவிரமலைக் காட்டு வழியாகச் செல்லும்போது ஏற்படும் ஊறுகளை நீக்கிக் கொள்ளும் முறை இப்பாட்டில் இனிது எடுத்துரைக்கப்பட்டள்ளது. பல்வேறு வழிகள் ஒன்று கூடும் இடங்களில் அவ்வழிகள், இன்ன இன்ன ஊருக்குச் செல்வன என்னும் குறிப்பு எழுதிய கற்கள் நடப்பட்டிருந்தன என்ற செய்தியை அறியவும் இடம் இருக்கின்றது. வழிச்செல்பவர்கள் தமக்குப்பின் வருபவர்களுக்குத் தாம் சென்ற வழியை அறிவிப்பதாக ஊகம்புல்லை முடிந்து இடும் வழக்கத்தை மேற்கொண்டனர் என்னும் செய்தி இப்பாட்டில் தெரிகின்றது.

ஆட்டுத் தோலினால் செய்த வாரினால் தைக்கப்பட்ட படுக்கை முற்காலத்தில் இருந்தது என்பதும், எருமையின் பாலைக்காய்ச்சி, மூங்கில் குழாயின் உள்ளே ஊற்றித் தயிர் தோயவைக்குமத் வழக்கம் உண்டு என்பதும் இப்பாட்டினால் தெரிகின்றன.

ஆகுளி, கொம்பு, குறுந்தூம்பு, கரடிகை, சல்லி, சீறியாழ், பேரியாழ் முதலிய இசைக்கருவியைப்பற்றிய செய்திகளும் குறிஞ்சிப்பண், மருதப்பண் என்னும் பண்களைப் பற்றிய செய்திகளும் இப்பாடலில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

"செங்கண்மா நகரின் வீதிகளில் கடலோசை போன்ற ஆரவாரம் நிறைந்திருக்கும். அங்கே மலைபோன்ற மாளிகைகள் உண்டு. நன்னன் கற்றறிந்தார் சபையில் திகழ்ந்தான். மலையில் பிறந்த ஆறு வளம் சுமந்து கொண்டு கடல் நோக்கி வருதல் போல் யாம் நன்னனிடமிருந்து பொருள் பல பெற்று மீண்டும் வருகிறோம்" என்கிறான் பொருள் பெற்ற பரிசிலன்.

பொதுவாக, ஆற்றுப்படை நூல்கள் ஐந்தும் அக்காலப் புலவர்களின் நல்ல நூற்புலமையைக் காட்டுகின்றன. கற்றுத் துறைபோகிய சங்கப் புலவர் எண்மர் பாடிய இப் பத்துப் பாடல்களால் அக்காலத்தைப் பற்றி நாம் செம்மையாக அறிய முடிகிறது.

2. பதினென் கீழ்க்கணைக்கு நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றுக்குப் பின் இடம் பெறுவது பதினெண்கீழ்க்கணக்கு. இதுவும் அவை போலவே ஒரு தொகை நூலாம். சிலர் சங்க நூல்களாக இவை மூன்றையுமே சுட்டுவர். ஆயின், ஆய்ந்தறிந்தோர் முதல் இரண்டு தொகை நூல்களை மட்டிலும் சங்கநூல்கள் என்பர்; பதினெண் கீழ்க்கணக்கை அங்ஙனம் கூறார். காரணம், இவற்றுள் சில சங்க காலத்தனவல்ல. கி.பி. 3–ஆம் நூற்றாண்டில் களப்பிரர் என்பார் பாண்டியநாட்டின் மீது படையெடுத்துத் தமிழரை வென்று ஆட்சியேறினர். அவர் பிற மொழியாளராதலின் தமிழ் ஓங்கவில்லை. கடைச் சங்கம் அழியத் தொடங்கியது. கி.பி. 470–இல் வச்சிர நந்தி என்னும் சமண முனிவர் 'திராவிட சங்கம்" என்னுமொன்றை நிறுவினார். இச்சங்கத்து நூல்களே பதினெண் கீழ்க்கணக்கு என்பது ஆய்வாளர் துணிவு.

1. சங்க இலக்கியங்களில் ஊன் உண்பதும், கள்ளுண்பதும் குற்றமென்று கருதப்படாத நிலை காண்கிறோம். பதினெண்கீழ்க்கணக்கில் இவை பழியென ஒதுக்கப்படுகின்றன.

2. சங்க இலக்கியங்களின் வழக்குகள் இவற்றில் மிகுதியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஐந்திணை நூல்கள் யாவும் சங்க அகநூல்களின் அடியொற்றி எழுந்தவை.

3. சங்க காலத்தில் இல்லாத வெண்பா–யாப்பு இவற்றில் பெரு வழக்காகி உள்ளது.

4. பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்ற உரைகாரர் கீழ்க்கணக்கு நூலாசிரியரைப் "பிற்காலச் சான்றோர்" என்று குறிப்பிடுகின்றனர்.

5. மேற்கண்டவற்றிலிருந்தே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கத்துக்குப் பிற்பட்டவை என்பதை உணரலாம். கணக்கு என்பது நூலைக்குறிக்கும் சொல். இங்கு, பதினெட்டு நூல்களின் அடிவரையறை கருதி மேற்கணக்கு எனவும், கீழ்க்கணக்கு எனவும் பாகுபடுத்தினர். எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் மேற்கணக்கு எனப்படும்.

மேற்கணக்காவது வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலி, மருட்பா என்னும் ஐந்து பாக்களிலும், இலக்கணமரபுப்படி 50 முதல் 500 வரையுள்ள செய்யுட்களை அமைப்பது.

"ஐம்பது முதலா ஐந்நூ (று) ஈறா
ஐவகைப் பாகம் பொருள்நெறி மரபின
தொகக்கப் படுவது மேற்கணக்காகும். "

என்பது பன்னிருபாட்டியல்.

கீழ்க்கணக்காவது, அடியளவில் குன்றி, பெரும்பான்மை வெண்பாவானும் சிறுபான்மை அவ்வகையான வேறு செய்யுளானும் அறம், பொருள் இன்பம் குறித்துப் பாடப்படுவதாகும்.

"அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்"

என்பது பன்னிருபடலம்.

"வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சில்மென் மொழியால் தாய பனுவலோடு
அம்மைதானே அடிநிமிர் பின்றே"

என்ற தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவுக்கு உரைகண்ட பேராசிரியர் "சிலவாக என்பது எண்ணுச் சுருங்குதல், "மெல்லியவாதல்" சிலவாகிய சொற்கள் எழுத்தினான் அகன்று காட்டாது சில எழுத்தினான் வருவது. 'அடிநிமிராது' என்றது ஐந்தடியின் ஏறாது என்றவாறு 'தாயபனுவலோடு என்றது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றுக்கும் இலக்கணம் சொல்லும் (போன்று). வேறு இடையிடை அவையன்றியும் செல்வது என்றவாறு அஃதாவது பதினெண்கீழ்க்கணக்கு என உணர்க" என்கிறார்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாவன நாலடியார், நான்மணிக்கடிகை இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணை மாலை நுற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பன. இதை உணர்த்தும் வெண்பா,

"நாலடி நான்மணி நானாற்ப (து) ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ (டு) ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு"

என்பதாம். இவற்றுள் நாலடி, நான்மணி, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, திருக்குறள் என்னும் பதினொரு நூல்களும் புறநூல்கள் ஆகும். கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது"திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை என்னும் ஆறும் "அகப்பொருள்" பற்றிய நூல்களாகும். களவழி நாற்பது "புறப்பொருள்" பற்றியது. மேற்கண்ட வெண்பாவில் உள்ள முப்பால் என்னுஞ் சொல் பற்றி ஆராய்ச்சி நிகழ்ந்தது. இறுதியில், இது திருக்குறளையே குறிக்கும் என்பது புலப்படுத்தப்பட்டது. பதினெண்கீழ்கணக்கில் இடம் பெறுவது இன்னிலையா? கைந்நிலையா? என்ற ஆராய்ச்சியும் எழுந்தது. பின் அது, கைந்நிலையே ஆகும்; இன்னிலை என்ற பெயரில் வெளிவந்துள்ள நூல் பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்தது அன்று என்று உணர்த்தப்பட்டது.

அறநூல்கள்

1. திருக்குறள் : முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்றெல்லாம் சான்றோராற் புகழ்ப்படுவது திருக்குறள். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் உலகு செய்த உயர் தவத்தால் தோன்றிய வள்ளுவர் இந்நூலை அறம், பொருள், இன்பமென வகுத்துக் குறட்பாவால் இயற்றி உலகுய்ய அருளினர். திருக்குறள் தமிழர் தம் உயிர்க்குறுதி பயக்கும் பெருமறையாகப் போற்றப்பெறுவது; ஓதற்கெளியது. சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பது; எச்சமயத்தார்க்கும் எந்நாட்டார்க்கும், எக்காலத்தார்க்கும் பொதுவானது. இதன்பின் எழுந்த நூல்கள் எல்லாம் இதன் மொழியையும், பொருளையும் பொன்னே போற் போற்றும் பெருமை வாய்ந்தது. பிறமொழிபலவற்றிலும்; மொழி பெயர்க்கப்பட்டுள்ள முதன்மை வாய்ந்தது. நவில்தொறும் நறுஞ்சுவை பயப்பது. புறவிருள் நீக்கும் கதிரோன் போன்று அகவிருள் நீக்கும் அருமையது.

குறளின் சிறப்புக்களைத் திருவள்ளுவமாலை தெற்றெனக்காட்டுகிறது.

"எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்" (மதுரைத் தமிழ் நாகனார் 29)

என்றும்,

"சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவர் அல்லால்" (அரிசில்கிழார் 13)

என்றும்,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் (கு) ஒரு நீதி "

என்றார் சுந்தரம்பிள்ளை,

அமைப்பு

அறம்: முப்பாலில் உள்ள 1330 குறள்களும் 133 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கும் பாயிரமாகத் திகழ்கின்றன. அறத்தை இல்லறமென்றும், துறவறமென்றும், ஊழ்என்றும் ஆசிரியர் பாகுபாடு செய்துள்ளார். அன்பு, விருந்து, ஒப்பரவு, ஈகை, போலும் அறங்களும், அருள், மெய்யுணர்வு, அவாவின்மை, தவம், துறவு போலும் துறவறங்களும் விரித்துரைக்கப்படுகின்றன.

பொருள்: பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னும் மூன்று பகுதிகள் கொண்டது. அரசனின் பண்புகள், கடமைகள் ஆகியவையும் அமைச்சன், ஒற்றன், தூதுவன், படைஞன் ஆகியோரின் இலக்கணமும் கல்வி, அறிவுடைமை, கேள்வி, பெரியார் துணை, கண்ணோட்டம், ஊக்கம், நட்பு, மானம் குடிமை, பெருமை, சான்றாண்மை போன்ற சிறப்பியல்புகளும் இனிது கூறப்படுகின்றன; போர்த்திறன், படையின் சிறப்பு, வீரத்தின் அழகு, காலம், இடம், வலி ஆகியன அறிதல் என்பனவும் உரைக்கப்படுகின்றன; உழவுத் தொழிலின் உயர்வு பேசப்படுகிறது; அரசனுக்கு என்று வள்ளுவர் வகுப்பவை, அனைவருக்குமே பொருந்துவனவாகின்றன.

இன்பம்: இன்பத்துப்பாலை இனிய காவியமெனலாம். சங்க இலக்கியத்தின் மணம் வீசினாலும், இது தனக்கென்று தனித்தன்மையும் புரட்சி நோக்கமும் கொண்டது. ஒவ்வொரு குறளும்

காலத்தால் அழிக்கமுடியாத காதற்காவியம் போன்று அமைந்துள்ளது. வள்ளுவரின் நுண்ணறிவிற்கு இன்பத்துப்பால் ஒரு சான்று. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டு இல்லறம் நடத்த இப்பால் இலக்கணமாய் அமைகிறது. தலைவன், தலைவியரின் உள்ளக்கிளர்ச்சியை ஒருங்கே வெளிப்படுத்திக் காட்டும் பாங்கு இனியது.

"யானோக்குங் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்"

என்னும் குறள் காட்டும் நாடகம் இனியது. ஊடலுக்குக் காரணமாகப் பரத்தையைக் காட்டாமல், பொய்க்காரணம் கொண்டெழும் புரட்சிகரமான ஊடலை வரைகிறார் வள்ளுவர். பொருட்பாலில் வரைவின் மகளிர் என்னும் பகுதியில் பரத்தையரைக் கடிந்த வள்ளுவர் இன்பத்துப் பாலில் ஊடற்காட்சிகளை வரைய அவர்களைக் காரணமாகக் காட்ட விழையவில்லை.

அறநூல்: "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பது உலக வழக்கு. அத்தாய்க்கு ஓர் இடர்நேரிடின் தனயன் தன் உயிர் தந்தேனும் காத்தல் வேண்டும். ஆனால் வள்ளுவர் இதனின்று மாறுபட்டு, ஈன்ற தாயின் பசியைத் தீர்ப்பதற்குக் கூடச் சான்றோர் பழிக்கும் வினை செய்தல் தகாது என்னும் கருத்துப்பட,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (குறள் 656)

என்றுரைக்கிறார். மனிதன் தன் வாழ்க்கையைச் செம்மையாக நடத்த ஏதேனும் ஒரு குறளைத் தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டாலும் சாலும்.

அறிவு நூல்: மனிதன் விலங்கினின்று வேறுபடுவது தன் பகுத்தறிவினால் தான். இதை உணர்ந்த வள்ளுவர் அறிவுக்குச் சிறப்பிடம் தருகிறார். அறிவு ஒன்றினாலேயே அகிலம் முழுவதையும் ஆட்டிப்படைக்கலாம் என்னும் கருத்துப்பட,

"அறி (வு) அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" (குறள் – 421)

எனக் குறள் செய்கிறார். காலம், இடம், வலி ஆகியவற்றை அறிந்து வினையாற்றினால் அது வெற்றி தரும் என்ற உண்மையை விளக்குகிறார். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது அவர் கருத்து.

அரசியல் நூல்: எக்கால, எந்நாட்டு அரசியலுக்கும் துணை புரிவதாக உள்ள பொருட்பால், இக்கால அரசியலார்க்கும் அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது. அரசனின் கூறுகள் ஆளும் முறைகள், செங்கோன்மை, படை அமைப்பு, போர்விதிகள், நாட்டின் பொருளியல் முதலிய அனைத்தையும் வள்ளுவர் கூறுகிறார். மக்களுக்காகவே மன்னன் என்பதே அவர் கொள்கை. மக்கள் கொதித்தால் மன்னன் அழிவான் என்ற கருத்தை,

"அல்லற்பட்(டு) ஆற்றா(து) அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள் 555)

என்ற குறளில் காட்டுகின்றார்.

உணர்ச்சி நூல்: ஐம்புலனுக்கும் இன்பம் தருவது காதலின்பமே ஆகும். அது மெய் வழிப்படாமல் உணர்வு வழிப்படலே சிறந்தது. உணர்வுகள் ஒன்றும் போதுதான் உண்மைக் காதல் பிறக்கிறது. இந்த உணர்வின்பத்தை வெறும் உடலின்பமாகக் காட்டவில்லை வள்ளுவர்.

"தம்மில் இருந்தது தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" (குறள் 1107)

என்று அவ்வின்பத்துக்கு உயரிய உவமை காட்டுகிறார்.

காலம்: வி.ஆர்.ஆர். தீட்சிதர் திருவள்ளுவர் காலம் முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கு உட்பட்டதாகலாம். என்பர். கி.பி. 6–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தே தோன்றியிருக்க வேண்டும் என்பர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. வேறுதக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் திருவள்ளுவர் காலம் ஏறத்தாழ கி.மு. 1 முதல் கி.பி. 300க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும் என்பது மா. இராசமாணிக்கனாரின் கருத்தாகும். மறைமலையடிகள், வள்ளுவர் கிறித்துவுக்கு 30 ஆண்டுகள் முற்பட்டவர் என நிறுவுவார்.

உரைகள்: திருக்குறளுக்கு உரைகண்டவர், தருமர், தாமத்தர், நச்சர், மல்லர், பரிதிபெருமாள், காளிங்கர், பரிமேலழகர், மணக்குடவர், திருமலையர் என்னும் பதின்மர். இவைகளில் பரிமேலழகர் உரையே தலையாயதாகக் கூறப்படுகிறது. பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்படுவதாயும், அறிஞர் பலரின் ஆய்வுக்குரியதாயும் திகழ்கிறது குறள். திருக்குறளை வீரமாமுனிவர் இலத்தீனில் மொழிபெயர்த்தார். ஜி.யு.போப் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்துள்ளார். கிரால் என்பவர் செர்மனிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார். ஏரியல், பிரெஞ்சு மொழியில் மொழியெர்த்துள்ளார். "அறிதோ(று)ம் அறியாமை கண்டற்றால்" என்பது அவரது திருக்குறளுக்கே பொருந்தும்.

2. நாலடியார்

வரலாறு : தாங்கள் தங்கியிருந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்டமையின் 8000 சமண முனிவரும் பாண்டிய நாட்டு மதுரையம்பதியில் வந்து தங்கினார். உக்கிரப்பெருவழுதி அவர்களுக்கு உண்டி, உறையுள் முதலியன கொடுத்து உபசரித்தான். தங்கள் நாடு செழிப்புற்ற பின்னர்த் தத்தம்நாடு செல்ல முனிவர்கள் அரசனைப் பலமுறை வேண்டினர். முனிவர்களின் புலமையை அறிந்த மன்னன் அவர்களுக்கு விடைதராமல் காலம் தாழ்த்தி வந்தான். அஃதறிந்த முனிவர்கள் தலைக்கொரு வெண்பாவாக 8000 வெண்பாக்கள் எழுதித் தங்கள் இருக்கையின் கீழிட்டுப் பிறரறியாவண்ணம் இரவில் மதுரையை விட்டு நீங்கினர். மறுநாட்காலை மன்னன் முனிவர்களைக் காணாமல் கவலை கொண்டான். அவர்களுடைய இருக்கைகளைப் பார்த்த பொழுது 8000 பாக்கள் இருந்ததைக் கண்டு அப்பாக்களிலே ஒன்றிற்கொன்று ஒப்புமை இல்லாமையின் வையையாற்றுள் அப்பாக்கள் அடங்கிய சுவடிகளை எறியுமாறு பணித்தான். எறியப்பட்ட பாடல்களில் 400 எதிரேறிக் கரை சேர்ந்தன. அங்ஙனம் கரை சேர்ந்தமையைக் கேட்டு மன்னன் வியந்து அவற்றைத் திரட்டி ஒரு நூலாக்கி "நாலடியார்" எனப் பெயரிட்டான். இதனைப் பதுமனார் என்ற சமணப் பெரியார் தொகுத்து வைத்தார் என்பர்.

(குறளைப் போன்றே இந் நூலிலும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பகுப்புகள் உள்ளன.) இதில் குறள் கருத்துக்களும் விரவிக் காணப்படுகின்றன.

திருக்குறளை மணி என்றால், அதன் ஒளி நாலடியார் எனலாம்.

"நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"
"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"

என்னும் தொடர்களால் நாலடியாரின் சிறப்பினை அறியலாம். விழுமிய சொல்லும் கெழுமிய பொருளும் கொண்டு, செறிவும் தெளிவும் நிரம்பி, நாற் பொருளையும் நவிலும் நூல் இது.

"விளக்குப் புக இருள் மாய்ந்தாங் (கு) ஒருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம்" (நாலடியார் 51)

என்று தவத்தின் சிறப்பை இது உரைக்கின்றது.

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
போர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை" (நாலடியார் 70)

என்று கூறிச் சினமடைதல் தகாதென்று இந்நூல் வலியுறுத்துகிறது.

இவ்வையகமே பெறுவதாயிருந்தாலும் பொய் கலந்த சொல் சொல்லல் தகாது; பசுவின் பெரிய கூட்டத்துக்குள்ளும் கன்று தன் தாய் நாடிக் கொள்ளல் போன்று, செய்த வினை செய்தவனையே சேரும்; புற அழகு அழகன்று; கல்வி அழகே அழகு; மதி மறுவாற்றும்; சான்றோர் மாசு ஆற்றார்; நெய் தீர்ந்தவுடன் விளக்கொளி தீர்வது போல், பொருள் தீர்ந்தவுடன் பொதுமகளிர் அன்பும் தீரும் என்பன போன்ற உயரிய கருத்துக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

பெருமுத்தரையரைப் பற்றிய குறிப்புக்கள் நாலடியாரில் காணப்படுவதால் இந்நூல் ஏறத்தாழக் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றியிருத்தல் வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

3. நான்மணிக்கடிகை : விளம்பி என்னும் ஊரில் பிறந்த நாகனாரால் இது இயற்றப்பட்டது. திருமால் வாழ்த்து இதன் முதற்கண் உள்ளதால் இவரை வைணவர் என்பர். இதன் ஒவ்வொரு பாட்டிலும் நந்நான்கு நீதிகள் கூறப்படும்; நான்கு வகை மணிகளால் ஆக்கப்பட்ட கடிகை என்னும் அணிகலன் போல அழகுடன் விளங்குதலால் இது நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது 101 வெண்பாக்களாலாகிய இச் சீரிய நூல் கற்றாரால் பாராட்டப்படுகின்றது. இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்தது. அஃது, ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ள எண்வகை நூல் வனப்புகளும் அம்மை என்னும் வனப்பின்பாற்படும் என்பது பேராசிரியர், நச்சினார்க்கினியரின் கருத்தாகும்.

நெல்லும் கரும்பும் நிலத்துக்கு அணி; தாமரை. குளத்துக்கு அணி; நாணம் பெண்ணுக்கு அணி; ஈன்றாளோடு எண்ணைக் கடவுளுமில்; கொண்டானின் சிறந்த கேளிர் பிறர் இல்லை; உலகம், கல்லாத மூத்தவனைக் கைவிட்டுக் கற்றானின் இளமை பாராட்டும்; கற்றான் தளர்ந்தால் எழுந்திருக்கும்; கல்லாத பேதை வீழ்ந்தால் கால் முறியும் என்பன போன்ற உயர்ந்த கருத்துக்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

"மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய
காதற் புதல்வருக்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதிற் புகழ்சால் உணர்வு" (நான்மணி 101)

என்ற பாடல் படித்தின்புறத் தக்கதாகும்.

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; மான் வயிற்றில் அரிதாரம் பிறக்கும்; கடலுள் முத்து பிறக்கும்; அதுபோல கீழ்க்குடியிலும் உயர்ந்தோர் பிறக்கலாம்.

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை; கணவனைவிடச் சிறந்த உறவில்லை; மக்களிற் சிறந்த பொருளில்லை.

இனி, "விலைப் பாலிற் கொண்டூன் மிசைதலும் குற்றம்" எனவும் கொலைப்பாலுங் குற்றமேயாம் எனவும் கூறப்பட்டிருப்பதை நோக்குமிடத்துப் "புலாலுண்ணாமை", "கொல்லாமை"

ஆகியவை இரு சிறந்த பேரறங்களாக நிற்க வேண்டும் என்ற ஆசிரியரின் உள்ளக்கிடக்கையை உணரலாம்.

"இனிதுண்பான் என்பான் உயிர்க்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகன் ஒழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்ந்நன் றில்லான்
இனியனெனப்படுவான் யார்யார்க்கே யானம்
முனியா ஒழுக்கத் தவன்" (நான்மணி. 58)

அவ்வாசிரியர் கூறியுள்ள அறிவுரைகள் சில;

"வெல்வது வேண்டின் வெகுளிவிடல்" (நான்மணி 15)
"தனக்குப் பாழ் கற்றறிவில்லா உடம்பு" (நான்மணி 20)
"தன்னோடு செல்வது வேண்டின் அறஞ்செய்க" (நான்மணி 15)
"கொடுப்பின் அசனங் கொடுக்க" (நான்மணி 79)
"குலனும் குடிமையுங் கல்லாமை" (நான்மணி 80)
"அல்லவை செய்வார்க் கறங்கூற்றம்" (நான்மணி 82)
"யார்மாட்டும் கொள்ளாமை வேண்டும் பகை" (நான்மணி 85)
"வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்" (நான்மணி 91)

என்பனவாம்.

4. இனியவை நாற்பது : இதன் ஆசிரியர் பூதன்சேந்தனார். இது கடவுள் வாழ்த்து உட்பட 41 வெண்பாக்களையுடையது. இதிலுள்ள ஒவ்வொரு பாடலும் இன்னது இனிது எனக் கூறலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. இது, துன்பம் நீங்கி இன்பம் எய்துதற்குரிய இனிய நெறிகளைச் சொல்வது. பிச்சை புக்காயினும் கற்றல் மிக இனிது; ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை இனிது; பிணியின்றி வாழ்தல் இனிது; வருவாய் அறிந்து வழங்கல் இனிது. நன்று பயன் தூக்கி வாழ்தல் நனி இனித. இளமையை மூப்பின்றி உணர்தல் இனிது முதலிய கருத்துக்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இதில் குறட் கருத்துக்களும் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

இந்நூல் ஆசிரியர் தொல்காப்பியரால் கூறப்பெற்றுள்ள அம்மை என்னும் வனப்பு அமையப் பெற்றது.

"தானம் கொடுப்பான் தகையாண்மை முன் இனிதே
மானம் படவரின் வாழாமை முன் இனிதே
ஊனங்கொண் டாடார் உறுதி உடையவை
கோள் முறையாற் கோடல் இனிது" (இனியவை நாற்பது 27)

கயவரைக் கடிந்து வாழ்தல், உயர்வுகள் எண்ணி ஊக்கம் பிறத்தல், எளியவர் இவர் என்று இகழாமை ஆகிய செயல்கள் இனியவை என்று இதில் கூறப்பட்டுள்ளன.

இனியவை நாற்பது என்பதில் தோர்ந்து தெளிந்த கருத்துக்களே இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பல அன்றாட வாழ்க்கைக்க மிகுதியாகப் பயன்படுவன.

"கடமுண்டு வாழாமை காண்டலினிதே" (இனியவை நாற்பது. 10)
"கொல்லாமை முன் இனிது" (இனியவை நாற்பது. 5)

"பங்கமில் செய்கைய ராகிப் பரிந்து
யார்க்கும் அன்புடையராதலினது" (இனியவை நாற்பது. 9)

"குழவி தளர்நடை காண்டல் இனிதே .
அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே" இனியவை நாற்பது. 14)

"மன்றில் முதுமக்கள் வாழும் பதி இனிதே" (இனியவை நாற்பது. 18)

"நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனியினிதே" (இனியவை நாற்பது. 19)

"அறம்புரிந் தல்லவை நீக்கலினிதே" (இனியவை நாற்பது. 21)

"ஊர்முனியா செய்தொழுகும் ஊக்கம் மிக இனிதே" (இனியவை நாற்பது. 33)

"கயவரைக் கை இருந்து வாழ்தல் இனிதே" (இனியவை நாற்பது. 29)

"துச்சிலிருந்து துயர்கூரா மாண்பினிதே" (இனியவை நாற்பது. 39)

என்ற பாடல்களில் வாழ்க்கைக் கருத்துக்கள் நெஞ்சத்தில் பதிவனவாய் அமைந்துள்ளன.

5. இன்னா நாற்பது : நல்லிசைப் புலவர் கபிலர் இயற்றியது இந்நூல். அவர் சங்ககாலக் கபிலரிலும் வேறுபட்டவர். இந்நூல் கடவுள் வாழ்த்து உள்பட 41 வெண்பாக்களைக் கொண்டது. இதன் காலம் கி.பி. 50 முதல் 425 வரை ஆதல் வேண்டும். இதிலுள்ள ஒவ்வொரு பாடலும் இன்னவை இன்னாமை பயப்பன எனக் கூறலின் இது இப்பெயர் பெற்றது. இவ்வாசிரியர், துன்பத்தின் மூலங்கள் இன்னின்ன எனக்கண்டு அவற்றைத் தொகுத்துரைப்பது பாராட்டற்பாலாது. இந்நூலில் இவர், 164 இன்னாத பொருட்களை எடுத்துரைக்கின்றார்.

தந்தையில்லாத புதல்வன் அழகு இன்னா; ஆர்த்த மனைவி அடங்காமை நன்கின்னா; கொடுங்கோல் மறமன்னர்க் கீழ்வாழ்தல் இன்னா; குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா; ஆற்றலில்லாதான் பிடித்த படை இன்னா; தீமையுடையார் அயலிறுத்தல் இன்னா; திருவுடையாரைச் செறலின்னா; உடன்பாடில்லாத மனைவி தோள் இன்னா, பிறன் மனையாள் பின்னோக்கும் பேதமை இன்னா; ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் இன்னா; உண்ணாது வைக்கும் பெரும் பொருள் வைப்பின்னா முதலிய கருத்துக்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல், திருவுடையாரைச் செறல், பெருவலியார்க்கு இன்னாசெயல், உண்ணாமல் பெரும் பொருள் சேர்த்து வைத்தல்; பகைவர் நட்பு, கண்ணில்லாதவனின் அழகு முதலியவை விரும்பத்தகாதவை என இதில் கூறப்பட்டுள்ளன.

"பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண்ணறியா மாந்தர் ஓழுக்குநாள் கூற்றுஇன்னா
மண்ணின் முழவின் ஒலிஇன்னா ஆங்கின்னா
தன்மை இலாளர் பகை" (இன்னா நாற்பது 31)

6. திரிகடுகம் : இதன் ஆசிரியர் நல்லாதனார். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்றாலாகிய மருந்து திரிகடுகம் எனப்படும். இம்மருந்து மாந்தரின் உடல் நோயைத் தீர்த்து நலம் பயப்பது. அது போன்று இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலும் மும்மூன்று உறுதிப்பொருட்களை உரைத்து உள்ளத்திருளைக் கடிந்து, இம்மை மறுமை இன்பங்களைத் தருதலின் இது திரிகடுகம் எனப் பெயர் பெற்றது. 101 வெண்பாக்களால் இந்நூலையாத்துள்ளனர்.

நல்ல நூல்களைக் கற்றுத்தரும் ஆசிரியர் இல்லாத ஊரும் பிணக்கினைத் தீர்க்கும் மூத்தவரில்லாத அவையும், பகுத்துண்ணும் தன்மையில்லாதவர் அயலிருப்பும் ஆகிய இம்மூன்றும் நன்மை பயவாதவை என்கிறார் புலவர். தன்னைத்தானே வியந்து கொள்ளுதலும், வீணே வெகுளி பெருக்குதலும், பொருள் வெஃகுதலும் ஆகிய இம்மூன்றும் செல்வம் உடைக்கும் படை என்கிறார்.

காலையில் எழுந்து செய்ய வேண்டிய செயல்களைப் பற்றி ஆசிரியர் விளக்குகின்றார். விடியற்பொழுதும், அந்திப்பொழுதும் தெய்வத்தைத் தொழுதல் வேண்டும்; நீராடிக் கால்கழுவி வாய்பூசி உணவு உண்ணுதல் வேண்டும்; பொய், புறஞ்சொல்லல், பிறர் பொருளை விரும்புதல், பொறாமை ஆகிய இவை நான்கும் சிந்திக்கத் தகாதவை; ஒருவரிடத்தில் ஒன்றைச் சொல்லும் போது சில எழுத்தினாலே பொருளடங்கக் காலத்தால் சொல்லுதல் வேண்டும் என்பன போன்ற அரிய நீதிகள் இந்நூலில் காணப்படகின்றன. இவை தவிர நீராடும் முறை, அணியும் ஆடைமுறை, உணவு உட்கொள்ளும் முறை, உறங்கும் முற்றை, நீர் அருந்தும் முறை, இல்லம் பேணும் முறை, ஓதவேண்டிய முறை ஆகியவற்றையும் ஆசிரியர் சொல்லுகிறார்.

விருந்தினர், மூத்தோர், பசு, பிள்ளை இவர்களுக்கு ஊண்கொடுத்து உண்பர். ஒழுக்கம் பிழையாதவர் புகழோடு வாழ விரும்புவர். மின்னொளி, வீழும் விண்மீன், வேசையர் கோலம் ஆகியவற்றைக் காணலாகாது. தன்னுடம்பு, தாரம், அடைக்கலம், வைப்புமுதல் ஆகியவற்றைப் பொன் போல் போற்ற வேண்டும். சூதர் கழகம் பாம்புகள் உறையுமிடம் ஆகியவிடங்களில் புகக் கூடாது.

"உண்ணுங்கால் நோக்குந் திசைகிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ யாண்டும்
பிறிதியாது நோக்கா னுரையான் தொழுதுகொண்டு
உண்க உகா அமை நன்கு" (ஆசாரக்கோவை. 20)

8. சிறுபஞ்சமூலம் : இதன் ஆசிரியர் காரியாசான். இவர் சமணர் என்பர். கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர்கள் சிறுபஞ்சமூலம் எனப்படும். இம்மருந்து மக்களது உடல்நோயைப் போக்கி நலம் செய்யும். அதுபோல மக்களது அகநோயைப் போக்கி அருநலம் தரும் ஐந்து உண்மைகளைக் கொண்டு ஒவ்வொரு பாடலும் திகழ்வதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. 102 வெண்பாக்களையுடையது இந்நூல்,

"மயிர் வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர் வனப்பும் காதின் வனப்பும்–செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு" (சிறு பஞ்சமூலம் 35)

என்னும் பாடல் எது உண்மையான அழகு என்பதைத் தெளிவுறக் காட்டுகிறது.

பண்வனப்பு கேட்டார் நன்று என்றல்; கற்றவர் தேவர்; கல்லாதவர் பூதர்; குணமில்லாதவனுமில்லை; குற்றமில்லாதவனுமில்லை; தோற்கன்று காட்டிப் பால்கறத்தல் பழிதருவது என்பன போன்ற உயர்ந்த கருத்துக்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

நாணமில்லாதவன் சால்பும் ஒழுக்கமில்லாதவன் நோன்பும் செந்தமிழ் தேற்றான் கவிச்செயலும் நகைப்பைத் தரும். பொய்யாமை, பொன்பெறினும் கள்ளாமை, மெலியாரை வையாமை, பெண்களிடத்தில் மயக்கமுறாமை, ஊன் உண்ணாமை போன்றவை வாழ்க்கைக்கு நன்மை பயப்பனவாகும்.

அழியாமை, பழியாமை, கன்று சாவப் பால் கறவாமை போன்ற கொள்கையுடையவர் களின் இல்லம் சார்தல் நலம் பயக்கும்.

"வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் – சீர்சான்ற

தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்க முலகு" (சிறு பஞ்சமூலம் 44)

ஐந்து உண்மைகளுக்கும் இடையே ஒருமைப்பாடு கண்டு அவற்றை அம் முடிபிற் கோக்கும் திறன் இதில் அழகுடன் விளங்குகிறது. தூக்கணங்குருவியின் கூடு, பேரெறும்பின் செம்மெழுகு, உலண்டுப்புழுவின் நூல், கோற்புழுவின் கோற்கூடு தேனின் கூடு, ஆகிய ஐந்தின் செயல்திறனைக் கூறி, "ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது" என்ற கருத்தைக் கூறுகிறார்.

"வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிப் புலவர் பல அரிய உண்மைகளை இவ்வாறு புலப்படுத்துகிறார்.

9. பழமொழி: இதன் ஆசிரியர் மூன்றுறையரையனார். இவர் சமணசமயத்தவர் என்பர். உலகோர் வழங்குகின்ற பழமொழிகளை ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் உரைப்பதால் இந்நூல் பழமொழி எனப்பெயர் பெற்றது. இந்நூல் 400 வெண்பாக்களையுடையது. இந்நூலிலே மூவேந்தரைப் பற்றிய பலவரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன. இப்போது வழக்கில்லாத பழமொழிகளும் இந்நூலில் உள்ளன.

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்" (பழமொழி 21)

என்னும் பாடல், கரிகாற்சோழனின் வரலாற்ற நிகழ்ச்சியை உணாத்துவதாக அமைகின்றது. பெரியவர்கட்குச் செய்யும் சிறப்பைச் சிறியவர்கட்குச் செய்தல் நாய்க்குத் தவிசிடுமாறு என்றும், பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது என்றும் ஒரு பானைச் சோற்றினை ஒரு சோற்றால் அறிதல் போல் ஒருவன் இயல்பினை அவன் செயல் ஒன்றினால் அறியலாம் என்றும் உரைக்கிறார் ஆசிரியர். இந்நூலில் இடம்பெறும் சில பழமொழிகள் வருமாறு;

"கற்றலிற் கேட்டலே நன்று"
"தமக்கு மருத்துவர் தாம்"
"பொருள்கொடுத்துக் கொள்ளார் இருள்"
"கெட்டார்க்கு நட்டாரோ வில்"
"பாம்பறியும் பாம்பின் கால்"
"அணியெல்லாம் ஆடையின் பின்"
"காணா ரெனச் செய்யார் மாணாவினை"
"நாய் கொண்டால், பார்ப்பாரும் தின்பர் உடும்பு"
"ஒருவர் பொறை இருவர் நட்பு"
"ஈனுமோ வாழை இருவர் குலை"
"வருந்தோர் வாழ்க்கை திருந்துதலின்""
"புல்மேயா தாகும் புலி"
"திரையவித் தாடார் கடல்"
"தினலாமோ, அக்காரம் சேர்ந்த மண""
"பெண் பெற்றான் அஞ்சான் இழவு"

"நுணலும் தன் வாயால் கெடும்"

"முதலிலார்க்க ஊதியமில்"

"மரத்தின் கீராகாமரம்"

"அறிமடம் சான்றோர்க்கணி"

பெரும்பாலும் திருக்குறளில் உள்ள அதே கருத்துக்கள் அதே பெயர்களைக் கொண்ட அதிகாரங்கள் இதிலும் அடங்கியுள்ளன.

கல்வியின் சிறப்பு, கல்லாதவர்களின் இழிவு, அவையறிந்து பேசுதல், அறிவின் சிறப்பு ஒழுக்கத்தின் உயர்வு, இன்னா செய்யாதிருத்தல், பெரியோரைப் பிழையாமை, சான்றோரியல்பு, அவர் செய்கை, கீழ் மக்கள் இயல்பு அவர் செய்கை, நட்பின் இயல்பு, கூடா நட்பு, முயற்சி, வினை முடிக்கும் தன்மை, தெரிந்து செய்தல், பொருளைப் போற்றுதல் போன்றவை இடம் பெறுகின்றன.

"இறப்பார் சிறியவர் இன்னா செயினும்
பிறப்பினால் மாண்டார் வெகுளார் திறத்துள்ளி
நல்ல விறகின் அடினும் நனிவெந்நீர்
இல்லம் சுடுகலாவாறு" (பழமொழி 370)

என்ற பாடல் வெகுளாமையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் தீங்குறுதல் காண்டுமால் பொங்கி
அறைப்பாய் அருவி அணிமலை நாட
உறற்பால யார்க்கும் உறும்." (பழமொழி. 15)

என்ற பாடல் ஊழ்வினையின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றது.

கற்றல் வேண்டுவோன் ஆசிரியரை வழிபடுவான்; நிலை நிற்றல் வேண்டுவோன் தவஞ்செய்வான்; வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி செய்வான்; மிகுதி வேண்டுவோன் வருத்தமடையக் கலங்கான்; பொருளாசை கொண்டவன் நீதிப்படி ஆட்சி நடத்த முடியாது. வலியில்லாதவர் தவஞ் செய்ய முடியாது; ஆசையைக் காட்டிலும் பெரிய வறுமை இல்லை; புகழைக் காட்டிலும் சிறந்த செல்வம் இல்லை; இருப்பவருக்கு ஈதலைக் காட்டிலும் வேறு சிறப்பில்லை; மக்கட்பேறினும் பெரும்பேறில்லை போன்ற உயரிய கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

10. ஏலாதி: இதன் ஆசிரியர் கணிமேதாவியார். இவர் சமண சமயத்தவர். இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 81 வெண்பாக்களைவுடையது. ஏலம், இலவங்கப்பட்டை, சிறுநாவற்பூ, மிளகு, சுக்கு திப்பிலி ஆகிய அறுவகை மருந்தின் பெயர் ஏலாதியாம். அது உடலுக்கு நன்மை தருவது போல, உள்ளத்திற்கு நன்மை கொடக்கும் ஆறு உறுதிப் பொருள்களைச் சொல்லுதலின் இந்நூல் ஏலாதி எனப்பெயர் பெற்றது. சான்றோன் எவ்வாறு இருத்தல வேண்டும் என்பதை,

"கொல்லான் கொலைபுரியான் பிறர்மனைமேல்
செல்லான் சிறியார் இனம் சேரான் – சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை" (ஏலாதி. 19)

என்னும் பாடலில் ஆசிரியர் விளக்குகிறார்.

"இளமை கழியும் பிணிமூப்(பு) இயையும
வளமை வலியிவை வாடும் உளநாளால்
பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்
வீடே புரிதல் வீதி" (ஏலாதி. 21)

என்னும் பாடலில் இவ்வுலகின் நிலையாமையை எடுத்துரைத்துப் பேரின்பத்திற்குரிய நெறியை நாடுமாறு உரைக்கிறார். சாவது எளிது என்றும், சான்றாண்மை காத்தல் அரிது என்றும், நுவல்வது எளிது என்றும் மெய்காத்தல் அரிது என்றும் ஆசிரியர் கூறுகிறார்.

நிறையுடைமை, நீர்மையுடைமை, கொடை, பொறையுடைமை, பொய்கூறாமை, புலாலுண்ணாமை ஆகிய குணமுடையானைத் தலைவனென்று கூறலாம். சாதல், பொருள் கொடுத்தல், இன்சொல் கூறல், நோதல், பிரிவின் இரங்கல், புணர்வின் மகிழ்தல் போன்றவை அன்புடையாரின் ஆன்ற குணங்களாகும்.

"இடைவனப்பும் தோல் வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும் புனைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு" (ஏலாதி – 74)

என்ற பாடலின் மூலம், கல்வியறிவே சிறந்தது என்பதை "எண்ணோடு எழுத்தின் வனப்பே வனப்பு" எனும் அடியில் வலியுறுத்துகிறார்.

11. முதுமொழிக் காஞ்சி: இதன் ஆசிரியர் மதுரைக்கூடலூர் கிழார். பத்துப் பாக்களால் ஆகிய பத்து அதிகாரங்களைக் கொண்டு இந்நூல் திகழ்கின்றது. சிறந்த பத்து, அறிவுப் பத்து, பழியாப் பத்து, துவ்வாப் பத்து, அல்ல பத்து, இல்லைப் பத்து, பொய்யாப் பத்து, எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப் பத்து என்பவை அவ்வதிகாரங்களாகும். ஒவ்வோர் அதிகாரமும் "ஆர்கலியுலகத்து" எனத் தொடங்குகிறது.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்(று) ஒழுக்கமுடைமை"
"வண்மையிற் சிறந்தன்று வாய்மையுடைமை"
"கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று"

முதலிய சிறந்த கருத்துக்கள், சிறந்த பத்தில் காணப்படுகின்றன.

"ஈரம் உடைமை ஈகையின் அறிப"
"சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப"

என்பவை அறிவுப் பத்தில் உள்ள அரிய கருத்துக்களாகும்.

"அறியாத் தேசத்து ஆசாரம் பழியார்"
"சிறியார் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார்"
"அறத்தாற்றின் ஈயாதது ஈகையன்று"
"மறுபிறப்பறியாதது மூப்பன்று"
"இசையிற் பெரியதோர் எச்சமில்லை"
"மக்கட்பேற்றின் பெரும்பேறு இல்லை"

"துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது"

"இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது"

என்பவை முதுமொழிக் காஞ்சி காட்டும் உண்மைகளாகும்.

புறநூல்:

12. களவழி நாற்பது : இதன் ஆசிரியர் பொய்கையார். இவர் சங்ககாலப் பொய்கையார் அல்லர்; போர்செய்து தோல்வியடைந்த கணைக்காலிரும்பொறையைக் கழுமலம் என்னும் இடத்தில் கைப்பற்றிச் சோழன் செங்கணான் சிறையிலிட்ட பொழுது இவர் களம்பாடிக் கணைக்கால் இரும்பொறையைச் சிறையிலிருந்த விடுவித்துக் கொண்டார்.

களத்திடத்து நிகழ்ந்த நிகழ்ச்சியை 40 பாடல்களில் பாடியுள்ளமையால், இந்நூல் களவழி நாற்பது என்னும் பெயர் பெற்றது. களவழி ஏர்க்களம்பாடுதல், போர்க்களம் பாடுதல் என இரண்டாகும். இந்நூலில் யானைப் போர், திருக்கார்த்திகைத் திருவிழா முதலியன குறிக்கப்பட்டள்ளன. போர்க்காட்சிகளை அழகிய உவமைகளால் விளக்கும் திறன் போற்றற்குரியதாகும். பகைவரின் தேர்ச்சக்ரத்தைச் சுமந்தெழும் யானைக்கு, மறையும் கதிரவனைத் தாங்கி நிற்கும் மலையை உவமிக்கிறார்.

"உருவக் கடுந்தேர் முறுக்க மற்(று) அத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை–இருவிசும்பில்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்ற
புல்லாரை அட்ட களத்து" (களவழி நாற்பது – 4)

என்பதே அப்பாடல், வெட்டித் துண்டிக்கப்பட்ட யானைத் துதிக்கை துடித்துப் புரள்வதைப் பாம்பு நெளிவதற்கு ஆசிரியர் ஒப்பிடுகிறார். துதிக்கை துண்டிக்கப்பட்ட வாயினின்றும் சொரிகின்ற குருதியைப் பவளம் சொரிகின்றபைபோலும் என்று உவமிக்கிறர். இரு சிறகுகளையும் பரப்பி அடித்துப் பரந்து பிணத்தைக் கவரும் தோற்றத்தை முழவுப் பண்ணமைப்பானுக்கு ஒப்பிடுகிறார்; மாற்றார் குடைகள் எல்லாம் கீழ்மேலாகக் கிடந்தமை ஆவுதைத்த காளான் குடைகள் போன்றது என்கிறார். மாபெரும் யானைகள் மண்ணிலே வீழ்ந்து கிடந்த தோற்றம், நிலம் கூறுகின்ற மறையினைக் கேட்பது போலிருந்தது என்றுரைக்கிறார். செருக்களத்தில் நடைபெறும் அருவருக்கத்தக்க காட்சிகளையும் அழகிய உவமைகளால் காட்டும் இவர் திறம் வியத்தற்குரியது.

பொய்கை உடைந்த புனல் பாய்ந்தபோது நெய்தற் பூக்களின் இடையே வாளை மீன்கள் பிறழ்தல் போல, வேலும் வாளும் போர்க்களத்தில் மிடைந்து கிடந்தன.

"தெரிகணை யெஃ்த திறந்தவா யெல்லாம்
குருதி படிந்துண்ட காகம் – உருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மால்
தப்பியா ரட்ட களத்து" (களவழி நாற்பது. 5)

என்னும் பாடல் "உதிரம் உண்ட காக்கைகள் உருவிழந்து செம்போத்தின் புறத்தையுடைய சிச்சிலிக் குருவி போன்று காணப்பட்டன" என்று போர்க்காட்சியைக் கற்பனை நயத்துடன் காட்டுகின்றது. யானைகள் மேல் அம்பு பாய்ந்திருத்தல் குருவிகள் கூட்டமாய்த் தங்கியிருப்பது போலுள்ளது என்பது புதிய உவமையாகும்.

"அஞ்சனக் குன்றேய்க்கும் யானை அமருழக்கி
இங்கு லிகக்குன்றே போல் தோன்றும் " (களவழி நாற்பது. 7)

"கண்ணோர் சுடுங்கணை மெய்ம்மொய்ப்ப எவ்வாயும்
எண்ணருங் குன்றிற்குரீ இயினம் போன்றவே" (களவழி நாற்பது. 8)

அகநூல்கள் :

13. கார்நாற்பது : இதன் ஆசிரியர் கடைச்சங்க நல்லிசைப் புலவர் மதுரைக் கண்ணன் கூத்தனார். இவர் காலம் கி.பி. 200க்கு முற்பட்டது. இவர் சமயம் இன்னதெனத் தெரியவில்லை. இந்நூல் அகத்தின் பகுதியாகிய முல்லைத்திணையின்பாற் பட்டதாகும். "கார்காலத்தில் மீள்வேன்" என்று சொல்லிச் சென்ற தலைவன் வராமையினால் தலைவி ஆற்றாமல் வருந்துவதைக் கூறும் 40 வெண்பாக்களையுடையது.

ஐங்குறுநூற்றில் "இளவேனிற் பத்து" இதனுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது. இந்நூலின் ஆசிரியர், மாயோனையும், பலராமனையும், வேள்வித் தீயையும் குறிப்பிட்டுள்ளார். தோழி தலைவிக்குப் பருவங்காட்டி வற்புறுத்தியதையும், தலைவன் பாங்கற்குக் கூறியதையும். தலைவன் நெஞ்சோடு கூறியதையும் உடைய துறைகள் அமைந்த பாடல்கள் பல இதன்கண் இடம் பெற்றுள்ளன. முல்லைக் கருப்பொருட்களால் ஆகிய உவமங்கள் அழகுற அமைந்துள்ளன.

காயாம்பூவிற்கு அஞ்சனமும், கோடல் பூவிற்குப் பாம்பின் தலையும் வானவில்லிற்குத் திருமால் மார்பிலுள்ள மாலையும், இந்திரகோபப்பூச்சி கூட்டமாய்ச் செல்வதற்குப் பவளஞ் சிதறிக் கிடப்பதும் உவமையாகக் கூறிருப்பதன் மூலம் ஆசிரயரது கூர்ந்த நுண்ணறிவினை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கின் தகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை" (கார் நாற்பது. 26)

எனற பாடலில் ஆசிரியர் கார்த்திகை விளக்கினைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நச்சியார்க்கு ஈயவும் நண்ணாரைத் தெறவும் பொருள் தேவை என்பதையும், தாளாண்மையாற் பொருள் தேடுவதே சிறப்பு என்பதையும், நன்கு அறிவிக்கின்றது. கரிய மேகத்திற்கு நெய் பூசப்பட்ட யானையை உவமையாகக் கூறியிருப்பது புதுமையாகும்.

"சென்றநங் காதலர் சேணிகந்தா ரென்றெண்ணி
ஒன்றிய நோயோடிடும்பை பலகூர
வென்றி முரசின் இரங்கி யெழில்வானம்
நின்று மிரங்கு மிவட்கு" (கார் நாற்பது 33)

என்ற பாடல்மூலம், தலைவனைப் பிரிந்த தலைவியினது வருத்தத்தை ஆசிரியர் நன்கு காட்டுகிறார்.

14. ஐந்திணை ஐம்பது : இதன் ஆசிரியர் மாறன் பொறையனார். திணைக்குப் பத்துப்பாடல்கள் வீதம் ஐந்திணைக்குமாக மொத்தம் 50 வெண்பாக்கள் உள்ளன. அன்பின் பாற்பட்ட ஐந்திணை ஒழுக்கத்தினை இந்நூல் திறம்பட எடுத்துரைக்கின்றது. ஆதலின் பாயிரத்தில்

"ஐந்திணை யைம்பதம் ஆர்வத்தின் ஓதாதார்
செந்தமிழ் சேரா தவர்"

எனக் கூறப்பட்டுள்ளது.

முல்லையில் கார்காலத்தோற்றப்பகுதியும், குறிஞ்சியில் இரவுக்காட்சிப் பகுதியும், மருதத்தில் நிலவளன் கூறும் பகுதியும்; பாலையில் களிறும் கலைமானும் தம் பேடையிடத்துக் காட்டும் பரிவுகூறும் பகுதியும், செய்தலில் கடற்கரைக் காட்சிப் பகுதியும் நெஞ்சை விட்டகலா நிழற்படங்களாக உள்ளன.

போரில் இறந்தவருக்கு நடுகல் இடுதல், புண்ணிற்குக் காரம் என்னும் மருந்திடுதல், வேலன் வெறியாடுதல், கடற்கரையில் சிறுவீடு கட்டி விளையாடுதல் போன்ற அக்காலத்துப் பழக்கவழக்கங்களை இந்நூலில் காணலாம்.

முல்லையில் அகத்திணைக்குரிய கருப்பொருளாகிய மாயோனையும் அவன் மருமகன் முருகனையும், செந்தமிழ்த் தெய்வம் சிவபெருமானையும் முன்னர் வைத்துமுல்லையினைச் சிறப்பித்துரைப்பது புதிய உத்தியாகும். கார் காலத்தோற்றம்,

"கோடுயர் தோற்ற மலைமே விருங்கொண்மூக்
கூட நிரந்து தலைபிணங்கி ஓடி
வளிகலந்து வந்துறைக்கும் வானங்காண் டோறுந்
துளிகலந்து வீழ்தருங் கண்"

என்ற பாடலில் சிறப்புறக் கூறப்பட்டிருக்கிறது. மாலைப் பொழுதின் மாண்பு, முல்லை நிலைத்துக் கவின் தலைவியின் கற்புத்திறன் ஆகியவை கற்பார் நெஞ்சைக் கவ்வும் வண்ணம் அமைந்துள்ளன. குறிஞ்சியுள்களவுப் புணர்ச்சிக்குரிய பழக்கங்களும், இரவுக் காட்சிகளும், பகற்பண்புகளும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

15. ஐந்திணை எழுபது : இதன் ஆசிரியர் மூவாதியார் இவர் காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு ஆதல் கூடும் திணைக்குப் பதினான்கு பாடல்கள் வீதம் ஐந்து திணைகளுக்குமாக மொத்தம் எழுபது பாடல்களைக் கொண்டிருப்பதால் இந்நூல் "ஐந்திணை ஏழுபது" எனப் பெயர் பெற்றது. பிற்காலத்தில் ஏடுபெயர்த்து எழுதுவதில் ஏற்பட்ட சிதைவால் நான்கு செய்யுட்கள் மறைய 66 செய்யுட்களே எஞ்சியுள்ளன. கடவுள் வாழ்த்தாக உள்ள பாடல் அதன் சொல் பொருள் நோக்கிப் பிற்காலத்ததாக இருக்கும் என எண்ணப்படுகிறது.

குறிஞ்சிநிலப் பண்புகள் பல்லாற்றான் விரிக்கப்படும் முறைகளும், முல்லையில் கார்காலத்தின் இயல்புகளும், பாலையில் நிமித்தமறிகின்ற தன்மையும், நெய்தலில் தலைமகள் தலைமகனை இயற்பட மொழியும் எழிலும் படித்தின்புறத்தக்கன.

பரத்தையர் தலைமகனை மாலையாற் பிணித்துக் கொண்டு போதல், எருமையின் கழுத்தில் தொண்டுக்கட்டை மாட்டுதல், உறுதிமொழிகளை எழுதுவித்துக்கொள்ளுதல், பல்லி சொல் கேட்டல் போன்ற அக்காலத்துப் பழக்கங்களை இந்நூல் மூலம் அறிய முடிகின்றது.

குறிஞ்சியில் தலைமகள், தலைமகனை இயற்படமொழியயும் எழிலும், இறைச்சிப் பொருளைக் கையாளும் பாங்கும், சான்றவர்கேண்மையின் தன்மையும் குறிஞ்சிப் நிலப்பண்புகள் பல்லாற்றானும் விரிந்துரைக்கப்படும் பான்மையும் எல்லோரும் படித்து இன்புறுதற்குரியனவாகும்.

"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுவந்து மந்தி முலைவருட—கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்" (ஐந்திணை எழுபது. 4)

இதனுள் தலைமகன் அன்பிற்குறையானென்பது மந்திமுலை வருட ஆமா சுரக்கும் அணிமலைநாடன் என்றதனாற் பெறப்படும். முல்லைத் திணையில் கார்கால இயல்பு கவினுறக் கூறப்படுள்ளது.

"இனத்த அருங்கலை பொங்கப் புனத்த
கொடி மயங்கு முல்லை தளிர்ப்ப இடிமயங்கி
யானு மவரும் வருந்தச் சிறுமாலை
தானும் புயலும் வரும்" (ஐந்திணை எழுபது. 20)

என்ற பாடலில் தலைமகள் கார்காலத்தைக் கண்டு, உருகும் தன்மை கவினுறச் சித்திரிக்கப்படுகின்றது.

பாலையில் மறவர்க்கு நடுகல் நடும் சிறப்பும், மறவரின் செயல்களைப் பற்றிய செய்தியும் கூறப்பட்டுள்ளன.

எழுத்துடைக் கல் நிறைக்க வாயில் விழுத்தொடை
அம்மா றலைக்குஞ் சுரநிரைத் தம்மா
பெருந்தகு தாளாண்மைக் கேற்க அரும்பொருள்
ஆகுமவர்க் காதல் அவா"

நெய்தலில், தலைமகள், அல்ல குறிப்பட்ட தன்மையும், தோழி அன்றிலொடு கூறி அமையும் குருடனைச் சான்றாகக் கொள்ளுமாறு கூறும் தன்மையும் கூறப்பட்டுள்ளன.

16. திணைமாலை நூற்றைம்பது : இதன் ஆசிரியர் கணிமேதாவியார். இவர் கி.பி. 5—ஆம் நூற்றாண்டினர். இவர் சமண சமயத்தவர். திணைக்கு முப்பது பாடல்கள் வீதம் ஐந்து திணைகளுக்குமாக மொத்தம் 150 பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன. ஆனால் இன்று 153 பாடல்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

குறிஞ்சியிலுள்ள அறத்தொடு நிற்றற் காட்சியும், நெய்தற்கண் உள்ள பகற்குறிப் பாங்குகளும், பாலை நிலத்தில் உள்ள கொடுங்காட்சிகளும் முல்லை நிலத்தில் உள்ள கார் காலக் காட்சியும், மருதத்தில் உள்ள பாணற்கு வாயில் மறுக்கும் வழக்கமும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

பெற்ற மகனுக்கு ஐம்படைத்தாலி பூட்டிப் பெயரிட்டு முகங் கண்டு தலைவன் மகிழ்தல், தலைவிக்கு முத்துக்களைத் தலைவன் கையுறையாகக் கொண்டு செல்லுதல் முதலிய அக்காலத்துப் பழக்க வழக்கங்களை இந்நூலால் அறியலாம். குறிஞ்சியால் இரவுக்குறி விலக்கல் பகுதியில் குறிஞ்சி நிலத்தின் தன்மை நன்கு விளக்கப்பட்டுள்ளது.

"மானீல மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி
மானீல மால்வரை நாட!கேள்—மாநீலங்
காயும்வேற் கண்ணாள் கனையிருளில் நீவர
வாயுமோ மன்றநீ ஆய்" (திணைமாலை நூற்றைம்பது. 6)

நெய்தலின் கடற்காட்சியும், இரவுக்குறியமைந்த இடத்தின் சிறப்புக்களும் படித்தின்புறவதற்குரியன.

"எங்கு வருதி யிருங்கழித்தண் சேர்ப்ப!
பொங்கு திரையுதைப்பப் போந்தொழிந்த–சங்கு
நரன்றுயிர்த்த நித்திில நள்ளிருள்கால் சீக்கும்
வரன்றுயிர்த்த பாக்கத்து வந்து" (திணைமாலை நூற்றைம்பது. 49)

பெண்மக்கட்கு இடக்கண் துடித்தல் நல்ல சகுனம் என்பதும், தெய்வத் தன்மையால் எதிர்கால நிகழ்ச்சிகளை அறிய விரும்புதல் அக்கால மரபென்பதும் பாலைப்பகுதியிலிருந்து அறியலாம்.

17. திணைமொழி ஐம்பது

இதன் ஆசிரியர் கண்ணன் சேந்தனார். இது திணைக்குப் பத்துப்பாடல் வீதம் ஐந்திணைக்கும் ஐம்பது பாடல்களைக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் கி.பி. 4 ஆம் நூற்றாண்டினதாதல் கூடும்.

நெருப்பருகே நெருங்கிக் குறிர்காயும் வழக்கமும், தலைவனைத் தோழி இரவுக்குறி நயப்பிக்கும் எழிலும் குறிஞ்சியில் கூறப்பட்டுள்ளன. முல்லை நிலத்துக் காட்சிகளும் கார்காலத்துத் தோற்றங்களும், மாலை நேரத்தின் மாண்பும் முல்லையில் கூறப்பட்டுள்ளன.

தேன் வண்டுகள் வேனிற் காலத்துத் தேன் சேர்க்கும் முறையும் தோழி தலைமகளை வாயில் நேரும் முறையும் மருதத்தில் கூறப்பட்டுள்ளன. நெய்தலில் பரத மகளிர் வீட்டமைப்பு மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

குறிஞ்சியில் இறைச்சிப் பொருளைக் கையாளும் ஏற்றமும், நிலப்பண்புகளைக் கூறி விளங்கும் முறைகளும் சிறப்பாக உள்ளன.

"பிணிநிறந் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
மணிமலை நாடன் வருவான்கொல் தோழி
கணிநிற வேங்கை மலர்ந்துவண் டார்க்கும்
மணிநிற மாலைப் பொழுது" (திணைமொபழி ஐம்பது 9)

"பலவின் பழம்பெற்ற பைங்கட் கடுவன்
எல்லென் றிணைபயிரு மேகம்சூழ் வெற்பன்
புலவுங்கொ றோழி! புணர்வறிந்து அன்னை
செலவுங் கடிந்தாள் புனைத்து" (திணைமொபழி ஐம்பது 10)

என்ற பாடலில் இரவுக் குறியில் நயப்பித்தலும், வரைவு கடாயதும் இறைச்சிப் பொருளுணர்த்தியிருத்தலும் காணப்பட்டன.

"விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார்
வரையிடை வாரன்மின் ஐய! உரைகடியர்
வில்லினர் வேலர் விரைந்து செல் அம்பினர்
கல்லிடை வாழ்நர் எமர்" (திணைமொபழி ஐம்பது 5)

"தலைவியைக் காக்கும் உறவினரது கடுச்சொல் அச்சுறுத்தும்; தோளில் தொங்குகின்ற வில் நடுங்கச் செய்யும்; கைவேலோ ஓடச் செய்யும்; விரைந்தோடினும் தொடரும் அம்பு அச்சம் ஊட்டும்; இரங்காத மனத்தினையுடையவர் அவர்கள் கல்லிடை வாழ்பவரல்லரோ? மனமும் கல்லாகத்தானே இருக்கும். எனவே. நீ இரவில் எம் இருப்பிடத்திற்கு வரவேண்டா. இது தலைவனுக்குத் தோழி இடும் அன்புக்கட்டளை.

18. கைந்நிலை : இதன் ஆசிரியர் புல்லங்காடனார். இவர் காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு, இந்நூலில் பாசம், ஆசை, இரசம், கேசம், இடம், உத்தரம் ஆகிய வட சொற்கள் வந்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள இப்பாடல் தொகுதி இன்னிலையா? கைந்நிலையா? என்ற ஆய்வு கிளம்பியது. இரண்டு நூல்களும் வழக்கலிருப்பதால் எதனைத் துணிவது என்று புலவருலகம் மயங்கியது. இறுதியில் கைந்நிலையைத்தான் பதினெண்கீழ்க்கணக்குடன் இயைத்துப் பதினெட்டாக்கினர் ஆய்வார்கள். கைந்நிலைக்குப் பழைய உரை ஒன்று இருந்தாகத் தெரிய வருகின்றது. இதில் 4 பாடல்கள் முழுவடிவம் பெற்று உள்ளன. எஞ்சியுள்ள 15 பாடல்கள் சிதைந்துள்ளன. நெய்தல் திணையிலுள்ள இரங்கல் பொருள் சுவையாக உள்ளது.

"நெடுங்கடல் சேர்ப்ப நின்னோ (டு) உரையேன்
ஒடுங்கு மடற்பெண்ணை யன்றிற்கும் சொல்லேன்
கடுஞ்சூளிற் றான் கண்டு கானலுள் மேயுந்
தடந்தாண் மடநாராய் கேள்" (கைந்நிலை 50)

என்று தலைவி நாரைக்குரைப்பதாக உள்ள பாடல் நயம்பட உள்ளது.

கைந்நிலையில் குறிஞ்சிப் பாடல்கள் பன்னிரண்டும், பாலைப்பாடல்கள் பன்னிரண்டும், முல்லைப்பாடல்கள் பன்னிரண்டும், மருதப்பாடல்கள் இருபத்து நான்கும் அடங்கியுள்ளன.

"அன்னையும் இல்கடிந்தாள் யாங்கினியாம் என்செய்கம்
புன்னையுங் கானலுட் புக்கிருந்தும் நின்னை
நினையான் றுறந்த நெடுங்கழிச் சேர்ப்பற்
குரையேனோ பட்டபழி" (கைந்நிலை 52)

நாரையை நோக்கித் தலைவி இற்செறிப்பைக் கூறியுள்ளதாக அமைந்திருக்கும் இப்பாடல் கற்று இன்புறத்தக்கது.

சிறந்த இயற்கைக் காட்சிகள் இடையிடையே ஒளிர்கின்றன. காந்தள் பூத்த தோற்றத்தைப் புகையென்று அஞ்சிக் களிறு தன் இனக் கூட்டம் நோக்கி ஓடுகிறதாம்.

"காந்தள அரும்பகை யென்று கதவேழம்
ஏந்தல் மருப்பிடைக் கைவைத் தினனோக்கிப்
பாயந்தெழுந் தோடும் பயமலை நன்னாடன்" (கைந்நிலை 9)

இறைச்சிப் பொருளும், உள்ளுறை உவமமும் இனிது விளக்கப்பட்டுள்ளன.

"கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை
எல்லுறு போழ்தின் இனிய பழங்கவுட்கொண் (டு)
ஓல்லென வோடு மலைநாடன்" (கைந்நிலை)

என்ற தொடர், தலைவன் மலைகளைக் கடந்து சென்று தினைப்புனத்தில் இருந்த தலைவியை வேளையறிந்து கண்டு, களவிற் புணர்ந்து, இன்பம் துய்த்து விரைவில் நீங்கினான் என்னும் உட்பொருளைக் கொண்டுள்ளது.

இன்னிலை : பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கைந்நிலை ஒன்றென ஏலாதவர் "இன்னிலை" என்ற அறநூலை ஏற்பர் இது பொய்கையார் எழுதியது. கடவுள் வாழ்த்துடன் 46 வெண்பாக்கள் உள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு பற்றி இது பேசுகிறது. இது பெண்ணுக்கு இலக்கணம் கூறுகிறது.

"ஒத்த உரிமையளா ஊடற்கு இனியளாக்
குற்றம் ஒருஉம் குணத்தளாக் கற்றறிஞர்ப்
பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறித்து
பேணும் தகையினாள் பெண்"

பெண் ஒத்த உரிமையுடையவளாக வேண்டும் என்ற கருத்து நோக்குதற்குரியது.

IV. இலக்கணம்

நான்கு வகைச் சொற்கள்

சொல் என்பது எழுத்துக்கள் தனித்தோ தொடர்ந்தோ ஒரு பொருளை உணர்த்தினால் அது சொல் எனப்படும்.

சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

I. பெயர்ச்சொல் : ஒன்றின் பெயரைக் குறிப்பது பெயர்சொல் எனப்படும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறன் அடிப்படையில் வரும்.

1. பெயர்ச்சொல் எழுவாயாக வரும்.
   (எ.டு) செல்வி சென்றாள்

2. பெயர்ச்சொல் வேற்றுமைகளை ஏற்ற வரும்.
   (எ.டு) கந்தனைப் பார்

3. பெயர்ச்சொல் அடைகளை ஏற்கும்.
   (எ.டு) நல்லக்குழந்தை

4. பெயர்ச்சொல் காலம் காட்டாது.
   (எ.டு) பொன்னன் வந்தான்

5. இருதிணை, ஐம்பால், மூவிடம் என்னும் இவற்றில் ஏதாவது ஒன்றையோ பலவற்றையோ, பெயர்ச்சொல் ஏற்கும்.

   (எ.டு) சாத்தான் வந்தான் – உயர்திணை ஐம்பால் படர்க்கை

பெயர்ச்சொல் வகை : ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவை, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறன் அடிப்படையில் தோன்றும்.

I. பொருட்பெயர் : ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் பெயர்ச்சொல் பொருட்பெயர் எனப்படும்.
   (எ.டு) பூ, பாரதி, குயில்

2. இடப்பெயர் : ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர்ச்சொல் இடப்பெயர் எனப்படும்.
   (எ.டு) மதுரை, திரையரங்கு

3. காலப்பெயர் : காலத்தைக் குறிக்கும் பெயர்ச்சொல் காலப்பெயர் எனப்படும்.
   (எ.டு) காலை, சித்திரை

4. சினைப்பெயர் : ஒரு முழுப் பொருளின் ஒரு பகுதியை மட்டும் குறிக்கும் பெயர்ச்சொல் சினைப்பெயர் எனப்படும்.
   (எ.டு) கண், கால்

5. குணப்பெயர் : நிறம், வடிவம், சுவை, அளவு, தன்மை ஆகியவற்றைக் குறிக்கும்.
   (எ.டு) வெள்ளை, நன்மை

6. தொழிற்பெயர் : ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர்ச்சொல் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.டு) வேட்டை, படித்தல்.

உயர்திணை, அ:றிணை, விரவுப் பெயர்கள்

உயர்திணை : மக்கள், தேவர், நரகர் ஆகியோரைக் குறிக்கும் சொல் உயர்தினை எனப்படும்.

(எ.டு) கண்ணன், அழகன், சிவன்

அ:றிணை : மக்கள், தேவர், நரகர் தவிர்த்த ஏனைய உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் அ:றிணை எனப்படும்.

(எ.டு) கல், மரம், ஆடு

விரவுப் பெயர்கள்: உயர்திணைப் பெயர்கள், அ:றிணைப் பெயர்கள் என்ற இரு திணைகளுக்கும் பொதுவாக விரவி வரும் பெயர்களை விரவுப் பெயர்கள் என்பர்.

(எ.டு) சாத்தன் வந்தான்

காளை வந்தது

2. வினைச்சொல் : வினை அல்லது செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

1. எழுவாயின் தொழிலைக் குறிப்பது வினைச்சொல்

   (எ.டு) செல்வி சிரித்தாள்

2. வினைச்சொல் காலம் காட்டும்.

   (எ.டு) வருவாள் வந்தாள்

3. வினைச்சொல் முற்றாகச் செயல்படும்.

   (எ.டு) அவன் வந்தான்

4. வினைச்சொல் எச்சமாக செயல்படும்.

   (எ.டு) வந்து போனான்

5. வினைச்சொல் வேற்றுமை உருபை எற்காது.

6. வினைச்சொல்லின் விகுதிகள் திணை, பால், எண், இடம் உணர்த்தும்.

வினைச்சொல் வகை

1. தெரிநிலை வினைமுற்று : காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினைச்சொல் தெரிநினைலை வினைச் சொல்லாகும். தெரிநிலை வினைமுற்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்ற ஆறன் அடிப்படையில் வரும்.

(எ.டு) குயவன் குடத்தை வனைந்தான்.

செய்பவன்	–	குயவன்
கருவி	–	மண்
நிலம்	–	வனைதற்குரிய இடம்

செயல் – வனைதல்
செயப்படுபொருள் – குடம்
காலம் – இறந்த காலம்

2. குறிப்பு வினைமுற்று : செய்பவனை வெளிப்படையாக உணர்த்தி காலத்தை வெளிப்படையாக உணர்த்தாத வினைமுற்று குறிப்பு வினைமுற்று ஆகும்.

(எ.டு) பொன்னன், குப்பன்

3. வியங்கோள் வினைமுற்று : வேண்டல், விதித்தல், வாழ்த்தல், வைதல் முதலிய பொருட்களில் மூவிடங்களிலும் ஐம்பால்களிலும் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவாக வரும்.

(எ.டு) வாழ்க, வாழிய, வாழியர்

3. இடைச்சொல் : பெயர்ச்சொல், வினைச்சொல் போல் தனித்து இயங்காது. பெயரோடு, வினையோடு சேர்ந்தோ பொருள் தருவது இடைச்சொல் எனப்படும்.

(எ.டு) வருவான் கொல்

1. இடைச்சொல் தானாகத் தனித்து வராது.

2. இடைச்சொற்கள், ஒன்றோ, பலவோ வரும்.

3. பெயர், வினைகளைச் சார்ந்து வரும்.

சில இடைச்சொற்கள் (1) 'ஏ' கார இடைச்சொல் :

1. தேற்றம் – ஒருவனே தேவன்
2. எதிர்மறை – அவனே வென்றான்
3. ஈற்றசை – மகிழ்ந்தானே

(2) 'ஓகார' இடைச்சொல் :

1. ஐயம் – கயிறோ? அரவோ?
2. எதிர்மறை – அவளோ வந்தாள்
3. வினா – அவரோ பார்த்தார்?

(3) 'கொல்' எனும் இடைச்சொல் :

1. ஐயம் – வருவான் கொல்!
2. அசைநில் – நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டோமால்!

(4) 'உம்' எனும் இடைச்சொல் :

எண் – பாலும் பழமும்
எச்சம் – வளனும் வந்தான்
முற்று – அனைவரும் வந்தனர்
சிறப்பு – மன்மதனும் மயங்கும் அழகு
எதிர்மறை – முதல்வர் வரினும் வருவார்

4. உரிச்சொல்

பெயர், வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிற்கு உரிமை பூண்டு நிற்கும் சொல் உரிச்சொல் எனப்படும்

உரிச்சொல் என்பது இசை, குறிப்பு, பண்பு போன்றவற்றை உணர்த்துவதற்குரிய சொல்லாகி வருவதலால் உரிச்சொல் என்பர்.

நாற்றம், மிகுதி, அச்சம், விரைவு, புதுமை போன்ற 13 பொருட்களில் வரும்.

உரிச்சொல் செய்யூளுக்கே உரிமை பூண்டு வரும் சொல் ஆகும்.

(எ.டு) சாலச் சிறந்தது., நனி பேதை, கடி நகர்

2. வேற்றுமை

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை எனப்படும். வேற்றுமை 8 வகைப்படும். பெயர், ஐ, ஆல், கு, இன்,அது, கண், விளி ஆகியன வேற்றுமை உருபுகள். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை.

1. முதல் வேற்றுமை : முதல் வேற்றுமை பெயர் வேற்றுமை எனப்படும். இதனை எழுவாய் வேற்றுமை என்றும் கூறுவர். இதற்கு வேற்றுமை உருபு இல்லை.

(எ.க) கண்ணன் நல்லவன்.

2. இரண்டாம் வேற்றுமை : இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஆகும். இது செயப்படு பொருளில் வரும். இது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்னும் ஆறு பொருள்களில் வரும்.

(எ.டு) ஆக்கல் – மரத்தை நட்டான்

அழித்தல் – மரத்தை வெட்டினான்

அடைதல் – வீட்டை அடைந்தான்

நீத்தல் – நாட்டைத் துறந்தான்

ஒத்தல் – மரத்தைப் போன்றவன்

உடைமை – கந்தன் பொன்னை உடையவன்

3. மூன்றாம் வேற்றுமை : மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஓடு, ஓடு என்பனவாகும்.

ஆல், ஆன் கருவிப் பொருளிலும், ஓடு, ஓடு என்பன கருத்தாப் பொருளிலும் வரும்.

(எ.டு) தலையால் வணங்கினான் – கருவி

கம்பரால் இயன்ற காவியம் – கருத்தா

மகனொடு தந்தை வந்தார் } உடனிகழ்ச்சி

மகனோடு தந்தை வந்தார் }

4. நான்காம் வேற்றுமை :

நான்காம் வேற்றுமை உருபு 'கு' . இது கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை என்ற ஏழு பொருட்களில் வரும்.

(எ.டு) : பாரி புலவர்க்கு பரிசு வழங்கினான் – கொடை

எலிக்குப் பூனை பகை – பகை

இராமனுக்கு குகன் நண்பன் – நட்பு (நேர்ச்சி)

மாணவர்க்கு பெருமை ஒழுக்கம் – தகவு

தாலிக்கு பொன் – அதுவாதல்

கூலிக்கு வேலை – பொருட்டு

இராமனுக்குத் தம்பி இலக்குவன் – முறை

5. ஐந்தாம் வேற்றுமை : ஐந்தாம் வேற்றுமையின் உருபு இல், இன் ஆகும். இது நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது முதலிய பொருள்களில் வரும்.

(எ.டு) தலையின் இழிந்த மயிரனையர் – நீங்கல்

மழை மேகத்தின் கரியது கூந்தல் – ஒப்பு

மதுரையின் மேற்கே பல்கலைக்கழகம் – எல்லை

படிப்பில் சிறந்தவன் – ஏது

6. ஆறாம் வேற்றுமை : ஆறாம் வேற்றுமைக்கு அது, ஆது ஒருமைக்கும் 'அ' பன்மைக்கும் வரும்.

ஆறாம் வேற்றுமை தற்கிழமை, பிறிதின்கிழமை என்ற கிழமைப் பொருள்களில் வருவதால் இதனைக் கிழமை வேற்றுமை என்பர்.

(எ.டு) எனாது கை

தன கைகள்

7. ஏழாம் வேற்றுமை : ஏழாம் வேற்றுமையின் உருபு 'கண்' ஆகும். ஏழாம் வேற்றுமை இடப்பொருளை உணர்த்தும். ஆறாம் வேற்றுமை தற்கிழமை, பிறிதின்கிழமைப் பொருள்களில் வரும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறின் இடமாக வரும்.

(எ.டு) முகத்தின் கண் குளிர்சசி – பொருள்

கடலின் கண் முத்து – இடம்

காலையில் மலரும் தாமரை – காலம்

விரலில் கண் மோதிரம் – சினை

இளமையின் கண் அழகு – பண்பு

பாட்டின்கண் இசை – தொழில்

8. எட்டாம் வேற்றுமை : எட்டாம் வேற்றுமைக்கு வேற்றுமை உருபு இல்லை. படர்க்கைப் பொருளை முன்னிலைப்படுத்தி அழைத்தல் இதன் பொருள். இதனை விளி வேற்றுமை என்பர்.

(எ.டு) தம்பி வா

தலைவா

தாயே

3. பொருள் இலக்கணம்

அகத்திணை

அகப்பொருள் விளக்கம் : ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தாம் துய்த்த இன்பத்தை புறத்தார்க்கு எடுத்துக் கூற இயலாததாய் விளங்குவது அகம் எனப்படும். அகத்தே நிகழும் ஒழுக்கத்தை எடுத்துக் கூறுவதால் அகம் எனப்பட்டது. அகம் என்பது காதல் வாழ்க்கையைக் கூறுவதாகும்.

அகப்பொருள் வகைகள் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழுவகைப்படும். முதல் ஐந்தும் அன்பின் ஐந்திணைகளாகும்.

இவற்றுள் கைக்கிளை ஒருதலைக்காமம். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.

அன்பின் ஐந்திணைகள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் இவற்றை மையமாகக் கொண்டு பாகுபடுத்தப்படுகிறது.

முதற்பொருள் நிலமும், பொழுதுமாகும். கருப்பொருள் அந்நிலத்தில் உறைந்துள்ள பொருட்கள். உரிப்பொருள் அத்திணைகளுக்குரிய ஒழுக்கம்.

முதற்பொருள் : நிலமும் பொழுதும் முதற்பொருளாகும். பொழுது, பெரும்பொழுது சிறு பொழுது என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது.

நிலம் :

குறிஞ்சி – மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி

முல்லை – காடும் காடு சார்ந்த இடமும் முல்லை

மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்

நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்

பாலை – மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை

பெரும்பொழுது : ஒரு ஆண்டின் உட்பிரிவு பெரும்பொழுது. இது 6 வகைப்படும். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்.

கார்காலம் – ஆவணி, புரட்டாசி

கூதிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை

முன்பனிக்காலம் – மார்கழி, தை

பின்பனிக்காலம்– மாசி, பங்குனி

இளவேனிற்காலம் – சித்திரை, வைகாசி

முதுவேனிற்காலம் – ஆனி, ஆடி

சிறுபொழுது : ஒரு நாளின் உட்பிரிவு சிறுபொழுது எனப்படும். இது ஆறுவகைப்படும். வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம்.

வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை

காலை – காலை 6 மணி முதல் 10 மணி வரை

நண்பகல் – காலை 10 மணி முதல் பகல் 2 மணி வரை

எற்பாடு – பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை

மாலை – 6 மணி முதல் இரவு 10 மணி வரை

யாமம் – இரவு 10 மணி முதல் 2 மணி வரை

உரிப்பொருள் :

குறிஞ்சி – புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

முல்லை – இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

மருதம் – ஊடலும் ஊடல் நிமித்தமும்

நெய்தல் – இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

பாலை – பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

கருப்பொருள் : நிலத்தில் உறைந்து காணப்படும் பொருட்கள் கருப்பொருட்களாகும். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வம், மக்கள், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் போன்றவை கருப்பொருட்களாகும்.

குறிஞ்சி திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள் :

முதற்பொருள் :

நிலம் : மலையும் மலை சார்ந்த இடமும்

பெரும்பொழுது : கூதிர் காலமும், முன்பனியும்

சிறுபொழுது : யாமம்

கருப்பொருள் :

தெய்வம் – முருகன்

மக்கள் – பொருப்பன், வெற்பன், குறவன், குறத்தி

விலங்கு – யானை, புலி, கரடி

ஊர் – சிறுகுடி

நீர் – அருவி, சுனைநீர்

மலர் – குறிஞ்சி, காந்தள்

யாழ் – குறிஞ்சி

உணவு – மலை நெல், தினை

தொழில் –கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல்

உரிப்பொருள் : புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

பாலைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள் :

முதற்பொருள் :

நிலம் : மணலும் மணல் சார்ந்த பகுதியும்

பொழுது :

பெரும்பொழுது – இளவேனில், முதுவேனில், பின்பனி

சிறுபொழுது – நண்பகல்

கருப்பொருள் :

தெய்வம் – கொற்றவை

மக்கள் – எயினர், எயிற்றியர்

விலங்கு – வலியிழந்த புலி, யானை, செந்நாய்

ஊர் – குறும்பு

மலர் – குறுமலர்

யாழ் – பாலையாழ்

உணவு – ஆறலை பொருட்கள்

தொழில் – ஆறலைத்தல், கொள்ளையடித்தல்

உரிப்பொருள் : பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

முல்லைக்குரிய முதல், கரு, உரிப்பொருட்கள் :

முதற்பொருள் :

நிலம் – காடும் காடு சார்ந்த இடமும்

பெரும்பொழுது – கார்காலம்

சிறுபொழுது – மாலை

கருப்பொருள் :

தெய்வம் – திருமால்

மக்கள் – ஆயர், ஆயச்சியர்

விலங்கு – மான், முயல்

மலர் – முல்லை, தோன்றி, பிடவம்

யாழ் – முல்லையாழ்

உணவு – வரகு, சாமை, முதிரை

ஊர் – பாடி, சேரி

தொழில் – ஆனிரைகளை மேய்த்தல், ஏறு தழுவுதல்

உரிப்பொருள் : இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

மருத நிலத்திற்குரிய முதல், கரு, உரிப்பொருட்கள் :

முதற்பொருள் : நிலம் – வயலும் வயல் சார்ந்த இடமும்

பெரும்பொழுது : கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற ஆறு பெரும்பொழுதும் ஆகும்.

சிறுபொழுது – வைகறை

கருப்பொருள் :

தெய்வம்	– இந்திரன்
மக்கள்	– ஊரன், மகிழ்நன், உழவன்
விலங்கு	– எருமை, நீர் நாய்
மலர்	– தாமரை, குவளை
யாழ்	– மருதயாழ்
உணவு	– வெண்ணெல், செந்நெல்
ஊர்	– பேரூர், சிற்றூர், மூதூர்
நீர்	– ஆற்றுநீர், ஊற்றுநீர், பொய்கை
பறை	– மணமுழா, நெல்லரி கிணை
யாழ்	– மருதம்
பண்	– மருதம்
தொழில்	– நெல்லரிதல், களை எடுத்தல்

உரிப்பொருள் :

ஊடலும், ஊடல் நிமித்தமும்

நெய்தல் திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள் :

முதற்பொருள் : நிலம் – கடலும் கடல் சார்ந்த பகுதியும்

பெரும்பொழுது : கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற ஆறு பெரும்பொழுதுகளும் வரும்.

சிறுபொழுது : எற்பாடு

கருப்பொருள் :

தெய்வம் – வருணன்

மக்கள் – பரதன், பரத்தியர், சேர்ப்பன்

விலங்கு – முதலை, சுறா

உணவு – மீன், உப்பு விற்றுப் பெற்ற பொருள்

பூ – தாழை, நெய்தல்

மரம் – புன்னை, ஞாழல்

பறவை – கடற்காகம்

ஊர் – பட்டினம், பாக்கம்

நீர் – உப்புநீர்

பறை – மீன்கோட்பறை

யாழ் – விளரியாழ்

பண் – செவ்வழிப்பண்

தொழில் – மீன்பிடித்தல், உப்பு விளைத்தல்

உரிப்பொருள் : இரங்கலும், இரங்கல் நிமித்தமும்

கைக்கிளை, பெருந்திணை :

கைக்கிளை : கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம் ஆகும். தலைவன் தலைவியருள் ஒருவரிடத்து மட்டும் தோன்றும் அன்பு. இஃது ஆண்பாற்கூற்று கைக்கிளை, பெண்பாற்கூற்று கைக்கிளை என இருவகைப்படும்.

'கைக்கிளை உடையது ஒருதலைக் காமம்' என்கிறது நம்பியகப் பொருள்.

பெருந்திணை : பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் ஆகும். இளமையானும் வயதானும் பொருந்தாத காதல் ஒழுக்கம் பெருந்திணை எனப்படும். இஃது ஆண்பாற் கூற்று பெருந்திணை, பெண்பாற் கூற்றுப் பெருந்திணை என இருவகைப்படும்.

'பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்" என்கிறது நம்பியகப் பொருள்.

புறத்திணை :

புறப்பொருள் : மனமொத்த அன்புடையவர் தாமேயன்றிப் பிறராலும் அனுபவித்து உணரப்பட்டவைகளை, இஃது இப்படிப்பட்டது என்று பிறருக்கு புலப்படுத்தும் இயல்புடையதாய் விளங்கும் உணர்ச்சிகளையும் ஒழுக்கங்களையும் பற்றிக் கூறுவது புறப்பொருள்.

புறத்திணை வகைகள் : (1) வெட்சி (2) கரந்தை (3) வஞ்சி (4) காஞ்சி (5) நொச்சி (6) உழிஞை (7) தும்மை (8) வாகை (9) பாடாண் (10) பொதுவியல் (11) கைக்கிளை (12) பெருந்திணை என புறத்திணைகள் பன்னிரண்டு வகைப்படும்.

தொல்காப்பியர் புறத்திணைகள் 7 என்பார். அவை (1) வெட்சி (2) வஞ்சி (3) உழிஞை (4) தும்பை (5) வாகை (6) பாடாண் (7) பொதுவியல்

புறத்திணைகள் :

1. வெட்சி : போர் தொடுக்க விரும்பும் அரசன் பகைநாட்டிலுள்ள பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வரச் செய்வான். அவ்வாறு கவர்ந்து வரச் செல்லும் வீரர்கள் வெட்சிப் பூவைச் சூடுவர். 'வெட்சி நிரைகவர்தல்' என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.

2. கரந்தை : வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட பசுக் கூட்டங்களை கரந்தை வீரர்கள் கரந்தைப் பூவைச் சூடி மீட்கச் செல்வது கரந்தைத் திணையாகும்.

3. வஞ்சி : மண்ணாசையால் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதிப் போருக்குச் செல்லும் அரசன் வஞ்சிப் பூவைச் சூடி போருக்குச் செல்லுதல் வஞ்சி.

'வாடா வஞ்சி தலைமலைந்து
கூடார் மண்கொளல் குறித்தன்று'

என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.

4. காஞ்சி : ஓர் அரசன் தன் நாட்டின் மீத போர் குறித்து வந்த மாற்றரசனோடு எதிர்சென்று போர்புரிதல். அப்போது வீரர் காஞ்சிப் பூவைச் சூடுவர்.

5. நொச்சி : பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலை, அம்மதிலுக்குரிய அரசன் உள்ளிருந்தே வெளியே இருக்கும் பகைவரோடு நொச்சிப் பூவைச் சூடி போரிட்டு மதிலைக் காத்துக் கொள்வதாகும்.

6. உழிஞைத்திணை : பகைவரின் மதிலைக் கைப்பற்றும் பொருட்டுப் படையெடுத்து வந்து மதிலை முற்றுகையிடுதல் உழிஞைத்திணையாகும். அப்போது உழிஞைப் பூவைப் சூடுவர்.

7. தும்பை : இருபெருவேந்தரும் தத்தம் படைவீரர்களுடன் தும்பைப் பூவைச் சூடி பரந்த போர்க்களத்தில் போரிடுதல் தும்பைத் திணையாகும்.

8. வாகை : போரில் வெற்றி பெற்ற மன்னனது வெற்றிச் செயல்களைப் புகழ்ந்து வெற்றி விழாக் கொண்டாடுவது. அப்போது வாகைப் பூவைச் சூடுவர்.

9. பாடாண் : பாடு + ஆண் + திணை – பாடாண்திணை. பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறுகளைப் புகழ்ந்துரைப்பது. ஆண்மகனது கொடை, அளி, வீரம், புகழ் முதலிய பண்புகளை புகழ்ந்து பாடுவது.

10. பொதுவியல் : வெட்சி முதல் பாடாண் ஈறாக கூறப்பெற்ற திணைகளில் கூறாத ஒழிந்தவற்றையும், இவற்றிற்கெல்லாம் பொதுவானவற்றையும் எடுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

11. கைக்கிளை : கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். தலைவன் தலைவியருள் ஒருவரிடத்துத் தோன்றும் அன்பு. இது ஆண்பாற் கூற்று கைக்கிளை, பெண்பாற் கூற்று கைக்கிளை என இருவகைப்படும்.

12. பெருந்திணை : பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். வயதானும், இளமையானும் பொருந்தாக் காதல் பெருந்திணை எனப்படும். இது ஆண்பாற் கூற்றுப் பெருந்திணை, பெண்பாற் கூற்றுப் பெருந்திணை என இருவகைப்படும்.

4. மொழிபெயர்ப்பு

மொழி பெயர்க்கும் முன் கவனிக்க வேண்டிய விதிமுறைகள் :

1. ஆங்கிலப் பகுதியை இரண்டு, மூன்று முறை படிக்க வேண்டும்.
2. மையக் கருத்துக்கு ஏற்ப பொருத்தமான தலைப்பு இடவேண்டும்.
3. மூலப்பகுதியிலுள்ள காலத்திற்கு ஏற்ப மொழி பெயர்க்க வேண்டும்.
4. வினா, உணர்ச்சி வாக்கியங்களை அப்படியே மொழி பெயர்க்க வேண்டும்.
5. சிறு சிறு வாக்கியங்களாக மாற்ற வேண்டும்.
6. பிறமொழி கலவாத தூயத் தமிழிலே மொழி பெயர்க்க வேண்டும்.
7. மூலப் பகுதியில் இல்லாத செய்திகளை விரித்து எழுதக் கூடாது.
8. திருந்தா படிவம், பின் திருந்திய படிவம் அமைக்க வேண்டும். திருந்தாப் படிவத்தை அடிக்க வேண்டும்.
9. மூலப்பகுதியில் உள்ளது போலவே சிறு சிறு பத்திகளாகப் (Paragraph) பிரித்து எழுத வேண்டும்.

தமிழில் மொழி பெயர்க்க

Alfred Nobel was Swedish Chemist and Scientist. He is best known through the Nobel Prizes awarded every year. When success smiled on him money flowed to him from many sources. Alfred Nobel knew that he would not live long and it was in that last of his life that he make a great decision. In drawing up his will he set aside money to found the Nobel Trust from which the Nobel Prizes are awarded every year, regardless of the nationality of the candidate. Therefore the subjects Physics, Chemistry and Medicine; one for literary work and another to whoever has done most to promote the friendship of nations and the abolition of warfare. Thelast is called the Nobel Peace Prize.

திருந்தாப் படிவம்

பாவப்பணம்

ஆல்ஃப்ரட் நோபல் ஷ்வீடிஸ் நாட்டு வேதியியலாளரும், அறிவியலாளரும் ஆவார். ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் நோபல் பரிசுகள் மூலம் இவர் நன்கறியப்பட்டவர். வெற்றி அவரிடம் புன்னகை பூத்தபோது பணம் பல வழிகளிலுமிருந்து அவருக்குக் கொட்டியது. ஆல்ஃபிரட் நோபல் தான் நீண்ட காலம் உயிரோடு இருக்கமாட்டோம் என்பதை அறிந்து கொண்டார். அவ்வாறு வாழ்க்கையின் அந்தக் கடைசிக் கட்டத்தில் அவர் ஓர் உன்னத முடிவுக்கு வந்தார். அவர் தன்னுடைய உயிலை எழுதும் போது தேர்ந்தெடுக்கப்படுபவரின் நாடு பற்றிய வேற்றுமை கருதாமல் ஒவ்வோர் ஆண்டும் நோபல் பரிசுகள் தர வேண்டும் என்பதற்காகவே அவர் நோபல் அறக்கட்டளை என்பதை நிறுவ ஒரு குறிப்பிட்டத் தொகையை ஒதுக்கினார். இயற்பியல், வேதியல், மருத்துவம் என்ற மூன்றுக்கும், ஒன்றினைச் சிறந்த இலக்கியப் பணிக்கும், மற்றொன்றினை நாடுகளுக்கு இடையில் நட்புறவு ஏற்படவும் போர் இன்றி அமைதி உருவாகவும் பாடுபட்ட யாராயிருந்தாலும் அவருக்கு வழங்கப்படுகின்றன. இறுதியான ஒன்றே நோபல் அமைதிப் பரிசு எனப்படுகிறது.

திருந்திய படிவம்

நோபல் பரிசின் வரலாறு

ஆல்ஃப்ரட் நோபல் சுவீடன் நாட்டு வேதியலாளரும் அறிவியலாளரும் ஆவார். ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுமும் நோபல் பரிசுகள் மூலம் இவர் நன்கறியப்பட்டவராக விளங்குகிறார். வெற்றி அவரிடம் புன்னகை பூத்தபோது பல வழிகளிலிருந்து அவருக்குப் பணம் கொட்டியது. ஆல்ஃபிரட் நோபல் தான் நீண்ட காலம் உயிரோடு இருக்கமாட்டோம் என்பதை அறிந்து கொண்ட அந்தக் கடைசிக் காலகட்டத்தில் ஓர் உன்னதமான முடிவுக்கு வந்தார். அவர் தன்னுடைய உயிலை எழுதும்போது, நோபல் அறக்கட்டளை என்பதை நிறுவ ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கினார். தேர்ந்தெடுக்கப்படும் நபரின் நாடுபற்றிய வேற்றுமை கருதாமல் ஒவ்வோர் ஆண்டும் நோபல் பரிசுகள் தரவேண்டும் என்பதற்காக அது நிறுவப்பட்டது. மூன்று பரிசுகள் இயற்பியல், வேதியல், மருத்துவம் என்ற பிரிவுகளுக்கும், ஒன்று சிறந்த இலக்கியப் பணிக்கும் மற்றொன்று நாடுகளுக்கிடையே நட்புறவு ஏற்படவும் போர் இன்றி அமைதி உருவாகவும் பாடுபட்ட யாராக இருந்தாலும் அவருக்கும் வழங்கப்படுகின்றன. இறுதியான பரிசே நோபல் அமைதிப் பரிசு என்று அழைக்கப்படுகிறது.

V படைப்பாற்றல்

பொதுக்கட்டுரை எழுதுதல் :

தமிழ் உரைநடை வளர்ச்சியின் பயனாகக் கட்டுரை எழுதுதல் சிறந்த படைப்பிலக்கிய வகைகளுள் ஒன்றாகப் போற்றப்பட்டு வருகின்றது. பல்துறை சார்ந்த கட்டுரைகளால் அறிஞர் பலர் தமிழுக்கு அழகு செய்திருப்பதை நீங்கள் உங்கள் பாடம் மூலம் அறிந்து கொண்டீர்கள்.

குமரிமுனை பற்றியோ, குண்டூசி பற்றியோ கட்டுரை எழுதலாம். மனிதன் விண்கோளுக்குச் சென்றுவருதல் பற்றியோ, சாலை வசதியில்லாத குக்கிராமம் ஒன்றிற்குப் போய் வந்த அனுபவம் பற்றியோ கூடக் கட்டுரை எழுதலாம்.

கல்வி, அறிவியல், சமுதாயப் பிரச்சினைகள், மனித உறவுகள், தகவல் ஊடகங்கள் போன்றவற்றில் தலைப்புகள் தரப்படும்.

கட்டுரைத் தலைப்பு இலக்கியம் பற்றியதாயின் வகுப்பில் நீவிர் கற்ற இலக்கியம் குறித்த கருத்துக்களையும், இலக்கிய அரங்குகளில் கேட்டுப் படித்து அறிந்த கருத்துக்களைப் பயன்படுத்தி கட்டுரை அமைக்கலாம்.

தலைப்பு அறிவியல் சார்ந்ததாயின் நீவிர் அறிந்த அறிவியல் செய்திகளைக் கொணடும், இன்றைய வாழ்வில் அறிவியலும் தொழில் நுட்பமும் பங்கு வகிப்பதைப் பற்றியும், அறிவியலை ஆக்கப் பணிக்குப் பயன்படுத்துவது பற்றியும் குறிப்பிடவேண்டும்.

தலைப்பு சமூகவியல் பற்றியதாகவோ, அன்றாட நடைமுறைச் சிக்கல் பற்றியதாகவோ அமையுமாயின் அதுபற்றி நன்கு சிந்தித்து, உமது பொது அறிவு, அனுபவம், பத்திரிகைகளில் படித்த செய்தி, அறிஞர் மற்றும் பொதுமக்கள் கருத்து இவற்றின் அடிப்படையில் தருக்க முறையில் அமைத்து உமது திடமான முடிவு இது என்று தெரிவிக்க வேண்டும்.

கட்டுரை எழுதும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய குறிப்புக்கள் :

* எழுதத் தொடங்குமுன் கொடுக்கப்பட்ட தலைப்பு குறித்து நன்கு சிந்தித்தல்.
* சிந்தனையில் தோன்றிய கருத்துக்களை மனதில் ஒழுங்குபடுத்துதல் பின் அவற்றை வரிசைப்படுத்தல்.
* தலைப்பைத் தழுவி முன்னுரை அமைத்தல்.
* தலைப்புக்கு ஏற்ப சிறுசிறு உட்தலைப்புகள் இட்டு சிறுசிறு பத்தியை அமைத்தல்.
* எழுத்து தெளிவாக, அழகாக இருத்தல்.
* சிறிய சொற்றொடர் அமைத்தல்.
* ஒருமை பன்மை மயக்கமின்றி இருத்தல்.
* வரிகள் இடம்விட்டு எழுதுதல்; மெய்யெழுத்துக்கள் வரியின் தொடக்கத்தில் இடம் பெறாதிருத்தல்.
* ஏற்ற இடங்களில் மேற்கோள்களை எடுத்தாளல்.
* இயன்றவரை பிறமொழிச் சொற்களை எழுதாமல் பொருத்தமான தமிழ் சொற்களைப் பயன்படுத்துதல்.
* தேவை இருப்பின் மட்டும் தமிழ்ஒலி அமைப்புக்கு ஏற்றவாறு எழுதுதல்.
* முடிவில் முடிவுரை இடம்பெறல் வேண்டும்.
* எழுதி முடித்த கட்டுரையைத் திரும்ப ஒருமுறைப் படித்துப் பார்த்துப் பிழைகளை நீக்குதல்.

பயிற்சிக்காக சில கட்டுரைத் தலைப்புகள்

* இலக்கியமும் அதன் பயனும்
* இலக்கியம் காட்டும் இல்லறம்
* புதுக்கவிதைகளின் வளர்ச்சியும் வாழ்வும்
* இன்றைய திரையிசைப் பாடல்கள்
* கலை கலைக்காகவே
* முயற்சி திருவினையாக்கும்
* இலக்கியமும் வாழ்க்கையும்
* நீவிர் விரும்பும் கவிஞர் அல்லது இலக்கியம்
* சமாதானப்புறா நேரு
* அறிவியலின் முன்னேற்றம்
* கணினியின் பயன்பாடு
* அறிவியல் வளர்ச்சியில் நம்நாடு
* அணு ஆயுதங்களும் உலக அமைதியும்
* சுற்றுச்சூழல் பாதுகாப்பு

* புகை நமக்கு பகை
* அறிவியலை ஆக்கவழிகளுக்குப் பயன்படுத்துதல்
* புதியதோர் உலகம் செய்வோம்
* யாதும் ஊரே யாவரும் கேளிர்
* கல்விச் சீர்திருத்தம்
* கல்விக் கடவுள் காமராசர்
* வேலையில்லாத் திண்டாட்டம்
* சமுதாயத்தில் பெண்களின் நிலை
* நூலகம் பேணுவோம்
* இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி
* சமுதாய வளர்ச்சியில் மாணவர் பங்கு
* ஒழுக்கம் விழுப்பம் தரும்
* இரத்த தானத்தின் மேன்மை
* உள்ளத்தனையது உயர்வு
* உழுதுண்டு வாழ்வோம்
* குடி உயர நாடு உயரும்
* பெண் கல்வி
* தேசிய ஒருமைப்பாடு
* நாட்டுப் நலப்பணியில் மாணவர் பங்கு
* தேசிய மாணவர் படை
* பயிர் பாதுகாப்பே உயிர்ப்பாதுகாப்பு
* வளர்ச்சிப் பாதையில் பாரதம்
* நவீன தகவல் தொடர்பு சாதனம்
* இன்றைய திரைப்படமும் இளைஞர்களும்

(பழமொழிகள் அல்லது சான்றோரின் பொன்மொழிகளில் கூட தலைப்புக்கள் இடம் பெறும். மாணவர்கள் மேற்கண்டவற்றில் சிலவற்றைக் குறித்து எழுதி பயிற்சி பெறுதல் நன்று.)

மாதிரிக் கட்டுரை

1) மக்கள் வாழ்வில் அறிவியல் பணி

முன்னுரை : அறிவியல் என்பது மனித வாழ்வியல் என்னும் அளவிற்குத் தேவையான தாகிவிட்டது. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கூறும் அறிவியலின் தொடர்புடையதாக அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சி மனித இனமே வியக்கத்தக்க அளவிற்கு முன்னேறியுள்ளது.

அறிவியல் சாதனை : அறிவியல் முன்னேற்றம் இன்று இடத்தையும், காலத்தையும், வானப்பரப்பையும் நமக்குக் கைக்கெட்டும் அளவிற்குச் சுருக்கிவிட்டது. உலகில் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் நிகழ்ச்சிகளை உலகின் மற்றொரு மூலையில் நடக்கும் நிகழ்ச்சிகளை, உலகின் மற்றொரு மூலையில் இருக்கும் மனிதன் உடனுக்குடன்அறிய முடிகின்றது. மனிதன்

செல்வதற்கரிய தொலைதூர நாடுகள் இன்று அண்டையில் இருக்கும் ஊர்களைப் போல அடிக்கடிச் செல்வதற்குரியனவாகி விட்டது.

விண்வெளிப்பயணம் : இன்றைய அறிவியல் முன்னேற்றத்தால் உலக நாடுகள் சில விண்வெளி ஆய்வில் சாதனைகள் புரிந்துள்ளன. சந்திர மண்டலத்தில் மனிதன் நடந்ததோடன்றி அங்கிருந்து மண்ணையும் கொண்டு வந்துள்ளான். அதனைப் பற்றிய மேலாய்வுகளும் நடைபெறுகின்றன. பூமியில் மக்கள் தொகை பெருகிவிட்டதால் சந்திர மண்டலத்திலும் மனிதர்கள் வாழ முடியுமா? என ஆய்வுகள் நடைபெறுகின்றன. செவ்வாய்க் கிரகத்திற்கும் சென்று வர மனிதன் முயல்கிறான்.

விண்வெளிக் கலங்கள் : இந்தியாவிலும் பிறநாடுகளிலும் சாட்டலைட் எனப்படும் விண்வெளிக்கலங்கள் பறக்க விடப்படுகின்றன. இவற்றால் மனித குலத்துக்கு மிகுந்த நன்மைகள் விளைந்துள்ளன. தொலைக்காட்சி ஒளி பரப்புவதற்கும், செய்திகளை விரைந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புவதற்கும் இவ்விண்வெளிக் கலங்கள் பயன்படுகின்றன. நிலத்தடியில் உள்ள நீர்வளத்தையும், இக்கலங்களின் வாயிலாக அறிவதோடன்றிப் பருவ மாறுதல்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய வாய்ப்புகள் யாவும் அறிவியல் நமக்குக் கொடுத்த வரங்களாகும்.

மருத்துவத்துறை : மருத்துவத் துறையில் மனிதனுக்கு உயிரளிக்கும் கடவுளாக இன்று விஞ்ஞானம் மேன்மை அடைந்துள்ளது. உடலின் எந்தப் பாகத்திலும் எவ்வளவு நுட்பமானதாக இருப்பினும் மிக எளிதாக அறுவைச் சிகிட்சை செய்வதற்கு அறிவியல் வழி ஏற்படுத்தியுள்ளது. ஒளியிழந்தவருக்குப் பார்வை தருகின்றார்கள். மனித உறுப்புக்கள் பழுதடைந்துவிட்டால் மாற்றுருப்புகள் பொருத்தப்படுகின்றன. இவையெல்லாம் விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவுகளே.

அன்றாட வாழ்வில் அறிவியல் : மக்களின் அன்றாட வாழ்க்கையில் அறிவியலின் சாதனைகள் நீங்கா இடம் பெறுகின்றன.

'காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்'

என்ற பாரதி பாடியவாறு, தினந்தோறும் வீடுகளில் ஒலிக்கின்ற வானொலி, ஒலிப்பதிவு நாடாக்கருவி, நாம் மகிழ்ந்து காண்கின்ற தொலைக்காட்சியாவும் அறிவியல் விளைவுகளே. மேலும் மின்விசிறி, சமையல் வாயுக்களினால் எரியும் அடுப்புகள், குளிர்சாதனக் கருவிகள், நம்முடைய உடைகள், மாவரைக்கும் இயந்திரங்கள் முதலியன யாவற்றிலும் அறிவியலின் பங்கு முழுக்க முழுக்க அமைந்துள்ளது. போக்குவரத்துச் சாதனங்களில் அறிவியல் சாதனைகள் வளர்ந்துள்ளன. ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்த வான ஊர்திகள் இன்று பல்வேறு வகைகளில் பெருமளவு முன்னேற்றமடைந்துவிட்டன. இவ்வாறு மனிதன் விஞ்ஞானத்துடனே இரண்டறக் கலந்து வாழ வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன.

கம்ப்யூட்டர் சாதனங்கள் : இன்று அறிவியல் முன்னேற்றத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருப்பது கணிப்பொறி. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கணிப்பொறிக் கல்வி சிறப்பிடம் பெற்றுள்ளது. மிகவும் நுணுக்கமாக அதிக நேரம் எடுத்துக் கொள்ளக்கூடிய நுட்பக் கணக்குகள் முதலியவற்றைப் பிழையின்றி மிக வேகமாக இவைகள் செய்து விடுகின்றன. கணிப்பொறியின் சாதனைகள் வியக்கத்தக்க வகையில் மனித நினைவாற்றலுக்கு அப்பாற்பட்ட நினைவுகளும் செயல்களும் கணிப்பொறியில் இயங்கி வருகின்றன.

அணுசக்தியில் ஆக்கப்பணிகள் : அணுசக்தி என்றால் அஞ்சத்தக்க நிலை மாறி இன்று உலக நாடுகள் பல அணுவின் துணை கொண்டு ஆக்கப் பணிகளை ஆற்றி வருகின்றன. இந்திய

நாட்டில் கல்பாக்கத்தில் அணுமின் நிலையம் உள்ளது. இது எந்த ஓர் ஆற்றலையும், வேறோர் ஆற்றலாக மாற்றுவதற்குச் சக்தி படைத்துள்ளது.

பல்துறை முன்னேற்றம் : செய்திப் போக்குவரத்து தொழில் உற்பத்திச் சாதனங்கள், கல்வித்துறை, மருத்துவத்துறை, நாட்டுப் பாதுகாப்பு, தூய்மையாக்கும் திட்டம், வாணிகம், பொருளாதாரம் முதலிய பல்வேறு துறைகளில் நாம் நினைத்துப் பார்க்க இயலாத அளவில் அறிவியலில் பெரும் பயன்கள் கிடைத்துள்ளன.

நன்மைக்குப் பயன்படுதல் : விஞ்ஞானம் என்பது ஆற்றல் வாய்ந்த கூரிய கத்தி போன்றது. நன்மைக்கும் தீமைக்கும் பயன்படவல்லது. ஒருபுறம் அறிவியல் முன்னேற்றம் மறுபுறம் பெரும்பாலான மக்கள் வறுமையிலும், அறியாமையிலும் உழல்கின்றனர். இத்தகைய நிலையில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி வறுமையும் அறியாமையும் நீங்க பாடுபட வேண்டும். அறிவியலை ஆக்கப்பணிகளுக்கே பயன்படுத்த வேண்டும் என்றும், ஆயுதக் குறைப்புச் செய்ய வேண்டும் என்றும் இந்தியா பாடுபட்டு வருகிறது.

முடிவுரை : அறிவியல் கருவிகள் மனித வாழ்வின் செம்மைக்குப் பயன்படுதல் வேண்டும். அறிவியல் முன்னேற்றம் மனித சமுதாய முன்னேற்றமாக இருக்க வேண்டும். மனித மனத்தின் அமைதியும் மனித இனத்தின் பண்பாடும் அறிவியலால் கெட்டுவிடக் கூடாது. மனிதர்கள் இத்தகு கருத்தினை மனதிற் கொண்டு செயல்படுவராயின் உலகம் அமைதியும் மகிழ்வும் நிறைந்த பூங்காவாக மாறும் என்பதில் ஐயமில்லை.

2. தொழிற் கல்வியின் இன்றியமையாமை

முன்னுரை : மனித வாழ்க்கையின் பாகுபாடுகள் தொழில்முறையால் அமைந்தவை. மனிதன் செய்யும் தொழிலால் வேறுபடுகிறானேயன்றிப் பிறப்பினால் வேறுபடுவதில்லை. தொழில் என்பது ஏட்டுக் கல்விக்கு அப்பாற்பட்டது. இன்றைய நிலையில் இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கத் தொழில் கல்வி இன்றியமையாது வேண்டப்படுகிறது.

ஏட்டுக் கல்வியும் தொழிற்கல்வியும் : ஏட்டுக் கல்வியை கலைக்கல்வி எனலாம். ஒற்றுமை உணர்வையும், பண்பாட்டையும், இறைப்பற்றையும், பொதுவான கலை அறிவையும், அறிவியல் அறிவையும் ஏட்டுக்கல்வி நமக்கு உணர்த்தும். ஏட்டுக்கல்வியால் நாம் படிக்கும் தரத்தை உயர்த்திக் கொள்ளவேயன்றி, படித்தால் வேலை தருவோம் என்று அரசு எவ்வித உறுதியும் கொடுத்து அதனால் நாம் படிப்பதில்லை.

தொழிற்கல்வி என்றால் நாம் யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவையில்லை. 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்'என்பது உண்மை. வளருகின்ற சமுதாயம் சிறக்க வேண்டுமானால் தொழிற்கல்வி பெருகி தொழில்கள் வளர வேண்டும்.

வேலை வாய்ப்பு : இந்தியா வளரும் நாடு. தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. பெரிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தொழிற்கல்வி பயின்றவருக்கு வேலை வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன.

'வீடு விற்றும் விளைநிலம் விற்றும் மாடு
ஆடு விற்றும் அணி மணிதாம் விற்றும்
பாடுபட்டுப்படித்த படிப்பெல்லாம்
வாடும் என்பசி மாற்றியதில்லையே'

எனக் கவிமணி பாடினார். இந்தியாவில் புதிதாக அலுவலகங்களும் பள்ளி, கல்லூரிகளும் பெருகுவதைக் காட்டிலும் தொழில் முறை நிறுவனங்கள் பெருகுவதால் மட்டுமே வேலை வாய்ப்புகள் பெருகும்.

ஊதிய உயர்வு : அலுவலகங்களில் பணியாற்றுபவரைக் காட்டிலும் தொழிற்கல்வி பயின்று பணியாற்றுவோர் அதிக ஊதியம் பெறுகின்றனர். பட்டப்படிப்பு முடித்துப் பணியாற்றும் ஒருவர் பெறுகின்ற ஊதியத்தைக் காட்டிலும் வீடு கட்டும் தொழிலாளியும், தச்சுத் தொழிலாளியும் பெறும் ஊதியமே அதிகம். சொந்தமாகத் தொழில் செய்வோர் அடையும் இலாபத்தை அவர்களே அனுபவிக்க முடியும். ஆனால் பிற பணிகளைச் செய்வோர் இத்தகைய ஊதியப் பெருக்கம் அடைய முடியாது.

புதிய முறைகளை அறிமுகப்படுத்துதல் : நம் நாட்டில் மாணவர்களுக்குப் போதிய அளவு தொழிற்கல்வி இன்மையால் புதிய தொழில் நுட்ப மம்பாட்டைப் பெற முடியவில்லை. மேலை நாடுகளில் தொழில் முறை முன்னேற்றத்துடன் நம் முன்னேற்றத்தை ஒப்பிடும்போது, நாம் ஆமை வேகத்தில் இருக்கின்றோம். தொழிற்கல்வி பயின்றவர் மிகுதியான வேகத்தில் புதிய முறையில் தொழில் செய்ய முடியும். ஏட்டுக்கல்வி கலைக் கல்விக்கும் தொழிற் கல்விக்கும் மிகவும் துணை புரிகின்றது. எந்த ஒரு முன்னேற்றத்திற்கும் தொழில் நுட்பமும் தொழிற் கல்வியும் அடிப்படையாக விளங்குகிறது.

முடிவுரை : தொழிற்கல்வி தாய்மொழியில் அமையும் சிறப்புடையது. இந்தியாவில் பெரிய பிரச்சனையாக உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கத் தொழிற்கல்வி தேவை. எல்லாப் பள்ளி மாணவர்கட்கும் தொழிற்கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும். "கைத்தொழில் மெய்த்தொழிலாம்" என்று கவிமணி பாடியுள்ளமை சிந்தித்தற்குரியது. ஒரு காலத்தில் ஒருவன் பெறும் கல்வி எக்காலத்திலும் அவன் வாழ்வுக்குத் துணையாக இருக்க வேண்டும். அத்தகைய கல்வி தொழிற்கல்வியாகவே இருக்க முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.